எம். எஸ். வசந்தகுமார்

# யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்

யெகோவாவின் சாட்சிகளின் போதனைகளுக்கும்
வேதாகமத்திற்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகள்

# யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்

வேதஆராய்ச்சியாளர்
எம்.எஸ்.வசந்தகுமார்

**TAMIL BIBLE RESEARCH CENTRE**
தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH.

**7/170, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport Via, Tiruchirappalli 620 007,
Tamil Nadu, South India.**

# CHRISTIAN ANSWERS
# TO THE JEHOVAH'S WITNESSES

© M.S.VASANTHAKUMAR

First Edition April 2002, 2000 Copies
Second Revised Edition April 2017, 2000 Copies

*Written by*

**M.S.VASANTHAKUMAR**
BTh. MA. MPhil. DMin.

*Produced and Published by*

**TAMIL BIBLE RESEARCH CENTRE**
8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH.
Phone 0044 (0) 7814252077
Email: msvtbrc@googlemail.com
Web: tamilbibleresearchcentre.com

7/170, Ayyanar Street,
Gundur Burma Colony, Airport Via,
Tiruchirappalli 620 007, Tamil Nadu, India
Phone: 9942193486,
Email: vrkbibleteach@yahoo.com

*Printed in India by*

**BERACHAH PRINT SERVICE**
Madurai 5, Tamil Nadu, India
Email: bpsmadurai@gmail.com
Website: www.beracha.in

# பொருளடக்கம்


**ஆசிரியர் உரை** 06

**முதலாம் அத்தியாயம்**

யெகோவாவின் சாட்சிகள் தேவனின் பிரதிநிதிகளா?
அல்லது தேவையற்ற பிரிவினைவாதிகளா? 09

1.சார்ள்ஸ் ரசலின் காலம் 12

2.ஜோசப் ரதர்போர்டின் காலம் 18

3.நேத்தன் நோர்ரின் காலம் 21

4.பிரெட்ரிக் பிரான்ஸ்சின் காலம் 22

5.மில்ட்டன் ஹென்ஸ்கெல்லின் காலம் 23

**இரண்டாம் அத்தியாயம்**

யெகோவாவின் சாட்சிகள் - வேதாகமப் போதகர்களா?
அல்லது வெறும் வேதப்புரட்டர்களா? 27

1.போலியான பெருமிதத்தின் இருப்பிடம் 28

2.நிறைவேறாத தீர்க்கதரிசனங்களின் பிறப்பிடம் 35

3.போதனைகளின் முரண்பாட்டில் சிறப்பிடம் 47

**மூன்றாம் அத்தியாயம்**

தெய்வத்தின் பெயர் - தெய்வப் பெயர் யெகோவாவா?
அல்லது தேவனாயிருப்பவர் இயேசுகிறிஸ்துவா? 57

1.ஐரோப்பிய கிறிஸ்தவர்களினால் உருவாக்கப்பட்டபெயர் 59

2.யெகோவாவின் சாட்சிகளினால் உட்புகுத்தப்பட்ட பெயர் 63

3.மெய்க்கிறிஸ்தவர்கள் உபயோகிக்கவேண்டிய பெயர் 70

**நான்காம் அத்தியாயம்**

திரியேகத் தெய்வம் - சாத்தானின் உபதேசமா? அல்லது
சத்திய வேதத்தின் உண்மையா? 85

1.யெகோவாவின் சாட்சிகளும் திரித்துவமும் 86

2.பழைய ஏற்பாட்டில் திரித்துவம் 91


3.புதிய ஏற்பாட்டில் திரித்துவம் 102

**ஐந்தாம் அத்தியாயம்**

இயேசுகிறிஸ்து - தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவரா ?
அல்லது சிருஷ்டிகரான தேவனா? 109

1.யெகோவாவின் சாட்சிகள்
தவறாக உபயோகிக்கும் வசனங்கள் 110
2.இயேசுகிறிஸ்துவின் நித்தியத்துவத்தை
உறுதிப்படுத்தும் வசனங்கள் 132
**ஆறாம் அத்தியாயம்**
இயேசுகிறிஸ்து - தேவனைவிட தாழ்வானவரா?
அல்லது தேவனாய் இருப்பவரா? 141
1.தவறாக வியாக்கியானம் செய்யப்படும் வசனங்கள் 142
2. தனித்துவமான தேவனாய் வெளிப்படுத்தும் வசனங்கள் 171
**ஏழாம் அத்தியாயம்**
இயேசுகிறிஸ்து - மிகாவேல் என்னும் தூதனா?
அல்லது தூதர்களுக்கும் தேவனா? 183
1.தேவதூதனாய் மாற்றப்படும் இயேசுகிறிஸ்து 184
2.தேவதூதரைவிட மேலான இயேசுகிறிஸ்து 192
**எட்டாம் அத்தியாயம்**
பரிசுத்த ஆவியானவர் - தேவனின் சக்தியா?
அல்லது சர்வவல்லமையுள்ள தேவனா? 199
1.தனித்துவமான தெய்வீக நபர் 200
2.ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபர் 205
3.தேவத்துவமுள்ள தெய்வீக நபர் 220
**ஒன்பதாம் அத்தியாயம்**
சிலுவைச் சின்னம் - விக்கிரகத்தின் அடையாளமா?
அல்லது கிறிஸ்தவத்தின் சின்னமா? 223
1.சிலுவையைப் புறக்கணிக்கும் யெகோவாவின் சாட்சிகள் 224
2.சிலுவையைப் புரிந்திடாத யெகோவாவின் சாட்சிகள் 227
3.சிலுவைக்குப் புறம்பான யெகோவாவின் சாட்சிகள் 232
**பத்தாம் அத்தியாயம்**
பண்டிகைக் கொண்டாட்டங்கள் - பிறமதச் செயற்பாடுகளா?
அல்லது கிறிஸ்தவத்தின் வெளிப்பாடுகளா? 237
1.கிறிஸ்மஸ் பண்டிகையின் அர்த்தத்தை அறியாதவர்கள் 238
2.பிறந்தநாள் கொண்டாட்டத்தின்
ஆனந்தத்தை அறியாதவர்கள் 251
3.உயிர்த்தெழும் வல்லமையின்
அனுபவத்தை அறியாதவர்கள் 255

**பதினோறாம் அத்தியாயம்**
அரசியல் விவகாரங்கள் - அரசியலில் ஈடுபடுவது தவறானதா?
அல்லது தகுதியானதா? 267
1.தேவனுக்கு விரோதமான பாவம் அல்ல 274
2.தேசியக்கொடிக்கு மதிப்பளிப்பது பாவம் அல்ல 282
3.தேசத்திற்காகப் போரிடுவது பாவம் அல்ல 285
**பன்னிரெண்டாம் அத்தியாயம்**
மருத்துவ விடயங்கள் - மருத்துவ உதவிகள் பெறலாமா?
அல்லது மருந்தெடுப்பது பாவமா? 295
1.உயிரைக் காப்பாற்றுவதற்கு
இரத்தம் கொடுப்பதை தடுத்தல் 296
2.நோய்கள் வராமலிருப்பதற்கு
தடுப்பூசிகள் போடுவதை தடுத்தல் 301
3.மருந்துகள் மூலமும் தேவன் மனிதருக்கு
சுகம் கொடுக்கிறார் 305
**பதின்மூன்றாம் அத்தியாயம்**
நித்திய வாழ்வு - யெகோவாவின் சாட்சிகளுக்கானதா? அல்லது
இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கானதா? 319
1.ஆத்துமா இல்லாமல் அழிந்திடும் மாந்தர் 320
2.ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேருக்கு மேல்
இருக்க முடியாத பரலோகம் 336
3.பரலோகத்தை இழந்துவிட்ட
பரிதாபமான பரிசுத்தவான்கள் 346
**உசாத்துணை நூல்கள்** 356
**ஆசிரியரின் நூல்கள் கிடைக்குமிடங்கள்** 372



வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரின்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை YouTube இல்
பார்ப்பதற்கு m.s.vasanthakumar என்னும்
பெயரை type பண்ணவும்



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என்னுடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துகளை உங்களுக்கும், பதினைந்து வருடங்களுக்கு முன்பு நான் எழுதிய இந்நூலை மறுபடியுமாக விரிவுபடுத்தி எழுதி வெளியிடுவதற்கு கிருபையளித்த தேவனுக்கும், இதை வெளியிடுவதற்கு என்னை உற்சாகப்படுத்தியவர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் அதிக மகிழ்ச்சியடைகிறேன்.

பதினைந்து வருடங்களாக இந்நூல் பல கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாய் இருந்துள்ளதைப் பலர் சொல்லக் கேட்டி ருக்கிறேன். பலர் யெகோவாவின் சாட்சிகளாக மாறுவதை இந் நூல் தடுத்து நிறுத்தியுள்ளது. பல ஊழியர்கள் இந்நூலின்மூலம் தங்களுடைய சபை விசுவாசிகளுக்கு வேதாகம சத்தியங்களைப் போதித்துள்ளனர். இவ்விதமாகத் தேவன் இந்நூலைக் கடந்த பதினைந்து வருடங்களாகப் பல நாடுகளில் உபயோகித்து வந் துள்ளதற்கு அவருக்கே மகிமை உண்டாகட்டும். முதற்பதிப்பில் வெளியிடப்பட்ட பிரதிகள் அனைத்தும் பல வருடங்களுக்கும் முன்பே விற்பனையாகிவிட்டன. இதனால், பலர் இப்புத்தகத்தினை பிரதிபண்ணி வைத்திருந்ததோடு, மறுபடியும் எப்பொழுது இதனை வெளியிடுவீர்கள் என்று பல தடவைகள் கேட்டு சலிப்படைந்தும் விட்டார்கள். ஆனால், மறுபடியும் வெளியிடும்போது இதை விரிவுப டுத்தி புதிய விஷயங்களையும் சேர்க்கவேண்டும் என்று தேவன் உணர்த்தியதினால், பதினைந்து வருடங்களின் பின்பே விரிவுபடுத் தப்பட்ட இந்த இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. ஊழியப்ப ணியின் சுமைகள் காரணமாக இதனை விரிவுபடுத்துவதில் நீண்ட கால தாமதம் ஏற்பட்டுவிட்டது. எனினும், பல வருடங்களாக சிறிது சிறிதாக இதை விரிவுபடுத்தி இவ்வருடம் இதை வெளியிடு வதற்குத் தேவன் கிருபையளித்துள்ளார். முதற் பதிப்பில் புரிந்து கொள்வதற்கு சிரமமாயிருந்த சில பகுதிகள் இதில் இலகுவாக் கப்பட்டுள்ளதோடு, பல புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டு, புத்த

கத்தை வாசித்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலும் தரப்பட்டுள்ளது.

இந்நூல் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கான பதிலாக மாத்திரம் எழுதப்படவில்லை. யெகோவாவின் சாட்சிகள் தவறாகப் போதிக்கும் விஷயங்களில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் உபதேசங்களை முழுமையாக அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அவைகள் விரிவாக எழுதப்பட்டுள்ளன. துயரகரமாக சில கிறிஸ்தவர்களின் போதனைகளும் யெகோவாவின் சாட்சிகளின் போதனைகளைப்போலவே இருப்பதனால், பரிசுத்த வேதாகமத்தின் சத்தியங்களைத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் சரியாக அறிந்துகொள்ள வேண்டும் என்று பரிசுத்தாவியானவர் அடிக்கடி உணர்த்தி வந்ததினால் இந்நூலை விரிவுபடுத்தி எழுதியுள்ளேன். இதனால்தான், முதற்பதிப்பில் 216 பக்கங்களில் வெளிவந்த இந்நூல் இப்பொழுது பல புதிய விஷயங்களுடன் 376 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

இந்நூலை விரிவுபடுத்தி எழுதி வெளியிடுவதற்கு உதவி செய்த தேவனுக்கும், இதன் மூலப்பிரதியை வாசித்து அச்சுப் பிழைகளைத் திருத்துவதில் உதவிய சகோதரி சிந்தியா சுரேஷ் (இங்கிலாந்து) மற்றும் மதுரை சத்தியவசனம் ஊழியங்களின் இயக்குநர் பழனிவேல் ஆபிரகாம் (இந்தியா) என்போருக்கும், இதை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய அன்பானவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


இந்நூல் பற்றிய உங்கள் கருத்துகளையும், இதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் எமக்குத் தெரிவிப்பதோடு, இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நீங்கள் யெகோவாவின் சாட்சிகளின் தவறான உபதேசங்களை இனங்கண்டு தவிர்ப்பதற்கும், வேதாகமத்தின் போதனைகளை சரியானவிதத்தில் அறிந்துகொண்டு யெகோவாவின் சாட்சிகளினால் கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் தேவன் தாமே இந்நூலின் மூலம் உங்களுக்கு உதவி செய்வாராக.

**எம்.எஸ்.வசந்தகுமார்.**
லண்டன், ஏப்ரல் 2017.

## முதலாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

கி.பி.1870ல் அமெரிக்காவைச் சேர்ந்த சார்ள் ரசல் என்பவர் 6 பேருடன் தன்னுடைய வீட்டில் ஆரம்பித்த ஒரு சிறிய வேதபாடக் குழு, தற்காலத்தில் தனியான ஒரு மத அமைப்பாக உலகின் பல நாடுகளில் பரவியுள்ளது. 1931ம் ஆண்டிலிருந்து யெகோவாவின் சாட்சிகள் என்னும் பெயரில் தங்களை அறிமுகப்படுத்தும் இக்குழுவினர், தாங்கள் மாத்திரமே தேவனுடைய உண்மையான சாட்சிகள் என்று கூறினாலும், இவர்கள் தேவனின் பிரதிநிதிகளாக அல்ல, தேவையற்ற பிரிவினைவாதிகளாக இருப்பதனால், இவர்கள் ஒரு வேதப்புரட்டுக் குழுவினராகவே உள்ளனர். இவ்வத்தியாயத்தில் இக்குழு எப்படி உருவானது? என்றும், இவர்களின் போதனைகள் என்ன? என்றும், இவர்கள் எப்படி வேதாகமத்தை வியாக்கியானம் செய்கின்றார்கள்? என்றும் விளக்கப்பட்டுள்ளது. இக்குழுவினரின் சரித்திரத்தை இவ்வத்தியாயத்தில் நாம் அறிந்துகொள்ளும்போது, இவர்களின் உபதேசத் தவறுகளை இனங்கண்டு கொள்ளக்கூடியதாயிருக்கும். கிறிஸ்தவ மார்க்கத்தின் முக்கியமான உபதேசங்கள் அனைத்தையும் மறுதலிக்கும் ஒரு வேதப்புரட்டுக் குழுவினராக இருக்கும் இவர்கள் வெளியிடும் சஞ்சிகைகளும் புத்தகங்களும், தொடர்ச்சியான பிரச்சாரமும் வேதப் படிப்புகளும், இவர்களின் வளர்ச்சிக்கான பிரதான காரணங்களாயுள்ளன.

# முதலாம் அத்தியாயம்




# யெகோவாவின் சாட்சிகள்

## தேவனின் பிரதிநிதிகளா? அல்லது தேவையற்ற பிரிவினைவாதிகளா?

உலகின் பெரும்பாலான நாடுகளில் அதிவேகமாகப் பரவிவரும் "யெகோவாவின் சாட்சிகள்" என்னும் மதக்குழுவினர், "தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் செயற்படும் உலகளாவிய கிறிஸ்தவ சங்கம்"[1] என்று தங்களை அறிமுகப்படுத்தி வருகின்றனர். 2016ம் ஆண்டின் கணிப்பீட்டின்படி உலகில் 240 நாடுகளில் இம்மதக் குழு பரவியுள்ளதோடு, 118,016 சபைகளில் எட்டு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இதன் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.[2] யெகோவாவின் சாட்சியாயிருக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய குழுவைச் சேராதவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்காக மாதமொன்றிற்குப் பத்து மணி

---

[1] *Reasoning from the Scriptures*, p. 199.

[2] http://www.watchtower.org/e/statistics/worldwide_report.htm

நேரங்களை ஒதுக்கிவைத்துள்ளனர்.[3] இதன்படி, வருடமொன்றில் மொத்தமாக 1.4 பில்லியன் மணிநேரங்கள் செலவிடப்படுகின்றதாக 2008ம் ஆண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.[4] இதைத் தவிர, மாதந்தோறும் 6.3 மில்லியன் வேதப் படிப்புகள் உலகெங்கும் நடைபெறுகின்றன.[5] இதனால் அதிகளவு மக்கள் யெகோவாவின் சாட்சிகளாக மாறுகின்றனர்.

யெகோவாவின் சாட்சிகள் பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளை நிராகரிப்பவர்களாக இருப்பதனால், இவர்கள் ஒரு "வேதப்புரட்டுக் குழுவினராகவே" உள்ளனர். அதாவது, வேதாகமப் போதனைகளை முரண்படுத்தும் விதத்தில் இவர்களுடைய உபதேசங்கள் இருப்பதனால் இவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.[6] இவர்கள் தங்களுடைய வேதப்புரட்டு உபதேசங்களினால் கிறிஸ்தவர்களின் மனதைக் குழப்பி வருகின்றனர். இவர்கள் உண்மையிலேயே வேதாகமத்தைச் சரியான விதத்தில் போதிக்கிறவர்கள் என்று பல கிறிஸ்தவர்கள் எண்ணுவதனால், இவர்களுடைய வேதப்புரட்டு உபதேசங்களின் பக்கமாக ஈர்க்கப்பட்டு விடுகின்றனர். இதனால், யெகோவாவின் சாட்சிகள் உண்மையிலேயே யார் என்றும், இவர்களுடைய போதனைகள் எத்தகையவை என்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

யெகோவாவின் சாட்சிகள் ஆரம்ப காலத்தில் "ரசலைட்ஸ்" என்னும் பெயரிலேயே அறியப்பட்டிருந்தனர். ஆனால், 1931ல் ஏசாயா 43:10ஐ ஆதாரமாகக்கொண்டு, உலகிலிருக்கும் சகல மதக்குழுக்களிலும் தங்களையே தேவன் தம்முடைய சாட்சிகளாக இருக்கும்படித் தெரிந்து

---

[3] H.Kern, *How to Respond to Jehovah's Witnesses*, p. 7.

[4] *2008 Year Book of Jehovah's Witnesses.*

[5] *2006 Service Year Report of Jehovah's Witnesses.*

[6] பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளை முரண்படுத்தும் கிறிஸ்தவக் குழுக்கள் ஆங்கிலத்தில் Christian Cults என்று அழைக்கப்படுகின்றன. தமிழில் இவற்றை, "துர்வுபதேசக் குழுக்கள்" என்றும் "கள்ளப் போதகக் குழுக்கள்" என்றும் சிலர் பெயரிட்டுள்ளனர். கலாத்தியர் நிருபத்தில் பிழையான உபதேசங்கள் மூலம் கிறிஸ்தவர்களைக் குழப்பியவர்கள் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டுவதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது (கலா.1:7). பாரம்பரியக் கிறிஸ்தவப் போதனைகளை முரண்படுத்தும் பிழையான உபதேசங்கள் வேதவாக்கியங்களின் அர்த்தங்களைத் தலைகீழாக மாற்றுவதனால் "வேதப்புரட்டுக் குழுக்கள்" என்பது இவர்களுக்கு மிகவும் பொருத்தமான பெயராய் உள்ளது.

கொண்டுள்ளார் என்று கூறி, தங்களை "யெகோவாவின் சாட்சிகள்" என்று இவர்கள் அழைக்கத் தொடங்கினார்கள்.[16] ஏசாயா 43:10ல் தேவன் இஸ்ரவேல் மக்களிடம் "நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள்" என்று தெரிவித்துள்ளார். இவ்வசனத்தில் இஸ்ரவேல் மக்கள் தங்களைச் சூழ இருக்கும் ஜாதிகளுக்கு சாட்சிகளாக இருப்பதைப் பற்றியே தேவன் குறிப்பிட்டுள்ளார்.[17] எனவே, இஸ்ரவேல் மக்களைப் பற்றி சொல்லப்பட்ட இவ்வசனத்தை யெகோவாவின் சாட்சிகள் தங்களுக்கு உபயோகிப்பது, வேதவசனங்களைத் தவறான முறையில் வியாக்கியானம் செய்யும் வேதப்புரட்டாகவே உள்ளது. இதைப் போலவே தற்காலத்திலும் குறிப்பிட்ட வேதவசனங்கள் எதைப்பற்றி கூறுகின்றன என்பதை ஆராய்ந்து பார்க்காமல், அவற்றைத் தங்களுடைய காலத்திற்கும் வாழ்வுக்கும் அறிவுக்கும் ஏற்ற விதத்தில் பல கிறிஸ்தவர்கள் உபயோகித்து வருகின்றனர். இதுவும் யெகோவாவின் சாட்சிகளைப் போன்ற ஒரு வேதப்புரட்டாகவே உள்ளது.

வேதவசனங்கள் எதைப்பற்றி கூறுகின்றன என்பதை ஆராய்ந்து பார்க்காமல், அவற்றைத் தங்களுடைய காலத்திற்கும் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற விதத்தில் வியாக்கியானம் செய்வது வேதப்புரட்டுப் போதனையின் தன்மையாகும்.

ஏசாயா 43:10ஐ அடிப்படையாகக்கொண்டு தாங்கள் மாத்திரமே தேவனின் உண்மையான சாட்சிகளாக இருப்பதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுவது, ஏசாயாவின் காலத்திலிருந்து தங்களுடைய மதக்குழு உருவாகும் வரை தேவனுக்கு சாட்சிகளாக எவரும் உலகத்தில் இருக்கவில்லை என்னும் கருத்தையும் உள்ளடக்கியுள்ளது.[18] இது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்களும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து இன்றுவரை வாழ்கின்ற கிறிஸ்தவர்களும் தேவனுக்கு சாட்சிகளாக இருக்கும் உண்மையை மறுதலிக்கும் வேதப்புரட்டாக

[16] *Man's Salvation Out of World Distress At Hand*, p. 329; *Let Your Name be Sanctified*, pp. 245, 361; *Let God be True*, p. 200.
[17] J.D.W.Watts, *Isaiah 34-66: Word Biblical Commentary Volume 25*, p. 133.
[18] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 30.

உள்ளது. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் சாட்சிகளாக இருப்பது உண்மை என்றாலும் (அப்.1:8, 2:32, 3:15, 4:33, 13:30-31), புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய செயல்கள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே செய்யப்படுவதனால், இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருப்பவர்கள் தேவனுக்கும் சாட்சி களாகவே இருக்கின்றனர். எனவே, யெகோவாவுக்கு சாட்சிகளாய் இருந்தால் மாத்திரமே தேவனுக்கு சாட்சிகளாய் இருக்க முடியும் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது, வேதாகமத்திற்கு முரணான ஒரு போதனையாகவே உள்ளது.

தாங்கள் மாத்திரமே தேவனுக்கு சாட்சிகளாய் இருப்பதனால், தங்களால் மாத்திரமே தேவனுடைய செய்தியை மக்களுக்கு சரியானவிதத்தில் அறிவிக்க முடியும் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறினாலும்,[25] இவர்களுடைய உபதேசங்களை வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கும்போது, இவர்கள் முழுமையான வேதப்புரட்டர்க ளாக இருப்பதை அறிந்திடலாம். இவ்வத்தியாயத்தில் இவர்கள் எப்படி உருவானார்கள் என்று ஆராயப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் அத்தியா யங்களில் இவர்களுடைய வேதப்புரட்டு உபதேசங்களின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, அவற்றுக்கு வேதாகமத்தை அடிப்படையா கக்கொண்ட விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## (1). சார்ள்ஸ் ரசல்லின் காலம்

யெகோவாவின் சாட்சிகள் என்னும் வேதப் புரட்டுக் குழு, “சார்ள்ஸ் டாஷ் ரசல்” (Charles Taze Russell 1852-1916) என்பவரில் தன் ஆரம்பத் தைக் கொண்டுள்ளது. இதனால், ஆரம்ப காலத்தில் இக்குழுவைச் சேர்ந்தவர்கள் “ரசலைட்ஸ்” என்னும் பெயரிலேயே அறியப்பட்டிருந்த னர். 1931ம் ஆண்டே “யெகோவாவின் சாட்சிகள்” என்னும் பெயர் இக்குழுவின் பெயராயிற்று.

சார்ள்ஸ் ரசல் 1852ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 16ம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் “பென்சில்வேனியா” மாநிலத்திலுள்ள “அலெக்ஹெனி”

[25] *The Watchtower*. 15 January 1969, p. 51; *The Watchtower*, 15 February 1981.

(Allegheny) என்னும் பட்டணத்தில் பிறந்தார்.[26] ஆரம்பத்தில் கிறிஸ்தவத் திருச்சபையின் "பிரஸ்பிட்டேரியன்" சபையிலும், பின்னர் "கொங்கிரிகேஷனல்" சபையிலும் அங்கத்தினராக இருந்த ரசல், சிறு வயதிலிருந்தே வேதாகம உபதேசங்களில் ஆர்வமுடையவராக இருந்தார்.[27] எனினும், பாரம்பரிய கிறிஸ்தவ உபதேசங்கள் இவருக்குத் திருப்தியளிக்கவில்லை. வாலிப காலத்தில் "திரித்துவம்" மற்றும் "நரகம்" பற்றிய கிறிஸ்தவ சபையின் போதனைகள் இவருக்கு அதிருப்தியையும் அவிசுவாசத்தையும் ஏற்படுத்தின.[28] ஏனெனில், ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவ சபையின் நரகத்தைப் பற்றிய போதனை ரசலுக்கு அதிக பயத்தையும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருந்தது.[29]

1869ம் ஆண்டில், 17 வயதுடையவராயிருக்கும்போது ரசல் கிறிஸ்தவத்தையும் வேதாகமத்தையும் நிராகரித்தவராக, "புத்தம்" சீன மதமான "கன்ஃபியூசியனிசம்," மற்றும் கீழைத்தேய மதங்களைப் படிக்கத் தொடங்கினார்.[31] ஆனால் 1870ல் "ஏழாம் நாள் அட்வெந்து" சபையின் போதனைகளினால் கவரப்பட்டார்.[32] கிறிஸ்தவத்திலுள்ள நரகத்தின் "நித்திய ஆக்கினை"[33] பற்றிய போதனையினால் கலக்கமடைந்திருந்த ரசலுக்கு, "மரணத்தின்போது மானிட ஆத்துமா இல்லாமல் போய்விடும்," "துன்மார்க்கர் நரகத்தில் நித்திய காலமாய் துயரப்பட மாட்டார்கள், அவர்கள் அழிந்து இல்லாமல் போய்விடுவார்கள்," "நரகம் இல்லை" என்னும் ஏழாம் நாள் அட்வெந்து சபையின் போதனைகள் திருப்தி அளிப்பதாய் இருந்தன.[34] மேலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம்

---

[27] *Watch Tower*, 1 January 1912, p. 4947.

[28] *Jehovah's Witnesses in the Divine Purposes*, pp. 14-15.

[29] J.H.Gerstner, *The Teachings of Jehovah's Witnesses*, p. 7.

[31] D.Harris, *Awake to the Watch Tower*, p. 19.

[32] *Jehovah's Witnesses – Proclaimers of God's Kingdom*, p. 43.

[33] இறுதி நியாயத்தீர்ப்பின் பின்னர் துன்மார்க்கர் நித்திய காலமாய் நரகத்தில் வேதனைப்படுவார்கள் என்பதே நரகத்தைப் பற்றிய கிறிஸ்தவப் போதனையாகும்.

[34] A.M.Hoekema, *The Four Major Cults*, p. 224. சரீரம் உயிருடன் இருக்கும் வரைக்குமே மானிட ஆத்துமாவும் உணர்வுடன் இருக்கும் என்பதே ஏழாம் நாள் அட்வெந்து சபையின் போதனையாகும். எனவே, மனிதன் மரிக்கும்போது அவனுடைய ஆத்துமாவும் உணர்வற்று உறங்கும் நிலைக்கு சென்றுவிடுகின்றது என்று இவர்கள் கூறுகின்றனர். மேலும், துன்மார்க்கர் உயிர்த்தெழுவதில்லை என்றும், இதனால் நரகம் இல்லை என்றும் ஏழாம் நாள் அட்வெந்து சபையினர் போதிக்கின்றனர். இவை நரகத்தைப் பற்றிய பயத்துடன் இருந்த ரசலுக்கு ஆறுதலளிக்கும் போதனைகளாய் இருந்தன.

வருகையைப் பற்றிய ஏழாம் நாள் அட்வெந்து சபையின் போதனையே சரியானது என்றும் ரசல் கருதினார்.[35]

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய செயல்கள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே செய்யப்படுவதனால், இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருப்பவர்கள் தேவனுக்கும் சாட்சிகளாகவே இருக்கின்றனர்.

1870ல் ரசல் 6 பேருடன் தன் வீட்டில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றியும், யெகோவாவின் ராட்சியத்தைப்பற்றியும் வேத பாடங்களை நடத்தத் தொடங்கினார். இயேசுகிறிஸ்து 1914ல் இவ்வுல கில் தமது ஆயிரவருட ராட்சியத்தை ஸ்தாபிப்பார் என்றும், அதற்கு முன்னர் 40 வருட ஆயத்த காலம் இருக்கும் என்றும் ரசல் போதித் தார். 1873ல் இயேசுகிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தையும், அதன் தன்மையையும் பற்றி ஒரு புத்தகத்தை ரசல் வெளியிட்டார்.[37] இயேசுகிறிஸ்துவின் வருகை மானிடக் கண்களுக்குத் தென்படாததாக இருக்கும் என்பதே இப்புத்தகத்தின் தர்க்கமாய் இருந்தது.[38]

1876ல் ரசல் தனது வேதபாடக் குழுவின் போதகராக மாறினார். 1876 முதல் 1878 வரையிலான காலப்பகுதியில் ஒரு மாத சஞ்சிகை யின் உதவி ஆசிரியராகவும் ரசல் பணிபுரிந்தார். 1877ல், அச்சஞ்சிகை யின் ஆசிரியர் என்.எச்.பார்போர் (N.H.Barbour) என்பவருடன் சேர்ந்து "மூன்று உலகங்களும் உலகத்தின் அறுவடையும்" (*Three Worlds and the Harvest of the World*) என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இதில், பார்போர் என்பவரின் நம்பிக்கையின் அடிப்படை யில், மானிடக் கண்களுக்குத் தென்படாத விதத்தில் 1874ல் இயேசுகி றிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவித்தது என்றும், 1914ல் இயேசு கிறிஸ்துவின் ராட்சியம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்றும் விளக்கப்பட் டிருந்தது.[40] ரசல் கடைசிவரைக்கும் இத்தகைய நம்பிக்கையுடனேயே

---

[35] H.Stroup, *Jehovah's Witnesses*, pp. 5-6.
[37] *The Object and Manner of the Lord's Return* என்னும் புத்தகம்.
[38] D.Harris, *Awake to the Watch Tower*, p. 19.
[40] R.Enroth, *A Guide to Cults and New Religions*, p. 104.

இருந் தாா். ஆனால், இயேசுகிறிஸ்துவின் மறுவருகை பூமியிலுள்ள சகலரும் காணக்கூடிய விதத்திலும் (அப்.1:11, வெளி.1:7)[41] எவரும் அறியாத நேரத்திலும் நடைபெறும் என்றே வேதாகமம் கூறுகிறது. இதனால், ரசல் முன்னறிவித்தபடி 1874லும், 1914லும் எதுவும் நடைபெறவில்லை.

இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியைப் பற்றிய ரசலின் தா்க்கங்கள், அவா் உதவி ஆசிரியராக இருந்த சஞ்சிகையை வெளியிடுபவா்கள் மத்தியில் சா்ச்சையை ஏற்படுத்தியதினால், அவா் தனது ஆசிரியா் பதவியிலிருந்து விலகி, 1879ல் "சீயோனின் காவற்கோபுரமும் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் தூதனும்" (*Zion's Watch Tower and Herald of Christ's Presence*) என்னும் தலைப்பில் ஒரு சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினாா். பிற்காலத்தில் இச்சஞ்சிகை "யெகோவாவின் ராட்சியத்தை அறிவிக்கும் காவற்கோபுரம்" (*The Watch Tower Announcing Jehovah's Kingdom*) என்னும் பெயரில் வெளிவந்தது. எனினும், "காவற்கோபுரம்" (*The Watchtower*) என்னும் பெயரிலேயே இச்சஞ்சிகை பிரபலமடைந்துள்ளது. 1874லிருந்து இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் உலகில் இருப்பதை அறிவிப்பதே இச்சஞ்சிகையின் பிரதான நோக்கமாய் இருந்தது. இயேசுகிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் உச்சக்கட்டம் 1914ல் இருக்கும் என்றும், அச்சமயம் புறஜாதியாரின் காலம் முடிவடைந்து, மானிட ஜாதிகள் மீது தேவனுடைய நியாயத்தீா்ப்பு வருவதோடு, தேவனுடைய ராட்சியமும் ஸ்தாபிக்கப்படும் என்றும் ரசல் தன் சஞ்சிகையில் அறிவித்து வந்தாா்.[42] ஆரம்பத்தில் 6000 பிரதிகள் வெளியிடப்பட்ட காவற்கோபுரம் சஞ்சிகை, 1977ம் ஆண்டு கணிப்பீட்டின்படி 106 மொழிகளில் 17.8 மில்லியன் பிரதிகள் பிரசுரமாகியுள்ளன.[43]

1884ல் "சீயோனின் காவற்கோபுர துண்டுப்பிரதிச் சங்கம்" (*Zion's Watch Tower Tract Society*) என்னும் பெயரில் ரசல் தனது குழுவை

[41] "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவா் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவாா்" (அப்.1:11) என்றும், "இதோ, மேகங்களுடனே வருகிறாா். கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவா்களும் அவரைக் காண்பாா்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பாா்த்துப் புலம்புவாா்கள். அப்படியே ஆகும்" (வெளி.1:7) என்றும் வேதாகமம் கூறுகிறது.

[42] R.M.Bowman, *Jehovah's Witnesses*, p. 10.

[43] W.Martin, *The Kingdom of Cults*, p. 61.

ஒரு மதச்சங்கமாகப் பென்சில்வேனியாவில் பதிவு செய்தார். 1888ல் இச்சங்கம் இங்கிலாந்து, சீனா, இந்தியா, துருக்கி, ஹைத்தி என்னும் நாடுகளிலும் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது.[44] 1896ல் இச்சங்கத்தின் பெயர் "காவற்கோபுர வேதாகம துண்டுப்பிரதிச் சங்கம்" (Watchtower Bible and Tract Society) என்று மாற்றப்பட்டது. 1908ல் இதன் தலைமைச் செயலகம் நியூயோர்க் நகரிலுள்ள புரூக்ளின் என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டு, இன்றுவரை இவ்விடத்திலேயே உள்ளது.

யெகோவாவின் சாட்சிகள் 1874லும், 1914லும் நடைபெறுவதாக முன்னறிவித்த இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இதுவரையில் நடைபெறவில்லை. இவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகள் அல்ல என்பதற்கு இதுவே போதுமான ஆதாரமாயுள்ளது

1886ற்கும் 1906ற்கும் இடைப்பட்ட காலத்தில் "வேதாகமப் பாடங்கள்" (*Studies in the Scriptures*) என்னும் பெயரில் 6 தொகுதிகள் கொண்ட தனது உபதேச நூலை ரசல் வெளியிட்டார். 1886ல் இதன் முதற் தொகுதி வெளிவந்ததோடு, ஆரம்பத்தில் "ஆயிரவருட ஆட்சியின் உதயம்" (*Millenial Dawn*) என்னும் பெயரைக் கொண்டிருந்தது. 1916ல் ரசல் மரணமடையும் வரை இத்தொகுதிகளின் 15,000,000 பிரதிகள் வெளியிடப்பட்டிருந்தன. இதன் 7வது தொகுதி ரசல் மரணமடைந்த பின்னர் "முடிவடைந்த இரகசியம்" (*The Finished Mystery*) என்னும் தலைப்பில் 1917ல் வெளிவந்தது. 1914ம் ஆண்டுடன் புறஜாதியாரின் காலம் முடிவடைந்துவிட்டதாக நம்பிய ரசல், அந்த வருஷம் ஆரம்பமான முதலாவது உலக மகா யுத்தத்தை "அர்மகெதோன்" யுத்தமாகக் கருதினார்.[45] எனினும், இந்த யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வருடங்களில், அதாவது 1916ல் ரசல் மரணமடைந்தார்.

தன்னைப் பற்றியும் தனது எழுத்துகளைப் பற்றியும் ரசல் அதியுயர்ந்த எண்ணமுடையவராக இருந்தார். "ரசலின் புத்தகத்தையா அல்லது

[44] H.Stroup, *Jehovah's Witnesses*, p. 8; *JW in the Divine Purposes*, pp. 26-27.
[45] இயேசுகிறிஸ்துவுக்கும் அந்திகிறிஸ்துவின் சேனைகளுக்கும் இடையில் நடைபெறும் இறுதி யுத்தமே 'அர்மகெதோன் யுத்தம்' என்று அழைக்கப்படுகின்றது.

வேதாகமத்தையா வாசிக்க வேண்டும்?" என்று கேட்கும் ஒருவனுக்கு அவருடைய பதில், "அவன் தன்னுடைய புத்தகங்களையே வாசிக்க வேண்டும்" என்பதாகவே இருந்தது.[46] தன்னை அப்போஸ்தலனாகிய பவுலுக்குச் சமமானவராக ரசல் கருதியபோதிலும், இவருடைய வாழ்க்கை, பவுலுடன் ஒப்பிடக்கூடியவிதமாக இருக்கவில்லை. விபசாரம், கபடம், பெருமை, சுயநலம், அடக்கியாளுதல் என்னும் காரணங்களுக் காக ரசலின் மனைவி 1903ல் சட்டரீதியாக இவரை விவாகரத்து செய்தார்.[47] பணமோசடி, ஏமாற்று வியாபாரம்,[48] நீதிமன்றத்தில் பொய் சாட்சி[49] என்பன இவரது வாழ்வைக் கறைப்படுத்திய சம்பவங்களாய் உள்ளன. இதனால், ஆரம்பத்தில் "ரசலைட்ஸ்" என்று அழைக்கப்பட்ட யெகோவாவின் சாட்சிகள், இவருடைய மரணத்தின் பின்னர், தங்களை இவரது பெயருடன் தொடர்புபடுத்த விரும்பாமல் "யெகோவாவின் சாட்சிகள்" என்று மாற்றிக்கொண்டனர்.[50] எனினும், இவர்கள் ரசலின் உபதேசங்களை மாற்றவில்லை. இதனால், தற்கால யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்துக்கு சார்ள்ஸ் ரசலின் வேதப்புரட்டுப் போதனை களே அடித்தளமாய் உள்ளன.

---

[46] *The Watchtower Reprints*, 15 September 1910, p. 4685.

[47] W.Martin, *The Kingdom of the Cults*, p. 62.

[48] 1911ம் ஆண்டு, ஜுன் 15ம் திகதி ரசலின் *The Watchtower* சஞ்சிகையில் வழமையான விதையைவிட 10 அல்லது 15 மடங்கு அதிகமான விளைச்சலைக் கொடுக்கும் அற்புதத் தானியம் விற்பனைக்கு இருப்பதாக அறிவிக்கும் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதன் விலையோ சாதாரண தானிய விதையை விட 60 மடங்கு அதிகமாக இருந்தது. எனினும் இது வழமையான விதையைவிட இரண்டு மடங்கு அதிக விளைச்சலைக் கொடுக்கும் விதையாக இருந்ததை விவசாய ஆராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்தனர். இதேபோல, இன்னும் சில அற்புதத் தானியங்கள் பற்றியும், புற்றுநோய்க்கு மருந்து பற்றியும் ரசல் அறிவித்தி ருந்தார் (D.Harris, *Awake to the Watch Tower*, p. 20). ஆனால் இவைகளும் இவருடைய போதனைகளைப் போலவே போலியானவைகளாக இருந்தன.

[49] 1912ல் ஹமில்டன் என்னும் இடத்திலுள்ள பப்டிஸ்ட் சபையின் போதகர் பாஸ்டர் ஜே.ஜே.ரோஸ் என்பார் ரசலின் உபதேசங்களை விமர்சித்து சிறிய புத்தகமொன்றை எழுதினார். ரசல் இதற்கெதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விசாரணையின் போது, தனக்கு வேதாகமத்தின் மூலமொழிகள் நன்றாகத் தெரியும் என்றும், தான் கிறிஸ்தவ இறையியலை முறைப்படி கற்ற வன் என்றும் தேவனுடைய நாமத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார். ஆனால் வக்கீல் அவரிடம் கிரேக்கமொழி புதிய ஏற்பாட்டைக் கொடுத்து வாசிக்கச் சொன்ன போது, ஒரு வார்த்தையையும் அவரால் வாசிக்க முடியவில்லை. இத னால், தான் ஆரம்பத்தில் பொய் சொன்னதாகப் பின்னர் ஒத்துக்கொண்டார் (W.Martin, *The Kingdom of the Cults*, pp. 64-65). ஆனால், பிற்காலத்தில் யெகோ வாவின் சாட்சிகளிலும் வேதத்தின் மூலமொழிகளை அறிந்தவர்கள் இருந்தனர்.

யெகோவாவின் சாட்சிகளின் உபதேசங்களைப் பரப்புவதற்காக சார்ள்ஸ் ரசல் ஒரு மில்லியன் மைல்கள் பிரயாணம் செய்துள்ளதாகவும், 30,000 பிரசங்கங்களைச் செய்துள்ளதாகவும், 50,000 பக்கங்கள் எழுதியுள்ளதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.[51] எனினும், வேதாகம சத்தியங்களைச் சரியான விதத்தில் அறிந்திராத இவர், இயேசுகிறிஸ்துவின் தேவத்துவம், சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதல், பரிசுத்த ஆவியானவரின் தேவத்துவம், ஆள்தத்துவம், நரகம், மரணத்தின் பின் மானிட ஆத்துமா உணர்வுடனிருத்தல் என்னும் வேதாகம உபதேசங்களை முழுமையாக மறுதலிப்பவராகவே ரசல் இருந்தார். இதனால், இவரது உபதேசங்கள் வேதப்புரட்டுப் போதனைகளாகவே உள்ளன.

## (2). ஜோசப் ரதர்.ஃ.போர்டின் காலம்

சார்ள்ஸ் ரசலினுடைய மரணத்தின் பின்னர் யெகோவாவின் சாட்சிகள், "ஜோசப் .ஃ.பிராங்க்ளின் ரதர்.ஃ.போர்ட்" (Joseph Franklin Rutherford 1869-1942) என்பவரின் தலைமையில் இயங்கத் தொடங்கினார்கள். 1869ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி அமெரிக்காவின் "மிஸ்சூரி" என்னும் மாநிலத்திலுள்ள "மோர்கன்" என்னும் நகரில் பிறந்த ரதர்.ஃ.போர்ட், "பெப்டிஸ்ட்" சபையைச் சேர்ந்தவராக இருந்தாலும், பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளை விரும்பாதவராக இருந்தார். இவர் ஆரம்பத்தில் அமெரிக்காவின் மிஸ்சூரி மாநிலத்திலுள்ள "பூனவில்லி" (Boone ville) எனுமிடத்தில் வக்கீலாகவும், பின்னர் நீதிபதியாகவும் பணிபுரிந்துள்ளார். 1894ல் ரசலின் புத்தகங்களை வாசிக்கத் தொடங்கிய ரதர்.ஃ.போர்ட், 1906ல் ரசலின் குழுவினரோடு சேர்ந்து அவர்களுடைய வக்கீலாகப் பணிபுரிந்தார். ரசலின் மரணத்தின் பின் 1917ல் அவருடைய குழுவுக்கு ரதர்.ஃ.போர்ட் தலைவராகினார்.[52] அவ்வருடம் ஜூலை மாதம் வெளிவந்த ரசலின் "ஆயிரவருட ஆட்சியின் உதயம்" (*Millenial Dawn*) புத்தகத்தின் ஏழாவது தொகுதி குழுவினிடையே ஏற்படுத்திய சர்ச்சை காரணமாக, அங்கத்தினரில் 20 வீதத்தினர் அதாவது 4000 பேர் தனியாகப் பிரிந்து போனார்கள். ரசலின் புத்தகத்தின் 7வது தொகுதியில் அவர் ஏற்கனவே எழுதிய புத்தகத்திலிருந்து ஒருசில

---

[50] K.Boa, *Cults, World Religions and the Occult*, p. 97.
[51] P.Royston, *Jehovah's Witnesses*, p. 13.
[52] H.Stroup, *Jehovah's Witnesses in the Divine Purposes*, pp. 65-66.

மேற்கோள்கள் மாத்திரமே இருப்பதாகவும், புதிதாகச் சேர்க்கப்பட்ட விஷயங்களில் பல பிழைகள் இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியே 20 சதவீத அங்கத்தினர்கள் பிரிந்து போனார்கள்.[53]

புதிய தலைவர் ரதர்.:.போர்ட் ஆரம்பத்தில் எதிர்நோக்கிய மிகப்பெரிய சிக்கல், ரசலின் நிறைவேறாத தீர்க்கதரிசனத்தை எவ்வாறு விளக்குவது என்பதாகும். இயேசுகிறிஸ்து 1914ம் ஆண்டு மறுபடியும் பூமிக்கு வந்து தமது ஆயிரவருட ஆட்சியை ஆரம்பிப்பார் என்றே ரசல் போதித்து வந்தார். ஆனால் 1914ம் ஆண்டு, இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்குப் பதிலாக, உலகம் அதுவரையில் கண்டிராத கொடிய முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானது. இதனால், 1914ம் ஆண்டு உலகின் முடிவு சட்டரீதியாகச் சம்பவித்தது என்று ரதர்.:.போர்ட் விளக்கினார். இயேசுகிறிஸ்து ராஜாவாக அவ்வருடம் முடிசூடி ராட்சியத்தைப் பரலோகத்தில் ஆரம்பித்தார் என்றும், அவரது ஆயிரவருட ராட்சியம் பூமிக்கு வருவதற்கு சிறிது காலம் செல்லும் என்றும் கூறியதோடு, அதுவரைக்கும் தீய சக்திகள் தங்களுக்கு கொஞ்சகாலம் மாத்திரமே இருப்பதை அறிந்து அதிதீவிரமாக நீதிக்கு எதிராகப் போரிடுவதாகவும், 1914ல் ஆரம்பமான உலக மகா யுத்தம் இதையே சுட்டிக்காட்டுகிறது என்றும், இந்த யுத்தம் உலகமுடிவில் நடக்கும் அர்மெகெதோன் யுத்தத்தை நோக்கிச் செல்லுகிறது என்றும், இதன் முடிவில் 1925ல் இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்றும் போதித்தார்.[54] எனினும், இவர் முன்னறிவித்தபடி 1925ல் எதுவும் நடக்கவில்லை. இதிலிருந்து இவர் தேவனுடைய தீர்க்கதரிசி அல்ல என்பது தெளிவாகின்றது.

1931ல் அமெரிக்காவின் "ஒகியோ" என்னும் மாநிலத்திலுள்ள "கொலம்பஸ்" என்னும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏசாயா 43:12ஐ ஆதாரமாகக்கொண்டு தனது குழுவிற்கு "யெகோவாவின் சாட்சிகள்" என்று ரதர்.:.போர்ட் பெயரிட்டார்.[55] ரசலினால் ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகையின் பெயரையும் 1939ல் "யெகோவாவின் ராட்சியத்தை அறிவிக்கும்

---

[53] D.Harris, *Awake to the Watch Tower*, p. 20-21.

[54] D.J.Hesselgrave, ed., *Dynamic Religious Movements*, p. 176; J.F.Rutherford, *Millions Now Living Will Never Die*, p. 89.

[55] Cole, *Jehovah's Witnesses*, p. 101.

காவற்கோபுரம்" (*The Watchtower Announcing Jehovah's Kingdom*) என்று ரதர்.'.போர்ட் மாற்றினார்.

ரதர்.'.போர்டின் போதனைகள் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசங்களுக்குப் புதுவடிவம் கொடுத்தன. 1920ல் வெளிவந்த "தற்போது உயிர்வாழும் மில்லியன்கள் ஒருபோதும் மரிப்பதில்லை" (*Millions Now Living Will Never Die*) என்னும் நூலில், 1925ல் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போர் உயிர்த்தெழுவார்கள் என்று ரதர்.'.போர்ட் முன்னறிவித்தார். 1930ல் "கலிபோர்னியா" என்னும் மாநிலத்திலுள்ள "சென் டெய்கோ" (San Diego) என்னுமிடத்தில், உயிர்த்தெழும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் வாழ்வதற்கு பெரிய வீடொன்றை இவர் வாங்கினார். 1941ல், சிறுபிள்ளைகள்" (*Children*) என்னும் தலைப்பில் வெளிவந்த இவருடைய புத்தகத்தில் அர்மகெதோன் யுத்தம் முடிவடையும் வரை திருமணம் முடிக்க வேண்டாம் என்று சிறுபிள்ளைகளுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது.[56] கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை ஆசரிக்கக் கூடாதென்றும், சிலுவையை அடையாளச் சின்னமாக உபயோகிக்கக் கூடாதென்றும், நாட்டின் தேசிய கொடிக்கு மரியாதை செலுத்துவது தவறு என்றும் ரதர்.'.போர்ட் போதித்தார்.[57] எல்லாவற்றுக்கும் மேலாக, தற்காலத்தில் தானே யெகோவாவின் வாயாக இருப்பதாகவும், தன்னிடமே தற்காலத்துக்கான தேவ வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ரதர்.'.போர்ட் தெரிவித்தார்.[58] யெகோவாவின் சாட்சிகள் இவரை எசேக்கியேல் 9:1-11ல் முன்னறிவிக்கப்பட்ட சபைக்கான ஏழாவது தூதனாகவே கருதினார்கள்.[59] ஆனால் இவர் முன்னறிவித்த காரியங்கள் எதுவும் நடைபெறாததினால், இவரைத் தேவனுடைய தீர்க்கதரிசியாகக் கருதமுடியாது.

ரதர்.'.போர்ட் 1942ம் ஆண்டு மரணமடைந்தார். எனினும் அவர் முன்னறிவித்தபடி பரலோகத்தில் 1914ல் ஸ்தாபிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட ராட்சியம் இதுவரையில் பூமிக்கு வரவில்லை. அதேபோல இவர் அறிவித்த அர்மெகெதோன் யுத்தமும் ஆரம்பமாகவில்லை.

[56] D.Harris, *Awake to the Watch Tower*, p. 21.
[57] D.Harris, *Awake to the Watch Tower*, p. 22.
[58] J.F.Rutherford, *Why Serve Jehovah?* p. 62.
[59] J.H.Gerstner, *The Teachings of Jehovah's Witnesses*, p. 17.

எனினும், ரதர்.'.போர்ட்டின் காலத்தில் யெகோவாவின் சாட்சிகள் அதிக அளவில் வளர்ச்சியடைந்தனர். ஏனென்றால் இவருடைய காலத்தி லேயே, யெகோவாவின் சாட்சிகள் வீடுவீடாகச் சென்று தங்கள் போதனைகளை அறிவிக்கும் முறை ஆரம்பமானது. "யெகோவாவின் சாட்சிகள்" என்னும் பெயர் அறிமுகப்படுத்தப்பட்ட வருடாந்திரக் கூட்டத் தில் 15,000 அங்கத்தினர் சமூகமளித்திருந்தனர். ஆனால், ரதர்.'. போர்ட் மரணமடைந்த வருடக் கூட்டத்தில் 115,000 அங்கத்தினர் கலந்துகொண்டார்கள். மேலும், ரசலைவிட ரதர்.'.போர்ட் 20 மடங்கு அதிகமாக எழுதியுள்ளார்.[60] நூறு புத்தகங்கள் எழுதியுள்ள ரதர்.'. போர்டின் நூல்களின் பிரதிகள் 1921ற்கும் 1940ற்கும் இடைப்பட்ட காலத்தில் 337,000,000 அச்சிடப்பட்டுள்ளதோடு,[61] 1914 வரை இவரு டைய புத்தகங்கள் 80 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.[62]

## (3). நேத்தன் நோர்ரின் காலம்

ரதர்.'.போர்டின் மரணத்தின் பின்னர் நேத்தன் ஹோமர் நோர் (Nathan Homer Knorr 1905-1977) என்பவர் யெகோவாவின் சாட்சிகளின் தலைவரா கினார். இவர் 1905ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள பெத்லகேம் என்னுமிடத்தில் "ஒல் லாந்து சீர்திருத்த சபையைச்" சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்தார். எனினும், 1923ம் ஆண்டு யெகோவாவின் சாட்சிகளுடன் சேர்ந்து இக்குழுவின் தலைமையகத்தில் பணிபுரியத் தொடங்கினார். 1942ம் ஆண்டு யெகோவாவின் சாட்சிகளின் தலைவராகினார்.

நேத்தன் நோர்ரின் காலத்தில் யெகோவாவின் சாட்சிகளின் புதிய வேதாகம மொழிபெயர்ப்பும், கிரேக்க-ஆங்கில சமமொழி வேதாகமமும் வெளியிடப்பட்டன. "புது உலக மொழிபெயர்ப்பு" (*New World Transla tion*) என்று அழைக்கப்படும் யெகோவாவின் சாட்சிகளின் வேதாகமத் தில் இவர்களுடைய உபதேசத்துக்கு ஏற்றவிதத்தில் பல வசனங்கள் மாற்றப்பட்டுள்ளன. யெகோவாவின் சாட்சிகள் வெளியிட்ட கிரேக்க-ஆங்கில சமமொழி வேதாகமத்தில் (*Kingdom Interlinear Translation*

[60] D.J.Hesselgrave, ed., *Dynamic Religious Movements*, p. 176.
[61] C.S.Braden, *They Also Believe*, p. 363.
[62] W.Martin, *The Kingdom of the Cults*, p. 68.

*of the Greek Scriptures*) இடது பக்கங்களில் புதிய ஏற்பாட்டின் கிரேக்கப் பிரதியானது ஆங்கில வார்த்தைகளுடனும், வலது பக்கத்தில் புது உலக மொழிபெயர்ப்பும் அச்சிடப்பட்டுள்ளன. புது உலக மொழிபெயர்ப்பு வெளிவரும் வரை யெகோவாவின் சாட்சிகள் ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமத்தையே உபயோகித்து வந்தனர். ஆனால், தங்களுடைய மொழிபெயர்ப்பு வெளிவந்த பின்னர், அவர்கள் அதுவரையில் உபயோகித்து வந்த வேதாகமத்தைப் "பிசாசின் வேதாகமம்" என்று விமர்சிக்கத் தொடங்கினார்கள்.[63]

நேத்தன் நோர்ரினுடைய காலத்தில், 1942லிருந்து யெகோவாவின் சாட்சிகளின் புத்தகங்கள் எழுத்தாளரது பெயர்கள் இல்லாமல் அச்சிடும் முறை ஆரம்பமானது.[64] மேலும், இவருடைய காலத்தில் யெகோவாவின் சாட்சிகளின் பயிற்சிக் கல்லூரி நியூயோர்க்கிலுள்ள "தென் லான்சிங்" என்னுமிடத்தில் "கில்காத் மிஷனரிப் பயிற்சிக் கல்லூரி" என்னும் பெயரில் உருவானது.[65] 1960ம் ஆண்டுக்குப் பின்னர் யெகோவாவின் சாட்சிகளின் பிரசுரங்கள், 1975ம் ஆண்டுடன் ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்டு 6000 ஆண்டுகள் பூர்த்தியடைந்துவிடும் என்றும், அவ்வாண்டே உலக முடிவின் ஆண்டாக இருக்கும் என்றும் அறிவிக்கத் தொடங்கின. அத்தோடு, அர்மகெதோன் யுத்தமும் அவ்வாண்டு ஆரம்ப மாகும் என்றும் கூறப்பட்டது. இதனால், பல அங்கத்தினர்கள் தங்களு டைய சொத்துகளை விற்று முழுநேர ஊழியப்பணியில் ஈடுபட்டனர். ஆனால், எதிர்பார்த்தபடி 1975ல் எதுவும் நடைபெறாததினால் ஏமாற்ற மடைந்த பலர், யெகோவாவின் சாட்சியிலிருந்து தமது அங்கத்துவத் தைத் துறந்தனர்.

## (4). பிரெட்ரிக் பிரான்ஸ்சின் காலம்

நேத்தன் நோர் 1977ல் மரணமடைந்த பின்னர், யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்துக்கு ஏற்றவிதத்தில் வேதாகமத்தைத் திருத்தி மொழிபெயர்த்த பிரெட்ரிக் டபிள்யூ. ∴பிரான்ஸ் (Frederick W.Franz 1893-1992) என்பவர் யெகோவாவின் சாட்சிகளின் தலைவராகினார்.

[63] W.Lingle, *Approaching Jehovah's Witnesses in Love*, p. 59.
[64] R.M.Bowman, *Jehovah's Witnesses*, p. 11.
[65] W.Martin, *The Kingdom of the Cults*, p. 68.

1893ல் அமெரிக்காவின் "கென்டக்கியிலுள்ள" (Kentucky) "கொவிங் டன்" என்னுமிடத்தில் பிறந்த இவர், 1920லிருந்து புரூக்ளின் நகரிலுள்ள யெகோவாவின் சாட்சிகளின் தலைமையகத்தில் பணிபுரிந்துவந்தார். யெகோவாவின் சாட்சிகளினால் சிறந்த இறையியலாளராகக் கருதப்ப டும் இவர், 1954ல் ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற நீதிமன்ற வழக்கொன் றில் தான் எபிரேய மொழியில் பாண்டித்தியம் பெற்றவரென சத்தியப் பிரமாணம் செய்தும், விசாரணையின்போது ஆங்கில மொழியில் கொடுக் கப்பட்ட ஆதியாகமம் 1:4ஐ எபிரேய மொழியில் மொழிபெயர்க்க முடியாதவராக இருந்தார்.[66] மேலும், 1975ல் இயேசுகிறிஸ்து மறுவருகை சம்பவிக்கும் என்றும் இவர் முன்னறிவித்தார்.[67]

1975ல் உலகம் முடிவுக்கு வரும் என்று 1960ம் ஆண்டிலிருந்து யொகோவாவின் சாட்சிகள் கூறிவந்த தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் போனது, ஃபிரான்ஸ் எதிர்நோக்கிய மிகப்பெரிய சவாலாக இருந்தது. எனினும், ஐந்து வருடங்களின் பின்பு (1980ல்), உலக முடிவைக் குறித்துத் தாங்கள் எழுதியவைகளை மக்கள் பிழையாக விளங்கிக் கொண்டதாக இவர் தெரிவித்தார்.[68] இவருடைய காலத்தில் யெகோவா வின் சாட்சிகள் தமது உபதேசங்களை கிறிஸ்தவர்கள் வழமையாக உபயோகிக்கும் மொழிவழக்கில் எழுதவும் பேசவும் தொடங்கினார்கள்.[69] இதனால், யெகோவாவின் சாட்சிகளை ஒரு கிறிஸ்தவக் குழுவினராகக் கருதி, பலர் இவர்களுடைய உபதேசங்களை ஏற்றுக்கொண்டனர்.[70]


## (5).மில்ட்டன் ஹென்ஸ்கெல்லின் காலம்

1992ல் பிரெட்ரிக் ஃபிரான்ஸ் மரணமடைந்த பின்னர் "மில்ட்டன் ஜி. ஹென்ஸ்கெல்" (Milton G.Henschel) என்பவர் யெகோவாவின் சாட்சிக ளின் தலைவராகினார். 1920ல் அமெரிக்காவின் "நியூ ஜேர்ஸ்சி" (New Jersey) என்னும் மாநிலத்திலுள்ள "பொமோனா" (Pomona) என்னு மிடத்தில் பிறந்த இவர், 1934ம் ஆண்டிலிருந்து யெகோவாவின்

66 R.Enroth, *A Guide to Cults and New Religions*, p. 104.
67 F.W.Franz, *Life Everlastings – in Freedom of the Sons of God*, pp. 29-30.
68 *Watchtower*, 15 March 1980, pp. 17-18.
69 R.M.Bowman, *Jehovah's Witnesses*, p. 12.
70 W.Lingle, *Approaching Jehovah's Witnesses in Love*, p. 61.

சாட்சிகளின் அங்கத்தினராக இருந்ததோடு, ஏறக்குறைய 50 வருஷ காலம் இக்குழுவின் தலைமையகத்தில் பணிபுரிந்துள்ளார். 2003ம் ஆண்டு இவர் மரணமடைந்தார். இவருக்கு கீழ் பணிபுரிந்த டொன் அடம்ஸ் (Don Adams) என்பவர் 2003லிருந்து யெகோவாவின் சாட்சிக ளின் தலைவராக இருக்கின்றார்.

யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய உபதேசங்களைப் பரப்புவதற் காக பல சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளனர். 2013ம் ஆண்டு கணிப்பீட்டின்படி இவர்களுடைய "காவற்கோபுரம்" (*The Watchtower*) என்னும் சஞ்சிகை ஒவ்வொறு மாதமும் 209 மொழிக ளில் 44,978,000 பிரதிகள் அச்சிடப்படுகின்றன.[71] இது உலகிலேயே அதிகமாக வாசிக்கப்படும் சஞ்சிகையாக உள்ளது.[72] இதைப்போலவே, இவர்களுடைய "விழித்தெழு" (*Awake*) என்னும் சஞ்சிகை தற்போது 99 மொழிகளில் 43,524,000 பிரதிகள் மாதாந்தம் வெளியிடப்படுகிறது.[73] இவை தவிர இவர்கள் வருஷத்திற்கு ஆகக் குறைந்தது இரண்டு புதிய புத்தகங்களை வெளியிட்டு வருகின்றனர். இவை ஒவ்வொன்றும் ஆகக்குறைந்தது ஒரு மில்லியன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. இவர் களின் ஆரம்ப வேதப்படிப்பு நூலான "நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் சத்தியம்" (*The Truth that Leads to Eternal Life*) என்னும் புத்தகம் 115 மொழிகளில் வெளியிடப்படுகின்றது.[74] 2013ம் ஆண்டின் கணிப்பீட்டின்படி யெகோவாவின் சாட்சிகளின் "புது உலக மொழிபெயர்ப்பு" வேதாகமம், 117 மொழிகளில் 181 மில்லியன் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.[75] அமெரிக்காவில் உருவான யெகோவாவின் சாட்சிகள் இன்று நமது வாழ்விடங்களிலும் தங்களுடைய வேதப்புரட்டு உபதேசங்களைப் பரப்பி வருகின்றனர். இவர்களுடைய வேதப்புரட்டு உபதேசங்கள் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளன.



[71] *The Watchtower*, 1 July 2013.
[72] J.Meares, *The New York Review of Magazines*, 13 May 2010.
[73] *Awake*, 1 July 2013.
[74] R.Enroth, *A Guide to Cults and New Religions*, pp. 106-107.
[75] *The Watchtower*, 15 February 2013, p. 6.

## யெகோவாவின் சாட்சிகளின் நிறைவேறாத சில முரண்பாடான தீர்க்கதரிசனங்கள்

உலகின் முடிவுகாலம் 1799ல் ஆரம்பமாகும் என்று கூறினார்கள். பிற்காலத்தில் 1914ம் ஆண்டே இது நடைபெறும் என்று தெரிவித்தார்கள்.

1874ல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை நடைபெறும் என்று கூறினார்கள். அதன்பின்னர் 1914ல் இயேசுகிறிஸ்து வருவார் என்று முன்னறிவித்தார்கள்.

முதலாவது உயிர்த்தெழுதல் 1878ல் நடைபெறும் என்று ஆரம்பத்தில் கூறினார்கள். பிற்காலத்தில் இதுவும் 1914ல் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

1914ல் இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும் என்று போதித்தார்கள். ஆனால், இது 1925லேயே நடைபெறும் என்று பின்னர் தெரிவித்தார்கள்.

ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்டு 6000 வருஷங்கள் முடிவடையும் காலம் 1872 என்று ஆரம்பத்தில் கூறினார்கள். பின்னர் இதை 1972ற்கும், அதன் பின்னர் 1975ற்கும் மாற்றிவிட்டனர்.


ஆண்டு குறிப்பிட்டு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாததினால், 1914ல் மனிதக் கண்களுக்குத் தென்படாத விதத்தில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை சம்பவித்தது என்று விளக்கினார்கள்.

இப்பொழுது தாங்கள் சொல்பவைகள் விரைவில் நடைபெறும் என்று கூறி மக்களை வஞ்சித்து வருகின்றனர்.

## இரண்டாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

யெகோவாவின் சாட்சிகள் ஒரு வேதப்புரட்டுக் குழுவினராக இருக்கின்ற போதிலும், தாங்கள் மாத்திரமே தேவனுடைய வார்த்தையை சரியானவிதத்தில் மக்களுக்கு அறிவிப்பவர்கள் என்றும், தங்களுடைய உதவி இல்லாமல் எவராலும் வேதாகமத்தைச் சரியான விதத்தில் புரிந்துகொள்ளமுடியாது என்றும் பெருமிதம் கொள்கின்றனர். எனினும், இது போலியான ஒரு பெருமிதமாகவே உள்ளது. ஏனெனில், உலகின் இறுதிகால சம்பவங்களுக்கு நாள்குறிக்கும் இவர்கள், இதுவரையில் முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களில் ஒன்றுகூட நிறைவேறவில்லை. வேதாகமத்தைவிட தங்களுடைய பிரசுரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவர்களின் போதனைகள், காலத்திற்குக் காலம் மாற்றமடைபவைகளாகவும், முன்னுக்குப் பின் முரணானவைகளாகவும் இருப்பதோடு, பாரம்பரியக் கிறிஸ்தவ போதனைகளை மறுதலிக்கும் வேதப்புரட்டு உபதேசங்களாகவே உள்ளன. எனினும், இவர்கள் தங்களுடைய உபதேசங்களையும், அவற்றுக்கு ஏற்றவிதத்தில் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட சில வேதவசனங்களை உபயோகித்து மற்றவரைத் தங்களுடைய குழுவில் சேர்த்துக்கொள்வது என்பதையும் நன்றாக அறிந்துவைத்திருக்கின்றனர். இதனால், இவர்களால் தங்களுடைய உபதேசத்தை இலகுவாகப் பரப்பக்கூடியதாயுள்ளது. எனினும், இவர்கள் வேதாகமப் போதகர்களாக அல்ல, ஒரு வேதப்புரட்டுக் குழுவினராகவே இருக்கின்றனர் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் ஆதாரபூர்வமாக அறிந்திருக்கவேண்டும் என்பதை இவ்வத்தியாயம் அறியத்தருகின்றது.

## இரண்டாம் அத்தியாயம்



# யெகோவாவின் சாட்சிகள்

## வேதாகமப் போதகர்களா? அல்லது வெறும் வேதப்புரட்டர்களா?

யெகோவாவின் சாட்சிகள் உலகெங்கும் அதிதீவிரமாகப் பரவிச் செல்லும் ஒரு மதக் குழுவினராக இருக்கின்றனர். வீடுவீடாகச் சென்றும், வீதிகளில் நின்றும் தங்களுடைய மதக்கருத்துகளை இவர்கள் பரப்பு வதனால், இவர்களுடைய வேதாகம விளக்கங்களே சரியானது என்னும் முடிவுக்குப் பலர் வந்துவிடுகின்றனர். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வேதாகம உபதேசங்களை சரியாக அறியாதவர்களாய் இருப்பதனால், யெகோவாவின் சாட்சிகள் கூறுவதே உண்மை என்று நம்பிவிடுகின்ற னர். யெகோவாவின் சாட்சிகள், தாங்கள் போதிக்கும் உபதேசங்க ளுக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டும் வேதவசனங்களின் விளக்கங்களை யும், பொதுவாகக் கிறிஸ்தவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு கொடுக் கப்பட வேண்டிய பதில்களையும் நன்றாக அறிந்திருப்பதனால், தங்களு டைய கருத்துகள் சரியானவை என்பதை எப்படியாவது நிரூபித்து விடுகின்றனர். எனவே, யெகோவாவின் சாட்சிகளின் உபதேசங்களினால் கவரப்பட்டுவிடாமல் இருப்பதற்கு கிறிஸ்தவர்களாகிய நாம் வேதவச

னங்களின் அர்த்தங்களையும், வேதாகம உபதேசங்களையும் சரியான விதத்தில் அறிந்திருக்கவேண்டியது அவசியம். இவ்வத்தியாயத்தில், யெகோவாவின் சாட்சிகள் தங்களைப்பற்றி அறிவிப்பவைகளை ஆராய்ந்து பார்த்து, இவர்கள் வேதாகமப் போதகர்களா? அல்லது வெறும் வேதப்புரட்டர்கள்தானா? என்பதை அறிந்துகொள்ளுவோம்.

## (1). போலியான பெருமிதத்தின் இருப்பிடம்

யெகோவாவின் சாட்சிகள் தங்களைப்பற்றி அறிவிப்பவைகளைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தால், இவர்களின் சங்கமே உலகத்தில் போலியான பெருமிதத்தின் இருப்பிடம் என்பதை அறிந்துகொள்வோம். ஏனெனில், இவர்கள் வேதப்புரட்டர்களாய் இருந்தாலும், தாங்கள் மாத்திரமே வேதாகமத்தை சரியானவிதத்தில் போதிப்பவர்கள் என்று பெருமிதம் கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். இதனால், “வேதாகமத்தை எவராலும் சுயமாக வாசித்து விளங்கிக்கொள்ள முடியாது” என்று வாதிடும் இவர்கள், “அதை மனிதருக்கு விளக்குவதற்காகத் தேவன் தங்களை மாத்திரமே நியமித்துள்ளதாகவும்,[1] வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்குத் தங்களுக்கு மாத்திரமே தெய்வீக அங்கீகாரமும் தகுதியும் இருப்பதாகவும்” கருதுகின்றனர்.[2] இதனால், “தங்களுடைய குழுவின் உதவி இல்லாமல் எவராலும் வேதாகம சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியாது” என்று கூறும் இவர்கள்,[3] “நாம் எத்தனை தடவைகள் வேதாகமத்தை வாசித்தாலும், தங்களுடைய குழுவினருடன் தொடர்பற்ற நிலையில் எவராலும் வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் அறிந்துகொள்ளமுடியாது” என்று வாதிடுகின்றனர்.[4] ஆனால், யெகோவாவின் சாட்சிகள் தங்களைப்பற்றி கூறும் இத்தகைய கூற்றுகள் பொய்யானவைகளாய் இருப்பதனால், இவர்களின் பெருமிதம் போலியானதாகவே உள்ளது. உண்மையில், “தங்களுடைய உபதேசம் மாத்திரமே சரியானது, ஏனைய போதனைகள் எல்லாம் தவறானவை” என்று பெருமிதம்கொள்ளும் கிறிஸ்தவ குழுக்களைச் சேர்ந்தவர்கள் வேதப்புரட்டர்களாகவே இருக்கின்றனர்.

[1] *The Watchtower*, 1 May 1957, p. 274.
[2] *The Watchtower*, 1 July 1943, p. 201.
[3] *The Watchtower*, 1 October 1967, p. 587; 1 November 1961, p. 668.
[4] *The Watchtower*, 1 December 1981, p. 27; 1 December 1990, p. 19.

யெகோவாவின் சாட்சிகள் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. இவர்களும் வேதப்புரட்டர்களாகவே உள்ளனர்.

வேதாகமத்தை மற்றவர்களுக்கு விளக்கிப் போதிப்பதற்காகவே தேவன் தங்களை நியமித்துள்ளார் என்று பெருமிதம் கொள்ளும் யெகோவாவின் சாட்சிகள், தங்களுடைய பெருமை சரியானது என்பதை நிரூபிப்பதற்கு அப்போஸ்தலர் 8:30-31ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்ப வத்தை உபயோகிக்கின்றனர். இச்சம்பவத்தில், ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை எத்தியோப்பிய மந்திரியால் சுயமாக வாசித்து விளங்கிக் கொள்ள முடியாதிருந்ததினால், அதைப் பிலிப்பு அவனுக்கு விளக்கிக் கூறினார்.[5] இதைப்போலவே, "சாதாரண மனிதரால் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கும் வேதாகமத்தை அவர்களுக்கு விளக்குவ தற்காகவே தாங்கள் இருக்கின்றோம்" என்றும், "தங்களால் மாத்திரமே மனிதருக்கு வேதாகமத்தின் செய்தியை சரியான விதத்தில் விளக்கிக் கூறமுடியும்" என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[6] இதனால், வேதாகமத்தை வாசித்து விளங்கிக் கொள்வதற்குத் தங்க ளால் வெளியிடப்படும் சஞ்சிகைகளும் புத்தகங்களும் அவசியம் தேவை என்பது இவர்களின் தர்க்கமாகும்.[7] மேலும், தனிப்பட்ட ரீதியாக ஒருவன் வேதாகமத்தைப் படிப்பதற்கும்,[8] சுயமாகச் சிந்திப்பதற்கும் இவர்கள் தடைவிதித்துள்ளனர்.[9] இவர்களைப் பொறுத்தவரை, வேத வசனங்களுக்கு இவர்கள் கொடுக்கும் விளக்கம் மாத்திரமே சரியானது. இதனால், "தங்களுடைய போதனைகளை எவ்வித கேள்வியும் கேட் காமல் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்ற

---

[5] அப்போஸ்தலர் 8:30-31ல் "அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைக ளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான்" என்றும், 35ம் வசனத்தில், "அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கி யத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[6] Anonymous, *Your Will be Done on Earth*, p. 362.

[7] E.Gruss, *We Left Jehovah's Witnesses*, p. 41.

[8] *The Watchtower*. 1 May 1957, p. 274; 15 January, 1983, p. 22, 27; 15 September 1911, p. 4885; 1 October 1967, p. 587.

[9] *The Watchtower*. 15 January, 1983, p. 22.

ன்."[10] ஆனால், இவர்கள் வேதப்புரட்டர்களாக இருப்பதனால், இவர்களுடைய போதனைகள் தவறானவைகளாகவே உள்ளன.

அப்போஸ்தலர் 8:30-31ல் எத்தியோப்பிய மந்திரியால் ஏசாயாவின் தீர்க்கதரிசனப் புத்தகத்தை வாசித்துப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்ததற்குக் காரணம், அவன் அச்சமயம் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக அறியாதவனாக இருந்ததேயாகும். இத்தகைய மனிதர்களுக்கு முதலில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை யாராவது அறிவிக்க வேண்டும். இதனால்தான், "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோ.10:13), என்று கூறும் பவுல் அடுத்த வசனத்தில், "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (ரோ.10:14) என்று கேட்டுள்ளார். அதாவது, இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிவிக்கப்படாவிட்டால் எவரும் அவரை விசுவாசிக்கமாட்டார்கள் என்பதைப் பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டுகிறார். இதனால்தான், எத்தியோப்பிய மந்திரி தான் வாசித்த வேதப்பகுதியைப் புரிந்துகொள்ளாமல் இருந்தபோது, பிலிப்பு "இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" (அப்.8:35). இதைப்போலவே, இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஒருவனுக்கு அறிவிக்கப்படும்போது, பரிசுத்த ஆவியானவர் அவன் பாவி என்பதையும், அவனுக்கு இயேசுகிறிஸ்துவின் நீதி அவசியம் என்பதையும், இல்லையென்றால் அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு உட்படவேண்டும் என்பதையும் அவனுக்கு உணர்த்துவார் (யோவா.16:8-10).[11] பரிசுத்த ஆவியானவரின் இத்தகைய உணர்த்துதலுக்குக் கீழ்ப்படிந்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்து தங்களுடைய பாவம் போக்கும் பலியாக சிலுவையில்

[10] H.Kern, *How to Respond Jehovah's Witnesses*, p. 8.

[11] யோவான் 16:8-10ல் இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும்போது, "அவர் (அதாவது பரிசுத்த ஆவியானவர்) வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்" என்று தெரிவித்துள்ளார்.

மரித்தார் என்று விசுவாசிப்பவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகின்றனர் (யோவா.1:12, கலா.3:26).[12] இவர்களில் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருப்பதனால் (எபே.1:13),[13] இவர்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது அதைப் புரிந்துகொள்வார்கள் (சங்.119:18).[14] மேலும், இவர்களால் புரிந்துகொள்ள முடியாத காரியங்களை இவர்களுக்குப் போதிப்பதற்காகக் கிறிஸ்தவ சபைகளில் தேவன் போதகர்களை ஏற்படுத்தியுள்ளார் (1கொரி.12:28, எபே.4:11-13).[15] இதனால், வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்வதற்கு வேதப்புரட்டர்களான யெகோவாவின் சாட்சிகளின் உதவி கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவையில்லை.

வேதாகம சத்தியங்களை அறிந்துகொள்வதற்கு வேதப்புரட்டர்களான யெகோவாவின் சாட்சிகளின் உதவி கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவையில்லை

அப்போஸ்தலர் 20:20ல் பவுல் "வீடுகள்தோறும் பிரசங்கித்து வந்ததாகக்" குறிப்பிடப்பட்டுள்ளதை ஆதாரமாகக்கொண்டு, தாங்களும் அப்போஸ்தலர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வீடுவீடாகச் சென்று மக்களுக்கு வேதாகமத்தைப் போதிப்பதாகவும், இதனால் தங்களுடைய மதக்குழுவே சரியானது என்றும் யெகோவாவின் சாட்சிகள்

---

[12] யோவான் 1:12ல் "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்றும், கலாத்தியர் 3:26ல் "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" என்றும் வேதாகமம் கூறுகிறது.
[13] எபேசியர் 1:13ல், "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
[14] "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்" என்று சங்கீதக்காரன் ஜெபம் பண்ணினான் (சங்.119:18).
[15] எபேசியர் 4:11-13ல், "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" என்று வாசிக்கின்றோம்.

கூறுகின்றனர்.[16] ஆனால், வேதாகம காலத்தில் வீடுகளிலேயே கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடிவந்ததினாலேயே பவுல் வீடுவீடாகச் சென்று பிரசங்கித்தார். இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிவரை கிறிஸ்தவர்களுக்குத் தேவனை வழிபடுவதற்கு ஆலயக் கட்டிடங்கள் இருக்கவில்லை.[17] புதிய ஏற்பாட்டில், "அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபை" (ரோ.16:5), "தங்கள் வீட்டிலே கூடுகிற சபை" (1கொரி.16:19), "அவன் வீட்டிலே கூடுகிற சபை" (கொலொ.4:15) "உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபை" (பிலே.2) என்னும் சொற்பிரயோகங்கள், அக்காலத்தில் வீடுகளில் சபை கூடிவந்ததற்கான ஆதாரங்களாக உள்ளன. ஆதிசபையினர், ஜெபிப்பதற்கும் திருவிருந்தில் பங்கேற்பதற்கும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதற்கும், வீடுகளையே உபயோகித்தனர் (அப்.2:46-47, 5:42).[18] அப்போஸ்தலர் 20:20ல், வீடுகளில் கூடிவந்த சபைகளில் தான் பிரசங்கித்ததைப் பற்றியே பவுல் குறிப்பிட்டுள்ளார்.[19] எனவே, அப்போஸ்தலர் 20:20ஐ ஆதாரமாகக் கொண்டு, தாங்கள் மாத்திரமே அப்போஸ்தலர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வீடுவீடாகச் சென்று போதிப்பதாகவும், இதனால், தாங்கள் மாத்திரமே உண்மையான விசுவாசிகள் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது. தற்காலத்தில் பல சபைகள் வீட்டுக்கூட்டங்களை நடத்துகின்றன. பல இடங்களில் வீடுகளிலும் சபைகள் கூடிவருகின்றன. இதனால், தாங்கள் மாத்திரமே வீடுவீடாகச் செல்கின்றோம் என்று இவர்கள் கூறுவது தவறான ஒரு கருத்தாகவே உள்ளது.

யெகோவாவின் சாட்சிகள் மக்களை அவர்களுடைய வீடுகளில் போய் சந்திப்பதன் மூலம் தங்களுடைய வேதப்புரட்டு உபதேசங்களைப்

---

[16] Anonymous, *Let God be True*, p. 222; D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 141.

[17] R.L.Saucy, *The Church in God's Programe*, p. 175.

[18] அப்போஸ்தலர் 2:46-47ல் "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள்" என்றும், அப்போஸ்தலர் 5:42ல் "தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[19] S.D.Toussaint, *Acts: The Bible Knowledge Commentary New Testament*, p. 413.

பரப்பி புதியவர்களைத் தங்கள் குழுவில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். யெகோவாவின் சாட்சிகளாய் இருப்பவர்கள் ஒவ்வொருவரும், மற்றவர்க ளின் வீடுகளுக்குச் சென்று மதப்பிரசாரம் செய்வதற்காக மாதத்தில் பத்து மணிநேரங்களை ஒதுக்கிவைத்துள்ளனர்.[20] இதுவே, தாங்கள் இரட்சிக்கப்படுவதற்காகச் செய்யவேண்டிய முக்கியமான செயல் என்று யெகோவாவின் சாட்சிகள் கருதுகின்றனர். ஆனால், வேதாகம உபதே சத்தின்படி, இரட்சிக்கப்படுவதற்காக நாம் எதுவும் செய்ய வேண்டிய தில்லை. ஏனெனில், நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான அனைத் தையும் இயேசுகிறிஸ்து சிலுவையில் செய்து முடித்துவிட்டார். இதனால் தான், சிலுவையில் மரிக்கும்போது "முடிந்தது" என்று அவர் கூறினார். எனவே, இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசத்தினால் நம்முடையதாக்கிக் கொள்வதே நாம் செய்யவேண்டிய ஒரேயொரு காரியமாக உள்ளது. உண்மையில், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதி னாலேயே நாம் இரட்சிக்கப்படுவதனால் (எபே.2:8, அப்.16:31).[21] இரட்சிக் கப்படுவதற்காக நாம் சுவிசேஷப் பணியில் ஈடுபடுவதில்லை. எனினும், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் சுவிசேஷப்பணியில் ஈடுபடுகிறவர்களாக இருப்பார்கள். ஏனெனில், மெய்க்கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளா கவே இருப்பார்கள். இதனால்தான், "பரிசுத்தாவியானவர் உங்களிடத் திற்கு வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாயிருப் பீர்கள்" என்று, இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களிடம் தெரிவித் தார் (அப்.1:8). உண்மையில், நாம் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் இராவிட்டால், நாம் கிறிஸ்தவர்கள் என்று கூறுவது பொய்யாகவே இருக்கும்.

யெகோவாவின் சாட்சிகள், "தங்களுடைய உபதேசமே சரியானது" என்றும், "தங்களுக்கு மாத்திரமே வேதவசனங்களுக்கு சரியான விளக்கம் கொடுக்கும் அதிகாரத்தைத் தேவன் தந்துள்ளார்" என்றும்,[22] "தங்களுடைய வேதவியாக்கியானங்கள் மூலமாக மாத்திரமே மனி

[20] H.Kern, *How to Respond Jehovah's Witnesses*, p. 7.
[21] எபேசியர் 2:8ல் "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்றும், அப்போஸ்தலர் 16:31ல் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
[22] *The Watchtower*. 1 May 1972, p. 272.

தரால் வேதாகம சத்தியங்களைச் சரியான விதத்தில் அறிந்துகொள்ள முடியும்" என்றும்,[23] "தங்களுடைய போதனைகளை ஏற்றுக்கொள்பவர்களினால் மாத்திரமே தேவனுடைய பிள்ளைகளாய் இருக்க முடியும்" என்றும்,[24] "தங்களுடைய சங்கத்தின் மூலமாக மாத்திரமே மனிதருக்கு இரட்சிப்பு அருளப்படுகின்றது" என்றும்[25] பெருமிதம் கொள்கிறவர்களாக இருக்கின்றனர். இதனால், இவர்கள் வேதாகமத்தைவிட தங்களுடைய மதக்குழுவினர் வெளியிடும் சஞ்சிகைகளையும் புத்தகங்களையுமே அதிகமாக வாசிப்பவர்களாகவும், இப்புத்தகங்களிலும் சஞ்சிகைகளிலும் எழுதப்பட்டுள்ள போதனைகளுக்கு ஏற்றவிதமாகவே வேதாகமத்தை வியாக்கியானம் செய்கிறவர்களாகவும் இருக்கின்றனர். இதனால், இவர்கள் வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் அறியாதவர்களாகவே உள்ளனர். இவர்களுடைய வேதாகம விளக்கங்களும் உபதேசங்களும், வேதாகமத்தையும் பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளையும் முரண்படுத்தும் வேதப்புரட்டுப் போதனைகளாகவே உள்ளன. இதனால் தான், இவர்களை வேதப்புரட்டுக் குழுவினர் என்று அழைக்கின்றோம்.

யெகோவாவின் சாட்சிகளின் வேதாகம விளக்கங்களும் உபதேசங்களும், வேதாகமத்தையும் பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளையும் முரண்படுத்தும் வேதப்புரட்டுப் போதனைகளாகவே உள்ளன.

உண்மையில், யெகோவாவின் சாட்சிகள் அறிவிக்கும் சுவிசேஷமும் வித்தியாசமானதாகவே உள்ளது. "1914ம் ஆண்டிலிருந்து தாங்கள் அறிவிக்கும் சுவிசேஷம், கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தை விட வித்தியாசமானது" என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், "1914ம் ஆண்டில் மானிடக் கண்களுக்குத் தென்படாதவராக இயேசு கிறிஸ்து வந்துவிட்டார் என்றும், அவர் அவ்வாண்டு பரலோகத்தில் ஸ்தாபித்த தேவனுடைய ராட்சியத்தின் சுவிசேஷத்தையே நாங்கள் அறிவிக்கின்றோம்" என்று தெரிவிக்கின்றனர்.[26] ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் நிருபத்தில் குறிப்பிட்டவிதமாக இது வேதாக

[23] *The Watchtower*. 1 December. 1981, p. 27.
[24] *The Watchtower*. 15 July 1963, pp. 443-444.[25] *Ibid*. 15 July 1963, pp. 443-444.
[26] *The Watchtower*, 1 October 1980, pp. 28-29.

மத்தில் இல்லாத "வேறொரு சுவிசேஷமாகவே" உள்ளது. ஏனெனில், யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்றவிதமாக 1914ம் ஆண்டில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை சம்பவிக்கவுமில்லை. அவ் வாண்டு அவர் தமது ராட்சியத்தைப் பரலோகத்தில் ஸ்தாபிக்கவும் இல்லை. இத்தகைய ராட்சியத்திற்கு பிரத்தியேகமான ஒரு சுவிசேஷம் இருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவுமில்லை. இதனால், பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் சுட்டிக்காட்டியதுபோல, "வேதாக மத்தில் இல்லாத வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற யெகோவா வின் சாட்சிகள், தேவனால் சபிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்" (கலா.1:7-9).[27] இதனால், இவர்கள் தங்களைப்பற்றி கூறுகின்றவைகள் போலியான பெருமிதத்தின் வெளிப்பாடாகவே உள்ளன.

## (2). நிறைவேறாத தீர்க்கதரிசனங்களின் பிறப்பிடம்

யெகோவாவின் சாட்சிகள் வேதப்புரட்டர்களாக இருப்பதனால், இவர்கள் போலியான பெருமிதத்தின் இருப்பிடமாக மாத்திரமல்ல, பொய்யான தீர்க்கதரிசனங்களின் பிறப்பிடமாகவும் உள்ளனர். ஏனெனில், இதுவரை யில் இவர்கள் முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களில் ஒன்றுகூட நிறைவே றவில்லை. இவர்கள் அறிவிக்கும் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் பொய்யானவைகளாகவே உள்ளன. அப்படியிருந்தும், தாங்களே யெகோவா தேவனின் தற்காலத் தீர்க்கதரிசிகள் என்றும், தங்களுடைய குழுவே "பூமியிலிருக்கும் தேவனுடைய தீர்க்கதரிசிகளின் சங்கம்" என்றும் இவர்கள் கூறிவருகின்றனர்.[28] ஒருவன் சொல்லும் தீர்க்கதரிசனம் நிறைவேறாவிட்டால் அவன் உண்மையான தீர்க்கதரிசி அல்ல என்றும்,[29] அவன் தேவனால் தண்டிக்கப்படுவான் என்றும்[30] யெகோவா வின் சாட்சிகள் நம்புகின்ற போதிலும், இவர்கள் முன்னறிவித்த தீர்க்க தரிசனங்கள் எதுவுமே நிறைவேறாமல் இருப்பதனால், இவர்களுடைய விளக்கத்தின்படி இவர்களே பொய்த் தீர்க்கதரிசிகளாய் உள்ளனர். அப்படியிருந்தும், தாங்கள் உண்மையான தீர்க்கதரிசிகள் என்று காண் பிப்பதற்காக, தேவன் கொடுத்த தீர்க்கதரிசனங்களை ஆரம்பத்தில்

---

[28] *The Watchtower*. 1 October 1964, p. 601.

[29] Anonymous, *Light Vol.2*, p. 47; Anonymous, *Prophecy*, p. 22.

[30] Anonymous, *Paradise Restored to Mankind-By Theocracy*, pp. 553-554.

தாங்கள் தவறாகப் புரிந்துகொண்டதினாலேயே தாங்கள் சொல்லிய விதமாகத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறவில்லை என்றும்,[31] அவை குறிப்பிட்ட ஆண்டுகளில் வேறுவிதமாக நிறைவேறியதாகவும் தற்பொழுது இவர்கள் கூறிவருகின்றனர்.[32] உண்மையில், "மற்றவர்களைக் கள்ளத்தீர்க்கதரிசிகள் என்று கூறிவந்த யெகோவாவின் சாட்சிகளின் தீர்க்கதரிசனங்களே பொய்யானவைகளாய் உள்ளன."[33] ஒருவன் சொல்லும் தீர்க்கதரிசனம் நிறைவேறாவிட்டால் அவன் உண்மையான தீர்க்கதரிசி அல்ல என்று வேதாகமம் கூறுவதனால் (உபா.18:20-22),[34] நிறைவேறாத தீர்க்கதரிசனங்களைக் கூறி மக்களை வஞ்சிக்கும் யெகோவாவின் சாட்சிகள் பொய்த் தீர்க்கதரிசிகளாகவே உள்ளனர்.

ஒருவன் சொல்லும் தீர்க்கதரிசனம் நிறைவேறாவிட்டால் அவன் உண்மையான தீர்க்கதரிசி அல்ல என்று வேதாகமம் கூறுவதனால், நிறைவேறாத தீர்க்கதரிசனங்களைக் கூறி மக்களை வஞ்சிக்கும் யெகோவாவின் சாட்சிகள் பொய்த் தீர்க்கதரிசிகளாகவே உள்ளனர்.

ஆரம்பகாலத்தில் யெகோவாவின் சாட்சிகள், எகிப்திலிருக்கும் "பிரமிட்கள்" (அதாவது, புராதன எகிப்திய அரசர்களின் கல்லறைகள்) தேவனுடைய தீர்க்கதரிசன ஞானத்தைக் கொண்டிருப்பதாகவும் நம்பினார்கள். உலகின் முடிவு காலத்தை அறிவிப்பதற்காகவே தேவன் பிரமிட்களை வடிவமைத்துள்ளார் என்று கூறிய இவர்கள், பிரமிட்டை "கற்களினாலான வேதாகமமாகவே" கருதினார்கள்.[35] "தேவனுடைய

[31] *Awake*, 22 March 1993, p. 4

[32] *The Watchtower*. 15 March 1986, p. 19.

[33] D.A.Reed, *How to Rescue Your Loved One from the Watch Tower*, p. 47.

[34] உபாகமம் 18:20-22ல், "சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன். கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை. அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான் அவனுக்கு நீ பயப்படவேண்டாம்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[35] R.A.Tucker, *Another Gospel*, p. 124.

மவுனமான சாட்சியாக பிரமிட்கள் இருப்பதாக நம்பிய இவர்கள்,[36] பிரமிட்களின் அளவுகளை அடிப்படையாகக் கொண்டு, உலகில் நடைபெறவிருக்கும் முக்கிய சம்பவங்கள் எப்போது நடைபெறும் என்று ஆரம்பத்தில் இவர்கள் கூறிவந்தனர்.[37] இதனால்தான், யெகோவா வின் சாட்சிகளின் ஆரம்ப கர்த்தாவான சார்ள்ஸ் ரசல் 1916ல் மரணம டைந்தபோது, அவரது பிரேதம் பிரமிட் வடிவ அடையாளக் குறியுடனான கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது.[38] ரசலின் மரணத்தின் பின்பும், 1928ம் ஆண்டு வரை "பிரமிட் வேதாகமம்" பற்றிய உபதேசம் யெகோ வாவின் சாட்சிகளினால் பிரசங்கிக்கப்பட்டு வந்தது.[39] தேவனே பிரமிட்க ளின் அளவுகளைத் திட்டமிட்டு வடிவமைத்துள்ளார் என்பது அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.[40] ஆனால், 1928ல் பிரமிட் கற்களினாலான வேதாகமம் அல்ல, அது "சாத்தானின் வேதாகமம்"[41] என்றும், "பிரமிட் போதனையைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அல்ல"[42] என்றும் ரதர்.ஃபோர்ட் அறிவித்தார். உண்மையில், தேவனுக்கு எதிராக இருந்த எகிப்திய அரசர்களின் கல்லறைகளான பிரமிட்களைத் தேவனுடைய தீர்க்கதரிசனப் புத்தகங்களாக ஆரம்பகால யெகோவா வின் சாட்சிகள் நம்பியது அறிவீனமான காரியமாகவே உள்ளது. அதேசமயம், யெகோவாவின் சாட்சிகளை ஆரம்பித்தவருடைய போத னைகளில் ஒன்றைப் பிற்காலத் தலைவர் சாத்தானுடைய போதனை யாக அறிவித்துள்ளது, இவர்களுடைய போதனைகளில் இருக்கும் முரண்பாடுகளுக்கும், இவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகள் அல்ல என்பதற்கும் முக்கியமான ஆதாரமாகவும் உள்ளது.[43]

ஆரம்ப காலத்தில், 1874ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இயேசுகிறிஸ்து வின் இரண்டாவது வருகை சம்பவிக்கும் என்று யெகோவாவின் சாட்சி கள் கூறியதோடு,[44] உலகின் கடைசி யுத்தமான "அர்மகெதோன்

[36] *The Watchtower*, 15 May 1925, p. 148.
[37] C.T.Russell, *Studies in the Scriptures Volume 3*, pp. 362-364.
[38] R.A.Tucker, *Another Gospel*, p. 124.
[39] *The Watchtower*, 15 May 1925, p. 148.
[40] *The Watchtower*, 15 June 1922, p. 187; *The Watchtower*, 15 May 1925, p. 148.
[41] *The Watchtower* 15 November, 1928, p. 344.
[42] *The Watchtower*, 15 November 1928, p. 341.
[43] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 187.
[44] *1980 Year Book of Jehovah's Witnesses*, pp. 30-31.

யுத்தம்"[45] அவ்வருடம் ஆரம்பமாகி 1914ம் ஆண்டு முடிவடையும் என்றும் முன்னறிவித்தார்கள்.[46] ஏனெனில், 1874ம் ஆண்டு இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தின் ஆரம்பமாகவும், அவருடைய ராஜரீகப் பணியின் உத்தியோகப்பூர்வ ஆரம்பமாகவும் இருக்கும் என்பதே இவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது.[47] ஆனால், யெகோவாவின் சாட்சிகள் குறிப்பிட்ட காலத்தில் இச்சம்பவம் நடைபெறாததினால், 1914ல் மானிடக் கண்களுக்குத் தென்படாதவிதத்தில் இயேசுகிறிஸ்துவின் மறுவருகை சம்பவித்தது என்று பிற்காலத்தில் விளக்கத் தொடங்கினார்கள்.[48] இதனால், 1914ல் இயேசுகிறிஸ்து தமது ராட்சியத்தை ஸ்தாபித்தார் என்றும்,[49] அவ்வருடமே புறஜாதிகளின் காலம் நிறைவு பெற்றது என்றும் இவர்கள் கூறினார்கள்.[50] மேலும், அவ்வருடம் உலக அரசாங்கங்கள் நீக்கப்பட்டு, தேவனுடைய ராட்சியம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்றும் யெகோவாவின் சாட்சிகள் உறுதியாக நம்பினார்கள்.[51] 1925ல் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, கலி∴போர்னியாவிலுள்ள "சென்டியாகோ" என்னுமிடத்தில் வசிப்பார்கள் என்றும்,[52] அதன் பின்னர் இவர்களே உலக விவகாரங்களைக் கவனித்துக்கொள்வார்கள் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறினார்கள்.[53] இதற்காக இவர்கள் "சென்டியாகோ" என்னுமிடத்தில் ஒரு பெரிய வீட்டையும் வாங்கினார்கள். ஆனால் இவர்கள் முன்னறிவித்தபடி பழைய ஏற்பாட்டுப்

---

45 "அர்மகெதோன்" என்பது "ஹார்மெகெதோன்" (*Harmagedon*) என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இது இஸ்ரவேல் நாட்டின் வடபகுதியில் எஸ்ட்ரலோன் (Esdraelon) அல்லது ஜெஸ்ரேல் (Jezreel) என்னும் சமவெளியில் உள்ள மெகிதோ என்னும் புராதன நகரம் இருந்த இடத்தைக் குறிக்கிறது. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது அவருக்கும் அக்காலத்தில் உலகை ஆட்சிசெய்யும் அந்திகிறிஸ்துவுக்கும் இடையில் நடைபெறும் உலகின் கடைசி யுத்தம் அர்மகெதோன் யுத்தமாகும் (வெளி.16:12-16, 19:19-21).

46 *The Watchtower*, 15 January 1892, p. 1355.

47 C.T.Russell, *Studies in the Scriptures IV*, p. 621; Anonymous, *Creation*, p. 289; Anonymous, *Prophecy*, p. 65.

48 Anonymous, *Let God be True*, p. 250.

49 Anonymous, *The Truth Shall Make You Free*, p. 300.

50 Anonymous, *Man's Salvation out of World Distress At Hand*, p. 288.

51 C.T.Russell, *Studies in the Scriptures II*, p. 98-99; *III*, p. 126.

52 *1980 Year Book of Jehovah's Witnesses*, pp. 30-31.

53 Anonymous, *Salvation*, p. 311; Anonymous, *The New World*, p. 104; Anonymous, *Millions Now Living Will Never Die*, 88-90, 97; *The Watchtower*. 15 October, 1917, p. 6157; *The Watchtower*. 1 April 1923, p. 106; *The Watchtower*. 15 July 1924, p. 211.

பரிசுத்தவான்கள் எவரும் 1925ல் உயிர்த்தெழாததினால் 1948ம் ஆண்டு இவ்வீட்டை விற்பனை செய்ததோடு,[54] தங்களுடைய தலைவர் ரதர் ∴போர்ட் மாரிகாலத்தில் வாழ்வதற்காகவே இவ்வீடு வாங்கப்பட்டது என்று கூறத்தொடங்கினார்கள்.[55] மேலும், 1975ல் மனிதன் சிருஷ்டிக்கப் பட்டு 6000 ஆண்டுகள் பூர்த்தியடைந்துவிடும் என்றும்,[56] இதனால் அவ்வருடம் அர்மெகெதோன் யுத்தம் நடந்து உலகின் முடிவு வரும் என்றும்,[57] அச்சமயம் இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் பூலோகத்தில் ஸ்தாபிக்கப்படும் என்றும் யெகோவாவின் சாட்சிகள் அறிவித்தனர்.[58] இதனால், யெகோவாவின் சாட்சிகளாயிருந்தவர்கள் தங்களுடைய வீடுகளை விற்று இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆவலாகக் காத்தி ருந்தனர்.[59] ஆனால், 1975லும் இவர்கள் முன்னறிவித்தபடி எதுவும் நடைபெறவில்லை. அப்படியிருந்தும், 1981ம் ஆண்டிலிருந்து அர்மெகெ தோன் யுத்தம் விரைவில் நடைபெறும் என்று கூறிவருகின்றனர்.[60] யெகோவாவின் சாட்சிகள் காலத்துக்குக் காலம் அறிவிக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாததினால், இவர்கள் தங்களுடைய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் காலத்தையும் முறையையும் மாற்றி வந்துள்ளனர். உண்மையில், "1917ம் ஆண்டிலிருந்து 1928 வரை 148 தடவைகள் யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய தீர்க்கதரி சனங்களை மாற்றியுள்ளனர்."[61] இதிலிருந்து இவர்கள் தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசிகள் அல்ல என்பது தெளிவாகின்றது.

1917ம் ஆண்டிலிருந்து 1928 வரை 148 தடவைகள் யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் காலத்தையும் முறையையும் மாற்றி அறிவித்துள்ளனர்.

---

[54] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 41.
[55] Anonymous, *Jehovah's Witnesses – Proclaimers of God's Kingdom*, p. 76.
[56] *The Watchtower*, 15 October 1966, pp. 628-629.
[57] *1980 Year Book of Jehovah's Witnesses*, pp. 30-31; *The Watchtower*, 15 August 1968, pp. 494-499.
[58] *Awake*. 8 October 1966, p. 19; Anonymous, *Our Kingdom Ministry*, p.3-4.
[59] *Kingdom Ministry*, May 1974, p. 3.
[60] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 107.
[61] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 350.

யெகோவாவின் சாட்சிகள் உலக முடிவுக்கு நாள் குறிப்பவர்களாக இருப்பதோடு, உலக முடிவில் நடைபெறவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை 1914ம் ஆண்டில் நடைபெற்றுவிட்டதாகக் கூறு கின்றனர். அதாவது, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை ஆவிக் குரிய பிரகாரமாக 1914ம் ஆண்டு நடைபெற்றது என்று இவர்கள் விளக்குகின்றனர். அதாவது, "1914ல் மானிடக் கண்களுக்குத் தென்ப டாத விதத்தில் இவ்வுலகத்துக்கு ஆவிக்குரிய பிரகாரமாக வந்த இயேசுகிறிஸ்து, அன்றிலிருந்து ஆவிக்குரிய பிரகாரமாக மனிதர்க ளோடு வாசமாயிருக்கிறார்"[62] என்பதே யெகோவாவின் சாட்சிகளின் தற்கால நம்பிக்கையாகும். இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத் திற்கு வருவதற்கு முன்பும், உயிர்த்தெழுந்த பின்பும் மிகாவேல் என்னும் பெயரில் ஒரு தூதனாக இருப்பதாகவே யெகோவாவின் சாட்சிகள் கருதுவதனால்,[63] "தேவதூதர்கள் மானிடக் கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருப்பது போலவே, ஆவியாக இருக்கும் இயேசு கிறிஸ்துவின் மறுவருகை மானிடக் கண்களுக்குத் தென்படாததாகவே நடைபெற்றது"[64] என்று கூறுகின்றனர்.[65] ஆனால் இயேசுகிறிஸ்து சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழுந்து, சரீரப்பிரகாரமாகப் பரலோகத்துக்குச் சென்றதினால் அவருடைய மறுவருகையும் சரீரப்பிரகாரமாகவே இருக் கும் என்றே வேதாகமம் கூறுகிறது (அப்.1:9-11).[66] மேலும், யெகோவா வின் சாட்சிகள் கூறுவது போல, "இயேசுகிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆளுகை 1914ல் ஆரம்பமாகியுள்ளது"[67] என்பதற்கும் வேதாகமத்தில் எவ்வித ஆதாரங்களும் இல்லை.

---

[62] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 234, 341.

[63] இது பற்றி ஏழாம் அத்தியாயத்தில் விபரமாக ஆராயப்பட்டுள்ளது.

[64] Anonymous, *The Greatest Man who Ever Lived*, Section III.

[65] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 342.

[66] அப்போஸ்தலர் 1:9-11ல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண் ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந் தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்."

[67] Anonymous, *Let God be True*, 141.

யெகோவாவின் சாட்சிகள், இயேசுகிறிஸ்து 1914ம் ஆண்டு ஆவிக்குரிய பிரகாரமாக வந்தார் என்பதை நிரூபிப்பதற்காக, வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் "வருகை" என்பதைக் குறிக்கும் சொல்லைப் "பிரசன்னம்" என்று மொழிபெயர்த்துள்ளனர்.[68] இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறிப்பிட மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "பாரூசியா" (*parousia*) என்னும் கிரேக்கச் சொல், "வந்திருத்தல்" "பிரசன்னம்" "சரீரப்பிரகாரமாய் பிரசன்னமாயிருத்தல்" "ஒரு இடத்திற்கு வருதல்" என்று பல அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும்,[69] புதிய ஏற்பாட்டில் இச்சொல் சரீரப்பிரகாரமான பிரசன்னத்தையே குறிக்கின்றது. இதனால்தான், 1கொரிந்தியர் 16:17, 2கொரிந்தியர் 7:6-7, பிலிப்பியர் 1:25-26, போன்ற வசனங்களில் மனிதர்களின் பிரசன்னத்திற்கு, அதாவது மனிதர்கள் சரீரப்பிரகாரமாக வருவதற்கும் மூலமொழியில் "பாரூசியா" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[70] இச்சொல் இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறிப்பிடும்போது, "அவர் மானிடக் கண்களுக்குத் தென்படும் விதத்தில் வருவதைக் குறிப்பிடவே வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது."[71]

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை 1914ம் ஆண்டில் ஆவிக்குரிய பிரகாரமாக நடைபெற்றுவிட்டதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுவது இவர்களின் பொய்த் தீர்க்கதரிசனங்களுக்கான முக்கியமான ஆதாரமாயுள்ளது

புதிய ஏற்பாட்டில் "அப்போக்காலுப்சிஸ்" (*apokalupsis*) "எபிபனியா" (*epiphaneia*) என்பனவும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைக் குறிப்பிடும் சொற்களாக உள்ளன. இவற்றில் "அப்போக்காலுப்சிஸ்" என்னும் சொல், "வெளிப்படுத்தல்" "கண்களுக்குப் புலப்படும் விதத்தில் திறத்தல்" "திரைநீக்குதல்" என்னும் அர்த்தங்களைக் கொண்டுள்ளது. 1பேதுரு 4:13ல் இச்சொல் இயேசுகிறிஸ்துவின் மறு

[68] உதாரணத்திற்கு மத்தேயு 24:3ல் வருகை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லை யெகோவாவின் சாட்சிகள் பிரசன்னம் என்றே குறிப்பிட்டுள்ளனர்.
[69] W.F.Arndt & F.W.Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, p. 635.
[70] L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 65.
[71] J.Thayer, *A Greek-English Lexicon of the New Testament*, p. 490.

வருகைக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.[72] "எபிபனியா" என்னும் சொல் "தோன்றுதல்" என்னும் அர்த்தமுடையது. எனினும், இது சரீரப்பிரகாரமானதும், மானிடக் கண்களுக்குத் தென்படக்கூடியதுமான தோன்றுதலைக் குறிப்பிடவே அக்கால கிரேக்க நூல்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது.[73] 1தீமோத்தேயு 6:14லும் தீத்து 2:13லும் இச்சொல் தமிழில் "பிரசன்னம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் ஆங்கிலத்தில் மூலமொழியின் அர்த்தத்தைத் தரும் விதத்தில் "தோன்றுதல்" (appear) என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.[74] உண்மையில், இயேசுகிறிஸ்துவின் மறுவருகையைக் குறிப்பிடும் புதிய ஏற்பாட்டுச் சொற்கள் அனைத்தும், மானிடக் கண்களுக்குத் தென்படக்கூடிய விதமாக சரீரப்பிரகாரமான முறையிலேயே அவருடைய வருகை இருக்கும் என்பதையே அறியத் தருகின்றன.[75] எனவே, இயேசுகிறிஸ்து மானிடக் கண்களுக்குத் தென்படாத விதத்தில் 1914ல் இவ்வுலகத்திற்கு வந்தார் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் போதனையில் எவ்வித உண்மையும் இல்லை. (இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகம சத்தியங்களை முழுமையாக அறிந்து கொள்வதற்கு எனது "இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை" என்னும் நூலைப் பார்க்கவும்).

மனிதர்களினால் காணக்கூடியவிதமாகவே இயேசுகிறிஸ்து வருவார் என்னும் சத்தியம் வெளிப்படுத்தல் 1:7ல் நேரடியாகக் குறிப்பிடப்பட்

---

[72] இவ்வசனத்தில், "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[73] W.E.Vine, ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 32.

[74] 1தீமோத்தேயு 6:13ல் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும்" என்றும் தீத்து 2:13ல் "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[75] தமிழில் "இரகசிய வருகை" என்று அழைக்கப்படும் உபதேசம், உலகிலிருந்து சபை மக்கள் எடுத்துக் கொள்ளப்படுவதைப்பற்றியதாகும். இச்சம்பவம் நடைபெறும் போது இயேசுகிறிஸ்து இப்பூமிக்கு வரமாட்டார். பரலோகத்திலிருந்து அவர் வானம் வரைக்குமே வருவார். அப்பொழுது, உலகிலிருக்கும் சபை மக்கள் வானத்தில் அவரை சந்திப்பதற்காக உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அதன்பின்பு உலகில் ஏழு வருஷங்களுக்கு அந்திகிறிஸ்துவின் ஆட்சி நடைபெறும். இவ்வாட்சியின் முடிவில், இயேசுகிறிஸ்து தாம் ஏழு வருஷங்களுக்கு முன்பு உலகத்திலிருந்து எடுத்துக்கொண்ட சபை மக்களுடன் பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வந்து தமது ஆயிரவருஷ ஆட்சியை ஆரம்பிப்பார்.

டுள்ளது. "இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்" என்று இவ்வசனம் கூறுகிறது.[76] ஆனால், இயேசுகிறிஸ்து "மேகங்களுடன் வருகிறார்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதினால், அவருடைய வருகை மானிடக் கண்களுக்குப் புலப்படாததாகவே இருக்கும் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். அதாவது, "மேகங்களுக்குள் விமானம் செல்லும்போது அதை நம்மால் பார்க்க முடியாதிருப்பது போலவே, மேகங்களுடன் இயேசுகிறிஸ்து வருவதையும் மனிதர்களால் பார்க்க முடியாது"[77] என்று இவர்கள் வாதிடுகின்றனர். மேலும், இவ்வசனத்தில் "கண்கள் யாவும் அவரைக் காணும்" என்னும் வாக்கியத்தில் "காணும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லை[78] ஆவிக்குரிய பிரகாரமாக விளக்குவதன் மூலம், தங்களுடைய உபதேசத்தை இவ்வசனம் முரண்படுத்தவில்லை என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுன்றனர். ஆனால், மூலமொழியில் இச்சொல் "சரீரக் கண்களினால் காணுதல்"[79] அல்லது "சரீரக் கண் பார்வை"[80] என்னும் அர்த்தமுடையது. எனவே, இயேசுகிறிஸ்துவின் வருகை மனிதர்களினால் காணக் கூடியவிதமாகவே சம்பவிக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது "மேகங்களுடன் வருவார்" என்பதனால், அவர் மானிடக் கண்களுக்குத் தென்படாத விதத்தில் வருவார் என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனெனில், இது தானியேலுக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.[81] தானியேலின் தரிசனத்தில் மனுஷகுமாரனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்து வானத்து மேகங்களுடன் வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், யூதர்களின் மொழிவழக்கில் "மேகம்" தேவனுடைய பிரசன்னத்துக்கான அடையாளமாய் உள்ளது (யாத்.13:21, 16:10, மத்.17:5).[82] எனவே, இயேசுகிறிஸ்து மறுபடியும்

---

[76] மத்தேயு 24:30லும், "அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும், வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[77] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 343.

[78] "ஹோராஓ" (*horao*) என்னும் கிரேக்கச் சொல்.

[79] J.Thayer, *A Greek-English Lexicon of the New Testament*, p.451.

[80] W.E.Vine, ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 556.

[81] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p. 68.

[82] R.H.Mounce, *Revelation: The New International Commentary on the New Testament*, p. 51.

இவ்வுலகத்திற்கு வரும்போது, அவர் சகல அதிகாரமும் உள்ள தேவனாக வருவார் என்பதையே "அவர் மேகங்களுடன் வருவார்" என்னும் சொற்பிரயோகம் அறியத்தருகிறது.

உலகில் நடைபெறும் சம்பவங்களைக் கவனித்துப் பார்க்கும்போது, இயேசுகிறிஸ்து மானிடக் கண்களுக்குப் புலப்படாத விதத்தில் வந்து, ஆவிக்குரியபிரகாரம் உலகை ஆளுகை செய்வதை அறிந்திடலாம் என்பது யெகோவாவின் சாட்சிகளின் நம்பிக்கையாக உள்ளது.[83] மத்தேயு 24:7,9,11-12,14, லூக்கா 21:11,25-26 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ராட்சியங்களுக்கு இடையிலான யுத்தங்கள், உணவுப் பற்றாக்குறை, பூமியதிர்ச்சிகள், மரணத்துக்கு ஏதுவான வியாதிகள், அக்கிரமத்தின் பெருக்கம், சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்படல் போன்றவை நாம் கடைசி காலத்தில் வாழ்கின்றோம் என்பதை அறியத்தருவதோடு, இயேசுகிறிஸ்து 1914ல் வந்துவிட்டதற் கான ஆதாரமாய் இருப்பதாகவும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்ற னர்.[84] ஆனால், மத்தேயு 24 மற்றும் லுக்கா 21ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் இயேசுகிறிஸ்துவின் "வருகைக்கு முன்பு" நடைபெறும் சம்பவங்களாக முன்னறிவிக்கப்பட்டுள்ளனவே தவிர, இவை, அவர் வந்துவிட்டதற்கான அடையாளங்களாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதை யெகோவாவின் சாட்சிகள் கருத்திற் கொள்வதில்லை. மேலும், மத்தேயு 24:29-30ல் இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின்போது வானத்திலும் பூமியிலும் நடைபெறுவதாக முன்னறிவிக்கப்பட்டுள்ள சம்பவங்கள், அதாவது சூரியன் அந்தகாரப்ப டுதல், சந்திரன் ஒளியைக் கொடாதிருத்தல், நட்சத்திரங்கள் வானத்திலி ருந்து விழுதல், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுதல் என்பன 1914ம் ஆண்டோ, அல்லது அதற்குப் பின்னரோ நடைபெறவில்லை. எனவே, இயேசுகிறிஸ்து 1914ம் ஆண்டு இவ்வுலகத்திற்கு வந்தார் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத பொய்யாகவே உள்ளது.

உண்மையில், யெகோவாவின் சாட்சிகள் தேவவெளிப்பாடுகளைப் பெற்றவர்களாக இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிக்க

[83] Anonymous, *Let God be True*, p. 198;
[84] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 234.

வில்லை. ஏனெனில், ஆதாம் ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட காலத்தை அடிப்படையாக வைத்தே உலக முடிவு எப்போது சம்பவிக்கும் என்று இவர்கள் அறிவித்தார்கள்.[85] இதனாலேயே இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றி இவர்கள் தீர்க்கதரிசனங்களாகக் கூறியவைகள் எதுவும் நிறைவேறவில்லை. "ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் நாட்கள், மானிட சரித்திரத்தின் காலத்தை அறியத்தரும் ஆயிரம் வருஷங்களைக் குறிப்பிடும் அடையாள நாட்கள்" என்று கருதிய யெகோவாவின் சாட்சிகள்,[86] "கி.மு. 4026ல் ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்டனர்" என்றும், "இதிலிருந்து 6000 வருஷங்களின் பின்னர் மானிட சரித்திரம் முடிவடையும்"

---

[85] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, pp. 16-17.

[86] தற்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தின் நாட்களை கோடிக்கணக்கான நாட்களாக அல்லது யுகங்களாகக் கருதுகின்றனர். இவை 24 மணிநேரம் உள்ள சாதாரண நாட்களாகவே உள்ளன. ஏனெனில், இவ்வதிகாரத்தில் "நாள்" என்பதைக் குறிப்பிடுவதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "யொம்" என்னும் எபிரேயச் சொல், 24 மணிநேரம் உள்ள நாளைக் குறிப்பிடும் சொல்லாகும். பழைய ஏற்பாட்டில் 2301 தடவைகள் இத்தகைய அர்த்தத்துடனேயே இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது (K.Ham, ed., *The New Answers Book: Creation Evolution and the Bible*, p. 26). மேலும், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இச்சொல் யூதர்களுடைய நாட்கணிப்பீட்டு முறையின்படி "சாயங்காலமும் விடியற்காலமுமாகி" என்னும் வாக்கியத்துடனேயே குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களின் நாட்கணிப்பீட்டு முறையின்படி மாலை ஆறு மணிக்கே ஒரு நாள் ஆரம்பமாகும். இதனால்தான், இயேசுகிறிஸ்துவினுடைய காலத்தில் ஓய்வு நாட்களில் மக்கள் அந்த நாள் முடிவடைந்து அடுத்த நாள் ஆரம்பித்த பின்னர் வியாதியஸ்தர்களை அவரிடத்தில் கொண்டுவரும்போது, அந்த நாளில் சூரியன் அஸ்தமித்ததற்குப் பின்னர் அவரிடத்தில் வந்தனர் (மாற்.1:32). எனவே, யூதரின் நாட்கணிப்பீட்டின்படி, அவர்களுடைய நாளில் முதலில் வருவது சாயங்காலமாகும் (சங்.55:17 ஒப்பிடவும்). இதனால்தான் ஆதியாகமத்திலும் இத்தகைய கணிப்பீட்டின்படி "சாயங்காலமும் விடியற்காலமுமாகி" என்று ஒவ்வொரு நாளும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஆதியாகம நாட்கள் 24 மணிநேர நாட்களாகவே உள்ளன. நீண்ட காலப்பகுதியை இவ்வாறு சாயங்காலமும் விடியற்காலமுமாகி என்னும் சொற்பிரயோகத்துடன் எவரும் உபயோகிப்பதில்லை. மேலும், யாத்திராகமம் 20:11ல் இஸ்ரவேல் மக்கள் ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாவது நாளில் ஓய்ந்திருக்க வேண்டும் என்று தேவன் அறிவுறுத்தும்போது, இதற்கான காரணமாக சிருஷ்டிப்பின் ஆறு நாட்களும் தேவன் ஓய்ந்திருந்த ஏழாவது நாளுமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (யாத்.20:8-11). எனவே, இஸ்ரவேல் மக்கள் 24 மணிநேரம் உள்ள ஆறு நாட்கள் வேலை செய்துவிட்டு, ஏழாவது நாளில் ஓய்ந்திருக்கும்படியாகவே தேவன் கட்டளையிட்டுள்ளதினால், இதற்கு மாதிரியாகக் காண்பிக்கப்படும் ஆறு நாட்கள் சிருஷ்டிப்பும் ஏழாவது நாள் ஓய்வும் 24 மணிநேர நாட்களாகவே உள்ளன என்பதை மறுக்க முடியாதுள்ளது.

என்றும் விளக்கினார்கள்.[87] இக்கணிப்பீட்டின்படி, 1975ம் ஆண்டுடன் 6000 வருஷங்கள் பூர்த்தியடைவதனால், அவ்வருடமே இயேசுகிறிஸ்து வின் வருகை நடைபெறும் என்று போதித்த யெகோவாவின் சாட்சிகள், இதுவே "இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சி ஆரம்பமாகும் காலத் தைப்பற்றிய தேவனுடைய திட்டம்"[88] என்று அறிவித்தார்கள்.[89] எனவே, இவர்களை எவ்விதத்திலும் தேவனுடைய தீர்க்கதரிசிகளாகக் கருத முடியாது.

இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிப்பவர்களும், உலகின் முடிவு காலத்தைப்பற்றி வேதாகமத்தை முரண்படுத்தும் விதத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பவர்களும் யெகோவாவின் சாட்சிகளைப் போன்ற வேதப்புரட்டர்களாகவே இருக்கின்றனர்.

யெகோவாவின் சாட்சிகளைப் போலவே தற்காலத்திலும் பலர் இயேசு கிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிப்பவர்களாகவும், தாங்களே கடைசிகாலத்தில் இருக்கும் தேவனுடைய தீர்க்கதரிசிகள் என்று அறிவிப்பவர்களாகவும் இருக்கின்றனர். கடந்த காலங்களில் இவ்வித மாக இயேசுகிறிஸ்துவின் வருகை குறிப்பிட்ட நாளில் நடைபெறும் என்று பலர் கூறிய தீர்க்கதரிசனங்கள் அவர்கள் கூறிய நாளில் நடைபெறவில்லை. இயேசுகிறிஸ்துவின் மறுவருகை எவரும் அறியாத நேரத்தில் நடைபெறும் என்றே வேதாகமம் கூறுகிறது (மாற்.13:32).[90] எனவே, இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிப்பவர்களையும், உலகின் முடிவு காலத்தைப்பற்றி வேதாகமத்தை முரண்படுத்தும் விதத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பவர்களைக் குறித்தும் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இவர்களும் யெகோவாவின் சாட்சிகளைப் போன்ற வேதப் புரட்டர்களே என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

---

[87] Anonymous, *Life Everlasting – in Freedom of the Sons of God*, p. 29.
[88] Anonymous, *Life Everlasting – in Freedom of the Sons of God*, p. 30.
[89] *The Watchtower*, 15 August 1968, p. 499-500.
[90] மாற்கு 13:32ல், "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமார னும் அறியார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இவ்வசனத்தைப்பற்றி ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இதனால், நாம் கேட்கின்ற தீர்க்கதரிசனங்கள் அனைத்தையும் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

## (3). போதனைகளின் முரண்பாட்டில் சிறப்பிடம்

யெகோவாவின் சாட்சிகள் வேதப்புரட்டர்களாக இருப்பதனால், இவர்கள் வேதாகம சத்தியங்களை முரண்படுத்துகிறவர்களாகப் போதிப்பது மாத்திரமல்ல, காலத்துக்குக் காலம் இவர்களுடைய உபதேசங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவைகளாகவே உள்ளன. இதனால், உலகிலேயே முரண்பாடுடைய போதனைகளின் சிறப்பிடமாக யெகோவாவின் சாட்சிகள் உள்ளனர். ஆனால், வேதாகமம் 1600 வருஷ கால இடைவெளியில், அதாவது கி.மு.1500 முதல் கி.பி.100 வரை பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட 40ற்கும் அதிகமான தேவமனிதர்களினால் வித்தியாசமான இரண்டு மொழிகளில் (அதாவது பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும்) எழுதப்பட்ட போதிலும், வேதாகமத்தில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லை. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் 146 வருஷ காலத்தில் (அதாவது 1870 முதல் 2016 வரை) பல தடவைகள் தங்களுடைய உபதேசங்களை மாற்றியுள்ளனர். இதனால், ஆரம்ப காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சில காரியங்கள் பிற்காலத்தில் பாவமானவைகள் என்று தடைசெய்யப்பட்டது மாத்திரமல்ல, ஆரம்ப காலத்தில் பாவமானவை என்று கருதப்பட்டு தடைசெய்யப்பட்டிருந்த சில காரியங்கள் பிற்காலத்தில் பாவமற்றவை என்று அனுமதிக்கப் பட்டன. நாம் ஏற்கனவே இவ்வத்தியாயத்தில் பார்த்தவிதமாக, ஆரம்பத்தில் 1874ம் ஆண்டு இயேசுகிறிஸ்துவின் வருகை நடைபெறும் என்று இவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பிற்காலத்தில் 1914ம் ஆண்டே இச்சம்பவம் நடைபெறும் என்று போதித்தார்கள் (பக்கங்கள் 37-40). இதைப்போலவே, ஆரம்பகாலத்தில் எகிப்திலிருக்கும் பழங்கால அரசர்களின் கல்லறைகளை “கற்களினாலான வேதாகமம்” என்று நம்பினார்கள். ஆனால் 1928ற்குப் பின்னர் இதை சாத்தானின் வேதாகமம் என்று கூறத் தொடங்கினார்கள் (பக்கங்கள் 36-37). இதைப்போன்ற பல முரண்பாடான விஷயங்கள் யெகோவாவின் சாட்சிகளின் போதனை

களில் உள்ளன. இதனால், யெகோவாவின் சாட்சிகள் வேதப்புரட்டர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அவர்களுடைய முரண்பாடான உபதேசங்கள் சிலவற்றை இப்பகுதியில் பார்ப்போம்.

## (அ). தேவனுடைய இருப்பிடத்தில் முரண்பாடு

யெகோவா சாட்சிகளின் முரண்பாடான உபதேசங்களில் முக்கியமானது தேவனுடைய இருப்பிடத்தைப்பற்றியதாகும். ஏனெனில், வானமண்டலத்தில் இருக்கும் "அல்சியொன்" (Alcyone) என்னும் பிரகாசமான நட்சத்திரமே தேவனுடைய வாசஸ்தலம் என்றும்,[91] "தேவன் இந்நட்சத்திரத்தில் இருந்தே பிரபஞ்சத்தை ஆளுகை செய்கிறார்"[92] என்றும் இவர்கள் ஆரம்ப காலத்தில் நம்பினார்கள். ஆனால், 1953ம் ஆண்டில், இவ்விதமாகத் தேவனை குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வரையறை செய்ய முடியாது என்று எண்ணினார்கள்.[93] ஆனால், 1981ல் மறுபடியுமாக தேவனை பழைய இடத்தில், அதாவது அல்சியொன் நட்சத்திரத்திலேயே வைத்துவிட்டார்கள்.[94] இதனால், இயேசுகிறிஸ்துவும் தம்முடைய உயிர்த்தெழுதலின் பின்னர் இந்நட்சத்திரத்திற்குச் சென்று விட்டார் என்றும், தாங்களும் தேவனிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவதற்காக இந்நட்சத்திரத்திற்குச் செல்வோம் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[95]

யெகோவாவின் சாட்சிகள் தேவனை குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வரையறை செய்துள்ளது தவறாகும். ஏனெனில், தேவன் ஆவியாய் இருப்பதனால் (யோவா.4:24) அவரை குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வரையறை செய்யமுடியாது.[96] அவர் "எங்கும் இருக்கின்றார்" என்றே வேதாகமம் கூறுகிறது. தேவனைப்பற்றிய இச்சத்தியத்தை அறிந்து கொண்ட சங்கீதக்காரன், "நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது

[91] J.R.*Rutherford, Reconciliation*, p. 14.
[92] C.T.Russell, *Studies in the Scriptures Volume 3*, p. 327.
[93] *The Watchtower*, 15 November 1953, p. 703.
[94] *The Watchtower*, 15 February 1981, p. 6.
[95] *The Watchtower*, 1 November 1920, p. 334.
[96] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 56.

கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்" (சங். 139:8-10) என்று அறிக்கையிட்டான். எனினும், தேவன் எங்குமிருக்கிறார் என்று கூறும்போது, அவரின் ஒரு பகுதி ஒரு இடத்திலும் இன்னுமொரு பகுதி வேறொரு இடத்திலும் இருக்கின்றது என்று நாம் கருதலாகாது. தேவன் ஆவியாய் இருப்பதனால் (யோவா.4:24), அவரால் ஒரே நேரத்தில் எல்லா இடத்திலும் முழுமையாக இருக்கக்கூடியதாய் உள்ளது. எனவே, அவர் எல்லா இடத்திலும் எப்பொழுதும் முழுமையாக இருக்கின்றார்.[97] அதாவது, அவர் பரலோகத்தில் இருக்கின்ற அதேநேரத்தில் பூலோகத்திலும் முழுமையாக இருக்கின்றார். இதனால் அவர் இல்லாத இடம் என்று எதையும் சொல்ல முடியாது.[98] எனவே, யெகோவாவின் சாட்சிகள் தேவனைக் குறிப்பிட்ட ஒரு நட்சத்திரத்தில் இருப்பதாகக் கூறுவது வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் ஒரு போதனையாகவே உள்ளது.

## (ஆ). மிகாவேல் யார் என்பதில் முரண்பாடு

மிகாவேல் தூதனைப் பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் உபதேசமும் முரண்பாடுடையதாகவே உள்ளது. ஆரம்பகாலத்தில் இத்தூதனைப் பிரதான தூதனாகவே யெகோவாவின் சாட்சிகள் கருதினார்கள். ஏனெனில், தூதர்கள் யாவரும் இயேசுகிறிஸ்துவை வழிபடவேண்டும் என்று எபிரெயர் 1:6ல் குறிப்பிடப்பட்டுள்ளதினால், "பிரதான தூதனாகிய மிகாவேல் தேவகுமாரன் அல்ல" என்று இவர்கள் போதித்தார்கள்.[99] ஆனால், வெளிப்படுத்தல் 12ம் அதிகாரத்தை வியாக்கியானம் செய்யும் போது, 7ம் வசனத்தில் வரும் மிகாவேல் தூதனை ரோம சபையின் போப்பாண்டவர் என்று கூறினார்கள்.[100] அதன்பின்னர், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த பெயரே மிகாவேல் என்று விளக்கத் தொடங்கினார்கள்.[101] ஆனால், இப்பொழுது இயேசுகிறிஸ்துவே மிகாவேல் என்னும் தூதன் என்று போதிக்கின்றனர்.[102] அதாவது, இயேசுகிறிஸ்து மனிதனாக

[97] L.Berkhof, *Systematic Theology*, pp. 60-61; C.R.Swindoll, ed., *Understanding Christian Theology*, p. 183; A.H.Strong, *Systematic Theology*, p. 279.
[98] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 194.
[99] *The Watchtower*. 1 November 1879, p. 48.
[100] *Studies in Scriptures*, p. 188.
[101] *The Watchtower*. 15 May 1969, p. 307. [102] *The Watchtower*. 15 Dec. 1984, p. 29.

"இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்னர் அவர் "மிகாவேல்" என்னும் பெயரில் தேவதூதனாக இருந்ததாகவும்,"[103] இவ்வுலக வாழ்வின் பின்னர் "தற்போது பரலோகத்திலும் அவர் மிகாவேல் என்னும் பெயரில் தேவதூதனாகவே இருப்பதாகவும்" யெகோவாவின் சாட்சிகள் போதிக் கின்றனர்.[104] ஆனால், இது வேதாகம சத்தியத்தையே முரண்படுத்தும் போதனையாக உள்ளது.

இயேசுகிறிஸ்துவைத் தேவனாக ஏற்றுக்கொள்ளாத யெகோவாவின் சாட்சிகள் அவரை மிகாவேல் என்னும் தூதன் என்று கூறுவது வேதாகம சத்தியத்தை இவர்கள் புரிந்துகொள்ளாமலிருப்பதற்கான ஆதாரமாயுள்ளது.

யெகோவாவின் சாட்சிகள் மிகாவேல் தூதன் யார் என்பதில் முன்னுக் குப் பின் முரணான விளக்கங்களைக் கொடுத்துள்ளது மாத்திரமல்ல, தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவே மிகாவேல் என்று கூறுவது இவர்கள் வேதாகம சத்தியத்தையே புரிந்துகொள்ளாதவர்களாக இருப்பதையே அறியத்தருகின்றது. யெகோவாவின் சாட்சிகளின் இவ்வேதப்புரட்டு உபதேசம் ஏழாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## (இ). சாத்தானின் விவரணத்தில் முரண்பாடு

யெகோவாவின் சாட்சிகளின் முரண்பாடான போதனைகளில் மிகவும் கொடூரமானது, சாத்தானைப் பற்றிய விவரணத்தை இயேசுகிறிஸ்து வைப் பற்றியதாக விளக்கியுள்ளதாகும். வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதியபோது பாதாளக்குழி திறக்கப்பட்டு அதிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது (வெளி.9:1-3).[105] வெளிப்படுத்தல் புத்தகத்தில் 6 முதல் 18 வரையி

---

[103] J.F.Rutherford, *The Kingdom Is at Hand*, p. 49; *The Watchtower*. 15 December 1984, p. 29.

[104] *The Watchtower* 15 May 1969, p. 307.

[105] வெளிப்படுத்தல் 9:1-3ல், "ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன். அவனுக்குப் பாதாளக் குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக் குழியைத் திறந்தான். உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக்

லான அதிகாரங்களில், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் நடை பெறும் அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷகால சம்பவங்களே தரிசனங்கள் மூலம் யோவானுக்கு காண்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு தரிசனமே 9ம் அதிகாரத்தில் உள்ளது. இத்தரிசனத்தில், பாதாளக் குழியிலிருந்து வரும் வெட்டுக்கிளிகளின் உருவம், சாதாரண வெட்டுக் கிளிகளைப் போன்றதாக இருக்கவில்லை என்பதை 4 முதல் 10 வரையிலான வசனங்கள் அறியத்தருகின்றன.[106] இதனால், இவ்வெட் டுக்கிளிகள் எதனைக் குறிக்கின்றன என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ளவேண்டும். ஆனால், வெளிப்படுத்தல் 9:4-10 சொல்லப்பட்ட விதமான வெட்டுக்கிளிகள் உலகத்தில் இல்லாதிருப்பதனால் இவை சொல்லர்த்தமான பட்சிகள் அல்ல என்பதை அறிந்துகொள்கின்றோம். உண்மையில், இந்த வெட்டுக்கிளிகள் பாதாளக் குழியிலிருந்தே வருகின்றன. விழுந்துபோன தூதர்களே பாதாளக்குழியில் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது (யூதா.6, 2பேது.2:4).[107] இந்த தூதர்களின் தலைவனைப் பற்றியே வெளிப்படுத்தல் 9:11ல் "அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு, அவன் பாதாளத்தின் தூதன். எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர்க

---

குழியிலிருந்து புகை எழும்பிற்று. அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது. அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக் கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[106] வெளிப்படுத்தல் 9:4-10ன்படி, அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது. அவைகளுடைய தலைக ளின் மேல் பொன்மயமான கிரீடம்போன்றவைகளிருந்தன. அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருந்தன. அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளு டைய கூந்தல் போலிருந்தது. அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந் தன. இரும்புக் கவசங்களைப்போல மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன. அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரை கள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன. அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாயிருந்தன."

[107] R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 30. யூதா 6ல் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ் தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" என்றும், 2பேதுரு 2:4ல் "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்துள்ளார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ளின் அர்த்தம் "அழிப்பவன்" என்பதாகும். ஆரம்ப காலத்தில் (1917ல்) யெகோவாவின் சாட்சிகள் இவ்வதிகாரத்தை சரியான விதத்தில் புரிந்து கொண்டவர்களாக, சாத்தானே இவ்வசனத்தில் அபெத்தோன் என்றும் அப்பொல்லியோன் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதாக விளக்கினார்கள்.[108] ஆனால், 1969ல் இவ்வசனத்தின் சாத்தானை இயேசுகிறிஸ்துவாக மாற்றிவிட்டனர். அதாவது, இயேசுகிறிஸ்துவைப்பற்றியே இவ்வசனம் கூறுகிறது என்று போதிக்கத் தொடங்கினார்கள்.[109] இதனால், பாதாளக் குழியிலிருக்கும் விழுந்துபோன தூதர்களின் தலைவனாக இயேசு கிறிஸ்துவை இவர்கள் சித்தரித்து விட்டார்கள்.

பாதாளக் குழியிலிருக்கும் விழுந்தபோன தூதர்களின் தலைவனாக இயேசுகிறிஸ்துவை சித்தரிக்கும் யெகொவாவின் சாட்சிகள், அவரைத் தெய்வமாக ஏற்றுக்கொள்வதில்லை.

உண்மையில், சாத்தானையே இயேசுகிறிஸ்துவாக மாற்றிய யெகோவா வின் சாட்சிகள், அவரைத் தெய்வமாக ஏற்றுக்கொள்வதில்லை. இத னால், இவர்களுடைய உபதேசங்கள் அனைத்தும் முன்னுக்குப் பின் முரணானவைகளாகவே உள்ளன. காலத்திற்குக் காலம் தங்களுடைய சிந்தனைக்கும் வசதிக்கும் ஏற்றவிதத்தில் இவர்கள் தங்களுடைய உபதேசங்களை மாற்றியுள்ளனர். ஆனால், அடிக்கடி மாற்றமடைந்துள்ள இவர்களுடைய போதனைகளில் எப்பொழுதும் மாறாமல் இருக்கும் முக்கியமான உபதேசம், தங்களுடைய சங்கத்தின் உதவி இல்லாமல் எவராலும் தேவனோடு தொடர்புகொள்ள முடியாது என்பதேயாகும். இதனால்தான், "தாங்கள் வெளியிடும் சஞ்சிகைகள் புத்தகங்களின் உதவி இல்லாமல் எவராலும் வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் புரிந்துகொள்ள முடியாது"[110] என்றும், "தாங்கள் மாத்திரமே இப்பூமியில் தேவனைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்கள்"[111] என்றும் கூறும் இவர்கள், "தேவனுடைய குரலுக்கு செவிகொடுப்பதுபோல


[108] Anonymous, *The Finished Mystery*, p. 159.
[109] Anonymous, *Then Is Finished The Mystery of God*, p. 232.
[110] *The Watchtower*, 1 December 1981, p. 27.
[111] *The Watchtower*, 1 May 1938, 169.

தங்களுடைய அறிவுறுத்தல்களுக்கு மனிதர் செவிகொடுக்க வேண்டும்"[112] என்று அறிவிக்கின்றனர். இதனால், யெகோவாவின் சாட்சிகளின் தலைமைப்பீடம் ஒரு உபதேசத்தை மாற்றும்போது, யெகோவாவின் சாட்சிகள் அனைவரும் தங்களுடைய நம்பிக்கையையும் மாற்றிக் கொள்கின்றனர்.[113]

உண்மையில், மாறுபாடும் முரண்பாடும் உள்ள ஒரு மதக் குழுவினராகவே யெகோவாவின் சாட்சிகள் உள்ளனர். ஒரு மெய்க்கிறிஸ்தவன் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரரான தங்களுடைய அதிகாரத்தை அறிந்துகொண்டவனாக இருக்கவேண்டும்"[114] என்று இவர்கள் கூறுகின்றனர். ஏனெனில், "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் மூலமாகவே தேவனுடைய செய்திகளும் வெளிப்பாடுகளும் தற்காலத்தில் மனிதருக்கு அருளப்படுகின்றன" என்பது இவர்களுடைய நம்பிக்கையாக உள்ளது.[115] ஆனால், யார் உண்மையும் விவேகமுமான ஊழியக்காரன் என்பதைப்பற்றிய இவர்களுடைய விளக்கங்களும் மாறுபாடும் முரண்பாடும் உடையதாகவே உள்ளது. ஏனெனில், ஆரம்ப காலத்தில் சகல கிறிஸ்தவர்களும் உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரராக இருப்பதாக இவர்கள் கூறினார்கள்.[116] ஆனால், சிறிது காலத்தின் பின்னர் தங்கள் மதக்குழுவின் ஸ்தாபகரான சார்ள் ரசல் என்பவரே உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியக்காரன் என்றும், அவர் மூலமாக மாத்திரமே தேவனுடைய செய்தி மக்களுக்கு அருளப்படுகிறது என்றும் போதிக்கத் தொடங்கினார்கள்.[117] எனினும், சார்ள் ரசல் மரணமடைந்து 10 வருடங்களின் பின்னர் 1927ல், ரசல் என்னும் ஒரு தனி நபர் அல்ல, யெகோவாவின் சாட்சிகள் அனைவருமே உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரராக இருப்பதாக அறிவித்தார்கள்.[118] ஆனால், நாளடைவில் பரலோகத்திற்குச் செல்லும் 144000 பேர் மாத்திரமே உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரராக இருப்ப

[112] *The Watchtower*, 15 June 1957, p. 370.
[113] D.A.Reed, *Answering Jehovah's Witnesses*, p. 65.
[114] *The Watchtower*, 1 October 1991, p.20.
[115] *Awake*. 8 October 1991, p. 13.
[116] *The Watchtower*. November 1881, p. 291.
[117] *The Watchtower*, 1 March 1917, 6049; Anonymous, *The Harp of God*, p. 239; *The Finished Mystery*, p. 5; C.T.Russell, *Studies in the Scriptures Volume* 1, p. 7.
[118] *The Watchtower*, 15 February 1927; Anonymous, *God's Kingdom of a Thousand Years Has Approached*, p. 346; 1975 *Year Book of Jehovah's Witnesses*, p. 88.

தாகத் தெரிவித்தார்கள்.[119] தற்பொழுது, யெகோவாவின் சாட்சிகளின் நிர்வாகக் குழுவில் இருப்பவர்களே உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரராக இருப்பதாகக் கூறுகின்றனர்.[120] உண்மையில், மத்தேயு 24:45-51ல் இயேசுகிறிஸ்து தம்மை உண்மையாய்ப் பின்பற்றும் அனைவரையுமே உண்மையும் உத்தமுமான ஊழியக்காரராகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவைப்பற்றி வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களை ஏற்றுக் கொண்டு அவரைத் தெய்வமாக வழிபட்டு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள் அல்ல என்பதனால், இவர்களை உண்மையும் விவேகமுமான ஊழியக்காரர்கள் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது. நாம் இவ்வத்தியாயத்தில் பார்த்தவிதமாக, இவர்கள் போலியான பெருமையின் இருப்பிடமாகவும், பொய்யான தீர்க்கதரிசனங்களின் பிறப்பிடமாகவும், போதனைகளின் முரண்பாட்டில் சிறப்பிடம் பெறுகிறவர்களாகவும் இருப்பதனால், இவர்கள் வேதாகமப் போதகர்களாக அல்ல, ஒரு வேதப்புரட்டு குழுவினராகவே உள்ளனர்.



[119] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 102.
[120] *The Watchtower*, 1 May 1992, p. 31; *The Watchtower*, 1 February 1993, p. 16.

## யெகோவாவின் சாட்சிகளின் முன்னுக்குப் பின் முரணான சில போதனைகள்

1928ம் ஆண்டு வரை, எகிப்திலிருக்கும் பிரமிட்களை கற்களினாலான வேதாகமம் என்று கூறினார்கள். ஆனால் அதன் பின்னர் இவற்றை சாத்தானின் வேதம் என்றார்கள்.

1917ம் ஆண்டிலிருந்து வெளிப்படுத்தல் 9:1-3லுள்ள பாதாளக்குழியின் தலைவன் சாத்தான் என்று போதித்தார்கள். ஆனால், 1969ல், இயேசுகிறிஸ்துவே இத்தலைவன் என்று அறிவித்தார்கள்.

தங்களுடைய குழுவின் ஆரம்பகர்த்தாவான சார்ள் ரசல் என்பவரே மத்தேயு 24:45-51ல் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் என்று ஆரம்பத்தில் போதித்தார்கள். 1927ல், ரசல் என்னும் தனி ஒருவர் அல்ல, தங்களுடைய குழுவினர் அனைவருமே உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரர் என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது பரலோகத்திற்குச் செல்லும் 144000 பேர் மாத்திரமே இத்தகைய ஊழியக்காரர் என்று கூறுகின்றனர்.

நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஊசி போடுவதை 1950ம் ஆண்டுவரை பாவமான செயலாகக் கருதினார்கள். ஆனால் அதன் அதன்பின்னர் இத்தடையை நீக்கிவிட்டார்கள்.

1967 முதல் 1980 வரை அறுவை சிகிச்சையின் மூலம் அவயவங்களை மாற்றுவதைத் தடைசெய்திருந்தனர். அதன் பின்னர் இவர்கள் இதைப் பாவமாகக் கருதவில்லை.

1961ம் ஆண்டுவரை ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தை உபயோகித்து வந்தார்கள், அதன் பின்னர் இதை சாத்தானின் வேதாகமம் என்று விமர்சித்தார்கள்

## மூன்றாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

தேவனுடைய பெயர் யெகோவா என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், நாம் இப்பெயரை உபயோகித்தால் மாத்திரமே தேவனை கனப்படுத்தவும் ஜெபிக்கவும் முடியும் என்றும், தேவனுக்கு வேறு பெயர்களை உபயோகிப்பவர்கள் சாத்தானுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வாதிடுகின்றனர். தற்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் யெகோவா என்பதே தேவனுடைய பெயர் என்று நினைத்தாலும், இது கி.மு 13ம் நூற்றாண்டில் ஐரோப்பிய கிறிஸ்தவர்களினால் ஐரோப்பிய மொழியில் உருவாக்கப்பட்டு, ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில வேதாகமத்தின் மூலம் பிரபலமாகியுள்ள ஒரு பெயராகும். ஆனால், பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரேய மொழியில் தேவன் தமக்கு கொடுத்துள்ள பெயர் “யாவே” என்பதாகும். எனினும், பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை யாவே என்னும் பெயரில் வெளிப்படுத்தினாலும், புதிய ஏற்பாட்டில் இயேசு என்னும் பெயரிலேயே தம்மை மனிதருக்கு வெளிப்படுத்தியுள்ளார். இதனால்தான், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் சகல காரியங்களையும் இயேசுவின் நாமத்தில் செய்ததோடு, இயேசு என்னும் பெயரிலேயே தேவனை வழிபட்டு வந்தனர். ஆனால், யெகோவா என்னும் பெயர் இயேசுவுக்கு கொடுக்கப்படாததினால் அவர் தேவன் அல்ல என்று வாதிடும் யெகோவாவின் சாட்சிகள், இயேசு தேவன் என்பதை நேரடியாக அறியத்தரும் வேதவசனங்கள் அனைத்தையும் வித்தியாசமாக மொழிபெயர்த்தும் விளக்கியும் வருவதனால், இவர்கள் உண்மையான தேவனை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். ஏனெனில், தேவனை மகிமைப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாட்டில் இயேசு என்னும் நாமம் மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது.

## மூன்றாம் அத்தியாயம்

# יהוה

# தெய்வத்தின் பெயர்

## தெய்வப்பெயர் யெகோவாவா? அல்லது தேவனாயிருப்பவர் இயேசுகிறிஸ்துவா?

யெகோவாவின் சாட்சிகளின் முக்கியமான போதனை தேவனுடைய பெயரைப் பற்றியதாகும். "மானிட இரட்சிப்புக்குத் தேவனுடைய சரியான பெயரை உபயோகிப்பது அவசியமானது"[1] என்று கூறும் இவர்கள், "உலகில் தாங்கள் மாத்திரமே தேவனுடைய சரியான பெயரை உபயோகிப்பதனால், தாங்கள் மாத்திரமே தேவனை உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள்" என்று பெருமிதம் கொள்கின்றனர்.[2] இதனால், தேவனை "யெகோவா" என்று அழைக்கும் யெகோவாவின் சாட்சிகள், "நாம் இப்பெயரை உபயோகித்தால் மாத்திரமே மத்தேயு 6:9லுள்ள கர்த்தருடைய ஜெபத்தில் சொல்லப்பட்டது போல தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்த முடியும்"[3] என்றும், "யெகோவா என்னும் பெயரை

[1] Anonymous, *Let Your Name be Sanctified*, p. 12.
[2] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses,* p. 50.
[3] Anonymous, *Let God be True*, p. 28.

உபயோகித்தால் மாத்திரமே நம்முடைய ஜெபம் கேட்கப்படும்” என்றும், “தேவனுக்கு வேறு பெயர்களை உபயோகிப்பது அவரைக் கனவீனப் படுத்தும்” என்றும் கூறுகின்றனர்.[4] இதனால், கிறிஸ்தவர்கள் “தேவனே” “கர்த்தாவே” “பிதாவே” “இயேசுவே” “ஆவியானவரே” என்று ஜெபிக்கும் போது, அவர்கள் உண்மையான தேவனிடம் ஜெபிக்காமல், போலியான தெய்வங்களிடம் அல்லது சாத்தானிடம் ஜெபிப்பதாக யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.[5] உண்மையில், தேவனுக்கு யெகோவா என்னும் பெயரை உபயோகிக்காதவர்கள் அனைவரும் சாத்தானுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே யெகோவாவின் சாட்சிகளின் போதனையாக உள்ளது.[6]

யெகோவா என்பதே தேவனுடைய பெயர் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், வேதாகமத்தின் மூலப் பிரதிகளில் தேவனுக்கு இப்பெயர் கொடுக்கப்படவில்லை. இது தேவனுடைய பெயர் அல்ல.

தற்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் தேவனை யெகோவா என்று அழைக்கின்றனர். சில கிறிஸ்தவ பாடல்களிலும் இப்பெயர் இடம்பெற்றுள்ளது. ஆனால், வேதாகமத்தின் மூலப் பிரதிகளில் தேவனுக்கு இப்பெயர் கொடுக்கப்படவில்லை. உண்மையில், இது தேவனுடைய பெயரே அல்ல. கி.பி.16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் வெளிவந்த சில வேதாகம மொழிபெயர்ப்புகளின் சில வசனங்களிலேயே தேவனுடைய பெயர் இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால்தான், ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில் 4 தடவைகள் தேவனுடைய பெயர் யெகோவா என்றும் (யாத்.6:3, சங்.83:17, ஏசா.12:2, 26:4), இன்னும் நான்கு இடங்களில் அவருடைய தன்மை இப்பெயரோடு சேர்க்கப்பட்ட நிலையிலும் (ஆதி.22:14, யாத்.17:15, நியாயா.6:24, ஏசா.26:4) உள்ளது. நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் இவ்விடங்களிலும் யாத்திராகமம் 6:2லும் யெகோவா என்னும் பெயர் உள்ளது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் 1961ம் ஆண்டு வெளியிட்ட “புது உலக மொழிபெயர்ப்பு வேதாகமத்தில்” (New World

[4] Anonymous, *Let Your Name be Sanctified*, p. 88.
[5] D.A.Reed, *Jehovah's Witnesses Answered Versy by Verse*, p. 28.
[6] Anonymous, *You Can Live forever in Paradise on Earth*, p. 44.

Translation) பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிப்பிட 6828 தடவைகள் "யெகோவா" என்னும் பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளதோடு, புதிய ஏற்பாட்டில் பிதாவைக் குறிப்பிடும் 237 இடங்களில் "தேவன்" என்பது "யெகோவா" என்று மாற்றப்பட்டுள்ளது.[8] எனவே, இவ்வத்தியாயத்தில், யெகோவா என்பதுதான் தேவனுடைய நாமமா? தேவனுக்கு யெகோவா என்னும் பெயர் எவ்வாறு உருவானது? என்பதையும், நாம் தேவனை எவ்வாறு அழைக்கவேண்டும்? என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம்

## (1). ஐரோப்பிய கிறிஸ்தவர்களினால் உருவாக்கப்பட்ட பெயர்

தேவனுடைய பெயர் யெகோவா என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனெனில், இது வேதாகமத்தில் தேவனுக்கு கொடுக்கப்பட்ட பெயராக அல்ல, ஐரோப்பிய கிறிஸ்தவர்களினால் உருவாக்கப்பட்ட ஒரு பெயராகவே உள்ளது. உண்மையில், யெகோவா என்பது கி.பி.13ம் நூற்றாண்டில் (குறிப்பாக 1270ம் ஆண்டில்) ஸ்பானியாவில் வாழ்ந்த "கத்தோலிக்க சபையின் டொமினிக்கன்" ஒழுங்கு முறையைச் சேர்ந்த "ரேய்மன் மார்ட்டின்" என்பவரினால் உருவாக்கப்பட்டு, கி.பி 16ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களினால் பிரபலமாக்கப்பட்ட ஒரு பெயராகும்.[9] ஆனால், இதற்கு முற்பட்ட காலத்தில், குறிப்பாக கி.மு.586ல் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனதற்குப் பின்னர் தேவனுடைய பெயரை எவ்வாறு உச்சரிப்பது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. இதற்குக் காரணம், பழைய ஏற்பாட்டில் (மூலமொழியில்) தேவனுடைய பெயர் எவரும் உச்சரிக்க முடியாதபடி உயிரெழுத்துகள் (vowels) இல்லாமல் எழுதப்பட்டுள்ளதேயாகும். உண்மையில், ஆரம்பத்தில் பழைய ஏற்பாடு முழுவதும் உயிரெழுத்துகள் இல்லாமலேயே எழுதப்பட்டது. இதனால், எழுதப்பட்டதை வாசிக்கும்போது ஒவ்வொரு வார்த்தைக்கும் தேவையான உயிரெழுத்துகளைச் சேர்த்து வாசிப்பது அக்கால மக்களின் வழக்கமாக இருந்

---

[8] P.Griffiths, *Jehovah's Witnesses and the Person of Jesus Christ*, L. 85.

[9] P.Elliott, *Jehovah's Witness: How is there Faith Different from Christianity*, p. 3; *Is God's Name Yahweh or Jehovah?* http://www.catholic.com/quickquestions/is-gods-name-yahweh-or-jehovah.

தது. ஆனால் இது, ஒவ்வொருவரும் வித்தியாசமான உயிரெழுத்துக ளைச் சேர்த்து ஒவ்வொரு வார்த்தையையும் வித்தியாசமான முறையில் உச்சரிக்கும் முறையைத் தோற்றுவித்ததினால், கி.பி.1000 அளவில் பாரம்பரியமாகப் பழைய ஏற்பாடு வாசிக்கப்பட்ட முறையை அடிப்படை யாகக்கொண்டு உயிரெழுத்துகள் சேர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வேதப்பிரதியை யூதர்கள் தயாரித்தனர்.[10] எனினும், அக்காலத்தில் "தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது" (யாத்.20:7) என்னும் கட்டளையை யூதர்கள் மிகவும் உறுதியாகக் கைக்கொண்டு வந்ததினால், பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயருக்கு உயிரெழுத் துகளைச் சேர்க்காமல் விட்டுவிட்டனர்.[11] இதனால், பிற்காலத்தில் தேவனுடைய பெயரை எவ்வாறு உச்சரிப்பது என்று எவருக்கும் தெரியாமல் போய்விட்டது.[12]

எபிரேய வேதாகமத்தில் தேவனுடைய பெயர் உயிரெழுத்துகள் இல்லாமல் எழுதப்பட்டுள்ளதனால், பிற்காலத்தில் தேவனுடைய பெயரை எவ்வாறு உச்சரிப்பது என்று எவருக்கும் தெரியாமல் போய்விட்டது

தேவனுடைய பெயரை எவ்வாறு உச்சரிப்பது என்னும் சிக்கலைத் தீர்ப்பதற்காகக் கி.பி.13ம் நூற்றாண்டில் "அடோனாய்" (*Adonay*)[13]

---

[10] இவ்வாறு தயாரிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் பிரதி, "மெசோரெட்டிக் பிரதி" என்று அழைக்கப்படுகின்றது. இதற்குக் காரணம், இப்பிரதியைத் தயாரித்த யூதர்கள் "மெசோரெட்ஸ்" என்று அழைக்கப்படுவதேயாகும். இவர்கள் கி.பி.132ம் ஆண்டிலிருந்து கி.பி.1000 ஆண்டுவரை பழைய ஏற்பாட்டின் நகல் பிரதிகளைத் தயாரித்தவர்களாவர். கி.பி.1455ல் அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்படும்வரை, ஒரு பிரதியைப் பார்த்து எழுதுவதன் மூலமாகவே வேதாகமத்தின் பிரதிகள் தயா ரிக்கப்பட்டன.

[11] H.Wolf, *An Introduction to the Old Testament Pentateuch*, p. 27.

[12] எந்த மொழியிலும் சொற்களை உச்சரிப்பதற்கு உயிரெழுத்துகள் அவசியம். உதாரணத்திற்கு, ஆங்கிலத்தில் a e i o u என்பன உயிரெழுத்துகளாகும். இவ்வெழுத்துகளில் ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் ஆங்கிலத்தில் எந்த ஒரு சொல்லும் இல்லை. sky போன்ற வார்த்தைகளில் i என்னும் உயிரெழுத்தின் உச்சரிப்பு உள்ளது. எபிரேய மொழியிலும் இத்தகைய முறை இருப்பதனால் உயிரெழுத்துகள் இல்லாமல் எழுதப்பட்டுள்ள தேவனின் பெயரை உச்சரிக்க முடியாமல் இருந்தது.

[13] வேதாகமத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "யாவே" என்னும் தெய்வப் பெயர் LORD என்றும் "அடோனாய்" என்பது Lord என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்னும் தேவனுடைய இன்னுமொரு பெயரிலுள்ள உயிரெழுத்துக ளைத் தேவனுடைய பெயரில் சேர்த்து, "யாகோவா" என்று உச்சரிக்கப் பட்டது. இப்பெயரின் லத்தீன் மொழி உச்சரிப்பு ஜெகோவா என்று மாறியது. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர் உயிரெழுத்துகள் இல்லாமல் ஐரோப்பிய மொழிகளில் YHWH என்று எழுதப்படுகிறது. உயிரெழுத்தற்ற இத்தெய்வப் பெயருக்கு *Adonay* என்னும் பெயரில் உள்ள a o a என்னும் உயிரெழுத்துகள் சேர்க்கப்பட்டு YaHoWaH என்று எழுதப்பட்டது. இதற்கு வேறு உயிரெழுத்துகளைச் சேர்த்தால் உச்சரிப்பு வித்தியாசப்படும். மேலும், எபிரேய மொழியில் எழுதப்பட்ட தேவனுடைய பெயரை, ஐரோப்பிய மொழிகளில் உள்ள உயிரெழுத்து களை உபயோகித்து உச்சரிப்பது சரியான செயல்முறை அல்ல. ஏனெனில், பழைய ஏற்பாட்டின் மூலமொழியான எபிரேயத்தில் உள்ள உயிரெழுத்துகளைச் சேர்த்தே தேவனுடைய பெயரை நாம் உச்சரிக்க வேண்டும். இதனால், தேவனுடைய பெயரை ஐரோப்பிய மொழிகளில் எழுதி, அதற்கு ஐரோப்பிய மொழிகளில் உள்ள உயிரெழுத்துகளைச் சேர்த்து யெகோவா என்று உச்சரிப்பது தவறாகும். ஏனெனில், எபிரேய மொழியில் தேவனுடைய பெயரை "யாவே" (Yahweh) என்று உச்சரிப் பதே சரியானது என்பதைத் தற்காலத்தில் எபிரேய மொழிவல்லுநர்கள் அறியத்தந்துள்ளனர்.

எபிரேய மொழியில் எழுதப்பட்ட தேவனுடைய பெயரை, ஐரோப்பிய மொழிகளில் உள்ள உயிரெழுத்துகளை உபயோகித்து யெகோவா என்று உச்சரிப்பது சரியான செயல்முறை அல்ல.

பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர் யாத்திராகமம் 3:14ல் "எஹ்யா அஷ்ஹேர் எஹ்யா" (*ehyeh asher ehyeh*) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழில் இதை "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்று மொழிபெயர்த் துள்ளனர். இதில் "எஹ்யா" என்பது "யா" என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுவது வழக்கம். இதை "ஹல்லேலூயா" என்னும் எபிரேயச் சொல் அறியத்தருகிறது. இச்சொல்லில் "ஹல்லெல்" என்பது, "துதி" அல்லது "ஸ்தோத்திரம்" என்னும் அர்த்தமுடையது. "யா" என்பது "யாவே" என்னும் தெய்வப்பெயரின் சுருக்கமாகும். எனவே, ஹல்லே

லூயா என்பது "யாவேயைத் துதி" என்னும் அர்த்தமுடைய சொல்லாகும்.[14] யாவே என்பது தமிழில் கர்த்தர் என்றும் ஆங்கிலத்தில் Lord என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனினும், கி.பி.17ம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்ட ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தின் சில வசனங்களிலும், இதனைத் தழுவி மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் வேதாகமத்திலும், சில கிறிஸ்தவ பாடல்களிலும் யெகோவா என்னும் சொல் இருப்பதனால் கிறிஸ்தவர்கள் மத்தியில் இப்பெயர் பிரபலமடைந்துள்ளது. ஆனால் உண்மையில் இது தேவனுடைய பெயர் அல்ல. இது கி.பி.13ம் நூற்றாண்டில் ஒரு கத்தோலிக்க மத குருவினால் உருவாக்கப்பட்ட பெயராகவே உள்ளது. எனவே, தேவனை அழைப்பதற்கு நாம் யெகோவா என்னும் பெயரையே உபயோகிக்கவேண்டும் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது தவறாகும்.

யெகோவா என்பது கி.பி.13ம் நூற்றாண்டில் ஒரு கத்தோலிக்க மத குருவினால் உருவாக்கப்பட்ட பெயராகவே உள்ளது. ஏனெனில், எபிரேய மொழியில் தேவனுடைய பெயர் யாவே என்று உச்சரிக்கப்படுகிறது

"யாவே" என்பதே தேவனுடைய பெயரின் சரியான உச்சரிப்பு முறை என்பதை எபிரேய மொழிவல்லுநர்கள் சுட்டிக்காட்டுவதை யெகோவாவின் சாட்சிகள் அறிந்துள்ளபோதிலும், தங்களுடைய உபதேசமே சரியானது என்பதைக் காண்பிப்பதற்காக, "இப்பெயரை எப்படி உச்சரிப்பது என்று எவருக்கும் சரியாகத் தெரியாதிருப்பதனால், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள யெகோவா என்னும் உச்சரிப்பே சரியானது"[15] என்று இவர்கள் கூறுகின்றனர். ஆனால் இதை சரியான உச்சரிப்பு என்று அல்ல, கி.பி.13ம் நூற்றாண்டில் ஒரு கத்தோலிக்க மதகுருவினால் உருவாக்கப்பட்ட ஒரு உச்சரிப்பு என்றே கூறவேண்டும். இவ்வுண்மையை, யெகோவாவின் சாட்சிகளின் இரண்டாவது தலைவரான ஜோசப் ரதர்ஃபோர்ட் நன்கு அறிந்திருந்தார்.[16] எனவே, தேவனுடைய பெயரை "யாவே" என்றே உச்சரிக்க வேண்டும் என்று எபிரேய

[14] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 462.
[15] Anonymous, *Insight on the Scriptures Vol.2*, p. 7.
[16] Anonymous, *Aid to Bible Understanding*, p. 885.

மொழிவல்லுநர்கள் சுட்டிக்காட்டுவதை யெகோவாவின் சாட்சிகளும் அறிந்திருந்தும்,[17] இவர்கள் தேவனை யெகோவா என்று அழைப்பது, தாங்கள் அறிந்திருக்கும் உண்மையை இவர்களே மறுதலிக்கும் ஒரு செயலாகவே உள்ளது. எனவே, இவ்வுண்மையை அறிந்துள்ள கிறிஸ் தவர்களாகிய நாமும், யெகோவா என்னும் பெயரை உபயோகிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதனால், நாம் பாடும் பாடல்களிலும் யெகோவா என்பதை இயேசு என்று அல்லது தேவன் என்று மாற்றிப் பாடவேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இல்லையென்றால் யெகோவாவின் சாட்சிகள் கூறுவதை உண்மை என்று நாம் ஏற்றுக்கொள்கிறவர்களாகவும், நாம் அறிந்துள்ள உண் மையை மறுதலிக்கிறவர்களாகவும், அர்த்தமில்லாமல் பாடுகிறவர்களாக வுமே இருப்போம். தம்முடைய பெயர் யாவே என்பதை யாத்திராகமம் 3:14ல் தேவன் தெளிவாகத் தெரிவித்துள்ளதினால், இப்பெயரிலேயே தேவனை நாம் அழைக்கவேண்டும். ஏசாயா 42:8ல், "நான் கர்த்தர் (மூலமொழியில் யாவே) இது என் நாமம்" என்று தேவன் தெரிவித்துள் ளார். எனவே, "தேவன் தமக்குக் கொடுத்துள்ள பெயரினால் நாம் அவரை அழைக்க வேண்டுமே தவிர, ஒரு கத்தோலிக்க மதகுரு உருவாக்கிய பெயரில் அவரை அழைக்கக்கூடாது."[18] ஏனெனில், இது அவரைக் கனவீனப்படுத்தும் செயலாகவே இருக்கும் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாது.

## (2). யெகோவாவின் சாட்சிகளினால் உட்புகுத்தப்பட்ட பெயர்

யெகோவா என்னும் பெயர் கி.பி.13ம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பியர் களினால் உருவாக்கப்பட்ட ஒரு பெயராக இருந்தாலும், தற்காலத்தில் யெகோவாவின் சாட்சிகளினால் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தில் உட்புகுத்தப்பட்டுள்ள ஒரு போலிப் பெயராகவே உள்ளது. ஆனால், இவர்கள், பழைய ஏற்பாட்டின் ஆரம்பகால கிரேக்க மொழிபெயர்ப்பிலும், புதிய ஏற்பாட்டின் ஆரம்பகால பிரதிகளிலும் தேவனுக்கு யெகோவா

[17] Anonymous, *Insight on the Scriptures Vol.2*, p. 7.
[18] P.Elliott, *Jehovah's Witness: How Is There Faith Different From Christianity*, p. 3.

என்னும் பெயரே கொடுக்கப்பட்டிருந்தது என்றும், இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் யெகோவா என்றே தேவனை அழைத்தனர் என்றும் கூறுகின்றனர்.[19] இதற்கு ஆதாரமாக இவர்கள் உபாகமம் 18:5-32:19 மாத்திரம் உள்ள ஒரு வேதப்பிரதியையும், சில பகுதிகளை மாத்திரம் கொண்டுள்ள வேறு ஒன்பது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்புப் பிரதிகளையும் சுட்டிக்காட்டுவது வழக்கம்.[20] ஆனால் இவ்வேதப் பிரதிகள் இயேசுகிறிஸ்துவின் காலத்தில் இருந்தவைகள் அல்ல. மேலும், சிறு பகுதிகளை மாத்திரம் கொண்டுள்ள இவற்றை வேதஆராய்ச்சியாளர்கள் நம்பகமான வேதப்பிரதிகளாகக் கருதுவதும் இல்லை.[21] ஏனெனில், இவை கி.பி. 1ம் அல்லது 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும்.[22] எனவே, பிற்காலத்தில் பிரதிபண்ணப்பட்ட இப்பிர திகளை ஆதாரமாகக் கொண்டு, வேதாகமத்தில் தேவனுடைய பெயர் யெகோவா என்றே ஆரம்ப காலத்தில் இருந்தது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது உண்மை அல்ல. கி.பி.13ம் நூற்றாண்டிலேயே யெகோவா என்னும் பெயர் உருவாக்கப்பட்டதனால், இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே தேவனை யெகோவா என்று அழைத்தனர் என்று கூறுவது முழுமை யான பொய்யாகும். இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்க ளும் தேவனை யெகோவா என்று அல்ல, “பிதாவே” என்றே அழைத்த னர் என்பதை மத்தேயு 5:16, 5:45, 5:48, 6:6, 6:9, ரோமர் 1:3, 8:15, 1கொரிந்தியர் 8:6 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தேவனை யெகோவா என்று அல்ல, “பிதாவே” என்றே அழைத்தனர். ஏனெனில், யெகோவா என்னும் பெயர் கி.பி.13ம் நூற்றாண்டே உருவாக்கப்பட்டது.

பழைய ஏற்பாடு கிரேக்கத்துக்கு மொழிபெயர்க்கப்படும் போது, “யாவே” என்னும் எபிரேயப் பெயர் கிரேக்க மொழியில் “கூரியொாஸ்” (தமிழில்

[19] Anonymous, *Aid to Bible Understanding*, pp. 882-894; *Kingdom Interlinear Translation*, pp. 10-15.
[20] D.Harris, *Awake to the Watch Tower*, p. 226.
[21] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 421.
[22] D.Harris, *The Jehovah's Witnesses: Their Beliefs & Practices*, p. 49.

கர்த்தர்) என்று குறிப்பிடப்பட்டது. 1946ம் ஆண்டு வரை, யெகோவாவின் சாட்சிகளும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் யெகோவா என்னும் பெயர் இல்லை என்றும், இதற்குப் பதிலாகக் கர்த்தர் என்று அர்த்தந்தரும் "கூரியொஸ்" என்னும் கிரேக்கச் சொல்லே உள்ளது என்றும் கூறிவந்தனர்.[23] ஆனால், அதன் பின்னர் பழைய ஏற்பாட்டுக் கிரேக்க மொழிபெயர்ப்பின் உபாகமப் புத்தகப் பிரதி ஒன்றை ஆதாரமாகக்கொண்டு,[24] கிரேக்க மொழிபெயர்ப்பின் ஆரம்பகால பிரதிகள் அனைத்திலும் யெகோவா என்று உச்சரிக்கப்படும் பெயரே இருந்தது என்று தர்க்கம் பண்ணத்தொடங்கினார்கள். ஆனால், இது எவ்வித ஆதாரமுமற்ற தர்க்கமாகும். ஏனென்றால், யூதர்கள் உபயோகித்த கிரேக்கப் பிரதிகள் சிலவற்றில் மாத்திரமே யெகோவா என்று 13ம் நூற்றாண்டில் உச்சரிக்கப்பட்ட யாவே என்னும் பெயர் உயிரெழுத்துகள் இல்லாமல் உள்ளது. அக்காலத்தில் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது என்னும் கற்பனையைக் (யாத்.20:7) கருத்திற்கொண்ட யூதர்கள் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பைப்[25] பிரதிபண்ணும்போது, தேவனுடைய பெயரைக் கூரியொஸ் என்று மொழிபெயர்க்கக்கூடாது என்னும் எண்ணத்துடன் அதைப் பழைய ஏற்பாட்டில் உள்ளவிதமாக உயிரெழுத்துகள் இல்லாமல் எழுதியுள்ளனர்.[26] மேலும், முதலாம் நூற்றாண்டின் இறுதியில் யூதர்கள் எபிரேய மொழி பழைய ஏற்பாட்டின் அங்கீகரிக்கப்பட்ட பிரதியைத் தயாரித்ததினால், அதன் பின்னர் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட எபிரேய வேதாகமத்தையே கிரேக்கத்தில் மொழிபெயர்த்தனர்.[27] இதனால், யூதர்களினால் பிரதி பண்ணப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க வேதப்பிரதிகளில் மாத்திரமே யெகோவா என்று 13ம் நூற்றாண்டில் உச்சரிக்கப்பட்ட யாவே என்னும் பெயர் உள்ளது. ஏனைய கிரேக்க வேதப் பிரதிகளில் "கூரியொஸ்" என்றே பழைய ஏற்பாட்டின் தெய்வப்பெயர் உள்ளது.[28] உண்மையில், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் 6156

[23] Anonymous, *Equipped for Every Good Work*, p. 53.
[24] இப்பிரதி 1944ல் கண்டுபிடிக்கப்பட்டது.
[25] இம்மொழிபெயர்ப்பு பற்றிய விபரங்களுக்கு எனது "*புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு*" என்னும் நூலைப் பார்க்கவும்.
[26] D.Harris, *Awake to the Watch Tower*, p. 227-228.
[27] F.F.Bruce, *The Books and the Parchments*, pp. 145-146.
[28] A.A.Hoekema, *The Four Major Cults*, p. 257.
[29] H.Bietenhard, "Kyrios" in *The New International Dictionary of New Testament Theology Vol.2*, p. 512.

தடவைகள் யாவே என்னும் தேவனின் பெயர் கூரியொஸ் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[29]

யூதர்களினால் பிரதிபண்ணப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பின் பிரதிகள் சிலவற்றில் யாவே என்னும் பெயர் உள்ள போதிலும், புதிய ஏற்பாட்டின் வேதப்பிரதிகள் எதிலும் யாவே என்னும் பெயர் இல்லை. எனவே, கி.பி. இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டிலிருந்து யெகோவா என்னும் தேவனின் பெயர் கிறிஸ்தவர்களால் நீக்கப்பட்டது என்னும் யெகோவாவின் சாட்சிகளுடைய கூற்றில்[30] எவ்வித உண்மையும் இல்லை. புதிய ஏற்பாட்டின் வேதப்பிரதிகளை ஆராய்ந்து வரும் ஆராய்ச்சியாளர்கள், புதிய ஏற்பாடு எழுதப்பட்டதற்கும், தற்போது கிடைத்திருக்கும் புதிய ஏற்பாட்டின் கையெழுத்துப் பிரதிகளுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லை என்பதை அறியத்தந்துள்ளனர்.[31] தற்பொழுது புதிய ஏற்பாட்டின் 5700 கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. இவற்றில் எந்த ஒரு பிரதியிலும் யாவே என்னும் பெயர் இல்லை. இதைப்போலவே, ஆதிசபைத் தலைவர்களின் நூல்களில் உள்ள 86000 புதிய ஏற்பாட்டு மேற்கோள்களிலும் யாவே என்னும் பெயர் இல்லை.[32] எனவே, புதிய ஏற்பாட்டில் 237 தடவைகள் தேவனுடைய பெயர் நீக்கப்பட்டுள்ளது என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கத்தில் எவ்வித உண்மையும் இல்லை. இதுவும் இவர்களின் இன்னுமொரு பொய்யாகவே உள்ளது.

தேவன் தமக்கு கொடுத்துள்ள பெயரினால் நாம் அவரை அழைக்கவேண்டுமே தவிர ஒரு கத்தோலிக்க மதத்துறவி உருவாக்கிய யெகோவா என்னும் பெயரில் அல்ல.

யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய தவறான கருத்தை நிருபிப்பதற்காக, மத்தேயுவின் சுவிசேஷம் ஆரம்பத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்டு பிற்காலத்திலேயே கிரேக்கத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டது என்றும், இச்சுவிசேஷத்தில் யெகோவா என்னும் பெயரே இருந்தது

[30] Anonymous, *Kingdom Interlinear Translation*, p. 10.
[31] F.Kenyon, *The Bible and Archaeology*, pp. 288-289.
[32] P.Griffiths, *Jehovah's Witnesses and the Person of Jesus Christ*, L. 93.

என்றும் கூறுகின்றனர்.[33] ஆனால், மத்தேயுவின் சுவிசேஷம் ஆரம்பத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.[34] இச்சுவிசேஷத்திலுள்ள பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளதினால், மத்தேயு எபிரேய மொழியில் அல்ல, கிரேக்க மொழியிலேயே தனது சுவிசேஷத்தை எழுதியுள்ளார் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது. எனினும், கி.பி.1380ஐச் சேர்ந்த மத்தேயு சுவிசேஷத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்று எபிரேய மொழியில் உள்ளது. ஆனால், இது யாரால் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை அறியமுடியாமல் உள்ளது. எனினும், இதிலும் யெகோவா என்னும் பெயர் இல்லை. தேவனுடைய பெயருக்குப் பதிலாக "நாமம்" என்னும் சொல்லே இச்சுவிசேஷத்தில் உள்ளது.[35] அதேபோல, மத்தேயுவின் சுவிசேஷத்தில் தேவனுக்கு யெகோவா என்னும் பெயர் உபயோகிக்கப்பட்டிருந்தது என்னும் கருத்துக்கும் எவ்வித ஆதாரங்களும் இல்லை. இயேசுகிறிஸ்துவோ அவருடைய சீடர்களோ தேவனை யெகோவா என்று அழைக்கவில்லை. உண்மையில், 1931ம் ஆண்டுவரை யெகோவாவின் சாட்சிகளும் யெகோவா என்னும் பெயரை உபயோகிக்கவில்லை.[36]

பழைய ஏற்பாட்டில் யாவே என்னும் பெயரில் தம்மை வெளிப்படுத்திய தேவன், புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தம்மைப் பிதாவாக அறிமுகப்படுத்தியுள்ளார். எனவே, புதிய ஏற்பாட்டில் மக்கள் தேவனை யெகோவா என்றல்ல, பிதா என்றே அழைத்தனர். இயேசுகிறிஸ்து தேவனைத் தம்முடைய பிதா என்று அழைத்ததோடு, தம்முடைய சீடர்களையும் "எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படியே கற்பித்தார் (மத்.6:9, 11:25, 26:39-42, மாற்.14:36, லூக்.10:21, 11:2, 22:42, 23:34, 23:46, யோவா.11:41, 12:27-28). இதனால், தேவனை யெகோவா என்றல்ல, "அப்பா பிதாவே" என்று கூப்பிடுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியையே தேவன் மக்களுக்கு கொடுப்பதாக புதிய ஏற்பாடு கூறுகிறது (ரோ.8:15, கலா.4:6). எனினும், புதிய ஏற்பாட்டி

---

33 *Kingdom Interlinear Translation*, p. 1137.

34 R.T.France, *Matthew: Evangelist & Teacher*, pp. 62-66.

35 P.Griffiths, *Jehovah's Witnesses and the Person of Jesus Christ*, L.126.

36 W.Lingle, *Approaching Jehovah's Witnesses in Love*, p. 123.

லேயே தேவன் பிதாவாயிருக்கும் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது என்று கருதுவது தவறாகும். பழைய ஏற்பாட்டிலும் தேவன் இஸ்ரவேல் மக்களின் பிதாவாக அறியப்பட்டிருந்தார் (உபா.32:6, ஏசா.63:16, 64:8, எரே.3:4,19, 31:9, மல்.1:6, 2:10). இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் (யாத்.4:22, உபா.14:1, 32:19, ஏசா.1:2, எரே.31:20, ஓசி.1:10, 11:1). இரண்டு ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் யூதர்கள் மத்தியில் தேவனைப் பிதாவாக அழைக்கும் முறை ஓரளவுக்கு இருந்த போதிலும்,[38] இயேசுகிறிஸ்துவே எப்பொழுதும் தேவனைத் தம்முடைய பிதாவாக அழைத்தார்.[39]

உண்மையில், இயேசுகிறிஸ்துவிடமிருந்தே தேவனைப் பிதாவாக உரிமையோடு அழைக்கும் பழக்கத்தைக் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்டுள்ளனர்.[40] யெகோவாவின் சாட்சிகள் மொழிபெயர்த்த வேதாகமத்தில் யெகோவா என்னும் பெயர் புகுத்தப்பட்டிருந்தாலும், இம்மொழிபெயர்ப்பிலும் இயேசுகிறிஸ்து தேவனை யெகோவா என்றல்ல, பிதாவே என்றே அழைக்கின்றார்.[41] எனினும், இயேசுகிறிஸ்து தமக்கு தேவன் பிதாவாய் இருக்கும் முறைக்கும் மற்றவர்களுக்கு அவர் பிதாவாயிருக்கும் முறைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை (யோவா.20:17).[42] இயேசுகிறிஸ்து தேவனுடைய "ஒரேபேறான குமார

[38] அக்காலங்களில் எழுதப்பட்ட புத்தகங்களில் தொபித் 13:4, சிராக் 51:10, யூபிலி 1:24-28, 19:29, 3மக்காபியர் 5:7, ஞானம் 2:16 என்னும் வசனங்களில் இத்தகைய விவரணம் உள்ளது.

[39] சுவிசேஷப்புத்தகங்களில் மொத்தம் 142 தடவைகள் இயேசுகிறிஸ்து தேவனைப் 'பிதா' என்று குறிப்பிட்டுள்ளார்.

[40] சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும் போது "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (மத்.6:9) என்று ஜெபிக்கும்படி அறிவுறுத்தியதன் மூலமாகத் தேவனை இவ்வாறு அழைக்கும்படி இயேசுகிறிஸ்து நமக்குக் கற்பித்துள்ளார்.

[41] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 182.

[42] இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து மகதலேனா மரியாளுடன் பேசும் போது "என் பிதா," "உங்கள் பிதா" என்று வேறுபடுத்திக் குறிப்பிட்டுள்ளார். மேலும், தேவனைத் "தன்னுடைய பிதா" என்றும் "என் பிதா" என்றும் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ள போதிலும், அவர் மனிதர்களோடு சேர்ந்து கொண்டு "எங்கள் பிதாவே" என்று தேவனை அழைக்கவில்லை. சீடர்களையே இவ்வாறு அழைக்கும்படி கூறினார். இது, நமக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கும் உறவுக்கும், இயேசுகிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கும் உறவுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலமாகவே நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம்.

னாக" இருக்கையில்,[43] கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய "சுவிகா ரப் புத்திரர்களாக" இருக்கின்றோம் (எபே.1:4-6,12).[44] இது, இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த செயலின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதமாகும் (கலா.4:4-7).[45] ஏனெனில், இயேசுகிறிஸ்து சிலுவையில் நமக்காகச் செலுத்திய பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்வதன் மூலமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் (யோவா.1:12).[46] இதனால், தேவனை "அப்பா, பிதாவே" என்று உரிமையோடு அழைப்ப தற்கு அவருடைய ஆவி நமக்கு அருளப்படுகிறது (காலா.4:6).[47] யெகோவாவின் சாட்சிகளுக்கு இத்தகைய ஆவிக்குரிய அனுபவம் இல்லாததினால் அவர்களால் தேவனைப் பிதாவே என்று அழைக்க முடியாமல் உள்ளது. உண்மையில், கிறிஸ்தவர்களாகிய நமக்கும்

---

43 யோவான் 1:14,18, 3:16,18ல் உள்ள "ஒரேபேறான குமாரன்" என்னும் சொற்பிரயோகம் தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள அந்நி யோன்ய சம்பந்தமான உறவை அறியத்தருகிறது. இவ்வசனத்தை யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய உபதேசத்திற்கு ஏற்றவிதமாகத் தவறாக வியாக்கியானம் செய்யும் முறை 5ம் அத்தியாயத்தில் விபரமாக ஆராயப்பட்டுள்ளது.

44 எபேசியர் 1:4-6ல் "தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகத் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" என்றும், எபேசியர் 1:12ல் "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக் கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக் குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

45 கலாத்தியர் 4:4-7ல் "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத் திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிற படியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனு டைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூல மாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" என்று பவுல் கூறுகிறார்.

46 யோவான் 1:12ல், "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனு டைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று குறிப்பி டப்பட்டுள்ளது.

47 கலாத்தியர் 4:6 "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்பதை அறியத்தருகின்றது.

தேவனுக்கும் இடையில் இருக்கும் தகப்பன் பிள்ளை உறவுமுறை யெகோவாவின் சாட்சிகளுக்கு இல்லை. தேவனை யெகோவா என்றல்ல, இயேசுகிறிஸ்துவின் மூலம் பிதாவே என்று அழைப்பதே வேதாகமம் காண்பிக்கும் ஆவிக்குரிய வழிமுறையாக உள்ளது. இதனால், இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவனைப் பிதாவாக அறிந்து கொள்ளாமல், "தேவனைப் பிதாவே என்று உரிமையோடும் அன்போடும் அழைக்காமல் யெகோவா என்று அழைப்பவன், தேவனைத் தனிப்பட்ட ரீதியாக அறியாதவனாகவே இருக்கின்றான்."[48]

## (3). மெய்க் கிறிஸ்தவர்கள் உபயோகிக்கவேண்டிய பெயர்

"யெகோவா என்னும் பெயரையே நாம் உபயோகிக்க வேண்டும், அப்போது மாத்திரமே நம்மால் தேவனை வழிபட முடியும்"[49] என்றும், "நம்முடைய ஜெபங்கள் யெகோவா என்னும் தேவனிடமே ஏறெடுக்கப் படவேண்டும்"[50] என்றும் போதிக்கும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் தவறானது. ஏனெனில், புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து வின் பெயருக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது மாத்திரமல்ல, அவரே தேவனாக வெளிப்படுத்தப்பட்டுள்ளார் (1தீமோ.3:16, யோவா. 14:9).[51] எனவே, தற்காலத்தில் நாம் இயேசுகிறிஸ்துவின் பெயரையே உபயோகிக்கவேண்டும். இதனால், புதிய ஏற்பாட்டில் தேவன் முக்கியமற்றவராக இருக்கின்றார் என்று நாம் கருதலாகாது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே தம்மை வெளிப்படுத்தி செயல்படுகிறவராக இருப்பதனால் (யோவா. 14:10),[52] நாம் இயேசுகிறிஸ்துவின் பெயரையே உபயோகிக்கவேண்டும்.

---

[48] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 183.
[49] Anonymous, *Let Your Name be Sanctified*, p. 88.
[50] Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, pp, 44, 228.
[51] 1தீமோத்தேயு 3:16ல் "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்று குறிப்பிடப்பட் டுள்ளது. இதனால், யோவான் 14:9ல் "என்னைக் கண்டவன் பிதாவைக் கண் டான்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.
[52] யோவான் 14:10ல், "நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

இதனால்தான், "வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கு, எல்லா நாமத்துக்கும் மேலான நாமம் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது" (பிலி.2:9-11).

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே தம்மை வெளிப்படுத்தி செயல்படுகிறவராக இருப்பதனால், நாம் இயேசுகிறிஸ்துவின் பெயரையே உபயோகிக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் பெயரிலேயே கிறிஸ்தவர்கள் சபையாக ஒன்றுகூடினார்கள் (மத்.18:20, 1கொரி.5:4).[53] இயேசுகிறிஸ்துவின் பெயரிலேயே அற்புதங்கள் செய்யப்பட்டன. பிசாசுகள் துரத்தப்பட்டன (லூக்.10:17, அப்.3:16, 4:7-10, 16:18).[54] இயேசுகிறிஸ்துவின் பெயரிலேயே சுவிசேஷச் செய்தி அறிவிக்கப்பட்டது (அப்.10:43, யோவா.1:12, 3:16, 1யோவா.3:23, 5:13). மக்கள் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறொரு பெயரும் இருக்கவில்லை (அப்.4:12).[55] இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவனுக்கே தேவன்

[53] மத்தேயு 18:20ல், "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்று அறிவித்ததுபோலவே, சபைமக்கள், "இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவருவதாக" 1கொரிந்தியர் 5:4 கூறுகிறது.

[54] லூக்கா 10:17ல், இயேசுகிறிஸ்துவினால் ஊழியத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் திரும்பிவந்தபோது, "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள். அப்போஸ்தலர் 3:16ல், பேதுருவும் யோவானும் தாங்கள் சுகமாக்கின மனிதனிடம் "அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும்முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றும், அப்போஸ்தலர் 4:10ல், "நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது" என்றும் கூறினார்கள். அப்போஸ்தலர் 16:18ல் பவுல் பிசாசைத் துரத்தும்போது, "நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று."

[55] அப்போஸ்தலர் 4:12ல் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை."

நித்திய ஜீவனைக் கொடுக்கின்றார் (யோவா.3:16-18,36, 6:40,47).[56] மக்கள் இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயும் திட்டமாயும் உள்ளது (யோவா.6:37,45).[57] ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே மனிதரால் தேவனை அறிந்து கொள்ளவும், அவரிடம் செல்லவும் முடியும் (யோவா.14:6-7,9).[58] இதனால் தான், இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருக்கும்படி புதிய ஏற்பாட் டில் நாம் அறிவுறுத்தப்பட்டுளோம் (அப்.1:8).[59] எனவே, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யெகோவாவுக்கு சாட்சிகளாயிருப்பது தேவனுடைய திட்டத் திற்கு எதிரான வேதப்புரட்டாகவே உள்ளது. ஏனெனில், யெகோவா என்பது தேவனுடைய பெயர் அல்ல. இது ஐரோப்பியர்களினால் உருவாக்கப்பட்ட ஒரு பெயர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவே நம் வழிபாட்டுக்குரிய தேவனாக இருக்கின்றார்.

---

[56] யோவான் 3:16-18ல் "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கி றவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பி னார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவா சியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள் ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" என்றும், யோவான் 3:36ல் "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்ப தில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றும், யோவான் 6:40ல் "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவ தும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" என்றும், யோவான் 6:47ல் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் இயேசு கிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[57] யோவான் 6:37ல் "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்றும் யோவான் 6:45ல், "பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[58] யோவான் 14:6-7ல், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களா னால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்" என்றும், யோவான் 14:9ல் "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[59] அப்போஸ்தலர் 1:8ல், "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

> யெகோவாவுக்கு சாட்சிகளாயிருப்பது தேவனுடைய திட்டத்திற்கு எதிரான வேதப்புரட்டாகவே உள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவே நம் வழிபாட்டுக்குரிய தேவனாக இருக்கின்றார்.

யெகோவா என்பதே தேவனுடைய சரியான பெயர் என்று வாதிடும் யெகோவாவின் சாட்சிகள், புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவுக்கு இப்பெயர் கொடுக்கப்படாததினால் அவர் தேவன் அல்ல என்றும் கூறுகின்றனர்.[60] இவர்கள் இயேசுகிறிஸ்துவைத் "தேவனுடைய குமாரன்" என்று கூறினாலும், நாம் இரண்டாம் அத்தியாயத்தில் பார்த்த விதமாக, அவரைத் தேவனாக அல்ல, தேவனால் முதலாவதாகச் சிருஷ்டிக்கப்பட்ட பிரதான தூதனாகவே நம்புகின்றனர்.[61] இவர்களைப் பொறுத்தவரை, "மிகாவேல்" என்பதே இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பும், மானிட வாழ்வுக்குப் பின்பும் அவருடைய பெயராகும்.[62] ஏனெனில், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக் கும் "மிகாவேல்" என்னும் தேவதூதனே இயேசுகிறிஸ்து என்பதே யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கமாகும்.[63] ஆனால், பழைய ஏற்பாட் டில் குறிப்பிடப்பட்டுள்ள "யாவே" என்னும் தேவனுடைய பெயர் கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்படும்போது, "கூரியொஸ்" (தமிழில் கர்த்தர்) என்றே எழுதப்பட்டுள்ளது. எனவே, தேவனுடைய கிரேக்க மொழிப் பெயர் கூரியொஸ் ஆகும். புதிய ஏற்பாட்டில், இயேசுகிறிஸ்து வும் கூரியொஸ் (தமிழில் கர்த்தர்) என்றே குறிப்பிடப்பட்டுள்ளார் (மத்.12:8, அப்.7:59-60, 10:36, ரோ.10:12, 1கொரி.2:8, 12:3, பிலி.2:10-11). இதனால்தான், தேவனைக் குறிப்பிடும் "சர்வவல்லமையுள்ள கர்த்தர்" என்னும் பெயர் வெளிப்படுத்தல் 1:8ல்[65] இயேசுகிறிஸ்துவுக்கும்

---

[60] *The Watchtower*.15 March 1975, p. 174; Anonymous, *Reasoning with the Srciptures*, p. 150; *Aid to Bible Understanding*, p. 919; *Let God be True*, p. 33.

[61] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 146.

[62] *The Watchtower*. 15 May 1969, p. 307.

[63] *The Watchtower*.15 December 1984, p. 29.

[65] வெளிப்படுத்தல் புத்தகத்தில் இதுவே தேவனைக் குறிக்கும் பொதுவான பெயராய் உள்ளது (1:8, 4:8, 11:17, 15:3, 16:7, 16:14, 19:6, 19:15, 21:22) புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தல் புத்தகத்துக்கு வெளியில் இப்பெயர் 2கொரிந் தியர் 6:18ல் மட்டுமே உள்ளது. ஆனால் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட யூத

உபயோகிக்கப்பட்டுள்ளது.[66] மேலும், யோவான் 1:1, ரோமர் 9:5, தீத்து 2:13, எபிரேயர் 1:8, 2பேதுரு 1:1 என்னும் வசனங்களில் இயேசுகிறிஸ்து தேவன் என்று நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளார்.[67]

உண்மையில், "இயேசு" என்பது மனிதனாக வந்த தேவனுக்கு (1தீமோ.3:16) கொடுக்கப்பட்ட மானிடப் பெயராகும். கிரேக்க மொழியில் "ஈசொஸ்" என்று உச்சரிக்கப்பட்ட இப்பெயர் ஆங்கிலத்தில் "ஜீசஸ்" (Jesus) என்றும் தமிழில் "இயேசு" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இது எபிரேய மொழியிலுள்ள "யாஹோஷுவா" (Yahoshua) என்னும் பெயரின் கிரேக்க வடிவமாகும். இதுவே ஆங்கிலத்தில் "ஜோஷுவா" (Joshua) என்றும் தமிழில் யோசுவா என்றும் உச்சரிக்கப் படுகின்றது. இதன் அர்த்தம், "யாவே இரட்சகர்" என்பதாகும். மனிதரைப் பாவத்திலிருந்து மீட்பதற்காகத் தேவன் மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்ததினால், இதைக் குறிப்பிடும் விதத்தில் யாகோஷுவா (தமிழில் இயேசு) என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால்தான், மரியாளின் வயிற்றில் இயேசுகிறிஸ்து இருந்தபோது, "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்.1:21) என்று தேவதூதன் யோசேப்பிடம் தெரிவித்தான். உண்மையில், மனிதரைப் பாவத்திலிருந்து மீட்பதற்காகத் தேவன் மனிதனாக வந்தார் என்பதே கிறிஸ்தவத்தின் அடிப்படை சத்தியமாகும் (1தீமோ. 3:16, 1:15).[68]

---

நூல்களில் இதுவே தேவனைக் குறிக்கும் பொதுவான பெயராய் உள்ளது (சாலொமோனின் ஞானம் 7:25, 2மக்காபியர் 6:26, 3மக்காபியர் 5:7). மேலும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் "சேனைகளின் கர்த்தர்" என்னும் பெயர் கிரேக்கத்தில் "சர்வவல்லமையுள்ள கர்த்தர்" என்றே உள்ளது.

[66] யெகோவாவின் சாட்சிகள் வெளிப்படுத்தல் 1:8ஐ பிதாவாகிய தேவனைப் பற்றிய விவரணமாகவே கருதுகின்றனர் (Anonymous, *Reasoning from the Scriptures*, p. 412). ஆனால், இவ்வசனத்திலும் இதற்கு முன் உள்ள வசனத்திலும், "வருகிறவர்" "அவரைக் குத்தினவர்கள்" என்னும் சொற்கள், 8ம் வசனம் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணம் என்பதை அறியத்தருகின்றன.

[67] யோவான் 1:1ல், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்றும், ரோமர் 9:5ல், "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்" என்றும், தீத்து 2:13ல், "மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்றும், 2பேதுரு 1:1ல், "நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுவின் பெயரோடு சேர்க்கப்பட்டுள்ள “கிறிஸ்து” என்னும் சொல், “கிறிஸ்டொஸ்” (*Christos*) என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும். ஆங்கிலத்தில் “கிறைஸ்ட்” (Christ) என்று உச்சரிக்கப்படும் இச்சொல் “அபிஷேகம்பண்ணப்பட்டவர்” என்னும் அர்த்தமுடையது. எபிரேய மொழியில் “மேசியா” என்னும் சொல் இத்தகைய அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகின்றது. உண்மையில், தேவன் மனிதனாக வந்த போது, அவர் மனிதரைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்னும் அர்த்தத்திலேயே இயேசு என்னும் பெயருடன் கிறிஸ்து என்னும் அவருடைய உத்தியோகப் பட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. யெகோவாவின் சாட்சிகள் இயேசுவை கிறிஸ்து என்று ஏற்றுக் கொண்டாலும், அவர் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படும் வரை கிறிஸ்து என்று அழைக்கப்பட முடியாத நிலையில் இருந்தார் என்றே கூறுகின்றனர்.[69] ஆனால், தேவன் மனிதனாகப் பிறந்தபோது, இச்செய்தியை மேய்ப்பர்களுக்கு அறிவித்த தேவதூதன், “இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்” (லூக்.2:11) என்றே கூறினான். எனவே, யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றவிதமாக இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது அல்ல, அதற்கும் முன்பே அவர் குழந்தையாக பிறந்தபோதே கிறிஸ்து என்று அழைக்கப்பட்டுள்ளார். ஆனால், இயேசுகிறிஸ்து மனிதனாக வந்த தேவன் என்பதை யெகோவாவின் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளாததினால், இவ்வேதாகம சத்தியத்தை அவர்கள் மாற்றியுள்ளனர்.

யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவை சர்வவல்லமையுள்ள தேவனாக ஏற்றுக்கொள்ளாததினால், பிதாவாகிய தேவனைப் போலவே இயேசுகிறிஸ்துவும் தேவன் என்பதை அறியத்தரும் வேதாகம வசனங்களையெல்லாம் தங்களுடைய புது உலக மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் மாற்றியுள்ளனர். இதன்மூலம் இவர்கள், இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை வேதாகமத்திலிருந்து நீக்கியுள்ளனர். யோவான் 1:1ல், “அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்று இயேசுகிறிஸ்துவின்

---

[68] 1தீமோத்தேயு 3:16ல் “தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்” என்று கூறும் பவுல், “பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்” என்று 1தீமோத்தேயு 1:15ல் குறிப்பிட்டுள்ளார்.

[69] *The Watchtower*, 1 January 1969, p. 29.

தேவத்துவத்தை நேரடியாக அறிவிக்கும் வாக்கியத்தில், தேவன் என்பதற்கு முன் "ஒரு" என்னும் சொல்லைச் சேர்த்து, "அந்த வார்த்தை ஒரு தேவனாயிருந்தது" என்று இவ்வசனத்தை மாற்றியுள்ளனர்.[70] இதன் மூலம், இயேசுகிறிஸ்து தேவன் என்பதை மறுதலிக்கும் விதத்தில், அவர் "தெய்வமாகக் கருதப்படக்கூடியவர்களில் ஒருவர்"[71] என்று யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்றனர். ஆனால் இவ்வசனம், இயேசுகிறிஸ்து தேவன் என்பதைத் தெளிவாகவும் நேரடியாகவும் அறியத்தருகின்றது.[72] இதைப்போலவே, "தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ. 2:9) என்னும் வசனம் இயேசுகிறிஸ்துவின் முழுமையான தேவத்துவத்திற்கான உறுதியான ஆதாரமாய் உள்ளது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்" என்பதை "தெய்வீகத் தன்மையின் பரிபூரணம்" என்று மாற்றி, ஒருசில தேவத் தன்மைகள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவில் இருந்ததாகவும், அவர் முழுமையான தேவனாக இருக்கவில்லை என்றும் கூறுகின்றனர்.[73] மேலும், எபிரேயர் 1:8ல் இயேசுகிறிஸ்து "தேவனே" என்று அழைக்கப்பட்டுள்ளதினால், "தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" என்னும் வாக்கியத்தை யெகோவாவின் சாட்சிகள், "தேவனே என்றென்றைக்கும் உம்முடைய சிங்காசனமாயிருப்பார்" என்று இயேசுகிறிஸ்துவிடம் சொல்லப்படுவதாக மாற்றியுள்ளனர்.[74] இதன் மூலம், "இயேசுகிறிஸ்துவின் வல்லமையும் அதிகாரமும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுபவை"[75] என்றும், அவர் தேவன் அல்ல என்றும் இவர்கள் போதிக்கின்றனர். ஆனால், மூலமொழியின் இலக்கண அமைப்பு முறை

[70] The Word was God என்பதை "The word was *a* god" என்று மாற்றியுள்ளனர்.

[71] Anonymous, *Reasoning with the Srciptures*, pp. 212, 416-417.

[72] இது பற்றி மூன்றாம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

[73] For in Christ all the fullness of the Deity lives in bodily form, என்பதை Because it is in him that all the fullness of the divine quality dwells bodily என்று மாற்றியுள்ளனர். மூலமொழியில் *theiotes* என்னும் சொல் இருந்தால் யெகோவாவின் சாட்சிகளின் மொழிபெயர்ப்பைச் சரியானது என்று ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில், இச்சொல், தெய்வீகத் தன்மைகளில் ஒன்றை அல்லது சிலவற்றைக் குறிக்கும். ஆனால், *theotes* என்னும் கிரேக்கச் சொல் இவ்வசனத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதனால், யெகோவாவின் சாட்சிகளின் வேதாகம மொழிபெயர்ப்பு தவறானதாகவே உள்ளது.

[74] Thy Throne, O God, is forever and ever என்பதை God is your throne forever and ever என்று மாற்றியுள்ளனர்.

[75] Anonymous, *Aid to Bible Understanding*, p. 1597.

யைக் கருத்திற்கொள்ளும்போது, எபிரேயர் 1:8ஐ, நம் வேதாகமத்தில் உள்ளவிதமாக "தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" என்று மாத்திரமே மொழிபெயர்க்க முடியும்.[76] எனவே, இதை வேறுவிதமாக மொழிபெயர்ப்பது தவறாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்து தேவன் என்று ஏசாயா 9:6லும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவின் மானிட பிறப்பை முன்னறிவிக்கும் இவ்வசனத்தில், அவர் "வல்லமையுள்ள தேவன்" என்று அழைக்கப்பட்டுள்ளார். யெகோவாவின் சாட்சிகளின் வேதாகமத்திலும் இவ்வசனம் எவ்வித மாற்றமும் இல்லாமல் இயேசுகிறிஸ்து வல்லமையுள்ள தேவன் என்றே குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர் தேவன் இல்லை என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஏனென்றால், பிதாவாகிய தேவனைப் போல இயேசுகிறிஸ்து "சர்வவல்லமையுள்ள தேவன்" என்று குறிப்பிடப்படவில்லை என்றும், தேவனுடைய "சர்வவல்லமையும்" இயேசுகிறிஸ்துவின் வல்லமையும் வித்தியாசமானவை என்றும், தேவனுடனான உறவிலேயே இயேசுகிறிஸ்து வல்லமையுள்ளவராக இருக்கின்றார் என்பதையே வல்லமையுள்ள தேவன் என்னும் சொற்பிரயோகம் அறியத்தருவதாகவும் விளக்குகின்றனர்.[77] ஆனால், இது தவறான ஒரு விளக்கமாகும். ஏனென்றால், "வல்லமையுள்ள தேவன்" என்னும் சொற்பிரயோகம் ஏசாயா 10:21லும், எரேமியா 32:18லும் பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுவதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதனால் தேவன் சர்வவல்லமையற்றவர் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவதில்லை. இதைப் போலவே, வல்லமையுள்ள தேவன் என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்து தேவன் என்பதை மறுதலிக்கவில்லை. "பாலகனாய் பிறப்பவர் தேவன் என்பதையே ஏசாயா 9:6 அறியத்தருகிறது."[78] அதேசமயம், மூலமொழியில் வல்லமை என்பதற்கு இவ்வசனத்தில் உள்ள சொல்லே வேதாகமத்தின் ஏனைய பகுதிகளில் பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுவதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளதினால், பாலகனாய்ப் பிறந்த இயேசுகிறிஸ்து தேவன் என்பதையே இச்சொல் சுட்டிக்காட்டுகிறது.[79]

---

[76] D.A.Carson, *Jesus the Son of God*, pp. 56-57; M.J.Harris, "The Translation and Significance of *ho theos* in Hebrews 1:8-9" pp. 129-162.

[77] Anonymous, *Should You Believe in Trinity*, p. 28.

[78] G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 241; A.Motyer, *Isaiah: Tyndale Old Testament Commentaries*, p. 89.

[79] J.N.Oswalt, *Isaiah 1-39: New International Commentary on the OT*, p. 247.

இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை வேதாகமத்திலிருந்து நீக்குவதற் காக, வேதாகமத்தில் இயேசுகிறிஸ்து பேசும்போது கர்த்தர் அல்லது தேவன் பேசுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களையும் யெகோவா வின் சாட்சிகள் மாற்றியுள்ளனர். சகரியா 12:10ல் கர்த்தர் பேசும் போது,[80] “அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனம் இயேசுகிறிஸ்து பேசும் கூற்றாக,[81] அவரைக் கர்த்தராகக் காண்பிப்பதனால், யெகோவா வின் சாட்சிகள் இவ்வசனத்தை பிதாவாகிய தேவனுடைய கூற்றாக மாற்றி, “அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள்” என்று மாற்றியுள்ளனர்.[82] இதேபோல, அப்போஸ்தலர் 20:28ல் “தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபை” என்னும் வாக்கியம் இயேசுகிறிஸ்து தேவன் என்பதை நேரடியாக அறியத்தரு கிறது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தில், “தம்முடைய சுயரத்தத்தினாலே” என்பதை, “தம்முடைய குமாரனுடைய ரத்தத்தி னாலே” என்று மாற்றியுள்ளனர்.[83] இதன் மூலம், சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்து தேவன் என்னும் இவ்வசனத்தின் அர்த்தம் நீக்கப்பட்டுள்ளது.

யெகோவாவின் சாட்சிகள் வேதவசனங்களை மாற்றுவதன் மூலம் இயேசுகிறிஸ்து பிதாவைப்போல முழுமையான தேவன் இல்லை என்றும், அவர் மனிதரின் வழிபாட்டுக்கு உரியவர் அல்ல என்றும், அவரை வழிபடுவது தவறு என்றும் கூறுகின்றனர்.[84] “இயேசுகிறிஸ்து வுக்கு மரியாதை செலுத்தலாம் ஆனால் அவரை வழிபடக்கூடாது. ஏனென்றால், யெகோவா மாத்திரமே வழிபாட்டுக்குரியவர்” என்பதே இவர்களின் போதனையாகும்.[85] இதனால் இவர்கள் வேதாகமத்தில்

---

[80] சகரியா 12ம் அதிகாரத்தில் 1ம் 4ம் வசனங்கள், இவ்வதிகாரத்தில் தீர்க்க தரிசியின் ஊடாகப் பேசுவது கர்த்தர் என்பதை அறியத்தருகின்றன.

[81] யோவானுடைய சுவிசேஷத்தில் இவ்வசனம் அவரது சிலுவை மரணத்தில் நிறைவேறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா.19:37).

[82] They will look on me, the one they have pierced, என்பதை they will certainly look to the One whom they pierced through என்று மாற்றியுள்ளனர்.

[83] Be shepherds of the church of God, which he bought with his own blood என்பதை to shepherd the congregation of God, which he purchased with the blood of his own Son என்று மாற்றியுள்ளனர்.

[84] *The Watchtower*, 1 November 1964, p. 671.

[85] *The Watchtower*. 15 February 1983, p. 18.

மனிதர் இயேசுகிறிஸ்துவை வழிபட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில், "வழிபட்டார்கள்" என்பதை "மரியாதை செலுத்தினார்கள்" என்று மாற்றியுள்ளனர். ஆனால், பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனைப் பற்றி சொல்லப்பட்ட சகல காரியங்களும் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணங்களாகவே உள்ளன. உதாரணத்திற்கு, வேதாகமத்தில் பிதாவாகிய தேவன் அல்பாவும் ஒமேகாவும்,[86] ஆதியும் அந்தமுமாயிருப்பது போலவே இயேசுகிறிஸ்துவும் அல்பாவும் ஒமேகாவுமாக இருக்கின்றார்.[87] தேவன் இரட்சகராகவும் மீட்பராகவும் இருப்பது போலவே இயேசுகிறிஸ்துவும் இரட்சகராகவும் மீட்பராகவும் இருக்கின்றார்.[88] தேவன் ராஜாவாய் இருப்பது போலவே இயேசுகிறிஸ்துவும் ராஜாவாய் இருக்கின்றார்.[89] தேவன் நியாயாதிபதியாய் இருப்பதுபோலவே இயேசுகிறிஸ்துவும் நியாயாதிபதியாய் இருக்கிறார்.[90] மேலும், வெளிச்சம், கன்மலை, நீதி, மணவாளன், மேய்ப்பன் என்னும் விவரணங்கள் தேவனை வர்ணிப்பது போலவே, இயேசுகிறிஸ்துவையும் குறிக்கின்றன.[91] எனவே, பிதாவாகிய தேவனைப் போலவே இயேசுகிறிஸ்துவும் மக்களுடைய வழிபாட்டுக்குரிய தேவனாக இருக்கின்றார். இதனால், இயேசுகிறிஸ்துவை வழிபட மறுப்பது, தேவனை வழிபட மறுக்கும் செயலாகவே உள்ளது.

---

[86] "அல்பா" "ஒமேகா" என்பன முறையே கிரேக்க அரிச்சுவடியின் முதலாவதும் இறுதியானதுமான எழுத்துகளாகும். வேதாகமத்தில் நித்தியத்தைக் குறிக்கும் விவரணமாக இவ்வெழுத்துகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

[87] ஏசாயா 41:4, 48:12ஐ வெளிப்படுத்தல் 1:8, 1:17, 22:12-16 என்னும் வசனங்களுடன் ஒப்பிடவும்.

[88] ஏசாயா 43:3, 43:11, 63:8, லூக்கா 1:47, 1தீமோத்தேயு 4:10, சங்கீதம் 130:7-8, ஏசாயா 54:5, 63:9 என்பவற்றை மத்தேயு 1:21, லூக்கா 2:11, யோவான் 1:29, 4:42, எபிரெயர் 5:9, அப்போஸ்தலர் 20:28, எபேசியர் 1:7, எபிரெயர் 9:12 என்பவற்றுடன் ஒப்பிடவும்.

[89] சங்கீதம் 95:3, ஏசாயா 43:15, 1தீமோத்தேயு 4:10 என்னும் வசனங்களுடன் வெளிப்படுத்தல் 17:14, 19:16ஐ ஒப்பிடவும்.

[90] ஆதியாகமம் 18:25, சங்கீதம் 50:4,6, 96:13, ரோமர் 14:10, என்னும் வசனங்களை யோவான் 5:22, 2கொரிந்தியர் 5:10, 2தீமோத்தேயு 4:1 என்பவற்றுடன் ஒப்பிடவும்.

[91] 2சாமுவேல் 22:29, சங்கீதம் 27:1, ஏசாயா 42:6, உபாகமம் 32:3-4, 2சாமுவேல் 22:32, சங்கீதம் 89:26, ஏசாயா 54:5, 63:9, 45:24, ஓசியா 2:16, ஆதியாகமம் 49:24, சங்கீதம் 23:1, 80:1 என்னும் வசனங்களில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டவைகள் யோவான் 1:4,9, 3:19, 8:12, 9:5, ரோமர் 9:33, 1கொரிந்தியர் 10:3-4, 1பேதுரு 2:4-8, அப்போஸ்தலர் 20:28, எபேசியர் 1:7, எபிரெயர் 9:12, ரோமர். 3:21-22, மத்தேயு 25:1, மாற்கு 2:18-19, 2கொரிந்தியர் 11:2, எபேசியர் 5:25-32, வெளிப்படுத்தல் 21:2,9, யோவான் 10:11,16, எபிரெயர் 13:20, 1பேது.2:25,5:4 என்னும் வசனங்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணங்களாய் உள்ளன.

யெகோவாவின் சாட்சிகளின் "புது உலக மொழிபெயர்ப்பு" வேதாகமத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களையும் மாற்றங்களையும் பார்க்கும் போது, இயேசுகிறிஸ்து தேவன் என்பதற்கான ஆதார வசனங்களை வேதாகமத்திலிருந்து நீக்குவதே இம்மொழிபெயர்ப்பின் நோக்கமாக இருந்துள்ளதை அறிந்திடலாம்.[92] யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய வேதாகம மொழிபெயர்ப்பே மூலமொழியின் சரியான அர்த்தத்தை தரும் வேதாகமம் என்று கூறினாலும்,[93] இவர்களுடைய வேதாகம மொழிபெயர்ப்புக் குழுவில் இருந்தவர்கள் வேதாகமத்தின் மூலமொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள் அல்ல.[94] யெகோவாவின் சாட்சிகளின் வேதாகம மொழிபெயர்ப்பை ஆராய்ந்து பார்த்த வேத ஆராய்ச்சியாளர்கள், இம்மொழிபெயர்ப்பு பக்கச்சார்புடையதாகவும், பல இடங்களில் நேர்மையற்றதாகவும், புலமையற்றதாகவும் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.[95] உண்மையில், இவ்வேதாகமம், "அதிர்ச்சியூட்டும் தவறான ஒரு மொழிபெயர்ப்பாகவும்"[96] "தேவனுடைய வார்த்தைக்கு ஒரு நிந்தையாகவும்"[97] மொத்தத்தில், "பிழையான ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாகவும்"[98] யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்தை வேதாகமத்திற்குள் புகுத்தியுள்ள மொழிபெயர்ப்பாகவுமே உள்ளது. எனவே, இதை வேதாகமம் என்றே கூறமுடியாது.

பிதாவாகிய தேவனைப் போலவே
இயேசுகிறிஸ்துவும் மக்களுடைய வழிபாட்டுக்குரிய
தேவனாகவே இருக்கின்றார்.

யெகோவாவின் சாட்சிகளைப் போலவே தற்காலத்தில் டாவின்சியின் ஓவியத்தைப்பற்றிய நாவலின் செல்வாக்கு காரணமாகப் பலர், கி.பி. முதலாம் நூற்றாண்டில் சாதாரண மனிதனாக வாழ்ந்த இயேசுகிறிஸ்து

[92] R.Tucker, *Another Gospel*, p. 142.
[93] *The Watchtower* 15 November 1969, p. 696.
[94] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, pp. 97-98; D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 171.
[95] R.Countess, *The Greek Text of the New World Translation*, p. 91
[96] J.R.Mantey, *A Mannual Grammar of the Greek New Testament*, Cited in Grieshaber, *Redi-Answers on Jehovah's Witnesses Doctrine*, p. 30.
[97] H.H.Rowley, "How not to Translate the Bible" pp. 41-42.
[98] Grieshaber, Erich & Jean, *Exposed – of Jehovah's Witnesses*, p. 30.

வைக் கிறிஸ்தவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தேவனாக்கி விட்டதாகக் கருதுகின்றனர்.[99] இஸ்லாமியர்களும் இதேவிதமான கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர்.[100] ஆனால், இதில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனெனில், கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களிலேயே இயேசுகிறிஸ்து தேவன் என்னும் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[101] மேலும், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவ சபைத் தலைவர்களும் தங்களுடைய நூல்களில் இயேசுகிறிஸ்துவைத் தேவன் என்றே குறிப்பிட்டுள்ளனர். உதாரணத்திற்கு, 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்னேஷியஸ் என்னும் சபைத் தலைவர் இயேசுகிறிஸ்துவை "நம்முடைய தேவனாகிய இயேசு கிறிஸ்து"[102] என்றும், "உங்களை ஞானிகளாக்கிய தேவனாகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறேன்"[103] என்றும் குறிப்பிட்டுள்ளதோடு, அவரை நித்தியராகவும் வர்ணித்துள்ளார்.[104] இதைப்போலவே, இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இன்னுமொரு சபைத் தலைவரான ஜஸ்டின் மாட்டர் என்பவர், "இயேசுகிறிஸ்து தேவனாகவும் கர்த்தராகவும் இருப்பதை வேதவாக்கியங்களின் மூலம் தன்னால் நிரூபிக்க முடியும்"[105] என்றும், "அவரை நாம் தேவனாகவும் கர்த்தராகவும் வழிபடவேண்டும் என்பதைப் பிதாவாகிய தேவனே அறிவித்துள்ளார்"[106] என்றும் குறிப்பிட்டுள்ளார். இரேனியஸ் என்னும் சபைத் தலைவரும் இயேசுகிறிஸ்துவைக் கர்த்தர், இரட்சகர், ராஜா, தெய்வம் என்று அழைத்துள்ளதோடு,[107] அவர் சாதாரண மனிதன் அல்ல, அவர் தேவன் என்று தெரிவித்துள்

---

[99] D.Brown, *The Da Vinci Code*, pp. 233– 34.

[100] N.Qureshi, *No God but One: Allah or Jesus*, 213.

[101] புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் கி.பி.முதலாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டன என்பதற்கு முக்கியமான ஆதாரமாக இருப்பது, எருசலேம் நகரத்தினதும் ஆலயத்தினதும் அழிவைப்பற்றி இயேசுகிறிஸ்து முன்னறிவித்தவைகள் ஒரு தீர்க்கதரிசனமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதேயாகும். மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து முன்னறிவித்தவிதமாக கி.பி.70ம் ஆண்டில் ரோமர்கள் எருசலேம் நகரத்தையும் ஆலயத்தையும் அழித்தனர். உண்மையிலேயே புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் இதற்கும் பின்பே எழுதப்பட்டிருந்தால், இத்தீர்க்கதரிசனம் நிறைவேறியதைப்பற்றிய குறிப்பு புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றிருக்கும். உண்மையில், புதிய ஏற்பாட்டின் ஒரு சில புத்தகங்களைத் தவிர ஏனையவைகள் அனைத்தும் கி.பி.70ம் ஆண்டுக்கும் முன்பே எழுதப்பட்டுவிட்டன.

[102] Ignatius, *Letter to the Romans*, 3.3.

[103] Ignatius, *Letter to the Smyrnaeans,* 1.1.


[104] Ignatius, *Letter to Polycarp*, 3.2.

[105] Justin Martyr, *Dialogue with Trypho the Jew*, 128.

[106] Justin Martyr, *Dialogue with Trypho the Jew*, p. 63.

ளார்.[108] இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் மூன்றாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த ஹிப்போலிட்டஸ் என்னும் சபைத் தலைவரும், "இயேசுகிறிஸ்து சகலத்திலும் மேலான தேவன்"[109] என்று குறிப்பிட்டுள் ளார். எனவே, கி.பி.4ம் நூற்றாண்டிலேயே இயேசுகிறிஸ்து தேவனாக்கப் பட்டார் என்னும் கருத்து எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத பொய்யாகவே உள்ளது. ஏனெனில், கி.பி.முதலாம் நூற்றாண்டிலேயே இயேசுகிறிஸ்து தேவனாக அறியப்பட்டிருந்தார்.

கிறிஸ்தவர்கள் ஆரம்பகாலத்திலிருந்தே இயேசுகிறிஸ்துவைத் தேவனாக வழிபட்டு வந்தார்கள். உண்மையில், இயேசுகிறிஸ்துவைத் தேவனாக ஏற்றுக்கொள்வதே ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு மனிதர் செய்யவேண்டிய முக்கியமான காரியமாக இருந்தது. எனினும், இச்சத் தியத்தை அறியத்தரும் புதிய ஏற்பாட்டு வசனங்களில் "கர்த்தர்" என்னும் சொல் உள்ளதினால், "இயேசுகிறிஸ்து தேவன் அல்ல அவர் கர்த்தர்" என்றும், "தேவன் கர்த்தர் என்னும் இரண்டு சொற்களும் வித்தியாசமான அர்த்தமுடையவைகள்" என்றும் பலர் எண்ணுகின்றனர். ஆனால், பழைய ஏற்பாட்டில் "யாவே" என்னும் தேவனுடைய பெயர் கிரேக்க மொழியில் "கூரியொஸ்" என்று எழுதப்பட்டது மாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவுக்கே இப்பெயர் கொடுக்கப்பட்டுள் ளது. எனவே, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுகிறிஸ்துவைக் கர்த்தராக விசுவாசிப்பவன், அவரைத் தேவன் என்று விசுவாசிக்கிறவனா கவே இருந்தான். ஏனெனில், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசு வாசி" (ரோ.10:9) என்பது, "தேவனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி" என்னும் அர்த்தமுடைய கூற்றாகவே உள்ளது. இதனால், இயேசு கிறிஸ்துவைக் கர்த்தராக விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறவன், அவ ரையே தெய்வமாக வழிபடுகிறவனாக இருந்தான். எனவே, யெகோவா வின் சாட்சிகள் கூறுகின்றவிதமாக தேவனுடைய பெயர் யெகோவா அல்ல. ஏனெனில், தேவனாக இருப்பவர் இயேசுகிறிஸ்துவாகவே இருக்கின்றார்.



[107] Irenaeus *Against Heresies*, 1.10.1.
[108] Irenaeus *Against Heresies*, 3: 19.1-2.
[109] Hippolytus, *Refutation of all Heresies*, 10.29.

## ஒரு சம்பவத்தில் ஒரு சத்தியம்

சபைத் தலைவர்களில் ஒருவரான ஒகஸ்ட்டீன் என்பவர், கிறிஸ்தவத்தின் திரித்துவ உபதேசத்தைப்பற்றி சிந்தித்தவராக கடற்கரையில் நடந்துசென்றபோது, மணலில் ஒரு சிறிய குழியைத் தோண்டி, அதைக் கடல் நீரால் நிரப்பிக்கொண்டிருந்த ஒரு சிறுவனைக் கண்டார். அவனது செயல் ஒகஸ்ட்டீனுக்கு வேடிக்கையானதாகத் தென்பட்டதனால், “சிறுவனே நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?” என்று அவனிடம் கேட்டார்.

ஒகஸ்ட்டீனின் கேள்விக்குப் பதிலளித்த சிறுவனோ, எவ்வித தயக்கமுமின்றி, “ஓ அதுவா! நான் கடலை இக்குழிக்குள் போட முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன்” என்றான்.

சிறுவனின் இப்பதில் ஒகஸ்ட்டீனுக்கு மிகப்பெரியதோர் உண்மையை வெளிப்படுத்தியது. இதனால் அவர், “திரித்துவ உபதேசத்தை மானிட அறிவால் கிரகித்துப் புரிந்துகொள்ள முற்படுவது, கடலை சிறு குழிக்குள் போட முற்படுவதற்குச் சமமானது. ஏனெனில், கடலைப்போல விசாலமான தேவனைப்பற்றிய சத்தியத்தை என்னுடைய சிறிய மூளைக்குள் கொண்டுவர முற்படுகின்றேனே” என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.


கிறிஸ்தவ உபதேசங்களில் தேவனைப்பற்றிய சத்தியம், அதாவது, அவர் திரித்துவராயிருக்கிறார் என்னும் போதனை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையாக உள்ளபோதிலும், இதை நம்முடைய குறுகிய அறிவினால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது.

இதைப்போன்ற சம்பவங்களை அறிந்துகொள்வதற்கு எனது “சில சம்பவங்களில் சில சத்தியங்கள்” என்னும் நூலைப் பார்க்கவும்

## நான்காம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

கிறிஸ்தவ உபதேசங்களில் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத சத்தியம் தேவனுடைய திரித்துவத்தைப்பற்றியதாகும். அதாவது, தேவன் ஒருவர் என்பதை வலியுறுத்தும் வேதாகமம், அந்த தேவன் மூவராக இருக்கின்றார் என்றும் கூறுகிறது. ஆனாலும், அவர் மூன்று கடவுள்களாக அல்ல, தனியான ஒரு தேவனாகவே இருக்கின்றார். எனினும், மூவர் மூன்று கடவுள்களாக இராமல் எப்படி ஒருவராக இருக்க முடியும்? என்பதை நம்முடைய குறுகிய அறிவினால் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதனால், இதை சாத்தானின் உபதேசம் என்றும், பிறமதப் புராணங்களிலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ள போதனை என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும், தேவன் திரித்துவராக இருக்கின்றார் என்னும் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது, பிற மதங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு போதனை அல்ல. திரித்துவம் என்னும் சொல் வேதாகமத்தில் இராதபோதிலும், வேதாகமத்தில் தம்மை வெளிப்படுத்தியுள்ள தேவனை வர்ணிப்பதற்கு ஏற்ற சொல்லாய் இருப்பதனால், ஆதிசபைத் தலைவர்கள் இச்சொல்லை உபயோகித்தனர். இவ்வத்தியாயத்தில், திரித்துவ உபதேசத்திற்கான வேதாகம ஆதாரங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனினும், இத்தெய்வீக சத்தியத்தை எவ்வித உதாரணங்களின் மூலமும் விளக்கமுடியாது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இச்சத்தியத்தை கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பொழுது விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டிருந்தாலும், நம்முடைய தேவன் “மூவர் ஒருவராய்” இருப்பதை பரலோகத்தில் நம் கண்களினால் பார்த்துப் பூரிப்படைவோம்.

## நான்காம் அத்தியாயம்



# திரியேகத் தெய்வம்

## சாத்தானின் உபதேசமா? அல்லது சத்திய வேதத்தின் உண்மையா?

கிறிஸ்தவ உபதேசங்களில் புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமான போதனையாக இருப்பது "திரித்துவம்" பற்றிய வேதாகம சத்தியமாகும். ஒரேயொரு தேவன் மாத்திரமே இருக்கின்றார் என்பதை வலியுறுத்தும் கிறிஸ்தவம், ஒரு தேவன் திரித்துவராக, அதாவது பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று மூவராக இருப்பதையும் அறியத்தருகின்றது. எனினும், இது மூன்று தெய்வங்களைப்பற்றிய கோட்பாடு அல்ல. உண்மையில், "ஒரு தேவன் எப்படி மூவராய் இருக்கின்றார்?" என்பதை யும், "மூவராய் இருப்பவர் மூன்று தெய்வங்களாக இராமல் எப்படி தனியொரு தேவனாய் இருக்கின்றார்"? என்பதையும் மானிட அறிவால் கிரகிப்பது கடினமாயுள்ளது. இதனால், தேவனின் திரித்துவத்தைப் பற்றி வேதப்புரட்டர்கள் தவறான கருத்துடையவர்களாகவும், இத்தெய் வீக சத்தியத்தை மறுதலிப்பவர்களாகவும் உள்ளனர். ஆனால், இச் சத்தியம் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு, கிறிஸ்தவ

மார்க்கத்தின் அடிப்படை உபதேசங்களில் ஒன்றாகவும் உள்ளது.[1] இவ்வத்தியாயத்தில் திரித்துவத்தைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் கருத்துகள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு, திரித்துவத் தேவனைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் சத்தியங்களும் விளக்கப்பட்டுள்ளன.

# (1). யெகோவாவின் சாட்சிகளும் திரித்துவமும்

யெகோவாவின் சாட்சிகள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திரித்துவ உபதேசத்தை ஏற்றுக்கொள்வதில்லை. இது வேதாகமப் போதனை அல்ல என்று இவர்கள் வாதிடுகின்றனர்.[2] வேதாகமம் "யெகோவா" என்னும் ஒரு தெய்வத்தைப்பற்றி மாத்திரமே வெளிப்படுத்தியுள்ளது என்று போதிக்கும் இவர்கள், "மூன்று தெய்வங்கள் ஒரு நபராக இருக்கும் திரித்துவ உபதேசம் வேதாகமத்திற்கும் மானிட அறிவுக்கும் முரணானது"[3] என்றும், "சாத்தானால் சபைக்குள் புகுத்தப்பட்ட உபதேசம்"[4] என்றும் கூறுகின்றனர். திரித்துவ உபதேசத்தை "மூன்று தலைகள் கொண்ட தெய்வம்"[5] என்று பரிகசிக்கும் யெகோவாவின் சாட்சிகள், "இத்தகைய உபதேசம் சாத்தானின் மனதிலேயே உருவாகியுள்ளது"[6] என்றும், "தேவனுடைய நாமத்தை நிந்திப்பதற்காக சாத்தானால் உருவாக்கப்பட்டதே திரித்துவ உபதேசம்"[7] என்றும் கூறுகின்றனர்.

திரித்துவம் "தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் அல்ல"[8] என்று கருதும் யெகோவாவின் சாட்சிகள், "புராதன பாபிலோனிய, எகிப்திய, அசீரிய மதங்களிலும் மூன்று தெய்வங்களைப் பற்றிய நம்பிக்கை

[1] "திரித்துவம்" என்பதற்குத் தமிழில் "திரியேகத்துவம்" என்பது சிறந்த வார்த்தையாக உள்ளது. எனினும், திரித்துவம் என்னும் சொல்லே பொதுவாகக் கிறிஸ்தவர்களினால் உபயோகிக்கப்படுவதனால் இந்நூலிலும் இச்சொல்லே இடம்பெற்றுள்ளது. ஆங்கிலத்திலும் பொதுவாக உபயோகிக்கப்படும் Trinity என்னும் சொல்லைவிட Triunity என்னும் சொல் பொருத்தமானதாகக் கருதப்படுகின்றது.

[2] Anonymous, *Should You Believe in the Trinity?,* p. 12.

[3] *Studies in the Scriptures Vol. 5*, p. 76. [4] *Studies in the Scriptures Vol. 5*, pp. 60-61.

[5] Anonymous, *Let God be True*, p. 102. [6] Anonymous, *Reconciliation*, p. 101.

[7] Anonymous, *Riches*, p. 185. [8] Anonymous, *Let God be True*, p. 101.

இருப்பதனால், அவற்றிலிருந்து பெறப்பட்டதே கிறிஸ்தவத்தின் திரித்துவ உபதேசம்"[9] என்று கூறுகின்றனர். மேலும், "திரித்துவத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து எதுவும் போதிக்கவில்லை"[10] என்று வாதிடும் இவர்கள், "இயேசுகிறிஸ்து மரித்து 300 வருஷங்களுக்குப் பின்பே இவ்வுபதேசம் உருவாக்கப்பட்டது"[11] என்றும், இயேசுகிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் முன்னறிவித்த "ஆவிக்குரிய வீழ்ச்சி" இதுவே என்றும் கூறுகின்றனர்.[12] இதனால், "திரித்துவ உபதேசத்தை நிராகரிப்பதே தேவன் விரும்பும்விதத்தில் அவரை ஆராதிப்பதற்கான வழிமுறை"[13] என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.

மூவராயிருக்கும் ஒரு தேவனை வேதாகமத்தில் கண்டுகொண்ட டேர்ட்டுளியன் என்னும் சபைத் தலைவர் அவருக்குத் திரியேகத் தெய்வம் என்று பெயரிட்டுள்ளார்.

திரித்துவ உபதேசத்தை யெகோவாவின் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கான காரணம், திரித்துவம் என்னும் சொல் வேதாகமத்தில் இல்லாதிருப்பதாகும். உண்மையில், திரித்துவம் என்னும் சொல் இரண்டாம் நூற்றாண்டில் வடஆபிரிக்காவின் "காத்தேஜ்" என்னுமிடத்தைச் சேர்ந்த "டேர்ட்டுளியன்" (Tertullian கி.பி.150-212) என்னும் சபைத் தலைவரினாலேயே கிறிஸ்தவ இறையியலில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், இவர் வேதாகமத்தில் இல்லாத ஒரு உபதேசத்தை உருவாக்கவில்லை. வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மூவராயிருக்கும் தேவனைக் குறிப்பிட "திரித்துவம்" என்னும் சொல் பொருத்தமானதாக இருந்ததினால், இச்சொல்லின் மூலம் தேவனைப்பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியத்தை டேர்ட்டுளியன் மக்களுக்கு விளக்கியுள்ளார்.[14] இது, "ஐசக் நியூட்டன்" என்னும் விஞ்ஞானி புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்ததைப் போன்ற ஒரு சாதனையாகும். உண்மையில், "புவியீர்ப்புச்சக்தி" என்னும் சொல் பூமிக்குள் இருக்கவில்லை. ஆனால்,

[9] Anonymous, *Should You Believe in the Trinity?,* pp. 3, 9.
[10] Anonymous, *Let God be True*, p. 200.
[11] Anonymous, *Should You Believe in the Trinity?,* p. 6.
[12] Anonymous, *Should You Believe in the Trinity?,* p. 12.
[13] Anonymous, *Should You Believe in the Trinity?,* p. 31.
[14] Fortman, *The Triune God: A Historical Study of the Doctrine of Trinity*, p.112.

பூமிக்குள் ஈர்ப்புச்சக்தி இருப்பதைக் கண்டறிந்த ஐசக் நியூட்டன் இதை ஒரு புதிய வார்த்தையின் மூலம் மக்களுக்கு விளக்கிக் கூறினார். இதைப்போலவே, மூவராயிருக்கும் தேவனை வேதாகமத்தில் கண்டுகொண்ட டேர்ட்டுளியன், அவரை "ட்ரினிட்டாஸ்" (*trinitas*) என்று லத்தீன் மொழியில் குறிப்பிட்டுள்ளார். இச்சொல் ஆங்கிலத்தில் "ட்ரினிட்டி" (Trinity) என்றும் தமிழில் "திரித்துவம்" அல்லது "திரியேகத்துவம்" என்றும் உச்சரிக்கப்படுகிறது. மூலமொழியில் இச்சொல் "ஒன்றில் மூன்று" அல்லது "மூன்று ஒன்றாயிருத்தல்" என்னும் அர்த்தமுடையது.[15] தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இச்சொல் சிறப்பான விதத்தில் அறியத்தருகின்றது. "திரித்துவம் என்னும் சொல் வேதாகமத்தில் இல்லாதபோதிலும், திரித்துவ சத்தியம் வேதாகமத்தில் உள்ளது."[16] இதனால், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் விளக்கமாகவே திரித்துவ உபதேசம் உள்ளது.[17] உண்மையில், "திரித்துவம் என்பதே தேவனுக்கான கிறிஸ்தவ பெயராக உள்ளது."[18]

"திரித்துவம்" என்னும் சொல் வேதாகமத்தில் இல்லாததினால், திரித்துவ உபதேசம் பிழையானது என்று யெகோவாவின் சாட்சிகள் தர்க்கிப்பது அர்த்தமற்றது. ஏனென்றால், "யெகோவா" என்னும் பெயரும் வேதாகமத்தில் இல்லை. எனவே, திரித்துவம் என்னும் சொல் வேதாகமத்தில் இல்லாததினால், திரித்துவ உபதேசம் பிழையானது என்று வாதிடுபவர்களுக்கு, இத்தகைய தர்க்கத்தை உபயோகித்து, யெகோவா என்னும் பெயரும் வேதாகமத்தில் இல்லாததினால் யெகோவா என்னும் பெயரைப்பற்றிய போதனையும் பிழையானது என்று கூறலாம். நாம் மூன்றாம் அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, உயிரெழுத்துகள் இல்லாமல் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள "யாவே" என்னும் தேவனின் பெயருக்கு, அவருடைய இன்னுமொரு பெயரான "அடோனாய்" என்பதிலுள்ள உயிரெழுத்துகளைச் சேர்த்தே பிற்காலத்தில் மக்கள் தேவனுடைய பெயரை "யாகோவா" அல்லது "யெகோவா" என்று உச்சரித்தனர்.[19] இதனால், ஆரம்பகால வேதப்பிரதிகள் எதிலும் யெகோவா என்னும் பெயர் இல்லை. நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஆரம்பத்தில் யெகோவா

[15] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p.227.
[16] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 198.
[17] G.A.F.Knight, *A Biblical Approach to the Doctrine of the Trinity*, p. 1.
[18] P.Barnett, *2Corinthians: The New International Commentary on the NT*, p. 619.
[19] பக்கங்கள் 59 முதல் 63 வரை பார்க்கவும்

என்னும் பெயரே வேதாகமத்தில் இருந்தது என்றும், பிற்காலத்தில் யூதர்கள் இப்பெயரை வேதத்திலிருந்து நீக்கி விட்டனர் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கத்துக்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.

திரித்துவக் கருத்து புறமதப் புராணங்களிலிருந்து பெறப்பட்டது என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கமும் அர்த்தமற்றது. ஏனென்றால், புறமதங்களிலிருக்கும் மும்மூர்த்திகளைப் பற்றிய உபதேசம் மூன்று கடவுள்களைப் பற்றியது. ஆனால், வேதாகமத்தின் திரித்துவ உபதே சம் தனியொரு தெய்வத்தைப்பற்றிய சத்தியமாகும்.[20] உண்மையில், "கிறிஸ்தவத்தின் திரித்துவ உபதேசம், ஏனைய உலக மதங்கள் அனைத்திலுமிருந்து கிறிஸ்தவத்தை வேறுபடுத்திக் காட்டும் ஒப்பற்ற சத்தியமாக உள்ளது."[21] மூவராய் இருக்கும் தேவன் மூன்று தெய்வங் களாக இராமல் தனியொரு தேவனாக இருக்கின்றார் என்னும் சத்தியம் "உலக மதங்கள் எதிலும் இல்லாத தனித்துவமான உபதேசமாகவே உள்ளது."[22] ஏனெனில், "தேவன் திரித்துவர் என்னும் சத்தியம் மானிடக் கற்பனையின் உருவாக்கமாயிராமல், வேதாகமத்தின் போதனையாக உள்ளது."[23]

மூவராய் இருக்கும் தேவன் மூன்று தெய்வங்களாக இராமல் தனியொரு தேவனாக இருக்கின்றார் என்னும் சத்தியம், உலக மதங்கள் எதிலும் இல்லாத தனித்துவமான உபதேசமாகவே உள்ளது.

தேவன் ஒருவர் என்பதனால், அவர் திரித்துவராயிருக்க முடியாது என்பதே யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கமாயுள்ளது. தேவன் மூவராயிருந்தால் வேதாகமம் அவரை ஒருவர் என்று குறிப்பிட்டிருக்காது என்று இவர்கள் வாதிடுகின்றனர்.[24] ஆனால் ஒருவராயிருக்கும் தேவன்

[20] P.G.Weathers, "Answering the Arguments of Jehovah's Witnesses Against the Trinity" pp. 132,136.
[21] M.J.Erickson, *Making Sense of the Trinity*, p. 14.
[22] M.J.Erickson, *Christian Theology*, p. 321.
[23] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 748.
[24] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 13.

மூவராய் இருப்பதாகவே வேதாகமம் கூறுகிறது. இவ்வுண்மையை நேரடியாக அறியத்தரும் 1யோவான் 5:7 வேதாகமத்தின் நம்பகமான தாகக் கருதப்படும் மூலப் பிரதிகளில் இல்லாதிருப்பதனால்,[25] இவ்வச னம் பிற்காலச் சேர்க்கையாகக் கருதப்பட்டு வேதாகமத்தில் அடைப்புக் குறிக்குள் அச்சிடப்பட்டுள்ளது.[26] இவ்வசனத்தில், "பரலோகத்தில்

---

[25] வேதாகமத்தின் மூலப்பிரதிகள் என்று அழைக்கப்படுபவை, வேதாகமத்தின் கையெழுத்துப் பிரதிகளாகும். வேதாகமமானது கி.பி.1437ல் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படும் வரை கைகளினால் பிரதிபண்ணப்படுவதன் மூலமாகவே புதிய பிரதிகள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை அழிந்துபோயுள்ள போதிலும், தற்போது பல பிரதிகள் முழுமையாகவும் பகுதியளவிலும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இவை பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது "*புனித வேதாகமத் தின் புதுமை வரலாறு*" எனும் நூலின் 2ம் 5ம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[26] தற்காலத்தில் இருக்கும் வேதாகமத்தின் கையெழுத்துப் பிரதிகளில் லத்தீன் மொழிப் பிரதிகளைத் தவிர, கி.பி.14ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கிரேக்கமொழி வேதப்பிரதிகள் எதிலும் இவ்வசனம் இல்லை. இதற்குப் பின்னர் பிரதிபண்ணப்பட்ட கிரேக்க பிரதிகளில் மொத்தம் 8 பிரதிகளில் மாத்திரமே இவ்வசனம் உள்ளது. எனினும், இவை லத்தீனிலிருந்து கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட வசனமாக இருப்பதோடு 4 பிரதிகளில் வேதாகம வசனமாக அல்ல, குறிப்பிட்ட ஏட்டின் ஓரத்தில் எழுதப்பட்ட ஒரு குறிப்பாகவே உள்ளது. ஆரம்பத்தில் இவ்வசனம் கி.பி.385ல் வேதப்புரட்டு உபதேசத்திற்காக மரணதண்டனை பெற்ற ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த பிரிசிலியன் என்பவனாலேயே 1யோவானின் வசனமாகக் குறிப்பிடப்பட்டது. அதன்பின்னர் இவ்வசனம் லத்தீன் மொழி வேதாகமப் பிரதிக ளில் இடம்பெறத் தொடங்கியது. எனினும், தற்போது இருக்கும் லத்தீன்மொழி வேதப்பிரதிகளில் கி.பி.7ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிரதிகளில் இவ்வசனம் இல்லை. கிரேக்கமொழியில் வேதாகமம் முதற்தடவையாக இரஸ்மஸ் என்பவரி னால் அச்சிடப்பட்டபோது, அதன் முதலிரு பதிப்புகளிலும் (1516ம் 1519ம் ஆண்டு பதிப்புகளில்) இவ்வசனம் இருக்கவில்லை. எனவே, ஆரம்பகால வேதப் பிரதிகளில் இல்லாத இவ்வசனம் தற்காலத்தில் வேதவாக்கியமாகக் கருதப்படுவ தில்லை. இதனாலேயே அடைப்புக் குறிகளுக்குள் இருக்கும் 7ம் வசனம் வேதாகமத்தின் ஆரம்பகாலப் பிரதிகளில் இடம்பெறாததோடு, கி.பி. நான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை எந்த ஒரு சபைத்தலைவராலும் உபயோகிக்கப்பட வில்லை. இவ்வசனம் அக்காலத்திலிருந்த வேதப் பிரதிகளில் இருந்திருந்தால், அக்கால சபைத்தலைவர்கள் இதை நிச்சயமாக உபயோகித்திருப்பார்கள். ஏனெனில், முழு வேதாகமத்திலும் இவ்வசனத்தில் மாத்திரமே அக்காலத்தில் அதிக சர்ச்சைக்குட்பட்டிருந்த திரித்துவம் பற்றிய உபதேசம் நேரடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் இருந்த வேதப் புரட்டர்கள் திரித்துவ உபதேசத்தை மறுதலித்து வந்தனர். இதனால், இதற்கெதிராக, திரித்துவம் வேதாகம சத்தியம் என்பதை நேரடியாகக் காண்பிப்பதற்கு 1யோவான் 5:7 பெரிதும் உதவியிருக்கும். ஆனால், இவ்வசனம் அக்காலத்திலிருந்த வேதப்பிரதிக ளில் இல்லாதிருப்பதனால், சபைத் தலைவர்கள் அறிந்திராத ஒரு வசனமாகவே உள்ளது. ஆரம்பகால வேதப் பிரதிகளில் இல்லாத, ஆதிச் சபைப்பிதாக்கள் அறிந்திராத இவ்வசனம், இரஸ்மஸ் என்பவரின் கிரேக்க வேதாகமத்தின் மூன்றாம் பதிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அக்காலத்தில் லத்தீன் மொழி வேதாகமமே

சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பகால வேதப் பிரதிகளில் இவ்வசனம் இல்லாதிருப்பதனால், இதில் குறிப்பிடப் பட்டிருக்கும் திரித்துவம் பற்றிய உபதேசம் பிற்காலத்தில் கிறிஸ்தவ சபையால் உருவாக்கப்பட்ட போதனை என்று யெகோவாவின் சாட்சி கள் வாதிடுகின்றனர். ஆனால், திரித்துவம் இந்த ஒரு வசனத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்ட உபதேசம் அல்ல. முழு வேதாகமமும் ஒருவராய் இருக்கும் திரித்துவத் தெய்வத்தைப் பற்றிய வெளிப்படுத்த லாகவே உள்ளது. ஒரு தெய்வக்கோட்பாட்டை வலியுறுத்தும் வேதாக மம் (உபா.6:4, மாற்.12:29, 1கொரி.8:4, 1தீமோ.2:5), ஒரு தேவன் மூவராய் இருக்கும் உண்மையையும் அறியத்தருகின்றது.

## (2). பழைய ஏற்பாட்டில் திரித்துவம்

தேவன் திரித்துவராக இருக்கும் சத்தியம் வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஒருவ ராக இருந்த தேவன் புதிய ஏற்பாட்டில் மூவராக மாறிவிட்டார் என்று

---

சபையின் உத்தியோகபூர்வமான வேதாகமமாக இருந்ததினால், அதிலிருக்கும் இவ்வசனத்தை கிரேக்க வேதாகமத்திலும் சேர்க்கும்படி இரஸ்மஸ் வற்புறுத்தப்பட டார். இதற்காக, லத்தீன் வேதாகமத்திலிருந்து கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப் பட்டு, கி.பி.16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரதிபண்ணப்பட்ட வேதாகமப்பிரதி இவருக்கு கொடுக்கப்பட்டது. இதனால், 1522ல் வெளியிடப்பட்ட இவரது வேதாக மத்தில் இவ்வசனம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதன்பின்னர், கி.பி.1550ல் வெளியிடப்பட்ட ஸ்டெ.ஃபானஸ் என்பவரின் வேதாகமத்திலும் இவ்வசனம் இடம்பெற்றது. இதுவே ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில வேதாகம மொழிபெயர்ப் புக்கு அடிப்படையாக இருந்த கிரேக்க வேதாகமமாக இருப்பதனால், இதற்கு ஏற்றவிதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நம்முடைய தமிழ் வேதாகமத்திலும் இவ்வசனம் உள்ளது. ஆனால், புதிய தமிழ் மொழிபெயர்ப்புகள் ஆரம்பகால கிரேக்க வேதப்பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்க்கப்படுவத னால் இவற்றில் இவ்வசனம் இல்லை. இவ்வேதாகமங்களில் "சாட்சி கொடுப்பவை மூன்று" என்னும் வாக்கியம் மாத்திரமே 7ம் வசனத்தில் உள்ளது. இம்மூன்று சாட்சிகளும் ஆவி, ஜலம், இரத்தம் என்று 8ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (F.F.Bruce, *The Epistles of John*, pp. 129-130; B.M.A.Metzger, *The Text of the New Testament*, pp. 101-102; S.S.Smalley, *1,2,3 John: Word Biblical Commentary*, 273; B.M.A. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, pp. 715-716; I.H.Marshall, *The Epistles of John: The New International Commentary on the New Testament*, p. 236)

எண்ணுவது தவறாகும். பழைய ஏற்பாட்டிலும் தேவன் திரித்துவராய் இருப்பதைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. புதிய ஏற்பாட்டிலேயே "பிதா" "குமாரன்" "பரிசுத்தஆவி" என்னும் தெய்வீகப் பெயர்களுடன் தேவன் தம்மை வெளிப்படுத்தியுள்ளபோதிலும், பழைய ஏற்பாட்டிலும் தேவன் திரித்துவராய் இருக்கின்றார் என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாய் உள்ளது. ஏசாயா 61:1ல், "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" என்னும் வசனம், இயேசுகிறிஸ்துவின் கூற்றாக இருப்பதை லூக்கா 4:16-21 அறியத்தருகின்றது.[27] ஏனெனில், பரிசுத்த ஆவியானவர் தம்மீது இருப்பதையும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகப் பிதா தம்மை அபிஷேகித்துள்ளதையும்பற்றி இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தெரிவித்துள்ளார். எனவே, ஏசாயா 61:1ல் இயேசுகிறிஸ்து பிதாவையும், பரிசுத்த ஆவியானவரையும்பற்றி குறிப்பிட்டுள்ளதினால், இவ்வசனம் பழைய ஏற்பாட்டில் திரித்துவ தேவனைப் பற்றிய முழுமையான வெளிப்படுத்தலாகவே உள்ளது.[28] இதைப்போலவே, ஏசாயா 48:16லும், "இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" என்று, தேவனும் ஆவியானவரும் தம்மை அனுப்புவதைப்பற்றி இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.[29] ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் "தேவனுடைய

[27] உண்மையில் ஏசாயா 61ல் முதல் மூன்று வசனங்களையும் இயேசுகிறிஸ்து தம்முடய வாழ்வில் நிறைவேறியதாக லூக்கா 4:16-21ல் தெரிவித்துள்ளார். இதைப்பற்றி இவ்வசனங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது: கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார்."

[28] P.Enns, *The Moody Handbook of Theology*, pp. 200-201.

[29] J.McArthur, *The McArthur Bible Commentary*, p. 818

தாசனாகக்"[30] குறிப்பிடப்பட்டிருக்கும் மேசியாவே ஆவியானவருடன் அனுப்பப்படுவதனால் (ஏசா.11:1-2, 42:1, 61:1), மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் கூற்றாகவே ஏசாயா 48:16ன் இறுதிப்பகுதி உள்ளது.[31] மேலும், இவ்வசனத்தில், கர்த்தராகிய ஆண்டவரும் அவருடைய ஆவியும் "என்னை அனுப்புகிறார்கள்" என்று கூறாமல், இருவரும் தம்மை "அனுப்புகிறார்" என்று இயேசுகிறிஸ்து ஒருமையில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து தேவன் திரித்துவராக இருந்தாலும் அவர் ஒருவர் என்பதையும் அறிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது.

பழைய ஏற்பாடு ஒரு தெய்வக் கொள்கையை வலியுறுத்தினாலும், ஒருவராய் இருக்கும் தேவன், மூவர் ஒன்றாகச் சேர்ந்து தனியொருவராக இருப்பதை அறியத்தரும் விதத்திலேயே அவரைச் சித்தரித்துள்ளது

பழைய ஏற்பாடு ஒரு தெய்வக் கொள்கையை வலியுறுத்துவது உண்மை என்றாலும், ஒருவராய் இருக்கும் தேவன், மூவர் ஒன்றாகச்

---

[30] ஏசாயாவின் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் 40ம் அதிகாரத்திற்குப் பின்னர் பல இடங்களில் "தேவனுடைய தாசன்" கூறும் வாக்கியங்கள் உள்ளன. குறிப்பாக ஏசாயா 42:1-9, 49:1-9, 50:4-9, 52:13-53:12, 61:1-3 என்பன தேவனுடைய தாசனின் பாடல்களாகக் கருதப்படுகின்றன (H.E.Freeman, *An Introduction to the Old Testament Prophets*, p. 209). எனினும், ஏசாயாவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய தாசன் யார் என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. இத்தகைய குழப்பம் முதலாம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளதை அப்போஸ்தலர் 8:28-34 அறியத்தருகின்றது. சிலர் ஏசாயாவையே தாசனாகக் கருதுகின்றனர் (R.N.Whybray, *Isaiah 40-66: New Century Bible Commentary,* pp. 135, 150-151, 169). ஏனையவர்கள், இஸ்ரவேல் ராட்சியமே தேவனுடைய தாசனாக உவமிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர் (H.H.Rowley, *The Servant Mission: The Servant Songs and Evangelism*, pp. 259-272; H.R. Rowley, *The Servant of the Lord and Other Essays*, p. 4). தேவனுடைய தாசன் யார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது என்றும், அவர் ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்த அறியப்படாத ஒரு பக்தர் என்றும் சிலர் கருதுகின்றபோதிலும் (R.H.Pfeiffer, *Introduction to the Old Testament*, pp, 460-461), ஏசாயா குறிப்பிடும் தேவனுடைய தாசனைப்பற்றிய விவரணங்கள் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவைப்பற்றியவைகளாக இருப்பதை மத்.8:17, மாற். 15:28, லூக்.22:37, யோவா. 12:37-38, அப்.8:32-35, ரோ.10:16, 1பேது.2:24:25 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. இதனால், ஏசாயாவிலுள்ள தாசனைப் பற்றிய பகுதிகள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணமாகவும், அவருடைய கூற்றுகளாகவும் உள்ளன.

[31] J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary: Old Testament*, p. 1103.

சேர்ந்து தனியொருவராக இருப்பதை அறியத்தரும் விதத்திலேயே அவரைச் சித்தரித்துள்ளது. உதாரணத்திற்கு, உபாகமம் 6:4ல் குறிப்பி டப்பட்டுள்ள "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்னும் வசனம், ஒரு தெய்வக் கோட்பாட்டை வலியுறுத்தும் பழைய ஏற்பாட்டுக்கால மக்களுடைய விசுவாசப் பிரமாண மாக இருந்தது. உண்மையில், பல தெய்வங்கள் இருக்கின்றனர் என்னும் நம்பிக்கையுள்ள மக்கள் மத்தியில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்களுக்கு ஒரேயொரு தேவன் மாத்திரமே இருப்பதை அறியத்தரும் கற்பனையா கவும் இவ்வசனம் இருந்தது.[32] எனினும், ஒருதெய்வக் கோட்பாட்டை வலியுறுத்தும் இவ்வசனம், தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறியத்தரும் விவரணமாகவும் உள்ளது.[33] இவ்வசனத்தில் "ஒருவரே கர்த்தர்" என்பதை மூலமொழியின்படி "ஒரு கர்த்தர்" (One Lord) என்றே மொழிபெயர்க்க வேண்டும்.[34] மேலும், மூலமொழியில் "ஒரு" என்னும் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் இவ்வசனத்தில் இச்சொல்லுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.[35] எனினும், "ஒரு" என்னும் சொல் தேவன் திரித்துவராயிருப்பதை எவ்விதத்திலும் மறுதலிக்கவில்லை. ஏனெனில், மூலமொழியில் "ஒரு" என்பதைக் குறிப்பிடும் "எஹாட்" (*ehad*) என்னும் எபிரேயச் சொல் ஒருமையில் எதையும் குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் எவ்விடத்திலும் உபயோகிக்கப்படவில்லை.[36] ஏனெனில் இது, "பலர் ஒன்றாகச் சேர்ந்தி ருக்கும் நிலையைக்" குறிப்பிடும் சொல்லாகும்.[37] இதனால்தான்,

[32] J.A.Thompson, *Deuteronomy: Tyndale Old Testament Commentaries*, p. 121-122; P.C.Craigie, *The Book of Deuteronomy: New International Commentary on the Old Testament*, p. 169. பிற்கால யூத மார்க்கத்தில் இதுவே பிரதான கற்பனை யாக இருந்தது (M.Wyschogrod, *The Roots of Our Common Faith*, pp. 23-32). இதனால், இன்றுவரை யூதர்கள் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் இதைச் சொல்வதைத் தம்முடைய அன்றாட பழக்கமாகக் கைக்கொண்டு வருகின்றனர் (I.Epstein, *Judaism*, pp. 162-163).

[33] E.H.Merrill, *Deuteronomy: The New American Commentary*, p. 162.

[34] C.J.H.Wright, *Deuteronomy,* pp. 95-96. ஒருவரே என்பதே சரியான மொழிபெ யர்ப்பு என்று சிலர் கருதுகின்றபோதிலும் (S.D.McBride, "The Yoke of the King -dom: An Exposition of Deut.6:4-5" pp. 273-306), "எஹாட்" என்னும் சொல் இத்தகைய அர்த்தத்துடன் வேதாகமத்தில் எங்கும் உபயோகிக்கப்படவில்லை (R.W.L.Moberly, "Yahweh is One: The Translation of Shema" pp. 209-215).

[35] J.G.McConville, *Deuteronomy: Apollos Old Testament Commentary*, p. 141.

[36] J.M.Boice, *Foundations of the Christian Faith*, p. 111.

[37] L.Goldberg, *Deuteronomy: Bible Study Commentary*, p. 64; E.S.Kalland, *Deuteronomy: The Expositor's Bible Commentary Volume 3*, p. 65.

ஆதியாகமம் 2:24ல் "ஒரே மாம்சமாயிருப்பார் கள்" என்பதில் "ஒரே" என்பதற்கும் மூலமொழியில் "எஹாட்" என்னும் சொல்லே உள்ளது. எனவே, ஆதியாகமம் 2:24ல் "ஒரு மாம்சம்" கணவன் மனைவி என்னும் இருவரைக் கொண்டிருப்பதுபோலவே, உபாகமம் 6:4லும், "ஒரு கர்த்தர்" ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களாக, அதாவது மூவராக இருக்கின்றார்.[38] எனவே, ஒரு தெய்வக் கோட்பாட்டை வலியுறுத்தும் இவ்வசனம், மூலமொழியில் ஒரு தேவன் பன்மை நிலையில் திரித்துவராயிருப்பதையும் அறியத்தருகின்றது.[39]

> பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிப்பிடும் எலோஹிம் என்னும் பன்மைச் சொல் ஒருமை அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், பன்மை நிலையில் இருக்கும் தேவன் பல தெய்வங்களாக இராமல் ஒரேயொரு தேவனாக இருப்பதேயாகும்

வேதாகமத்தின் மூலமொழியில் பழைய ஏற்பாட்டின் ஆரம்ப வசனத்திலேயே தேவன் திரித்துவர் என்பதை அறியத்தரும்விதத்தில் "எலோஹிம்" (*Elohim*) என்னும் சொல் ஆதியாகமம் 1:1ல் பன்மையில் உள்ளது. தேவத்துவத்தில் மூவர் இருப்பதை இவ்வசனம் நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும், தேவனுடைய பன்மை நிலையை இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது.[40] பன்மையில் "தேவர்கள்" என்று மொழிபெயர்க்கப்படவேண்டிய "எலோஹிம்" என்னும் இச்சொல்,[41] பழைய ஏற்பாட்டில் 2000ற்கும் அதிகமான தடவைகள் தேவனைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. வேதாகமம் வெளிப்படுத்தும் தேவன் ஒருவராக இருந்தாலும் அவர் பன்மை நிலையில் இருப்பதை இப்பெயர் அறியத்தருகிறது.[42] எனினும், தேவன் பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், இவ்வசனம் பல தெய்வங்களைப்பற்றிய குறிப்பு என்று நாம் கருதுவது தவறாகும்.

---

[38] G.A.F.Knight, *A Biblical Approach to the Doctrine of the Trinity*, p. 17.
[39] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 207; J.S.Deere, *Deuteronomy: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 274.
[40] C.R.Swindoll & R.B.Zuck, ed., *Understanding Christian Theology*, p. 160.
[41] சங்கீதம் 96:5ல் இச்சொல் பன்மையிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
[42] R.L.Harris, ed., *Theological Wordbook of the Old Testament*, p. 41, 44.
[43] J.J.Davis, *Paradise to Prison: Studies in Genesis*, pp. 41-42.

ஏனென்றால், ஆதியாகமம் 1:1ல் தேவன் என்னும் சொல் பன்மையில் இருந்தாலும், அவருடைய செயலைக் குறிப்பிடும் "சிருஷ்டித்தார்" என்னும் சொல் ஒருமையிலேயே உள்ளது. இதிலிருந்து, பன்மை நிலையில் இருக்கும் தேவன் ஒருவர் என்னும் சத்தியமும் ஆதியாகமம் 1:1ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[43] தேவனைக் குறிப்பிடும் "எலோஹிம்" என்னும் பன்மைச் சொல் பழைய ஏற்பாட்டில் இவ்வாறு ஒருமை அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பன்மை நிலையில் இருக்கும் தேவன் பல தெய்வங்களாக இராமல் ஒரேயொரு தேவனாக இருப்பதேயாகும்.[44] இதனால் "எலோஹிம்" என்னும் பன்மைச் சொல் தமிழ் வேதாகமத்தில் "தேவன்" என்றும் ஆங்கிலத்தில் God என்றும் ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[45]

பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிப்பிடும் "அடோனாய்" (*Adonay*) என்னும் பெயரும் மூலமொழியில் பன்மையிலேயே உள்ளது. இதுவும் தேவனுடைய பன்மை நிலைக்கான ஆதாரமாக உள்ளது. தமிழில் இப்பெயரும் "யாவே" என்னும் தெய்வப் பெயரைப் போலவே "கர்த்தர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எஜமான் என்னும் அர்த்தமுடைய இச்சொல் ஒருமையில் மனிதர்களைக் குறிப்பிடுவதற்கும் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளபோதிலும்,[46] பன்மையில் தேவனை மட்டுமே குறிக்கின்றது.[47] உண்மையில், ஒருவராய் இருக்கும் தேவன்

---

[44] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 439; L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 313.

[45] பழைய ஏற்பாட்டில் தேவன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "எலோஹிம்" என்னும் சொல் எபிரேய மொழியில் தெய்வத்தைக் குறிப்பிடும் பொதுவான சொல்லாகும். இதைத் தவிர "எல்" (*El*) "எலோஹா" (*Eloah*) என்னும் ஒருமைச் சொற்களும் தெய்வத்தைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. இவை பொதுவாகத் தெய்வத்தைக் குறிப்பிடும் சொற்களாக இருப்பதனால் பிற மதத் தெய்வங்களும் இச்சொற்களினாலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் பழைய ஏற்பாட்டில் இச்சொற்கள் மெய்யான தேவனைக் குறிப்பிடும் இடங்களில் "சிறப்புச் சுட்டுடன்" (definite article) உப யோகிக்கப்பட்டுள்ளன.

[46] மூலமொழியில் ஆதியாகமம் 18:12, 1சாமுவேல் 16:16 போன்ற வசனங்களில் இச்சொல் ஒருமையில் மனிதனைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது..

[47] ஆங்கிலத்தில் "அடோனாய்" என்னும் சொல் ஒருமையில் மனிதர்களைக் குறிக்கும்போது சிறிய எழுத்துடன் lord என்றும், பன்மையில் தேவனைக் குறிக்கும்போது பெரிய எழுத்தை ஆரம்பமாகக் கொண்டு Lord என்றும் "யாவே" என்னும் பெயர் பெரிய எழுத்துகளில் LORD என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழில் இச்சொல் மனிதரைக் குறிக்கையில் 'ஆண்டவன்' என்றும் தேவனைக் குறிக்கையில் "கர்த்தர்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பன்மை நிலையில் இருப்பதினாலேயே பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிப்பிட இச்சொல் 439 தடவைகள் பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[48]

பிரசங்கி 12:1ல் "சிருஷ்டிகர்" என்னும் சொல்லும் மூலமொழியில் பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பது தேவனுடைய பன்மை நிலைக்கான இன்னுமொரு ஆதாரமாக உள்ளது.[49] பெரும்பாலான வேத ஆராய்ச்சி யாளர்கள், பிரசங்கியில் தேவனுடைய மகத்துவத்தைக் குறிப்பதற்கா கவே சிருஷ்டிகர் என்னும் சொல் பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பதா கக் கருதுகின்றனர்.[50] ஆனால், மூலமொழியில் தேவனைக் குறிப்பிடும் "எலோஹிம்" என்னும் சொல் பன்மையில் இருப்பதினாலேயே, பிரசங் கியும் தேவனைப் பன்மையில் குறிப்பிட்டுள்ளார்.[51] உண்மையில், சிருஷ்டிகரான தேவனுக்கு ஆதியாகமம் 1:1ல் "எலோஹிம்" என்னும் பன்மைப் பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளதினால், பிரசங்கியும் தேவ னைச் சிருஷ்டிகராகக் குறிப்பிடும்போது பன்மையில் எழுதியுள்ளார்.[52]

நம்முடைய மொழிகளில் பன்மையில் குறிப்பிடப்படுபவை எப்பொழுதும் ஒன்றுக்கும் மேற்பட்டவைகளையே குறித்தாலும், பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரேய மொழியில் தனியொரு பொருளைக் குறிப்பிடுவதற் கும் சில சந்தர்ப்பங்களில் பன்மைச்சொல் உபயோகிக்கப்படுவது வழக்கம். இதனால், எபிரேய மொழியில் பன்மையில் குறிப்பிடப்படுப வைகள் எப்பொழுதும் ஒன்றுக்கும் மேற்பட்டவைகளையே குறிக்கும் என்றும் கருதமுடியாது. ஆனால், ஒரு பொருளின் தரத்தை அல்லது தன்மையைக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் அப்பொருள் பன்மையிலேயே எழுதப்படும். இது "தரத்தின் பன்மை" என்று அழைக்கப்படுகின்றது.

---

48 W.E.Vine, ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 140.

49 J.V.McGee, *How Can God Exist in Three Persons?* p. 10.

50 R.Murrphy, *Ecclesiastes: Word Biblical Commentary Vol.23*, p. 113; M.A.Eaton, *Ecclesiastes: Tyndale Old Testament Commentaries*, pp. 147-148.

51 H.C.Leupold, *Exposition of Ecclesiastes*, p. 273.

52 J.L.Crenshaw, *Ecclesiastes: The Old Testament Library*, p. 184; A.J.Higgins & B.Currie, *Proverbs and Ecclessiastes: Ritchie OT Commentaries*,p. 523.

53 G.A.F.Knight, *A Biblical Approach to the Doctrine of the Trinity*, p. 20.

54 J.Pelikan & D.Poellot, ed., *Luthers Works: Volume 1 Lectures on Genesis*, p. 58; J.Calvin, *Commentary on the First Book of Moses Called Genesis*, p. 92; C.J.Collins, *Genesis 1-4: A Linguistic, Literary, and Theological Commentary,* pp. 59-61; V.P.Hamilton, *Genesis 1-17: The New International Commentary on the OT*, p.134. J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 11.

உதாரணத்திற்கு எபிரேய மொழியில் "தண்ணீர்" என்னும் சொல் எப்பொழுதும் பன்மையிலேயே எழுதப்படும். இது தண்ணீரின் தன் மையை, அதாவது பல மழைத்துளிகள் ஒன்றாகச் சேர்ந்ததே தண்ணீர் என்பதை அறியத்தருகின்றது. இதைப் போலவே, மூவர் ஒருவராயிருக் கும் சத்தியத்தை அறியத்தருவதற்காக எபிரேய மொழியில் "எலோ ஹிம்" "அடோனாய்" என்னும் தேவனுடைய இரண்டு பெயர்களும் பன்மையில் உள்ளன. இப்பெயர்கள் பல தெய்வங்கள் இருக்கின்றனர் என்னும் எண்ணத்தை அம்மொழியில் ஏற்படுத்துவதில்லை. ஏனெனில், இப்பன்மைப் பெயர்ச்சொற்கள் எப்பொழுதும் ஒருமை வினைச்சொல்லுட னேயே எழுதப்படும்.[53]

பழைய ஏற்பாட்டில் தேவனுக்குப் பன்மைப் பெயர்ச்சொற்கள் உபயோகிக்கப்பட்டிருந்தாலும், மூவர் ஒருவராயிருக்கும் சத்தியத்தை அறியத்தருவதற்காக, தேவனுடைய பெயருடன் வரும் வினைச்சொற்கள் எப்பொழுதும் ஒருமையிலேயே உள்ளன.

தேவன் பன்மை நிலையில் திரித்துவராக இருப்பதினாலேயே, தம்மைப் பற்றி அவர் கூறும்போது "நாம்" "நமது" என்று பன்மையில் குறிப்பிட்டுள் ளார்.[54] உதாரணத்திற்கு, "தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக" (ஆதி.1:26), என்றும், "மனிதன்... நம்மில் ஒருவனைப்போல் ஆனான்" (ஆதி.3:22) என்றும், "நாம் இறங்கிப் போய்" (ஆதி.11:7) என்றும், "யார் நமது காரியமாகப் போவான்" (எசா.6:8) என்றும் கூறுவது, அவருடைய பன்மை நிலைக்கான ஆதாரமாக உள்ளது. ஆனால், திரித்துவத்தை மறுதலிப்பவர்களும், இவ்வசனங்கள் திரித்துவ உபதேசத்துக்கானவை அல்ல என்று கூறுப வர்களும்,[55] "நாம்" "நமது" என்னும் சொற்கள் இவ்வசனங்களில்

[55] தேவன் பன்மையில் "நாம்" அல்லது "நமது" என்னும் வார்த்தையை உப யோகித்துள்ளதற்கு வேத ஆராய்ச்சியாளர்கள் பலவிதமான காரணங்களைக் கூறுகின்றனர். ஆதியாகம சிருஷ்டிப்பு விவரணம் பிறமதப் புராணங்களின் தழு வல் என்று கூறுபவர்கள், இவ்வசனங்களில் "நாம்" "நமது" என்னும் சொற்கள் அந்நிய தெய்வங்களைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். இதனால், பிறமதப் புராணங்களில் இருக்கும் அந்நிய மதக் கருத்துகளை அகற்றி அவற்றை ஆதி யாகமத்தில் எழுதியவர் இவ்வசனங்களில் "நாம்" "நமது" என்னும் சொற்களை

"மரியாதைப் பன்மையில்" உள்ளதாகக் கருதுகின்றனர்.[56] எனினும், எழுத்தாளர் தம்மைப்பற்றி எழுதும்போது "நாம்" "நமது" என்று மரியா தைப் பன்மையில் எழுதினாலும், அவர் இன்னுமொருவரைப்பற்றி எழுதும் போது மரியாதைப் பன்மையில் சொற்களை உபயோகிப்பதில்லை.[57] வேதாகமத்தில், எழுத்தாளர்கள் தங்களைப்பற்றி குறிப்பிடும் போது அல்ல, தேவன் தமக்குள்ளே பேசும்போதே "நாம்" "நமது" என்னும் சொற்கள் உள்ளன. எனவே, தேவன் தமக்குள்ளாக மரியாதைப் பன்மையில் பேசுவதாகக் கூறுவது அர்த்தமற்றது. மேலும், பழைய ஏற்பாட்டுக்கால எபிரேய மொழிவழக்கில் மரியாதைப் பன்மையில் மனிதர்கள் பேசியதுபற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லாதிருப்பதும்,[58] தேவன் மரியாதைப் பன்மையில் பேசவில்லை என்பதற்கான ஆதாரமாக உள்ளது.[59] தேவன் திரித்துவராக இருப்பதனால், திரித்துவ நபர்கள் தமக்கிடையில் பேசும்போதே தேவனுடைய கூற்றில் நாம் அல்லது நமது என்னும் சொற்கள் உள்ளன.[60]

---

அகற்றத் தவறிவிட்டார் என்றும் இவர்கள் விளக்குகின்றனர் (H.Gunkel, *Genesis*, p. 111). ஆனால், அண்மைக் காலத்தில் வேத ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட் டியுள்ள விஷயங்கள், ஆதியாகம சிருஷ்டிப்பு விவரணம் புறமதப் புராணங்களின் தழுவல் அல்ல என்பதற்குப் போதுமான ஆதாரங்களைத் தந்துள்ளதினால் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. (G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Vol.1*, pp. 8-10,28). திரித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத யூதர்களும் சில கிறிஸ்தவ வேத ஆராய்ச்சியாளர்களும் தேவன் பரலோகத்திலி ருக்கும் தூதர்களுடன் பேசுவதாகவே இவ்வசனங்களை விளக்கியுள்ளனர் (P. D.Miller, *Genesis 1-11: Studies in Structure and Theme*, pp. 13-14). எனினும், தேவன் தாம் சிருஷ்டித்த தூதர்களோடு சேர்ந்து மனிதனைச் சிருஷ்டித்தார் என்பதற்கும் மனிதனிலுள்ள தேவனுடைய சாயலில் தூதர்களும் பங்குள்ளவர்கள் என்பதற்கும் வேதத்தில் எவ்வித ஆதாரங்களும் இல்லாதிருப்பதனால், தேவன் தூதர்களோடு பேசுவதாக இவ்வசனத்தை (ஆதி.1:26-27ஐ) விளக்க முடியாது.

[56] D.Patrick, *The Rendering of God in the Old Testament*, pp. 15-16.

[57] M.J.Erickson, *Making Sense of the Trinity*, p. 31.

[58] கிரேக்க மொழிவழக்கிலேயே அரசர்கள் மரியாதைப் பன்மையில் பேசியதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. எனவே இதை ஆரம்பகால எபிரேய மொழிவழக்கிற் குள் திணிப்பது தவறாகும். பழைய ஏற்பாட்டில், அரசர்களில் எவரும் மரியாதைப் பன்மையில் பேசியதைப் பற்றிய குறிப் புகள் எதுவும் இல்லை.

[59] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 227; G.A.F.Knight, *A Biblical Approach to the Doctrine of Trinity*, p. 20.

[60] சிலர் இக்கூற்றுகளைத் தேவன் இயேசுகிறிஸ்துவுடன் பேசுவதாகவும் (R.Mcl. Wilson, "The Early History of the Exegesis of Genesis 1:28" pp. 420-437), சிலர் ஆதி.1:2ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவருடன் தேவன் பேசுவதாகவும் கருதுகின்றபோதிலும் (D.J.A.Clines, "The Image of God in Man" pp. 53-103). இவை திரித்துவ நபர்கள் மூவரும் தமக்கிடையில் பேசும் கூற்றுகளாயுள்ளன.

வேதாகமத்தில் திரித்துவ நபர்கள் தமக்கிடையில் பேசும்போது தேவனுடைய கூற்றில் நாம் அல்லது நமது என்னும் சொற்கள் உள்ளன.

பழைய ஏற்பாட்டில் தேவன் "நாம்" "நமது" என்னும் பன்மைச் சொற்களைக் குறிப்பிட்ட விதமாகவே புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவும் இச்சொற்களை உபயோகித்துள்ளார். உதாரணத்திற்கு யோவான் 14:23ல், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்று தம்மையும் பிதாவையும் சேர்த்து "நாங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, பழைய ஏற்பாட்டில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் திரித்துவ நபர்கள் பேசிக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலேயே "நாம்" "நமது" என்னும் சொற்கள் உபயோகிக்கப்பட்டுள்ளது என்னும் உண்மையை அறிந்துகொள்ளக்கூடியதாய் உள்ளது.[61]

திரித்துவ நபர்கள் தங்களுக்கிடையே பேசிக்கொள்வதை நேரடியாக அறிவிக்கும் வசனங்களும் பழைய ஏற்பாட்டில் உள்ளன. உதாரணத்திற்கு, 45ம் சங்கீதத்தில் 6ம் 7ம் வசனங்கள் தேவன், தேவனுடன் பேசும் கூற்றாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, 6ம் வசனத்தில் "தேவனே உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" என்னும் வசனம், தேவன் இயேசுகிறிஸ்துவிடம் பேசும் கூற்றாக இருப்பதை எபிரேயர் 1:8 அறியத்தருகிறது.

திரித்துவ நபர்கள் ஒருவரோடோருவர் பேசுவதை 110ம் சங்கீதம் சிறப்பான முறையில் அறியத்தருகின்றது. இச்சங்கீதம், பிதா இயேசுகிறிஸ்துவுடன் பேசும்விதத்தில் எழுதப்பட்டுள்ளது. இதனால்தான், "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி" என்று இச்சங்கீதம் ஆரம்பமாகின்றது (சங்.110:1). இவ்வாக்கியத்தில் "கர்த்தர்" பிதாவையும், "ஆண்டவர்" இயேசுகிறிஸ்துவையும் குறிக்கின்றது. இச்சங்கீதத்தை எழுதிய தாவீ

[61] D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentaries*, p. 52.

தின் ஆண்டவராக இருப்பவர் பிதாவின் வலது பாரிசத்தில் இருப்பவராகவும் (110:1,5) மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகவும் (110:4) உலகத்தை நியாயந்தீர்ப்பவராகவும் (110:5-6) சித்தரிக்கப்பட்டுள்ளார். புதிய ஏற்பாட்டின்படி இத்தகைய விவரணங்கள் இயேசு கிறிஸ்துவுக்கே பொருத்தமானவைகளாக உள்ளன (அப்.7:56, கொலோ.3:1, எபி.1:3, 1பேது.3:22, எபி.5:5-6, 7:17). மேலும், இச்சங்கீதம் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனமாக இருப்பதனால், இதன் வசனங்கள் புதிய ஏற்பாட்டில் 14 தடவைகள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணங்களில் மேற்கோள்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.[62] 110ம் சங்கீதத்தின் ஒவ்வொரு வசனமும், பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவோடு பேசும் வார்த்தைகளாகவே உள்ளன.

பழைய ஏற்பாட்டில் திரித்துவ நபர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றிக் குறிப்பிடுவதும் தேவனின் பன்மை நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. உதாரணத்திற்கு, ஆதியாகமம் 19:24ல், “அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும், கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி” என்னும் வசனம் கர்த்தர் கர்த்தரைக் கொண்டு செய்யும் செயலைப் பற்றிய விவரணமாக, அதாவது திரித்துவத்தின் ஒரு தெய்வீக நபர் மற்றொரு தெய்வீக நபரைக் கொண்டு செய்யும் செயலாக உள்ளது. ஏனெனில், “திரித்துவ நபர்களில் இருவர் இச்செயலில் ஈடுபட்டுள்ளதையே இவ்வசனம் அறியத்தருகிறது.”[63] இதேபோல, ஓசியா 1:7ல் தேவன் பேசும்போது, “அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன்” என்றும், சகரியா 3:2ல், “அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி, கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக. சாத்தானே எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக” என்று கூறியதும், திரித்துவ நபர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி குறிப்பிடும் கூற்றுகளாக இவ்வசனங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.[64]

பழைய ஏற்பாட்டில் “எலோஹிம்” “அடோனாய்” என்னும் பன்மைப் பெயர்கள் தேவனுக்கு கொடுக்கப்பட்டிருப்பதும், திரித்துவ நபர்கள்

---

[62] T.E.Wilson, *The Messianic Psalms*, p.118.

[63] H.M.Morris, *The Genesis Record*, p. 353.

[64] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 91.

ஒருவரோடொருவர் பேசும்விதத்தில் தேவனுடைய கூற்றுகளில் "நாம்" "நமது" என்னும் சொற்களும் ஒருவரைப்பற்றி மற்றவர் குறிப்பிடும் விஷயங்களும் இருப்பதும், தேவன் திரித்துவராகத் தம்மை வெளிப்ப டுத்தியுள்ளதற்கான ஆதாரங்களாக உள்ளன.

## (3). புதிய ஏற்பாட்டில் திரித்துவம்

தேவன் திரித்துவர் என்னும் சத்தியம் பழைய ஏற்பாட்டிலேயே அறியப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில் இவ்வுபதேசம் தெளிவாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தேவன் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்னும் மூன்று தெய்வீக நபர்களாக சமமான நிலையில் இருப்பதையும், இம்மூவரும் மூன்று தனிப்பட்ட தெய்வங்களாக இராமல் தனியொரு தேவனாக இருப்பதையும் நாம் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் திரித்துவ தேவனை முழுமையாகக் காணக்கூடிய ஒரு சம்பவமாக இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானம் உள்ளது. அச்சம யம், பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின்மீது வந்ததையும், பிதா வானத்திலிருந்து அவரோடு பேசியதையும் சுவிசேஷப் புத்தகங் கள் அறியத்தருகின்றன (மத்.3:16-17). உயர்வான நிலையில் இருக் கும் பிதா, தாழ்வான நிலையில் உள்ள இயேசுகிறிஸ்துவைத் தம் குமாரனாக அங்கீகரிப்பதாக யெகோவாவின் சாட்சிகள் இச்சம்பவத்தை வியாக்கியானம் செய்கின்றபோதிலும்,[65] திரித்துவ நபர்கள் மூவரும் சமமானவர்கள் என்பதைப் புதிய ஏற்பாடு தெளிவாகக் காண்பிக்கிறது.

பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்னும் திரித்துவ நபர்கள் சமமானவர்கள் என்பதனால், இம்மூவரும் தேவன் என்று புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளனர். இயேசுகிறிஸ்து பிதாவைத் தேவன் என்றே குறிப்பிட்டுள் ளார். அவருடைய உபதேசங்களில் பிதாவும் தேவனும் ஒத்தகருத் துள்ள சொற்களாகவே உள்ளன (மத்.6:26-32, 19:23-26, மாற்.12:17, 12:24-27). புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிதா, தேவன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளார் (1கொரி.8:6). இதைப்போலவே இயேசு

[65] Anonymous, *Should You Believe in Trinity*, p. 18.

கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் தேவன் என்பதையும் புதிய ஏற்பாடு அறியத்தருகிறது. இயேசுகிறிஸ்து தேவன் என்னும் சத்தியம் யோவான் 1:1ல் "அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்றும், ரோமர் 9:5ல், "என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்" என்றும், 1கொரிந்தியர் 2:8ல் "மகிமையின் கர்த்தர்" என்றும், தீத்து 2:13ல் "மகா தேவன்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2கொரிந்தியர் 3:17ல், "கர்த்தரே ஆவியானவர்" என்னும் சொற்பிரயோகம் பரிசுத்த ஆவியானர் தேவன் என்பதை அறியத்தருகின்றது.

திரித்துவ நபர்களான பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒருவராய் இருப்பதினாலேயே ஞானஸ்நானக் கட்டளையில் மூவரும் ஒருவர் என்னும் அர்த்தத்தில் நாமம் என்னும் சொல் ஒருமையில் உள்ளது.

புதிய ஏற்பாட்டில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்போர் தேவனாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், மூவரும் சமமானவர்களாக இருக்கின்றனர். இதனால், புதிய ஏற்பாட்டில் பல தடவைகள் இம்மூவரும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். மத்தேயு 28:19ல் ஞானஸ்நானக் கட்டளையும், 2கொரிந்தியா 13:14ல் ஆசீர்வாத உரையும் இதற்குச் சிறந்த உதாரணங்களாக உள்ளன. மேலும், தேவசெயல்கள் பலவற்றில் மூவரது சமமான பங்களிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, 1கொரிந்தியர் 12:4-6ல் விசுவாசிகளுக்கு வரங்களை அருள்வதிலும், கலாத்தியர் 3:14-16, எபேசியர் 2:13-18, 2தெசலோனிக்கேயர் 2:13-14, 1பேதுரு 1:2 என்னும் வசனங்களில் மனிதரின் இரட்சிப்பிலும், கொலோசெயர் 1:3-8ல் ஜெப வாழ்விலும், எபிரெயர் 6:4-6லும் யூதா 20-21லும் கிறிஸ்தவ அனுபவத்திலும் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்னும் மூவரது சமமான பங்களிப்பும் உள்ளது. தேவன் திரித்துவர் என்பதற்கான ஆதாரமாக இவ்வசனங்கள் உள்ளன.

"பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில்" ஞானஸ்நானம் கொடுக்கும்படியான கட்டளையில் (மத்.28:19) மூவரது பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், மூவரும் ஒருவர் என்பதை இக்கட்டளை அறியத்தரவில்லை என்றும், திரித்துவ உபதேசத்தை இவ்வசனம் போதிக்க

வில்லை என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[66] ஆனால், இவ்வசனத்தில் “நாமம்” என்னும் சொல் மூலமொழியில் ஒருமையில் இருப்பதை இவர்கள் கருத்திற்கொள்ளாததே இத்தகைய தவறான விளக்கத்திற்கான காரணமாயுள்ளது. உண்மையில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒருவராய் இருப்பதினாலேயே இவ் வசனத்தில் மூவரையும் ஒருவர் என்னும் அர்த்தத்தில் “நாமம்” என் னும் சொல் ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[67] எனவே, மூலமொழியில் நாமங்கள் என்று பன்மையில் குறிப்பிடப்பட்டிருந்தாலேயே மூன்று தெய்வங்கள் இருப்பதாக இவ்வாக்கியம் அர்த்தந்தரும். இதனால்தான், மூவரும் ஒருவராய் இருக்கும் உண்மையை அறியத்தருவதற்காக நாமம் என்னும் சொல் இவ்வசனத்தில் ஒருமையில் உள்ளது.[68] உண்மை யில், ஒரு தேவன் திரித்துவராக இருப்பதை அறியத்தரும் தெளிவான வசனமாக ஞானஸ்நானக் கட்டளை உள்ளது.[69] பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒருவராய் இருப்பதை மாத்திரமல்ல, மூவரும் சமமானவர்கள் என்பதையும் இவ்வசனம் அறியத்தருகிறது.[70] ஏனென் றால், ஞானஸ்நானம் மூவரது நாமத்திலும் கொடுக்கப்படுகின்றது. உண்மையில், “பிதா, குமாரன் பரிசுத்த ஆவி என்பதே நம்முடைய தேவனின் முழுமையான பெயராக உள்ளது.”[71]

புதிய ஏற்பாட்டில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்போர் தேவனாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், மூவரும் சமமானவர்களாக இருக்கின்றனர்.

2கொரிந்தியர் 13:14ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசீர்வாத உரையும் தேவ னின் திரித்துவத்திற்கான ஆதாரமாக உள்ளது. இவ்வுரையில், ஆசீர்வா தமானது பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்னும் மூவரிடமிருந்தும் வருவதனால், மூவரும் சமமானவர்கள் என்பதையும், ஒரு ஆசீர்வாதமே

---

66 Anonymous, *Should You Believe in Trinity*, p. 23.
67 L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 748.
68 B.B.Warfield, *The Person and Work of Christ*, p. 66.
69 C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 432; M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 955; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1186.
70 M.J.Erickson, *Making Sense of the Trinity*, p. 34.

மூவரிடமிருந்தும் வருவதனால் மூவரும் ஒருவர் என்பதையும் அறிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது. எனினும், இவ்வசனத்தில் மூவரது பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், மூவரும் சமமானவர்கள் என்றோ, மூவரும் தேவத்துவமுடையவர்கள் என்றோ இவ்வசனம் கூறவில்லை என்று யெகோவாவின் சாட்சிகள் தர்க்கிப்பதோடு, இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு திரித்துவம் உண்மை என்பதை நிரூபிக்க முடியாது என்றும் கூறுகின்றனர்.[72] ஆனால், இவ்வசனம் கூறாததை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு, திரித்துவ நபர்கள் சமமானவர்கள் என்றும், தேவத்தன்மை உடையவர்கள் என்றும் வேதாகமம் அறியத்தர வில்லை என்றும் தர்க்கிப்பது அர்த்தமற்றது. ஏனெனில், இவ்வசனம் திரித்துவத் தேவன் “பிதா குமாரன் பரிசுத்தஆவி” என்று மூவராய் இருப்பதை அறியத்தருகின்றது. மேலும், மூவரும் தெய்வீக ஆசீர்வா தத்தை அருள்பவர்களாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், மூவரும் சமமா னவர்கள் என்பதையும் இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாசீர்வாத உரையானது, ஆதிசபையினர் தேவனை திரித்துவராக விசுவாசித்துள் ளதற்கான ஆதாரமாக இருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின் றனர்.[73]

தேவன் திரித்துவர் என்னும் சத்தியம் வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களில் ஒன்றாக உள்ளபோதிலும், இது இலகுவில் புரிந்து கொள்ள முடியாத கடினமான போதனையாகவே உள்ளது. தேவன் ஒருவர் என்பதை வலியுறுத்தும் வேதாகமம், அந்த ஒரு தேவன் மூவராக இருக்கின்றார் என்றும் கூறுகிறது. எனினும், கிறிஸ்தவம் மூன்று தெய்வங்களைப் பற்றி போதிக்கவில்லை. மூவரும் தனியொரு தேவனாய் இருப்பதாகவே வேதாகமம் கூறுகின்றது. இவ்வுண்மையை விளக்குவதற்கு கிறிஸ்தவர்கள் பல்வேறு முறைகளைக் கையாண்டுள் ளனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறையியலாளர்கள், ஒரு தேவன் மூன்று விதமாக வெளிப்பட்டுள்ளார் என்று கூறினாலும், தேவத்துவத்தில் மூன்று தெய்வீக நபர்கள் இருப்பதாகவும், இவர்க ளுக்கிடையிலான தொடர்பு அல்லது ஐக்கியம், சூரியனுக்கும் ஒளிக்

---

[71] R.C.H.Lenski, *The Interpretation of St.Matthew's Gospel*, p. 1176.
[72] Anonymous, *Should You Believe in the Trinity?* p. 23.
[73] P.Barnett, *2Corinthians: The New International Commentary on the NT*, p. 619.
[74] Tertullian, *Apology*, 21.11-13.

கும் இடையில் இருப்பதைப் போன்றது என்றும் விளக்கியுள்ளனர். எனினும், தேவத்துவத்தில் மூவர் இருந்தாலும் தேவனில் பிரிவுகளோ பிளவுகளோ இல்லை என்பதே இவர்களது கருத்தாய் இருந்தது.[74] கி.பி.381ல் கொன்ஸ்டன்டிநோபிள் (Constantinople) என்னுமிடத்தில் கூடிய கிறிஸ்தவத் திருச்சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில் "தனியாகப் பிரிக்கப்பட முடியாத தேவன், பிரிக்கப்பட்டுள்ள மூன்று தெய்வீக நபர்களாய் இருக்கின்றார்" என்று திரித்துவ உபதேசத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.[75]


திரித்துவ நபர்கள் தெய்வீகத் தன்மையிலும் நிலையிலும் சமமானவர்களாக இருக்கின்றனர். எனினும் இது மூன்று தெய்வங்களைப் பற்றிய போதனை அல்ல. மூவரும் ஒருவராய் இருப்பதே திரித்துவத்தின் சத்தியமாகும்.

தேவனின் திரித்துவத்தை விளக்குவதற்கு பல்வேறு வகையான விவரணங்களைக் கிறிஸ்தவர்கள் உபயோகித்து வருகின்ற போதிலும், இவற்றில் எதுவுமே முழுமையான விளக்கங்களாக இல்லை. ஏனெனில், தேவனுடைய திரித்துவத் தன்மையை எதனுடனும் நம்மால் ஒப்பிட முடியாது.[76] இதனால், இத்தெய்வீக சத்தியத்தை நம்முடைய அறிவினால் முழுமையாகக் கிரகிக்க முடியாதுள்ளது. எனினும், மனிதனால்

[75] L.Berkhof, *The History of Christian Doctrines*, pp. 83-93.

[76] தண்ணீரில் ஆவி, திரவம், பனிக்கட்டி என்று மூன்று நிலைகள் இருப்பது போல தேவனின் திரித்துவம் இருப்பதாகச் சிலர் விளக்குகின்றனர். ஆனால், இதில் ஒன்று இருக்கும் போது மற்றவை இருப்பதில்லை. அதாவது தண்ணீர் ஆவியாயிருக்கும் போது திரவமும் பனிக்கட்டியும் இல்லை. எனவே இவ் விவரணத்தில் திரித்துவ நபர்களில் ஒருவர் இருக்கும் போது மற்ற இருவரும் இல்லை என்னும் தவறான கருத்து உருவாகும். தேவனுடைய திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவரும் எப்போதும் ஒரே சமயத்தில் முழுமையாக இருக்கின்றனர். சில கிறிஸ்தவர்கள், ஒரு மனிதன் மகனாகவும், கணவனாகவும், தகப்பனாகவும் மூன்று நிலைகளில் இருப்பதை அடிப்படையாகக் கொண்டு தேவனின் திரித்துவத்தை விளக்குகின்றனர். ஆனால், இது மூன்று நபர்களுக்கு ஒருவர் வித்தியாசமான உறவில் இருப்பதையே சுட்டிக்காட்டுகிறது. அதாவது ஒருவர் யாருக்கு கணவராக இருக்கின்றாரோ, அவருக்கு அவரால் தகப்பனாக இருக்க முடியாது. ஆனால் திரித்துவத்தில் மூவரும் சகல மக்களுக்கும் தெய்வமாக இருக்கின்றனர். திரித்துவத்தை விளக்குவதற்கு இவ்வாறு பல விவரணங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும், இவற்றில் எதுவுமே திரித்துவத்தை சரியானவிதத்தில் விளக்குவதாய் இல்லை.

திரித்துவத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதனால், தேவன் திரித்துவர் இல்லை என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகும். ஏனெனில், வேதாகமம் தேவனைத் திரித்துவராகவே வெளிப்படுத்தியுள்ளது. திரித்துவ நபர்கள் தெய்வீகத் தன்மையிலும் நிலையிலும் சமமானவர்களாக இருக்கின்றனர். எனினும் இது மூன்று தெய்வங்களைப் பற்றிய போதனை அல்ல. மூவரும் ஒருவராய் இருப்பதே திரித்துவத்தின் சத்தியமாய் உள்ளது. திரித்துவம் பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கங்கள் தவறானவை என்பதை அறிந்து கொள்வதற்கு, இயேசுகிறிஸ்துவையும் பரிசுத்த ஆவியானவரையும் பற்றிய இவர்களது வேதப்புரட்டு உபதேசங்களுக்கு வேதாகமத்திலிருந்து சரியான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனால், அடுத்து வரும் நான்கு அத்தியாயங்களிலும் இவற்றைப்பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.



## ஐந்தாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

இயேசுகிறிஸ்துவே நம்முடைய வழிபாட்டுக்குரிய தேவன் என்பதை ஏற்றுக்கொள்ளாத யெகோவாவின் சாட்சிகள், அவரைத் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவராகவே பார்க்கின்றனர். இதனால், கொலோசெயர் 1:15, வெளிப்படுத்தல் 3:14, யோவான் 3:16, நீதிமொழிகள் 8:22 என்னும் வசனங்களை இவர்கள் தவறான விதத்தில் வியாக்கியானம் செய்து, இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறுகின்றனர். துயரகரமாக இவர்களுடைய தவறான வியாக்கியானத்திற்கு ஏற்றவிதமாகவே ஆங்கிலத்தில் பிரபலமாயிருந்த ஜேம்ஸ் அரசனின் வேதாகமம் இவ்வசனங்களை மொழிபெயர்த்துள்ளது. இதனால், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் வேதப்புரட்டு உபதேசம் பிரபலமடைவதற்கு ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமமே காரணமாய் இருந்துள்ளது என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாது. எனினும், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்திய தேவன் என்பதை ஏசாயா 9:6, மீகா 5:2, எபிரெயர் 1:8, 1:11, 1:12, கொலோசெயர் 1:17, யோவான் 8:58, 17:5, 17:24, 1:1 என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன. யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனங்களுக்குத் தவறான அர்த்தங்களைக் கற்பித்தாலும், இவற்றின் சரியான அர்த்தங்களும், யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய வேதப்புரட்டு உபதேசத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கும் வேதவசனங்களுக்கு மூலமொழியின்படியான சரியான அர்த்தங்களும் இவ்வத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன. இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்று அல்ல, அவர் சிருஷ்டிக்கப்படாத நித்திய தேவன் என்றே வேதாகமம் கூறுகிறது. ஏனெனில், அவரே நம்முடைய வழிபாட்டுக்குரிய தேவனாக இருக்கின்றார்.

ஐந்தாம் அத்தியாயம்



# இயேசு கிறிஸ்து

## தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவரா? அல்லது சிருஷ்டிகரான தேவனா?

யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவைப்பற்றி போதிப்பவைகள் வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் முழுமையான வேதப்புரட்டா கவே உள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்து “சிருஷ்டிக்கப்படாத ஆரம்பங்கள் அற்ற நித்தியமான தேவன்” என்னும் தெய்வீக சத்தி யத்தை யெகோவாவின் சாட்சிகள் முழுமையாக மறுதலிக்கின்றனர். அதாவது, “இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட காலத்தில் தம்முடைய ஆரம் பத்தைக் கொண்டவர்” என்றும், “யெகோவா தேவனால் முதலாவதாகச் சிருஷ்டிக்கப்பட்டவர்” என்றும் போதிக்கும் இவர்கள்,[1] “அவர் ஆரம்பமும் முடிவும் அற்ற நித்திய தேவன்” என்னும் உண்மையை மறுதலிக்கின்ற னர். இயேசுகிறிஸ்து “சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு தேவ

[1] The *Watchtower* 22 August 1976; *Aid to Bible Understanding*, p. 1152.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி யெகோவாவின் சாட்சிகளின் போதிப்பவைகள் தவறான உபதேசங்களாகும்.

னால் சிருஷ்டிக்கப்பட்ட சிறப்பான நபர்"[2] என்று வாதிடும் யெகோவாவின் சாட்சிகள், தேவன், "தமது முதலாவது பிள்ளையான இயேசுகிறிஸ்து வின் மூலமாகவே அனைத்தையும் சிருஷ்டித்தார்"[3] என்று கூறுகின்றனர். உண்மையில், "தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இயேசுகிறிஸ்து, குறிப் பிட்ட காலத்தில் தம் வாழ்வின் ஆரம்பத்தைக் கொண்டிருப்பதாகப்"[4] போதிக்கும் யெகோவாவின் சாட்சிகளின் போதனைகள் வேதாகமத்தை முரண்படுத்துபவையாகவும், தவறானவையாகவுமே உள்ளன. இயேசு கிறிஸ்து நித்தியமானவர் என்பதை மறுதலிக்கும் யெகோவாவின் சாட்சிகளின் வேதப்புரட்டான "இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர்" என்னும் தவறான உபதேசம் இவ்வத்தியாயத்தில் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு, அவர் சிருஷ்டிக்கப்படாத தேவன் என்னும் சத்தியம் விளக்கப்பட்டுள்ளது.

## (1). யெகோவாவின் சாட்சிகள் தவறாக உபயோகிக்கும் வசனங்கள்

இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்திய தேவன் என்னும் வேதாகம சத்தியத்தை மறுதலிக்கும் யெகோவாவின் சாட்சிகள், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்னும் தங்களுடைய வேதப்புரட்டு உபதே சத்தை உருவாக்குவதற்காக கொலோசெயர் 1:15, வெளிப்படுத்தல் 3:14, யோவான் 3:16, நீதிமொழிகள் 8:22 என்னும் வசனங்களைத் தவறான முறையில் வியாக்கியானம் செய்வதோடு, இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்தியர் என்பதை அறியத்தரும் வேதவசனங்களின் அர்த்தத்தை மாற்றியும் மறுதலித்தும் வருகின்றனர். இதனால், இவ்வச னங்களை ஆராய்ந்து பார்த்து, இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்திய தெய்வம் என்பதை இவ்வத்தியாயத்தில் அறிந்துகொள்வோம்.

[2] Anonymous, *The Greatest Man Who Ever Lived*, p.i.
[3] Anonymous, *Aid to Bible Understanding*, p. 918. [4] *Let God be True*, p. 88.

## (அ). சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர் (கொலோசெயர் 1:15)

இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் உபயோகிக்கும் பிரதான வசனம் கொலோசெயர் 1:15 ஆகும். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து "சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கொலோசெயர் 1:18, ரோமர் 8:29, எபிரெயர் 1:6லும் இயேசுகிறிஸ்து இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், தமிழ் வேதாகமத்தில் இவ்வசனங்களில் இச்சொற்பிரயோகம் "முதற்பேறானவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனங்களை ஆதாரமாகக் கொண்டு, இயேசுகிறிஸ்து "சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னர் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்று கூறுகின்றனர்.[5] ஏனெனில், "முந்தினபேறுமானவர்" அல்லது "முதற்பேறானவர்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ப்ரோட்டோடொக்கொஸ்" (*prototokos*) என்னும் கிரேக்கச் சொல், "முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டவர்" என்னும் அர்த்தமுடையது என்பதே இவர்களின் தர்க்கமாகும்.[6] இதனால், இயேசுகிறிஸ்து "யெகோவாவின் குடும்பத்தின் மூத்தப் பிள்ளை"[7] என்று இவர்கள் கூறுகின்றனர். பெரும்பாலான ஆங்கில வேதாகமங்களில் இச்சொல் "முதலாவது பிறந்தவர்" என்னும் அர்த்தத்துடன் firstborn என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பதும் இவர்களுடைய உபதேசத்திற்கு சாதகமாக அமைந்துள்ளது. எனினும், மூலமொழியில் இச்சொல், "காலத்தால் முந்தினவர்" என்றும், "தரத்தால் உயர்ந்தவர்" என்றும் இருவித அர்த்தங்களைக் கொண்டுள்ளது. ஆனால், முதலாவதாகப் பிறந்தவரைக் காலத்தால் முந்தினவர் என்று குறிப்பிடலாம் என்றாலும், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாதவர் என்பதனால் அவரை முதற்பிறந்தவர் (முதற்பேறானவர்) என்று எவ்விதத்திலும் அழைக்க முடியாது.

இயேசுகிறிஸ்து முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டவர் என்று போதிக்கும் யெகோவாவின் சாட்சிகள், "காலத்தால் முந்தினவர்" என்னும் அர்த்தத்திலேயே "ப்ரோட்டோடொக்கொஸ்" என்னும் கிரேக்கச் சொல் கொலோ

[5] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 408.
[6] Anonymous, *Aid to Bible Understanding*, p. 918.
[7] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 408.

செயர் 1:15ல் உபயோகிக்கப்பட்டுள்ளதாக வாதிடுகின்றனர். ஆனால், இதனைத் தொடர்ந்து வரும் வசனங்களைக் கருத்திற் கொள்ளும் போது, இயேசுகிறிஸ்து "காலத்தால் முந்தினவர்" என்னும் அர்த்தம் இவ்வசனத்திற்குப் பொருத்தமற்றது என்பதை அறிந்திடலாம். ஏனென்றால், தொடர்ந்துவரும் வசனங்களில் இயேசுகிறிஸ்து "சபைக்குத் தலையாகவும்" "எல்லாவற்றிலும் முதல்வராகவும்" இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால் (கொலோ.1:18), "சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்" என்னும் சொற்பிரயோகம், இயேசுகிறிஸ்து "சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றிற்கும் மேலானவராக இருக்கின்றார்"[8] என்னும் அர்த்தத்திலேயே கொலோசெயர் 1:15ல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[9] மேலும், இதனைத் தொடர்ந்து வரும் வசனங்களில் சகலமும் இயேசுகிறிஸ்துவினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதினால், எல்லாவற்றையும் சிருஷ்டித்த இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல என்பதும் தெளிவாகின்றது.[10] உண்மையில், "சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றிற்கும் மேலானவராக இருக்கும் இயேசுகிறிஸ்து,"[11] முதலாவது பிறந்தவர் என்றல்ல, அவர் "முதற்தரமானவர்" என்பதையே கொலோசெயர் 1:15 அறியத்தருகின்றது.[12] அதாவது, சகலவற்றையும் இயேசுகிறிஸ்துவே சிருஷ்டித்துள்ளதினால், அவர் சகலத்திற்கும் மேலானவராக இருக்கின்றார்.[13]

சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றிற்கும் மேலானவராக இருக்கும் இயேசுகிறிஸ்து, முதலாவது பிறந்தவர் என்றல்ல, அவர் முதற்தரமானவர் என்பதையே கொலோசெயர் 1:15ல் மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் அறியத்தருகின்றது.

[8] C.Vaughan, *Colossians, Philemon: Bible Study Commentary*, p. 38; J.D.G.Dunn, *Colossians/Philemon: New International Greek Testament Commentary*, p. 90; W.Hendriksen, *Colossians: New Testament Commentary*, p. 72.
[9] D.J.Moo, *Colossians/Philemon: The Pillar NT Commentary*, p. 120.
[10] M.J.Erickson, *Christian Theology*, p. 697.
[11] R.C.H.Lenski, *The Interpretation of St.Paul's Epistle to the Colossians*, p. 53.
[12] R.L.Reymond, *Jesus, Divine Messiah: The New Testament Witness*, p. 247; P.T.O'Brien, *Colossians/Philemon: Word Biblical Commentary Volume 44*, p. 44
[13] D.E.Garland, *Colossians/Philemon: The NIV Application Commentary*, p. 88.

யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய உபதேசமே சரியானது என்பதை நிரூபிப்பதற்காக கொலோசெயர் 1:15ஐத் தொடர்ந்து வரும் வசனங்களில் "சகல" என்னும் சொல்லிற்கு முன் "ஏனைய" (other) என்னும் சொல்லைப் புகுத்தியுள்ளனர். இதன்படி, யெகோவாவின் சாட்சிகளின் வேதாகம மொழிபெயர்ப்பில் இவ்வசனங்கள் "அவருக்குள் (ஏனைய) சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்ப டாதவைகளுமான (ஏனைய) சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானா லும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்க ளானாலும், (ஏனைய) சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் (ஏனைய) எல்லாவற்றிற்கும் முந்தினவர், (ஏனையவை) எல்லாம் அவருக்குள் நிலைத்திருக்கிறது" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதனால், இயேசுகிறிஸ்துவைத் தவிர ஏனை யவை அனைத்தும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டவை என்றும், இயேசு கிறிஸ்துவோ தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், ஒரு உபதேசத்தை நிரூபிப்பதற்காக இவ்வாறு வேதவசனங்களை மாற்றுவது முழுமையான வேதப்புரட்டா கும். "ஏனைய" என்னும் சொல், மூலமொழியில் இல்லாத போதிலும், மூலமொழியின் அர்த்தத்தைச் சரியாகத் தருவதற்காகவே இச்சொல் லைத் தாங்கள் சேர்த்துள்ளதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்ற னர்.[15] ஆனால், மூலமொழியின் சரியான அர்த்தத்தைத் தருவதற்குப் பதிலாக, இவர்கள் தங்களுடைய உபதேசத்தையே வேதாகமத்திற்குள் புகுத்தியுள்ளனர். உண்மையில், "இயேசுகிறிஸ்துவை சிருஷ்டிக்கப்பட்ட வராகக் காண்பிப்பதற்காகவே மூலமொழியில் இல்லாத இச்சொல்லை யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தில் புகுத்தியுள்ளனர்."[16] இதன் மூலம், "சிருஷ்டிகராகிய இயேசுகிறிஸ்துவை இவர்கள் சிருஷ்டிக்கப்பட் டவராக மாற்றியுள்ளனர்."[17]

யெகோவாவின் சாட்சிகள் தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாகப் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் "ப்ரோட்டோடொக் கொஸ்" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ள பகுதிகளையும்

---

[15] *New World Translation*, Foreword, p. 6.
[16] B.M.Metzger, "The Jehovah's Witnesses and Jesus Christ" p. 70.
[17] W.Martin, *The Kingdom of Cults*, p. 96.

சுட்டிக்காட்டுவது வழக்கம். ஆனால், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலும், இச்சொல் "முன்னுரிமையையும் உயர் தரத்தையும் குறிக்கும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது."[18] எனினும், பழைய ஏற்பாட்டில் "பார்வோனின் முதற்பேறானவன்" பார்வோனின் முதல் பிள்ளையாக இருப்பதனால், இயேசுகிறிஸ்து முதற்பேறானவர் என்று கூறும்போது, அவர் "முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டவர்" என்னும் அர்த்தத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பதாக யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர். இதனால், இவர்கள் இயேசுகிறிஸ்துவைத் "தேவனுடைய முதலாவது பிள்ளை" என்று கூறுகின்றனர்.[19] ஆனால், கொலோசெயர் 1:15ல் நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம், இயேசுகிறிஸ்து "தேவனுடைய முதற்பேறானவர்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர் "சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர் (முதற்பேறானவர்)" என்றே இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, இவ்வசனத்தில் "பிறப்பித்தல்" அல்லது "சிருஷ்டித்தல்" என்னும் அர்த்தத்திலேயே இச்சொல் உபயோகிக்கப்பட்டிருந்தால், இயேசுகிறிஸ்து தேவனுடைய பிள்ளையாக அல்ல, சிருஷ்டிக்கப்பட்டவற்றின் பிள்ளையாக இருப்பதாகவே நாம் கருதவேண்டும்.[20] ஏனெனில், அவர் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர் என்றே இவ்வசனம் கூறுகிறது. அவர் தேவனுடைய முதற்பேறானவர் என்று இவ்வசனம் கூறவில்லை. எனவே, அவர் தேவனுடைய முதலாவது பிள்ளை என்றோ, அவர் தேவனால் முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டவர் என்றோ இவ்வசனத்தை ஆதாரமாகக்கொண்டு எவ்விதத்திலும் போதிக்க முடியாது.

பழைய ஏற்பாட்டில், "முதலாவதாக பிறந்தவர்கள் மாத்திரமே முதற்பேறானவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்" என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கத்திலும் எவ்வித உண்மையும் இல்லை. வம்சவரலாற்று அட்டவணைகளிலும், சரித்திரப் பகுதிகளிலும் இச்சொல்லுக்கு இத்தகைய அர்த்தம் உள்ள போதிலும், ஏனைய இடங்களில் "முதற்தரமானவன்" அல்லது "மேலானவன்" என்னும் அர்த்தத்திலேயே இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதனால்தான், தாவீது குடும்பத்

[18] P.T.O'Brien, *Colossians, Philemon: Word Biblical Commentary*, p. 44.
[19] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 408.
[20] R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovah's Witnesses*, p. 130.

வேதாகமத்தில் முதற்பேறானவன் என்னும் சொற்பிரயோகம் எப்பொழுதும் முதலாவது பிறந்தவனையே குறிக்கின்றது என்று எண்ணுவது தவறாகும். பல வசனங்களில் இச்சொல் முதற்தரத்தை அல்லது சிறப்பான மேலான தன்மையைக் குறிக்கின்றது.

தின் கடைசிப் பிள்ளையாக இருந்தாலும், சங்கீதம் 89:27ல் அவன் முதற்பேறானவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இதேபோல, எப்பிராயீம் யோசேப்பின் இரண்டாவது மகனாக இருந்தபோதிலும் (ஆதி.41:50-51), எரேமியா 31:9ல் அவனும் முதற்பேறானவன் என்று அழைக்கப்பட்டுள்ளான். தமிழ் வேதாகமத்தில் இதை "சேஷ்டப் புத்திரன்" என்று மொழிபெயர்த்துள்ளனர். மேலும், இஸ்மவேல் பிறந்து 13 வருஷங்களின் பின்னர் பிறந்த ஈசாக்கு ஆபிரகாமின் முதற்பேறானவனாக இருப்பதும் இச்சொல்லின் அர்த்தத்தை நமக்கு அறியத்தரும்விதத்தில் உள்ளது. "வேதாகம காலத்தில், முதற்பேறானவன் என்னும் சொல் முதலாவதாகப் பிறந்தவன் என்னும் அர்த்தத்தில் மாத்திரமல்ல, முன்னுரிமையையும் முதன்மையான இடத்தையும், முதற்தரத்தையும் குறிக்கும் சொல்லாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது."[21] இயேசுகிறிஸ்துவைப் பொறுத்தவரை, அவர் முதலாவதாகச் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று வேதாகமம் கூறவில்லை. அவர் சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றையும்விட மேலானவராகவும், சகலவற்றிற்கும் முதல்வராகவும் இருக்கின்றார் என்பதையே முதற்பேறானவர் என்னும் சொற்பிரயோகம் அறியத்தருகிறது. மேலும், யெகோவாவின் சாட்சிகள் தர்க்கிப்பது போல, கொலோசெயர் 1:15 இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை மறுதலிக்கவில்லை. ஏனென்றால், இப்புத்தகத்தின் அடுத்த அதிகாரத்தில், "தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" என்னும் வாக்கியத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் தேவத்துவம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (கொலோ.2:9).

வேதாகமத்தில் முதற்பேறானவன் என்னும் சொற்பிரயோகம் எப்பொழுதும் முதலாவது பிறந்தவனையே குறிக்கின்றது என்று எண்ணுவது

[21] L.Ryken & T.Longman III, ed., *Dictionary of Biblical Imagery*, pp. 289-290.

தவறாகும். சில இடங்களில் இத்தகைய அர்த்தத்துடன் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது உண்மை என்றாலும் (லூக்.2:7), ஏனைய வசனங்களில் இச்சொல் முதற்தரத்தை அல்லது சிறப்பான மேலான தன்மையையே குறிக்கின்றது. உதாரணத்திற்கு, இயேசுகிறிஸ்து "மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவராக" (வெளி.1:5) இருக்கின்றார் என்று வேதாகமம் கூறும்போது, மரித்து உயிர்த்தெழுந்தவர்களில் அவரே முதலாவது நபர் என்று நாம் கருதலாகாது. ஏனெனில், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கும் முன்பே லாசரு, நாயீனூர் விதவையின் மகன் போன்றவர்கள் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார்கள். எனினும், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இவர்களுடைய உயிர்த்தெழுதலைப் போன்றதாக இராமல் வித்தியாசமானதாக இருந்தது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவுக்கும் முன்பு மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும் மறுபடியும் மரித்தார்கள். ஆனால், இயேசுகிறிஸ்துவோ மறுபடியும் மரிக்காத நிலையில் உயிர்த்தெழுந்தார். இதனால், அவருடைய உயிர்த்தெழுதல் ஏனையோரின் உயிர்த்தெழுதலைவிட வித்தியாசமானதாகவும், மேலானதாகவும் உள்ளது. இதனால்தான், அவர் "மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவராக" வெளிப்படுத்தல் 1:5ல் குறிப்பிடப்பட்டுள்ளார்.[22] இதைப்போலவே, "இயேசுகிறிஸ்து சர்வ சிருஷ்டிக்கும் முதற்பேறானவர் (அல்லது முந்தினபேறுமானவர்)" என்னும் சொற்பிரயோகம், அவர் சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றையும்விட வித்தியாசமானவராகவும், அவற்றைவிட மேலானவராகவும் இருக்கின்றார் என்பதை அறியத்தருகின்றது. உண்மையில், சகலமும் சிருஷ்டிக்கப்பட்டவைகளாய் இருக்கையில், இயேசுகிறிஸ்து மாத்திரம் சிருஷ்டிகராய் இருக்கின்றார்.

## (ஆ). தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர் (வெளிப்படுத்தல்.3:14)

வெளிப்படுத்தல் 3:14ல் குறிப்பிடப்பட்டுள்ள "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றை, "தேவனுடைய சிருஷ்டிகளின் ஆரம்பமாயிருக்கிறவர்" என்று வியாக்கியானம் செய்யும் யெகோவாவின் சாட்சிகள், இவ்வாக்கியம், இயேசுகிறிஸ்து

[22] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 63; R.L.Thomas, *Revelation 1-7: An Egegetical Commentary*, 69.

சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கான ஆதாரமாய் இருப்பதாக வாதிடுகின் றனர்.[23] அதாவது, “இயேசுகிறிஸ்து தேவனால் முதலாவதாக சிருஷ்டிக் கப்பட்டவர் என்பதனாலேயே அவர் தேவனுடைய சிருஷ்டிகளின் ஆரம்பமாயிருப்பதாக இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது” என்பது யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கமாகும்.[24] இதனால், இவ்வாக்கியத் தில் “ஆதி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள “அர்க்கே” (*arche*) என்னும் கிரேக்கச் சொல், “ஆரம்பிப்பவர்” என்றல்ல, “ஆரம்பம்” என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[25] அதாவது, இயேசுகிறிஸ்து தேவனுடைய சிருஷ்டியை ஆரம்பித்தவர் அல்ல, “அவரே அதன் ஆரம்பமாக,” அதாவது, “முதலா வது சிருஷ்டிப்பாக” இருக்கின்றார் என்பதே யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்திற்குக் கொடுத்துள்ள விளக்கமாகும்.

வெளிப்படுத்தல் 3:14ல் “ஆதி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லை “ஆரம்பம்” என்று மொழிபெயர்க்கலாம் என்பது உண்மை என்றாலும், இதை “ஆரம்பிப்பவர்,” “ஆரம்ப ஸ்தானம்,” “தோற்றுவாய்,” “முதல்காரணம்” என்றும்,[26] “ஆளுகை” “அதிகாரம்” என்றும் மொழிபெ யர்க்கலாம்.[27] எனினும், பல்வேறு அர்த்தங்கள் உள்ள இச்சொல் வெளிப்படுத்தல் 3:14ல் “முதல்காரணம்” அல்லது, “ஆரம்ப கர்த்தா” என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[28] எனவே, இவ்வ

---

[23] Anonymous, *Let God be True*, p. 200.

[24] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 14.

[25] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 14.

[26] S.Zodhiates, *The Complete Word Study Dictionary*, p. 260.

[27] D.Aune, *Revelation: Word Biblical Commentary Volume 52*, p. 256. வேதாகமத் தின் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் NIV ஆளுகை என்னும் அர்த்தத்தில் இச் சொல்லை மொழிபெயர்த்துள்ளது. இதன்படி இயேசுகிறிஸ்து தேவனால் சிருஷ்டிக் கப்பட்டவற்றை ஆளுகை செய்பவராக இருக்கின்றார். இதன் மூலம் இயேசு கிறிஸ்துவின் நித்தியத்துவத்தைப் பற்றிய சர்ச்சையைத் தவிர்க்கலாம் என்றாலும், ஏனைய ஆங்கில வேதாகமங்கள் நம் தமிழ் மொழிபெயர்ப்பைப் போலவே உள்ளன. இவ்வசனத்தின் சர்ச்சையைத் தவிர்ப்பதற்காகவே NIV இச்சொல்லை இவ்விதமாக மொழிபெயர்த்துள்ளதாகக் கருதப்படுகின்றபோதிலும், இதைத் தவறான மொழிபெயர்ப்பு என்று கூறமுடியாது (P.Patterson, *Revelation: The New American Commentary*, p. 138). எனினும் இது இவ்விடத்திற்குப் பொருத்த மான மொழிபெயர்ப்பு அல்ல.

[28] W.F.Arndt & F.W.Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, p. 112; G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 205.

சனத்தில் இச்சொல், சிருஷ்டிப்புக்குக் காரணர் யார் என்பதையே அறியத்தருகின்றது.[29] உண்மையில், இயேசுகிறிஸ்து சிருஷ்டிப்பின் காரணராய், சிருஷ்டிப்பை ஆரம்பித்து வைத்தவராய் இருப்பதையே இவ்வசனம் அறியத்தருகிறது.[30] "அர்க்கே" என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்தே "ஆர்க்கிடெக்ட்" (architect) அதாவது "கட்டிடக் கலைஞன்" என்னும் ஆங்கில சொல் உருவாகியுள்ளது. இயேசுகிறிஸ்து சகலவற்றையும் சிருஷ்டித்த கலைஞராயிருப்பதை இதன் மூலம் அறிந்துகொள்கின்றோம். யோவான் 1:3, கொலோசெயர் 1:16, எபிரேயர் 1:2 போன்ற வசனங்கள், இயேசுகிறிஸ்துவே சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்பதை அறியத்தருகின்றது.[31]

வெளிப்படுத்தல் 3:14ல் ஆதி என்னும் சொல், முதல்காரணம் அல்லது, ஆரம்ப கர்த்தா என்னும் அர்த்தத்தில், இயேசுகிறிஸ்துவே சிருஷ்டிப்பின் காரணர் என்பதை அறியத்தருகின்றது.

கி.பி.4ம் நூற்றாண்டிலிருந்து இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை மறுதலித்து, அவரை சிருஷ்டிக்கப்பட்டவராகக் கருதும் வேதப்புரட்டர்கள், வெளிப்படுத்தல் 3:14லுள்ள "ஆதி" என்னும் சொல்லை "ஆரம்பம்" என்று மொழிபெயர்த்து, இயேசுகிறிஸ்துவின் ஆரம்பத்தைப் பற்றியே இவ்வசனம் கூறுகிறது என்று வாதிட்டு வந்துள்ளபோதிலும், இவ்வர்த்தம் இவ்வசனத்திற்குப் பொறுத்தமற்றதாகவே உள்ளது. ஏனென்றால் வெளிப்படுத்தல் புத்தகத்தின் ஏனைய வசனங்கள் இயேசுகிறிஸ்து நித்தியமானவர் என்பதை அறியத்தருகின்றன. வெளிப்படுத்தல் 1:18ல் தாம் "சதாகாலங்களிலும் உயிரோடிருப்பதாக" இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். அவர் எப்போதும் இருப்பவர் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும். வெளிப்படுத்தல் 1:17லும் 2:8லும் தாம் "முந்தினவரும் பிந்தினவரும்" என்று இயேசுகிறிஸ்து அறியத்தந்துள்ளார். இது பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர்களில் ஒன்றாகும் (ஏசா.44:6, 48:12,

---

[29] S.Zodhiates, *The Complete Word Study Dictionary*, p. 261.

[30] S.Gregg, ed., *Revelation: Four Views A Parallel Commentary*, p. 79; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2360.

[31] யோவான் 1:3ல், "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

43:10). தேவன் நித்தியர் என்பதையே இப்பெயர் அறியத்தருகிறது.[32] வெளிப்படுத்தல் 1:8லும் 22:13லும் "அல்பாவும் ஒமேகாவும்" (கிரேக்க அரிச்சுவடியின் முதலும் கடைசியுமான எழுத்துகள்) என்னும் விவரணத்துடன் சேர்த்து இயேசுகிறிஸ்து "ஆதியும் அந்தமுமாகவும்," "முந்தினவரும் பிந்தினவருமாகவும்" இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், அவர் நித்தியமானவர் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.[33] உண்மையில், பழைய ஏற்பாட்டில் தேவன் நித்தியமானவர் என்பதைக் குறிப்பிடும் விவரணமே வெளிப்படுத்தலில் இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, இதை முரண்படுத்தும் விதத்தில் வெளிப்படுத்தல் 3:14ல் அவர் நித்தியமற்றவர், சிருஷ்டிக்கப்பட்டவர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது.

வெளிப்படுத்தல் 5:13ல், தேவனும் இயேசுகிறிஸ்துவும் வழிபாட்டுக்கு உரியவர்களாகவும், ஏனைய சிருஷ்டிகள் அனைத்தும் இவர்களை வழிபடுவதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளதும் இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது. "வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும், வல்லமையும், சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்" என்று யோவான் தான் கண்ட தரிசனத்தை இவ்வசனத்தில் எழுதியுள்ளார். இவ்வசனத்தில், தேவனும் இயேசுகிறிஸ்துவும் சமமான நிலையில் இருக்கின்றனர். இருவரையும் சகல சிருஷ்டிகளும் வழிபடுகின்றன. எனவே, இவர்களிருவரும் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் அல்ல என்பது தெளிவாகின்றது. இவ்வசனத்தில் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பவர் தேவன் என்பதையும், ஆட்டுக்குட்டியானவர் இயேசுகிறிஸ்து என்பதையும் புத்தக விடயங்கள் அறியத்தருகின்றன. மேலும், வெளிப்படுத்தல் 19:10ல் சிருஷ்டிக்கப்பட்டவைகளை வழிபடுவது தடை செய்யப்பட்டிருப்பதும், வெளிப்படுத்தல் 5:13ல் சிருஷ்டிக்கப்பட்டவைகள் இயேசுகிறிஸ்துவை வழிபடுவதும், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல வழிபாட்டுக்கு உரிய தெய்வம் என்பதற்கான உறுதியான ஆதாரமாய் உள்ளது.

---

[32] J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary*, p. 1098.
[33] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p.111.

## (இ). தேவனுடைய ஒரேபேறான குமாரன் (யோவான்.3:16)

இயேசுகிறிஸ்து “தேவனுடைய ஒரேபேறான குமாரன்” என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதையும், அவர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கான ஆதாரமாக யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டுகின்றனர். யோவான் 1:14, 1:18, 3:16, 3:18, 1யோவா.4:9 என்னும் வசனங்களில் இயேசுகிறிஸ்து இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். எபிரெயர் 11:19ல் ஈசாக்கு ஆபிரகாமின் ஒரேபேறான குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால், “ஆபிரகாம் ஈசாக்கை சரீரப்பிரகாரமாகப் பெற்றதுபோலவே, யெகோவா தேவன் பெற்ற பிள்ளையாக இயேசுகிறிஸ்து இருக்கின்றார்” என்றும், “இதனாலேயே அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்” என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[34] இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதனால் அவர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், இதனால் அவரால் தேவனாக இருக்க முடியாது என்றும் இவர்கள் வாதிடுகின்றனர்.[35]

ஈசாக்கை ஆபிரகாம் பெற்றதுபோலவே தேவன் இயேசுகிறிஸ்துவைப் பெற்றார் என்றும், ஈசாக்கு ஆபிரகாமுக்கு குமாரனாய் இருப்பதைப் போலவே இயேசுகிறிஸ்துவும் தேவனுக்கு குமாரனாய் இருக்கின்றார் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுவது, தேவனையே நிந்திக்கின்ற கூற்றுகளாகும். ஏனெனில், இத்தகைய விளக்கம், இயேசுகிறிஸ்துவுக்கு “ஒரு பரலோகத் தகப்பன் இருப்பது போல பரலோகத் தாயும் இருக்கின்றாள் என்னும் எண்ணத்தையும் ஏற்படுத்துகிறது.”[36] எனவே, இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தையும் நித்தியத்துவத்தையும் நிராகரித்து, யெகோவா தேவனைக் கனப்படுத்துவதாக நினைக்கும் யெகோவாவின் சாட்சிகள், தங்களுடைய இத்தகைய விளக்கங்களினால் தேவனையே நிந்திக்கிறவர்களாக இருக்கின்றனர். மேலும், “ஒரேபேறான குமாரன்” என்னும் சொற்பிரயோகத்தை “பெற்றெடுத்த ஒரேயொரு

---

[34] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 16.
[35] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 16.
[36] R.M.Bowman, *Why You Should Believe in the Trinity*, p. 83.

பிள்ளை" என்று யெகோவாவின் சாட்சிகள் விளக்குவதும் தவறாகும். ஏனென்றால், ஈசாக்கு ஆபிரகாமின் "ஒரேபேறான குமாரன்" என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவன் ஆபிரகாமின் ஒரேயொரு பிள்ளையாக இருக்கவில்லை. ஆபிரகாமுக்கு வேறு பிள்ளைகளும் இருந்தார்கள் (ஆதி.16:11, 25:1-6). ஆபிரகாமினுடைய பிள்ளைகளில் ஈசாக்கு சிறப்பா னவனாகவும், ஒப்பற்றவனாகவும் இருந்ததினாலேயே எபிரேயர் 11:19ல் அவன் ஆபிரகாமின் "ஒரேபேறானவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளான். ஏனெனில், "ஒரேபேறான" என்னும் சொல் மூலமொழியில் "ஒப்பற்ற தன்மையையும் சிறப்பான நிலையையுமே" குறிக்கின்றது. அதாவது, அவனைப் போல வேறொருவனும் இல்லை என்னும் அர்த்தத்திலேயே இச்சொற்பிரயோகம் உள்ளது.

ஒரேபேறான என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், "பெற்றெடுத்தல்" என்னும் அர்த்தமுடையது அல்ல. கிரேக்க மொழியில் இச்சொல் ஒரேயொரு அல்லது தனித்துவமானது என்னும் அர்த்தமுடையது.

வேதாகமத்தில் "ஒரேபேறான குமாரன்" என்னும் சொற்பிரயோகம் "ஒருவன் பெற்றெடுத்த பிள்ளை" என்னும் அர்த்தத்தில் இயேசுகிறிஸ்து வுக்கு உபயோகிக்கப்படவில்லை.[37] உண்மையில், ஜேம்ஸ் அரசனு டைய ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள only begotten son என்னும் சொற்பிரயோகமே இத்தகைய தவறான எண்ணத்தை அநேகருக்கு ஏற்படுத்தியுள்ளது.[38] ஆனால், மொழியியல்ரீதியாக இது சரியான மொழிபெயர்ப்பு அல்ல.[39] ஏனெனில், ஒரேபேறான என்பதற்கு மூலமொ

[37] L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, p. 92.

[38] ஜேம்ஸ் அரசனுடைய மொழிபெயர்ப்பில் உள்ள பெற்றெடுத்தல் என்னும் அர்த்தமுள்ள சொல், கி.பி.4ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இயேசுகிறிஸ்துவைப்பற்றிய உபதேச சர்ச்சை மற்றும் கிறிஸ்தவ உபதேசங்களில் ஏற்பட்ட லத்தீன் மொழியின் செல்வாக்கு என்பவற்றினதும் பாதிப்பினால் ஏற்பட்ட ஒரு மொழிபெயர்ப்பாய் உள்ளது. ஆனால், புதிய ஏற்பாட்டு கிரேக்கத்தைப் பொறுத்தவரை உபயோகிக்கப் பட்டுள்ள சொல் பிறப்புடன் தொடர்புடையது அல்ல (M.J.Harris, *Jesus As God: The New Testament Use of Theos in Reference to Jesus*, p. 84; F.J.A.Hort, *The Dissertations*, pp. 48-53; D.Moody, "God's Only Son: The Translation of John 3:16 in the Revised Standard Version" pp. 213-219.

[39] C.S.Keener, *The Gospel of John: A Commentary*, pp. 412-413.

ழியில் உபயோகிக்கப்பட்டுள்ள “மொனோகனீஸ்” (*monogenes*) என்னும் கிரேக்கச் சொல், “பெற்றெடுத்தல்” என்னும் அர்த்தமுடையது அல்ல. அதாவது, இது ஒருவரின் பிறப்புடன் அல்லது ஒரு உயிரினத்தின் பிறப்புடன் சம்பந்தப்படும் சொல் அல்ல. கிரேக்க மொழியில் இச்சொல் “ஒரேயொரு” என்னும் அர்த்தமுடையது.[40] இச்சொல் வேதாகமத்தின் ஏனைய வசனங்களிலும் (லூக்.7:12, 8:41, 9:38), பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலும் (நியா.11:34),[41] முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பவருடைய நூல்களிலும்,[42] அக்கால கிரேக்க இலக்கியங்களிலும்[43] “ஒரேயொரு” என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[44] இதனால்தான் புதிய ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இச்சொல் one and only என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[45] உண்மையில், இதுவே மூலமொழியின் சரியான அர்த்தத்தைத்தரும் மொழிபெயர்ப்பாய் உள்ளது.[46] வேத ஆராய்ச்சியாளர்கள் இதை the only one of its kind என்றும்,[47] one of a kind son என்றும்[48] குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், “ஒரேபேறான” என்னும் சொல் மூலமொழியில் இயேசுகிறிஸ்துவின் “தனித்துவத்தையும், ஒப்பற்ற

---

[40] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 93; Moulton & Milligan, *The Vocabulary of the Greek New Testament*, pp. 416-417; M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary Volume 9*, p. 33; G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 120; D.A.Carson, *Jesus the Son of God*, p. 83; M.J.Harris, *Jesus As God: The New Testament Use of Theos in Reference to Jesus*, p. 84.

[41] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 128.

[42] F.Josephus, *Antiquities of the Jews*, 1.222, 5.264.

[43] Hesiodius, p. 376; Plato, *Critias*, 113D; Aeschyius, AG. p. 898.

[44] G.Kittel, and G.Friedrich, eds., *Theological Dictionary of the New Testament Volume 4*, pp. 49-51.

[45] NIV மொழிபெயர்ப்பில் இவ்விதமாக உள்ளது. RSV மொழிபெயர்ப்பில் only என்றுள்ளது.

[46] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 128; C.G.Kruse, *John, Tyndale New Testament Commentary*, pp. 70-71, 114.

[47] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, p. 14; D.Moody, “God's Only Son: The Translation of John 3:16 in the Revised Standard Version” pp. 213-219; G.A.Buttrick, ed., *The Interpreter's Dictionary of the Bible Volume 3*, p. 604; C.H.Dodd, *The Interpretation of the Fourth Gospel*, p. 305; W.F.Howard, *Christianity According to St.John*, pp. 69-70; J.H.Moulton and G.Milligan, *The Vocabulary of the Greek Testament Illustrated from the Papyri and Other Non-Literary Sources*, pp. 416-417.

[48] A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the NT*, pp. 42-43;

தன்மையையுமே" சுட்டிக்காட்டுகிறது.[49] அதாவது, இயேசுகிறிஸ்துவைப் போல தேவனுக்கு வேறெவரும் இல்லை, அவர் தனித்துவமானவர் என்பதே இச்சொல்லின் அர்த்தமாகும்.[50] மேலும், "குமாரன்" என்னும் சொல், "ஒருவன் பெற்றெடுத்த பிள்ளை" என்னும் அர்த்தத்துடன் மாத்திரம் வேதாகம காலத்தில் உபயோகிக்கப்படவில்லை. இதை அறியாதவர்களே, இயேசுகிறிஸ்து தேவன் பெற்ற பிள்ளை என்றும், இதனால், அவர் தேவனைவிட தாழ்வானவர் என்றும் தவறான கருத்து டையவர்களாய் இருக்கின்றனர். மேலும், புராணங்களை அடிப்படையா கக்கொண்ட மதங்களில் இருக்கும் தகப்பன் பிள்ளை உறவு முறையை தேவனுக்கும் இயேசுகிறிஸ் துவுக்கும் இடையில் கொண்டுவருவது தவறாகும்.

வேதாகமத்தில் ஒருவருக்குப் பிறந்தவர்கள் மாத்திரமல்ல, ஒருவருக்குப் பிறக்காதவர்களும் அவருடைய பிள்ளையாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனால்தான், சாமுவேலை ஏலி "என் மகனே" என்று கூப்பிட்டார் (1சாமு.3:16). சவுல் தாவீதைத் தன் குமாரன் என்று அழைத்துள்ளார் (1சாமு.26:17). பவுல் தீமோத்தேயுவையும் தீத்துவையும் தன்னுடைய குமாரன் என்று குறிப்பிட்டுள்ளார் (2தீமோ.1:2, தீத்.1:1). இதேபோல, ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத் பிலேசரிடத்திற்கு ஸ்தா னாபதிகளை அனுப்பி, தான் அவனுடைய அடியானும், குமாரனுமாய் இருப்பதாக அறிவித்தான் (2ராஜா.16:7). மேலும், ஆசிரியர் தன் மாண வரை "என் மகனே" என்று அழைப்பதை நீதிமொழிகளில் நாம் காணலாம் (நீதி.7:1).[51] எனவே, வேதாகமத்தில் "குமாரன்" "மகன்" என்னும் சொற்கள் ஒருவனுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு மாத்திரமே உபயோகிக்கப்பட்டுள்ளது என்று கூறமுடியாது. இதனால்தான், இயேசு கிறிஸ்துவும் "தாவீதின் குமாரன்" என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டி ருந்தாலும் (மத்.1:1), அவர் தாவீதுக்குப் பிறந்தவர் என்பது இதன் அர்த்தமல்ல (மத்.1:1). வேதாகமத்திலுள்ள வம்சவரலாற்று அட்டவ ணைகளிலும், இடைக்கிடையே சில தலைமுறைகள் விடப்பட்டுள்ள

---

[49] B.B.Warfield, *The Person and Work of Christ*, p. 56; D.B.Wallace, *Greek Grammar Beyond the Basics*, pp. 360-363; R.E.Brown, *John: Anchor Bible Commentary*, p. pp. 13-14.

[50] A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, pp. 42-43; G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol.36*, p. 14.

[51] L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, p. 89.

போதிலும், ஒருவன் மற்றவனைப் பெற்றான் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.[52] மேலும், தீர்க்கதரிசியின் சீடர்கள் "தீர்க்கதரிசியின் புத்திரர்" என்றும் (1ராஜா.20:35), பாடகர் குழுவினர் "பாடகரின் புத்திரர்" என்றும் (நெகே.12:28) அழைக்கப்பட்டுள்ளனர். எனவே, ஒருவருக்குப் பிறந்தவர் மாத்திரமல்ல, அவருக்குப் பிறக்காதவர்களும் அவருடைய பிள்ளைகளாகக் குறிப்பிடப்படுவது வேதாகம கால வழக்கமாய் இருந்தது.

குமாரன் என்னும் சொல் ஒருவருக்கு பிறக்காதவரை மாத்திரமல்ல, உருவக விவரணமாகவும் வேதாகம காலத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில், ஒன்றினது தன்மை அல்லது குணத்தைக் குறிப்பிடுவதற்காக மகன் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, தீமையான மனிதன் "நியாயக்கேட்டின் மகன்" (சங்.89:22) என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால் இவன் மனிதனுக்கல்ல, நியாயக்கேட்டுக்குப் பிறந்தவன் என்று கூறமுடியாது. மேலும், யாக்கோபையும் யோவானையும் இயேசுகிறிஸ்து "இடிமுழக்க மக்கள்" என்று அழைத்தபோது, இவர்களிருவரும் இடிக்குப் பிறந்தவர்கள் என்னும் அர்த்தத்தில் அல்ல, இவர்களுடைய குணம் இடியைப் போல இருந்ததையே சுட்டிக்காட்டியுள்ளார் (மாற்.3:17). இதேபோல, பர்னபா "ஆறுதலின் மகன்" என்று அழைக்கப்பட்டுள்ளதினால் (அப்.4:36), அவன் ஆறுதலுக்குப் பிறந்தவன் என்று நாம் எண்ணலாகாது. அவன் மற்றவர்களுக்கு ஆறுதலளிப்பவனாக இருந்ததினாலேயே இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளான். இதேவிதமாகவே "ஒளியின் பிள்ளைகளை" (லூக். 16:8), ஒளிக்குப் பிறந்தவர்களாகவும், "கேட்டின் மகனைக்" (யோவா.

[52] உதாரணத்திற்கு மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் உள்ள வம்சவரலாற்று அட்டவணை 14 தலைமுறைகள் கொண்ட மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பழைய ஏற்பாட்டு சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு பிரிவிலும், 14 தலைமுறைகளைவிட அதிகத் தலைமுறைகள் இருந்துள்ளதை அறிந்திடலாம். தலைமுறைகள் விடப்பட்டாலும் ஒருவன் இன்னுமொருவனைப் பெற்றான் என்றே மத்தேயு குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணம் யூதர்களுடைய மொழிவழக்கில் தகப்பன் பிள்ளை உறவுக்கு மட்டுமே வார்த்தைகள் இருப்பதேயாகும். தமிழில் இருப்பது போல, பாட்டன் பூட்டன், பேரன், கொள்ளுப்பேரன் என்ற உறவுமுறைகளுக்கெல்லாம் தனியான வார்த்தைகள் அவர்களது மொழிவழக்கில் இருக்கவில்லை. அவர்கள் அனைவருமே தகப்பன் மகன் உறவுமுறையிலேயே குறிக்கப்பட்டனர். எனவே, வம்சவரலாற்று அட்டவணையில் பல தலைமுறைகள் விடப்பட்டாலும், ஒருவன் மற்றவனைப் பெற்றான் என்று எழுதுவது அவர்களின் மொழிவழக்கில் தவறானதாக இருக்கவில்லை (L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p.22).

17:12, 2தெச.2:3) கேட்டுக்குப் பிறந்தவனாகவும், “கீழ்ப்படியாமையின் பிள்ளைகளைக்” (எபே.2:2) கீழ்ப்படியாமைக்குப் பிறந்தவர்களாகவும், “வெளிச்சத்தின் பிள்ளைகளை” (1தெச.5:5) வெளிச்சத்துக்குப் பிறந்த வர்களாகவும், “பகலின் பிள்ளைகளைப்” (1தெச.5:5) பகலுக்குப் பிறந்தவர்களாகவும் கருதமுடியாது. இதைப்போலவே, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவர் தேவனுக்குப் பிறந்தவர் என்று கூறமுடியாது. ஏனெனில், அவர் தேவத் தன்மையுடையவர் என்பதையே தேவனுடைய குமாரன் என்னும் சொற்பிரயோகம் அறியத்தருகின்றது.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது, அவர் தேவனுக்குப் பிறந்தவர் என்பதை அல்ல, அவர் தேவத் தன்மையுடையவர் என்பதையே அறியத்தருகின்றது. ஏனெனில், கிரேக்க மொழியில் சரீரப்பிரகாரமான மகனை மாத்திரம் குறிப்பிடும் சொல் அல்ல, உருவகமாகவும் உபயோகிக்கப்படும் சொல்லே இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் உள்ளது

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில் குமாரன் என்பதைக் குறிப்பிட இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றில் ஒன்று சரீரப்பிரகார மாகப் பிறக்கும் மகனை மாத்திரமே குறிக்கும். ஆனால் மற்ற சொல், சரீரப் பிரகாரமான மகனை மாத்திரமல்ல ஏனையவர்களையும் மகனாக அழைக்க உபயோகிக்கப்படும். அதாவது, “டெக்னொன்” (*teknon*) என்னும் சொல் சரீரப்பிரகாரமான மகனை மாத்திரம் குறிக்கையில் “ஹுய்யொஸ்” (*huios*) என்னும் சொல் மகனாகக் குறிப்பிடக்கூடிய ஏனைய உறவுகளையும் குறிக்கும்.[53] புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று குறிப்பிடப்படும் இடங்களில், சரீரப் பிரகாரமான மகனை மாத்திரம் குறிக்கும் கிரேக்கச் சொல் அல்ல, உருவகமாகவும் உபயோகிக்கப்படும் “ஹுய்யொஸ்” என்னும்

---

[53] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 916

[54] யோவான் எழுதிய சுவிசேஷத்தில் “ஹுய்யொஸ்” என்னும் சொல் இயேசு கிறிஸ்துவுக்கு மாத்திரமே உபயோகிக்கப்பட்டுள்ளது. பவுலின் நிருபங்களில் இச்சொல் மனிதர்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ள இடங்களில் இதனோடு

சொல்லே உள்ளது.[54] இதிலி ருந்து, இயேசுகிறிஸ்து தேவத்தன்மையுடையவர் என்பதைக் குறிப்பிடவே அவர் தேவனுடைய குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. இதன் மூலம், "இயேசுகிறிஸ்துவின் முழுமையான தேவத்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது."[55] இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்பதைக் குமாரன் என்னும் சொல் எவ்விதத்திலும் காண்பிக்கவில்லை. ஏனெனில், அவர் தேவனுக்கு சமமானவராக, தேவத் தன்மையுடையவராக இருப்பதையே தேவனுடைய குமாரன் என்னும் சொற்பிரயோகம் அறியத்தருகிறது.[56]

இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனாக அறிமுகப்படுத்தியது மாத்திரமல்ல (யோவா.10:36),[57] மற்றவர்கள் தம்மை இவ்விதமாக அழைத்தபோது அதற்கு அவர் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை (மத்.26:63-64).[59] மேலும், இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனாகவும், தேவனைத் தம்முடைய பிதாவாகவும் குறிப்பிட்டபோது, அவர் தம்மைத் தேவன் என்று கூறுகிறார் என்றே யூதர்கள் விளங்கிக் கொண்டனர். இதனால்தான், யோவான் 10ம் அதிகாரத்தில் "யூதர்கள், நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி இவ்விதமாகத் தேவதூஷணம் சொல்லுகிறபடியினால், உன் மேல் கல்லெறிகிறோம்" (யோவா.10:33) என்று இயேசுகிறிஸ்துவின் மீது குற்றஞ்சாட்டினார்கள். ஆனால், இயேசுகிறிஸ்து நேரடியாக, தாம் தேவன் என்று அவர்களிடம் கூறியிருக்கவில்லை. அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்றே அவர்களிடம் அறிமுகப்படுத்தியிருந்தார். ஆனால், யூதர்கள் இதன் மூலம், அவர் தம்மைத் தேவனாகக் காண்பிக்கின்றார் என்பதைப் புரிந்துகொண்டனர். இதனால்தான் இயேசுகிறிஸ்து, "நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே, தேவதூஷணஞ் சொன்

---

"சுவிகாரம்" என்னும் சொல் சேர்க்கப்பட்டு, அவர்கள் "தேவனுடைய சுவிகாரப் புத்திரர்களாக" இருக்கின்றார்கள் என்று விளக்கப்பட்டுள்ளது. (D.A.Carson, *Jesus The Son of God*, p. 33). எனினும், சரீரப்பிரகாரமான பிள்ளையைக் குறிப்பிடும் "டெக்னொன்" என்னும் சொல் இயேசுகிறிஸ்துவுக்கு புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப்படவேயில்லை.

[55] J.McDowell, *Jesus: A Biblical Defence of His Deity*, p. 75.

[56] L.Boettner, *Studies in Theology*, pp. 152-153.

[57] யோவான் 10:36ல், "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ்சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" என்று இயேசுகிறிஸ்து கேட்டார்.

னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" என்று கேட்டார் (யோவா.10:36). தேவனுடைய குமாரன் என்னும் வார்த்தையின் மூலம், இயேசுகிறிஸ்து தம்மைத் தேவன் என்று கூறியது யூதர்களுக்கு தேவதூஷணமாக இருந்ததினால்தான், இதற்காக நியாயப்பிரமாணச் சட்டத்தின்படி (லேவி.24:16) கல்லெறிந்து கொல்வதன் மூலம் அவருக்கு மரண தண்டனை கொடுக்க அவர்கள் முற்பட்டனர். உண்மையில், யூதர்கள் விளங்கிக் கொண்டது போல, "தேவனுடைய குமாரன் என்னும் சொற்பிர யோகம் இயேசுகிறிஸ்து தேவன் என்பதற்கான உறுதியான ஆதார மாய் உள்ளது."[59]

இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிமுகப்படுத்தி போது, அவர் தம்மைத் தேவன் என்று கூறுகிறார் என்றே யூதர்கள் புரிந்துகொண்டனர்.

## (ஈ). தமது வழியின் ஆதியாய்க் கொண்டிருந்தார் (நீதிமொழிகள்.8:22)

இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சி கள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வசனம் நீதிமொழிகள் 8:22 ஆகும். இவ்வசனத்தில், "கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாய்க் கொண்டிருந்தார்" என்று குறிப் பிடப்பட்டுள்ளது. உண்மையில், நீதிமொழிகள் 8ம் அதிகாரம் ஞானம் பேசுவது போலவே எழுதப்பட்டுள்ளது (நீதி.8:1-4).[60] ஏனெனில், இது "ஞானத்தின் சுயசரிதையாக உள்ளது."[61] இவ்வதிகாரத்தில் ஞானத்தை

[59] மத்தேயு 26:63-64ல், "பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[60] B.B.Warfield, *The Person and Work of Christ*, p. 77.

[61] இதனால்தான் இவ்வதிகாரம் பின்வருமாறு ஆரம்பமாகின்றது: ஞானம் கூப்பிடுகிற தில்லையோ? புத்தி சத்தமிடுகிறதில்லையோ? அது வழியருகேயுள்ள மேடைகளி லும், நாற்சந்திகளிலும் நிற்கிறது. அது ஊர்வாசல்களின் ஓரத்திலும், பட்டணத்தின் முகப்பிலும், நடைகூடங்களிலும் நின்று சத்தமிட்டு: மனுஷரே உங்களை நோக்கிக் கூப்பிடுகிறேன். என் சத்தம் மனுபுத்திரருக்குத் தொனிக்கும் (நீதி.8:1-4).

[62] T.Longman III, *Proverbs: Baker Commentary on the OT Wisdom*, p. 197.

ஒரு நபராக வர்ணிக்கும் சாலொமோன், அது மக்களை அழைப்பதையும் (நீதி.1:1-5), தனது தன்மைகளையும் (நீதி.8:6-11), தன்னால் மனிதருக்கு கிடைக்கும் நன்மைகளையும் (நீதி.8:12-21) கூறுவதுபோல எழுதியுள் ளார்.[62] இதனால், 22ம் வசனமும் ஞானத்தின் கூற்றாகவே உள்ளது. இவ்வசனத்தில் "ஆதியாய்க் கொண்டிருந்தார்" என்பதை யெகோவாவின் சாட்சிகள் "ஆதியில் சிருஷ்டித்தார்" என்னும் அர்த்தத்திலேயே விளக் குகின்றனர்.[63] இதன்படி, ஞானம் தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்பாக உள்ளது. அதாவது, சகலவற்றையும் சிருஷ்டிப்பதற்கும் முன்பாகத் தேவன் ஞானத்தை சிருஷ்டித்துள்ளார் என்றும், "தான் தேவனுடைய ஆரம்பப் படைப்பு" என்று ஞானம் கூறுவதாகவும் இவ்வசனத்துக்கு இவர்கள் அர்த்தம் கற்பித்துள்ளனர். மேலும், இவ்வசனத்தில் "இயேசு கிறிஸ்துவே ஞானமாக உவமிக்கப்பட்டிருக்கின்றார்" என்றும், இதனால் "அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறு கின்றனர்.[64]

நீதிமொழிகள் 8:22ல் "கொண்டிருந்தார்"[65] என்று தமிழில் மொழிபெயர்க் கப்பட்டுள்ள "கனா." (qanah) என்னும் எபிரேயச் சொல்லை, "சிருஷ்டித் தார்"[66] என்றும், "பெற்றார்"[67] என்றும் மொழிபெயர்க்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.[68] பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இச்சொல் சிருஷ்டித்தார் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், தேவன் சகலவற்றையும் சிருஷ்டிப்பதற்கும் முன்பு ஞானத்தை சிருஷ் டித்தார் என்றால், ஆரம்பத்தில் அவர் ஞானமற்றவராக இருந்தார் என்றும் கூறவேண்டும். ஆனால் இது தேவனை நிந்திக்கும் விளக்கமாகி விடும். மேலும், பழைய ஏற்பாட்டில் 84 தடவைகள் இச்சொல் இடம்பெற்

[62] Sid S. Buzzell, *Proverbs: The Bible Knowledge Commentary – OT*, p.921.
[63] இவர்களது வேதாகமத்தில் "Jehovah himself produced me at the beginning of his way, the earliest of his achievements of long ago" என்றுள்ளது.
[64] Anonymous, *Aid to Bible Understanding*, p. 918.
[65] ஆங்கிலத்தில் KJV, NASB, ASV, CEV, DT, DRA, ESV, ESVUK, JUB, NCV, போன்ற வேதாகமங்கள் இவ்விதமாகவே இச்சொல்லை மொழிபெயர்த்துள்ளன.
[66] M.V.Fox, *Proverbs: Anchor Bible Commentary*, p. 279. ஆங்கிலத்தில் NIV, CEB, RSV, NEB, GNT, NET, NRSV என்னும் வேதாகமங்கள் "சிருஷ்டித்தார்" "கொண்டுவந்தார்" "உருவாக்கினார்" என்னும் அர்த்தங்களில் இச்சொல்லை மொழிபெயர்த்துள்ளன.
[67] W.A.Irwin, "Where Shall Wisdom Be Found" pp. 133-142. ஆங்கில வேதாகமங் களில் New International Version அடிக்குறிப்பில் இம்மொழிபெயர்ப்பு உள்ளது.
[68] R.E.Murphy, *Proverbs: Word Biblical Commentary*, p. 48.

றாலும், ஏழு இடங்களில் மாத்திரமே இதை "சிருஷ்டித்தார்" என்று மொழிபெயர்க்கக் கூடியதாயுள்ளது. எனினும், இவ்விடங்களிலும், இச் சொல் கட்டாயமாக இவ்விதமாகத்தான் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதில்லை.[69] இவ்விடங்களிலும் இதைக் "கொண்டிருந்தார்" என்றும் மொழிபெயர்க்கலாம்.[70] சில வேத ஆராய்ச்சியாளர்கள், "அபிஷேகம் பண்ணப்பட்டேன்," (நீதி.8:23)[71] "ஜநிப்பிக்கப்பட்டேன்" (நீதி.8:24, 26) என்றும் ஞானம் கூறுவதனால், ஞானம் சிருஷ்டிக்கப்பட்டதாகவே இருக்கவேண்டும் என்று கருதினாலும்,[72] நீதிமொழிகள் கவிதை நடையில் எழுதப்பட்டிருப்பதை நாம் மறக்கலாகாது. இதனால்தான், இவ்வதிகாரத் தில் ஞானம் மூலமொழியில் பெண்பால் சொல்லில் குறிப்பிடப்பட்டுள் ளது.[73] எனவே, கவிதை நடையில் எழுதப்பட்டுள்ள வேதப் பகுதிகளை உரைநடைப் பகுதிகளை வியாக்கியானம் செய்வதுபோல நாம் விளக்கக்கூடாது. மேலும், "ஞானம் எப்போது எப்படி உருவானது என்பதைப் பற்றியல்ல, அது ஆதியிலிருந்தே தேவனோடிருக்கிறது என்பதையே இவ்வசனங்கள் கவிதை நடையில் அறியத்தருகின்றன."[74] உண்மையில், "உலகைச் சிருஷ்டிப்பதற்கும் முன்பு தேவனோடு ஞான மும் இருந்தது,"[75] என்பதையும், "அவர் ஞானத்துடன் சகலவற்றையும் சிருஷ்டித்துள்ளார் என்பதையுமே இவ்வசனம் அறியத்தருகின்றது. எனவே, நம்முடைய தமிழ் வேதாகமத்தில் உள்ளவிதமாக, தேவன் ஆதியிலேயே "ஞானத்தைக் கொண்டிருந்தார்" என்பதே இவ்வசனத்தின் சரியான அர்த்தமாயுள்ளது.

நீதிமொழிகள் 8:22 ஞானம் எப்போது எப்படி உருவானது என்பதைப் பற்றியல்ல, அது ஆதியிலிருந்தே தேவனோடிருக்கிறது என்பதையே அறியத்தருகின்றன. இவ்வசனத்தில் ஞானம் இயேசுகிறிஸ்துவாக உவமிக்கப்படவில்லை.

---

69 D.Kidner, *Proverbs: Tyndale Old Testament Commentaries*, p. 79.

70 B.Vawter, "Proverbs 8:22: Wisdom and Creation", pp. 205-216.

71 மூலமொழியின்படி இவ்வசனத்தில் "அபிஷேகம்பண்ணப்பட்டேன்" என்பது "நியமிக்கப்பட்டேன்" என்றே உள்ளது.

72 Whybray, R.N. "Proverbs 8:22-31 and Its Supposed Prototypes" pp.504-542.

73 A.J.Higgins, *Proverbs: Ritchie Old Testament Commentary*, p. 97.

74 C.G.Martin, *Proverbs: New International Bible Commentary*, p. 664.

75 S.S.Buzzell, *Proverbs: The Bible Knowledge Commentary: OT*, p. 922.

நீதிமொழிகள் 8:22ல் இயேசுகிறிஸ்துவே ஞானமாக உவமிக்கப்பட்டிருப் பதாகக் கூறும் யெகோவாவின் சாட்சிகள், ஆதிசபைத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விவரணமாகவே நீதிமொழிகள் 8ம் அதிகாரத்தை வியாக்கியானம் செய்துள்ளதாகவும் கூறுகின்றனர்.[76] உண்மையில், கி.பி.4ம் நூற்றாண்டில் இயேசுகிறிஸ்துவின் தேவத்து வத்தை மறுதலித்து, அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று போதித்த ஏரியஸ் என்பவன் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டு, ஞானம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது என்றும், இதனால், ஞானமாக உவமிக்கப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவும் சிருஷ் டிக்கப்பட்டவர் என்றும் வாதிட்டான். ஆனால், கி.பி. 325ல் “நைசியா” (Nicaea) என்னுமிடத்தில் கூடிய கிறிஸ்தவச் சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில் ஏரியஸ்சின் போதனைகள் வேதாகமத்தின் அடிப்ப டையில் பரிசீலிக்கப்பட்டு, அவை பிழையான வேதப்புரட்டு உபதேசம் என்று அறிவிக்கப்பட்டது.[77] உண்மையில், பிழையான போதனை என்று கி.பி. நான்காம் நூற்றாண்டில் அறிவிக்கப்பட்ட இந்த ஏரியஸ் என்பவ னின் போதனைகளையே இன்று யெகோவாவின் சாட்சிகள் பின்பற்று கின்றனர். இத்தவறான போதனையைத் தற்காலத்தில் சில கிறிஸ்தவர் களும் தங்களுடைய அறியாமையினால் உண்மை என்று வாதிடுவது தற்கால கிறிஸ்தவத்தின் பரிதாபமான நிலைமைக்கு ஒரு உதாரண மாக உள்ளது.

கிறிஸ்தவ சபைத் தலைவர்களில் பெரும்பாலானோர் நீதிமொழிகள் 8ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவே ஞானமாக உவமிக்கப்பட்டுள்ளார் என்று தவறாக வியாக்கியானம் செய்தது உண்மை என்றாலும்,[78] நீதிமொழிகள் இத்தகைய உவமானத்துடன் எழுதப்படவில்லை. ஏனெ னில், ஆதிசபைத் தலைவர்கள் நீதிமொழிகள் 8ம் அதிகாரத்தை வியாக்கியானம் செய்தமுறை தவறானதாகவே உள்ளது.[79] நீதிமொழி களில் 8ம் அதிகாரம் மட்டுமல்ல, முதல் 9 அதிகாரங்களிலும் பல

[76] Anonymous, *Aid to Bible Understanding*, p. 918.

[77] L.Berkhof, *The History of Christian Doctrines*, p. 86.

[78] கி.பி.125ல் ஜஸ்டின் மாட்டர் என்னும் சபைப் பிதாவின் காலத்தில் உருவான இத்தவறான விளக்கம் நீண்டகாலமாக கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்ததினால், தற்காலத்திலும் சிலர் இத்தகைய தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர்.

[79] R.P.C.Hanson, “Biblical Exegesis in the Early Church” in *Cambridge Ancient History Volume 1*, p. 440.

இடங்களில் ஞானம் பேசுவது போல எழுதப்பட்டுள்ளது.[81] நீதிமொழிக ளில் இயேசுகிறிஸ்துவே ஞானமாக உவமிக்கப்பட்டுள்ளார் என்றால் முதல் 9 அதிகாரங்களிலும் இயேசுகிறிஸ்துவே பேசுகிறார் என்றே கூறவேண்டும். எனவே, இயேசுகிறிஸ்துவை “தெருக்களிலிருந்து சத்தமி டும் பெண்ணாகவும்” (நீதி.1:20-21), “விவேகம் என்பவருடன் ஏழு தூண்களுள்ள வீட்டில் வாழ்வதாகவும்” விளக்கவேண்டும் (நீதி.8: 12,9:1).[82] உண்மையில் இது அர்த்தமற்ற ஒரு விளக்கமாகும். மேலும், நீதிமொழிகளில் ஞானம் பெண்பால் சொல்லினாலேயே குறிப்பிடப்பட்டுள் ளது.[83] எனவே, இயேசுகிறிஸ்துவையும் ஒரு பெண்ணாகவே கருத வேண்டும். இது அர்த்தமற்ற அபத்தமான ஒரு விளக்கமாகும். உண்மை யில், தேவஞானமே நீதிமொழிகளில் ஒரு நபராக உவமிக்கப்பட்டுள்ளது. அதாவது, தேவன் ஆதியிலிருந்தே ஞானமுடையவராக இருந்தார் என்றே இவ்வசனம் கூறுகிறது.[84] எனவே, இவ்வசனங்களை இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விவரணமாக விளக்குவது தவறாகும்.

“இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர்” என்னும் தங்களுடைய வேதப் புரட்டு உபதேசத்திற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் வசனங்கள், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறவில்லை. கொலோ செயர் 1:15ல் உள்ள “சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்” என்னும் சொற்பிரயோகம், யெகோவாவின் சாட்சிகள் போதிப்பதுபோல சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னர் இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்றல்ல, சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றிற்கும் மேலானவராக அவர் இருப்பதையே அறியத்தருகின்றது. இதேபோல, வெளிப்படுத்தல் 3:14ல் “தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்” என்னும் சொற்பிர யோகம், சகலத்தையும் இயேசுகிறிஸ்துவே ஆரம்பித்தவர், அதாவது அவரே சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்பதை அறியத்தருகிறதே தவிர, யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, இயேசுகிறிஸ்துவே

---

[80] இத்தகைய எழுத்து முறை “உயிருருவக அணி” என்று அழைக்கப்படுகின்றது. அதாவது, உயிரற்ற சடப்பொருட்களையும் பண்புப் பெயரினால் அழைக்கப்ப டுபவற்றையும், உயிருள்ள நபர்களாக வர்ணித்து எழுதுவதற்கும் பேசுவதற்கும் இந்த உவமையணி உபயோகிக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் இது personifi cation என்று அழைக்கப்படுகின்றது.

[81] R.M.Bowman, *Why You Should Believe in the Trinity*, p. 60.

[82] K.T.Aitken, *Proverbs: The Daily Study Bible*, p. 20.

[83] Sid S. Buzzell, *Proverbs: The Bible Knowledge – Old Testament*, p.922.

முதலாவதாகச் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறவில்லை. மேலும், இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்பதில், "ஒரேபேறான" என்பது இயேசுகிறிஸ்துவின் தனித்துவத்தையும், "தேவனுடைய குமாரன்" என்பது, அவர் தேவத்தன்மையுடையவர் என்பதையுமே மூல மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்கள் அறியத்தருகின்றன. ஆனால், நீதிமொழிகள் 8:22 இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விவரணம் அல்ல. எனவே, யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டுகின்ற இவ்வசனங்கள், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்று எவ்விதத்திலும் கூறவில்லை.

# (2). இயேசுகிறிஸ்துவின் நித்தியத்துவத்தை உறுதிப்படுத்தும் வசனங்கள்

இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் வசனங்களில் எதுவுமே அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறவில்லை. இவர்கள், தமது உபதேசத்திற்கு ஏற்றவிதமாக வேதவசனங்களை மாற்றி, அவ்வசனங்களில் இல்லாத அர்த்தங்களை அவற்றுக்குக் கொடுத்து தங்களுடைய வேதப்புரட்டு உபதேசத்தை உருவாக்கியுள்ளனர். உண்மையில், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்றல்ல, அவர் "சிருஷ்டிக்கப்படாதவராக நித்திய காலமாய் எப்போதும் இருக்கும் சிருஷ்டித் தெய்வம்" என்றே வேதாகமம் கூறுகிறது. எனவே, இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்திய தேவன் என்பதை அறியத்தரும் வேதவசனங்களை இப்பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசுகிறிஸ்து நித்தியமானவராக இருப்பதினாலேயே அவருடைய மானிட பிறப்பைப்பற்றிய தீர்க்கதரிசனங்களில் ஒன்றான ஏசாயா 9:6ல் அவர் "நித்திய பிதா" என்று அழைக்கப்பட்டுள்ளார். எனினும், நித்திய பிதா என்பதில் "பிதா" என்னும் சொல் அவர் "நித்தியத்தை உடையவர்" என்னும் அர்த்தத்திலேயே மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், ஒன்றை உடையவன் அதனது பிதாவாகக் கருதப்படுவது

எபிரேயமொழி மரபாகும். உதாரணத்திற்கு வல்லமையானவனை "வல்ல மையின் பிதா" என்றும், செல்வந்தனை "செல்வத்தின் பிதா" என்றும் எபிரேயர்கள் குறிப்பிடுவது வழக்கம்.[84] எனவே, இயேசுகிறிஸ்து நித்தி யத்தை உடையவர், அவர் நித்தியமானவர் என்னும் அர்த்தத்திலேயே அவர் நித்திய பிதா என்று ஏசாயாவில் குறிப்பிடப்பட்டுள்ளார்.[85] இதனால், பழைய ஏற்பாட்டின் அரமேய[86] மொழிபெயர்ப்பில் நித்திய பிதா என்பது, "எப்போதும் ஜீவிப்பவர்" என்று விளக்கமாக மொழிபெயர்க்கப்பட் டுள்ளது.[87] உண்மையில், இயேசுகிறிஸ்து தேவனாக இருப்பதனால், அவர் நித்தியமானவராக இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.[88]

இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய மீகாவின் தீர்க்கதரிசனமும் அவர் நித்தியமானவர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்பதை முன்னறிவித்த மீகா, "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" என்று குறிப்பிட்டுள்ளார் (மீகா.5:2). மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கும் நீண்ட காலத்திற்கும் முன்பே இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவராக இருந்துள்ளதையே மீகா இவ்வாறு எழுதியுள்ளதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[89] ஆனால், "அநாதி நாட்கள்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "நித்திய நாட்கள்" என்னும் அர்த்தமுடையது.[90] எனவே, இது இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய தன்மையின் விவரணமாகவே உள்ளது.[91] ஏனெனில், இவ்வசனத் தில் "அநாதி நாட்கள்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லே ஆபகூக் 1:12ல் தேவனுடைய நித்திய தன்மையைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது.[92] உபாகமம் 33:27ல் இச்சொல்

---

84 A.Barnes, *Notes on the Old Testament: Isaiah*, p. 193; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 947.

85 E.W.Hengstenberg, *Christology of the Old Testament*, p. 196.

86 யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பின் பின்னர் பேசிய மொழி இதுவாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இதுவே யூதர்களின் பேச்சு மொழியாக இருந்தது.

87 J.F.Stenning, *The Targum of Isaiah*, p. 32.

88 J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary – OT*, p. 1053.

89 Anonymous, *Aid to Bible Understanding*, p. 918.

90 J.M.Boice, *The Minor Prophets Volume 2*, p. 37.

91 E.W.Hengstenberg, *Christology of the Old Testament,* pp. 586-595.

92 மூலமொழியில் "கர்த்தாவே, நீர் நித்தியத்திலிருந்து இருக்கின்றீர் அல்லவா? என்று இவ்வசனம் உள்ளது (O LORD, are you not from everlasting?)

தேவன் நித்தியமானவர் என்பதை அறியத்தருகின்றது.[93] எனவே, இதே அர்த்தத்துடனேயே இயேசுகிறிஸ்துவுக்கும் இச்சொல் மீகாவி னால் உபயோகிக்கப்பட்டுள்ளது.[94] மேலும், இவ்வசனத்தில் "பூர்வம்" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் "அளவிட முடியாத காலத்தைக் குறிப்பிடும் சொல்லாகும்."[95] எனவே, மீகா உபயோகித்துள்ள இரண்டு சொற்களையும் கருத்திற்கொள்ளும்போது, இயேசுகிறிஸ்து நித்தியமானவர், அவர் நித்தியத்திலிருந்தே இருப்பவர் என்பதையே இவ்வசனம் அறியத்தருகிறது என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.[96]

புதிய ஏற்பாட்டில், எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இயேசுகிறிஸ் துவின் "சிங்காசனம் என்றைக்கும் இருப்பதாகவும்" (1:8), அவர் எப்போ தும் "நிலைத்திருப்பவர்" (1:11) "மாறாதவர்," "அவரது ஆண்டுகள் முடிந்து போவதில்லை"(1:12) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனங் களில் சங்கீதம் 45:6-7, 102:25-27, 110:1 என்னும் வசனங்களில் தேவனைப் பற்றி சொல்லப்பட்டவைகளே இயேசுகிறிஸ்துவைப்பற்றி விளக்குவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. எனவே, இயேசுகிறிஸ்து வும் பிதாவாகிய தேவனைப் போலவே ஆரம்பமும் முடிவும் அற்ற நித்தியராக இருக்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியா துள்ளது. மேலும், கொலோசெயர் 1:17ல் "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்" என்னும் வாக்கியம் "மூலமொழியில் நிகழ்காலத்தில் இருப்பதும், இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்ட சகலவற்றிற்கும் முன்பே நித்திய காலமாய் எப்பொழுதும் இருந்துள்ளதை உறுதிப்படுத்து கிறது."[97]

இயேசுகிறிஸ்து நித்தியமானவர் என்பதை அவருடைய வார்த்தைகளும் அறியத்தருகின்றன. வெளிப்படுத்தல் 1:18ல், தாம் "சதாகாலங்களிலும் உயிரோடிருப்பதாக" அவர் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின்

[93] T.E.McComiskey, *Micah; The Expositor's Bible Commentary Volume 7*, p. 427.
[94] R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovah's Witnesses*, p. 138.
[95] J.A.Martin, *Micah: The Bible Knowledge Commentary: Old Testament*, p. 1486.
[96] J.R.Riggs, *Micah: Bible Study Commentary*, p. 59; W. MacDonald, *Believer's Bible Commentary*, p. 1134.
[97] R.Rhodes, *Christ Before the Manger: The Life and Times of the Preincarnate Christ*, p. 71.

யோவான் 1:1ல் ஆதியிலே என்னும் சொல், மூலமொழியின்படி இயேசுகிறிஸ்து உலக சிருஷ்டிப்புக்கும் முற்பட்டவராகவும், சிருஷ்டிக்கப்படாத நித்தியமானவராகவும் இருப்பதை அறியத்தருகின்றது

இக்கூற்று, "அவர் நித்தியகாலமாக வாழ்கிறவராக அதாவது, எப்பொழுதும் ஜீவனுள்ளவராக இருப்பதை அறியத்தருகிறது."[98] மேலும், தம்மைச் சாதாரண மனிதனாகக் கருதிய யூதரிடம், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" (யோவா.8:58) என்று கூறிய இயேசு கிறிஸ்து, "உலகம் உருவாகுவதற்கும் முன்பே தாம் தேவனோடு இருந்துள்ளதையும்" அறியத்தந்துள்ளார் (யோவா.17:5,24). இதை யோவான் தன்னுடைய சுவிசேஷத்தின் முதல் வசனத்தில் (யோவா.1:1) சிறப்பான முறையில் விளக்கியுள்ளார். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ் துவை "வார்த்தை" என்று குறிப்பிடும் யோவான்,[99] அவர் ஆதியிலே தேவனோடு இருந்ததாக எழுதியுள்ளார். இவ்வசனத்திலுள்ள "ஆதியிலே" என்னும் சொல்லை சிலர் ஆதியாகமத்தின் ஆரம்ப வசனத்துடன் தொடர்புபடுத்துகின்ற போதிலும்,[100] இரண்டினது அர்த்தமும் ஒன்றல்ல. ஆதியாகமத்தில் "ஆதியிலே" என்னும் சொல், குறிப்பிட்ட காலத்தின் ஆரம்பத்தை (அதாவது உலகின் ஆரம்பத்தைக்) குறிக்கும் சொல்லாய் உள்ளது. ஆனால், யோவானுடைய சுவிசேஷத்தில், இச்சொல் "காலத்தால் வரையறை செய்ய முடியாத நித்தியத்தைக் குறிக்கின்றது."[101] எனவே, இது உலக ஆரம்பத்திற்கும் முற்பட்ட காலத்தைப்பற்றிய குறிப்பாக உள்ளது.[102] மேலும், "ஆதியிலே வார்த்தை இருந்தது" என்னும் வாக்கியத்தில் "இருந்தது" என்னும்

---

98 R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 111; P.Patterson, *Revelation: The New Testament Commentary*, p. 69; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 47.

99 யோவான் 1:1ஐ 1:14உடன் ஒப்பிடும்போது, அவர் இயேசுகிறிஸ்துவையே வார்த்தை என்று குறிப்பிட்டுள்ளார் என்பதை அறிந்திடலாம்.

100 J.R.Michaels, *John: The New International Commentary on the NT*, p. 46.

101 M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, p. 28.

102 R.E.Brown, *John: Anchor Bible Commentary*, p. 4; G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, p. 10.

சொல் கிரேக்கமொழி இலக்கணத்தின்படி,[103] "ஆரம்பத்திற்கும் அப்பால் காலவரையறை எதுவுமின்றி"[104] அதாவது, ஆரம்பம் எதுவுமின்றி "இயேசுகிறிஸ்து தொடர்ச்சியாக எப்போதும் இருந்துள்ளதையே"[105] அறியத்தருகின்றது. உண்மையில், உலக சிருஷ்டிப்புக்கும் முற்பட்டவராகவும், சிருஷ்டிக்கப்படாதவராகவும் இயேசுகிறிஸ்து இருப்பதையே இச்சொல் சுட்டிக்காட்டுகிறது.[106]

இயேசுகிறிஸ்துவின் கூற்றுகளில், "நான்," "நானே" என்னும் அவரது சொற்பிரயோகமும் அவர் நித்தியமானவர் என்பதை அறியத்தருகின்றது. ஏனெனில், "நான்" என்னும் சொல் சாதாரணமாக ஒருவர் தன்னைப் பற்றிக் கூறும்போது உபயோகிக்கும் வார்த்தையாக இருந்தாலும், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலும், புதிய ஏற்பாட்டிலும் இச்சொல் தேவனால் உபயோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சிறப்பான முறையில்[107] குறிப்பிடப்பட்டுள்ளது.[108] இயேசுகிறிஸ்துவும் "நான்" "நானே" என்னும் சொற்களை உபயோகித்தபோது சாதாரணமான முறையில் அல்ல, சிறப்பான முறையில், அதாவது, "தெய்வம் பேசுவது போலவே இச்சொல்லை உச்சரித்துள்ளார்."[109] இதை சாதாரண மக்கள் விளங்கிக்கொள்ளாத போதிலும், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் பரிச்சயமாயிருந்தவர்கள் இதை சரியானவிதத்தில் புரிந்து கொண்டனர்.[110] ஏனென்றால், பழைய ஏற்பாட்டில் தேவனுடைய கூற்றுகளில் வரும் "நான்" "நானே" என்னும் சொற்கள், கிரேக்க மொழிபெயர்ப்பில் என்ன சொற்களினால் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அதே சொற்களையே இயேசுகிறிஸ்துவும் உபயோகித்துள்ளார். அதாவது, இயேசுகிறிஸ்துவின் கூற்றுகள் கிரேக்க மொழியில் எழுதப்படும்போது "நான்"

[103] கிரேக்கத்தில் durative imperfect tenseல் உள்ளது.

[104] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 27.

[105] P.Enns, *The Moody Hand Book of Theology*, pp. 225-226.

[106] C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 62; H.Ridderbos, *The Gospel According to John*, p. 25; A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 25; D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 114; G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 102.

[107] அதாவது emphatic pronoun ஆக கிரேக்க மொழியில் உள்ளது

[108] L.Morris, *New Testament Theology*, p.235.

[119] L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, p. 107.

[110] J.H.Bernard, *A Critical and Exegetical Commentary on the Gospel According to John Volume I*, pp. cxviii-cxix.

"நானே" என்பது "ஈகோ-இய்மி" (*ego-eimi*) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் 48 தடவைகள் உள்ள போதிலும், இது ஒன்றில் இயேசுகிறிஸ்துவினால் பேசப்பட்ட வார்த்தை யாக அல்லது தேவனால் பேசப்பட்ட வார்த்தையாக மாத்திரமே உள்ளது. இச்சொல்லை அக்காலத்தில் மனிதர்கள் எவரும் உபயோ கிக்கவில்லை. இதனால்தான், இச்சொல்லின் மூலம் "பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவனாக இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத் தியுள்ளார்."[111] ஏனென்றால், பழைய ஏற்பாட்டில் "நான்" அல்லது "நானே" என்பது, எப்போதும் இருக்கும் தேவனுடைய பெயராகும். அதாவது, இதுவே யாத்திராகமம் 3:14ல் குறிப்பிடப்பட்டுள்ள யாவே என்னும் தேவனுடைய பெயர். தமிழில் "இருக்கிறவராகவே இருக்கி றேன்" என்றும் ஆங்கிலத்தில் I AM என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள் ளது.[112] ஆனால், இப்பெயர் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெ யர்ப்பில் எவ்விதமாக குறிப்பிடப்பட்டுள்ளதோ, அவ்விதமாகவே இயேசு கிறிஸ்து இப்பெயரைப் புதிய ஏற்பாட்டில் தமக்கு உபயோகித்துள்ளார். உதாரணத்திற்கு யோவான் 8:58ல் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்னும் கூற்றில் "நான் இருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இதன் அர்த்தம் "எப்போதும் இருக்கும் தெய்வம்" என்பதாகும். எனவே தாம் எப்போதும் இருக்கும் தேவன் என்பதை இயேசுகிறிஸ்து இதன் மூலம் அறியத்தந்துள்ளார்.[113]

யாத்திராகமம் 3:14ல் இருக்கிறவராகவே இருக்கிறேன்
என்று தம்மை வெளிப்படுத்திய தேவனாக
புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து தம்மை
வெளிப்படுத்தியுள்ளார்.

எப்போதும் இருக்கும் நித்திய தேவனான இயேசுகிறிஸ்து சகலவற் றையும் படைத்த சிருஷ்டிகராகவும் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. எபிரெயர் 1:8-12ல் இயேசுகிறிஸ்து நித்தியமானவர், அவர் சிருஷ்டிகர், சகல சிருஷ்டிகளுக்கும் மேலானவர் என்னும் உண்மைகளும் சுட்டிக்

111 G.E.Ladd, *A Theology of the New Testament*, p. 251.
112 S.Zodhiates, *The Hebrew-Greek Key Study Bible*, p. 80.
113 L.Morris, *Hebrews: Expositor's Bible Commentary Vol.12*, p. 19.

காட்டப்பட்டுள்ளன. இவ்வசனங்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விவரணமாக இருப்பதனால்தான், இவை "குமாரனை நோக்கி" சொல்லப்படும் கூற்றுகளாக உள்ளன. அதாவது, 8ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து "தேவனே" என்று அழைக்கப்பட்டுள்ளார். உண்மையில், பிதாவாகிய தேவனே இயேசுகிறிஸ்துவைத் தேவனே என்று இவ்வசனத்தில் அழைத்துள்ளார்.[114] 10ம் வசனத்தில் "கர்த்தர்" என்னும் சொல் இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், "அவரது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" (1:8), அவர் "நிலைத்திருப்பவர்" (1:11), "மாறாதவர்" (1:12), "அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை" (1:12) என்றும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனாகிய இயேசுகிறிஸ்து எப்போதும் இருப்பவர் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்கின்றோம். சிருஷ்டிக்கப்படாமல் எப்போதும் இருக்கும் இயேசுகிறிஸ்துவே சகலவற்றையும் சிருஷ்டித்தவர் என்பதனால், அவர் "ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினார்" என்றும், "வானங்கள் அவருடைய "கரத்தின் கிரியைகளாயிருக்கிறது" என்றும் 10ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்து சகலவற்றையும் சிருஷ்டித்தவர் என்பதை அறியத்தரும் புதிய ஏற்பாட்டு வசனங்களில் "மூலமாய்" என்னும் சொல் சேர்க்கப்பட்டுள்ளதினால் இயேசுகிறிஸ்து சிருஷ்டிகர் அல்ல என்றும், தேவனே சகலவற்றையும் "இயேசுகிறிஸ்துவின் மூலமாகச் சிருஷ்டித்துள்ளார்" என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[115] உண்மையில், யோவான் 1:3, 1கொரிந்தியர் 8:6, கொலோசெயர் 1:16, எபிரெயர் 1:2 என்னும் வசனங்களில் சகலமும் இயேசுகிறிஸ்துவின் "மூலமாய்" சிருஷ்டிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதை ஆதாரமாகக் கொண்டு, இயேசுகிறிஸ்து தேவனுடைய சிருஷ்டிப்பின் ஊடகமாகவே செயல்பட்டார் என்று கூறமுடியாது. ஏனெனில், வேதாகமத்தில் பிதாவாகிய தேவன் சிருஷ்டிகராயிருப்பதைப் பற்றி கூறும்போதும் "மூலமாய்" என்னும் சொல் ரோமர் 11:36, எபிரெயர் 2:10 போன்ற வசனங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது.[116] எனவே,


---

[114] D.A.Carson, *Jesus the Son of God*, p. 55.

[115] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 7.

[116] எபிரெயர் 2:10ல் "தம்மாலேயும்" எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் "தம் மூலமாகவும்" என்றே உள்ளது. ஆங்கில வேதாகமத்

இதை ஆதாரமாகக்கொண்டு, தேவனின் ஊடாகவே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன என்றும், இதனால் அவர் சிருஷ்டிகர் அல்ல என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறவேண்டும். உண்மையில், "மூலமாய்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், "இரண்டாந்தர தாழ்வான நிலையைக் குறிப்பிடும் சொல் அல்ல."[117] பிரதான தெய்வத்துக்கு உலகத்தை சிருஷ்டிப்பதற்கு இன்னுமொரு தாழ்வான தேவன் தேவைப்பட்டார் என்பது புராணக் கதைகளின் கற்பனையாகும்.[118] இது வேதாகமத்தின் போதனை அல்ல. ஏசாயா 44:24ல் "நான் ஒருவராய் வானங்களை விரித்து நானே பூமியைப் பரப்பினவர்" என்று தேவன் கூறியுள்ளமை, தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தம் சிருஷ்டிப்புச் செயலை செய்தார் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் கருத்தை முரண்படுத்துவதாய் உள்ளது.[119] மேலும், யோவான் 1:3ல் "உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் (இயேசுகிறிஸ்து) உண்டாகவில்லை" என்னும் வாக்கியம், தேவனைப் போலவே இயேசுகிறிஸ்துவும் சகலவற்றையும் சிருஷ்டித்துள்ளதை அறியத்தருகிறது.[120] தேவனுடைய சிருஷ்டிப்புச் செயலில் இயேசுகிறிஸ்து தேவனைச் சார்ந்திருப்பவராகவோ, தேவனின் ஊடகமாகவோ இருக்கவில்லை. சிருஷ்டிப்பில் இயேசுகிறிஸ்துவும் தேவனும் சமமான பங்கு வகித்துள்ளனர் என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் உண்மையாகும்.[121] அதாவது, இருவரும் சேர்ந்தே சகலத்தையும் சிருஷ்டித்துள்ளனர். இதை அறியத்தரும் விதத்திலேயே மூலமாய் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து சிருஷ்டிகராக இருப்பதனால், அவர் தேவனாக இருக்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.



தில் for whom and through whom everything exists என்று இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (NIV). யெகோவாவின் சாட்சிகள் ரோமர் 11:36ல் "அவர் மூலமாய்" என்பதை "அவரால்" என்று மாற்றியுள்ளனர்.

117 R.M.Bowman, *Why You Should Believe in the Trinity*, p. 69.

118 R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovah's Witnesses*, p. 78.

119 L.Berkhof, *Systematic Theology*, p. 129.


120 R.C.Sproul, *John: St.Andrew's Expositional Commentary*, p. 4.

121 N.Geisler, *Christian Apologetics*, p. 338.

## ஆறாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்று யெகோவாவின் சாட்சிகள் போதிப்பதனால், அவர் பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்றும் கூறுகின்றனர். இதனால் இவர்கள், இயேசுகிறிஸ்து தம்முடைய பரலோக மகிமையைத் துறந்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் கூறிய சில விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, தங்களுடைய வேதப்புரட்டு உபதேசத்தை உருவாக்கியுள்ளனர். ஆனால், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தம்முடைய நிலையைப்பற்றி கூறிய விஷயங்கள், அவர் மனிதனாக இருந்த காலத்திற்கு மாத்திரமே பொருத்தமானவைகளாக உள்ளன. இவற்றைத் தற்போதைய அவருடைய மகிமையடைந்த நிலைக்கு உபயோகிக்க முடியாது. இதனால், இத்தகைய வசனங்களான யோவான் 14:28, மாற்கு 13:32, மத்தேயு 19:17, 27:46, யோவான் 20:17, 1கொரிந்தியர் 11:3, 15:28, என்பவற்றை உபயோகித்து இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்று யெகோவாவின் சாட்சிகள் போதிப்பது தவறாகும். மேலும், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் தேவனாகவே இருந்தார் என்பதை கொலோசெயர் 2:9, 1தீமோத்தேயு 3:16, யோவான் 10:30 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. இவ்வத்தியாயத்தில், யெகோவாவின் சாட்சிகள் தவறாக உபயோகிக்கும் வசனங்களும், இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு சமமான தேவன் என்பதை அறியத்தரும் வசனங்களும், இயேசுகிறிஸ்து தேவன் என்பதை நேரடியாகக் குறிப்பிடும் யோவான் 1:1, 1:14, பிலிப்பியர் 2:6, தீத்து 2:13, ரோமர் 9:5 போன்ற வசனங்களும் விளக்கப்பட்டுள்ளன.

# ஆறாம் அத்தியாயம்



# இயேசு கிறிஸ்து

## தேவனைவிடத் தாழ்வானவரா? அல்லது தேவனாய் இருப்பவரா?

"இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர்" என்று மாத்திரமல்ல, அவர் "பிதாவாகிய தேவனைவிட தாழ்வானவர்" என்றும் யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்றனர். இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை முழுமையாக மறுதலிக்கும் இவ்வுபதேசம், வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் வேதப்புரட்டாகவே உள்ளது. யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவை சர்வவல்லமையுள்ள தேவனாக ஏற்றுக்கொள்ளாத தினால், நாம் ஏற்கனவே 3ம் அத்தியாயத்தில் பார்த்தபடி, வேதாகமத் தில் அவரைத் தேவனாகக் காண்பிக்கும் வசனங்கள் அனைத்தையும் வித்தியாசமான முறையில் தவறாக மொழிபெயர்த்துள்ளனர்.[1] இவ்வத்தி யாயத்தில், இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்று போதிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் தவறாக வியாக்கியா

[1] பக்கங்கள் 75 முதல் 80 வரை.

னம் செய்யும் வேதவசனங்கள் ஆராயப்பட்டுள்ளதோடு, இயேசுகிறிஸ்துவை தனித்துவமான தேவனாய் வெளிப்படுத்தும் வேத வசனங்கள் விளக்கப்பட்டுள்ளன.

## (1). தவறாக வியாக்கியானம் செய்யப்படும் வசனங்கள்

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்னும் வேதப்புரட்டு உபதேசத்தைப் போதிப்பதற்கு யோவான் 14:28, மாற்கு 13:32, மத்தேயு 19:17, 27:46, யோவான் 20:17, 1கொரிந்தியர் 11:3, 15:28 என்னும் வசனங்களை யெகோவாவின் சாட்சிகள் உபயோகிக் கின்றனர். எனினும், இவர்கள் இவ்வசனங்கள் இடம்பெறும் வேதப் பகுதியின் சந்தர்ப்ப அமைப்பைக் கருத்திற் கொள்ளாதவர்களாக இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்று போதிப்பதனால், இவர்களுடைய உபதேசம் தவறானதாகவே உள்ளது. இதனால், இவர்கள் தங்களுடைய உபதேசத்திற்கு ஆதாரமாகக் காண்பிக்கும் வேதவசனங்கள் உண்மையிலேயே நமக்கு அறியத்தரும் சத்தியம் யாதென்பதை இப்பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம்.

### (அ). என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் (யோவான்.14:28)

இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்று போதிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் உபயோகிக்கும் முக்கியமான வசனம், யோவான் 14:28 ஆகும். இவ்வசனத்தில், “என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்” என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தை ஆதாரமாகக்கொண்டு “இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர்”[2] என்றும், இதனால் “பிதாவைப் போல அவரால் தேவனாக இருக்க முடியாது”[3] என்றும் வாதிடுகின்றனர். இயேசுகிறிஸ்துவே தம்மைவிடப் பிதா பெரியவர் என்று கூறியதினால், அவர் உண்மையிலேயே பிதாவைவிடத் தாழ்வா

[2] Anonymous, *Let God be True*, p. 110. [3] *Reasoning from the Scriptures*, p. 410.

னவர் என்பது யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கமாயுள்ளது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல, இயேசுகிறிஸ்து தேவனை விடத் தாழ்வானவர் என்றோ, அல்லது அவர் தேவத் தன்மை இல்லாத வர் என்றோ யோவான் 14:28 கூறவில்லை. ஏனென்றால், இவ்வசனத்தில் "இயேசுகிறிஸ்து தம்முடைய தன்மையைப் பற்றிக் குறிப்பிடவில்லை."[4] அதாவது, பிதாவைவிடத் தம்முடைய தேவத்தன்மை குறைவானது என்று அவர் கூறவில்லை. ஏனெனில், "அவர் தம்முடைய பூலோக வாழ்வின் நிலையைப்பற்றியே இவ்வசனத்தில் விளக்கியுள்ளார்."[5]

யோவான் 14:28லுள்ள இயேசுகிறிஸ்துவின் கூற்றைச் சரியானவிதத்தில் விளங்கிக்கொள்வதற்கு, அவர் எச்சந்தர்ப்பத்தில் இவ்வசனத்திலுள்ள விஷயத்தைக் கூறினார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம்.[6] ஏனென்றால், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தபோது தம்மைப்பற்றிச் சொல்லிய சில விஷயங்கள், அவரு டைய மகிமையடைந்த நிலைக்குப் பொருத்தமற்றவைகளாகவே உள் ளன. உண்மையில், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பரலோகத்தின் மேன்மையான நிலையில் அல்ல, பூமியில் தாழ்வான நிலையிலேயே இருந்தார். இவ்வாறு அவர் தாழ்வான நிலை யில் மனிதனாக இவ்வுலகில் வாழும்போதே "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று கூறினார். ஏனெனில், "அவர் மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வான நிலையிலேயே இருந்தார்."[7] அதாவது, அச்சமயம் இயேசுகிறிஸ்து பூமியில் இருந்தார். ஆனால் பிதாவோ பரலோகத்தில் இருந்தார். இத னால், "பூமியிலிருந்த இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருக்கும் தம்மு

[4] R.C.Sproul, *John: St.Andrew's Expositional Commentary*, p. 281.

[5] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, pp. 148-149.

[6] இக்கூற்றை மாத்திரமல்ல வேதத்தின் எந்த ஒரு வசனத்தையும் சரியான விதத்தில் விளங்கிக்கொள்வதற்கு அதன் சந்தர்ப்ப அமைப்பை அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் வேதவசனங்கள் முதல்தடவையாக பேசப்பட்டபோதும், எழுதப்பட்டபோதும், அவை பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சந்தர்ப்ப சூழலைக் கருத்திற்கொண்டே சொல்லப்பட்டுள்ளது. இன்று பலர் இதைக் கருத்திற்கொள்ளாது வேதவசனங்களை வியாயக்கியானம் செய்வதனால் பலவிதமான வேதப்புரட்டு உபதேசங்கள் உருவாகியுள்ளன. யெகோவாவின் சாட்சிகள் இதற்குச் சிறந்த உதாரணமாய் உள்ளனர்.

[7] J.M.Boice, *John 13-17: An Expositional Commentary*, p. 1156; W.MacDonald, *Believer's Bible Commentary*, pp. 1548-1549.

டைய பிதா பெரியவராயிருக்கிறார் என்று இருவருடைய வாழ்விடத்தின் நிலையையும் கருத்திற்கொண்டே இவ்வாறு கூறியுள்ளார்."[8] உண்மையில், "இயேசுகிறிஸ்து மனிதனாக பூமிக்கு வந்ததினால் பிதாவைவிடத் தாழ்வான நிலைக்கு வந்தார். இதனாலேயே பிதா தம்மைவிட பெரியவராயிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்."[9] இதனால், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று, "அவர் மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்திற்கு மாத்திரமே பொருத்தமானது."[10] ஏனெனில், "பிதா மனிதனாக இவ்வுலகத்திற்கு வராததினால், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் அவரைவிட பெரியவராய் இருந்தார்."[11]

இயேசுகிறிஸ்து மனிதனாக பூமிக்கு வந்ததினால்
பிதாவைவிடத் தாழ்வான நிலைக்கு வந்தார்.
இதனாலேயே பிதா தம்மைவிட பெரியவராயிருப்பதாக
அவர் இப்பூமியில் வாழ்ந்தபோது குறிப்பிட்டுள்ளார்.

"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றை நாம் சரியான விதத்தில் புரிந்துகொள்வதற்கு, "பெரியவர்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லின் அர்த்தத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில், "பெரியது" என்பதையும் "சிறந்தது" என்பதையும் வேறுபடுத்திக்காட்ட வித்தியாசமான இரண்டு சொற்கள் உள்ளன.[12] யோவான் 14:28ல் "சிறந்தது" என்று அர்த்தம் தரும் சொல்லை இயேசுகிறிஸ்து உபயோகித்திருப்பாரானால், அவரைவிட பிதா உயர்வான தன்மையுடையவர் என்றே நாம் கருதவேண்டும். ஆனால், இயேசுகிறிஸ்து உபயோகித்த "பெரியவர்" என்று அர்த்தந் தரும் சொல், "தேவத்தன்மையின் மேன்மையைச் சுட்டிக்காட்டும் சொல் அல்ல. இது பிதாவின் உயர்வான வாழ்விடத்தையே குறிக்கின்றது."[13]

[8] A.W.Pink, *Exposition of the Gospel of John*, pp. 281-282.
[9] L.Morris, *John: The New International Commentary on the NT*, p. 584.
[10] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*, p. 1020.
[11] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1548.
[12] கிரேக்கத்தில் "மெய்ஸ்ஸோன்" (*meizon*) "க்ரெய்ட்டொன்" (*kreitton*) என்னும் இரு சொற்களும் "பெரியது" என்றும் "சிறந்தது" என்றும் அர்த்தம் கொண்டவை.
[13] R.Rhodes, *Reasoning from the Scriptures with the JW*, pp. 146-147.

அதாவது, "பரலோகத்திலிருக்கும் பிதாவின் உயர்வான நிலையையே இச்சொல் சுட்டிக்காட்டுகிறது."[14] எனவே, யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லின் இவ்வர்த்தத்தைக் கருத்திற்கொள்ளாதவர்களாக, இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்றும், தேவத்தன்மை அற்றவர் என்றும் தர்க்கிப்பது மாபெரும் தவறாகும். தற்காலத்தில் இங்கிலாந்தில் வாழ் கின்ற ஒருவர், மகாராணி என்னைவிட பெரியவர் என்று கூறினால், மகாராணி மானிட பிறவியல்ல என்னும் அர்த்தத்தில் அல்ல, தன்னு டைய சமுதாய அந்தஸ்தைவிட மகாராணியின் அந்தஸ்து உயர்வா னது என்னும் அர்த்தமுடையதாகவே அவருடைய கூற்று இருக்கும். இதைப்போலவே, "பிதா என்னிலும் பெரியவர் என்னும் இயேசுகிறிஸ்து வின் கூற்றும், அவர் மனிதனாக இருந்த காலத்தில் அவரைவிட உயர்வான நிலையில் பிதாவாகிய தேவன் இருந்துள்ளதையே அறியத் தருகிறது."[15]

உண்மையில், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த போது "பிதாவுக்குச் சமமாக இருக்கும் நிலையை விட்டுத்" தாழ்வான நிலைக்கு வந்தார். இதைப்பற்றி பிலிப்பியர் 2:6-7ல், "அவர் தேவனு டைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாக இருப்பதைக் கொள்ளை யாடின பொருளாய் எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" என்று குறிப்பிடப்பட்டுள் ளது. இவ்வசனத்தில், "கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வாக்கியம் மூலமொழியில், "பலவந்தமாய் பற்றிப் பிடித்துக் கொண்டிராமல்" என்னும் அர்த்தமுடை யது.[16] அதாவது, "இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வர

[14] J.White, *Forgotten Trinity*, p. 90.

[15] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 507.

[16] உண்மையில், "கொள்ளையாடின பொருள்" என்னும் சொல் தவறான அர்த்தத் தையே தருகிறது. ஏனெனில், இயேசுகிறிஸ்து தமக்குச் சொந்தமில்லாததை வைத்துக்கொண்டிருக்கவில்லை. அதாவது, அவர் தேவத்தன்மையுடையவராக இருப்பதனால் தேவத்துவம் அவருடையது. அவர் இதைக் கொள்ளை அடிக் கவில்லை. எனவே, ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில வேதாகமத்தில் உபயோகிக் கப்பட்டுள்ள robbery என்னும் சொல்லும், இதைத் தழுவி மொழிபெயர்க்கப்பட் டுள்ள தமிழ் வேதாகமத்திலுள்ள "கொள்ளையாடின பொருள்" என்னும் சொல்லும் இவ்வசனத்திற்குப் பொருத்தமற்றதாகவே உள்ளது. மூலமொழியில் உபயோகிக் கப்பட்டுள்ள சொல் "பலவந்தமாய் பிடித்தல்" அல்லது "பற்றிப்பிடித்தல்" என்

விரும்பாமல், தேவனுக்குச் சமமாயிருக்கும் நிலையைப் பலவந்தமாய் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை என்பதே இவ்வசனத்தின் அர்த்த மாகும்."[17] இதனால்தான், அவர் மகிமை பொருந்திய பரலோகத்தை விட்டுப் பாவமனிதர் வாழும் பூமிக்கு வந்தார். இயேசுகிறிஸ்து மனித னாக இவ்வுலகத்திற்கு வந்தபோது தேவனுக்குச் சமமாயிருக்கும் நிலையைவிட்டு வந்ததினால், அவர் பூமியிலிருக்கும் போது பிதாவை விடத் தாழ்வான நிலையிலேயே இருந்தார். அச்சமயம் அவர் பரலோகத் தில் இருக்கும் தேவதூதரைவிடவும் தாழ்வான நிலையில் இருந்ததாக எபிரெயர் 2:9 கூறுகிறது.[18] இதனாலேயே இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், பரலோகத்திலிருக்கும் பிதா தம்மை விட பெரியவராய் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இயேசுகிறிஸ்து பிதாவுக்குச் சமமாக இருக்கும் நிலையை விட்டுத் தாழ்வான நிலையிலுள்ள பூமிக்கு வந்தாலும், அவர் தமது தேவத் தன்மையை துறந்துவிட்டு வரவில்லை. இதனால், மனிதனாக அவர் இவ்வுலகில் வாழ்ந்தபோதும் தேவனாகவே இருந்தார்.

இயேசுகிறிஸ்து பிதாவுக்குச் சமமாக இருக்கும் நிலையை விட்டுத் தாழ்வான நிலையிலுள்ள பூமிக்கு வந்தாலும், அவர் தமது தேவத் தன்மையை துறந்துவிட்டு வரவில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், பிலிப்பியர் 2:6ல் "தேவனுடைய ரூபம்" என்பதில் "ரூபம்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்

---

னும் அர்த்தமுடையது. இதனால்தான் திருவிவிலியத்தில், இவ்வசனம் "கடவு ளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்கவேண்டிய தொன்றாகக் கருதவில்லை" என்றும், இலகு தமிழ் மொழிபெயர்ப்பில், "இறைவ னுடன் சமமாய் இருக்கும் சிறப்புரிமையை விடாது பற்றிப்பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று எண்ணவில்லை" என்றும், ராஜரீகம் மொழிபெயர்ப்பில், "கடவு ளுக்கு சமமாயிருப்பதை அவர் பற்றிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு நிலையாகக் கருதவில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

[17] M.Silva, *Philippians: Baker Exegetical Commentary on the NT*, p. 99.

[18] எபிரெயர் 2:9ல், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மர ணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" என்று வாசிக்கின்றோம்.

டுள்ள சொல்,[19] உருவத்தை அல்ல, "மாற்றமடையாத உட்புறத் தன்மையைக்" குறிப்பிடும் சொல்லாகும்.[20] எனவே, "தேவனுடைய ரூபம்" என்பது "அவரது உள்ளான தன்மையையும் தெய்வீகக் குணவி யல்புகள் அனைத்தையும் குறிக்கின்றது."[21] இதனால்தான், புதிய ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இவ்வாக்கியம் "அவர் தேவத்தன்மை உடையவராக இருந்தார்" என்னும் அர்த்தத்தில், being in very nature of God என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[22] புதிய தமிழ் வேதாகமங் களும் இத்தகைய அர்த்தத்திலேயே இவ்வாக்கியத்தை மொழிபெயர்த் துள்ளன.[23] மேலும், இவ்வசனத்தில் "ரூபமாயிருந்தும்" என்னும் சொல் மூலமொழியின் இலக்கணத்தின்படி எப்பொழுதும் தொடர்ந்திருக்கும் நிலையிலேயே உள்ளது.[24] இதனால், இயேசுகிறிஸ்து எப்பொழுதும் அதாவது, மனிதனாக அவர் இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பும், மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்திலும் தேவத்தன்மை உடையவராக இருந்ததையே இவ்வசனம் அறியத்தருகிறது.[25] உண் மையில், இயேசுகிறிஸ்து தேவத்தன்மையை அல்ல, பரலோக மகிமை யைத் துறந்தவராகவே மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்தார். இதனால் தான், அவர் இவ்வுலகைவிட்டு மறுபடியுமாகப் பிதாவிடம் செல்வதற்கு சிறிது காலத்திற்கு முன்னர் பிதாவிடம் ஜெபித்தபோது, "பிதாவே

[19] மோர்.:.பே (*morphe*) என்னும் கிரேக்கச் சொல்.

[20] J.B.Lightfoot, *St.Paul's Epistle to the Philippians*, pp. 110,127-133.

[21] G.F.Hawthorne, *Philippians: Word Biblical Commentary*, p. 84.

[22] தமிழ் வேதாகமத்தில் "ரூபம்" என்னும் சொல், ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில வேதாகமத்தைத் தழுவிய மொழிபெயர்ப்பாயுள்ளது. உண்மையில், இவ்வாங்கில மொழிபெயர்ப்பிலுள்ள form என்னும் சொல் "மோர்.:.பி" (*morphe*) என்னும் கிரேக்கச் சொல்லின் அர்த்தத்தைச் சரியாக அறியத்தருவதாயில்லை. உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் வெளிப்புறத் தோற்றத்தையோ உருவத் தையோ குறிப்பிடும் சொல் அல்ல. இது உட்புறத் தன்மையையே குறிக்கின்றது. இதனால்தான் புதிய ஆங்கில வேதாகமங்களில், தேவனுடைய ரூபம் என்பதை தேவத்தன்மை என்று கிரேக்கச் சொல்லின் சரியான அர்த்தம் வெளிப்படும் விதத்தில் குறிப்பிட்டுள்ளனர் (G.D.Fee, *Philippians: The New International Commentary on the New Testament*, pp. 204-205).

[23] இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "அவர் தன் முழுத்தன்மையிலும் இறைவனாயி ருந்தும்" என்றும், கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் "கடவுளின் தன்மையில் விளங்கிய அவர்" என்றும், ராஜரீகம் என்பாரது மொழிபெயர்ப்பில் "அவர் எப் போதும் கடவுளின் தன்மையுடையவராயிருந்தார்" என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது.

[24] அதாவது present participle tenseல் உள்ளது.

[25] J.F.Walvoord, *Jesus Christ Our Lord*, pp. 138-139; F.F.Bruce, *Philippians: Good News Bible Commentary*, pp. 44-45; B.B.Warfield, *The Person of Christ*, p.39; C.C.Ryrie, *Basic Theology*, p. 261.

உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயி ருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகி மைப்படுத்தும்" என்று கூறினார் (யோவா.17:5). இதனால்தான், பிலிப்பியர் 2:6-7ல், இயேசுகிறிஸ்து தம்முடைய தேவத்தன்மையை அல்ல, "தேவ னுக்குச் சமமாயிருக்கும் நிலையை விட்டு வந்ததாகவே" குறிப்பிடப்பட் டுள்ளது.

தேவனாயிருந்த இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த போதும், அவர் முழுமையான தேவத்தன்மையுடையவராகவே இருந்தார். உண்மையில், ஆதியிலிருந்தே தெய்வீக வார்த்தையாக இருந்த அவர் மாம்சமாகியபோது (யோவா.1:1,14), தெய்வீகத் தன்மையை இழந்து மாம்சமாக மாறிவிடவில்லை.[26] யோவான் 1:14ல், "வார்த்தை மாம்சமாகி" என்னும் வாக்கியத்தில் "ஆகி" என்னும் சொல் மூலமொ ழியில் சிறப்பான அர்த்தமுடையது. இது ஒன்றிலிருந்து இன்னுமொன் றாக மாறியதைக் குறிப்பிடும் சொல் அல்ல. அதாவது, "வார்த்தை மாம்சமாக மாறிவிட்டது என்பது இதன் அர்த்தம் அல்ல. "வார்த்தையே மாம்சமாக வந்தது" என்பதே இதன் அர்த்தமாகும்."[27] எனவே, "ஆகி" என்னும் சொல், "முன்பு இருந்த நிலையோடு இன்னுமொரு புதிய நிலை சேர்க்கப்பட்டதையே குறிக்கின்றது."[28] அதாவது, "இயேசு கிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தது, தெய்வீகத் தன்மைக ளைத் துறப்பதையோ இழப்பதையோ அல்ல, மானிடத் தன்மைகளைச் சேர்ப்பதாகவே உள்ளது."[29] இதனால்தான், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது" (கொலோ.2:9). ஏனென் றால், "தேவனே மாம்சத்தில் வெளிப்பட்டிருந்தார்" (1தீமோ.3:16).[30]

---

[26] A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the NT*, p. 40.

[27] J.R.Michaels, *John: The New International Commentary on the NT*, p. 77.

[28] W.Hendriksen, *New Testament Commentary: The Gospel of John*, p. 84.

[29] M.J.Erickson, *Christian Theology*, p. 735.

[30] இயேசுகிறிஸ்து நம்மைப்போல உண்மையான மாம்ச சரீரத்தை உடையவராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே "மாம்சம்" என்ற சொல் அவர் மனிதனாக வந்ததைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. எனினும், மாம்சம் என்னும் வார்த்தை இங்கு பாவத்தை உள்ளடக்கிய சொல்லாக உபயோகிக்கப்பட வில்லை (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 119). இயேசுகிறிஸ்து மனிதனைப் போல தோற்றமளிக்கவில்லை, அவர் உண்மையான மனிதனாகவே இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதை அறியத்தருவதற்காக இச்

இதனால், "இயேசுகிறிஸ்து தெய்வமாயிருந்த மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தார்."[31] எனவே, அவர் "மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தபோது அவருடைய தேவத்தன்மை இல்லாமற்போய்விடவில்லை"[32] ஏனெனில், "தேவனே மாம்சத்தில் மனிதனாக வந்தார் (1தீமோ.3:16)."[33] எனினும், அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவருடைய தேவத்துவம் மானிடக் கண்களுக்கு மறைவாகவே இருந்தது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவருடைய தேவத்துவம் மானிடக் கண்களுக்கு மறைவாகவே இருந்தது.

தேவனுக்கு சமமாயிருக்கும் நிலையை விட்டு, அவரைவிடத் தாழ்வான நிலைக்கு வந்த இயேசுகிறிஸ்து, தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்து விடவில்லை. உலக மாந்தருடைய பாவங்களைப் பரிகரிப்பதற்காகத் தம்மையே பலியாக்க இவ்வுலகுக்கு வந்த அவர், பாவப்பலியாகச் சிலுவையில் மரித்த பின்னர் உயிரோடெழுந்து மறுபடியுமாகத் தாம் முன்பிருந்த பரலோக மகிமை பொருந்திய அதிஉன்னத நிலைக்குச் சென்றுவிட்டார் (பிலி.2:9-11).[34] எனவே, இப்பொழுது அவர் பிதாவுக்குச் சமமான நிலையிலேயே இருக்கின்றார். இதனால், "இயேசுகிறிஸ்து பரலோகத்துக்குச் சென்ற பின்பும் பிதாவைவிடத் தாழ்வான நிலையிலேயே இருக்கின்றார்"[35] என்னும் யெகோவாவின் சாட்சிகளின் போதனை முற்றிலும் தவறானது. ஏனென்றால், தற்போது அவர் "பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதாகவே" வேதாகமம் கூறுகிறது (அப்.2:33-35, 7:55-56, ரோ.8:34, எபே.1:21, எபி.1:3, 1:13, 8:1, 10:12, 12:2,

சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது (G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 59).

[31] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1346.

[32] R.E.Brown, *John: The Anchor Bible Commentary Volume 1*, p. 32

[33] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 119.

[34] பிலிப்பியர் 2:9-11ல் "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[35] Anonymous, *Aid to Bible Understanding*, p. 919.

1பேது.3:22).[36] அதாவது, "பரலோகத்தில் இயேசுகிறிஸ்து அதிஉயர்ந்த கனமும் மகிமையும் உடைய இடத்தில் இருப்பதையே இவ்விவரணம் சுட்டிக்காட்டுகிறது."[37] இதனால், இயேசுகிறிஸ்து மனிதனாக தம்மைத் தாழ்த்திய நிலையில் இருந்தபோது அவர் தமது பூலோக நிலையைப் பற்றி கூறியவைகள், அவரது உயர்த்தப்பட்ட நிலைக்கு எவ்விதத்தி லும் பொருத்தமற்றவைகளாகவே உள்ளன. எனவே, "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று, அவர் மனிதனாகத் தம்மைத் தாழ்த்தியபோது தமது பூலோக நிலை யைப்பற்றி கூறிய விவரணமாய் இருப்பதனால், இதை ஆதாரமாகக் கொண்டு, அவர் பிதாவைவிடத் தாழ்வானவர் என்று கருதமுடியாது.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் தம்மு டைய தன்மையைப் பற்றி கூறும்போது, "நானும் பிதாவும் ஒன்றாயிருக் கிறோம்" என்றே குறிப்பிட்டுள்ளார் (யோவா.10:30). இயேசுகிறிஸ்துவினு டைய இக்கூற்றில், "ஒன்றாயிருக்கிறோம்" என்னும் சொல் மூல மொழியில் "ஒன்றன்பால்" (neuter gender) பதத்தில் உள்ளது.[38] எனவே, "ஒரு நபர் என்பதல்ல, ஒரு பொருள் என்பதே இதன் அர்த்தமா கும்."[39] அதாவது, "தாமும் பிதாவும் இருவர் அல்ல, இருவரும் ஒருவர் என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை."[40] ஏனெனில், "நானும் பிதாவும் ஒரே பொருளையுடையவர்களாய் இருக்கிறோம் என்பதே ஒன்றாயிருக்கி றோம் என்பதன் நேரடியான மொழிபெயர்ப்பாகும். எனவே, "நானும் பிதாவும், ஒரே தன்மையுடையவர்களாய் இருக்கிறோம் என்றே இயேசு கிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்."[41] அதாவது, பிதாவைப்

---

[36] இயேசுகிறிஸ்து பரலோகத்துக்குச் சென்று பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக் கிறார் என்பது, மேசியாவைப் பற்றிய 110ம் சங்கீதத்தின் முதல் வசனத்தின் நிறைவேறுதலாகும். இச்சங்கீதத்தின் வசனம் தம்மைப் பற்றிய தீர்க்கதரிசனம் என்பதை இயேசுகிறிஸ்துவே முன்னறிவித்திருந்தார் (மத்.26:64, மாற்.12:36, லூக்.20:41-44). மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகத்துக்குச் சென்ற இயேசுகிறிஸ்து பிதாவோடு சேர்ந்து உலகை ஆட்சி செய்வதினாலேயே அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

[37] L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, 338.

[38] கிரேக்கமொழியில் அஃறிணையில் குறிக்கப்படும் பொருட்களும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், என்று பால் வேறுபாடுகளுடனேயே எழுதப்படும்.

[39] L.Morris, *John: The New International Commentary on the NT*, p. 465.

[40] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 394.

[41] J.C.Ryle, *Expository Thoughts on John Volume 2*, p. 240; M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary Volume 9*, p. 30.

போலவே, இயேசுகிறிஸ்துவும் தேவத் தன்மையுடையவராய் இருக்கின்றார் என்பதே அவருடைய கூற்றின் அர்த்தமாயுள்ளது.

“நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்று இயேசுகிறிஸ்து கூறியதைக் கேட்ட யூதர்கள், அவர் தம்மைத் தேவன் என்று சொல்கின்றார் என்றே புரிந்துகொண்டனர் என்பதைத் தொடர்ந்து வரும் வசனங்கள் அறியத்தருகின்றன. அதாவது, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்கள், அவரைக் கல்லெறிந்து கொலை செய்வதற்காகக் கல்லுகளை எடுத்துக் கொண்டதோடு, “நீ மனுஷனாயிருக்க உன்னைத் தேவனென்று சொல்லி இவ்விதமாகத் தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம்” என்று கூறினார்கள் (யோவா.10:31-33). ஒரு மனிதன் தான் தேவன் என்று கூறினால், அது தேவதூஷணம் என்று கருதிய யூதர்கள், அதற்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருந்த தண்டனையை இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுப்பதற்காக (லேவி.24:15-16)[42] அவரைக் கல்லெறிந்து கொல்ல முற்பட்டனர். உண்மையில், “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்னும் கூற்றின் மூலம் இயேசுகிறிஸ்து, தாம் தேவன் என்று கூறியதை யூதர்கள் புரிந்து கொண்டுள்ளதையே இச்சம்பவம் அறியத்தருகிறது. எனவே, இயேசுகிறிஸ்து பிதாவை விடத் தாழ்வானவர் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

**நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று மூலமொழியில் அவரும் பிதாவும் ஒரே தன்மையுடையவர்களாய் இருக்கின்றார்கள் என்னும் அர்த்தத்தில் உள்ளது.**

யோவான் 14:28ல் இயேசுகிறிஸ்து தம்மைவிடத் தேவன் பெரியவர் என்று கூறியதற்கான காரணத்தையும் நாம் அறிந்திருந்தால், அவர் எவ்விதத்திலும் தேவனைவிடத் தாழ்வானவர் அல்ல என்பதைப்

[42] லேவியராகமம் 24:16ல் “கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும். சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறிய வேண்டும், பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிற வன் கொலைசெய்யப்படவேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புரிந்துகொள்ளுவோம். உண்மையில், இயேசுகிறிஸ்து மனிதரை மீட்பதற்காக இவ்வுலகத்திற்கு வந்த தம்முடைய ஊழியப் பணியை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதனால்தான், அவர் இவ்வுலகில் பணியாற்றிய காலத்தில், தாம் "பிதாவினால் அனுப்பப்பட்டுள்ளதாகப்" பல தடவைகள் தெரிவித்துள்ளார் (யோவா. 3:17, 3:34, 4:34, 5:23-24, 5:30, 5:36-38, 6:44, 6:57, 7:16, 7:28-29, 7:33, 8:16, 8:29, 8:42, 10:36, 12:44-45, 12:49, 14:24, 16:5, 17:3, 17:8, 17:18, 17:21, 17:23, 17:25, 20:21). இயேசுகிறிஸ்துவினுடைய விளக்கத்தின்படி, ஊழியப்பணியில் "அனுப்பப்பட்டவர், தம்மை அனுப்பி யவரைவிடத் தாழ்வானவராகவே இருப்பதனால்" (யோவா.13:16) தம்மை அனுப்பிய பிதா தம்மைவிட பெரியவராய் இருப்பதாக யோவான் 14:28ல் அவர் தெரிவித்துள்ளார். அதாவது, "தம்மை அனுப்பிய பிதாவுக்குக் கீழ்ப்படிந்தவராக இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்த தினால், ஊழியப் பணியில் பிதா தம்மைவிட பெரியவராயிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்."[43] எனவே, தேவன் பெரியவராய் இருப்பதைப் பற்றிய கூற்று, அவர் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பிய செயலையும் இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதலையும் உள்ளடக்கிய குறிப்பாகவே உள்ளது.[44] அதாவது, "இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்ட நிலையில், பிதா அவரைவிட பெரியவராக இருந்தார்."[45] எனவே, இயேசுகிறிஸ்துவின் கூற்று தேவத் தன்மையைப் பற்றியது அல்ல. இதனால், இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்று கூறமுடியாது.

## (ஆ). அந்த நாளை குமாரனும் அறியார் (மாற்கு.13:32)

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வேதவசனம்

---

[43] C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 312.

[44] B.Barton & L.K.Taylor, ed., *Life Application New Testament Commentary*, p. 438; F.F.Bruce, *The Gospel of John: Introduction, Exposition and Notes*, p. 306-307; G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 400.

[45] A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the NT*, p. 445.

மாற்கு 13:32 ஆகும். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து தம்முடைய மறுவருகையின் காலத்தைப்பற்றித் தமக்குத் தெரியாது என்று குறிப் பிட்டுள்ளார். அதாவது, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார்" (மாற்.13:32) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே, "தம்முடைய மறுவருகை யின் காலத்தை அறியாதிருந்த இயேசுகிறிஸ்து சகலமும் அறிந்தவர் அல்ல" என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், இதனால் "அவர் தேவனாக இருக்கமுடியாது" என்று வாதிடுகின்றனர்.[46]

உண்மையில், இயேசுகிறிஸ்துவின் "மாம்சமாகுதலை" (யோவா.1:14,) சரியான விதத்தில் அறிந்துகொள்ளாதவரையில், அவரது இக்கூற்று யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கத்தை உண்மை என்று நிரூபிப்பது போலவே நமக்குத் தென்படும்.[47] ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி, இயேசுகிறிஸ்துவின் மாம்சமாகுதல் தெய்வீகத் தன்மைகளைத் துறப்ப தையல்ல, மானிடத் தன்மைகளைச் சேர்ப்பதாகவே இருந்தது. அதா

---

[46] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 19.

[47] ஆதிசபையினர் இவ்வசனத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருந்ததி னால், அக்காலத்தில் அதிகளவில் உபயோகிக்கப்பட்ட மத்தேயுவின் சுவிசேஷத் தின் பெரும்பாலான கையெழுத்துப் பிரதிகளில் இவ்வசனத்திலுள்ள (மத்.24:36ல்) "குமாரனும் அறியார்" என்னும் இரண்டு சொற்களும் நீக்கப்பட்டுள்ளன. ஆனால், மாற்குவின் சுவிசேஷம் அதிகளவு உபயோகிக்கப்படாததினால் இவ் வார்த்தைகள் இதன் சகல கையெழுத்துப் பிரதிகளிலும் உள்ளன (R.T.France, *Mark: The New International Commentary on the Greek Testament Commentary*, p. 544). இவ்வசனம் ஆதி கிறிஸ்தவர்களுக்கு அதிகளவு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள தினால் சில ஆராய்ச்சியாளர்கள் இதைப் பிற்கால சேர்க்கையாகக் கருதுகின்றனர் (J.Jeremias, *The Prayers of Jesus*, p. 37). ஆனால், இதைப் பிற்காலச் சேர்க்கை யாகக் கருதுவதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இது இயேசுகிறிஸ்துவின் உண்மையான கூற்றாகவே உள்ளது (D.E.Nineham, *Mark: Pelican Gospel Commentaries*, p. 360; C.A.Evans, *Mark 8:27-16:20: Word Biblical Commentary Volume 34B*, p. 336; D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 508). இயேசுகிறிஸ்துவின் அறியாமையைப்பற்றிய இக்கூற்றை ஆதிசபையில் எவரும் வேதத்தில் சேர்த்திருக்க மாட்டார்கள். இது இயேசு கிறிஸ்துவின் தேவத் தன்மைக்கு ஒரு நிந்தையாக இருப்பதே இது நிஜமான ஒரு கூற்று என்பதற்கான ஆதாரமாக உள்ளது. இதனால், இது இயேசுகிறிஸ்து வினால் சொல்லப்பட்டது என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது (V.Tayloy, *The Gospel According to St.Mark*, 522; J.R. Edwards, *The Gospel According to Mark: The Pillar New Testament Commentary*, p. 407; J.P.Meier, *A Marginal Jew: Rethinking the Historical Jesus Vol. 1*, p. 169).

வது, தேவத்தன்மை உடையவராய் இருந்த இயேசுகிறிஸ்து மனிதனாகியபோது, மானிடத் தன்மையையும் தம்மோடு சேர்த்துக் கொண்டார். எனவே, அதன் பின்னர் அவரில் இரண்டு தன்மைகளும் இருந்தன. எனினும், தேவத்தன்மையுடன் இருந்தவர் மானிடத் தன்மையைச் சேர்த்துக் கொண்டபோது, அவருடைய தேவத்தன்மை மானிடத் தன்மையின் வரையறைகளுக்கு உட்பட்டிருந்தது.[48] அதாவது, அவர் மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது சில வரையறைகளுடனேயே இருந்தார்.[49] இதனால்தான், தேவத்தன்மைகளில் ஒன்றான "சகலவற்றையும் அறியும் இயேசுகிறிஸ்துவின் அறிவு" மானிடத் தன்மையான "சகலவற்றையும் அறியாதிருக்கும் தன்மையின்" வரையறைகளுக்கு உட்பட்டிருந்தது. எனவே, இயேசுகிறிஸ்து சகலவற்றையும் அறியும் ஆற்றல்மிக்க தேவத் தன்மை உடையவராய் இருந்தாலும், மனிதனாக அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் சில விஷயங்களை அறியாதிருந்ததற்கு,[50] குறிப்பாகத் தமது மறுவருகையின் காலத்தை அறியாதிருந்ததற்கு இதுவே காரணமாகும். "அறியாமை மானிடத் தன்மையின் முக்கியமான ஒரு அம்சமாய் இருப்பதனால், உண்மையான மானிடத் தன்மையைத் தம்மோடு சேர்த்துக்கொண்ட இயேசுகிறிஸ்து, மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் சில விஷயங்களை அறியாதவராகவே இருந்தார்."[51]

உண்மையான மானிடத் தன்மையைத் தம்மோடு சேர்த்துக்கொண்ட இயேசுகிறிஸ்து, இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் உண்மையிலேயே சில விஷயங்களை அறியாதவராகவே இருந்தார்

இயேசுகிறிஸ்து மானிடத் தன்மையின் வரையறைகளுக்குள் தம்மை உட்படுத்தி, மனிதர்களைப் போலவே சில விஷயங்களை அறியாதி

[48] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1248.
[49] D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the NT*, p. 589; R.H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art*, p. 492.
[50] சுவிசேஷப் புத்தகங்களில், இயேசுகிறிஸ்து பல சந்தர்ப்பங்களில் மற்றவர்களிடம் கேள்வி கேட்டு விடயங்களைத் தெரிந்து கொண்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். இது ஒரு ஆசிரியர் தன் மாணவர்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகக் கேள்வி கேட்பதைப் போன்ற செயல் அல்ல. உண்மையிலேயே அவர் தாம் அறியாதிருந்த விடயங்களைத் தெரிந்துகொள்வதற்காகவே இது பற்றி மற்றவர்களிடம் கேள்விகள் கேட்டுள்ளார் (L.Morris, *The Lord from Heaven*, p. 44,46).

ருந்தபோதிலும், சில சந்தர்ப்பங்களில், மனிதர்களினால் எவ்விதத்திலும் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களை அறிந்திருந்ததைப்பற்றியும் சுவிசேஷப் புத்தகங்களில் நாம் வாசிக்கலாம். அவர் மனிதர்களுடைய உள்ளங்களில் இருப்பதையும், அவர்களுடைய கடந்தகால வாழ்க்கை விபரங்களையும், எதிர்கால சம்பவங்களையும் அறிந்திருந்தார் (மத்தேயு 9:4, 21:2-4, மாற்கு 2:8, லூக்கா 6:8, 9:47, யோவான் 1:47-48, 2:24-25, 4:16-19, 4:29, 6:64, 18:4). இதற்குக் காரணம், இயேசுகிறிஸ்து தேவனுடைய திட்டத்தின்படி பணியாற்றுவதற்காக இவ்வுலகத்திற்கு வந்ததினால், அப்பணியைச் செய்வதற்கு வேண்டிய அளவு தெய்வீக அறிவு அவருக்கு இருந்தது. ஆனால், அவர் செய்ய வந்த பணியோடு தொடர்பில்லாத விஷயங்களைப் பொறுத்தவரை, மானிடத் தன்மையின் வரையறை காரணமாக அவற்றை அவர் அறியாதவராகவே இருந்தார்.[52] எனினும், "இது இயேசுகிறிஸ்து தாமாகவே விரும்பி ஏற்றுக்கொண்ட அறியாமையாகவே உள்ளது."[53] அதாவது, "அவர் மனிதனாக வருவதற் காக சகலத்தையும் அறியும் தம்முடைய அறிவைத் தற்காலிகமாகக் கைவிட்டு, முழுமையான மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்தார்."[54]

இயேசுகிறிஸ்து மனிதனாக வாழ்ந்த காலத்தில் மானிட வரையறைக ளுக்கு உட்பட்டிருந்ததினால், "அவருடைய தெய்வீகத் தன்மைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்தன."[55] எனினும் "இவ்வரையறை, தெய்வீகத் தன்மைகளை அவரிலிருந்து அகற்றிவிடவில்லை. தெய்வீ கத் தன்மையின் செயற்பாடுகள் மானிடத் தன்மையால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தன."[56] யெகோவாவின் சாட்சிகள், இயேசுகிறிஸ்துவின் "மாம்ச மாகுதலை" அதாவது, தெய்வீகத் தன்மைகளோடு அவர் மானிடத் தன்மைகளையும் சேர்த்துக்கொண்டதைக் கருத்திற்கொள்ளாததி னால், அவருடைய மானிடத் தன்மை தெய்வீகத் தன்மையில் ஏற்ப டுத்திய வரையறைகளை அறியாதவர்களாக, இத்தகைய வரையறை களுக்கு உட்பட்ட காலத்தில் அவர் கூறிய சில கூற்றுகளை ஆதாரமா

[51] L.Morris, *The Lord from Heaven*, pp. 46-50; J.A.Brooks, *Mark: The New American Commentary*, p. 218.

[52] L.Morris, *The Lord from Heaven*, p. 48.

[53] D.E.Hiebert, *Mark: An Expositional Commentary*, p. 386.

[54] W.W.Wessel, *Mark: The Expositor's Bible Commentary Volume 8*, p. 753.

[55] R.C.H.Lenski, *The Interpretation of St.Mark's Gospel*, pp. 590-591.

[56] M.J.Erickson, *Christian Theology*, p. 735.

கக்கொண்டு அவருடைய தேவத்துவத்தை மறுதலித்து வருகின்றனர். இயேசுகிறிஸ்து மானிட வரையறைகளுக்கு உட்பட்டிருந்த காலத்திலும் தேவத்தன்மை உடையவராகவே இருந்தார். இதனால்தான், "தேவத்து வத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக் கிறது" என்று கொலோசெயர் 2:9 கூறுகிறது.[57] எனவே, "இயேசு கிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் முழுமையான மனிதனாக இருப்பதற்காகத் தம்முடைய தெய்வீகத் தன்மையை குறிப்பிட்ட ஒரு வரையறைக்குள் வைத்திருந்தாலும், அவர் மனிதனாக இருந்த காலத்திலும் முழுமையான தேவனாகவே இருந்தார்."[58]

இயேசுகிறிஸ்து மனிதனாக வாழ்ந்த காலத்தில் மானிட வாழ்வின் வரையறைகளுக்கு உட்பட்டிருந்ததினால், அவருடைய தெய்வீகத் தன்மைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்தன.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் மாத்திரமே அவருடைய தெய்வீகத் தன்மைகள் மானிடத் தன்மையின் வரையறைகளுக்கு உட்பட்டிருந்தது என்பதையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில், அவர் மரித்து உயிர்த்தெ ழுந்த பின்னர் இத்தகைய வரையறைகள் நீக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார். இதனால்தான், உயிர்த்தெழுந்த பின்னர் அவர் திடீரென்று தோன்றி மறையக்கூடியவராகவும், பூட்டிய அறைகளுக்குள் செல்லக் கூடியவராகவும் இருந்தார் (மத்.28:9, மாற்.16:9, 16:12, 16:14, லூக்.24:31, 24:36, யோவா.20:19, 20:26). மேலும், மனிதனாக வாழ்ந்தபோது தம் முடைய மறுவருகையின் காலத்தை அறியாதிருந்த இயேசுகிறிஸ்து, உயிர்த்தெழுந்த பின்னர், மானிட வரையறைகள் நீக்கப்பட்ட நிலையில்

---

[57] தேவனுடைய திரித்துவத்தைப் போலவே இயேசுகிறிஸ்துவின் இரு தன்மைக ளையும் நம்முடைய குறுகிய அறிவினால் முழுமையாகக் கிரகிக்க முடியாது. இயேசுகிறிஸ்து முழுமையான தேவனாகவும், முழுமையான மனிதனாகவும் இருந்தார் என்றே வேதாகமம் கூறுகிறது. எனினும், இவ்விரு தன்மைகளும் இயேசுகிறிஸ்துவில் ஒரே சமயத்தில் எவ்வாறு முழுமையாக இருந்தன என்பது நமது அறிவுக்கு எட்டாத விடயமாயினும், இதுவே வேதாகம சத்தியமாகும்.
[58] M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 800; M.J.Erickson, *Christian Theology*, 735.

இதை அறிந்தவராகவே இருந்தார்.[59] இதனால்தான், "எக்காலத்தில் இஸ்ரவேலுக்கு ராஜ்யம் திருப்பிக் கொடுக்கப்படும்?" என்று சீடர்கள் கேட்டபோது, அது தமக்குத் தெரியாது என்று அவர் கூறவில்லை. "அதை அறிவது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப்.1:7) என்றே கூறி னார். இயேசுகிறிஸ்துவின் இப்பதில், "அவர் அக்காலத்தை அறிந்திருந் தும் அதை அவர்களுக்கு அறிவிக்கவிரும்பவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது."[60] எனவே, இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத் தில் வாழ்ந்த காலத்தில் அவருடைய தெய்வீகத் தன்மை மானிட வரையறைகளுக்கு உட்பட்டிருந்ததைக் கருத்திற்கொள்ளாமல், அவர் மனிதனாக வாழ்ந்த காலத்தில் கூறியவற்றை ஆதாரமாகக்கொண்டு அவர் தேவன் அல்ல என்று கூறுவது அர்த்தமற்றது.

## (இ). நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? (மத்தேயு.19:17)

இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்பதற்கு யெகோவா வின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வேதவசனம், தம்மை "நல்ல போதகரே" என்று அழைத்தவனிடம் அவர் கூறிய வார்த்தைகளா கும். அதாவது, "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே" (மத்.19:16-17, மாற்.10:17-18, லூக்.18:18-19) என்று இயேசுகிறிஸ்து கூறியதினால், அவர் நல்லவர் அல்ல என்றும், அவருடைய கூற்றின்படி தேவன் மாத்திரமே நல்லவராயிருப்பதனால் இயேசுகிறிஸ்து தேவன் அல்ல என்றும், அவர் தேவனைவிடத் தாழ்வானவர் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[61] மேலும், தாம் பாவி என்பதை இயேசுகிறிஸ்து அறிக்கையிடுகின்றார் என்றும் சிலர் இக்கூற்றை வியாக்கியானம் செய்துள்ளனர்.[62] ஆனால், இக்கூற்று இத்தகைய அர்த்தம் கொண்ட தல்ல. உண்மையில், தாம் நல்லவர் இல்லை என்று இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் கூறவில்லை. தேவன் மாத்திரமே நல்லவர் என்பதையே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

59 J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1248.

60 A.Plummer, *Mark: Cambridge Greek Testament Commentary*, p. 306.

61 Anonymous, *Aid to Bible Understanding*, p. 676; Anonymous, *Should You Believe in the Trinity*, p. 17.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில் ஒரு கேள்வியும் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும். அதாவது, "நல்ல போதகரே" என்று தம்மை அழைத்தவனிடம் (மத்.19:16), "நீ என்னை நல்லவன் என்று சொல் வானேன்?" என்று அவர் கேட்கிறார். அதாவது, நீ என்னை இவ்வாறு அழைப்பதற்கான காரணம் என்ன? என்று அவர் அவனிடம் கேட்கிறார். ஏனென்றால், அக்காலத்தில் யூதர்கள் தங்கள் மதத் தலைவர்களை "நல்ல போதகரே" என்று அழைப்பதில்லை.[63] தேவனை மாத்திரமே இவ்வாறு அழைக்கமுடியும் என்பதே அக்கால யூதரின் கருத்தாயிருந் தது. ஏனெனில், மனிதரை இவ்வாறு அழைப்பது அக்காலத்தில் தேவதூ ஷணமாகவே கருதப்பட்டது.[64] இதனால், தேவனை மாத்திரமே நல்ல வராகப் போற்றிப் புகழும்படி யூதர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.[65] எனவே, "நல்ல போதகரே" என்று இயேசுகிறிஸ்துவை அழைத்தவன், தேவனுக்கு மாத்திரமே உரிய தன்மையை, அதாவது நல்லவர் என்னும் தன்மையை, இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகித்ததினால், நீ என்னை இவ்வாறு நல்லவன் என்று சொல்வதற்கான காரணம் என்ன? என்று அவர் அவனிடம் கேட்டார்.

நல்ல போதகரே என்று இயேசுகிறிஸ்துவை அழைத்தவன், தேவனுக்கு மாத்திரமே உரிய தன்மையை, அதாவது நல்லவர் என்பதை அவருக்கு உபயோகித்ததினால், நீ என்னை இவ்வாறு நல்லவன் என்று சொல்வதற்கான காரணம் என்ன? என்று அவனிடம் கேட்டார்.

இயேசுகிறிஸ்துவை நல்ல போதகரே என்று அழைத்தவன், அவரை ஒரு போதகராக மாத்திரமே அறிந்திருந்தான். இதனால், தாம் உண்மையிலேயே யார் என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே இயேசுகிறிஸ்து அவனிடம் இவ்வாறு கூறியுள்ளார்.[66] இதனால்தான்,

62 Cited in D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the NT*, p. 1477.

63 L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 490; C.A.Evans, *Mark 8:27-16:20: Word Biblical Commentary Volume 34b*, p. 95.

64 J.R.Edwards, *Mark: The Pillar New Testament Commentary*, p. 310.

65 M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 648.

66 R.C.Sproul, *A Walk with God: An Exposition of Luke's Gospel*, p. 337; D.E.Hiebert, *Mark: An Expositional Commentary*, p. 286.

தேவன் மாத்திரமே நல்லவர் என்பதையும் அவர் அவனுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது, "அவன் தம்மை நல்லவன் என்று அழைக்க வேண்டுமானால், தாம் தேவன் என்பதை முதலில் அவன் அறிந்து கொள்ளவேண்டும் என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே இயேசுகிறிஸ்து இவ்வாறு கூறியுள்ளார்."[67] உண்மையில், அவருடைய கூற்று "நான் தேவனாக இல்லாவிட்டால் நீ என்னை இவ்வாறு அழைக்க வேண்டாம். ஏனென்றால் தேவன் மட்டுமே நல்லவர்" என்னும் அர்த்தமுடையது."[68] எனவே, "இவ்வசனம் இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை எவ்விதத்திலும் மறுதலிக்கவில்லை. அதை மறைமுகமாக அறியத்தருகின்றது."[69] எனவே, இயேசுகிறிஸ்து தேவன் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே அவரை நல்லவர் என்று அழைக்க முடியும் என்றே இவ்வசனம் கூறுவதனால், யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தைத் தவறாகவே உபயோகிக்கின்றனர். ஏனெனில், இவர்கள் வாதிடுகின்றவிதமாக இயேசுகிறிஸ்து தாம் நல்லவர் இல்லை என்று இவ்வசனத்தில் கூறவில்லை.

## 4. என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? (மத்தேயு.27:46)

இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கூறியதும் (மத்.27:46),[70]

---

[67] N.Geldenhuys, *The Gospel of Luke: The New International Commentary on the New Testament*, p. 458.

[68] J. Bodine & M.Bodine, *Witnessing to the Witnesses*, pp. 41-42.

[69] J.D.Grassmick, *Mark: The Bible Knowledge Commentary - New Testament*, p. 150.

[70] இயேசுகிறிஸ்துவின் இவ்வார்த்தைகள் அவர் பேசிய அரமேய மொழியிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மத்தேயு 27:46ல் "ஏலி ஏலி லாமா சபக்தானி" என்னும் வாக்கியம் எபிரேய மற்றும் அரமேய மொழிச் சொற்கள் கலந்த ஒரு கூற்றாக உள்ளது. "ஏலி" என்னும் வார்த்தை எபிரேய மொழியில் தேவனை "என் தேவனே" என்று அழைப்பதாகும். "லாமா சபக்தானி" என்பது அரமேய மொழி வார்த்தைகளாகும். ஆனால், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று மாற்குவில் அரமேய மொழியில் மாத்திரமே உள்ளது. இதனால்தான் மாற்குவில் ஏலி என்பதற்குப் பதிலாக "எலோயி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது· "இயேசு அரமேய மொழியிலேயே பேசியிருக்க வேண்டும் என்றும் மத்தேயுவே தேவன் என்னும் சொல்லை எபிரேய மொழியில் குறிப்பிட்டிருக்க வேண்டும்" என்றும் வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (D.A.Hagner, *Matthew: The Word Biblical Commentary*, p. 844).

அவர் பிதாவைவிடத் தாழ்வானவர் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். இயேசுகிறிஸ்து உண்மையிலேயே தேவனாக இருந்திருந்தால் அவர் பிதாவைத் "தேவனே" என்று அழைத்திருக்கமாட்டார் என்பதே இவர்களின் தர்க்கமாகும்.[71] உண்மையில், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று கிறிஸ்தவர்களுக்கும் அதிக குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்து மரிக்கும்போது, "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி, தேவனைப் பிதாவே என்றே அழைத்துள்ளார். இதனால், அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் போது பிதாவைத் தேவனே என்று ஏன் அழைக்கவேண்டும் என்பது கிறிஸ்தவர்களின் உள்ளத்திலும் இருக்கும் ஒரு கேள்வியாகவே உள்ளது.

உண்மையில், இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த போது அவருக்கு என்ன நடந்தது என்பதை நாம் அறிந்திருந்தால் மாத்திரமே, அவரது கூற்றை நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அதேசமயம், "தேவனோடு எப்பொழுதும் ஐக்கியமாயிருந்த இயேசு கிறிஸ்து, சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது தேவனால் கைவிடப்பட்டார் என்பதைப் புரிந்துகொள்ளாத வரையில், அவருடைய சிலுவை மரணத்தையும் நம்மால் சரியாக விளங்கிக்கொள்ள முடியாது."[72] இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் போதே இவ்வாறு கூறியதினால், அச்சமயம் அவர் எத்தகைய நிலையில் இருந்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டே அவருடைய இக்கூற்றை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது "ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" என்றும், "ஒன்பதாம்மணி நேரத்திலேயே அவர், என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கூறினார்" என்றும் 45ம் 46ம் வசனங்கள் அறியத்தருகின்றன (மத்.27:45-46). அக்கால யூதர்களுடைய நேரக் கணிப்பீட்டின்படி ஆறாம் மணி நேரம் பகல் 12 மணியாகும். ஏனெனில், அவர்கள் சூரிய உதயத்தில்

[71] Anonymous, *Reasoning with the Scriptures*, p. 212.
[72] J.Moltmann, *The Crucified God: Cross of Christ as the Foundation of and Criticism of Christian Theology* p. 149.

இருந்தே நேரத்தைக் கணிப்பிடுவார்கள்.[73] எனவே, பகல் 12 மணியிலிருந்து மாலை 3 மணி வரைக்கும் மூன்று மணித்தியாளங்களாக பூமி முழுவதும் அந்தகாரம் சூழ்ந்திருந்தது.[74] இது வழமையாக ஏற்படும் அந்தகாரமோ, அல்லது கிரகணம் ஏற்படுவதனால் தோன்றிய இருளோ அல்ல. ஏனெனில், பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படும் பவுர்ணமி காலத்தில் பகற்பொழுதில் கிரகணம் ஏற்படுவதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை. இதனால், பூமியெங்கும் ஏற்பட்ட அந்தகாரம் "இயற்கைக்கும் அப்பாற்பட்ட நிலையில் அற்புதமாக ஏற்பட்ட இருளாகவே உள்ளது."[75] இது "ஆமோஸ் 8:9ஐப் போல, தேவனுடைய அதிருப்தியை வெளிப்படுத்தும் ஒரு செயலாக உள்ளது."[76] ஏனெனில், "இது தண்டனையினதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பினதும் அடையாளமாகவே உள்ளது."[77] உண்மையில், இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த போது பூமியெங்கும் ஏற்பட்ட அந்தகாரம், பாவத்தின் மீதான தேவனுடைய தண்டனையின் அடையாளமாகவே உள்ளது. ஏனெனில் அச்சமயம் இயேசுகிறிஸ்து உலக மாந்தர் அனைவரினதும் பாவத்தைத் தம்மீது சுமந்துகொண்டிருந்தார்.

சிலுவையில் இயேசுகிறிஸ்து நமக்காகப் பாவமானார் என்று வேதாகமம் கூறுகிறது (2கொரி.5:21, கலா.3:13, ஏசா.53:12).[78] பரிசுத்தமான

---

73 W.Bauer, F.W.Danker, W.F.Arndt, and F.W.Gingrich, ed., *A Greek English Lexicon of the NT and Other Early Christian Literature*, pp. 1102-1103.

74 இயேசுகிறிஸ்து காலை 9 மணிக்கு சிலுவையில் அறையப்பட்டு மாலை மூன்று மணிக்கு மரணமடைந்தார் என்பதை மாற்குவின் சுவிசேஷம் அறியத் தருகின்றது (மாற்.15:25, 34-37).

75 L.Morris, *The Gospel According to Matthew: The Pillar New Testament Commentary*, pp. 721-722. கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் "ஜூலியஸ் அ.்.ப்ரிகானஸ்" என்பவர் இது கிரகணத்தினால் ஏற்பட்ட அந்தகாரம் அல்ல என்று வாதிட்டுள்ளார். ஏனெனில், அக்காலத்தில் சிலர் அந்தகாரத்தைக் கிரகணத்தினால் ஏற்பட்டதாகத் தவறாக விளக்கியுள்ளனர் (F.F.Bruce, *Jesus Christ and the Christian Origin Outside the New Testament*, pp. 29-30).

76 R.T.France, *Matthew: The New International Commentary on the NT*, p. 1075;

77 D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 577;

78 2கொரிந்தியர் 5:21ல் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்றும், கலாத்தியர் 3:13ல், "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" என்றும், ஏசாயா 53:12ல் அவர் "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவன் பாவத்தை வெறுப்பவராகவும் (சங்.5:5, 11:5),[79] அதைப் பார்க்க விரும்பாதவராகவும் இருக்கின்றார் (ஆப.1:13).[80] இதனால், பாவம் தேவனையும் மனிதரையும் பிரித்து விடுகிறது (ஏசா.59:2).[81] எனவே, இயேசுகிறிஸ்து சிலுவையில் உலக மாந்தர் அனைவருடைய பாவங்களையும் தம்மீது சுமந்து நமக்காகப் பாவமாகியபோது (2கொரி.5:21, யோவா.1:29),[82] "அவர் தேவனால் கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தார்."[83] இதனால், அதுவரை காலமும் அவருக்கும் தேவனுக்கும் இடையில் இருந்த அந்நியோன்ய சம்பந்தமான உறவு அச்சந்தர்ப்பத்தில் இல்லாமல் போய்விட்டது.[84] உண்மையில், "பாவத்திற்கான தேவ தண்டனையின் கடுமையான பகுதி, தேவனிடமிருந்து முற்றிலுமாய் அப்புறப்படுத்தப்படுதலாகும். இயேசுகிறிஸ்து மானிட பாவங்களுக்கான முழுமையான தண்டனையையும் சிலுவையில் அனுபவித்ததினால், அச்சந்தர்ப்பத்தில் தேவனோடிருந்த உறவு துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்."[85]

சிலுவையில் இயேசுகிறிஸ்து பிதாவினால் கைவிடப்பட்டு தனிமையிலேயே இருந்தார். இதனால்தான், அவர் சிலுவையில் மரிக்கும் போது, என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கூறினார்.

"பாவமற்ற இயேசுகிறிஸ்து சிலுவையில் பாவியைப்போல மரித்து, அதன் கொடூரமான தனிமையை அனுபவித்தார்."[86] இதனால், இயேசு

[79] சங்கீதம் 5:5ல் "அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்" என்றும், சங்கீதம் 11:5ல் "துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
[80] ஆபகூக் 1:13ல், தேவன் "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
[81] ஏசாயா 59:2ல், "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்பதை அறியத்தருகின்றது.
[82] யோவான் 1:29ல் இயேசுகிறிஸ்து "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.
[83] L.Morris, *The Cross in the New Testament*, p. 48.
[84] V.Taylor, *Jesus and His Sacrifice*, p. 162.
[85] P.Green, *Studies in the Cross*, p. 101.[86] J.Marsh, *The Fullness of Time*, p. 100.

கிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் இடையில் அதுவரை காலமும் முறிவடையாமல் இருந்த உறவு சிலுவையில் முறிவடைந்தது.[87] உண்மையில், "சிலுவையில் இயேசுகிறிஸ்து பிதாவினால் கைவிடப்பட்டு தனிமையிலேயே இருந்தார்."[88] இதனால்தான், அவர் சிலுவையில் மரிக்கும்போது, "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அதிக சத்தத்தோடு கதறினார். தேவனால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த மனிதரைத் தேவனோடு ஒப்புரவாக்குவதற்காக, இயேசுகிறிஸ்து அம்மக்கள் இருந்த இடத்திற்கே, அதாவது தேவனால் கைவிடப்பட்ட நிலைக்கே சென்று அவர்களை மீட்டுள்ளார். இதனாலேயே சிலுவையில் மரிக்கும்போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.[89] இதனால், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றை ஆதாரமாகக்கொண்டு அவர் தேவன் இல்லை என்றும், பிதாவைவிடத் தாழ்வானவர் என்றும் கூறமுடியாது.

## (உ). என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் (யோ.20:17)

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிட தாழ்வானவர் என்னும் தங்களுடைய தர்க்கத்துக்கு ஆதாரமாக யோவான் 20:17ஐயும்

---

[87] L.Morris, *The Gospel According to Matthew*, p. 722.

[88] L.Morris, *The Cross of Jesus*, p. 67; J.V.L.Casserley, *Christian Community*, p. 14; L.W.Grensted, *The Person of Christ*, p. 239.

[89] சில வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்து தேவனால் கைவிடப்பட்டிருக்க முடியாது என்றே எண்ணுகின்றனர். இதனால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் கூற்றைக் கடுமையான துயரத்தின் வேதனையில் தாம் தேவனால் கைவிடப்பட்டு விட்டோம் என்னும் உணர்வில் சொல்லப்பட்டதாகக் கருதுகின்றனர் (T.R.Glover, *The Jesus of History*, p. 192). இவர்களைப் பொறுத்தவரை இது இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான தாக்கத்தின் விளைவாகவே உள்ளது (E.B.Redlich, *St. Mark's Gospel: A Modern Commentary*, p. 177). ஆனால் இத்தகைய விளக்கங்கள் பலவீனமான நிலையில் உண்மைக்கும் மன உணர்வுக்கும் இடையில் வித்தியாசம் தெரியாதவராக இயேசுகிறிஸ்து இருந்தார் என்று கூறுவதாகவே உள்ளது. ஆனால், சிலுவையில் இயேசுகிறிஸ்து தேவனால் கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தார். இதை அறிந்தவராகவே என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அவர் கூறினார் (L.Morris, *The Cross in the New Testament*, p. 43). இயேசுகிறிஸ்துவின் கூற்று அவருடைய மனஉணர்வு அல்ல, அது உண்மையான நிலையின் விளக்கமாகவே உள்ளது (C.E.B.Cranfield, *Mark*, pp. 458-459). இயேசுகிறிஸ்து தேவனால் கைவிடப்பட

யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டுவது வழக்கம். இவ்வசனத்தில் "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இவ்வசனம் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பேசிய வார்த்தைகளாக இருப்பதனால், அவர் மகிமையடைந்த பின்பும் பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவராகவே இருப்பதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். இதனால், "மகதலேனா மரியாளுக்குப் பிதா தேவனாயிருப்பது போலவே, இயேசுகிறிஸ்துவுக்கும் பிதா தேவனாயிருக்கிறார்"[90] என்பது இவர்களின் தர்க்கமாயுள்ளது.

இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் மரியாளுடன் பேசும்போது "என் பிதா" "உங்கள் பிதா" "என் தேவன்" "உங்கள் தேவன்" என்று கூறுவதனால், அவர் தமக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கும் உறவு, மரியாளுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவைவிட வித்தியாசமானது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்று வேதஆராய்ச்சியாளர்கள் கருதினாலும்,[91] இயேசுகிறிஸ்து பிதாவைத் தம்முடைய தேவன் என்று அழைத்துள்ளதாகவே அவருடைய கூற்று இருப்பதாக நமக்குத் தென்படுகின்றது. ஆனால், இயேசுகிறிஸ்து மரியாளிடம் பேசும் வார்த்தைகள், அவள் ஏனைய சீடர்களிடம் அறிவிக்கவேண்டிய செய்தியாய் இருப்பதை இவ்வசனம் அறியத்தருகின்றது.[92] இதனால்தான் "நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான்

---

வில்லை என்று எண்ணுபவர்கள், அவர் சிலுவையில் மரிக்கும்போது 22ம் சங்கீதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார் என்றும், இதனாலேயே அச்சங்கீதத்தின் ஆரம்ப வசனங்கள் அவருடைய சிலுவை மொழியாக இருப்பதாகக் கருதுகின்றனர் (M.Dibelius, *From Tradition to Gospel*, pp. 193-194). ஆனால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் வேதத்தியானமாக அல்ல, அருகிலிருந்தவர்களை அதிர்ச்சிய டைய வைக்கும் வேதனையின் கதறலாகவே இருந்தது (H.M.Smith, *Atonement*, p. 155). உண்மையிலேயே இயேசுகிறிஸ்து 22ம் சங்கீதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தால் இதைப்பற்றி சுவிசேஷப் புத்தக ஆசிரியர்கள் குறிப்பிட்டிருப்பார்கள். ஆனால் இவ்வித குறிப்புகள் இல்லை.

[90] Anonymoys, *Reasoning from the Scriptures*, p. 212.

[91] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 743; D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 645; A.J. Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 570; R.Reymond, *Jesus, Divine Messiah: New Testament Witness*, pp. 210-211.

[92] J.R.Michaels, *John: The New International Commentary on the NT*, p. 1003.

என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத் திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக் குச் சொல்லு என்றார்" என்று இவ்வசனம் உள்ளது. அதாவது, மரி யாள் சீடர்களிடம் எதைச் சொல்வாளோ அதை அப்படியே இயேசு கிறிஸ்து அவளிடம் கூறுகின்றார். இதனால், "என் பிதாவிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும்" என்னும் சொற்பிரயோகங்கள் மரியாளின் கூற்றுகளாக இருக்கும்விதத்தில் இயேசுகிறிஸ்து அவளிடம் பேசியுள் ளார். இல்லையென்றால், "அவர் தன்னுடைய பிதாவிடத்திற்கும் தன்னு டைய தேவனிடத்திற்கும்" என்றே மரியாள் சீடர்களிடம் கூற வேண்டும். எனவே, இயேசுகிறிஸ்து பிதாவை "என் தேவன்" என்று கூறுவதாக இவ்வசனத்தை வியாக்கியானம் செய்யமுடியாது.

## (உ). கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் (1கொரிந்தியர்.11:3)

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் மாத்திர மல்ல, அவர் மகிமையடைந்து பரலோகத்துக்குச் சென்ற பின்பும் தேவனைவிடத் தாழ்வானவராகவே இருக்கிறார் என்பதே யெகோவா வின் சாட்சிகளின் போதனையாகும். இதற்கு ஆதாரமாக இவர்கள் சுட்டிக்காட்டும் வேதவசனம் 1கொரிந்தியர் 11:3 ஆகும். கொரிந்தியர் நிருபம் இயேசுகிறிஸ்து பரலோகத்துக்குச் சென்ற பின்னர் எழுதப்பட் டுள்ளதினால், இதில் இயேசுகிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக் கிறார் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, அவர் மகிமையடைந்த நிலையிலும் தேவனைவிடத் தாழ்வானவராக இருப்பதற்கான ஆதாரமாய் இருப்பதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[93] இதனால், "இயேசுகிறிஸ்து எப்போதும் தாழ்வானவராக இருப்பதாகவே வேதம் கூறுகிறது"[94] என் பதே இவர்களுடைய கருத்தாகும். எனினும் நாம் ஏற்கனவே 150ம் பக்கத்தில் பார்த்தபடி, இயேசுகிறிஸ்து பரலோகத்துக்குச் சென்ற பின்னர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதாகவே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், அவர் தேவனுக்கு சமமானவராகவே இருக்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.

---

[93] R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovah's Witnesses*, p. 140.

[94] Anonymous, *Should You Believe in the Trinity?* p. 20.

உண்மையில், 1கொரிந்தியர் 11:3 இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்று கூறவில்லை. ஏனெனில், இவ்வசனத்தில் "கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், இது தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலான உயர்வு தாழ்வு பற்றிய விவரணம் அல்ல. ஏனென்றால், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில் தேவனதும் இயேசுகிறிஸ்துவினதும் செயற்பாடுகள் பற்றியல்ல, சபையில் ஆணும் பெண்ணும் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றியே விளக்கப்பட்டுள்ளது. இதனால், "இயேசுகிறிஸ்துவையும் தேவனையும் பற்றிய குறிப்பு இதற்கான உதாரணமாகவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது."[95] மேலும், 3ம் வசனத்தில், "தலை" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "கெ.்.பாலே" (*kephale*) என்னும் கிரேக்கச் சொல், சொல்லர்த்தமாக மனிதத் தலையைக் குறித்தாலும், உருவகமாகக் குறிப்பிடப்படும்போது "அதிகாரம்" அல்லது "முக்கியமானது" என்னும் அர்த்தங்களுடையது.[96] எனவே, தலையாயிருப்ப

[95] C.Blomberg, *1Corinthians: The NIV Application Commentary,* p. 209.

[96] சில ஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தில் "தலை" என்னும் சொல் "அதிகாரம்" என்னும் அர்த்தத்தில் அல்ல, "ஆரம்பம்" (source) என்னும் அர்த்தத்திலேயே உள்ளது என்று கூறுகின்றனர். இவர்களுடைய கருத்தின்படி, பெண்ணுக்கு ஆண் ஆரம்பமாயிருக்கிறான், அதாவது ஆணிலிருந்து பெண் உருவாக்கப்பட்டாள் என்னும் அர்த்தத்திலேயே பெண்ணுக்கு ஆண் தலையாயிருப்பதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளார் (S.Bedale, The Meaning of 'Kephale' in the Pauline Epistles" pp. 211-215). ஆனால், ஆணிலிருந்து பெண் உருவாக்கப்பட்டாள் என்று மாத்திரமல்ல, பெண்ணிலிருந்து ஆண் உருவாக்கப்படுகின்றான் என்றும் பவுல் இப்பகுதியில் கூறுவதனால் (1கொரி.11:12), ஆணைப் பெண்ணின் ஆரம்பமாகக் கருதும் விதத்திலேயே தலை என்னும் சொல் இவ்வசனத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது என்று கூறமுடியாது (D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the New Testament*, pp. 515-516). மேலும், இவ்வர்த்தத்தின்படி, கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் என்று கூறும்போது, "இயேசுகிறிஸ்து தேவனிலிருந்து வந்தவர், அவர் தேவனால் உருவாக்கப்பட்டவர்" என்னும் தவறான அர்த்தத்தையே கொடுக்கும். இதனால், இவ்வசனத்தில் தலை என்பதை ஆரம்பம் என்று கருதுபவர்கள் இயேசுகிறிஸ்துவின் மானிடப் பிறப்பைப் பற்றிய விவரணமாக இவ்வசனத்தை விளக்குகின்றனர் (G.D.Fee, *First Corinthians: New International Commentary on the NT*, p. 505). ஆனால், இவ்வசனம் இடம்பெறும் பகுதி, சபையின் செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட ஆணினதும் பெண்ணினதும் நிலைமை பற்றிய விவரணமாயிருப்பதனால், அதாவது, சபையின் செயற்பாட்டு நிலையில் ஆண் பெண்ணுக்கு மேலானவனாக இருப்பது பற்றிய விளக்கமாயிருப்பதனால், இவ்வசனத்தில் தலை என்பது அதிகாரம் என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது (C.Blomberg, *1Corinthians: The NIV Application Commentary,* pp. 208-209; S.J.Kistenmaker, *1Corinthians: New Testament Commentary*, pp. 365-367).

வர் அதிகாரமுடையவராக அல்லது முக்கியமானவராக இருக்கின்றார். எனினும், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில் வழிபாட்டின்போது சபையில் ஆணும் பெண்ணும் செயற்படவேண்டிய விதம் பற்றியே விளக்கப்பட்டுள்ளதினால் அதிகாரம் என்னும் அர்த்தமே இவ்வசனத்திற்குப் பொருத்தமானதாய் உள்ளது.[97] உண்மையில், இயேசுகிறிஸ்து தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழாகச் செயற்படுவதுபோல, சபையில் பெண்கள் ஆணினுடைய தலைமைத்துவத்துக்குக் கீழாகச் செயற்பட வேண்டும் என்றே பவுல் இப்பகுதியில் விளக்கியுள்ளார்.

கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் என்பது தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் இடையிலான உயர்வு தாழ்வு பற்றிய விவரணம் அல்ல

சபையின் தலைமைத்துவம் ஆணிடம் இருந்தாலும், ஆணின் தலைமையின் கீழாகச் செயற்படும் பெண் ஆணைவிடத் தாழ்வானவள் என்று வேதாகமம் கூறவில்லை. ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பது வேதத்தின் தெளிவான போதனையாகும். ஆண் பெண் இருவருமே தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதோடு (ஆதி.1:27),[98] கிறிஸ்துவுக்குள் இருவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (கலா.3:27-28).[99] எனவே, பெண் ஆணுக்குக் கீழாக இருந்து செயற்பட்டாலும் அவள் ஆணுக்குச் சமமானவளாகவே இருக்கின்றாள். இதைப்போலவே, இயேசுகிறிஸ்து தேவனுக்குக் கீழாக இருந்து செயற்பட்டாலும் தேவனுக்குச் சமமானவராகவே இருக்கின்றார். "இயேசுகிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருப்பது அவரது தேவத்துவத்திலும், தேவத்தன்

[97] W.A.Grudem, "Does *Kephale* (Head) Means 'Source' or 'Authority Over' in Greek Literature? A Survey of 2336 Examples" pp. 38-59; W.A.Grudem, "The Meaning of *Kephale*: A Response to recent Studies" pp. 3-72.

[98] ஆதியாகமம் 1:27ல் "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[99] கலாத்தியர் 3:27-28ன்படி "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்."

மையிலும் அல்ல. அவரது செயல்களிலேயாகும்."[100] எனவே, இது "செயற்பாட்டு ரீதியிலான தலைமையே தவிர மேன்மையான தன்மை அல்ல."[101] நாம் ஏற்கனவே 150ம் பக்கத்தில் பார்த்தபடி, இயேசு கிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் இருந்த காலத்திலும், அவரும் பிதாவும் ஒரே தன்மையுடையவர்களாகவே இருந்தனர் (யோவா.10:30, 14:28). அப்படியிருந்தும், இயேசுகிறிஸ்து தம்மைப் பிதாவுக்குக் கீழ்ப்படுத்திச் செயற்பட்டார் (யோவா.4:34, மத்.26:39).[102] இதனால், இத்தகைய செயற்பாட்டிலேயே இயேசுகிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார். எனவே, இது அவர் தேவனை விடத் தாழ்வானவர் என்பதற்கான ஆதாரம் அல்ல.

## (ஊ). கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (1கொரிந்தியர்.15:28)

இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்னும் வேதப்புரட்டு உபதேசத்துக்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வேதவசனம் 1கொரிந்தியர் 15:28 ஆகும்.[103] "சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாக இருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவனாக இருந்தால் இவ்வாறு தேவனுக்குக் கீழ்ப்பட்டிருக்க மாட்டார்" என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், அவர் யெகோவா தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்பட்டவராக இருப்பதாக வாதிடுகின்றனர்.[104] எனினும், இவ்வசனமும், இயேசுகிறிஸ்துவினுடைய செயலை அடிப்படையாகக்கொண்ட தாழ்வான

---

[100] G.B.Wilson, *1Corinthians: A Digest of Reformed Comment*, p. 155.

[101] R.M.Bowman, *Why You Should Believe in the Trinity,* p. 81.

[102] யோவான் 4:34ல் "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து மத்தேயு 26:39ல் "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினார்."

[103] Anonymous, *Reasoning with the Scriptures*, p. 410.

[104] Anonymous, *Let God be True*, p. 104.

நிலையாக உள்ளதே தவிர, அவருடைய தேவத்தன்மையின் தாழ்வைப் பற்றிய விவரணம் அல்ல.[105]

“இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் எவ்வாறு தம்மைப் பிதாவுக்குக் கீழ்ப்படுத்தி செயற்பட்டாரோ அதேவிதமாக உலகின் முடிவிலும் தேவனுக்குக் கீழ்ப்பட்டுச் செயல்படுவார் என்பதையே இவ்வசனம் அறியத்தருகிறது.”[106] அதாவது, உலகத்தின் முடிவில் ஆயிரம் வருஷங்கள் இவ்வுலகை ஆளுகை செய்யும் இயேசு கிறிஸ்து,[107] 24ம் வசனத்தின்படி, அதன் பின்னர் ராட்சியத்தைத் தேவனிடம் கொடுத்துவிட்டு அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என்றே 28ம் வசனம் கூறுகிறது. எனினும், “இது எவ்விதத்திலும் அவருடைய தேவத்தன்மையின் தாழ்வைப்பற்றிய விவரணம் அல்ல.”[108] ஏனெனில், தேவனுடைய சித்தத்திற்குத் தம்முடைய சித்தத்தை இயேசுகிறிஸ்து கீழ்ப்படுத்துவதைப்பற்றி அறியத்தரும் இவ்வசனம், “அவருடைய ஆள்தத்துவத்தினதோ, தேவத்துவத்தினதோ தாழ்வைப்பற்றி எதுவும் கூறவில்லை.”[109]

இயேசுகிறிஸ்து தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என்பது, அவருடைய தேவத் தன்மையின் தாழ்வை அல்ல, அவருடைய செயல்நிலையின் தன்மையையே குறிக்கின்றது.

இயேசுகிறிஸ்து தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என்பது, அவருடைய தேவத் தன்மையின் தாழ்வைக் குறிக்கவில்லை என்பதை இவ்வசனத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் “எதிர்காலச் சொற்கள்” அறியத்தருகின்றன. அதாவது, இயேசுகிறிஸ்து உலக முடிவிலேயே தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என்றே 1கொரிந்தியர் 15:28ல் குறிப்பிடப்பட்டுள்ளதி

105 C.Vaughan & T.D.Lea, *1Corinthians: Bible Study Commentary*, pp. 157-158; M.Taylor, *1Corinthians: The New American Commentary*, pp. 389-390.
106 L.Morris, *1Corinthians: Tyndale New Testament Commentaries*, p. 213.
107 இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சியைப்பற்றிய முழுமையான வேதாகமப் போதனையை அறிந்துகொள்வதற்கு எனது *இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை* என்னும் நூலைப் பார்க்கவும்.
108 G.D.Fee, *The First Epistle to the Corinthians: New International Commnetary on the New Testament*, p. 760.

னால், அவர் தற்பொழுது தேவனுக்குக் கீழான நிலையில் இல்லை என்பது தெளிவாகின்றது. தற்பொழுது தேவனுக்கு சமமான நிலையில் இருக்கும் இயேசுகிறிஸ்து, எதிர்காலத்திலேயே தேவனுக்குத் தம்மைக் கீழ்ப்படுத்துவார். எனவே, கீழான நிலை தேவத் தன்மையின் நிலை என்றால், இது எப்பொழுதும் ஒரே நிலையிலேயே இருக்கவேண்டும். அதாவது, எதிர்காலத்தில் மாத்திரமல்ல, நிகழ்காலத்திலும் அவர் தேவனுக்குக் கீழான நிலையிலேயே இருக்க வேண்டும். ஆனால், எதிர்காலத்திலேயே இயேசுகிறிஸ்து தேவனுக்குத் தம்மைக் கீழ்ப்படுத்துவதனால், தற்பொழுது அவர் தேவனுக்குச் சமமான நிலையில் இருப்பதோடு, தாழ்த்தப்படும் நிலை அவருடைய கீழ்ப்படிதலின் செயலாகவே உள்ளது.[110] மேலும், எதிர்காலத்தில் இயேசுகிறிஸ்து தேவனுக்கு கீழ்ப்பட்டிருக்கும் செயலானது, தம்முடைய ராஜ்யத்தைத் தேவனுக்கு கொடுக்கும் செயலாக இருப்பதை 24ம் வசனம் அறியத்தருகின்றது (1கொரி.15:24).[111] எனவே, தேவனைவிட இயேசுகிறிஸ்து தாழ்வானவர் என்று இவ்வேதப் பகுதி எவ்விதத்திலும் கூறவில்லை.

மனிதரை மீட்டு இரட்சிப்பதற்காக இயேசுகிறிஸ்து தம்மைத் தாழ்த்தி செயல்பட்டதைப்பற்றிய வேதவசனங்களை ஆதாரமாகக்கொண்டு, அவர் பிதாவைவிடத் தாழ்வானவர் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது தவறாகும்.

இயேசுகிறிஸ்து தாழ்வானவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் வசனங்கள் அனைத்தும், மனிதரை மீட்கும் அவருடைய செயல்களோடு சம்பந்தப்பட்டவைகளாகவே உள்ளன. மானிட மீட்பைப் பற்றிய தேவதிட்டத்தில் முக்கிய பங்குவகிக்கும் இயேசுகிறிஸ்து, மனிதரை மீட்டு இரட்சிப்பதற்காகத் தம்மைத் தாழ்த்தி செயல்பட்டார். எனினும், அவர் தம்மைத் தாழ்த்திச் செயற்பட்ட சந்தர்ப்பங்களிலும், முழுமையான தேவத்தன்மை உடையவராகவே இருந்தார். பிலிப்பியர் 2:6-7 இயேசுகிறிஸ்துவின் தற்காலிகமான தாழ்த்தப்பட்ட மானிட

[109] D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the NT*, p. 713.
[110] W.H.Mare, *1Corinthians, The Expositor's Bible Commentary Vol.10*, p. 286.
[111] C.Hodge, *1&2 Corinthians: Geneva Series of Commentaries*, p. 333.

நிலையைப் பற்றி அறியத்தருகையில்,[112] கொலோசெயர் 2:9 அவர் எப்போதும் முழுமையான தேவத்தன்மை உடையவராகவே இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[113] எனவே அவர் தம்மைத் தாழ்த்திய போது கூறிய விஷயங்களையும், அத்தாழ்மையின் நிலையைக் குறிப் பிடும் வசனங்களையும் ஆதாரமாகக்கொண்டு, அவர் பிதாவாகிய தேவ னைவிடத் தாழ்வானவர் என்றோ, தேவத் தன்மையற்றவர் என்றோ கருதுவது தவறாகும்.

## (2). தனித்துவமான தேவனாய் வெளிப்படுத்தும் வசனங்கள்

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனைவிடத் தாழ்வானவர் என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் வேதவசனங்கள் அனைத்தும், அவர் மனிதனாகத் தம்மைத் தாழ்த்தியபோது, அதாவது அவர் மானிட வரையறைகளுக்குள் வாழ்ந்தபோது கூறியவைகளாகவே உள்ளன. எனவே இவ்வசனங்களை ஆதாரமாகக்கொண்டு, இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் என்றும், தேவத்தன்மை அற்றவர் என்றும் கூறுவது தவறாகும். ஏனென்றால், அவர் மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பும், மனிதனாக இவ்வுலகத்தில் இருந்த காலத்திலும் முழுமையான தேவனாகவே இருந்தார் என்றே வேதாகமம் கூறுகிறது. எனவே, இயேசுகிறிஸ்துவைத் தனித்துவமான தேவனாய் வெளிப்படுத் தும் வேதவசனங்களை இப்பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம். எனினும், யெகோவாவின் சாட்சிகள் இத்தகைய வசனங்களைத் தங்களுடைய உபதேசத்துக்கு ஏற்றவிதமாக மாற்றி தவறாக மொழிபெயர்த்துள்ளனர்.

இயேசுகிறிஸ்து தேவன் என்பதை நேரடியாக அறியத்தரும் வேதவ சனங்களில் முக்கியமானது யோவான் 1:1 ஆகும். இவ்வசனத்தின்

---

[112] பிலிப்பியர் 2:6-8ல் "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷர் ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
[113] கொலோசெயர் 2:9ல் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதிப்பகுதி "அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று கூறுகிறது. எனவே, வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து (யோவா.1:14) தேவன் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும். ஆனால், மூலமொழியில் இவ்வாக்கியத்தில் தேவன் என்னும் பெயர்ச்சொல்லுக்கு முன் "சுட்டுச் சொல்" (article) இல்லாதிருப்பதனால்,[114] யெகோவாவின் சாட்சிகள் "சாதாரன சுட்டுச் சொல்லைச்" (indefinite article) சேர்த்து "வார்த்தை ஒரு தேவனாயிருந்தது" என்று இவ்வாக்கியத்தை மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் இத்தகைய மொழிபெயர்ப்பு, இயேசுகிறிஸ்துவை சாதாரணமான ஒரு தெய்வமாகக் காண்பிப்பது மாத்திரமல்ல, பலதெய்வக் கோட்பாட்டுக்கு ஆதாரமான வசனமாகவும் அமைந்துவிடும். அதாவது, "இயேசுகிறிஸ்து ஒரு தெய்வம், தேவன் இன்னுமொரு தெய்வம் என்னும் தவறான கருத்தைக் கொண்டுவரும்."[115] சில வேத ஆராய்ச்சியாளர்கள், சுட்டுச்சொல் இல்லாத 'தேவன்' என்னும் பெயர்ச்சொல்லை இவ்வாக்கியத்தில் பெயருரிச்சொல்லாக (adjective) எடுத்து, இச்சொல், தேவனைக் குறிக்காமல், தேவத் தன்மையைக் குறிப்பதாக இவ்வசனத்தை விளக்கியுள்ளனர்.[116] அதாவது, "வார்த்தை தேவத்தன்மையுடையது" என்று இவர்கள் கூறுகின்றனர்.[117] ஆனால், கிரேக்கமொழி இலக்கணத்தின்படி இது சரியான விளக்கமாய் இல்லை.[118] ஏனென்றால், இரண்டு பெயர்ச்சொற்கள் உள்ள இவ்வாக்கியத்தில், "வார்த்தை" என்னும் பெயர்ச்சொல்லுக்கு முன் சுட்டுச் சொல்லை உபயோகித்த யோவான், "தேவன்" என்னும் அடுத்த பெயர்ச்சொல்லுக்கு முன் சுட்டுச்சொல்லை உபயோகிக்காததற்குக் காரணம், இவ்வாக்கியத்தில் "வார்த்தை" என்னும் சொல்லே எழுவாய் என்பதை அறியத்தருவதற்கேயாகும்.[119] உண்மையில், வார்த்தை எத்தன்மையுடையது என்பதை

[114] கிரேக்கத்தில் பொதுவாக பெயர்ச் சொற்கள் சுட்டுச்சொல்லுடனேயே எழுதப்படும். அதாவது "அந்த" "இந்த" என்னும் சிறப்புச் சுட்டுச்சொல் (definite article) அல்லது "ஒரு" என்னும் சாதாரண சுட்டுச்சொல்லுடன் (indefinite article) எழுதப்படும்.

[115] J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 25.

[116] Moffat, Goodspeed, Schonfield என்போரது வேத மொழிபெயர்ப்புகளில் இவ்விதமாகவே இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[117] W.Barclay, *The Gospel of John Vol.I: The Daily Study Bible*, p. 39.

[118] N.Turner, *Grammatical Insights into the New Testament*, p. 17.

[119] Robertson, *Grammer of the Greek New Testament in the Light of Historical Research*, p. 767. தேவன் என்னும் சொல்லைப் பெயருரிச்சொல்லாக உபயோகிக்க தனியான ஒரு வார்த்தை கிரேக்க மொழியில் இருப்பதனால் (*theios*) யோவானுடைய நோக்கம் இதுவாக இருந்திருந்தால் அவர் இச்சொல்லையே

அல்ல, வார்த்தை யார் என்பதையே யோவான் இதன் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது, வார்த்தை தேவன் என்பதை யோவான் அறியத்தருகிறார்.[120] எனவே, "தேவனைப்பற்றி என்னவெல்லாம் சொல்ல லாமோ, அவையனைத்தையும் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் சொல்லலாம் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளுகின் றோம்."[121] அதாவது, "பிதாவாகிய தேவனைப்போலவே இயேசுகிறிஸ்து வும் தேவனாக இருக்கின்றார்."[122] பிதாவினுடைய தெய்வீகத் தன்மை களே இயேசுகிறிஸ்துவிலும் உள்ளன.[123] உண்மையில், இயேசு கிறிஸ்து "முழுமையான தேவனாக இருக்கின்றார்"[124] என்பதே "வார்த்தை தேவனாயிருந்தது" என்னும் வாக்கியத்தின் அர்த்தமாகும்.

யோவான் 1:1ல் தேவன் என்னும் சொல் சுட்டுச்சொல் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளதினால் இயேசுகிறிஸ்து தேவன் அல்ல என்றால், சுட்டுச்சொல் இல்லாமல் பிதாவாகிய தேவன் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அவரும் தேவன் அல்ல என்றே கூறவேண்டும். புதிய ஏற்பாட்டில் தேவன் என்னும் சொல் பல இடங்களில் சுட்டுச்சொல் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.5:9, 6:24, லூக்.1:35, 2:40, யோவா.1:6, 1:12, 1:18, 3:2, 3:21, 9:16, 9:33).[125] யெகோவாவின்

உபயோகித்திருப்பார் (R.E.Brown, *John I-XII: Anchor Bible Commentary*, p. 5; R.Bultmann, *The Gospel of John*, pp. 33-34). எனவே, சுட்டுச்சொல் இல்லாத நிலையில் தேவன் என்னும் சொல் யோவான் 1:1ல் பெயருரிச்சொல்லாக உபயோகிக்கப்படவில்லை.

[120] D.A.Carson, *The Gospel According to John: Pillar New Testament Commentary*, p. 117; D.E.Hartley, "John 1:1, Colwell, and Mass/Count Nouns in Recent Discussion" pp. 17-19. இவ்வாக்கியத்தில் தேவன் என்பதற்கு முன் சுட்டுச் சொல்லை உபயோகித்தால், வார்த்தையும் தேவனும் ஒருவர் என்னும் அர்த்தத் தையே தரும். இதனால், இதற்கு முன்னுள்ள வாக்கியத்தில் சொல்லப்பட்டதை, அதாவது, வார்த்தை தேவனிடத்தில் இருந்தது என்று இருவரையும் தனிப்பட்ட நபர்களாகக் குறிப்பிட்டுள்ளதை முரண்படுத்துவதாய் இருக்கும். இதைத் தவிர்ப்பதற் காகவும் யோவான் தேவன் என்பதற்கு முன் சுட்டுச்சொல்லை உபயோகிக்க வில்லை (A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 28).

[121] L.Morris, *John: New International Commentary on the New Testament*, p. 76; D.B.Wallace, *Greek Grammar Beyond the Basics*, p. 735.

[122] F.J.Moloney, *John: Sacra Pagina Bible Commentary*, p. 35.

[123] D.B.Wallace, *Greek Grammar Beyond the Basics*, p. 269.

[124] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol.36*, p. 11.

[125] C.S.Keener, *The Gospel of John*, pp. 372-374; D.J.MacLeod, "The Eternality and Deity of the Word: John 1:1-2" pp. 59-60.

சாட்சிகள் யோவான் 1:1ல் செய்ததுபோல, இவ்விடங்களில் தேவன் என்பதற்கு முன் "ஒரு" என்னும் சாதாரணச் சுட்டுச்சொல்லைச் சேர்த்தால், இவ்வசனங்களின் அர்த்தம் பிதாவாகிய தேவனை நிந்திப்ப தாகவே இருக்கும். இதைப்போலவே, யோவான் 1:1ல் சுட்டுச்சொல் இல்லாத தேவன் என்னும் சொல்லுக்கு முன் சுட்டுச்சொல்லைச் சேர்த்துள்ள யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவை நிந்திப் பவர்களாகவே இருக்கின்றனர்.

தேவனாக இருந்த இயேசுகிறிஸ்து ஆதியிலிருந்தே இருப்பதாகவும் யோவான் 1:1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே 135ம் பக்கத் தில் பார்த்தபடி இவ்வாக்கியத்தில் "ஆதியிலே" என்னும் சொல் ஆரம்பங்கள் எதுவும் அற்ற நித்தியத்தைக் குறிப்பதனால், இயேசுகி றிஸ்து நித்திய தேவனாக இருக்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது. இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு எப்படிப்பட்டவராக இருந்தார் என்பதை நாம் ஏற்க னவே ஆராய்ந்த பிலிப்பியர் 2:6 அறியத்தருகிறது. இவ்வசனத்தில் "தேவனுடைய ரூபம்" என்பதில் ரூபம் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், மாற்றமடையாத உட்புறத்தன்மையைக் குறிப்பதனால்,[127] இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவ தற்கும் முன்பே தேவத்தன்மை உடையவராய் இருந்தார் என்பது தெளிவாகின்றது. இதனாலேயே "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்று 1தீமோத்தேயு 3:16ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு தேவனாக இருந்ததைப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர் மக்களுக் குத் தரிசனமளித்த சம்பவங்கள் அறியத்தருகின்றன. இச்சம்பவங்களில் தீர்க்கதரிசியாகிய ஏசாயாவிற்கு கிடைத்த தரிசனத்தில், அவர் தேவ னைக் கண்டதாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசா. 6:1,5).[128] ஆனால், ஏசாயா கண்ட தேவன் இயேசுகிறிஸ்து என்பதைப் புதிய ஏற்பாடு அறியத்தருகிறது (யோவா.12:41). ஏனெனில், யோவான்

[127] பக்கம் 147.

[128] ஏசாயா 6:1ல் "உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்" என்று கூறும் ஏசாயா, 6:5ல் "சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" என்று குறிப்பிட்டுள்ளார்.

12ம் அதிகாரத்தில் 37ம் வசனத்திலிருந்து வாசித்துக்கொண்டு வரும் போது, 41ம் வசனத்தில், ஏசாயா இயேசுகிறிஸ்துவையே கண்டார் என்பதை அறிந்திடலாம். 41ம் வசனத்தில் "ஏசாயா அவருடைய மகிமையைக்கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிற போது இவைகளைச் சொன்னான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், இவ்வசனத்தில் "அவர்" என்னும் சொல் இயேசுகிறிஸ்துவையே குறிக்கின்றது என்பதை 37ம் வசனத்திலிருந்து வாசிக்கும்போது அறிந்திடலாம். இதனால்தான், புதிய மொழிபெயர்ப்புகளில் "மேசியாவைக் குறித்தே இப்படிப் பேசி னார்"[129] என்றும், "ஏசாயா இயேசுவின் மகிமையைக் கண்டு அவரைக் குறித்து பேசியபோதே இதைச் சொன்னான்"[130] என்றும் "ஏசாயா மெசியாவின் மாட்சியைக் கண்டதால்தான் அவரைப்பற்றி இவ்வாறு கூறினார்"[131] என்றும் இவ்வசனத்தை மொழிபெயர்த்துள்ளனர். இதைப் போலவே, ஏனைய பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் இயேசுகிறிஸ்து வைத் தரிசித்துள்ளனர்.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு தேவனாக இருந்ததைப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர் மக்களுக்குத் தரிசனமளித்த சம்பவங்கள் அறியத்தருகின்றன.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுகிறிஸ்து மனிதருக்குத் தரிசனம் கொடுத்த சந்தர்ப்பங்களில் அவர் "கர்த்தருடைய தூதனானவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார். எனினும், இங்கு "தூதன்" என்னும் சொல், அவர் ஒரு தேவதூதர் என்னும் அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. வேதாகமத்தில் தூதர்கள் "தேவதூதன்" அல்லது "தூதன்" என்றே அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் "கர்த்தருடைய தூதனானவர்" என்று மரியாதையாகக் குறிப்பிடப்படவில்லை. (இயேசுகிறிஸ்து தேவதூதன் அல்ல என்பதற்கான ஆதாரங்கள் 7ம் அத்தியாயத்தில் விளக்கப்பட் டுள்ளன). ஆனால், "இயேசுகிறிஸ்து மனிதருக்குத் தரிசனம் கொடுத்த போது, அவர் தேவனுடைய செய்தியாளராக மனிதரிடம் வந்ததினால்,

129 ராஜரீகம் என்பாரது மொழிபெயர்ப்பில் இவ்வாறு உள்ளது.
130 இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வாறு உள்ளது.
131 திருவிவிலியத்தில் இவ்வாறு உள்ளது.

அவருடைய பணியை அடிப்படையாகக் கொண்டு அவர் "கர்த்தருடைய தூதனானவர்" என்று அழைக்கப்பட்டுள்ளார். எனவே, தூதன் என்னும் சொல், அவருடைய தன்மையைக் குறிக்கவில்லை."[132] இதனால்தான், அவர் கர்த்தருடைய தூதனானவராகத் தரிசனமளித்த சந்தர்ப்பங்களில் "கர்த்தர்" என்றும் "தேவன்" என்றும் அழைக்கப்பட்டுள்ளதோடு,[133] தேவத்தன்மைகளுடையவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார்.[134] கர்த்தருடைய தூதனானவர் மோசேக்குத் தரிசனமளித்த போது, தாம் "எப்போதும் இருக்கும் தெய்வம்" என்பதை "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்னும் தெய்வப்பெயரின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் (யாத். 3:2,14).[135] உண்மையில், கர்த்தருடைய தூதனானவராகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தரிசனம் கொடுத்தவர் தம்மைத் தேவனாகவே வெளிப்படுத்தியுள்ளார்.

கர்த்தருடைய தூதனானவராகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களுக்குத் தரிசனம் கொடுத்தவர் இயேசுகிறிஸ்து என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது. யோவான் 1:18ன்படி "பிதாவாகிய

[132] J.A.Borland, *Christ in the Old Testament*, pp. 36-37.

[133] உதாரணத்துக்கு ஆகாருக்குத் தரிசனம் கொடுத்த கர்த்தருடைய தூதனானவர் (ஆதி.16:7-12), தேவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (ஆதி.16:13). அதேபோல, யாக்கோபுக்குத் தரிசனமாகிய தூதர் (ஆதி.31:11), பெத்தேலிலே உனக்குத் தரிசனமாகிய கர்த்தர் நானே என்று கூறியுள்ளார் (ஆதி.31:13). மேலும், எரிகிற முற்செடியில் மோசேக்குத் தரிசனமான கர்த்தருடைய தூதனானவர் (யாத்.3:2), கர்த்தர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (யாத். 3:4). அதுமட்டுமல்ல, அவரே, தாம் தேவன் என்று கூறியதோடு (யாத்.3:6), இருக்கிறவராகவே இருக்கும் தெய்வமாகத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார் (யாத்.3:14). கிதியோனுக்குத் தரிசனம் கொடுத்த கர்த்தருடைய தூதனானவர் (நியா.6:12), கர்த்தராகவே இருக்கின்றார் (நி.6:14,16).

[134] கர்த்தருடைய தூதனானவராகத் தரிசனமளித்தவர் சிருஷ்டிக்கும் செயல்திறன் உள்ளவராகவும் (ஆதி.16:10), சகலமும் அறிந்தவராகவும் (ஆதி.16:13, யாத். 3:7), எதிர்காலத்தை முன்னறிவிக்கக்கூடியவராகவும் (ஆதி.16:10-12, யாத்.3:20), பாவங்களை மன்னிப்பவராகவும் (யாத்.34:7), மக்களை மீட்பவராகவும் (ஆதி. 48:16, யாத்.3:8), மானிட வாழ்வின்மீது அதிகாரமுடையவராகவும் (ஆதி.22:12), அற்புதங்களைச் செய்பவராகவும் (யாத்.3:2, 3:20, நியா.6:21, 13:20), பரிசுத்தமானவராகவும் (யாத்.3:5, யோசு.5:15), வழிபாட்டுக்குரியவராகவும் (யாத்.3:5, யோசு. 5:14), பலிகளை ஏற்றுக்கொள்பவராகவும் (நியா.13:19, 13:23) இருந்துள்ளார்.

[135] யாத்திராகமம் 3:2ல் "அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 14ம் வசனத்தில் அவர் மோசேயுடன் பேசும்போது, "அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்."

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை." அவர், "மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாய் இருக்கிறார்" (1தீமோ. 6:16). எனவே, கர்த்தருடைய தூதனானவராகத் தரிசனம் கொடுத்தது பிதாவாகிய தேவனாக இருக்க முடியாது. இதேபோல, திரித்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரும் இரண்டு தடவைகள் மாத்திரமே மானிடக் கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் புதிய ஏற்பாட்டில் தரிசனம் கொடுத்துள்ளார் (மாற்.1:10, அப்.2:2-3).[136] எனவே, பழைய ஏற்பாட்டுத்தரிசனங்கள் இயேசுகிறிஸ்துவினுடையவை என்பதை மறுப்பதற்கில்லை. இதைப் புதிய ஏற்பாடும் உறுதிப்படுத்துகிறது. இதனால்தான், கர்த்தருடைய தூதனானவரின் கட்டளைப்படி செயல் பட்ட மோசே (யாத்.3:2), "கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" என்று எபிரெயர் 11:26ல் குறிப்பி டப்பட்டுள்ளது. மேலும், இஸ்ரவேல் மக்களோடு வனாந்திரப் பிரயாணத் தில் சென்றவர் இயேசுகிறிஸ்துவே என்பதை 1கொரிந்தியர் 10:4 அறியத்தருகிறது.[137] எனவே, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தரு டைய தூதனானவராகத் தரிசனம் கொடுத்தவர் இயேசுகிறிஸ்துவே என்பது தெளிவாகின்றது. எனினும், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுல கத்திற்கு வந்த பின்னர் கர்த்தருடைய தூதனானவரின் தரிசனங்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் இடம்பெறவில்லை. ஏனெனில், இயேசு கிறிஸ்து முழுமையாகவும், நிரந்தரமாகவும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதருக்குத் தம்மை வெளிப்படுத்தியதினால், அதன்பிறகு பழைய ஏற்பாட்டுக்காலத்தைப் போன்ற தற்காலிகத் தரிசனங்கள் இடம்பெற வில்லை.

இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தருடைய தூதனா னவராக தரிசனம் கொடுத்த சந்தர்ப்பங்களில் மாத்திரமல்ல, மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் முழுமையான தேவனாகவே இருந்

---

[136] மாற்கு 1:10ல் "அவர் (இயேசுகிறிஸ்து) ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்." அப்போஸ்தலர் 2:3ல் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்களுக்கு "அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.

[137] 1கொரிந்தியர் 10:4ல், "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தார். அக்காலத்தில் அவர் மானிட வரையறைகளுக்குள் தம்மை உட்படுத்தியிருந்த போதிலும், தமது தேவத்தன்மையை துறந்துவிட வில்லை. உண்மையில், நாம் ஏற்கனவே 148ம் பக்கத்தில் பார்த்தபடி, அவரது மாம்சமாகுதல், தெய்வீகத் தன்மைகளைத் துறப்பதையல்ல, மானிடத்தன்மைகளைச் சேர்ப்பதாகவே இருந்தது. இதனால்தான், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருப்பதாக" கொலோசெயர் 2:9 கூறுகிறது. யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தில், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்" என்பதை "தெய்வீகத் தன்மையின் பரிபூரணம்" என்று மாற்றி, "ஒருசில தேவத்தன்மைகள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவில் இருந்ததாகவும், அவர் முழுமையான தேவனாய் இருக்கவில்லை" என்றும் கூறிகின்ற னர்.[138] ஆனால், "ஒருசில தேவத் தன்மைகள் அல்ல, முழுமையான தேவத்துவமும் அவரில் இருப்பதாகவே கொலோசெயர் 2:9 அறியத்தரு கின்றது."[139] இவ்வசனத்தில் "தேவத்துவத்தின் பரிபூரணம்" என்பது, மூலமொழியின்படி, "தெய்வீக வல்லமைகளினதும் தன்மைகளினதும் முழுமை"[140] "முழுமையான தேவத்துவம்"[141] "முழுமையான தேவத்து வத்தின் முழுமை"[142] என்னும் அர்த்தமுடையது. எனவே, இயேசு கிறிஸ்து முழுமையான தேவனாக இருப்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.[143] மேலும், மூலமொழியில் இவ்வாக்கியத்தின் இலக் கண அமைப்பு முறை, முழுமையான தேவத்துவம் "இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே இருக்கின்றது"[144] என்பதையும், அது "எப்போதும் நிரந்தரமாக அவரில் இருக்கின்றது"[145] என்பதையும் அறியத்தருகின்றது. எனவே, இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பும்,

---

[138] மூலமொழியில் "தெய்யோட்டெஸ்" (*theiotes*) என்னும் சொல் இருந்தால் யெகோவாவின் சாட்சிகளின் மொழிபெயர்ப்பைச் சரி என்று ஏற்றுக்கொள்ளலாம். இச்சொல் தெய்வீகத் தன்மைகளில் ஒன்றை அல்லது சிலவற்றைக் குறிக்கும். ஆனால், "தியோட்டெஸ்" (*theotes*) என்னும் கிரேக்கச் சொல் இவ்வசனத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதனால், யெகோவாவின் சாட்சிகளின் மொழிபெயர்ப்பு தவறானதாகவே உள்ளது.

[139] N.T.Wright, *Colossians and Philemon: Tyndale NT Commentaries*, p. 103.

[140] J.B.Lightfoot, *St.Paul's Epistles to the Colossians and to Philemon*, p. 181.

[141] J.H.Thayer, *A Greek-English Lexicon of the New Testament*, p. 1401.

[142] P.T.O'Brien, *Colossians, Philemon: Word Biblical Commentary*, p. 111.

[143] B.B.Warfield, *The Person and Work of Christ*, p. 46.

[144] C.Vaughan, *Colossians: Expositor's Bible Commentary Vol.11*, p. 199; D.J.Moo, *Colossians and Philemon: The Pillar New Testament Commentary*, p. 193.

[145] D.E.Garland, *Colossians: The NIV Application Commentary*, p. 145.

அவர் மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும், மகிமையடைந்து பரலோகத்திலிருக்கும் தற்காலத்திலும் முழுமையான தேவனாகவே இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பும், அவர் மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும், மகிமையடைந்து பரலோகத்திலிருக்கும் தற்காலத்திலும் முழுமையான தேவனாகவே இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்து மனிதனாக இருந்த காலத்திலும் தேவனாக இருந்தார் என்பதை அறியத்தரும் இன்னுமொரு வசனம் அப்போஸ்தலர் 20:28 ஆகும். "தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபை" என்னும் இவ்வசனம், இயேசுகிறிஸ்து தேவன் என்பதை நேரடி யாக அறியத்தருகிறது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இவ்வச னத்தில் "தம்முடைய சுயரத்தத்தினாலே" என்பதை "தம்முடைய குமாரனுடைய ரத்தத்தினாலே" என்று மாற்றியுள்ளனர்.[146] அண்மைக் காலத்தில் சில கிறிஸ்தவ ஆரய்ச்சியாளர்களும் "பிதாவாகிய தேவனு டைய இரத்தத்தைப் பற்றி வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படாததினால், இவ்வாக்கியத்தைத் "தம்முடைய குமாரனுடைய ரத்தத்தினாலே" என்றும் மொழிபெயர்க்கலாம்" எனக்கூறுகின்றனர்.[147] எனினும், இவ்வச னத்தில் பிதாவே தேவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக இவர்கள் கருதுவதினாலேயே அவர் ரத்தம் சிந்தினார் என்று கூறுவது வேதாகம உபதேசத்துக்கு முரணானது என்னும் எண்ணத்தில், மூலமொழியில் "தேவனுடைய சொந்த" என்றிருப்பதை "தேவனுடைய குமாரன்" என்று மொழிபெயர்த்துள்ளனர்.[148] ஆனால், தேவன் என்பதைக் கட்டாயம் பிதாவாகவே கருதவேண்டும் என்று நினைப்பது அர்த்தமற்றது. ரோமர் 9:5லும், தீத்து 2:13லும் இயேசுகிறிஸ்துவே தேவன் என்று குறிப்பிடப்

[146] The church of God, which he bought with his own blood என்னும் வாக்கியத்தை which he purchased with the blood of his own son என்று மாற்றியுள்ளனர்.

[147] S.D.Toussaint, *Acts: the Bible Knowledge Commentary NT*, p. 414.

[148] W.J.Larkin, *Acts: The IVP New Testament Commentaries*, pp. 296-297; J.B.Polhill, *Acts: The New American Commentary*, pp. 427-428; D.J.Williams, *Acts: New International Biblical Commentary,* p. 358.

பட்டுள்ளார். எனவே, அப்போஸ்தலர் 20:28லும் தேவன் என்பது இயேசு கிறிஸ்துவையே குறிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.[149] சிலுவை யில் அறையப்பட்டவர் "மகிமையின் கர்த்தர்" என்று 1கொரிந்தியர் 2:8ல் குறிப்பிட்ட பவுல், அப்போஸ்தலர் 20:28ல் சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்து தேவன் என்பதை அறியத்தந்துள்ளார். உண் மையில், "தேவனுடைய சுய ரத்தம் என்று பவுல் இவ்வசனத்தில் குறிப்பிடக் காரணம், சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசுகிறிஸ்து தேவனாய் இருப்பதனாலேயாகும்."[150]

தீத்து 2:13ல் இயேசுகிறிஸ்து "மகா தேவன்" என்று குறிப்பிடப்பட்டுள் ளார். இவ்வசனம் "மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ் துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்" என்றிருப்பதனால், இங்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி மட்டுமல்ல, பிதாவாகிய தேவனைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதாக யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின் றனர்.[151] அதாவது, மகாதேவன் என்பது பிதாவாகிய தேவனைப்பற்றிய குறிப்பு என்றும், இயேசுகிறிஸ்து இரட்சகர் என்று மாத்திரமே இவ்வசனம் கூறுகிறது என்பதே இவர்களின் தர்க்கமாகும்.[152] ஆனால், மூலமொழி யில் இவ்வாக்கியம் இரு நபர்களை அல்ல ஒருவரையே குறிக்கின்றது. ஏனெனில், கிரேக்க மொழியில் இரண்டு பெயர்ச்சொற்கள் "உம்" என்னும் சொல்லால் தொடர்புபடுத்தப்படும் போது, முதல் பெயர்ச்சொல் சுட்டுச்சொல்லுடனும் இரண்டாவது பெயர்ச்சொல் சுட்டுச்சொல் இல்லாம லும் இருந்தால், இரண்டாவது பெயர்ச்சொல்லானது முதலாவது பெயர்ச் சொல்லினால் குறிப்பிடப்பட்டவரைக் குறிக்கும் விவரணமாகவே இருக் கும்.[153] மூலமொழியில் தீத்து 2:13ல் "தேவன்" "இரட்சகர்" என்னும்

---

[149] A.T.Robertson, *Word Pictures in the New Testament Vol.3*, p. 353.


[150] J.Calvin, *Acts of the Apostles 14-28*, p. 184.

[151] ஆங்கிலத்தில் KJV வேதாகமம் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கு ஏற்ற விதமாக பிதாவையும் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய விவரணமாகவே இவ்வசனத்தை மொழிபெயர்த்துள்ளது. எனினும், கிரேக்க இலக்கண விதிமுறை களைக் கருத்திற்கொள்ளும்போது, ஆங்கிலத்தில் NIV NEB, NASB, RSV போன்ற வேதாகமங்களில் இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள முறையே சரியானது என்பதை அறிந்திடலாம்.

[152] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 421.

[153] B.M.Metzger, "The Jehovah's Witnesses and Jesus Christ" p. 75; Robertson, A.T. *The Grammar of the Greek New Testament in the Light of Historical Research*, pp. 785-789.

இரண்டு பெயர்ச்சொற்களும் "உம்" என்னும் சொல்லால் தொடர்புபடுத்தப் பட்டுள்ளதோடு, முதலாவது பெயர்ச்சொல்லான தேவனுக்கு மாத்திரமே சுட்டுச்சொல் உள்ளது. எனவே, இவ்வசனத்தில் தேவன் இரட்சகர் என்னும் இரண்டு பெயர்ச்சொற்களும் இயேசுகிறிஸ்துவையே குறிக் கின்றன. அதாவது, "இயேசுகிறிஸ்துவே இவ்வசனத்தில் மகாதேவனா கவும் இரட்சகராகவும் குறிப்பிடப்பட்டுள்ளார்."[154] உண்மையில், ரோமர் 9:5ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல, இயேசுகிறிஸ்து "என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவனாய்" இருக்கின்றார் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.




[154] Dana, H.E. Mantey, *A Manual Grammar of the Greek New Testament,* p. 147.

## ஏழாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

இயேசுகிறிஸ்துவை சிருஷ்டிக்கப்படாத
நித்திய தேவனாக ஏற்றுக்கொள்ளாத
யெகோவாவின் சாட்சிகள்,
அவர் மனிதனாக வருவதற்கு முன்பும்,
உயிர்த்தெழுதலின் பின்பும் மிகாவேல் தூதனாக
இருக்கின்றார் என்று போதிக்கின்றனர்.
சகலத்தையும் சிருஷ்டித்த தேவனாகிய
இயேசுகிறிஸ்துவை
சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தூதனாகக் கருதும்
யெகோவாவின் சாட்சிகளின் வேதப்புரட்டு உபதேசம்
வேதாகமத்தின் வெளிச்சத்தில்
இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு,
அவர் சகலரினதும் வழிபாட்டுக்குரிய தெய்வம்
என்னும் சத்தியம் விளக்கப்பட்டுள்ளது.
இயேசுகிறிஸ்துவை மிகாவேல் தூதன் என்று கூறும்
யெகோவாவின் சாட்சிகள், அவரது சரீரப்பிரகாரமான
உயிர்த்தெழுதலையும் மறுதலிக்கின்றனர். எனினும்,
இயேசுகிறிஸ்து தேவனாக இருப்பதனால்,
மனிதர்களும், தூதர்களும் அவரை வழிபட்டுள்ளதைப்
புதிய ஏற்பாடு அறியத்தருகின்றது.
உண்மையில் இயேசுகிறிஸ்து
தேவதூதர்களையும்விட மேலான நிலையிலேயே
இருக்கின்றார். இதனால், அவரைத் தூதன் என்று
கூறுவது தேவதூஷணமாகவே உள்ளது.

# ஏழாம் அத்தியாயம்



# இயேசு கிறிஸ்து

## மிகாவேல் என்னும் தூதனா? அல்லது தூதர்களுக்கும் தேவனா?

இயேசுகிறிஸ்துவே வழிபாட்டுக்குரிய தெய்வமாயிருக்கின்றார் என்பதே வேதாகமம் போதிக்கும் சத்தியமாகும். ஆனால், இயேசுகிறிஸ்துவைத் தேவனாக ஏற்றுக்கொள்ளாத யெகோவாவின் சாட்சிகள்,[1] அவரைப் பற்றி போதிப்பவைகள் வேதாகம சத்தியத்தை முழுமையாக முரண்படுத்தும் வேதப்புரட்டு உபதேசங்களாகவே உள்ளன. ஏனெனில், நாம் ஏற்கனவே 2ம் அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, இயேசுகிறிஸ்து மனிதனாக வருவதற்கு முன்பும், உயிர்த்தெழுந்ததற்குப் பின்பும் மிகாவேல் என்னும் பெயரில் ஒரு தூதனாகவே இருக்கின்றார் என்றே யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்றனர் (பக்கங்கள் 49-50). ஆனால், நாம் 5ம் 6ம் அத்தியாயங்களில் பார்த்தவிதமாக, இயேசு கிறிஸ்து சிருஷ்டிக்கப்படாத நித்திய தேவனாக இருக்கின்றார்.

இதனால், யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்ற விதமாக இயேசு கிறிஸ்து மிகாவேல் தூதனா? அல்லது, தூதர்களுக்கும் தேவனாக இருக்கின்றாரா? என்பதை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## (1). தேவதூதனாய் மாற்றப்படும் இயேசுகிறிஸ்து

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிகாவேல் என்னும் தூதனை யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவாக மாற்றியுள்ளனர். இதற்கு ஆதாரமாக இவர்கள் உபயோகிக்கும் வேதவசனம் தானியேல் 10:13 ஆகும். இவ்வசனத்தில் "மிகாவேல்" என்னும் தேவதூதன் "பிரதான அதிபதிகளில் ஒருவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வசனத்தையும் தானியேல் 10:21, 12:1ஐயும் ஆதாரமாகக் கொண்டு, இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு, அவர் பிரதான தேவதூதன் மிகாவேலாக இருந்தார் என்று இவர்கள் கூறுகின்றனர்.[1] இதனால், "தானியேல் 12:1ல் மிகாவேல் எழும்புவதைப் பற்றிய தீர்க்கதரிசனம், 1914ல் இயேசுகிறிஸ்து பரலோக சிங்காசனத்தில் ராஜாவாக முடிசூட்டப்பட்டதைப் பற்றியது"[2] என்று வாதிடும் யெகோவாவின் சாட்சிகள், இவ்வசனத்தில் "எழும்புதல்" என்னும் சொல்லை "அதிகாரத்தைக் கைப்பற்றி ராஜாவாய் அரசாளுதல்" என்று விளக்குகின்றனர்.[3] எனினும் நாம் ஏற்கனவே 2ம் அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, 1914ம் ஆண்டில் இயேசுகிறிஸ்து தமது ராட்சியத்தைப் பரலோகத்தில் ஸ்தாபிக்கவில்லை (பக்கங்கள் 35-46). எனவே, இச் சம்பவத்தின் நிறைவேறுதலாக தானியேல் 12:1ஐ யெகோவாவின் சாட்சிகள் விளக்குவது தவறாகவே உள்ளது.

தானியேல் 10:13ல் மிகாவேல் "அதிபதிகளில் ஒருவன்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே, மிகாவேலைப் போன்று இன்னும் பல தூதர்கள் இருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.[4] ஆனால்,

---

[1] *The Watchtower*, 1 February 1991, p. 17; *The Watchtower*, 15 Feb. 1979, p. 31.
[2] Anonymous, *Your Will be Done on Earth*, pp. 310, 313.
[3] Anonymous, *Your Will be Done on Earth*, p. 311.
[4] P.Griffiths, *Jehovah's Witnesses and the Person of Jesus Christ*, L.205.

தானியேல் 10:21ல் "உங்கள் அதிபதி" என்றும், 12:1ல் "பெரிய அதிபதி" என்றும் மிகாவேல் குறிப்பிடப்பட்டுள்ளதினாலும், 1தெசலோனிக்கேயர் 4:16ல், "பிரதான தூதன்" என்பது, "சுட்டுச்சொல்லுடன் ஒருமையில்" இருப்பதனாலும்,[6] மிகாவேல் என்பவன் மாத்திரமே பிரதான தூதன் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[7] ஆனால், 1தெசலோனிக்கேயர் 4:16ல், "சுட்டுச்சொல்லும் ஒருமையும், ஒரேயொரு பிரதான தேவதூதன் மாத்திரமே இருக்கின்றான் என்பதற்கான ஆதாரம் அல்ல. ஏனெனில், பிரதான தேவதூதர்களில் ஒருவனைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காகவே இவ்விரு இலக்கணக் குறிப்புகளும் இவ்வசனத்தில் உள்ளன."[8] தானியேலின் புத்தகத்தில் முதல் தடவை மிகாவேல் "அதிபதிகளில் ஒருவன்" என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதினால் (தானி.10:13), அதன்பின்னர் அவனைப் பற்றிக் கூறும்போது, பிரதான தூதர்கள் பலர் இருப்பதுபற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால், மிகாவேலைப் போல ஏழு பிரதான தேவதூதர்கள் இருக்கின்றார்கள் என்பதே அக்கால யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது.[9] எனவே, மிகாவேல் தனித்துவமானவனாக இல்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ தனித்துவமானவர் என்று யோவான் 3:16 கூறுகிறது. ஏனெனில், இவ்வசனத்தில் "ஒரேபேறான குமாரன்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், இயேசுகிறிஸ்துவின் ஒப்பற்றதும் தனித்துவமானதுமான தன்மையையே அறியத்தருகின்றது.[10] அதாவது, "பலரில் ஒருவர் என்பதல்ல, ஒரேயொருவர்" என்பதே இதன் அர்த்தமாகும். மேலும், இயேசுகிறிஸ்து வேதாகமத்தில் "பிரதான அதிபதி" என்று எங்கும்

[6] Anonymous, *Aid to Bible Understanding*, p. 1152. ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக உபயோகிக்கப்படுவதே சுட்டுச்சொல்லாகும். "அந்த" "இந்த" என்னும் சொற்கள் தமிழ் மொழியில் உள்ள சுட்டுச் சொற்களாகும். வேதாகமத்தின் மூலமொழிகளில் வசனங்களின் சரியான அர்த்தத்தை அறிந்துகொள்வதற்கு இவை பெரிதும் உதவுகின்றன.

[7] *The Watchtower*, 15 April, 1991, p. 28.

[8] F.Dickason, *Angles: Elect and Evil*, p. 68.

[9] அவர்களது பெயர்கள்: யூரியல் (Uriel), ர.்.பாயல் (Raphael), ரெகுவல் (Raguel), மிகாவேல் (Michael), சாரியேல் (Sariel), காபிரியேல் (Gabriel), ரெமியேல் (Remiel) இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட தொபியா என்னும் புத்தகத்தில் ஏழு தூதர்களைப்பற்றிய குறிப்பு உள்ளது (12:15). 4எஸ்றா 20: 1-7ல் Remiel என்னும் பிரதான தூதனின் பெயரே Jeremiel என்று உள்ளது. இப் பிரதான தேவதூதர்களே வெளிப்படுத்தல் 8:2ல் "தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் 'காபிரியேல்' 'மிகாவேல்' என்போரின் பெயர்கள் நம் வேதாகமத்திலும் உள்ளன.

[10] இவ்வசனம் 5ம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடப்படவில்லை என்பதும் யெகோவாவின் சாட்சிகளின் விளக்கம் தவறானது என்பதற்கான ஆதாரமாயுள்ளது. இயேசுகிறிஸ்து பிரதான அதிபதியாக அல்ல, முழுமையான அதிகாரமும் ஆளுகையும்கொண்ட "ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவுமே" இருக்கின்றார் (வெளி.19:16). உண்மையில், மிகாவேல் என்னும் தூதனே இயேசு கிறிஸ்து என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.

யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்றவிதமாக மிகாவேல் என்னும் தூதனே இயேசுகிறிஸ்து என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.

மிகாவேல் தூதனும் இயேசுகிறிஸ்துவும் ஒருவர் என்னும் தங்களுடைய தவறான போதனையை நிரூபிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் உபயோகிக்கும் இன்னுமொரு வசனம் 1தெசலோனிக்கேயர் 4:16 ஆகும். இவ்வசனத்தில் "இயேசுகிறிஸ்து பிரதான தூதனுடைய சத்தத் தோடு வருவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால், "இயேசுகிறிஸ்து வின் சத்தமே இவ்வசனத்தில் பிரதான தூதனுடைய சத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று இவர்கள் கூறுகின்றனர்.[11] ஆனால், இயேசு கிறிஸ்து "பரலோகத்திலிருந்து மத்திய வானத்திற்கு வரும்போது" பிரதான தூதனுடைய சத்தம் கேட்கும் என்று இவ்வசனம் கூறுகிறதே தவிர, இயேசுகிறிஸ்துவின் சத்தமே பிரதான தூதனுடைய சத்தம் என்று இவ்வசனம் கூறவில்லை.[12] உண்மையில், இயேசுகிறிஸ்து பரலோ கத்திலிருந்து மத்திய வானத்திற்கு வரும்போது அவருக்குள் மரித் தோரை உயிர்ப்பிப்பதற்கும் உலகிலிருக்கும் தம்முடைய சபை மக் களை எடுத்துக்கொள்வதற்கும் தமது அதிகாரபூர்வமான சத்தத்தோடும், பிரதான தூதனின் சத்தத்தோடும், தேவ எக்காள சத்தத்தோடும் வருவார் என்றே 1தெசலோனிக்கேயர் 4:16 கூறுகிறது.[13] எனவே,

[11] *The Watchtower*, 15 April 1991, p. 28.

[12] P.Griffiths, *Jehovah's Witnesses and the Person of Jesus Christ*, L. 224.

[13] 1தெசலோனிக்கேயர் 4:16ல் இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வானத்திற்கு வருவதைப்பற்றி கூறுகிறது. ஏனெனில், இவ்வசனத்தில் "வானத்திலிருந்து" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்ட சொல் பரலோகத்தைக் குறிப்பிடும் சொல்லாகும். இதனால்தான் ஆங்கில வேதாகமங்களில் from heaven என்று இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக இயேசுகிறிஸ்து தமது

வேதாகம சத்தியத்தின்படி இயேசுகிறிஸ்துவும் பிரதான தூதனும் ஒருவர் அல்ல. இயேசுகிறிஸ்து தேவனாக இருக்கையில், பிரதான தூதன் அவரால் சிருஷ்டிக்கப்பட்டவனாக இருக்கின்றான்.

"இயேசுகிறிஸ்து பிரதான தூதனுடைய சத்தத்தோடு வருவதனால், அவர் தூதன்" என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கம் அறிவீன மானது. ஏனென்றால் இதே தர்க்கத்தை உபயோகித்து, இவர்களுடைய போதனைக்கு எதிராக இவ்வசனத்தின்படி இயேசுகிறிஸ்து தேவனாக இருக்கின்றார் என்றும் வாதிடலாம். அதாவது, யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றவிதமாக "இயேசுகிறிஸ்து பிரதான தூதனுடைய சத்தத் தோடு வருவதனால் அவர் தூதன்" என்றால், இவ்வசனத்தில் "அவர் தேவ எக்காளத்தோடும்" வருவார் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதனால், "தேவ எக்காளத்தோடு வருபவர் தேவன் என்றும் நாம் வாதிடலாம்."[14] ஆனால், யெகோவாவின் சாட்சிகள் பிரதான தூதனுடைய சத்தத் தோடு வருவார் என்பதை விளக்குகின்றவிதமாக, தேவஎக்காளத்தோடு வருவார் என்பதை விளக்குவதில்லை. இவர்களின் வேதவியாக்கியா னத்திலுள்ள முரண்பாடுகளுக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். உண்மையில், யெகோவாவின் சாட்சிகளே முரண்பாடுகளில் முதலிடம் பெறும் மார்க்கமாக உள்ளது.

---

சபையை உலகிலிருந்து எடுத்துக்கொள்வதற்காகப் பரலோகத்திலிருந்து வானத் திற்கு வரும்போது "ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்" வருவார் என்றே இவ்வசனம் கூறுகிறது. இவ்வசனத்தில் "ஆரவாரம்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் ஆங்கில வேதாகமங் களில் "அதிக சத்தமான கட்டளை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது கிறிஸ்து வுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுவதற்காக இயேசுகிறிஸ்துவினால் கொடுக்கப் படும் அதிகாரபூர்வமான கட்டளையாகும் (யோவா.5:28). இதனோடு சேர்த்து பிரதான தூதன் மிகாவேலின் சத்தமும் கேட்கும். வேதாகம காலத்தில் எக்காளங் கள் மூலமே அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டதினால் இவ்வசனத்தில் தேவ எக்காளத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாளயத்திலிருந்த மக்களைத் தேவனை சந்திக்கும்படி அழைப்பதற்கு எக்காளம் உபயோகிக்கப்பட்டது போலவே (யாத்.19:16-19), இயேசுகிறிஸ்து தம்முடைய மக்களை உலகிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக மத்திய வானத்திற்கு வரும் போது தேவ எக்காளம் தொனிக்கும். 1கொரிந்தியர் 15:52ல் பவுல் இதைப்பற்றி எழுதும்போது, "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்க ளாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று குறிப்பிட்டுள்ளார் (R.L.Thomas, *1,2 Thessalonians: The Expositor's Bible Commentary Volume 11*, pp. 278-279; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1758; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2038).

[14] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, pp. 158-159.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிகாவேல் என்னும் தூதனே இயேசுகிறிஸ்து என்று யெகோவாவின் சாட்சிகள் போதிப்பதனால், இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலையும் இவர்கள் மறுதலிக்கின்றனர்.[15] இதனால், "இயேசுகிறிஸ்துவின் சரீரம் கல்லறைக் குள் அழிந்துபோயிருக்க வேண்டும் அல்லது, பாதுகாப்புக்காக வேறிடத் திற்குக் கொண்டுபோகப்பட்டிருக்க வேண்டும்" என்று ஆரம்பகாலத்தில் இவர்கள் நம்பினார்கள்.[16] ஆனால், "இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைத் தேவன் அழித்துவிட்டார்" என்று தற்போது கூறுகின்றனர்.[17] இதனால், "மாம்சத்தில் மரித்த இயேசுகிறிஸ்து சரீரமில்லாமல் ஆவியாக உயிர்த் தெழுந்தார்" என்று இவர்கள் வாதிடுகின்றனர்.[18] எனவே "உயிர்த்தெழுத லின் பின்னர் அவர் சரீரமற்ற ஆவியாகவே இருந்தார்"[19] என்று போதிக் கும் யெகோவாவின் சாட்சிகள், "மனிதர்களை மீட்பதற்காகத் தம் சரீரத்தை மீட்கும் பொருளாகக் கொடுத்த இயேசுகிறிஸ்து மறுபடியும் அச்சரீரத்தை எடுத்துக்கொள்ளவில்லை"[20] என்றும், "அவரால் அதை மறுபடியும் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது"[21] என்றும் கூறுகின்றனர்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிகாவேல் என்னும் தூதனே இயேசுகிறிஸ்து என்று யெகோவாவின் சாட்சிகள் போதிப்பதனால், இயேசுகிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலையும் இவர்கள் மறுதலிக்கின்றனர்.

உயிர்த்தெழுதலின் பின்னர் "இயேசுகிறிஸ்து சரீரம் இல்லாமல் ஆவியாக மாத்திரமே இருக்கின்றார்" என்னும் தங்களுடைய வேதப்பு ரட்டு உபதேசத்துக்கு ஆதாரமாக யெகோவாவின் சாட்சிகள் உபயோ கிக்கும் வசனம் 1பேதுரு 3:18ஆகும்.[22] இவ்வசனத்தின் இறுதிப் பகுதி யில் "அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்

15 Anoymous, *Let God be True*, p. 47.
16 *The Watchtower*. 1 September 1953, p. 518.
17 Anonymous, *Things in which it is Impossible for God to Lie*, p. 354. *The Watchtower*, 1 August 1975, p. 479.
18 Anonymous, *Let God be True*, p. 40.
19 Anonymous, *Let God be True*, p. 41.
20 Anonymous, *Let Your Name be Sanctified*, p. 266.
21 Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, p. 143.
22 Anonymous, *Reasoning with the Scriptures*, p. 334.

பட்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வசனம் யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, இயேசுகிறிஸ்து சரீரமற்ற ஆவியாக உயிர்த்தெழுந்தார் என்று கூறவில்லை. மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாக்கியத்தை, "ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டார்"[23] என்றும் "ஆவிக்குரிய நிலைக்கு உயிர்ப்பிக்கப்பட்டார்" என்றும் இருவிதமாக மொழிபெயர்க்கலாம். எனினும், யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல "சரீரம் இல்லாமல் வெறும் ஆவியாக உயிர்ப்பிக்கப்பட்டார்"[24] என்று இவ்வசனத்தை எவ்விதத்திலும் மொழிபெயர்க்க முடியாது. ஏனெனில், "ஆவிக்குரிய நிலைக்கு உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதே இவ்வசனத்தின் சரியான அர்த்தமாக உள்ளது."[25] எனவே, இயேசுகிறிஸ்து "மாம்சப்பிரகாரமான வாழ்வில் மரித்து ஆவிக்குரிய நிலைக்கு உயிர்த்தெழுந்தார்"[26] என்றே பேதுரு குறிப்பிட்டுள்ளார். அதாவது, "மானிட வரையறைகளுக்கு உட்பட்டவராக இருக்கும்போது மரித்த இயேசுகிறிஸ்து, இவ்வரையறைகளைக் கடந்து ஆவிக்குரிய நிலையில் மகிமையடைந்த சரீரத்துடன் உயிர்த்தெழுந்தார்."[27] இதனால், உயிர்த்தெழுந்த பின்பும் அவர் சரீரமுடையவராகவே இருந்தார். ஆனால், இது ஏற்கனவே இருந்த மாம்ச சரீரமாக இராமல், மகிமையடைந்த ஆவிக்குரிய சரீரமாக இருந்தது என்பதையே பேதுரு அறியத்தருகின்றார்.

இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய நிலைக்கு உயிர்ப்பிக்கப்பட்டார் என்று கூறும்போது, அவர் சரீரமற்ற நிலையில் ஆவியாக இருந்தார் என்று நாம் கருதலாகாது. ஏனெனில், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தமது சரீரத்தை இழந்தவராக இருக்கவில்லை. அவர் மகிமையடைந்த சரீரத்துடனேயே உயிர்த்தெழுந்தார். இதனால்தான், தம்மை ஒரு ஆவி என்று நினைத்துப் பயந்த சீடரிடம் "நான் தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்

---

[23] ஆங்கிலத்தில் New International Version மற்றும் Authorised Version மொழிபெயர்ப்புகளில் இவ்விதமாகவே இவ்வாக்கியம் உள்ளது (NIV & AV).

[24] Anonymous, *Let God be True*, p. 40.272.

[25] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentaries*, p. 156; E.A.Blum, *1,2 Peter: Expositor's Bible Commentary Vol.12*, p. 242.

[26] J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Vol.49*, pp. 203-205.

[27] R.H.Mounce, *A Living Hope: A Commentary on 1 and 2 Peter*, p. 56; J.N.D Kelly, *The Epitles of Peter and Jude: Black's New Testament Commentary*, p. 151; D.E.Hiebert, *1Peter: An Expositional Commentary*, p. 240.

பாருங்கள். நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்" (லூக்.24:37-40). இச்சந்தர்ப்பத்தில், இயேசுகிறிஸ்து தம்முடைய கைக ளிலும் கால்களிலுமிருந்த தழும்புகளைத் தம்முடைய சீடர்களுக்கு காண்பித்ததாக ஆதிசபைத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[28] ஏனெ னில், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை நம்புவதற்கு, மரிக்கும் போது அவருக்கு ஏற்பட்ட காயங்களைத் தான் பார்க்கவேண் டும் என்று தோமா கூறியதினால், இயேசுகிறிஸ்து தம்முடைய கைக ளையும் விலாவையும் அவனுக்கு காண்பித்ததுபோலவே (யோவா.20:24-27),[29] இங்கும் தமது சீடர்களுக்கு அவர் தம்முடைய கைகளிலும் கால்களிலுமுள்ள தழும்புகளைக் காண்பித்திருக்கவேண்டும்.[30] மேலும், "தம்மைத் தொட்டுப் பார்க்கும்படி" இயேசுகிறிஸ்து கூறுவதனால், உயிர்த்தெழுந்த பின்னர் அவர் சரீரமற்றவராக இருந்தார் என்று கூறு வது அர்த்தமற்றது. ஏனெனில், ஆவியை எவராலும் தொட்டுப் பார்க்க முடியாது. ஆனால், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த தினம் அவரு டைய சரீரம் வைக்கப்பட்டிருந்த கல்லறைக்குச் சென்றவர்கள், அவரு டைய "பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" (மத். 28:9). "சிலுவையில் அறையப்பட்ட அதே சரீரமே மகிமையடைந்த நிலையில் இருந்ததை இச்சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன."[31] எனவே, உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவே தாம் ஆவி அல்ல என்றும், தமக்கு மாம்சமும் எலும்பும் இருப்பதாகவும் அறியத்தந்துள்ளதி

---

[28] J.Martyr, *Dialogue with Trypho*, 97.3-4.

[29] யோவான் 20:24-27ல், "இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என்விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டு நாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[30] D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 1933.

[31] J.R.Edwards, *Luke: The Pillar New Testament Commentary*, p. 730.

னாலும், சீடர்கள் அவருடைய உயிர்த்தெழுந்த சரீரத்தைத் தொட்டுப் பார்த்துள்ளதினாலும், யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கம் உண்மைக்கு மாறான விளக்கமாகவே உள்ளது. உண்மையில், கல்லறையில் வைக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் சரீரம் அழிந்து போகவில்லை. "அவருடைய மாம்சம் அழிந்து போகாது" என்று தீர்க்கதரிசிகளினால் முன்னறிவிக்கப்பட்டது போலவே அவர் சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தார் என்பதை அப்போஸ்தலர் 2:31 அறியத்தருகிறது.[32] எனவே, உயிர்த்தெழுந்த பின்னர் அவர் சரீரமில்லாத வெறும் ஆவியாக இருந்தார் என்று கூறுவதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.

இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தை மறுதலிக்க யெகோவாவின் சாட்சிகள் உபயோகிக்கும் இன்னுமொரு வேதப் பகுதி 1கொரிந்தியர் 15:44-50 ஆகும். 44ம் வசனத்தில் "ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" என்னும் வாக்கியத்தைச் சுட்டிக்காட்டும் இவர்கள், இயேசுகிறிஸ்து ஆவியாகவே உயிர்த்தெழுந்தார் என்று கூறுகின்றனர். மேலும், 50ம் வசனத்தில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால், இயேசுகிறிஸ்து சரீரம் இல்லாத நிலையில் ஆவியாகவே உயிர்த்தெழுந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.[33] உண்மையில், யெகோவாவின் சாட்சிகள் 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள விஷயத்தைக் கருத்திற் கொள்ளாதவர்களாகவே, தங்களுடைய உபதேசத்துக்கு ஆதாரமாக இவ்வதிகாரம் இருப்பதாக எண்ணுகின்றனர். கொரிந்து சபையில் மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுதலித்த ஒரு குழுவினர் இருந்தனர். இவர்கள் மரணத்துக்குப் பின்னர் வாழ்வு தொடரும் என்று நம்பினாலும், மரித்தோர் சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுவார்கள் என்னும் கிறிஸ்தவப் போதனையை ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருந்தனர்.[34] இதனால், மரித்தோர் சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழுவார்கள் என்பதை

[32] சங்கீதம் 16:10ல் முன்னறிவிக்கப்பட்ட இவ்விடயம் இவ்வசனத்திலும் அப்போஸ்தலர் 13:35லும் இயேசுகிறிஸ்துவின் சரீரம் அழியாது என்பதைச் சுட்டிக்காட்ட உபயோகிக்கப்பட்டுள்ளது.

[33] Anonymous, *Aid to Bible Understanding*, p. 1395; Anonymous, *Your Will be Done on Earth*, p. 50.

[34] M.L.Soards, *1Corinthians: New International Biblical Commentary*, pp. 314-317; C.Blomberg, *1Corinthians: The NIV Application Commentary*, p. 295.

யும் (1கொரி.15:12-23), உயிர்த்தெழுதலில் தற்போதைய மாம்சசரீரம் மகிமையடைந்த நிலையில் இருக்கும் என்பதையும் (1கொரி.15:35-50) பவுல் விபரமாக விளக்கியுள்ளார். எனினும், உயிர்த்தெழுதலில் மாம்ச சரீரம் "ஆவிக்குரிய சரீரமாக" இருக்கும் என்று இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, சரீரம் இல்லாமல் ஆவி மாத்திரம் இருக்கும் என்று கூறவில்லை (1கொரி.15:44-46). உண்மையில், நாம் இப்போது இருக்கும் சரீரத்தில் அல்ல, மகிமையடைந்த ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்ப்பிக்கப்பட்டு பரலோகத்தில் இருப்போம் என்பதையே "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" என்னும் வாக்கியத்தின் மூலம் பவுல் அறியத்தருகின்றார்.[35]

உயிர்த்தெழுதல் சரீரமற்ற ஆவியில் வருவது என்று 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தின் எந்த ஒரு வசனத்திலும் குறிப்பிடப்படவில்லை. உயிர்த்தெழுந்த நிலையில் நமக்கு ஆவிக்குரிய சரீரம் இருக்கும் என்றே இவ்வதிகாரம் கூறுகிறது (1கொரி.15:44) பவுலினுடைய நிருபங் களில் "சரீரம்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "சோமா" (*soma*) என்னும் கிரேக்கச் சொல், மாம்சப்பிரகாரமான சரீரத் தையே குறிக்கின்றது. பவுல் இவ்வர்த்தத்திலேயே எல்லா இடங்களிலும் இச்சொல்லை உபயோகித்துள்ளார்.[36] எனவே, 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில், உயிர்த்தெழுதலின் பின்னர் உள்ள ஆவிக்குரிய சரீரம் தற்போது நமக்கிருக்கும் மாம்சரீரத்தின் மகிமையடைந்த நிலை யில் இருக்கும் என்பதையே பவுல் அறியத்தந்துள்ளார். இவ்விதமாகவே, உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் சரீரமும் மகிமையடைந்த நிலை யில் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. எனவே, உயிர்த்தெழுதலின் பின்னர் இயேசுகிறிஸ்து மிகாவேல் தூதனாக மாறிவிடவில்லை.

## (2). தேவதூதரைவிட மேலான இயேசுகிறிஸ்து

இயேசுகிறிஸ்துவைத் தேவதூதன் என்று கூறுவது முழுமையான ஒரு வேதப்புரட்டாகும். ஏனென்றால், இயேசுகிறிஸ்து தேவதூதர்களை

[35] L.Morris, *1Corinthians: Tyndale New Testament Commentary*, p. 227.
[36] R.Gundry, *Soma in Biblical Theology*, p. 168.

விட மேலானவர் என்பது வேதாகமத்தின் தெளிவான போதனையாக உள்ளது. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் முதலாம் அதிகாரம் 4ம் வசனத்திலிருந்து இரண்டாம் அதிகாரம் 18ம் வசனம் வரை, தேவதூதர்களைவிட இயேசுகிறிஸ்து மேலானவர் என்னும் சத்தியம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே, இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப் பட்ட ஒரு தேவதூதன் என்றால், எபிரெயர் நிருபத்தின் முதலிரு அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அனைத்தும் பொய்யா கவே இருக்கவேண்டும். ஆனால், இவ்விரு அதிகாரங்களும் இயேசு கிறிஸ்து தேவதூதர்களைவிட மேலானவர் என்னும் உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. இதனால்தான், இயேசுகிறிஸ்து "தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண் டாரோ அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்" என்று கூறும் எபிரெயர் 1:4, இயேசுகிறிஸ்து தேவதூதரைவிட மேலான வர் என்பதை உறுதிப்படுத்துகிறது.[37] இவ்வசனத்தில், இயேசுகிறிஸ்து "விசேஷித்த நாமமுடையவராய்" இருக்கின்றார் என்னும் சொற்பிரயோ கம், அவர் தேவனாய் இருக்கின்றார் என்னும் அர்த்தமுடையது.[38] ஏனெனில், "கர்த்தர்" என்பதே அந்த விசேஷித்த நாமம் என்பதைப் பிலிப்பியர் 2:11 அறியத்தருகின்றது.[39] இவ்வசனத்தில், "இயேசுகிறிஸ்து

---

[37] இவ்வசனத்தில், "சுதந்தரித்துக் கொண்டார்" "மேன்மையுள்ளவரானார்" என்னும் சொற்பிரயோகங்கள், இயேசுகிறிஸ்து தம்மிடம் இல்லாத ஒன்றைப் பெற்றுக்கொண் டார் என்னும் அர்த்தமுடையவை அல்ல. "எபிரெயர் நிருப ஆசிரியர், மனிதனாக இவ்வுலகுக்கு வந்த இயேசுகிறிஸ்து மானிட வாழ்வின் பின் எத்தகைய நிலையை அடைந்தார் என்பதையே இப்பகுதியில் சுட்டிக்காட்டுகிறார் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இதற்கு முன் உள்ள வசனத்தில் இயேசு கிறிஸ்து மானிட பாவத்திற்காக என்ன செய்தார் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள் ளதிலிருந்து இதை அறிந்து கொள்ளுகின்றோம்." (L.Morris, *Hebrews: Expositor's Bible Commentary,* p. 15). இயேசுகிறிஸ்து மானிட வரையறைகளுக்குள் தம்மை உட்படுத்தி, மனிதனாக வந்த போது, "தேவதூதரைவிடச் சற்று சிறியவராக்கப் பட்டு" (எபி.2:9), மானிட பாவத்தைப் பரிகரிப்பதற்காகச் செய்யவேண்டியவற்றைச் (எபி.2:17) செய்து முடித்தபின்னர் அவர் தேவதூதரைவிட உயர்வான நிலைக்குச் சென்றுள்ளார் என்பதை அறியத்தருவதற்காகவே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

[38] Longenecker, *The Christology of Early Jewish Christianity*, pp. 41-46.

[39] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1837. எபிரேயர் 1:4ல் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட நாமம் "குமாரன்" என்று சிலர் கருதுகின்றனர் (P.T.O'Brien, *Hebrews: The Pillar New Testament Commentary*, p. p. 60). மத்தேயு 28:19ல் குமாரன் என்பது இயேசுகிறிஸ்துவின் பெயராக இருந்தாலும் (R.C.H. Lenski, *The Interpretation of St.Matthew's Gospel*, p. 1176), இவ்வசனத்தில் குமா ரன் என்பது அவருக்கு கொடுக்கப்பட்ட பெயராக இல்லை. ஏனெனில், இவ்வசனம் குமாரனுக்கு கொடுக்கப்பட்ட பெயரே விசேஷித்ததாய் இருப்பதாகக் கூறுகிறது.

கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தேவதூதரைவிட விசேஷித்த நாமத்தையுடைய "இயேசுகிறிஸ்து தேவதூதரைவிட மேலான அந்தஸ்தும், அதிகாரமும், ஆளுகையும் உடையவராய் இருப்பதையே இவ்வசனங்கள் அறியத்தருகின்றன."[40] இதனால், அவரைத் தூதன் என்று கூறுவது மிகப் பெரிய தவறாகவும், தேவதூஷணமுமாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்து தேவதூதரைவிட மேலான அந்தஸ்தும், அதிகாரமும், ஆளுகையும் உடையவராய் இருப்பதனால், அவரைத் தூதன் என்று கூறுவது மிகப் பெரிய தவறாகவும், தேவதூஷணமுமாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்துவைத் தம்முடைய குமாரன் என்று கூறிய தேவன், தேவதூதரை இவ்வாறு அழைக்கவில்லை என்றும் (எபி.1:5), அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாகவே இருக்கிறார்கள் என்றும் (எபி.1:7) எபிரெயர் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாய் இருப்பதனாலும், தூதர்களைத் தேவன் தம்முடைய குமாரன் என்று அழைக்காததினாலும், மிகாவேல் என்னும் தேவதூதன் இயேசுகிறிஸ்து அல்ல என்பது தெளிவாகின்றது."[41] மிகாவேல் தேவதூதனே இயேசுகிறிஸ்து என்றால், இவ்விரு வசனங்களிலும் தேவன் கூறியவை பொய்யாகவே இருக்கவேண்டும். மேலும், தேவதூதர்கள் யாவரும் தம்முடைய குமாரனை வழிபடவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டதாகவும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது (எபி.1:6). வேதாகமத்தில் தேவனை வழிபடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லே இவ்வசனத்தில் தேவதூதர்கள் இயேசுகிறிஸ்துவை வழிபடுவதைப் பற்றிய தேவகட்டளையிலும் உள்ளது. மேலும், தேவதூதர்கள் மாத்திரமல்ல பிசாசுகளும் இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக விழுந்து, அவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டன (மாற்.3:11). தேவன் மாத்திரமே வழிபாட்டுக்கு உரியவராய் இருப்பதனால் (மத்.4:10), தேவதூதர்கள் இயேசுகிறிஸ்துவை வழிபடுவதானது,

[40] G.H.Guthrie, *Hebrews: The NIV Application Commentary*, p. 50.
[41] R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovah's Witnesses*, p. 178.

அவர் தேவதூதர்களைவிட மேலானவராய் இருப்பதை மாத்திரமல்ல, "அவர் தேவனாக இருப்பதையும் அறியத்தருகிறது."[42] மேலும், பிதாவினுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் சிலாக்கியம் இயேசுகிறிஸ்துவுக்கு கிடைத்ததைப் போல தேவதூதர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் எபிரெயர் நிருப ஆசிரியர் சுட்டிக்காட்டுவதும் (எபி.1:13),[43] தேவதூதர்களைவிட இயேசுகிறிஸ்து மேலானவராய் இருப்பதற்கான ஆதாரமாய் உள்ளது. உண்மையில், தேவதூதர்கள் அனைவருமே இயேசுகிறிஸ்துவினால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருப்பதனால், (கொலோ.1:16)[44] அவர் தேவதூதர்களைவிடவும் மேலான நிலையிலேயே இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்து தேவதூதர்களைவிட மேலான நிலையில் இருப்பதனால், தூதர்களுக்கும் பிசாசுகளுக்கும் அதிகாரத்துடன் கட்டளையிடக் கூடியவராக இருக்கின்றார். இதனால்தான், மனிதர்களுக்குள் இருந்த பிசாசுகளை அவர் கடிந்துகொண்டு துரத்தியதோடு, சாத்தான் அவரைச் சோதித்த சந்தர்ப்பங்களில் "அப்பாலே போ சாத்தானே" என்று அதிகாரத்தோடு கட்டளையிட்டார் (மத்.4:10, 16:23, மாற்.8:33). ஆனால், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட தூதர்களுக்கு இத்தகைய அதிகாரம் இல்லாதிருந்ததினால், மிகாவேல் என்னும் தூதனால் இயேசுகிறிஸ்துவைப்போல சாத்தானைக் கடிந்துகொள்ளமுடியாதிருந்தது. இதனால்தான், "பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்" (யூதா.1:9). அதாவது, "தேவன் மாத்திரமே செய்யக்கூடிய காரியத்தைச் செய்வதற்கு மிகாவேல் துணியவில்லை என்பதையே யூதா இவ்வசனத்தில் அறியத்தருகின்

[42] G.H.Guthrie, *Hebrews: The NIV Application Commentary*, p. 69.

[43] எபிரேயர் 1:13ல், "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?" என்று எபிரேய நிருப ஆசிரியர் கேட்கின்றார்.

[44] கொலோசெயர் 1:16ல் "சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள்" என்பவை தூதர்களையே குறிக்கின்றன. அக்கால யூத இலக்கியங்களில் இச்சொற்பிரயோகங்கள் தூதர்களைக் குறிப்பிடவே உபயோகிக்கப்பட்டுள்ளன (2ஏனோக்கு 20:1, ஜூபிலி 2:2) புதிய ஏற்பாட்டில் ரோமர் 8:38, 1கொரிந்தியர் 15:24, எபேசியர் 1:20, 6:12, 1பேதுரு 3:22லும் இத்தகைய விவரணம் உள்ளன.

றார்."[45] ஏனெனில், "தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வாக்கியம் மூலமொழியின்படி, "சாத்தானுக்கு எதிராகக் கடுமையான தீர்ப்பளித்தல்" என்னும் அர்த்த முடையது.[46] அதாவது, இயேசுகிறிஸ்துவைப்போல சாத்தானுக்கு எதிராகக் கடுமையான ஒரு தீர்ப்பைக் கொடுக்கக்கூடிய அதிகாரம் மிகாவேலுக்கு இருக்கவில்லை என்பதையே இவ்வசனம் அறியத்தரு கின்றது. இதனால், மிகாவேலைவிட மேலான அதிகாரமும் வல்லமை யும் உடையவராகவே இயேசுகிறிஸ்து இருக்கின்றார். எனவே, மிகா வேல் தூதனே இயேசுகிறிஸ்து என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது எவ்வித அர்த்தமுமற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது.


இயேசுகிறிஸ்து தூதனாக அல்ல, தூதர்களையும்விட மேலான நிலை யில் இருப்பதனால், தூதர்களின் வழிபாட்டுக்கு உரியவராகவும் இருக் கின்றார். இதனால்தான் பரலோகத்திலிருக்கும் தேவதூதர்கள் அனைவ ரும் இயேசுகிறிஸ்துவை வழிபடுவதை யோவான் கண்டார் (வெளி.5:11-14).[47] மேலும், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த போது அவரை வழிபடும்படி தேவனே சகல தூதர்களுக்கும் அறிவுறுத் தினார். அதாவது, எபிரேயர் 1:6ல் தேவன், "தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்" (எபி.1:6). எனவே, இயேசுகிறிஸ்து மிகாவேல் என்னும் தூதனாக அல்ல, தூதர்களையும்

---

[45] P.H.Davids, *2 Peter and Jude: The Pillar New Testament Commentary*, p. 62.
[46] D.E.Hiebert, *Second Peter and Jude: An Expositional Commentary*, p. 249.
[47] வெளிப்படுத்தல் 5:11-14ல், "பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத் தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயி ருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியா னவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களி லும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்துநான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார்.

விட மேலான நிலையில் அவர்களுடைய வழிபாட்டுக்குரிய தேவனா கவே இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்து தேவதூதர்களின் வழிபாட்டுக்கு மாத்திரமல்ல, மனிதர்க ளின் வழிபாட்டுக்கும் உரிய தேவனாக இருக்கின்றார். இதனால்தான், சுவிசேஷப் புத்தகங்களில் பலர் இயேசுகிறிஸ்துவைப் "பணிந்து கொண்டதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு 2:11, 8:2, 9:18, 14:33, 15:25, 28:9, 28:17, யோவான் 9:38 போன்ற வசனங்களில் இயேசுகிறிஸ்துவைப் "பணிந்து கொண்டார்கள்" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில்[48] "வழிபட்டார்கள்" என்னும் அர்த்தமுடையது.[49] தேவன் மாத்திரமே வழிபாட்டுக்கு உரியவராய் இருப்பதனால் (யாத்.34:14, உபா.6:13, மத்.4:9-10),[51] மனிதருடைய வழிபாட்டை ஏற்றுக்கொண்ட இயேசுகிறிஸ்து உண்மையிலேயே தேவ னாக இருக்கின்றார். ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ் துவை மக்கள் "வழிபடுவதை" "மரியாதை செலுத்தியதாகவே" விளக் குகின்ற போதிலும், மூலமொழியில் மக்கள் தேவனை வழிபடுவதைக் குறிப்பிடும் சொல்லே இயேசுகிறிஸ்துவை மனிதர்கள் வழிபட்டதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளதினால், இவர்களுடைய தர்க்கம் தவறானதா கவே உள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்து மனிதரின் வழிபாட்டுக்குரிய தேவனாகவே இருக்கின்றார்.



[48] மூலமொழியில் *proskuneo* என்னும் கிரேக்கச் சொல்.

[49] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 37.

[50] யாத்திராகமம் 34:14ல் "அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்" என்று கூறும் வேதாகமம், உபாகமம் 6:13ல் "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்வாயாக" என்றும், மத்தேயு 4:10ல், "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்றும் கட்டளையிட்டுள்ளது.

## எட்டாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

யெகோவாவின் சாட்சிகள்
பரிசுத்த ஆவியானவரின் தனித்துவத்தையும்,
ஆள்தத்துவத்தையும் தேவத்துவத்தையும்
மறுதலிக்கும் வேதப்புரட்டர்களாக இருக்கின்றனர்.
ஏனெனில், இவர்கள் பரிசுத்த ஆவியானவரை
மின்சாரம் போன்ற ஒரு சக்தியாகவே கருதுகின்றனர்.
இதனால், பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய யெகோவாவின்
சாட்சிகளின் போதனைகள் வேதாகமத்தில்
ஆவியானவரைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ள
சத்தியங்கள் அனைத்தையும் மறுதலிப்பதாய் உள்ளது.
இதனால் இவ்வத்தியாயத்தில்,
பரிசுத்த ஆவியானவரின் தனித்துவத் தன்மையை
அதாவது, அவர் தேவனில் இருக்கும் ஒரு சக்தி அல்ல
அவர் தேவனைப்போலவே
தனியான ஆள்தத்துவமுடைய தெய்வீக நபர் என்னும்
வேதாகம சத்தியம் விளக்கப்பட்டுள்ளது.
வேதாகமத்தின் மூலமொழிகளில்
ஆவி என்னும் சொல் அஃறிணையில் இருந்தாலும்,
பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதனால்,
ஆவி என்னும் சொல் பரிசுத்த ஆவியானவரைக்
குறிப்பிடும்போது, இச்சொல்லுடன் சேர்ந்து வரும்
சொற்கள் ஆண்பால் உயர்திணையில் உள்ளன.
யெகோவாவின் சாட்சிகள் இதைக் கருத்திற்கொள்ளாமல்
ஆவியானவரை அது என்று
அஃறிணையில் குறிப்பிடுவதும், அவரை மின்சாரம்
போன்ற ஒரு சக்தியாகவும் கருதுவது தவறாகும்.

# எட்டாம் அத்தியாயம்



# பரிசுத்த ஆவியானவர்

## தேவனின் சக்தியா? அல்லது சர்வவல்லமையுள்ள தேவனா?

யெகோவாவின் சாட்சிகள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் போதிப்பவைகளும் வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் வேதப்புரட்டு உபதேசமாகவே உள்ளது. ஏனெனில், இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் தனித்துவத்தையும், ஆள்தத்துவத்தையும், தேவத்துவத்தையும் மறுதலிக்கும் வேதப்புரட்டர்களாகவும் இருக்கின்றனர். இதனால், "யெகோவா தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக உபயோகிக்கும் ஆள்தத்துவமற்ற 'செயற்படும் சக்தியே' (active force) பரிசுத்த ஆவி"[1] என்று போதிக்கும் இவர்கள், பரிசுத்த ஆவியானவரை மின்சாரம் போன்ற ஒரு சக்தியாகவே கருதுகின்றனர்.[2] மனிதர்கள் மின்சாரத்தை

---

[1] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 381.

[2] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 20; Anonymous, *The Truth that Leads to Eternal Life*, p. 39.

உபயோகித்துப் பல காரியங்களைச் செய்வது போலவே தேவனும் “பரிசுத்த ஆவி” என்னும் தமது சக்தியைக் கொண்டு தம் சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்றி வருகின்றார் என்பதே யெகோவாவின் சாட்சிகளின் போதனையாகும். (துயரகரமாகத் தற்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி இத்தகைய தவறான எண்ணமுடையவர்களாகவே இருக்கின்றனர்). பரிசுத்த ஆவியானவர் தேவனைவிடத் தாழ்வானவர் என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள்,[3] அவரை ஆள்தத்துவமற்ற ஒரு சக்தியாகவே கருதுவதனால், அவரை உயர்திணையில் “அவர்” என்று மரியாதையாக அழைக்காமல், அஃறிணையில் “அது” என்றே குறிப்பிடுகின்றனர்.[4]

உண்மையில், பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் வேதாகமத்தில் அவரைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள் அனைத்தையும் முரண்படுத்துவதாயுள்ளது. பரிசுத்த ஆவியானவர் “தேவனுடைய செயற்படும் சக்தி” என்று இவர்கள் கூறுவதனால், அவர் தேவனையும், இயேசுகிறிஸ்துவையும் போல தனித்துவமானவர், ஆள்தத்துவமுள்ளவர், தேவத்துவமுடையவர் என்னும் வேதாகம உபதேசங்களை மறுதலிக்கின்றனர். யெகோவாவின் சாட்சிகளின் இத்தகைய வேதப்புரட்டுப் போதனைகளை அறிந்து கொள்வதற்காக, பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வேதாகமம் அறியத் தரும் உண்மைகளையும், யெகோவாவின் சாட்சிகள் இவற்றை எவ்வாறு மறுத்தும், வேதவசனங்களை மாற்றியும், தங்களது வேதப்புரட்டுப் போதனைகளை உருவாக்கியுள்ளனர் என்றும் இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளது.

## (1). பரிசுத்த ஆவியானவர் தனித்துவமான தெய்வீக நபர்

யெகோவாவின் சாட்சிகள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி போதிக்கும் விடயங்கள் அவரது தனித்துவத்தை அதாவது, பிதாவாகிய தேவனையும் இயேசுகிறிஸ்துவையும்போல பரிசுத்த ஆவியானவரும் “தனியான

[3] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 23.
[4] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 139.

ஒரு நபர்" (distinct person) என்னும் வேதாகம உண்மையை மறுதலிக்கின்றது. வேதாகம சத்தியத்தின்படி தேவன் "திரித்துவராய்" (Trinity) இருக்கின்றார். அதாவது, நாம் ஏற்கனவே நான்காம் அத்தியாயத்தில் பார்த்த விதமாகப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவராகத் தேவன் இருந்தாலும், மூவரும் ஒருவராக இருக்கின்றனர். மூவர் ஒருவராயிருக்கும் தேவரகசியம் நம்முடைய குறுகிய மானிட அறிவுக்கு அப்பாற்பட்டதாய் இருந்தாலும், வேதாகமம் போதிக்கும் சத்தியம் இதுவேயாகும். திரியேகத் தேவனான "பிதா குமாரன் பரிசுத்த ஆவி" என்போர் ஒருவராயிருந்தாலும், இம்மூவரும் தனித்துவமான தெய்வீக நபர்களாக இருக்கின்றனர்.

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் "ரூஆஹ்" (*ruah*) என்னும் எபிரேயச் சொல்லும்,[5] புதிய ஏற்பாட்டில் "நியூமா" (*pneuma*) என்னும் கிரேக்கச் சொல்லும் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளன.[6] இவ்விரு சொற்களும் ஆவி, காற்று, சுவாசம், உயிர் என்னும் பலவித அர்த்தங்களைக் கொண்டுள்ள போதிலும், இவற்றின் "அடிப்படை அர்த்தம் "காற்று" ஆகும்."[7] எனினும், இது உயிரற்ற வெறும் காற்றை அல்ல, "உயிருள்ள சுவாசக் காற்றையே குறிக்கின்றது."[8] இதனால்தான், பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதற்கு இச்சொற்கள்

---

[5] பழைய ஏற்பாட்டில், 388 தடவைகள் "ரூஆஹ்" என்னும் சொல் இடம்பெற்றாலும், 97 தடவைகள் மாத்திரமே இச்சொல் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கின்றது. ஏனைய இடங்களில் 110 தடவைகள் காற்றையும் (உ+ம்: ஆதி.8:1, யாத்.10:13), 18 தடவைகள் சுவாசத்தையும் (உ+ம்: யோபு.9:18, 15:30), 13 தடவைகள் வாசனையையும் (உ+ம்: ஆதி.8:21, 27:27), 6 தடவைகள் இடைவெளியையும் (உ+ம்: ஆதி.45:27, யாத்.6:9, எண்.5:14), 11 தடவைகள் மானிட ஜீவனையும் (உ+ம்: நியா.15:19, 1சாமு.30:12), 4 தடவைகள் தேவதூதர்களையும் (உ+ம்: யோபு.4:15, சங்.104:4), 18 தடவைகள் தீய ஆவிகளையும் (உ+ம்: நியா.9:23, 1சாமு.16:15-16), ஒரு தடவை மிருக ஜீவனையும் (பிர.3:21) குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளதோடு, 84 தடவைகள் மானிட ஆவியையும் குறிக்கின்றது.

[6] புதிய ஏற்பாட்டில், 378 தடவைகள் இடம்பெறும் "நியூமா" என்னும் கிரேக்கச் சொல் 261 தடவைகள் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கின்றது. இவற்றில் 95 தடவைகள் இச்சொல் "பரிசுத்த" என்னும் சொல்லுடன் சேர்ந்தே வருகின்றது. மேலும், "நியூமா" என்னும் சொல் காற்றை ஒரு தடவையும் 'சுவாசம்' என்னும் அர்த்தத்துடன் ஒரு தடவையும் உபயோகிக்கப்பட்டுள்ளது (யோவா.3:8, 2தெச. 2:8). ஏனைய இடங்களில் இச்சொல் "மானிட ஆவியை" அல்லது "பரிசுத்த ஆவியானவரை" குறிக்கின்றது.

[7] J.E.C.Weldon, *The Revelation of the Holy Spirit*, p. 10.

[8] G.Smeaton, *The Doctrine of the Holy Spirit*, p. 19.

வேதாகமத்தில் உபயோகிக்கப்படும்போது, “அது” என்று குறிப்பிடப்படா மல், “அவர்” என்று அழைக்கப்பட்டுள்ளார்.[9] அதாவது, எபிரேய கிரேக்க மொழிகளில் ஆவி என்னும் சொல் இலக்கணரீதியாக அ∴றிணையில் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரை இச்சொல்லால் குறிப்பிடும்போது, அவர் ஒரு நபர் என்பதை அறியத்தருவதற்காக இச்சொல்லுடன் சேர்ந்துவரும் சொல் ஆண்பால் உயர்திணையில் அவர் என்று உள்ளது (யோவா.14:26, 16:13-14).[10] ஆனால், இதைக் கருத்திற்கொள்ளாத யெகோவாவின் சாட்சிகள், எபிரேய கிரேக்க மொழிகளில் ஆவி என் னும் சொல் அ∴றிணையில் இருப்பதனால், ஆவியானவரை வெறும் சக்தியாக மாத்திரமே நம்புகின்றனர். ஆங்கிலத்தில் ஜேம்ஸ் அரசனு டைய மொழிபெயர்ப்பில் ரோமர் 8:16, 8:26ல் ஆவியானவர் அ∴ றிணையில் it என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இவர்களுடைய தர்க்கத்துக்கு சாதகமாக உள்ளது.[11] ஆனால், புதிய மொழிபெயர்ப்புக ளில் வேதாகம உபதேசத்துக்கு ஏற்ற விதத்தில் இவ்வசனங்களில் அவர் என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் தேவனுக்குள் இருக்கும் சக்தியாக அல்ல, தேவனிலிருந்து வேறுபடும் தனியான ஒரு தெய்வீக நபராகவே இருக்கின்றார்

யெகோவாவின் சாட்சிகள் பரிசுத்த ஆவியானவரை “தேவனுடைய செயற்படும் சக்தி” என்றுகூறும் போது, ஆவியானவரைத் தேவனுக்குள் இருக்கும் அவரது வல்லமை என்றே கருதுகின்றனர். அதாவது, மனித னுக்குள் அவனை உயிருடன் வைத்திருக்கும் ஆவி இருப்பதுபோல, தேவனுக்குள் இருக்கும் அவருடைய ஆவியே பரிசுத்த ஆவி என்பது இவர்களுடைய எண்ணமாயுள்ளது. ஆனால், பரிசுத்த ஆவியானவர் இவ்வாறு தேவனுக்குள் இருக்கும் சக்தியாக அல்ல, தேவனிலிருந்து வேறுபடும் தனியான ஒரு தெய்வீக நபராகவே இருக்கின்றார்.[12] உதார

[9] E.L.Towns, *The Names of the Holy Spirit*, p. 77.

[10] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 96.

[11] ஜேம்ஸ் அரசனுடைய ஆங்கில வேதாகமத்தில் ரோமர் 8:16ல், the Spirit *itself* beareth witness என்றும், ரோமர் 8:26ல் the Spirit *itself* maketh intercession என்றும் ஆவியானவரை அது என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால், புதிய சர்வதேச மொழிபெயர்ப்பில் (NIV) இவ்வசனங்கள் The Spirit *himself* testifies (Rom.8:16)

ணத்திற்கு சங்கீதம் 104:30ல், "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்" என்னும் வாக்கியத்தில், "அனுப்புதல் என்னும் வினைச் சொல், தேவனுடைய வல்லமைக்கு அல்லது சக்திக்குப் பொருத்தமற்றது. ஏனென்றால் அனுப்பப்படும் ஆவியானது அனுப்புபவரிலிருந்து வேறானதொன்றாகவே இருக்கும்."[13] எனவே, தேவன் தம் ஆவியை அனுப்பும் செயல்முறையானது, தேவனும் பரிசுத்த ஆவியானவரும் வெவ்வேறானவர்கள் என்பதையும், இருவரும் தனித்துவமானவர்கள் என்பதையும் அறியத்தருகின்றது.

பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனால் வாக்களிக்கப்பட்டவராகவும் (அப்.1:5),[14] பிதாவினால் அனுப்பப்படுபவராகவும் (யோவா.14:26),[15] பிதாவினிடத்திலிருந்து வருகிறவராகவும் (யோவா.15:26)[16] இருப்பதனால், பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியானவரும் வெவ்வேறானவர்கள் என்பது தெளிவாகின்றது. ஏனென்றால், ஒருவர் தன்னையே அனுப்ப முடியாது. அனுப்புபவரும் அனுப்பப்படுபவரும் வெவ்வேறானவர்களாகவே இருக்க முடியும். எனவே, பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டு, பிதாவினிடத்திலிருந்து வந்த பரிசுத்த ஆவியானவர், பிதாவாகிய தேவனில் இருக்கும் அவரது சக்தியாக இராமல், தனியான ஒரு தெய்வீக நபராகவே இருக்கின்றார். இதைப்போலவே, இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது, பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து பேசும்போது பரிசுத்த ஆவியானவர் அவர் மீது வந்ததும் (மத்.3:16-

---

the Spirit *himself* intercedes for us (Rom.8:26) என்று உயர்திணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[12] C.R.Swindoll & R.B.Zuck, ed., *Understanding Christian Theology*, p. 395.

[13] L.J.Wood, *Holy Spirit in the Old Testament*, p. 17.

[14] அப்போஸ்தலர் 1:5ல் "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று இயேசுகிறிஸ்து தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்.

[15] யோவான் 14:26ல், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[16] யோவான் 15:16ல், "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[17] மத்தேயு 3:16-17ல், "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்

17),[17] இருவரும் வெவ்வேறானவர்கள் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது. மேலும், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்காக வேண்டுதல் செய்பவராக இருப்பதும் (ரோ.8:26)[18] அவரைத் தேவனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஏனெனில், "பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமே வேண்டுதல் செய்வதனால் இருவரும் ஒருவராகவோ, இல்லையென்றால் ஒருவர் மற்றவரில் இருக்கும் சக்தியாகவோ இருக்க முடியாது."[19]

> பரிசுத்த ஆவியானவர் தேவனிலோ அல்லது இயேசுகிறிஸ்துவிலோ இருக்கும் சக்தி அல்ல. அவர் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் போலவே சர்வவல்லமையையும் தம்மில் வைத்திருக்கும் தனியான ஒரு தெய்வீக நபராக இருக்கின்றார்.

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறியவைகளும் அவரைத் தனித்துவமானவராகவே காண்பிக்கின்றது. தாம் பரலோகத்துக்குப் போய், பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாகவும் (யோவா. 16:7),[20] பரிசுத்த ஆவியானவர் தம்மை மகிமைப்படுத்துவதாகவும் (யோவா.16:14)[21] இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனிலிருந்து மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவிலிருந்தும் வேறானவர் என்பது தெளிவாகின்றது. உண்மையில், பரிசுத்த ஆவியானவர் தேவனிலோ அல்லது இயேசுகிறிஸ்து

---

போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[18] ரோமர் 8:26ல், "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[19] L.J.Wood, *Holy Spirit in the Old Testament*, p.

[20] யோவான் 16:7ல், "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[21] யோவான் 16:14ல் பரிசுத்த ஆவியானவர் "என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

விலோ இருக்கும் சக்தி அல்ல. அவர் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் போலவே சர்வவல்லமையையும் தம்மில் வைத்திருக்கும் தனியான ஒரு தெய்வீக நபராக இருக்கின்றார்.

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சக்தியாக செயற்படாமல் தம்மிலிருக்கும் வல்லமையினால் செயற்படுகிறவராக இருப்பதை வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் நாம் பார்க்கலாம். பழைய ஏற்பாட்டில், எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பரிசுத்த ஆவியானவர் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்வதைப்பற்றி அவருடைய தீர்க்கதரிசனப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (எசே.3:12, 11:1, 11:24, 43:5).[22] எசேக்கியேல் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி குறிப்பிட்டுள்ள முறை, பரிசுத்த ஆவியானவர் தனித்துச் செயற்படுவதையே சுட்டிக்காட்டுகிறது. ஆதியாகமப் புத்தகத்திலும் நாம் இதை அவதானிக்கலாம். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகில் தேவ ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்ததாக இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.1:1). புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் செயற்படுபவர்களாக இருந்தனர். எனவே, பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியானவரும் ஒருவரல்ல, வெவ்வேறான இரண்டு தெய்வீக நபர்கள் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.

# 2. பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபர்

பரிசுத்த ஆவியானவர் தனித்துவமானவராக மாத்திரமல்ல, "ஆள்தத்துவமுள்ளவராகவும்" (personality) இருக்கின்றார். அதாவது, பரிசுத்த

[22] எசேக்கியேல் 3:12ல் "அப்பொழுது ஆவி, என்னை உயர எடுத்துக்கொண்டது" என்றும், 11:1ல், "பின்பு ஆவியானவர் என்னை எடுத்து, என்னைக் கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு முகமாயிருக்கிற வாசலுக்குக் கொண்டுபோனார்" என்றும், 11:24ல், "பின்பு ஆவியானவர் என்னை எடுத்து, என்னை தேவனுடைய ஆவிக்குள்ளான தரிசனத்திலே கல்தேயாவுக்குச் சிறைப்பட்டுப்போனவர்கள் இடத்திலே கொண்டு போய் விட்டார்" என்றும், "அப்பொழுது ஆவி என்னை எடுத்து, உட்பிரகாரத்திலே கொண்டுபோய்விட்டது" என்று எசேக்கியேல் தன்னுடைய அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆவியானவர் வெறும் சக்தியாக அல்ல, ஒரு "நபராக" (person) இருக்கின்றார். ஆனால் யெகோவாவின் சாட்சிகள் இதை முழுமையாக மறுதலித்து வருகின்றனர். உண்மையில், பிதாவாகிய தேவனும் ஆவி யாய் இருப்பதாகவே வேதாகமம் கூறுகிறது (யோவா.4:24) அப்படியி ருந்தும், அவர் ஆள்தத்துவமுள்ளவராய் இருப்பதை யெகோவாவின் சாட்சிகள் மறுதலிப்பதில்லை. எனவே, "ஆவியாய் இருக்கும் தேவன் ஆள்தத்துவமுள்ளவராய் இருப்பது போலவே, பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமுள்ளவராய் இருக்கின்றார்."[23]

பரிசுத்த ஆவியானவர் உண்மையிலேயே ஆள்தத்துவமுள்ளவராய் இருந்தால், பிதாவுக்கும் குமாரனுக்கும் இருப்பது போல தனிப்பட்ட பெயர் அவருக்கும் இருக்க வேண்டும் என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், பிதாவுக்கு யெகோவா என்றும் குமாரனுக்கு இயேசு என்றும் தனிப்பட்ட பெயர்கள் இருப்பது போல பரிசுத்த ஆவியானவருக்கு தனிப்பட்ட பெயர் எதுவும் இல்லை என்று கூறுகின்றனர்.[24] ஆனால், "புதிய ஏற்பாட்டுக்காலத்தில் "பரிசுத்த ஆவியானவர்" என்பது திரித்து வத்தின் மூன்றாவது தெய்வீக நபருடைய தனிப்பட்ட பெயராகவே இருந்தது."[25] உதாரணத்திற்கு, மத்தேயு 28:19ல், "பிதா, குமாரன் பரிசுத்த ஆவி என்னும் நாமத்தில்" என்னும் வாக்கியம், "தேவனுடைய முழுமையான பெயராக உள்ளது."[26] எனினும், தேவன் திரித்துவராய் இருப்பதனால், இது திரித்துவ நபர்களின் தனிப்பட்ட பெயர்களாக உள்ளது. அதாவது, பிதா என்பது தேவனுடைய பெயராகவும், குமாரன் என்பது இயேசுகிறிஸ்துவின் பெயராகவும், பரிசுத்த ஆவி என்பது பரிசுத்த ஆவியானவரின் பெயராகவும் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள் ளதோடு,[27] "ஆவியானவரின் தனித்துவமான ஆள்தத்துவத்தையும் அறியத்தருகின்றது."[28]

"பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர்" என்று போதிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் வேதவசனங்களை திரிபுபடுத்தியும், மாற்றி

[23] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 107.
[24] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 407.
[25] L.Berkhof, *Systematic Theology*, p. 95.
[26] R.C.H.Lenski, *The Interpretation of St.Matthew's Gospel*, p. 1177.
[27] C.R.Swindoll & R.B.Zuck, ed., *Understanding Christian Theology*, p. 404.
[28] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 747.

யும் தவறான விளக்கங்களைக் கொடுத்து வருகின்றனர். வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரால் "நிரப்பப்படுதல்" "ஞானஸ்நானம் பெறுதல்" "அபிஷேகிக்கப்படுதல்" என்னும் விவரணங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டும் இவர்கள், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவம் உள்ளவரானால் அவரால் இவ்வாறு செயற்பட முடியாது என்று வாதிடுகின்றனர். இதனால், பெந்தெகொஸ்தே நாளில் 120 பேர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள், ஒரு பரிசுத்த ஆவியானவரால் எப்படி 120 பேர் ஒரே சமயத்தில் நிரப்பப்பட முடியும் என்று கேட்கின்றனர்.[29] ஆள்தத்துவமுள்ள நபராய் இருக்கும் பரிசுத்த ஆவியானவரால் பலரை ஒரே நேரத்தில் நிரப்ப முடியாது என்று கூறும் இவர்கள், பரிசுத்த ஆவியானவர் ஒரு சக்தியாக இருந்தால் மாத்திரமே இது சாத்தியமாகும் என்று விளக்குகின்றனர்.[30] மேலும், எபேசியர் 5:18ல், "துன்மார்க்கத்துக்கு ஏதுவான மதுபானவெறி கொள்ளாமல் ஆவியில் நிறைந்திருக்கும்படி" கொடுக்கப்பட்டுள்ள கட்டளையை ஆதாரமாகக் கொண்டு, "மதுபானம் ஒரு நபர் அல்ல என்பதனால், பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபர் அல்ல" என்று கூறுகின்றனர்.[31]

### கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதைப் பற்றிய விவரணம், அவர் ஆள்தத்துவமற்றவர் என்பதற்கான ஆதாரம் அல்ல

கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதைப் பற்றிய விவரணம், அவர் ஆள்தத்துவமற்றவர் என்பதற்கான ஆதாரம் அல்ல. எபேசியர் 3:19ல், தேவனால் நிரப்பப்படுவதைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.[32] தேவன் விசுவாசிகள் அனைவரையும் நிரப்புகிறவராக இருந்தும், அவர் ஆள்தத்துவமற்றவர் என்று யெகோவாவின் சாட்சிகள்

[29] Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, p. 85.

[30] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 380.

[31] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 21.

[32] இவ்வசனத்தில் "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்" என்பது மூலமொழில் "தேவனுடைய முழுமையின் நிறைவினால் நிரப்பப்படவும்" என்று உள்ளது. ஆங்கிலத்தில் be filled to the measure of all the fullness of God என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கூறுவதில்லை. அதேபோல, எபேசியர் 1:23ல் இயேசுகிறிஸ்துவும் எல்லாவற்றையும் நிரப்புகிறவராக இருக்கின்றார். இதனால், அவர் ஆள்தத்துவமற்றவர் என்று யெகோவாவின் சாட்சிகள் தர்க்கிப்பதில்லை. பிதாவாகிய தேவனும் இயேசுகிறிஸ்துவும் சகலவற்றையும் நிரப்புகிற வர்களாக இருந்தாலும் இவர்கள் ஆள்தத்துவமுள்ளவர்களாக இருப்பது போலவே, திரளான மக்களை நிரப்பும் பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமுள்ளவராகவே இருக்கின்றார். மேலும், எபேசியர் 5:18ல் மதுபானம் பரிசுத்த ஆவியானவருக்கான விவரணமாகக் குறிப்பிடப்பட வில்லை. துன்மார்க்கத்துக்கு ஏதுவான மதுபானவெறி கொள்ளவேண் டாம் என்றும், இதற்குப் பதிலாக ஆவியில் நிறைந்திருக்கும்படியுமே இவ்வசனம் அறிவுறுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபராய் இருப்பதனால், மனிதரை அவர் நிரப்பும்போது அவர்கள் அவருடைய ஆளுகைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்

ஆவியினால் நிரப்பப்படுதல் என்றால் என்ன என்பதை அறியாதவர்க ளாக இருப்பதினாலேயே பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர் என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர். உண்மையில், ஒரு குடத்தை அல்லது கிண்ணத்தைத் தண்ணீரினால் நிரப்புவதுபோல ஆவியானவர் மனிதர்களை நிரப்புவதில்லை. ஏனென்றால் ஆவியானவர் தண்ணீர் அல்ல. அவர் ஆள்தத்துவமுள்ள ஒரு நபர். எனவே, ஒரு நபரால் எப்படி பலரை நிரப்பமுடியும் என்று நாம் கேட்கலாம். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில் "நிறைந்திருத்தல்" அல்லது "நிரப்பப்படுதல்" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள "பிளீரூ" (*pleroo*) என்னும் சொல் நபருடன் தொடர்புற்றிருந்தால் "கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல்" அல்லது "ஆளுகைக்கு உட்பட்டிருத்தல்" என்னும் அர்த்தந் தரும்.[33] இதனால், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபராய் இருப்பதனால், மனிதரை அவர் நிரப்பும்போது, அவர்கள் அவருடைய ஆளுகைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக

[33] K.Snodgrass, *Ephesians: The NIV Application Commentary*, p. 290; W.W.Wiersbe, *Be Rich: An Expository Study on Ephesians*, p. 136.

இருப்பார்கள்.[34] எனவே, "பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருப்பதே அவரால் நிரப்பப்பட்டிருப்பதாகும்."[35] இத்தகைய சந்தர்ப்பங்களில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளைத் தம்முடைய முழுமையான ஆளுகைக்குள் கொண்டுவந்து, அவர்களுக்குத் தமது வல்லமையை அருளிச் செய்வார்.[36] இதனால் பரிசுத்த ஆவியானவரால் ஒரே நேரத்தில் பலரை நிரப்பக்கூடியதாய் உள்ளது. இதை அறியாத நிலையில் பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர் என்று கூறுவது தவறாகும்.

"பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர்" என்னும் தவறான உபதேசத்தை நிரூபிப்பதற்காக யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வேதவசனம் 1யோவான் 5:6,8 ஆகும்.[37] இவ்வசனங்களில், "இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும், இரத்தத்தினாலும் வந்தவர். ஜலத்தினாலே மாத்திரமல்ல, இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்... சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி ஜலம் இரத்தம் என்பவைகளே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனங்களில் "ஜலம், இரத்தம் என்பன ஆள்தத்துவமுள்ள நபர்கள் அல்ல என்பதனால், இவற்றோடு சேர்த்துக் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியும் "ஆள்தத்துவமற்ற சக்தி" என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.[38] ஆனால், இவ்வசனங்களை விளக்கும்போது, அக்காலத்தில் இருந்த தவறான ஒரு உபதேசத்திற்குப் பதிலாகவே யோவான் இவ்வாறு எழுதியுள்ளார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். அக்காலத்திலிருந்த சில வேதப்புரட்டுக் குழுக்

---

[34] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1435; H.W.Hoehner, *Ephesians: The Bible Knowledge Commentary – New Testament*, p. 640; C.Vaughan, *Ephesians: A Study Guide Commentary*, p. 111.

[35] K.S.Wuest, *Golden Nuggets from the Greek New Testament*, p. 35.

[36] C.R.Swindoll & R.B.Zuck, ed., *The Theological Wordbook*, pp. 165-166.

[37] 1யோவான் 5ம் அதிகாரத்தில் அடைப்புக்குறிக்குள் இருக்கும் 7ம் வசனம், தற்போது இருக்கும் பெரும்பாலான ஆரம்பகால வேதப்பிரதிகளில் இல்லை. இதனால் யெகோவாவின் சாட்சிகள் 6ம் வசனத்தையும் 8ம் வசனத்தையுமே பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை மறுதலிப்பதற்கு உபயோகிக்கின்றனர். அடைப்புக்குறிக்குள் இருக்கும் 7ம் வசனத்தின் சர்ச்சைக்குரிய விடயமான திரித்துவ உபதேசம் நான்காம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

[38] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 22.

கள், இயேசுகிறிஸ்து யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த ஒரு சாதாரண மனிதன் என்றும், அவர் ஞானஸ்நானம் பெறும்போதே தெய்வீகக் கிறிஸ்து அவருக்குள் வந்தார் என்றும் கூறியதோடு, அவருக்குள் இருந்த தெய்வீகக் கிறிஸ்து அவர் சிலுவையில் மரிப்பதற்கு சற்று முன்னர் அவரைவிட்டுப் போய்விட்டார் என்றும் போதித்தனர்.[39] இத்தகைய உபதேசத்தின்படி இயேசுகிறிஸ்து சாதாரண மனிதனாகப் பிறந்து சாதாரண மனிதனாகவே மரித்துள்ளார்.

ஞானஸ்நானத்தின்போதே இயேசுகிறிஸ்துவுக்குள் தெய்வீகக் கிறிஸ்து வந்தார் என்று போதித்தவர்கள் அவரை "ஜலத்தினாலே வந்தவர்" என்று குறிப்பிட்டனர். அதாவது, இயேசுகிறிஸ்து தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றபோதே அவர் தெய்வீக நிலையை அடைந்தார் என்னும் அர்த்தத்தில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ஆனால், யோவான் இயேசுகிறிஸ்துவை ஜலத்தினால் வந்தவர் என்று கூறும்போது, இத்தகைய அர்த்தத்துடன் குறிப்பிடவில்லை.[40] ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியானவர் அவரைப்பற்றி கொடுத்த சாட்சியையே யோவான் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டுகிறார். இதனால்தான் "ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்" என்றும் 6ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்தது, அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கான சாட்சியாக இருந்தது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானகன் இதைப்பற்றி கூறும்போது, "நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன்" என்று தெரிவித்துள்ளார் (யோவா.1:33). உண்மையில், இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெறும்வரை அவர் யார் என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. நாசரேத் என்னும் ஊரைச் சேர்ந்த

[39] Irenaeus, *Against Heresies*, 1.26.1; D.L.Akin, *1,2,3 John: New American Commentary*, p. 29; Z.C.Hodges, *1John: The Bible Knowledge Commentary – New Testament*, p. 901.

[40] C.G.Kruse, *The Letters of John: The Pillar New Testament Commentary*, p. 174.

ஒரு சாதாரண தச்சராக மாத்திரமே மக்கள் அவரை அறிந்திருந்தனர் (யோவா.1:45, மாற்.6:3).[41] ஆனால், அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர் சாதாரண மனிதன் அல்ல அவர் தேவன் என்னும் உண்மை வெளிப்பட்டது (மத்.3:16-17, மாற்.1:9-11, யேவா.1:31-34).[42] இத்தகைய அர்த்தத்திலேயே யோவான் இயேசுகிறிஸ்துவை ஜலத்திலிருந்து வந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

யோவானுடைய காலத்திலிருந்த வேதப் புரட்டர்கள் இயேசுகிறிஸ்து ஜலத்தினால் வந்தவர் என்று மாத்திரமே கூறினார்கள். ஆனால், யோவானோ, இயேசுகிறிஸ்து "ஜலத்தினால் மாத்திரமல்ல, இரத்தத்தி னாலும் வந்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வசனங்களில் ஜலம் இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தையும், இரத்தம் அவருடைய சிலுவை மரணத்தையும் குறிக்கின்றது.[43] இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது தெய்வீகக் கிறிஸ்து அவருக்குள் வந்தார் என்னும் அர்த்தத்தில் வேதப்புரட்டர்கள் அவரை ஜலத்திலிருந்து வந்தவராகக் குறிப்பிட்டாலும், அவர் சிலுவையில் மரிப்பதற்கு முன்னர் தெய்வீகக் கிறிஸ்து அவரைவிட்டு சென்றுவிட்டார் என்றே அவர்கள் போதித்தனர். ஆனால் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போதும் தேவனாகவே

[41] இதனால்தான், இயேசுகிறிஸ்துவைக் கண்ட பிலிப்பு "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே" என்று கூறினான் (யோவா.1:45). இதைப்போலவே, இயேசுகிறிஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திலுள்ள ஜெபாலயத்தில் போதித்தபோது, அவ்வூரைச் சேர்ந்தவர்கள் "இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்" (மாற்.6:3).

[42] இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைப்பற்றி மாற்கு இவ்விதமாகக் குறிப் பிட்டுள்ளார்: "அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத் திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மாற்.1:9-11).

[43] L.Morris, *1John: New Bible Commentary*, p. 1408; C.Vaughan, *1,2,3 John: Bible Study Commentary*, p. 118-120; R.W.Yarbrough, *1-3 John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 282; H.I.Marhsall, *1-3 John: The New International Commentary on the NT*, p. 231; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1967; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2323.

இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக "அவர் இரத்தத்தினாலும் வந்தவர்" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். அதாவது, இயேசுகிறிஸ்து வின் சிலுவை மரணமும் அவர் தேவன் என்பதை சுட்டிக்காட்டுகிறது என்றே யோவான் கூறுகிறார். மேலும், இவ்விரு சம்பவங்களுக்கும் பரிசுத்த ஆவியானவர் சாட்சிகொடுப்பவராக இருப்பதை 6ம் வசனத்தில் அறியத்தரும் யோவான், 8ம் வசனத்தில் ஆவியானவர் மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்ற இவ்விரு சம்பவங்களும் அவரைப்பற்றி சாட்சிகொடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். 8ம் வசனத்தில், ஆவி ஜலம் இரத்தம் "இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, இம்மூன்று சாட்சிகளும் எவ்வித முரண்பா டும் இல்லாத நிலையில் இருப்பதை யோவான் அறியத்தருகின்றார்.

பரிசுத்த ஆவியானவர் ஜலத்துடனும் இரத்தத்துடனும் சேர்க்கப்பட்டிருப் பதனால், அவர் ஆள்தத்துவமற்றவர் என்று கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகும். ஏனெனில், இவ்வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், அடைப்புக்குறிக்குள் இருக்கும் 7ம் வசனத்தில் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்னும் வாக்கியம், மூவரும் ஒரே தன்மையுடையவர்களாய் இருக்கின் றார்கள் என்னும் அர்த்தமுடையது. ஆனால், 8ம் வசனத்தில் ஆவி, ஜலம், இரத்தம் மூன்றும் ஒரே தன்மையுடையவை என்னும் அர்த்தத் தில் ஒன்றாயிருக்கிறது என்று கூறாமல் "மூன்றினது சாட்சியும் ஒருமைப் பட்டிருக்கிறது" என்றே யோவான் எழுதியுள்ளார். அதாவது, மூன்றினது தன்மையும் அல்ல, சாட்சியே இவ்வசனத்தில் ஒப்பிட்டுக்காட்டப்பட்டுள் ளது. இதைக் கருத்திற்கொள்ளாத யெகோவாவின் சாட்சிகள் பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர் என்று வாதிடுவது அர்த்தமற்றது.

மாற்கு 1:8ல், "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத் தேன். அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்னும் யோவான் ஸ்நானகனின் கூற்றைச் சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள், இவ்வசனத்தில் ஜலமும் ஆவியும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருப்பதனால் ஜலத்தைப் போலவே ஆவியும் ஆள்தத்துவமற்றது என்று கூறுகின்றனர்.[44] ஆனால், யோவான் ஸ்நான கன் இவ்வசனத்தில், தான் கொடுக்கும் ஞானஸ்நானத்துக்கும் இயேசு

[44] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 22.

கிறிஸ்து கொடுக்கப்போகும் ஞானஸ்நானத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தையே சுட்டிக்காட்டுகிறார். அதாவது யோவான் ஸ்நானகன் தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுத்தான். ஆனால் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவராய் இருக்கிறார். எனவே, ஜலத்துக்கும் ஆவியானவருக்கும் இடையிலான ஒற்றுமை பற்றி இவ்வசனத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. "பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கூறும்போது, ஆள்தத்துவமற்ற பொருட்களைப் பற்றியும் குறிப்பிட்டால் பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமற்றவர்"[45] என்னும் யெகோவாவின் சாட்சிகளின் தர்க்கம் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு அர்த்தமற்ற விளக்கமாகவே உள்ளது.

வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை ஒரு சக்தியாகக் கருதவில்லை. அவர் ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபராயிருக்கிறார். இதனால்தான், ஆள்தத்துவத்தின் அம்சங்களான அறிவு, உணர்வு, சித்தம் என்பன பரிசுத்த ஆவியானவருக்கு உள்ளன.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர் என்று காண்பிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் கொண்டுவரும் தர்க்கங்களுக்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. ஏனென்றால், "ஆள்தத்துவத்தின் சகல அம்சங்களையும் உடையவராய் பரிசுத்த ஆவியானவர் இருப்பதாகவே வேதாகமம் கூறுகிறது."[46] வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை ஒரு சக்தியாகக் கருதவேயில்லை. ஏனெனில், "அவர் ஆள்தத்துவமுள்ள தெய்வீக நபராயிருக்கிறார்."[47] "ஆள்தத்துவத்தின் அம்சங்களான அறிவு, உணர்வு, சித்தம் என்பன பரிசுத்த ஆவியானவருக்கு இருப்பதனால், அவர் ஆள்தத்துவமுள்ளவர் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது."[48]

ஆள்தத்துவத்தின் அம்சங்களில் ஒன்றான அறிவு பரிசுத்த ஆவியானவருக்கு இருப்பதை 1கொரிந்தியர் 2:10 அறியத்தருகின்றது. "தேவனு

[45] Anonymous, *Aid to Bible Understanding*, p. 1543.
[46] M.J.Erickson, *Christian Theology,* p. 859.
[47] B.Graham, *The Holy Spirit: Activating God's Power in Your Life*, p. 25
[48] C.C.Ryrie, *The Holy Spirit*, pp. 13-14.

டைய ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்" என்று இவ்வசனம் கூறுகிறது. ஆராய்ச்சி என்பது அறிவை உபயோகித்து செய்யப்படுவதனால், "தேவனுடைய ஆழங் களை ஆராய்ந்திருக்கும்" பரிசுத்த ஆவியானவர் அறிவுடையவராகவே இருக்கின்றார். இவ்வசனத்தில் "ஆராய்ச்சி" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லே யோவான் 5:39ல், "வேதவாக் கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்னும் கட்டளையிலும் உள்ளது. வேதாகமத்தை ஆராய்வது அறிவை உபயோகித்துச் செய்யப்பட வேண்டிய காரியமாகும். யூதர்கள் தங்கள் அறிவை உபயோகித்து வேதவாக்கியங்களை ஆராய்வது போலவே, பரிசுத்த ஆவியானவரும் தம் அறிவை உபயோகித்து தேவனுடைய ஆழங்களை ஆராய்கிறவ ராய் இருக்கின்றார். மேலும் "பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு "அறிவை உணர்த்தும் வசனம்" "ஞானத்தைப் போதிக்கும் வசனம்" என்னும் வரங்களைக் கொடுப்பதும் அவர் அறிவுள்ளவர் என்பதற்கான ஆதாரமாயுள்ளது."[49] இதைப்போலவே, பரிசுத்த ஆவியானவர் நம்மை 'சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துகிறவராக' (யோவா.16:13), "ஆன்மீகக் காரியங்களைப் போதிப்பதனால் (யோவா.14:26), அவர் அறிவுள்ளவராய் இருப்பதை மறுக்க முடியாதுள்ளது."[50] இதனால்தான் அவருக்கு "சிந்தை" இருப்பதாக ரோமர் 8:27ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் உணர்வுடையவராக இருப்பதும் அவர் ஆள்தத் துவமுள்ளவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. எபேசியர் 4:30ல் குறிப் பிடப்பட்டுள்ள "பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்னும் கட்டளை, மனிதர்களால் அவரைத் துக்கப்படுத்த முடியும் என்பதை அறியத்தருகிறது. மனிதர்கள் பாவம் செய்யும் போது பரிசுத்த ஆவியா னவரைத் துக்கப்படுத்துகின்றனர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் தங்களது கலகச் செயல்களினால் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தியதாக ஏசாயா 63:10 கூறுகிறது. துக்கம் மன உணர்வோடு சம்பந்தப்பட்டது. "பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுடையவராய் இருப்பதினாலேயே அவர் துயர உணர்வை அனுபவிக்கக் கூடியவராக இருந்தார்."[51] எபேசியர் 4:30ல் பரிசுத்த

[49] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 108.
[50] M.J.Erickson, *Christian Theology*, p. 861.
[51] C.C.Ryrie, *The Holy Spirit*, p. 14.

ஆவியானவருக்கு உபயோகிக்கப்பட்ட சொல்லே, 2கொரிந்தியர் 2:2,5ல் கொரிந்தியருக்கு ஏற்பட்ட துயரத்தைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள் ளது. உண்மையில் "ஒரு சக்தியினால் இத்தகைய உணர்வுகளை அனுபவிக்க முடியாது. இதனால், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவம் உள்ளவராகவே இருக்கின்றார்."[52]

ஆள்தத்துவத்தின் இன்னுமொரு அம்சம் சித்தமாகும். அதாவது, சுயமா கத் தீர்மானங்கள் எடுக்கக்கூடிய சித்தம் பரிசுத்த ஆவியானவருக்கு இருக்கின்றது. இதனால், அவர் தமது சித்தத்தின்படியே விசுவாசிக ளுக்கு வரங்களைப் பகிர்ந்து கொடுக்கின்றார் (1கொரி.12:11). இவ்வச னத்தில் சித்தம் என்பதைக் குறிக்கும் சொல்லே மூலமொழியில் யாக்கோபு 1:18ல் பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கு உபயோ கிக்கப்பட்டுள்ளது. எனவே, பிதாவாகிய தேவன் எவ்வாறு சுயமாகத் தீர்மானங்கள் எடுக்கக்கூடியவராய் இருக்கின்றாரோ, அதேவிதமான சித்தமுடையவராகவே பரிசுத்த ஆவியானவரும் இருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. எனவே, ஆள்தத்துவத்தின் சகல அம்சங்களும் பரிசுத்த ஆவியானவருக்கு இருப்பதனால் அவர் வெறும் சக்தி அல்ல.

பரிசுத்த ஆவியானவரின் பணிகளும் அவரது ஆள்தத்துவத்தை நமக்கு அறியத்தருகின்றது. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறும் போது, "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக் குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் நினைவூட்டுவார்" என்றும் (யோவா.14:26), "அவர் என்னைக் குறித்து சாட்சிகொடுப்பார்" என்றும் (யோவா.15:26), "அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்" என்றும் (யோவா.16:8), "சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை நடத்துவார்... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்றும் (யேவா.16:13) தெரிவித்துள்ளார். இதிலிருந்து, போதித்தல், கண்டித்து உணர்த்துதல், நினைவூட்டுதல், சாட்சியளித் தல், சத்தியத்திற்குள் நடத்துதல், வரப்போகும் காரியங்களை அறிவித் தல் என்னும் பணிகளைச் செய்பவராகப் பரிசுத்த ஆவியானவர் இருப்பதை அறிகின்றோம். மேலும், வேண்டுதல் செய்தல் (ரோ.8::27),

[52] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 246.

ஆராய்தல் (1கொரி.2:10), மதிப்பீடு செய்தல் (அப்.15:20), தடை செய்தல் (அப்.16:6-7), ஊழியர்களைத் தெரிவு செய்தல் (அப்.13:2), அவர்களை அனுப்புதல் (அப்.13:4), வழிகாட்டுதல் (ரோ.8:14), கட்டளையிடுதல் (அப்.8:29), ஆறுதலளித்தல் (யோவா.16:7), அழைப்பு விடுத்தல் (வெளி. 22:17), என்பனவும் பரிசுத்த ஆவியானவரின் பணிகளாய் உள்ளன. இவைகள் வெறும் சக்தியினால் அல்ல ஆள்தத்துவமுள்ள நபரினா லேயே செய்யக்கூடியவைகளாய் இருப்பதனால், இவற்றைச் செய்யும் பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராக இருப்பதை மறுக்கமுடி யாதுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராய் இருப்பதினாலேயே வேதாகமத்தில் அவருக்கு ஆண்பால் பெயர்ச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராய் இருப்பதினாலேயே வேதாகமத்தில் அவருக்கு ஆண்பால் பெயர்ச்சொல் உபயோகிக்கப்பட் டுள்ளது. மூலமொழியில் "ஆவி" என்பதைக் குறிக்கும் "நியூமா" என்பது "ஒன்றன்பால் சொல்லாய்" இருப்பதனால், கிரேக்கமொழி இலக்கணத்தின்படி இதனோடு சேர்ந்து வரும் பெயர்ச்சொல்லும் ஒன்றன் பால் சொல்லாகவே இருக்கவேண்டும். ஆனால், யோவான் 16:13-14ல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறும்போது, மூலமொழி இலக்கணத்தின்படி ஒன்றன்பால் சொல்லுக்கு ஒன்றன்பால் பெயர்ச்சொல்லை உபயோகிக்காமல், மொழியின் இலக்கண முறையை யும் மீறி ஆண்பால் பெயர்ச்சொல்லை உபயோகித்துள்ளார். பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுடையவராய் இருப்பதனால், அவருக்கு ஒன்றன்பால் பெயர்ச் சொல்லை உபயோகிக்க முடியாது என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருந்ததினாலேயே, அவர் பரிசுத்த ஆவியான வரை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உண்மையில், "பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுடையவர் என்பதனாலேயே வேதாகமம், மொழியின் இலக்கண முறையையும் மீறி பரிசுத்த ஆவியானவருக்கு ஆண்பால் பெயர்ச்சொல்லை உபயோகித்துள்ளது."[53] இதனால், பரிசுத்த ஆவியான வர் ஒரு சக்தியாக "அது" என்றல்ல, ஆள்தத்துவமுள்ளவராக "அவர்"

[53] C.C.Ryrie, *The Holy Spirit*, p. 17.

என்றே குறிப்பிடப்பட்டுள்ளார். யோவான் 16:13-14ல் பரிசுத்த ஆவியானவர் நான்கு தடவைகள் "அவர்" என்று அழைக்கப்பட்டுள்ளார். மேலும், யோவான் 15:26ல் "புறப்படுகிறவர்" என்றும், எபேசியர் 1:14ல் "அச்சாரமாயிருக்கிறார்" என்றும், யோவான் 16:7-8ல் "வரார்" "உணர்த்துவார்" என்றும் ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆள்தத்துவமுள்ள நபரைக் குறிப்பிடும் விதத்தில் பரிசுத்த ஆவியானவரை ஆண்பால் பெயர்ச்சொல்லால் வேதாகமம் குறிப்பிட்டுள்ளதினால், யெகோவாவின் சாட்சிகள் பரிசுத்த ஆவியானவரை அஃறிணையில் "வல்லமையான சக்தி" என்று குறிப்பிடுவது தவறாகும். உதாரணமாக, ஆதியாகமம் 1:2ல் "தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" என்பதை இவர்கள் "தேவனுடைய செயல்படும் சக்தி அசைவாடிக் கொண்டிருந்தது" என்று மாற்றியுள்ளனர்[54] அதுமாத்திரமல்ல, ஒரு மனிதன் தன் கைகளையும், சரீர அவயவங்களையும் உபயோகித்து ஒரு வீட்டைக் கட்டுவது போல, தேவனும் தமது சக்தியை உபயோகித்து உலகைப் படைத்துள்ளார் என்று யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தை விளக்குகின்றனர்.[55] "ஆவி" என்பதற்கு எபிரேய மொழியில் உள்ள "ரூஆஹ்" என்னும் சொல் "காற்று" என்னும் அர்த்தத்தையும் கொண்டிருப்பதனால் ஆதியாகமம் 1:1ல் இச்சொல்லை "செயற்படும் சக்தி" என்று மொழிபெயர்ப்பதே சரியானது என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.[56] உண்மையில், "ரூஆஹ்" என்னும் எபிரேயச் சொல்லிற்கு சுவாசம், காற்று, வல்லமை, ஆவி, தைரியம், என்னும் பலதரப்பட்ட அர்த்தங்கள் உள்ள போதிலும்,[57] வேதாகமத்தில் இச்சொல் தேவனுடன் சேர்ந்து வரும் போது ஆள்தத்துவமுள்ள பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. இச்சொல், "தேவனுடைய குணவியல்பைக் குறிக்கும் விதத்தில் வேதாகமத்தில் எங்கும் உபயோகிக்கப்படாததினால், ஆதியாகமம் 1:1ல், தேவனுடைய ஆவியானவர் என்றே இதை மொழிபெயர்க்க வேண்டும்.[58]

---

[54] அதாவது, the *Spirit of God* was hovering over the waters என்பதை *God's active force* was moving to and from over the surface of the waters என்று மாற்றியுள்ளனர்.
[55] Anonymous, *Aid to Bible Understanding*, p. 1544.
[56] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 20.
[57] F.Brown, S.R.Driver, and C.A.Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament*, p. 926.
[58] H.C.Leupold, *Exposition of Genesis*, p. 49.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவர் என்பதை இயேசுகிறிஸ்து சிறப்பான முறையில் அறியத்தந்துள்ளார். யோவான் 14:16ல் பரிசுத்த ஆவியானவரை "வேறொரு தேற்றரவாளன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தில் "வேறொரு" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "அல்லொஸ்" என்னும் கிரேக்கச் சொல், "ஒரேவிதமான இன்னுமொன்று" என்னும் அர்த்தமுடையது.[59] அதாவது, தம்மைப் போன்ற இன்னுமொருவரை அனுப்புவதாகவே இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். எனவே, இயேசுகிறிஸ்து ஆள்தத்துவமுள்ளவர் என்பதனால், அவரைப் போன்ற இன்னுமொருவரான பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமுள்ளவராகவே இருக்கின்றார்.[60] மேலும், "தாம் இவ்வுலகை விட்டுப் போனால் மாத்திரமே தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வருவார்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளதினால் (யோவா.16:7), அவருக்குப் பதிலாக அவரது பணியை இவ்வுலகில் தொடர்ந்து செய்வதற்காகவே பரிசுத்த ஆவியானவர் வந்துள்ளார் என்பது தெளிவாகின்றது. இதுவும், இயேசுகிறிஸ்துவைப் போலவே பரிசுத்த ஆவியானவரும் ஆள்தத்துவமுள்ளவர் என்பதை அறியத்தருகின்றது.[61]

யெகோவாவின் சாட்சிகள் தங்களது வேதப்புரட்டு உபதேசத்தை நிரூபிப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வேதப் பகுதிகளையெல்லாம் உருவக விவரணங்களாக விளக்குகின்றனர்.[62] உதாரணத்திற்கு யோவான் 14:16-17, 14:26, 15:26, 16:13 போன்ற வசனங்களில், பரிசுத்த ஆவியானவர் போதிப்பதாகவும், வழிகாட்டுவதாகவும், சாட்சி கொடுப்பதாகவும், பேசுவதாகவும், செவிமடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது, அவர் ஆள்தத்துவமுள்ளவர் என்பதற்கான ஆதாரம் அல்ல என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், இவ்வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் உயிருருவக அணியால் (personification) வர்ணிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.[63]

---

[59] R.Trench, *Synonyms of the New Testament*, pp. 357-361.
[60] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 96; C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 396.
[61] M.J.Erickson, *Christian Theology,* p. 860.
[62] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 21.
[63] Anonymous, *Reasoning from the Scriptures*, pp. 380-381. உயிரற்ற பொருட்களையும் பண்புப் பெயரால் குறிப்பிடப்படுபவைகளையும் உயிருள்ள நபர்களாக உவமித்துப் பேசுவதற்கு உபயோகிக்கப்படுவதே உயிருருவக அணியாகும்.

ஆனால், உயிருருவகம் போன்ற "உருவக அணிகள்" கவிதைகள் எழுதும் போதே உபயோகிக்கப்படுவது வழக்கம். நேரடியாக விஷயங் களைப் போதிக்கும்போது இத்தகைய உருவகங்களைப் பொதுவாக எவரும் உபயோகிப்பதில்லை. வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை அறியத்தரும் பகுதிகள் கவிதை நடையில் எழுதப் பட்டவைகள் அல்ல. "உரைநடையில் உபதேச விஷயங்களாக எழுதப் பட்டுள்ள வேதப்பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ள வராகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், இவ்வேதப் பகுதிகளை உயிருருவ கங்களாக விளக்குவது, வேதாகமத்தைத் தவறான முறையில் வியாக் கியானம் செய்வதாகவே இருக்கும்."[64] யெகோவாவின் சாட்சிகள் வேதப்புரட்டர்களாக இருப்பதனால், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்து வமுள்ளவராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வேதப் பகுதிகளை எல்லாம் உருவக விவரணங்களாக விளக்குகின்றனர்.

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் "ரூஆஹ்" "நியூமா" என்னும் சொற்கள் மூலமொழியில் ஒன்றன்பாலில் இருப்பதினா லேயே பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமற்றவர் என்று யெகோவா வின் சாட்சிகள் போதிக்கின்றனர். ஆனால் கிரேக்க மொழியில் பெயர்ச் சொற்கள் அனைத்துமே பால் வேறுபாட்டுடனேயே குறிப்பிடப்படும். எனினும், இது ஆண் பெண் வேறுபாட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட பிரிவு அல்ல. உதாரணத்திற்கு, கிரேக்க மொழியில் "அப்பம்" ஆண்பால் சொல்லாகவும், "தலை" பெண்பால் சொல்லாகவும், "சிறுவன்" ஒன்றன்பால் சொல்லாகவுமே உள்ளது. எனவே, கிரேக்க மொழியில் ஒரு பெயர்ச்சொல் ஆண்பாலில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், அச்சொல் லால் குறிப்பிடப்படுவது மனிதனாகத்தான் இருக்கவேண்டும் என்ப தில்லை. அதேபோல, ஒன்றன்பால் சொல்லால் குறிப்பிடப்படும் பொருள் "அது" என்றே குறிப்பிடப்பட வேண்டும் என்றும் கூறமுடியாது.[65] புதிய ஏற்பாட்டில் குழந்தைகள், சிறுவர், பெண்பிள்ளைகள், அசுத்த ஆவிகள், தேவதூதர்கள் என்பவை ஒன்றன்பால் சொற்களாகவே உள்ளன.[66] இவையனைத்தும் ஆள்தத்துவமுள்ளவைகளாய் இருக்கின்ற போதி

---

64 C.Hodge, *Systematic Theology Vol.1*. p. 524.

65 J.W.Wenham, *The Elements of New Testament Greek*, p. 8.

66 லூக்கா 1:41, 1:44, 2:16, 18:15, மாற்கு 5:39-41, 7:26, 7:29-30, 5:41-42, மத்தேயு 12:24, 12:27-28, எபிரேயர் 1:14.

லும், ஒன்றன்பால் சொல்லினாலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, “ஆவி” என்பதற்கு மூலமொழியில் உள்ள சொல் ஒன்றன்பாலில் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராகவே இருக்கின்றார்.

## 3.பரிசுத்த ஆவியானவர் தேவத்துவமுள்ள தெய்வீக நபர்

பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் தேவத்தன்மை உடையவர்களாய் இருப்பது போலவே, இவர்களோடு சமமான நிலையில் இருக்கும் பரிசுத்த ஆவியானவரும் தேவத்தன்மை உடையவராய் இருக்கின்றார். இதனாலேயே பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தில் “தேவ ஆவி” (அல்லது தேவனுடைய ஆவி) என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.[67] இதனால், வேதாகமத்தில் சில இடங்களில் “தேவன்” என்பதற்குப் பதிலாகப் “பரிசுத்த ஆவி” என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு அப்போஸ்தலர் 5ம் அதிகாரத்தில், அனனியா பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொன்னது (அப்.5:3), தேவனிடத்தில் சொல்லப்பட்ட பொய்யாகவே பேதுருவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (அப்.5:4).[68] அதேபோல, 1கொரிந்தியர் 3:16ல் விசுவாசிகள் “தேவனுடைய ஆலயம்” என்றும், 1கொரிந்தியர் 6:19ல் “பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். “தேவனுடைய ஆலயத்தைப் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்று கூறுவதன் மூலம், பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதை இவ்வசனங்கள் அறியத்தருகின்றன.”[69] 2கொரிந்தியர் 3:17ல், “கர்த்தரே ஆவியானவர்” என்று இவ்வுண்மை நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் “கர்த்தர் என்னும் சொல் பரிசுத்த ஆவியானவருக்கு உபயோகிக்கப்பட்டிருப்பது அவரது தேவத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது.”[70]

பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதனால் அவர் தேவத்தன்மைகள் அனைத்தையும் உடையவராய் இருக்கின்றார். தேவனாய் இருப்பவர்

[67] R.Pache, *The Person and the Work of the Holy Spirit*, p. 14; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 249.
[68] R.T.Kendall, *Holy Fire*, p. 12.
[69] M.J.Erickson, *Christian Theology,* p. 857.
[70] D.K.Lowery, *2Corinthians: The Bible Knowledge Commentary NT*, p. 562.

சகலமும் அறிந்தவராகவும், சர்வ வல்லமையுடையவராகவும், எங்கும் இருப்பவராகவும் இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருப்பதனால் இத்தெய்வீகத் தன்மைகள் அனைத்தும் அவருக்கு உள்ளன. பரிசுத்த ஆவியானவர் சகலமுமறிந்தவர் என்பதை 1கொரிந் தியர் 2:10-11 அறியத்தருகின்றது. பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிக ராகச் செயல்பட்டுள்ளமை (யோபு.33:4, சங்.104:30), அவர் சர்வவல்லமை உள்ளவர் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது. மேலும், பரிசுத்த ஆவியானவர் எங்கும் இருப்பதினாலேயே, "உம்முடைய ஆவிக்கு மறைவாக நான் எங்கே போவேன்?" என்று கேட்ட சங்கீதக்காரன், அவர் எங்கும் இருப்பதை அறியத்தந்துள்ளான் (139:7-10). எபிரேயர் 9:14ல், பரிசுத்த ஆவியானவர் நித்தியர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "தேவன் மாத்திரமே நித்தியர் என்பதனால், நித்தியமானவராயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் தேவனாகவே இருக்கின்றார்."[71] மேலும், பரிசுத்த ஆவியானவர் தேவத் தன்மையுடையவராய் இருப்பதனால், அவர் தேவனால் மாத்திரம் செய்யக்கூடிய பணிகளைச் செய்கிறவராக இருக்கின்றார். சிருஷ்டித்தல் (யோபு 33:4, 26:13, சங்.104:30), பராமரிப்பு (ஏசா.40:13-15, அப்.16:6-7), பாவிகளை மறுபடியும் பிறக்கவைத்தல் (தீத்.3:5, யோவா.3:6), வேதவாக்கியமருளுதல் (2தீமோ.3:16, 2பேது. 1:21), வரங்களைப் பகிர்ந்தளித்தல் (1கொரி.12:11), விசுவாசிகளைப் பரிசுத்தமாக்குதல் (2தெச.2:13) என்பன பரிசுத்த ஆவியானவர் செய்யும் தெய்வீகப் பணிகளில் சிலவாகும்.

பிதாவாகிய தேவனையும், இயேசுகிறிஸ்துவையும் போலவே பரிசுத்த ஆவியானவரும் தனித்துவமானவராகவும், ஆள்தத்துவமுள்ளவராகவும், தேவத்துவமுள்ளவராகவும் இருக்கின்றார். புதிய ஏற்பாட்டில் ஞானஸ் நானக் கட்டளையிலும் (மத்.28:19), ஆசீர்வாத உரையிலும் (2கொரி. 13:14), நிருப வாழ்த்துரையிலும் (1பேது.1:2) மூவரும் சமமான நிலையில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும்விட தாழ்வானவர் அல்ல என்பது தெளிவாகின் றது. உண்மையில், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் எவ்வித ஆதாரமும் அற்ற வெறும் வேதப்புரட்டா கவே உள்ளது.

[71] M.J.Erickson, *Christian Theology,* p. 858.

## ஒன்பதாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

கிறிஸ்தவ மார்க்கத்தின் அடையாளச் சின்னமாக இருக்கும் சிலுவையை விக்கிரகமாகக் கருதும் யெகோவாவின் சாட்சிகள், இயேசுகிறிஸ்து நேரான மரத்தூணிலேயே அறையப்பட்டார் என்று கூறி, கிறிஸ்தவர்கள் சிலுவையை வைத்திருப்பதையும் பாவமான செயலாகக் கருதுகின்றனர். ஆனால், இயேசுகிறிஸ்து சிலுவையிலேயே அறையப்பட்டார் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதோடு, சிலுவை கிறிஸ்தவ மார்க்கத்தின் அடையாளச் சின்னமாக உள்ளது. உண்மையில், சிலுவையைப் புறக்கணிக்கும் யெகோவாவின் சாட்சிகள், சிலுவையைப் புரிந்துகொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். அதாவது, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும், இதன் மூலமாக நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் அறியாதவர்களாக இருக்கும் யெகோவாவின் சாட்சிகள், தங்களுடைய குழுவில் சேர்ந்து பணியாற்றுவதே இரட்சிக்கப்படுவதற்காக மனிதர் செய்யவேண்டிய காரியம் என்று நம்புகின்றனர். இதனால், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசிப்பதனால் கிடைக்கும் இரட்சிப்பை அறியாதவர்களாக இருக்கும் யெகோவாவின் சாட்சிகள், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நினைவுகூருவதற்காகச் செய்யப்படும் திருவிருந்தை எல்லாருக்கும் கொடுப்பதில்லை. யெகோவாவின் சாட்சிகளாயிருப்பவர்களை இரண்டாகப் பிரிக்கும் இவர்கள், 144000 பேருக்கு மாத்திரமே திருவிருந்து கொடுக்கின்றனர். இவ்விதமாக, இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியையும் அதன் மூலம் மனிதருக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் அறியாதவர்களாகவும் அனுபவிக்க முடியாதவர்களாகவும் யெகோவாவின் சாட்சிகள் இருக்கின்றனர்.

# ஒன்பதாம் அத்தியாயம்



# சிலுவைச் சின்னம்

## விக்கிரகத்தின் அடையாளமா? அல்லது கிறிஸ்தவத்தின் சின்னமா?

கிறிஸ்தவ மார்க்கத்தின் அடையாளச் சின்னமாக இருப்பது சிலுவையாகும். இயேசுகிறிஸ்து மனிதருடைய பாவத்திற்கான பலியைத் தம்முடைய சிலுவை மரணத்தில் செலுத்தியதினால், சிலுவை கிறிஸ்தவத்தோடு இணைந்துள்ள ஒரு புனித அடையாளச் சின்னமாகவே மாறிவிட்டது. இதனால் கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆலயக் கட்டிடங்களிலும், புனிதமாகக் கருதப்படும் பொருட்களிலும் சிலுவை அடையாளத்தை வைத்துள்ளனர். ஆனால், யெகோவாவின் சாட்சிகள், கிறிஸ்தவர்கள் சிலுவையை வைத்திருப்பதும், அதைப் புனிதமான ஒரு சின்னமாகக் கருதுவதும் தவறு என்றும், இது விக்கிரக வழிபாட்டின் ஒரு வடிவம் என்றும் கூறுகின்றனர்.[1] உண்மையில், சிலுவையை வழிபடுவதே பாவமான காரியமாகும். ஏனெனில் சிலுவையை வழிபடுவது அதை

[1] Anonymous, *Let God be True*, p. 148; *Reasoning from the Scriptures*, p. 92.

ஒரு விக்கிரகமாக மாற்றிவிடுகிறது. வேதாகமம் விக்கிரக வழிபாட்டை முழுமையாகத் தடைசெய்துள்ளதினால் (யாத்.20:4-5, 1யோவா.5:21),[2] நாம் சிலுவையை வழிபடவோ முத்தமிடவோ கூடாது. ஆனால், சிலுவையை ஒரு அடையாளச் சின்னமாக வைத்திருப்பதில் எவ்வித தவறும் இல்லை. உண்மையில், சிலுவை இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நமக்கு நினைவூட்டும் ஒரு ஞாபகச் சின்னமாகவும், கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை சத்தியத்தை அறியத்தரும் அடையாளமாகவும் உள்ளது. ஏனெனில், சிலுவையே தேவனுடைய ஞானத்தையும் வல்லமையையும் நமக்கு அறியத்தரும் ஊடகமாய் உள்ளது (1கொரி. 1:23-24).[3] இதனால், சிலுவையைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் தவறான போதனைகளை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## (1). சிலுவையைப் புறக்கணிக்கும் யெகோவாவின் சாட்சிகள்

கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆராதனைகளில் சிலுவையை உபயோகிக்கவில்லை என்று வாதிடும் யெகோவாவின் சாட்சிகள், இது ரோம சக்கரவர்த்தி கொன்ஸ்டன்டைன் என்பவனால் கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவரப்பட்ட ஒரு புறமதச் சின்னம் என்று கூறுகின்றனர்.[4] இதனால், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதையும் யெகோவாவின் சாட்சிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இயேசுகிறிஸ்து சிலுவையில் அல்ல, மரத்தூண் ஒன்றிலேயே

---

[2] யாத்திராகமம் 20:4-5ல் "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்று தேவன் கட்டளையிட்டுள்ளார். புதிய ஏற்பாட்டிலும் 1யோவான் 5:21ல் "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக" என்னும் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

[3] 1கொரிந்தியர் 1:23-24ல் "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்" என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

[4] https://www.jw.org/en/publications/books/bible-teach/origin-cross-symbol-pagan/

அறையப்பட்டார் என்பதே இவர்களின் நம்பிக்கையாக உள்ளது.[5] "இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்ததற்கு எவ்வித வேதாகம ஆதாரங்களும் இல்லை" என்று கூறும் இவர்கள்,[6] சிலுவை என்பதற்கு வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் "நேரான தூண்" என்னும் அர்த்தமுடையது என்று கூறுகின்றனர்.[7] ஆனால், சிலுவை என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஸ்டாவ்ரொஸ்" (*stauros*) என்னும் கிரேக்கச் சொல் T + X I என்னும் வடிவங்களில் மரத்தினால் செய்யப்படும் தூண்களைக் குறிக்கும்.[8] எனவே, இச்சொல்லை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு இயேசுகிறிஸ்து I வடிவ நேரான மரத்தூணில் மரித்தார் என்று கூறமுடியாது.[9] மேலும், அக்காலத்தில் மரணதண்டனை கொடுக்கப்படுவதற்கு வித்தியாசமான விதங்களில் செய்யப்பட்ட சிலுவைகள் இருந்தன.[10] எனினும், இயேசுகிறிஸ்து நேரான மரத்தூணில் அறையப்பட்டிருந்தால் மத்தேயு 27:37ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல, "இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவரது சிரசுக்கு மேலாக" அல்ல, கைகளுக்கு மேலாகவே வைத்திருக்க முடியும். எனவே, யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல, இயேசுகிறிஸ்துவின் கைகளிரண்டும் ஒன்றாகக் கட்டப்பட்டு அவர் மரத்தூணில் அறையப்பட்டார் என்னும் விளக்கம் தவறானதாகவே உள்ளது.[11]

யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல, சிலுவை அடையாளம் கி.பி. 4ம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவத்திற்குள் வந்தது என்பது உண்மை அல்ல. அதேபோல, "இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை"[12] என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவதிலும் உண்மை இல்லை. ஏனெனில், கி.பி.100ம் ஆண்டில் எழுதப்பட்ட பர்னபாவின் கடிதத்தில், இயேசுகிறிஸ்து இரண்டு கரங்களும் விரிக்கப்பட்ட நிலையில் சிலுவையில் அறையப்பட்டதாகக்

---

[5] *The Watchtower*. 15 August 1987, p. 29.

[6] *Awake*. 8 November 1972, p. 28.

[7] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 89.

[8] G.Kittel, *Theological Dictionary of the New Testament: Volume 7*, p. 572

[9] R.M.Bowman, *Understanding Jehovah's Witnesses*, p. 143.

[10] Seneca the Younger, "To Marcia on Consolation" in *Moral Essays*, 6.20

[11] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, pp. 397-398. [12] *Awake*, 8 November 1972, p. 28; *Awake*, 22 September 1974, p. 28.

> கி.பி.நான்காம் நூற்றாண்டிலேயே சிலுவை பிறமதத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்தது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

குறிப்பிடப்பட்டுள்ளது.[13] இதைப்போலவே, கி.பி. 2ம் நூற்றாண்டில் ஜஸ்டின் மாட்டர் என்னும் சபைத் தலைவர் + என்னும் வடிவத்திலான சிலுவையில் இயேசுகிறிஸ்து அறையப்பட்டதைப்பற்றி குறிப்பிட்டுள் ளார்.[14] மேலும், கி.பி.3ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவ சபைத் தலைவர்கள் இரண்டு கிரேக்க எழுத்துகளை உபயோகித்துத் தங்களு டைய நூல்களில் சிலுவை உருவத்தை வரைந்துள்ளனர்.[15] மேலும், கி.பி.3ம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஒரு ஓவியத்தில் சிலுவையில் அறையப்பட்ட மனிதனொருவனை இன்னுமொருவன் வழிபடுகின்ற காட்சி உள்ளது. ஆனால், இது கிறிஸ்தவர்களைப் பரிகசிப்பதற்காக வரையப் பட்ட ஓவியமாய் இருப்பதனால், இதில் சிலுவையிலறையப்பட்ட மனித னின் முகம் கழுதையின் முகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.[16] எனவே, கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே சிலுவை பிறமதத்திலிருந்து கிறிஸ்த வத்திற்குள் வந்தது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த பல சிலுவைகள் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட வைகளாகவே உள்ளன.[17] மேலும், ஆரம்ப காலத்தில் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்றே யெகோவாவின் சாட்சிகள் நம்பினார்கள்.[18] அதுமாத்திரமல்ல “மனிதனுடைய நம்பிக்கைகள் வெளிப்படும் முக்கிய மான சத்தியமாக கிறிஸ்துவின் சிலுவை தேவனால் ஆயத்தப்படுத்தப் பட்டுள்ளது”[19] என்று போதித்தார்கள். ஆனால் 1930ம் ஆண்டு வேதாகம

---

[13] *The Epistle of Barnabas*, 12:2.

[14] J.Martyr, *Dialogue with Trypho*, p. 40.

[15] L.Hurtado, *The Earliest Christian Artifacts: Manuscripts and Christian Origins*, pp. 135-154.

[16] W.Drum, “The Incarnation.” The Catholic Encyclopedia. Vol. 7.

[17] D.Harris, *The Jehovah's Witnesses: Their Beliefs and Practices*, p. 103.

[18] D.Reed, *Index of Watchtower Errors*, p. 73; *The Watchtower*. 1 January 1891, p. 1277; Anonymous, *Creation*, pp. 161, 265, 336.

[19] J.F.Rutherford, *The Harp of God*, p. 141.

சத்தியத்தை முரண்படுத்தும் விதத்தில் சிலுவையைப்பற்றிய தங்களுடைய உபதேசத்தை முழுமையாக மாற்றி, கிறிஸ்தவத்தின் புனித சின்னமான சிலுவையை முழுமையாகப் புறக்கணித்துள்ளனர்.

# (2). சிலுவையைப் புரிந்திடாத யெகோவாவின் சாட்சிகள்

யெகோவாவின் சாட்சிகள் சிலுவையைப் புறக்கணிப்பது மாத்திரமல்ல, சிலுவையைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும் இருக்கின்றனர். அதாவது, இயேசுகிறிஸ்து எதற்காக சிலுவையில் மரித்தார் என்பதைப் புரிந்துகொள்ளாத இவர்களின் போதனைகள், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியையே அர்த்தமற்றதாக்கியுள்ளது. ஏனெனில், இரட்சிப்புக்காகத் தங்களுடைய குழுவில் சேரும்படி மக்களை நிர்ப்பந்திக்கும் யெகோவாவின் சாட்சிகள்,[20] "தற்காலத்தில் தேவன் உபயோகிக்கும் தங்களுடைய குழுவோடு தொடர்பற்ற நிலையில் எவ்வளவுதான் வேதவசனங்களை வாசித்தாலும் ஜீவமார்க்கத்தில் முன்னேறிச் செல்ல முடியாது"[21] என்றும், "நித்திய ஜீவனைப் பெற்று 'பூலோகப் பரதீசில் குடியிருப்பதற்குத்'[22] தங்களுடைய குழுவில் சேர்ந்து தேவனை சேவிக்கவேண்டும்"[23] என்றும் கூறுகின்றனர். ஏனெனில், யெகோவாவின் சாட்சிகளின் போதனையின்படி, ஒருவனுடைய இரட்சிப்பு அவனுடைய கிரியைகளிலேயே தங்கியுள்ளது. இதனால், "நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் கடுமையாக வேலை செய்ய வேண்டும்"[24] என்று கூறும் இவர்கள், "ஒருவனுடைய பெயர் ஜீவ புத்தகத்தில் இடம் பெறுவதற்கு அவன் கடுமையாக வேலை செய்யவேண்டும்"[25] என்று தெரிவிக்கின்றனர். யெகோவாவின் சாட்சிகளைப் பொறுத்தவரை, வீடுவீடாகச் சென்று அவர்களுடைய பிரசுரங்களை மக்களுக்குக்

[20] *The Watchtower*. 15 November 1981, p. 21.
[21] *The Watchtower*. 1 December 1981, p. 27.
[22] யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்தின்படி 144000 பேர் மாத்திரமே பரலோகத்திற்குப் போவார்கள். ஏனையோர் பரதீசு என்று அழைக்கப்படும் இப்பூமியிலேயே வாழ்வார்கள். இதுபற்றி 13ம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
[23] *The Watchtower*, 15 February 1983, pp. 12-13.
[24] *The Watchtower*, 15 August 1972, p. 491.
[25] *The Watchtower*, 1 April 1947, p. 204.
[26] *The Watchtower*. 15 February 1983, pp. 12-13.

கொடுப்பதும், யெகோவாவின் ராட்சியத்தைப்பற்றி அறிவிப்பதுமே தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்புக்காக ஒருவன் செய்யவேண்டிய முக்கியமான வேலையாக உள்ளது.[26] இதைத் தவிர, ஒவ்வொருவரும் கிழமைக்கு 5 மணிநேரம் நடைபெறும் வாராந்திரக் கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டும். இதில், ஞாயிற்றுக்கிழமைகளில் 2 மணிநேரம் யெகோவாவின் சாட்சிகள் வெளியிடும் "காவற்கோபுரம்" என்னும் சஞ்சிகையின் கட்டுரையொன்றையும், செவ்வாய்க்கிழமைகளில் ஒரு மணிநேரம் யெகோவாவின் சாட்சிகள் வெளியிடும் புத்தகத்தையும் படிக்கவேண்டும். வியாழக்கிழமைகளில் 2 மணிநேரம், யெகோவாவின் சாட்சிகளின் சஞ்சிகைகளிலும் புத்தகங்களிலும் உள்ள விஷயங்களை எவ்வாறு புதியவர்களுக்கு அறிவிப்பது என்பதைக் கற்கவேண்டும்.[27] இவையெல்லாம் இரட்சிக்கப்படுவதற்காக யெகோவாவின் சாட்சிகள் கிரமமாகச் செய்யவேண்டிய வேலைகளாய் உள்ளன.

ஒருவனின் இரட்சிப்பு யெகோவாவின் ராட்சியத்திற்காகச் அவன் செய்யும் வேலையை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகக் கூறும் யெகோவாவின் சாட்சிகள், தேவனுடைய கிருபையினால் மனிதருக்கு அருளப்படும் இரட்சிப்பை அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

ஒருவனின் இரட்சிப்பு அவன் யெகோவாவின் ராட்சியத்திற்காகச் செய்யும் வேலையை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், எவராலும் தங்களுடைய இரட்சிப்பின் நிச்சயத்தைப் பற்றி கூறமுடியாது என்றே யெகோவாவின் சாட்சிகள் கருதுகின்றனர்.[28] இதனால், இவர்கள் தங்களுடைய இரட்சிப்பைப்பற்றி நிச்சயமற்றவர்களாகவே இருக்கின்றனர்.[29] இரட்சிப்புக்கு விசுவாசம் அவசியம் என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டாலும், விசுவாசத்தோடு கிரியையும் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றனர். "விசுவாசம் கிரியையோடு சேர்ந்து வரவேண்டும்"[30] என்று கூறும் இவர்கள், இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் யெகோவாவின் சாட்சிகளின்

---

[27] H.Kern, *How to Respond Jehovah's Witnesses*, p. 8.

[28] Anonymous, *Life Everlasting – In Freedom of the Sons of God*, p. 398.

[29] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, pp. 208-209.

[30] Anonymous, *Make Sure All Things*, p. 438.

செயல்படும் அங்கத்தினனாக இருக்கவேண்டும் என்றும், தங்களுடைய குழுவின் சகல சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும் போதிக்கின்றனர்.[31] உண்மையில், இரட்சிப்பு தேவனுடைய கிருபையினாலானது என்னும் வேதாகமத்தின் அடிப்படை உபதேசத் தையே முரண்படுத்தும் வேதப்புரட்டாக இது உள்ளது.

"இரட்சிப்பு மனிதனுடைய வேலையை அடிப்படையாகக் கொண்டது" என்று யெகோவாவின் சாட்சிகள் கூறினாலும், இயேசுகிறிஸ்து பாவத்திற்கான பலியாக மரித்தார் என்பதை இவர்கள் நம்புகின்றனர். ஆனால், வேதாகமம் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியைப் பற்றி கூறுபவற்றை இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில், யெகோவா வின் சாட்சிகளைப் பொறுத்தவரை, ஆதாமின் பாவத்தினால் அவனும் அவனுடைய சந்ததியினரும் இழந்து போன இப்பூலோக வாழ்வை மனிதனுக்கு மறுபடியும் பெற்றுக்கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து மரித்துள்ளார்.[32] "ஆதாமினுடைய பாவத்தினால் மனுக்குலம் இழந்து போன ஆசீர்வாதங்களை இயேசுகிறிஸ்து தம்முடைய பலியின் மூலம் பெற்றுக்கொடுத்துள்ளார்"[33] என்று யெகோவாவின் சாட்சிகள் கூறினாலும், இப்பூமியில் நித்திய காலமாக வாழும் சந்தர்ப்பத்தை இழந்துபோன மக்களுக்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கா கவே இயேசுகிறிஸ்து மரித்தார் என்பதே இவர்களுடைய போதனையா கும். ஏனெனில், யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்தின்படி, இவர்க ளுடைய குழுவில் உள்ளவர்களில் 144000 பேர் மாத்திரமே பரலோகத் துக்குப் போவார்கள். ஏனையவர்கள், இந்தப் பூமியிலேயே நித்திய காலமாய் வாழ்வார்கள். இதையே இவர்கள் பரதீசு என்று கூறுகின்ற னர்.[34] இத்தகைய வேதப்புரட்டு உபதேசம், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியையே அர்த்தமற்ற தாக்கியுள்ளது.

இயேசுகிறிஸ்து 144000 பேருக்குப் பரலோக வாழ்வையும், ஏனையவர்க ளுக்கு பூமியில் நித்திய கால வாழ்வையும் பெற்றுக்கொடுப்பதற்காக மரித்தார் என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரங்களும் இல்லை.

[31] *The Watchtower*. 15 February 1983, pp. 12-13.
[32] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 308.
[33] Anonymous, *Should You Believe in the Trinity*, p. 15; A.Hoekema, *Four Major Cults*, p. 273.
[34] இது பற்றி 13ம் அத்தியாயத்தில் விபரமாக ஆராயப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளைகளாகியவர்கள் அனைவரும் பரலோகத்துக்குப் போவார்கள் என்றே வேதாகமம் கூறுகிறது.[35] மேலும், ஆதாம் இழந்துபோன இவ்வுலகப் பரதீசின் வாழ்வைப் பெற்றுத் தருவதற்காக இயேசுகிறிஸ்து மரித்தார் என்பதும் வேதாகமத்திற்கு முரணான போதனையாகவே உள்ளது. ஏனென்றால், உலக மாந்தரின் பாவத்திற்கான பலியாகவே இயேசுகிறிஸ்து மரித்தார் என்றே வேதாகமம் கூறுகிறது. அதாவது, இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் மனிதரைப் பாவத்திலிருந்து மீட்டு (மாற். 10:45, 1கொரி.6:18-20, ரோ.3:26, எபி.2:17, 1யோவா.2:2, 4:10),[36] அவர்களைத் தேவனோடு ஒப்புரவாக்கியுள்ளார். ஏனெனில், பாவம் தேவனையும் மனிதனையும் பிரித்து வைத்திருந்தது (ஏசா.59:1-2).[37] ஆனால், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி, மானிட பாவத்தை நீக்கி மனிதனைத் தேவனோடு ஒப்புரவாக்கியுள்ளது (ரோ.5:1, எபே.2:13-18).[38] இதனால், மனிதன் நித்திய காலமாக தேவனோடு வாழக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றுள்ளான்.[39] எனினும், இது மனிதருடைய கிரியைக்கான கூலியாக இராமல், தேவனுடைய கிருபையினால் மனித

---

[35] இவ்விடயம் 13ம் அத்தியாயத்தில் விபரமாக ஆராயப்பட்டுள்ளது.

[36] மனிதன் பாவத்துக்கு அடிமையாய் இருப்பதாகவே வேதாகமம் கூறுகின்றது (யோவா.8:33-34, ரோ.6:17). மனிதனைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக இயேசு கிறிஸ்து தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்துள்ளார் (மாற்.10:45, 1கொரி. 6:18-20).

[37] ஆரம்பத்தில் மனிதன் தேவனோடு ஐக்கியமுடையவனாக இருந்தான் (ஆதி.3:8). ஆனால், பாவம் இருவருக்கும் இடையே பகையையும் பிரிவினையையும் கொண்டு வந்தது (ரோ.5:10, கொலோ.1:21-22, யாக்.4:4).

[38] எபேசியர் 2ம் அதிகாரத்தில் பவுல் இதைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்: "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் (அதாவது யூதரையும் புறஜாதியாரையும்) தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்... அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் (அதாவது யூதரும் புறஜாதியாரும்) ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்."

[39] ஒருவன் இயேசுகிறிஸ்து தனக்காக சிலுவையில் செய்த பலியை விசுவாசிக்கும் போது, அவனில் இருக்கும் பாவத்தை அவனிலிருந்து எடுத்துப் போடும் அவர், தம்முடைய நீதியை அவனுக்குக் கொடுப்பதனால், அவன் தேவனுடைய பார்வையில் நீதிமானாகக் கருதப்பட்டு, தேவனோடு நித்திய காலம் வாழக்கூடிய நிலையை அடைகின்றான். பவுலினுடைய நிருபங்களில் இது 'நீதிமானாக்கப்படுதல்' என்னும் வார்த்தையால் குறிப்பிடப்பட்டுள்ளது.

னுக்குக் கிடைக்கும் தேவஈவாகவே உள்ளது. யெகோவாவின் சாட்சிகள் இவ்வுண்மையை மறுதலித்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதம் மனிதனுடைய கிரியைக்குத் தேவன் அளிக்கும் பலன் என்று கூறி மக்களை வஞ்சித்து வருகின்றனர். ஏனெனில், “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்” என்று கூறும் வேதாகமம், “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல” என்பதை அறியத்தருகிறது (எபே.2:8-9).

யெகோவாவின் சாட்சிகளைப் போல இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை அர்த்தமற்றதாக்கி, மானிட கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போதனைகள் வேதப்புரட்டு உபதேசங்களாகவேயுள்ளன.

இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை அர்த்தமற்றதாக்கி, மானிட கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போதனைகள் வேதப் புரட்டு உபதேசங்களாகவே உள்ளன. யெகோவாவின் சாட்சிகள் தங்களை வேதப் போதகர்கள் என்று கூறிக்கொண்டாலும், இவர்கள் முழுமையான வேதப்புரட்டர்களாகவே உள்ளனர். கி.பி. முதலாம் நூற் றாண்டில், இரட்சிக்கப்படுவதற்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்வது மாத்திரம் போதாது என்றும், இரட்சிப்பு முழுமையடைவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி விருத்தசேதனமும் செய்யவேண்டும் என்றும் வேதப்புரட்டர்கள் போதித்து வந்தனர் (அப்.15:1). இத்தகைய உபதேசத்தைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்துவின் கிருபையிலிருந்து விழுந்துள்ளதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளதோடு (கலா.5:4),[40] இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியினால் எவ்வித பிரயோஜனமும் இல்லை என்பதையும்

[40] கலாத்தியர் 5:4ல், “நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து, கிருபையினின்று விழுந்தீர்கள்” என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

சுட்டிக்காட்டியுள்ளார் (கலா.5:2,5:4).[40] இதைப்போலவே, தற்காலத்தில் யெகோவாவின் சாட்சிகளும் இரட்சிப்புக்கு மானிடக் கிரியைகளும் அவசியம் என்று போதிப்பதனால், இவர்களும் கிறிஸ்துவின் கிருபையி லிருந்து விழுந்துபோன வேதப்புரட்டர்களாகவே இருக்கின்றனர். இதைப் போலவே, தற்காலத்திலும் இரட்சிப்புக்குத் தங்களுடைய கிரியைகளும் அவசியம் என்று என்னும் கிறிஸ்தவர்களும், யெகோவாவின் சாட்சிக ளைப் போலவே இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை சரியான விதத்தில் புரிந்துகொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். ஏனெனில், நாம் நம்முடைய கிரியைகளினால் அல்ல, இயேசுகிறிஸ்துவின் சிலு வைப் பலியை விசுவாசிப்பதன் மூலமே இரட்சிக்கப்படுகின்றோம்.

## (3). சிலுவைக்குப் புறம்பான யெகோவாவின் சாட்சிகள்

யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை சரியானவிதத்தில் புரிந்துகொள்ளாதவர்களாக இருப்பதனால், இவர்கள் சிலுவைக்குப் புறம்பானவர்களாகவே இருக்கின்றனர். இதனால், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை நினைவுகூரும் திருவிருந்தின் நடைமுறையையும் இவர்கள் மாற்றியுள்ளனர். உண்மையில், கிறிஸ்தவ வழிபாட்டின் முக்கியமான ஒரு விடயமாக திருவிருந்து உள்ளது. ஏனெனில், மானிட பாவத்திற்கான பலியாக இயேசுகிறிஸ்து தம்மை சிலுவையில் ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு, கடைசியாகத் தம்முடைய பன்னிரு சீடர்களுடன் பங்கேற்ற இராப்போஜனத்தில் கிறிஸ்தவர்க ளாகிய நமக்கு கொடுத்த ஒரு கட்டளையாகவே திருவிருந்து உள்ளது. இயேசுகிறிஸ்து இக்கட்டளையைக் கொடுக்கும் போது, "தம்மை நினைவுகூரும்படி இதைச் செய்யும்படி" அறிவுறுத்தியுள்ளார் (1கொரி. 11:23-26, லூக்.22:19).[41] இதனால், இயேசுகிறிஸ்துவின் மரணத்தை

[40] கலாத்தியர் 5:2ல், "இதோ, நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

[41] 1கொரிந்தியர் 11:23-26ல், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

நினைவுகூருவதற்காகக் கிறிஸ்தவ ஆராதனைகளில் திருவிருந்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்கால கிறிஸ்தவ சபைகளில் வாரத்திற்கு ஒரு தடவை அல்லது மாதத்திற்கு ஒரு தடவை திருவிருந்து கொடுக்கப் படுகின்றது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் வருஷத்திற்கு ஒரு தடவை, யூதர்கள் பஸ்கா என்னும் பண்டிகையை ஆசரிக்கும் நாளில் மாத்திரம் திருவிருந்து கொடுக்கின்றனர். எனினும், இவர்கள் அன்றைய தினம் கூடிவருகின்ற அனைவருக்கும் திருவிருந்து கொடுப்பதில்லை. தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு மாத்திரமே திருவிருந்து கொடுக் கின்றனர்.[42]

யெகோவாவின் சாட்சிகள் யோவான் 10ம் அதிகாரத்தை அடிப்படையா கக்கொண்டு தங்களுடைய குழுவின் அங்கத்தினர்களை இரண்டாகப் பிரித்துள்ளனர். யோவான் 10:16ல் இயேசுகிறிஸ்து “இந்தத் தொழு வத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்” என்று தெரிவித்துள்ளதி னால், அவருடைய மந்தையில் அவர் குறிப்பிடும் தொழுவத்தில் இருக்கும் ஆடுகள் மாத்திரமல்ல, அத்தொழுவத்தில் இல்லாத ஆடுக ளும் இருப்பதாகக் கூறும் யெகோவாவின் சாட்சிகள், தொழுவத்தில் இருக்கும் ஆடுகளைப் பரலோகத்திற்குப் போகும் 144,000 பேராகவும், தொழுவத்தில் இல்லாத ஆடுகளைப் பூலோகப் பரதீசில் இருப்பவர்களா கவும் பிரித்துள்ளனர். இதனால், தொழுவத்தில் இருக்கும் 144,000 பேர் மாத்திரமே திருவிருந்தில் பங்குபெறுவதற்குத் தகுதியானவர்கள் என்று கூறும் இவர்கள், எல்லாருக்கும் திருவிருந்து கொடுப்பதில்லை.[43] இதனால் வருஷத்திற்கு ஒரு தடவை கொடுக்கப்படும் யெகோவாவின் சாட்சிகளின் திருவிருந்தில் சிலருக்கு மாத்திரமே திருவிருந்து கொடுக் கப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே

---


என்றார். போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயி ருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்” என்று பவுல் எழுதியுள்ளார். பவுல் குறிப்பிட்டுள்ள விதமாக இயேசுகிறிஸ்து லூக்கா 22:19ல், தம்மை நினைவுகூரும்படி இதைச் செய்யும்படி கட்டளையிட்டுள்ளார்.

[42] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subjects*, p. 83.

[43] *The Watchtower*, 15 February1986, pp. 14-15.

இருக்கின்றனர்.[44] இதனால்தான், 1994ம் ஆண்டு உலகெங்கிலும் 12,200,000ற்கும் அதிகமானவர்கள் திருவிருந்து ஆராதனையில் கலந்து கொண்டபோதிலும் இவர்களில் 8,617 பேருக்கு மாத்திரமே திருவிருந்து கொடுக்கப்பட்டது.[45]

யோவான் 10:16ல் இயேசுகிறிஸ்து, "இந்தத் தொழுவத்திலுள்ளவைக எல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்" என்று மாத்திரம் கூறவில்லை. தொழுவத்தில் இல்லாத ஆடுகளையும் தொழுவத்திற்குள் கொண்டு வரவேண்டும் என்று கூறும் அவர், "அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவின் மந்தையின் ஆடுகள் எல்லாம் ஒரு இடத்திலேயே இருக்கும். யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்ற விதமாக 144,000 பேர் பரலோகத்திலும் ஏனையவர்கள் பூலோகப் பரதீசிலும் இருக்கமாட்டார்கள். மேலும், திருவிருந்தில் சகலரும் பங்குபெறவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்துவின் கட்டளையாக இருப்பதனால்தான், ""நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று அவர் அறிவுறுத்தியுள்ளார் (மத்.26:27). 1கொரிந்தியர் 11ம் அதிகாரத்தில் திருவிருந்தைப்பற்றி கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரும் திருவிருந்தில் பங்கேற்றுள்ளதையே அறியத்தருகின்றது. கிறிஸ்தவர்கள் அனைவரும் திருவிருந்தில் பங்கேற்பது ஆரம்பத்திலிருந்து இன்று வரை கிறிஸ்தவ சபையின் நடைமுறையாய் உள்ளது. ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இந்த நடைமுறையை மாற்றி, பரலோகத்திற்குச் செல்லும் 144,000 பேர் மாத்திரமே திருவிருந்தில் பங்குபெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று கூறுவது, வேதாகம சத்தியத்திற்கு முரணான ஒரு செயலாகவே உள்ளது.



[44] *The Watchtower*, 15 February 1985, p. 17.
[45] *The Watchtower*, 1 January 1995.

## சிலுவையின் சிறப்பைச் சிந்திப்பதற்கு சில வசனங்கள்

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1கொரிந்தியர் 1:18).

அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ள வைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோ. 1:20)

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1பேதுரு 2:24).

நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:6).

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக (கலாத்தியர் 6:14)

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (1கொரிந்தியர் 1:18)

இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே (காலாத்தியர் 3:1)

## பத்தாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

கிறிஸ்தவர்கள் ஆசரிக்கும் பண்டிகைகளும், பிறந்தநாள் கொண்டாட்டங்களும் பிறமதங்களிலிருந்து வந்துள்ளன என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், இவற்றைப் பாவமானவை என்று தடைசெய்துள்ளனர். இப்பண்டிகைகள் பிறமதங்களிலிருந்து வந்துள்ள போதிலும், கிறிஸ்தவமயப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, இப்பண்டிகைகளில் இருந்த பிறமத வழிபாடுகளும் நம்பிக்கைகளும் ஒழுக்கக்கேடான செயல்களும் நீக்கப்பட்டு, புது வடிவமும் கிறிஸ்தவ அர்த்தமும் கொடுத்தே கிறிஸ்தவர்கள் இப்பண்டிகைகளை ஆசரிக்கின்றனர். இவ்வாறு பிறமதப் பண்டிகைகளைக் கிறிஸ்தவமயப்படுத்தியது தவறு என்று கூறமுடியாது. ஏனெனில், வேதாகமத்திலும் தேவனும் பிறமதங்களிலிருந்து சில காரியங்களை எடுத்து அவற்றுக்குப் புது வடிவமும் புது அர்த்தமும் கொடுத்து தம்முடைய மக்களுக்கான கட்டளைகளாக்கியுள்ளார். உதாரணத்திற்கு விருத்தசேதனம், உடன்படிக்கை செய்யும் முறை என்பன பிறமதங்களிலிருந்து எடுக்கப்பட்டவைகளாகவே உள்ளன. ஆனால், தேவன் இவற்றின் பாவமான அம்சங்களையும் தவறான நம்பிக்கைகளையும் நீக்கி புது வடிவமும் புது அர்த்தமும் கொடுத்துள்ளார். இதைப்போலவே கிறிஸ்தவர்களும் பிறமதங்களிலிருந்து வந்துள்ள பண்டிகைகளைக் கிறிஸ்தவமயப்படுத்தி ஆசரித்து வருகின்றனர். இத்தகைய செயல்முறையில் நாம் பிறமதங்களிலிருக்கும் விக்கிரகவழிபாட்டில் ஈடுபடுகிறவர்களாகவோ, ஒழுக்கக்கேடான காரியங்களைச் செய்கிறவர்களாகவோ இருக்கக் கூடாது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் நம்முடைய பிறந்தநாளையும் கொண்டாடுவதில் எவ்வித தவறுமில்லை

# பத்தாம் அத்தியாயம்



# பண்டிகை கொண்டாட்டம்

## பிறமதச் செயற்பாடுகளா? அல்லது கிறிஸ்தவத்தின் வெளிப்பாடுகளா?

மனித வாழ்வில் பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளன. மனிதர்கள் எந்த இனத்தை அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பண்டிகைக் கொண்டாட்ட ங்கள் அவர்களுடைய வாழ்வின் ஒரு பகுதியாகவே உள்ளன. இதனால் தான், தேவனும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்களுக் குப் பலவிதமான பண்டிகைகளை ஆசரிக்கும்படி கட்டளையிட்டிருந்தார் (லேவி.23). இப்பண்டிகைகள் இஸ்ரவேலருடைய மார்க்க வழிபாட்டுடன் சம்பந்தப்பட்டவைகளாக இருந்தாலும், இவைகள் அவர்களுடைய சமுதாய வாழ்வில் பெரும் செல்வாக்கு செலுத்தின. எனினும், இப்பண்டி கைகள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணக் காலத்திற்கு உட்பட்டவை களாகவும், இயேசுகிறிஸ்துவினுடைய இவ்வுலக வாழ்வுக்கும் பணிக் கும் முன்னடையாளமானவைகளாகவும் இருந்ததினால், அவருடைய

சிலுவை மரணம் வரைக்குமே இவைகள் கொடுக்கப்பட்டிருந்தன.[1] இதனால்தான், கிறிஸ்தவர்களாகிய நாம் பழைய ஏற்பாட்டுக்காலப் பண்டிகைகளைக் கொண்டாடுவதில்லை. எனினும், பண்டிகைகள் மனிதனின் சமய மற்றும் சமுதாய வாழ்வோடு இணைந்துள்ளதினால், கிறிஸ்தவர்களும் புதுவருடம், ஈஸ்டர், கிறிஸ்மஸ் என்னும் பண்டிகைகளையும், திருமணம், பிறந்த நாள் போன்ற பல்வேறுவிதமான நிகழ்வுகளையும் விழாக்களையும் ஆண்டுதோறும் ஆசரிக்கிறவர்களாக இருக்கின்றனர். ஆனால், யெகோவாவின் சாட்சிகளைப் போன்ற வேதப் புரட்டுக் குழுக்கள், கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகள் அனைத்தும் பிறமத வழிபாடுகளிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, இவற்றை ஆசரிப்பது தேவனுக்கு விரோதமான பாவம் என்றும், சாத்தானை வழிபடும் செயல் என்றும் கூறுகின்றனர். இதனால், யெகோவாவின் சாட்சிகள் தடைசெய்துள்ள கிறிஸ்தவ பண்டிகைகள் உண்மையிலேயே பிறமதங்களின் செயற்பாடுகளா? இல்லையென்றால் இத்தகைய கொண்டாட்டங்கள் கிறிஸ்தவத்தை வெளிப்படுத்தும் விழாக்களாக இருக்கின்றனவா? என்று இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## (1). கிறிஸ்மஸ் பண்டிகையின் அர்த்தத்தை அறியாதவர்கள்

யெகோவாவின் சாட்சிகள் கிறிஸ்மஸ் பண்டிகையின் அர்த்தத்தை அறியாதவர்களாக, கிறிஸ்தவத்தின் முக்கிய பண்டிகையான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முழுமையாகத் தடைசெய்துள்ளனர். வேதா

[1] பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் மூன்று விதமான கட்டளைகள் உள்ளன. இவற்றில் “சடங்காசாரக் கட்டளைகள்” அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியுடன் ரத்துச் செய்யப்பட்டன. ஆனால், நியாயப்பிரமாணத்தின் ஒழுக்கக் கட்டளைகள் மறுபடியுமாகப் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தினால் நியாயப்பிரமாணத்தை ஒழித்தார் என்று பவுல் கூறும்போது, நியாயப்பிரமாணத்தின் சடங்காசாரக் கட்டளைகள் ரத்துச் செய்யப்பட்டதைப்பற்றியே அவர் விளக்கி உள்ளார் (எபே.2:15-16, கொலோ.2:14-16). ஆனால், நியாயப்பிரமாணத்தில் உள்ள “ஒழுக்கக் கட்டளைகளைத்” தாம் அழிக்க வரவில்லை என்று மத்தேயு 5ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (மத்.5:18-48). இவற்றைத் தவிர நியாயப்பிரமாணத்தில் சில “சமூகக் கட்டளைகளும்” உள்ளன. இவை இஸ்ரவேல் நாட்டின் அரசச் சட்டங்களாகக் கொடுக்கப்பட்டன.

கமத்தில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கிறிஸ்தவர்கள் ஒரு பண்டி கையாகக் கொண்டாடியதைப் பற்றிய சம்பவங்களோ, அல்லது இப்பண் டிகையை ஆசரிக்கும்படியான கட்டளைகளோ இல்லை என்பதைச் சுட்டிக்காட்டும் இவர்கள், இது பிற மதத்தினரிடமிருந்து பெறப்பட்ட வழிபாட்டு முறை என்றும்,[2] கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுபவர் கள் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் அல்ல, பிறமதத் தெய்வங்க ளையே கனப்படுத்துகின்றனர் என்றும் கூறுகின்றனர்.[3] எனினும், ஆரம்ப காலத்தில் இவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை ஆசரிப்பவர்களாகவே இருந்தனர்.[4] இதனால், பிற்காலத்தில் இவர்கள் கொண்டுவந்த தடை நியாயமானதொன்றல்ல. மேலும், இயேசுகிறிஸ்துவின் பிறப்பை வருஷத் தில் ஒரு நாள் சிறப்பான முறையில் நினைவுகூர்ந்து அந்நாளை ஒரு பண்டிகையாக ஆசரிப்பதில் எவ்வித தவறும் இல்லை. இயேசுகிறிஸ்து வின் பிறப்பை நினைவுகூர்பவர்கள் பிறமதத் தெய்வங்களைக் கனப்படுத் துகிறார்கள் என்று கூறுவது அர்த்தமற்றது. உண்மையில், கிறிஸ்மஸ் தாத்தாவையும், களியாட்டங்களையும் மையமாக வைத்து கிறிஸ் மஸ்சை ஒரு கேளிக்கைப் பண்டிகையாக ஆசரிப்பதே தவறாகும். ஆனால், இயேசுகிறிஸ்துவை மையமாகக் கொண்டு அவரைக் கனப்ப டுத்தும் கிறிஸ்மஸ் பண்டிகை தவறானதல்ல.

கிறிஸ்மஸ் தாத்தாவையும், களியாட்டங்களையும் மையமாக வைத்து கிறிஸ்மஸ்சை ஒரு கேளிக்கைப் பண்டிகையாக ஆசரிப்பதே தவறாகும். ஆனால், இயேசுகிறிஸ்துவை மையமாகக் கொண்டு அவரைக் கனப்படுத்தும் கிறிஸ்மஸ் பண்டிகை தவறானதல்ல.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவதில் எவ்வித தவறும் இல்லை என்றாலும், யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல இப்பண்டிகையின் கொண்டாட்டங்கள் பிறமதத்திலிருந்தே கிறிஸ்தவத்திற்குள் வந்துள் ளன என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது. ஏனெனில், கிறிஸ்தவ சரித்திரத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் எவரும்

[2] *Awake* 18 December 1961, p. 8.
[3] *Awake* 18 December 1988, p. 19.
[4] *Zion's Watch Tower*, 15 December 1898, p. 370; 15 December 1908, p. 307.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடியதைப்பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை.[5] கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களிலும், இரண்டாம் நூற்றாண்டின் சபைத் தலைவர்களான இரேனியஸ் (கி.பி.130-200), டேர்ட்டுளியன் (கி.பி.160-225) என்போரின் நூல்களிலும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கிறிஸ்தவர்கள் பண்டிகையாக ஆசரித்ததைப்பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் பிறப்புச் சம்பவங்கள் இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மார்க்கத்தின் பொதுவான உபதேசங்களில் ஒன்றாக இருந்த போதிலும், அக்காலத்திலும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் விதத்தில் எவரும் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடவில்லை.[6] உண்மையில், கி.பி.336ம் ஆண்டிலேயே முதல் தடவையாக கிறிஸ்மஸ் பண்டிகை ஆசரிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றிய குறிப்பு கி.பி.354ம் ஆண்டு எழுதப்பட்ட "ஃபிலோகலியன் கலண்டரில்" (The Philocalian Calender) உள்ளது.

கி.பி.336ம் ஆண்டிலேயே முதல் தடவையாக கிறிஸ்மஸ் பண்டிகை ஆசரிக்கப்பட்டுள்ளது. இதற்கும் முன்பு எவரும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை ஒரு பண்டிகையாகக் கொண்டாடவில்லை.

கி.பி.336ம் ஆண்டு வரை எவரும் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடாமல் இருந்ததற்கு முக்கிய காரணம், கி.பி.312ல் "கொன்ஸ்டன்டைன்" என்னும் ரோம சக்கரவர்த்தி கிறிஸ்தவனாகும் வரை ரோம அரசாங்கம் கிறிஸ்தவர்களைக் கொடூரமாகத் துன்புறுத்திக் கொலை செய்து வந்ததேயாகும். இதனால், அக்காலத்தில், கிறிஸ்தவர்கள் தங்கள் பிறந்த நாட்களைக்கூட ஆசரிக்கவில்லை. அக்காலத்தில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்ததினால், அவர்களுக்குத் தங்களுடைய பிறந்த தினத்தைவிட மரண நாளே முக்கியமானதாக இருந்தது. ஏனெனில், மரண நாளே தாங்கள் பரலோக ராட்சியத்தில் பிறக்கும் நாளாக இருப்பதாக அக்காலத்தில்

---

[5] P.F.Bradshaw & M.E.Johnson, *The Origins of Feasts, Fasts and Seasons in Early Christianity*, p. 123.

[6] J.F.Kell, *The Origins of Christmas*, p. 55.

கிறிஸ்தவர்கள் கருதினார்கள். எனவே, பிறந்த நாள் கொண்டாடும் பழக்கம் அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படாததினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் பிறந்த தினத்தையும் பண்டிகையாக ஆசரிக்கவில்லை.[7]

யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றவிதமாக, இயேசுகிறிஸ்து டிசம்பர் மாதம் 25ம் திகதி பிறந்தார் என்பதற்கும் எவ்வித ஆதாரங்களும் இல்லை. வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள விதமாக பெத்லகேமில் மேய்ப்பர்கள் இரவு நேரத்தில் வயல்வெளியில் தங்கள் மந்தைகளைக் காத்துக்கொண்டிருப்பது (லூக்.2:8) மார்ச் முதல் நவம்பர் வரையிலான காலப் பகுதியிலேயாகும். கடுங்குளிராய் இருக்கும் டிசம்பர் முதல் பெப்ரவரி வரை பாலஸ்தீனாவில் மேய்ப்பர்கள் இரவில் தங்கள் மந்தை களை வயல்வெளியில் வைத்திருப்பதில்லை.[8] மேலும், ரோம சாம்ராட் சியத்தில் கடுங்குளிராய் இருக்கும் காலத்தில் குடிமதிப்பு எடுக்கப்படுவ தும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு "ஒகஸ்டஸ்" என்னும் ரோம அரசனுடைய காலத்தில் எடுக்கப்பட்ட குடிமதிப்பின் போது நடைபெற்றதாகவே வேதாகமம் கூறுகிறது (லூக்.2:1-2).[9] இதனால், இயேசுகிறிஸ்துவின் பிறப்பு டிசம்பர் மாதம் 25ம் திகதி நடைபெறுவ தற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை.[10] உண்மையில், கி.பி.4ம் நூற்றாண்டி லிருந்தே டிசம்பர் 25ம் திகதி இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூரும் கிறிஸ்மஸ் பண்டிகை ஆசரிக்கப்பட்டு வருகிறது.[11]

ரோமர்களினால் மாரி காலத்தின் நடுப்பகுதியில் அதாவது, டிசம்பர் 17 முதல் 23 வரை ஆசரிக்கப்பட்டு வந்த விடுமுறைக் கால "சட்டர்நே லியா பண்டிகையே" கிறிஸ்தவர்களினால் கிறிஸ்மஸ் பண்டிகையாக மாற்றப்பட்டதினால், இதை அடிப்படையாகக்கொண்டே டிசம்பர் 25ம்

---

[7] P.F.Bradshaw & M.E.Johnson, *The Origins of Feasts, Fasts and Seasons in Early Christianity*, p. 123.

[8] R.H.Stein, *Luke: New American Commentary*, p. 108; T.Medsker, *Holy Days: The Historic and Pagan Origins of Modern Day Holiday Celebrations*, p. 41.

[9] ஒகஸ்டஸ் என்னும் அரசனின் பெயரே தமிழ் வேதாகமத்தில் அகுஸ்துராயன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[10] T.Medsker, *Holy Days: The Historic and Pagan Origins of Modern Day Holiday Celebrations*, p. 41.

[11] *Sourcebook for Sundays, Seasons, and Weekdays 2011: The Almanac for Pastoral Liturgy*, p.29.

திகதி இயேசுகிறிஸ்து பிறந்தார் என்னும் கருத்து உருவானது.[12] ஐரோப்பாவின் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள், டிசம்பர் மாத விடுமுறையில் சட்டர்நேலியா என்னும் விடுமுறைகால பண்டிகையை ஆசரித்து வந்தனர். கி.பி.274லிருந்து இப்பண்டிகையின் முக்கிய பகுதியாக டிசம்பர் 25ம் திகதி சூரிய தெய்வத்தின் பிறப்பு நினைவுகூரப்பட்டது. கி.பி.312ல் ரோம சக்கரவர்த்தி கொன்ஸ்டன்டைன் கிறிஸ்தவனாக மாறிய பின்னர், ரோம தெய்வங்களை வழிபட்டு வந்தவர் களைக் கிறிஸ்தவர்களாக்கும் முயற்சியில் ஈடுபட்ட கிறிஸ்தவ சபைத் தலைவர்கள், மாரிகால விடுமுறையில் சட்டர்நேலியா பண்டிகையைக் கொண்டாடுவதற்கு கிறிஸ்தவர்களாகியவர்களுக்கு அனுமதி கொடுத்த னர். எனினும், இது எவ்விதத்திலும் கிறிஸ்தவ பண்டிகையாக இராததி னால், இதைக் கிறிஸ்தவமயப்படுத்துவதற்காக, பண்டிகையின் கடைசி நாளான 25ம் திகதியை இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நாளாக்கினார் கள். எனினும், அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடினாலும், இயேசுகிறிஸ்து அந்நா ளில் பிறக்கவில்லை என்பதை அறிந்தவர்களாகவே இருந்தனர்.[13]

இயேசுகிறிஸ்து டிசம்பர் மாதம் 25ம் திகதி பிறந்தார் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. ரோமர்களினால் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளாகக் கருதப்பட்ட டிசம்பர் 25ம் திகதியே கி.பி.4ம் நூற்றாண்டில் கிறிஸ்மஸ் பண்டிகையின் நாளாகியது.

ரோமர்களினால் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளாகக் கருதப்பட்ட டிசம்பர் மாதம் 25ம் திகதியை கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின்

---

[12] இக்கருத்தை மறுதலிப்பவர்கள், ஆதிசபையினரால் உருவாக்கப்பட்ட ஒரு பாரம்பரியத்தை சுட்டிக்காட்டுவது வழக்கம். இதன்படி, இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி தேவதூதன் மரியாளுக்கு அறிவித்த தினம் மார்ச் 25 என்று கருதப்படுகின்றது. எனவே, இயேசுகிறிஸ்து மார்ச் 25ம் திகதி மரியாளின் வயிற்றில் கருத்தரித்திருந்தால், 9 மாதங்களின் முடிவில் டிசம்பர் 25ம் திகதி அவர் பிறந்திருக்கவேண்டும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது (T.J.Talley, *Origins of the Liturgical Year*, pp. 86, 90-91). எனினும், இது கிறிஸ்தவ சபையின் ஒரு பாரம்பரிய நம்பிக்கையாக உள்ளதே தவிர இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

[13] I.Mather, *A Testimony against Several Prophane and Superstitious Customs, Now Practiced by Some in New England*, p. 35; S.Nissenbaum, *The Battle for Christmas: A Cultural History of America's Most Cherished Holiday*, p. 4.

பிறந்த நாளாக நினைவுகூருவது சரியானதா என்னும் கேள்வி, தற்காலத்தில் பலருடைய உள்ளத்தில் உள்ளது. பழங்காலத்திலிருந்தே மக்கள் சூரியனைத் தெய்வமாக வழிபட்டு வந்துள்ள போதிலும், கி.பி.274ம் ஆண்டில் இவ்வழிபாடு ரோம அரச மதமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் கிறிஸ்தவர்கள், வானத்தில் இருக்கும் சூரியன் அல்ல, பூமிக்கு மனிதனாக வந்த இயேசுகிறிஸ்துவே உண்மையான தெய்வம் என்பதைக் காண்பிப்பதற்காக இயேசுகிறிஸ்துவை சூரியனாக உவமித்துப் பேசுவதைத் தங்களுடைய வழக்கமாகக் கொண்டிருந்தனர்.[14] ரோமர்கள் டிசம்பர் 25ம் திகதி சூரிய தெய்வத்தின் பிறந்த நாளைக் கொண்டாடியதினால்,[15] இதை எதிர்க்கும் விதத்தில், அந்த நாளில் சூரியனின் பிறப்பை அல்ல, உண்மையான சூரியனான இயேசு கிறிஸ்துவின் பிறப்பே நினைவுகூரப்படவேண்டும் என்னும் கருத்து அக்கால ரோம கிறிஸ்தவர்கள் மத்தியில் உருவானது.[16] இதனாலேயே அவர்கள் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளாகக் கருதப்பட்ட டிசம்பர் 25ம் திகதியில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடினார்கள்.[17] இதன் மூலம் அவர்கள் ரோமர்களின் பண்டிகையை கிறிஸ்தவமயப்படுத்தியுள்ளனர்.[18] இதுவே கிறிஸ்மஸ் பண்டிகை உருவானதன் நோக்கமாய் உள்ளது.

[14] அக்கால கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவை சூரியனாகக் காண்பிக்க ஒருசில வேதவசனங்களையும் உபயோகித்துள்ளனர். மறுரூபமலையில் இயேசு கிறிஸ்துவின் முகம் "சூரியனைப்போலப் பிரகாசித்தது" (மத்.17:2) என்றும், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது சூரிய வெளிச்சம் பூமிக்கு கிடைக்காதிருக்கும் விதத்தில் சூரியன் மறைந்து போயிற்று என்றும் (மத்.27:45, மாற்.15:33), இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நேரம் சூரியன் உதயமாகியது (மாற்.16:2) என்றும் கூறிய கிறிஸ்தவர்கள், மகிமையடைந்த நிலையில் இயேசுகிறிஸ்துவின் முகம் "வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்ததை" (வெளி.1:16) யோவான் கண்டதையும் சுட்டிக்காட்டினர்.

[15] T.Medsker, *Holy Days: The Historic and Pagan Origins of Modern Day Holiday Celebrations*, p. 43; A.Hislop, *Two Babylons or The Papal Worship*, pp. 94,97.

[16] கி.பி.3ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவை சூரியனாகக் கருதியதற்கான ஆதாரமாக இருப்பது தற்போது வத்திக்கானிலுள்ள தூய பேதுருவின் ஆலயத்தில் இருக்கும் கி.பி.3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்லறைக் கூரைச் சித்திரமாகும். இதில், புறமதத்தில் சூரியத் தெய்வம் தேரில் பயணிப்பது போல இயேசுகிறிஸ்து தேரில் செல்வது போலவும், அவரது முகத்திலிருந்து சூரியக் கதிர்கள் வெளிப்படுவது போலவும் வரையப்பட்டுள்ளது (J.F.Kelly, *The Origins of Christmas*, p. 68).

[17] J.F.Kelly, *The Origins of Christmas*, pp. 63-67.

[18] G.F.Snyder, *Ante Pacem: Archaeological Evidence of Church Life Before Constantine*, p. 122.

ஆதிகிறிஸ்தவர்கள் சூரிய தெய்வத்தின் பிறந்தநாளில், இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை ஆசரித்தாலும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தின்படி இயேசுகிறிஸ்துவே "நீதியின் சூரியனாக" இருப்பதனால் (மல்.4:2), சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் இயேசுகிறிஸ்துவின் பிறந்த நாளையே கொண்டாடவேண்டும் என்பதே அவர்களின் தர்க்கமாக இருந்தது. உண்மையில், "சூரியனா அல்லது இயேசுகிறிஸ்துவா தெய்வம் என்னும் அக்கால சர்ச்சையே, டிசம்பர் 25ம் திகதியை இயேசுகிறிஸ்துவின் பிறந்த நாளாக்கியுள்ளது.[19]" "ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்கள் சூரிய தெய்வத்தின் பிறந்த நாள் கொண்டாடப்பட்ட தினத்திலேயே கிறிஸ்மஸ் பண்டிகையை ஆசரித்தபோதிலும், அவர்கள் சூரியன் தெய்வம் அல்ல, அது தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை நன்றாக அறிந்திருந்தனர். இதனால் அவர்கள் சூரியனை அல்ல, சூரியனை சிருஷ்டித்த தேவனையே அந்த நாளில் வழிபட்டார்கள்."[20] இதனால், சூரிய தெய்வத்தின் பிறந்த நாளாகக் கருதப்பட்ட டிசம்பர் 25ம் திகதி ஆதிகிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் பிறந்த நாளை நினைவுகூர்ந்ததில் எவ்வித தவறும் இல்லை. மேலும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் கொண்டாடியதினால், ரோமர்கள் கிறிஸ்தவர்களாக மாறிய பின்னர் சூரிய தெய்வத்தின் பிறந்த நாள் கொண்டாட்டம் முழுமையாக இல்லாமல் போய்விட்டது.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் கொண்டாடியதினால், ரோமர்கள் கிறிஸ்தவர்களாக மாறிய பின்னர் சூரிய தெய்வத்தின் பிறந்த நாள் கொண்டாட்டம் முழுமையாக இல்லாமல் போய்விட்டது.

ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளாகக் கருதப்பட்ட டிசம்பர் 25ம் திகதியில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடினாலும், இன்று நாம் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் இயேசுகிறிஸ்துவின் பிறந்த

[19] J.F.Kelly, *The Origins of Christmas*, p. 70.

[20] N.F.Pearson, *The Stories of Our Christmas Customs*, p.6.

நாளைக் கொண்டாடுகிறோம் என்று கூறமுடியாது. ஏனெனில், தற்காலத்தில் கி.பி.4ம் நூற்றாண்டில் உபயோகிக்கப்பட்ட கலண்டரை நாம் உபயோகிப்பதில்லை. அக்காலத்தில் உபயோகத்தில் இருந்த "ஜூலியன் கலண்டரின்படி" சூரிய தெய்வத்தின் பிறந்த நாள் கொண்டாடப்படும் டிசம்பர் 25ம் திகதி, முழு வருஷத்திலும் குறுகிய பகற் பொழுது உள்ள நாளாக இருந்தது. அதாவது, அந்த நாளில் பூமிக்கு சூரிய வெளிச்சம் கிடைக்கும் நேரம் ஏனைய நாட்களைவிட குறைவாக இருந்தது. இதனால், ரோமர்கள் அந்நாளில் சூரியனுக்கு சிறப்பான வழிபாடுகளை ஏறெடுத்து, மாரிகாலம் விரைவாக முடிவடைந்து தங்களுக்கு கோடை காலத்தைக் கொடுக்கும்படி மன்றாடினார்கள். ஆனால், நாம் தற்பொழுது உபயோகிக்கும் "கிரகரியின் கலண்டர்" கி.பி.16ம் நூற்றாண்டில் 13வது கிரகரி என்னும் போப்பாண்டவரினால் உருவாக்கப்பட்டது.[22] இதற்கும் ஏற்கனவே உபயோகத்தில் இருந்த ஜூலியன் கலண்டருக்கும் இடையில் 13 நாட்கள் வித்தியாசம் உள்ளது. தற்காலத்தில் கிரகரியின் கலண்டரே உபயோகத்தில் உள்ள போதிலும் சில நாடுகள் மார்க்க விடயங்களுக்கு இன்று வரை ஜூலியன் கலண்டரையே உபயோகித்து வருகின்றன. இதனால், இக்கலண்டரை உபயோகிக்கும் நாடுகளில் டிசம்பர் 25ம் திகதியாகும் போது, நம்முடைய கலண்டரின் திகதி ஜனவரி 7 ஆக உள்ளது. இதனால்தான் தற்காலத்தில் சில நாடுகளில் ஜனவரி 7ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். எனினும், நாம் தற்பொழுது உபயோகிக்கும் கிரகரியின் கலண்டரின்படி, பூமிக்கு சூரிய வெளிச்சம் குறைவாகக் கிடைக்கும் நாளாக டிசம்பர் 25 இல்லை. இது டிசம்பர் 21ம் திகதிக்கு சென்றுவிட்டது. எனவே, இன்று நாம் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ்

கி.பி.16ம் நூற்றாண்டு உருவாக்கப்பட்ட புதிய கலண்டரையே நாம் உபயோகிப்பதனால், தற்காலத்தில் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவதில்லை.

[22] கி.பி.46ம் ஆண்டில் ரோம சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசரினால் அறிமுகப்படுத்தப்பட்ட "ஜூலியன் கலண்டர்" கி.பி.16ம் நூற்றாண்டு வரையுமே உபயோகத்தில் இருந்தது. கி.பி.1582ல் 13வது கிரகரி என்னும் போப்பாண்டவர், பூமி சூரியனைச் சுற்றும் நேரத்தைக் கணிப்பிட்டு புதியதொரு கலண்டரை உருவாக்கினார்.

பண்டிகையைக் கொண்டாடும்போது, சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் இதை செய்கின்றோம் என்று கூறமுடியாது.

தற்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் சூரிய தெய்வத்தின் பிறந்த நாளில் கிறிஸ்மஸ் பண்டிகையை ஆசரிக்காத போதிலும், தற்கால கிறிஸ்மஸ் பண்டிகையின் கொண்டாட்டங்கள் அனைத்தும் "சட்டர்நேலியா" என்னும் ரோமர்களின் மாரிகால விடுமுறைப் பண்டிகையிலிருந்து பெறப்பட்டவைகளாகவே உள்ளன. சட்டர்நேலியா என்பது, "சட்டர்ன்" என்னும் ரோம தெய்வத்தைக் கனப்படுத்தும் பண்டிகையாகும். வருஷந் தோறும் டிசம்பர் 17ம் திகதி சட்டர்ன் தெய்வத்தின் கோவிலில் பலி செலுத்துவதுடன் ஆரம்பமாகும் இப்பண்டிகையின் கொண்டாட்டங்கள் ஒரு வார காலத்திற்கு நீடிக்கும். அக்காலத்தில் ரோம சட்டங்களை மீறும் செயல்கள் எதுவும் குற்றமாகக் கருதப்படுவதில்லை. விருந்து வைபவங்களும், ஆடல் பாடல்களும், தெருக்களில் நிர்வாணமாகப் பாடிக்கொண்டு செல்வதும், பலவந்தமாக வீடுகளில் புகுந்து பெண்களுடன் தவறாக நடந்துகொள்வதும், விளையாட்டு விநோதங்களும், குடி போதையும், களியாட்டங்களும், பரிசுப் பொருட்கள் பரிமாறுவதும் இவ்விடுமுறைக் காலத்தின் சிறப்பம்சங்களாக இருந்தன.[23] சட்டர்நேலியா பண்டிகையின் இத்தகைய செயல்முறைகளில் பெரும்பாலானவை தற்கால கிறிஸ்மஸ் பண்டிகையின் கொண்டாட்டங்களில் வித்தியாசமான வடிவங்களில் காணப்படுகின்றன.[24] இதனால், புறமதத்தவரின் பண்டிகையிலுள்ள காரியங்களை கிறிஸ்தவர்கள் செய்யலாமா என்னும் கேள்வி தற்காலத்தில் அதிக சர்ச்சைக்குரியதாய் உள்ளது. யெகோவாவின் சாட்சிகள் உட்பட பாரம்பரிய கிறிஸ்தவத்திற்கு எதிரான வேதப் புரட்டுக் குழுக்கள் அனைத்தும் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவது தவறு என்னும் எண்ணமுடையவைகளாகவே உள்ளன.[25]

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடலாமா என்பதை அறிந்துகொள்வதற்கு, பிறமதங்களில் செய்யப்படுகின்ற காரியங்களை நாம் செய்யலாமா என்னும் கேள்விக்கு வேதாகமத்திலிருந்து சரியான பதிலைப் பெற்றுக்கொள்ளவேண்டும். வேதாகமத்தில்

---

[23] *The Oxford Encyclopaedia of Ancient Greece and Rome*, p. 172.
[24] J.F.Kelly, *The Origins of Christmas*, p. 70.
[25] D.C.Pack, *The True Origins of Christmas*, pp. 5-23.

தேவன் பிறமதத்தவரது சில பழக்கவழக்கங்களைத் தடைசெய்துள்ளது உண்மை என்றாலும், இவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, இவை ஒழுக்கக்கேடான பாவ செயல்களாக அல்லது பிறமதத் தெய்வ வழிபாட்டில் ஈடுபடும் விக்கிரக வழிபாடாக இருப்பதை அறிந்திடலாம். இவற்றைத் தவிர பிறமதத்தவரின் வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும் தேவன் தடைசெய்யவில்லை. அதுமாத்திரமல்ல, தேவன் பிறமதத்தவரின் சில செயல்முறைகளைத் தம்முடைய மக்களுக்கான கட்டளைகளாகவும் கொடுத்துள்ளார். அதாவது, விருத்தசேதனம், உடன்படிக்கை செய்யும் முறை போன்றவை தேவன் புதிதாக மனிதருக்கு அறிமுகப்படுத்திய விஷயங்கள் அல்ல. இவைகள் அக்கால மதங்களில் இருந்து எடுக்கப்பட்டவைகளாகும். இதனால், கிறிஸ்மஸ் பண்டிகையின் கொண்டாட்டங்கள் ரோம மதத்திலிருந்து வந்தாலும், இவற்றைக் கிறிஸ்தவமயப்படுத்தி, கிறிஸ்தவர்கள் கொண்டாடுவதில் எவ்வித தவறும் இல்லை. ஏனெனில், இவ்விதமாக நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும்போது, பிறமதங்களின் செயற்பாடுகளில் ஈடுபடுகிறவர்களாக அல்ல, கிறிஸ்தவத்தின் சத்தியங்களை வெளிப்படுத்துகிறவர்களாகவே இருப்போம்.

கிறிஸ்மஸ் பண்டிகையின் கொண்டாட்டங்கள் ரோம மதத்திலிருந்து வந்தாலும், இவற்றைக் கிறிஸ்தவமயப்படுத்தி கொண்டாடும்போது, நாம் பிறமதங்களின் செயற்பாடுகளில் ஈடுபடுகிறோம் என்று கூறமுடியாது.

கிறிஸ்மஸ் பண்டிகை ரோம மதத்திலிருந்து வந்தவிதமாகவே பழைய ஏற்பாட்டில் தேவனால் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த விருத்தசேதனமும் பிற மதங்களிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஆதியாகமம் 17ம் அதிகாரத்தில் தம்முடைய உடன்படிக்கையின் அடையாளமாகத் தேவன் இதை ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுத்தாலும், விருத்தசேதனம் செய்யும் முறை இதற்கும் நீண்ட காலத்திற்கும் முன்பே ஆபிரிக்க நாடுகளில் இருந்துள்ளது.[26] அதாவது, கி.மு 4000 ஆண்டுகளுக்கும் முன்பே செமித்திய மற்றும்

[26] J deMeo. "The Geography of Genital Mutilations" pp 9-13.

சுமேரிய மக்கள் மத்தியில் இப்பழக்கம் இருந்துள்ளது.[27] இதனால்தான், "ரா" என்னும் எகிப்திய சூரிய தெய்வம் தனக்குத் தானே விருத்தசேதனம் செய்துகொண்டுள்ளதாகப் புராதன எகிப்திய நூல்கள் அறியத்தருகின்றன.[28] மேலும், எகிப்திலுள்ள சக்காரா என்னும் இடத்திலுள்ள கி.மு.2400-2300 அளவிலான கல்லறைச் சுவரில் விருத்தசேதனம் செய்யப்படும் செயல்முறை செதுக்கப்பட்டுள்ளது.[29] ஆனால், ஆபிரகாம் கி.மு.2000 ஆண்டைச் சேர்ந்தவர். எனவே, ஆபிரகாமினுடைய காலத்திற்கும் முன்பே பழக்கத்தில் இருந்த ஒரு செயல் முறையையே தேவன் ஆபிரகாமுக்கு ஒரு கட்டளையாகக் கொடுத்துள்ளார். இதனால், விருத்தசேதனம் பிறமதத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.[30] எனினும், தேவன் பிறமதத்திலிருந்தே விருத்தசேதனத்தை எடுத்துள்ளபோதிலும், அவர் இச்செயல் முறைக்குப் புது வடிவமும் புது அர்த்தமும் கொடுத்தே தம்முடைய மக்களுக்கான கட்டளையாக்கியுள்ளார். ஏனெனில், புராதன காலத்தில் ஆண்கள் 12 அல்லது 13 வயதில் பருவநிலையை அடைந்ததைக் குறிப்பிடும் செயல்முறையாகவே பிறமதத்தவர் மத்தி யில் விருத்தசேதனம் இருந்தது. ஆனால் தேவன் இதைப் 12 அல்லது 13 வயதில் செய்யும்படி அல்ல, ஆண் பிள்ளை பிறந்து எட்டாவது நாளில் செய்யப்படும் செயலாகவும் பழைய ஏற்பாட்டுக்கால உடன்ப டிக்கையின் அடையாளமாகவுமே கொடுத்துள்ளார் (ஆதி.17:9-13).[31]

---

[27] D.Doyle, "Ritual Male Circumcision: A Brief History" pp.279–285.

[28] M.C Alanis & R.S.Lucidi, "Neonatal Circumcision: A Review of the World's Oldest and Most Controversial Operation" pp. 379–95.

[29] Cf. Wellcome Library, London.

[30] R.G.Hall, "Epispasm: Circumcision in Reverse" pp. 52-57; "Circumcision" *The Oxford Dictionary of the Jewish Religion*; J.J. Tierney. "Circumcision" in *The Catholic Encyclopaedia*.

[31] ஆதியாகமம் 17:9-13ல், "தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள். எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம்பண்ணப்பட வேண்டும். வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்

> தேவன் பிறமதங்களிலிருந்து விருத்தசேதனத்தையும் உடன்படிக்கை செய்யும் முறையையும் எடுத்தவிதமாகவே, ஆதிகிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை ரோம மதத்திலிருந்து எடுத்து, அதற்கு புது வடிவமும் புது அர்த்தமும் கொடுத்துள்ளனர்.

விருத்தசேதனம் மாத்திரமல்ல, ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்த முறையும் அக்கால பிறமத கலாசாரத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் உடன்படிக்கை செய்வோர், துண்டிக்கப்பட்ட மிருகத்தின் நடுவாகக் கடந்து போவது வழக்கம். செய்யப்பட்ட உடன்படிக்கையைத் தாங்கள் மீறினால், துண்டிக்கப்பட்ட மிருகத்தைப் போலத் தங்களுடைய சரீரமும் துண்டிக்கப்படட்டும் என்பதை உடன்படிக்கை செய்பவர்கள் அறிக்கை யிடும் செயல்முறையாக இத்தகைய பழக்கம் இருந்தது.[32] இதேவித மான ஒரு உடன்படிக்கை முறை எரேமியா 34:18-19லும் உள்ளது.[33] இது, யூதேய அரசன் சிதேக்கியா எருசலேம் நகரத்தாருடன் செய்த உடன்படிக்கையைப் பற்றியது.[34] தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தபோது துண்டிக்கப்பட்ட மிருகத்தின் நடுவில் அக்கினி ஜுவாலை யாகக் கடந்துபோனார் (ஆதி.15:10,17).[35] இதன்மூலம் தேவன் ஆபிரகா

---

ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணவேண்டியது அவசியம். இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது" என்று தெரிவித்துள்ளார்.

32 V.P.Hamilton, *Genesis 1-17:New International Commentary on the OT*, p. 430.

33 எரேமியா 34:18-20ல், "என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்துபோகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன். கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து, நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன். அவர்களு டைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

34 P.Miller, "Sin and Judgment in Jeremiah 34:17-19" pp. 611-613.

35 K.A.Matthews, *Genesis 11:27-50:26: New American Commentary*, p. 172.

முடன் செய்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தியுள்ளார்.[36] தற்கால சிரியாவின் வடபகுதியில் கி.மு.2800 முதல் 1760 வரையிலான காலப்பகுதியில் செழிப்புடன் இருந்த "மாரி" என்னும் பட்டணத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் 1933ம் ஆண்டிலிருந்து கண்டுபிடித்த களிமண் ஏடுகளில் உள்ள குறிப்புகள் இத்தகைய உடன்படிக்கை முறை ஆபிரகாமின் காலத்திற்கும் முன்பே நடைமுறையில் இருந்துள்ளதை அறியத்தருகின்றன.[37] எனவே, "அக்கால கலாசார நடைமுறைக்குத் தம்மை உட்படுத்திய நிலையிலேயே தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்துள்ளார்"[38] என்பதை இச்சம்பவம் அறியத் தருகின்றது. இதைப்போன்ற பல கலாசார செயல்முறைகள் வேதாகமத்தில் உள்ளன.

தேவன் பிறமதங்களிலிருந்து விருத்தசேதனத்தையும் உடன்படிக்கை செய்யும் முறையையும் எடுத்தவிதமாகவே, ஆதிகிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை ரோம மதத்திலிருந்து எடுத்துள்ளனர். பிறமதத்திலிருந்து தேவன் ஒரு காரியத்தை எடுக்கும்போது, அதனோடு சேர்ந்துள்ள விக்கிரக வழிபாடு மற்றும் ஒழுக்கக்கேடான செயல்முறைகள் அனைத்தையும் நீக்கி, அதற்குப் புதுவடிவமும் அர்த்தமும் கொடுத்தவிதமாகவே, ஆதிகிறிஸ்தவர்களும் ரோமர்களின் சட்டர்நேலியா பண்டிகையின் பாவமான செயல்முறைகள் அனைத்தையும் நீக்கி அதைக் கிறிஸ்தவமயப்படுத்தியுள்ளனர். எனினும், தற்காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை ஒரு பாரம்பரிய சடங்காசாரமாக மாறிவிட்டது. எனவே, நாம் அர்த்தமற்ற பாரம்பரியங்களில் மூழ்கிப் போனவர்களாய் இராமல், இயேசுகிறிஸ்து யார் என்பதையும், அவர் எதற்காக மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதையும் அனுபவரீதியாக அறிந்தவர்களாக, இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும் விதத்திலும், அவரை அறியாதவர்கள் அவரை அறிந்துகொள்ளும் விதத்திலும் அவருடைய மானிட பிறப்பை ஒரு பண்டிகையாகக் கொண்டாடவேண்டும். கிறிஸ்மஸ் பண்டிகையை இவ்விதமாகக் கொண்டாடுவதில் எவ்வித தவறும் இல்லை.

---

[36] J Van Seters, *Abraham in History and Tradition*, pp. 100-103.

[37] M.Held, "Philological Notes on the Mari Covenant Rituals" p. 33; G.Hasel, "The Meaning of the Animal Rite in Genesis 15" pp. 61-78.

[38] J.J.Davis, *Paradise to Prison: Studies in Genesis*, p. 187.

# (2). பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஆனந்தத்தை அறியாதவர்கள்

யெகோவாவின் சாட்சிகள் பிறந்த நாள் கொண்டாட்டங்களின் ஆனந் தத்தையும் அறியாதவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், இவர்களைப் பொறுத்தவரை, ஒருவருக்கு பிறந்த நாள் வாழ்த்து மடல் அனுப்புவதும் தண்டனைக்குரிய குற்றமாகவே உள்ளது.[39] பிறந்த நாள் வைபவங்கள் மனிதருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விழாக்களாக இருப்பதாக யெகோவாவின் சாட்சிகள் கருதுகின்றனர்.[40] வேதாகமத்தில், இரண்டு இடங்களில் மாத்திரமே பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றி எழுதப்பட்டுள் ளதாகக் கருதும் யெகோவாவின் சாட்சிகள், இவ்விரு சம்பவங்களிலும் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடியவர்கள் தேவனை அறியாதவர் கள் என்றும், இருவரது பிறந்தநாள் கொண்டாட்டங்களும் மானிடக் கொலையில் முடிவடைந்துள்ளன என்றும் கூறுவதோடு, யெகோவா தேவனை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடக்கூடாது என்பதற்கு இவ்விரு சம்பவங்களும் உறுதியான ஆதாரங்களாயுள்ளன என்றும் விளக்குகின்றனர். வேதாகமத்தில் குறிப் பிடப்பட்டுள்ளவைகள் அனைத்தும் ஒரு காரணத்துடனேயே எழுதப்பட் டுள்ளதினால், கிறிஸ்தவர்கள் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடக் கூடாது என்பதற்காகவே வேதாகமத்தில் எதிரிடையானதும் தீமையான துமான முறையில் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் சித்தரிக்கப்பட்டுள் ளன என்று இவர்கள் கருதுகின்றனர்.[41]

கிறிஸ்தவர்கள் தங்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடக்கூடாது என்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் முதலாவது சம்பவம் பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு எகிப்திய அரசனுடைய பிறந்த நாள் வைபவமாகும். ஆதியாகமம் 40:20-23ல் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவத்தில், தன் பிறந்தநாளை விமரிசையாகக் கொண்டாடிய எகிப்திய அரசன் அன்றைய தினம் தன் சேவகரில் ஒருவனைத் தூக்கிலிட்டுக் கொன்றான். புதிய ஏற்பாட்டில் ஏரோது மன்னனின்

---

[39] D.A.Reed, *Jehovah's Witnesses Answered Verse by Verse*, p. 11, 25.

[40] Anonymous, *School and Jehovah's Witnesses*, p. 18.

[41] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 68-69.

பிறந்தநாள் கொண்டாட்டம் யோவான் ஸ்நானகனின் தலை வெட்டப் படுவதில் முடிவடைந்தது (மத்.14:6-10). இவ்விரு சம்பவங்களையும் ஆதாரமாகக்கொண்டு, பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தேவனை அறியாத மக்களுடைய வைபவம் என்றும், தீமையானவை என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், ஒரு நாளில் தீமை யான சம்பவம் நடைபெற்றதினால் அந்த நாள் தீமையானது என்னும் முடிவுக்கு வருவது அர்த்தமற்றது. மேலும், இவ்விரு சம்பவங்களும் பிறந்தநாள் வைபவம் தீமையானது என்று கூறவில்லை. தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடியவர்கள் தீயவர்களாக இருந்தார்கள் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. மேலும், இவர்கள் தங்களுடைய பிறந்த நாட்களில் மாத்திரமல்ல, தாங்கள் விரும்புகிற நாட்களிலெல் லாம் மற்றவரை இம்சித்தும் கொலைசெய்தும் வந்தனர்.[42] எனவே, பிறந்தநாளைக் கொண்டாடும்படி வேதாகமத்தில் நேரடியான கட்டளைகள் எதுவும் இல்லாதபோதிலும், இவ்விரு சம்பவங்களையும் ஆதாரமாகக்கொண்டு, வேதாகமத்தில் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவது தவறாகும்.[43]

யோபு 1:4ல் "தன்தன் நாளிலே விருந்து செய்து" என்பதற்கு மூலமொழியில் உள்ள சொற்கள் பிறந்தநாள் கொண்டாட்டத்தையே குறிக்கின்றன.

வேதாகமத்தில் தேவனை அறியாதவர்கள் மாத்திரமே தங்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடினார்கள் என்று கூறுவதும் தவறாகும். ஏனெனில், பழைய ஏற்பாட்டில் யோபு 1:4 பிறந்தநாள் கொண்டாட்டத் தைப் பற்றிய விவரணமாகவே உள்ளது. இவ்வசனத்தில், "அவன் குமாரர், அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்து செய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள்" என்னும் குறிப்பு, பிறந்தநாள் கொண்டாட் டத்தைப் பற்றிய விவரணமாகும்.[44] உண்மையில், இவ்வசனத்தில்

[42] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p.47.
[43] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 391.
[44] D.A.Carson, ed., *New Bible Commentary: 21st Century Edition*, p. 462; W.A. Elwell, ed., *Evangelical Commentary on the Bible*, p. 342; J.F.Walvoord & R.B.Zuck, *The Bible Knowledge Commentary: Old Testament*, p. 719.

"தன்தன் நாளிலே" என்பது பிறந்தநாளையே குறிக்கின்றது.[45] ஏனெனில், யோபு 3:1ல் "பிறந்த நாள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேயச் சொல்லே[46] இவ்வசனத்தில் "தன்தன் நாள்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.[47] எனவே, யோபுவின் பிள்ளைகள் தங்கள் பிறந்த நாட்களைத் தங்கள் சகோதர சகோதரிகளுடன் கொண்டாடியுள்ளதைப்பற்றியே யோபு 1:4 கூறுகிறது.[48] தேவனை அறிந்த யோபுவின் குடும்பத்தினரும் தங்கள் பிறந்த நாட்களை விமரிசையாகக் கொண்டாடியுள்ளதினால், பிறந்தநாள் கொண்டாட்டம் தேவனை அறியாதவர்களுடைய வைபவம் என்றும், அது தீமையானது என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.[49] பிறந்தநாள் கொண்டாட்டம் தேவனுக்கு எதிரான அந்நியர்களின் தீமையான வைபவமாயிருந்தால் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான யோபு (1:1), தன் குடும்பத்தினருடன் இத்தகைய வைபவங்களில் நிச்சயமாக ஈடுபட்டிருக்க மாட்டான். எனவே, பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வேதாகமத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதாகக் கூறுவது தவறாகும்.

வேதாகமத்தில் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் தடைசெய்யப்படவில்லை என்பது உண்மை என்றாலும், கிறிஸ்மஸ் பண்டிகையைப் போலவே தற்கால பிறந்த நாள் கொண்டாட்ட வைபவங்களும் பிறமதங்களிலிருந்தே வந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இதனால்தான், கி.பி.2ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரிகன் (கி.பி.165-264) என்னும் சபைத் தலைவர் ரோமர்கள் மத்தியில் இருந்த பிறந்த நாள் கொண்டாட்டங்களை வன்மையாகக் கண்டித்தும் விமர்சித்தும் எழுதியுள்ளார்.[50]

---

[45] D.J.A.Clines, *Job 1-20: Word Biblical Commentary Vol.17*, p. 15.

[46] "யோமோ" (*yomo*) என்னும் எபிரேயச் சொல்.

[47] J.E.Hartley, *Job: The New International Commentary on the OT*, p. 69.

[48] A.Clarke, *The Bethany Parallel Commentary: Old Testament*, p. 870.

[49] யோபுவும் அவனது குடும்பத்தினரும் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதினாலேயே, யோபு தன் மனைவியைத் தவிர தன் குடும்பத்தினர் அனைவரையும், தன் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து போனான் என்று நாம் கருதலாகாது. யோபு புத்தகத்தின் முதலிரு அதிகாரங்களையும் வாசிக்கும் போது, அவனுக்கு ஏற்பட்ட துயரங்களுக்கும் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை அறிந்திடலாம். ஏனெனில், தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கமே யோபுவின் துயரத்துக்கான காரணம் என்பதை முதலிரு அதிகாரங்களும் அறியத்தருகின்றன.

[50] Origen, *Homily on Leviticus* 8.

உண்மையில், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் கிரேக்கத் தெய்வத்துடன் தொடர்புடைய ஒரு வைபவமாகவே அக்காலத்தில் இருந்தன. ஏனெனில், பிறந்த நாள் கேக்கில் மெழுகுவர்த்திகளைப் பற்றவைக்கும் பழக்கம் புராதன கிரேக்கர்களுடன் தொடர்புடையது. கிரேக்கர்கள் தங்கள் தெய்வத்துக்குச் செலுத்தும் பலியாக மெழுகுவர்த்திகளைப் பற்றவைப்பது வழக்கம். அதாவது, "அர்த்தமி" என்னும் சந்திர தெய்வத்தைக் கனப்படுத்தும் விதத்தில் சந்திரனின் வடிவத்தில் செய்யப்படும் வட்டமான கேக்கின்மீது, சந்திர வெளிச்சத்தை அடையாளப்படுத்தும் விதத்தில் அவர்கள் மெழுகுவர்த்திகளைப் பற்றவைப்பார்கள். மெழுகுவர்த்திகளின் புகை பக்தர்களின் பிரார்த்தனைகளைத் தெய்வத்திடம் கொண்டுசெல்வதாகவும், தீயசக்திகளிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதாகவும் அவர்கள் நம்பினார்கள்.[51] இதனால்தான், தற்காலத்தில் மேலைத்தேச நாடுகளில் பிறந்தநாள் கொண்டாடுபவர்கள், கேக்கின் மீதிருக்கும் மெழுகுவர்த்திகளை ஊதி அணைக்கும்போது, மவுனமாகத் தங்கள் வாஞ்சையை அல்லது பிரார்த்தனையை சொல்வது வழக்கம். ஒரு தடவையிலேயே கேக்கில் இருக்கும் சகல மெழுகுவர்த்திகளையும் அணைத்துவிட்டால் ஏறெடுக்கப்பட்ட மன்றாடல் அல்லது வாஞ்சையின் படி காரியம் நடக்கும் என்றும், அவ்வருடம் முழுவதும் வாழ்வில் அதிர்ஷ்டம் இருக்கும் என்றும் மேலைத்தேச மக்கள் நம்புகின்றனர்.

தற்கால பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கிரேக்க மதத்திலிருந்தே வந்துள்ளதினால், நாம் இதற்கு புது வடிவமும் ஆத்தமும் கொடுக்கவேண்டியது அவசியம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு வேதாகமம் தடைவிதிக்காதபோதிலும், கிரேக்க மதத்திலிருந்து வந்த காரியங்களையே பிறந்தநாள் கொண்டாட்டங்களில் செய்கின்றோம். ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக தேவன் எவ்வாறு விருத்தசேதனத்தையும் உடன்படிக்கைசெய்யும் முறையையும் பிறமதங்களிலிருந்து எடுத்து அவற்றுக்குப் புது வடிவமும் அர்த்தமும் கொடுத்தாரோ, அதைப்போலவே நாமும் பிறமதத்திலிருந்து வந்துள்ள பிறந்த

[51] Bravodelexe, *The History of the Birthday Cake* in Hankeringforhistory.com; *The Origin of Birthday Cake and Candles*, Proflowers.com.

நாள் கொண்டாட்ட வைபவங்களுக்கும் புது வடிவமும் அர்த்தமும் கொடுக்கவேண்டும். நாம் ஒவ்வொரு காரியத்தையும் எதற்காகச் செய் கின்றோம் என்பதை அறிந்திருக்கவேண்டும். ஏனெனில், வெறும் பாரம் பரியங்களைப் பின்பற்றுகிறவர்களாக நம்முடைய செயல்முறைகள் அர்த்தமற்ற சடங்காசாரங்களாக இருக்கக்கூடாது. மேலும், ஒரு காரியத் தைப் பிறமதத்தினர் செய்கின்றார்கள் என்பதற்காக அதை நாம் செய்யக்கூடாது என்றால் நாம் அன்றாடம் செய்கின்ற காரியங்களில் பெரும்பாலானவற்றை நாம் செய்யக்கூடாது. அதாவது, பிறமதத்தினர் வேலை செய்கிறார்கள், சாப்பிடுகிறார்கள், நித்திரை கொள்கிறார்கள். இதைப்போல இன்னும் அன்றாடம் பல காரியங்களை செய்கின்றார்கள். இவற்றைக் கிறிஸ்தவர்களாகிய நாமும் செய்கின்றோம். இதைப்போ லவே, பிறமதத்தினரும் ஜெபிக்கின்றார்கள். அவர்கள் ஜெபிக்கின்றார் கள் என்பதற்காக நாம் ஜெபிக்கக்கூடாது என்று வாதிடுவது அர்த்தமற் றதாய் இருப்பதைப் போலவே, பிறமதத்தினர் பிறந்த நாள் கொண்டா டுகிறார்கள் என்பதற்காக நாம் பிறந்த நாள் கொண்டாடக்கூடாது என்று கூறுவது அறிவீனமான தர்க்கமாகவே உள்ளது. பிறந்த நாளில் தேவனுக்கு நன்றி செலுத்தி, அவருடைய ஆசீர்வாதத்திற்காக ஜெபி த்து அன்றைய நாளின் சந்தோஷத்தை உறவினர்களுடனும் நண்பர்க ளுடனும் பகிர்ந்துகொள்வதைத் தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று கூறுவது அர்த்தமற்றது. “நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்” (1கொரி.10:31) என்று வேதாகமம் கூறுவதனால், தேவனு டைய நாமம் மகிமைப்படும்விதத்தில் பிறந்த நாளைக் கொண்டாடுவதில் எவ்வித தவறும் இல்லை.

## (3). உயிர்த்தெழும் வல்லமையின் அனுபவத்தை அறியாதவர்கள்

யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை யான ஈஸ்டரையும் ஆசரிப்பதில்லை. ஏனெனில், நாம் ஏற்கனவே 7ம் அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தார் என்பதை இவர்கள் நம்புவதில்லை. இதனால், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் மகத்தான

இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் போலவே அவருடைய உயிர்த்தெழுதலையும் வருஷத்தில் ஒரு நாள் சிறப்பான விதத்தில் நினைவு கூர்ந்து, அந்நாளை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுவதில் எவ்வித தவறுமில்லை.

வல்லமையைத் தங்களுடைய வாழ்வில் அனுபவிக்காத இவர்கள், உயிர்ப்பின் பண்டிகையையும் ஆசரிக்க முடியாதவர்களாகவே இருக்கின்றனர். இதனால், இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் போலவே அவருடைய உயிர்த்தெழுதலையும் பண்டிகையாக ஆசரிக்கும்படியான கட்டளைகள் எதுவும் வேதாகமத்தில் இல்லை என்பதை சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள், ஈஸ்டரும் பிறமதத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ள ஒரு பண்டிகை என்று கூறுகின்றனர்.[52] உண்மையில், கிறிஸ்மஸ் பண்டிகையைப் போலவே தற்கால ஈஸ்டர் கொண்டாட்டங்களின் சில அம்சங்கள் பிறமதப் பண்டிகையிலிருந்தே வந்துள்ளன. இதனால்தான், மேலைத்தேச நாடுகளில் இப்பண்டிகையில் முயலுக்கும் முட்டைக்கும் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மேலும், ஈஸ்டர் நாள் ஆராதனையை சூரிய உதயத்தைப் பார்க்கக் கூடிய இடத்தில் நடத்துவதும், வசந்தகால தெய்வத்தை வரவேற்கும் பிறமத வழிபாட்டிலிருந்தே கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ளது. எனினும், கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையே இப்பண்டிகை நாளில் நினைவு கூருகின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே, இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் போலவே, அவருடைய உயிர்த்தெழுதலையும் வருஷத்தில் ஒருநாள் சிறப்பானவிதத்தில் நினைவு கூர்ந்து, அந்நாளை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுவதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால், இது பிறமதங்களிலிருந்து வந்துள்ள காரியங்களைப் பாரம்பரியமாகச் செய்கின்ற ஒரு சடங்காசாரமாக இராமல், அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாய் இருக்கும் நம்மை உயிர்ப்பிப்பதற்காய் (எபே.2:1),[53] இயேசுகிறிஸ்து நம்முடைய

---

[52] https://www.jw.org/en/jehovahs-witnesses/faq/why-not-celebrate-easter/

[53] எபேசியர் 2:1 “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்” என்றும், எபேசியர் 2:4-5ல், “தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,

பாவம் போக்கும் பலியாக மரித்து (1யோவா.2:2)[54] உயிர்த்தெழுந்ததை நினைவுகூர்ந்து, அவரை மகிமைப்படுத்தும் விதத்தில் ஆசரிக்கப்படுகின்ற ஒரு பண்டிகையாக இருக்கவேண்டும்.

யெகோவாவின் சாட்சிகளைப் போன்ற வேதப் புரட்டுக் குழுக்கள் சுட்டிக்காட்டுகின்ற முக்கியமான ஒரு விஷயம், "ஈஸ்டர்" என்னும் சொல் பிறமதத் தெய்வத்தின் பெயராக இருக்கின்றது என்பதேயாகும். உண்மையில், கிறிஸ்தவர்களாகிய நம்மால் இதை எவ்விதத்திலும் மறுக்க முடியாது. ஏனெனில், புராதன காலத்தில் இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் வாழ்ந்தவர்கள் வழிபட்ட வசந்த காலத் தெய்வத்தின் பெயரே ஈஸ்டர் ஆகும். அதேசமயம், புராதன பாபிலோனியர்களும் அசீரியர்களும் வழிபட்ட அஸ்தரோத் மற்றும் இஸ்த்தார் என்னும் பெண் தெய்வங்களின் பெயரிலிருந்தே இந்த வசந்தகாலப் பெண் தெய்வத்தின் பெயர் ஜேர்மனில் "ஒஸ்டர்" என்றும், ஆங்கிலத்தில் "ஈஸ்டர்" என்றும் வந்துள்ளது.[55] மேலும், புராதன பாபிலோனின் அரசனான நிம்ரோத் என்பவனின் மனைவி செமிராமிஸ் என்பவளின் மறுபெயராகவும் இஸ்த்தார் என்னும் பெயர் உள்ளது.[56] இப்பெயர் தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகைக்கு உபயோகிக்கப்படுவதற்குக் காரணம், கி.பி.4ம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் வசந்தகாலத் தெய்வத்தின் பண்டிகை கிறிஸ்தவமயப்படுத்தப்பட்டதேயாகும். அதாவது, இத்தெய்வத்தின் பண்டிகை நடைபெற்ற நாளில், இதன் கொண்டாட்டங்களைக் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகைக்குள் கொண்டுவந்ததினால், இத்தெய்வத்தின் பெயர் கிறிஸ்தவர்களுடைய உயிர்ப்பின் பண்டிகையின் பெயராகியது. இதனால், கி.பி.1611ல், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஜேம்ஸ் அரசனின் வேதாகமம் அப்போஸ்தலர் 12:4ல், பஸ்கா பண்டிகையை ஈஸ்டர் என்று குறிப்பிட்டு, இன்றுவரை இப்பெயரைக் கிறிஸ்தவர்கள் இயேசு

---

அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[54] 1யோவான் 2:2ல், "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[55] T.Medsker, *Holy Days: The Historic and Pagan Origins of Modern Day Holiday Celebrations*, pp. 23-25.

[56] D.A.Ingraham, *Pagan Traditions of the Holidays*, p. 32.

கிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகையைக் குறிப்பிட உபயோகிக்கப் படும் பெயராக்கியுள்ளது. ஆனால், மூலமொழியில் பஸ்கா பண்டிகை என்று அப்போஸ்தலர் 12:4ல் இருப்பதை ஈஸ்டர் என்று ஜேம்ஸ் அரசனின் வேதாகமம் மொழிபெயர்த்துள்ளது தவறாகவே உள்ளது. ஏனெனில், பிறமதத் தெய்வத்தின் பெயரைக் கிறிஸ்தவர்கள் உபயோ கிப்பதற்கு இம்மொழிபெயர்ப்பே காரணமாய் இருந்துள்ளது.

இயேசுகிறிஸ்து நம்முடைய பாவம் போக்கும் பலியாக மரித்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூர்ந்து, அவரை மகிமைப்படுத்தும் விதத்தில் அவருடைய உயிர்ப்பின் பண்டிகை ஆசரிக்கப்படவேண்டும்.

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்கள் யூதர்களின் பஸ்கா பண்டிகை நடைபெறும் நாளிலேயே இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டி கையை ஆசரித்து வந்தனர். ஆனால் கி.பி.4ம் நூற்றாண்டில் ஐரோப்பி யரின் வசந்தகாலத் தெய்வத்தின் பண்டிகையின் ஆசாரமுறைகளைக் கிறிஸ்தவர்கள் பின்பற்றத் தொடங்கியபோது,[57] இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை நாளும் இத்தெய்வத்தின் பண்டிகை கொண்டா டப்படும் நாளுக்கு மாற்றப்பட்டது. இத்தெய்வத்தின் பண்டிகை கோடை காலத்தில் இரவும் பகலும் சமமாயிருக்கும் மார்ச் 21ம் திகதிக்குப் பின் வரும் பவுர்ணமி நாளில் நடைபெற்றது. எனினும், இயேசுகிறிஸ்து வின் உயிர்ப்பின் பண்டிகையை பவுர்ணமி நாளில் கொண்டாடுவது கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிகளவு சர்ச்சையை ஏற்படுத்தியதினால், கி.பி.325ம் ஆண்டில் ரோம சக்கரவர்த்தி கொன்ஸ்டன்டைன் கூட்டிய கிறிஸ்தவ சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில் மார்ச் 21ம் திகதிக்குப் பிறகு வரும் பவுர்ணமி நாளுக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்

[57] இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகைக்கு முன் நாற்பது நாட்கள் உப வாசமிருக்கும் முறையும், அதாவது சாம்பல் புதன் கிழமையிலிருந்து ஆரம்பமாகும் லெந்து நாட்களும், இஸ்தார் தெய்வத்தின் வழிபாடுகளிலிருந்தே கிறிஸ்தவத்திற் குள் வந்துள்ளது. பாபிலோனிய புராணங்களின்படி, இஸ்தார் என்று அழைக்கப்ப டும் நிம்ரோத்தின் மனைவிக்குத் தவறான உறவில் பிறந்த தம்முஸ் என்பவன் கொல்லப்பட்டதற்காக அவள் அழுது புலம்பியதனால் தம்முஸ் உயிர்ப்பிக்கப்படு கின்றான். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன் 40 நாட்கள் உபவாசமி ருக்கும் பழக்கம் இதிலிருந்தே கிறிஸ்தவத்திற்குள் கி.பி.6ம் நூற்றாண்டில் வந்துள்ளது (R.Tardo, *Rabbits, Eggs, and Other Easter Errors*, pp. 13-14).

கிழமை இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை ஆசரிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, இன்றுவரை இம்முறையே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.[58] இதனால்தான், ஒவ்வொரு வருஷமும் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை குறிப்பிட்ட ஒரு திகதியில் வருவதில்லை.

"ஈஸ்டர்" என்பது பிறமதத் தெய்வத்தின் பெயராய் இருப்பதனால் கூடுமானவரை இப்பெயரைத் தவிர்த்து, இதை "இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை" என்று கூறுவது நல்லது.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூருவதற்காகவே கிறிஸ்தவர்களாகிய நாம் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுகிறோம் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாது. ஆனாலும், ஈஸ்டர் என்பது பிறமதத் தெய்வத்தின் பெயராய் இருப்பதனால், கூடுமானவரை இப்பெயரைத் தவிர்த்து, இதை "இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை" என்று கூறுவது நல்லது. மேலும், தற்கால ஈஸ்டர் பண்டிகையில், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைவிட முட்டைக்கும் முயலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலை மேலைத்தேய நாடுகளில் காணப்படுகிறது. இதனால்தான், இவற்றின் உருவங்களில் பொம்மைகளும் விளையாட்டுப் பொருட்களும், சாக்லேட்டுகளும் இப்பண்டிகையின் காலத்தில் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகின்றன. ஈஸ்டர் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பெண் தெய்வம் பிறமதங்களில் இனப்பெருக்கத்தின் தெய்வமாக இருந்ததினால், முட்டையும் முயலும் இத்தெய்வத்தின் அடையாளங்களாக இருந்தன.[59] மேலும், மிகப்பெரிய முட்டையிலிருந்தே உலகம் உருவாகியது என்னும் புராணக் கதைகள்

---

[58] R.Myers, *Celebrations: Complete Book of American Holidays*, pp. 102-103.

[59] பாபிலோனிய புராணங்களின்படி, நிம்ரோத் மரணமடைந்த பின்னர் சூரிய தெய்வமாக மாறினான். செமிராமிஸ் என்னும் மறுபெயருள்ள அவனுடைய மனைவி இஸ்த்தார், இன்னுமொரு மனிதனுடன் ஏற்பட்ட உறவினால் தம்முஸ் என்னும் பெயரில் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று, அதை சூரிய தெய்வமாகிய நிம்ரோத்தின் மூலம் பெற்றதாகவும், இக்குழந்தையே ஆதியாகமம் 3:15ல் வாக்களிக்கப்பட்ட ஸ்திரீயின் வித்து என்றும் கூறினாள். இதனால், பிற்காலத்தில் மனிதர்கள் செமிராமிஸ்சை இஸ்த்தார் என்னும் தெய்வமாகவும், தவறான உறவில் அவளுக்குப் பிறந்த குழந்தையைக் கன்றுக்குட்டியின் உருவத்திலும் வழிபட்டார்கள் (R.Woodrow, *Babylon: Mystery Religion*, pp. 9-10).

பெரும்பாலான மதங்களில் உள்ளன.[60] ஆனால், பாபிலோனிய புராணங்களின்படி, பரலோகத்திலிருந்து விழுந்த மிகப்பெரிய முட்டை ஒன்று ஐபிராத்து என்னும் நதியில் இருந்தது. இதை விசித்திரமான சில மீன்கள் கரையில் கொண்டுவந்து போட்டன. அதன் பின்னர், பரலோகத்திலிருந்து வந்த பல புறாக்கள் இம்முட்டையை அடைகாத்து வந்ததினால், இதிலிருந்து இஸ்தார் என்னும் பெண் தெய்வம் பிறந்தாள். இதனால், முட்டை இத்தெய்வத்தினதும் இனப்பெருக்கத்தினதும் அடையாளமாகியது.[61] ஆனால், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் முட்டைக்கும் இதைப்போன்ற சம்பந்தம் எதுவுல்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுவதற்கும் இரண்டாயிரம் வருஷங்களுக்கும் முன்பே இஸ்தார் என்னும் தெய்வத்தின் அடையாளமாக முட்டை இருந்தது.[62] கிறிஸ்தவர்கள் இத்தெய்வத்தின் பண்டிகையை கிறிஸ்தவமயப்படுத்தியதினால், முட்டையை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடையாளமாக விளக்குகின்றனர்.[63] இதனால், இப்பண்டிகைக் காலத்தில் கொடுக்கப்படும் பரிசுப்பொருளாக முட்டை உள்ளது. பல நாடுகளில் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை ஆராதனையில் முட்டைகள் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களுக்கு கொடுக்கப்படுகின்றன. இதனால், ஈஸ்டர் முட்டை என்று அழைக்கப்படும் ஆசீர்வதிக்கப்பட்ட முட்டைக்கு மந்திர சக்திகள் இருப்பதாகவும் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.[64] இதனால் இவைகள் தவறான செயல்களாகவே உள்ளன.

ஈஸ்டர் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் புறமதப் பெண் தெய்வத்துக்கு முயலும் ஒரு அடையாளமாக இருந்ததினால், ஆதிகிறிஸ்தவர்கள் முயலையும் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகைக்குள் கொண்டுவந்துள்ளனர். இதனால், கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் தாத்தா பிள்ளைகளுக்குப் பரிசுப் பொருட்கள் கொண்டுவருவதுபோல, இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகையின் முதல் நாள் இரவில் பிள்ளைகளுக்குப் பரிசாக வர்ணம் பூசப்பட்ட முட்டைகளைக் கொண்டு வரும் முயல், அவற்றைப் பிள்ளைகளுடைய வீடுகளில் அவர்கள்

[60] E.Barth, *Lilies, Rabbits, and Painted Eggs*, p. 24.
[61] R.Woodrow, *Babylon: Mystery Religion*, p. 153.
[62] D.A.Ingraham, *Pagan Traditions of the Holidays*, p. 33.
[63] M.R.Krythe, *All About American Holidays*, p. 103.
[64] E.Barth, *Lilies, Rabbits, and Painted Eggs*, pp. 27-28.

> முட்டையும் முயலும் அல்ல, இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கு சிலுவையும், அவருடைய உயிர்த்தெழுதலுக்கு வெறுமையான கல்லறையுமே அடையாளங்களாக உள்ளன.

செய்துவைத்திருக்கும் கூடுகளில் வைத்துவிட்டுப் போகின்றன என்று பாரம்பரியமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது.[65] ஆனால், ஐரோப்பியர்களின் வசந்தகாலத் தெய்வத்தின் அடையாளமான முயல், எப்பொழுதும் அவளுடன் இருக்கும் துணையாக இருந்தது.[66] இதனால், கிறிஸ்தவர்கள் இதற்கொரு கதையைத் தங்களுடைய கற்பனையில் உருவாக்கி அதை இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகையுடன் இணைத்துள்ளது தவறாகவே உள்ளது. இதைப்போலவே, ஈஸ்டர் என்னும் பெண் தெய்வத்தின் அடையாளமான முட்டையை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன் தொடர்புபடுத்துவதற்காக, இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்கு அதிகாலையில் சென்ற மகதலேனா மரியாள் ஒரு கூடை நிறைய அவித்த முட்டைகளை எடுத்துச் சென்றாள் என்றும், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை அவள் கண்டவுடன் கூடையிலிருந்த முட்டைகள் எல்லாம் இரத்தச் சிவப்பாய் மாறின என்றும், அதன் பின்னர் அவள் மக்களுக்கு முட்டையைக் காண்பித்து இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறிவித்துவந்தாள் என்றும் கற்பனையில் கதை சொல்வது,[67] சரித்திரபூர்வமான இயேசுகிறிஸ்துவின் வாழ்வை புராணக் கதையாக மாற்றும் செயலாகவே உள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூருகின்ற விதத்தில் ஒரு பண்டிகையை ஆசரிப்பதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால், வேதாகமத்தில் இல்லாத பிறமதத் தெய்வத்தின் அடையாளங்களான முட்டையையும் முயலையும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன் தொடர்புபடுத்துவதும், இதை நியாயப்படுத்துவதற்காகக் பொய்க் கதைகளை உருவாக்குவதும் தவறாகும். ஏனெனில், பிறமதத்திலுள்ளவைகளைக் கிறிஸ்தவமயப்படுத்தி அவற்றிற்குப் புது

[65] E.Barth, *Lilies, Rabbits, and Painted Eggs*, p.33.
[66] http://www.topmarks.co.uk/Easter/EasterBunny.aspx
[67] https://www.catholiccompany.com/getfed/mary-magdalene-first-easter-egg/

வடிவமும் புது அர்த்தமும் கொடுக்கலாம் என்பதற்காக, புறமதத்தில் உள்ளவைகளை நியாயப்படுத்தும் விதத்தில் கற்பனையில் புதிய கதைகளை உருவாக்குவது தவறாகும். ஏனெனில், உயிர்ப்பின் பண்டிகைக்கு முட்டையும் முயலும் அல்ல, இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கு சிலுவையும், அவருடைய உயிர்த்தெழுதலுக்கு வெறுமையான கல்லறையுமே அடையாளங்களாக உள்ளன. இதைப்போலவே, கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் தாத்தாவுக்கும் கிறிஸ்மஸ் மரத்துக்கும் கொடுத்துள்ள விளக்கங்களும் கற்பனையில் உருவாக்கப்பட்ட பொய்க் கதைகளாகவே உள்ளன.

பாரம்பரியமாகக் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை நாளில், ஞாயிற்றுக் கிழமைகளில் தாங்கள் வழமையாக சபைகூடும் நேரத்தில் அல்ல, சூரியன் உதயமாகும் அதிகாலை நேரத்தில் தங்களுடைய ஆராதனையை நடத்துவது வழக்கம். இயேசு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமை அதிகாலை நேரத்தில் உயிர்த்தெழுந்ததினால், தாங்களும் அதிகாலையில் உயிர்ப்பின் பண்டிகையின் ஆராதனையை நடத்துகிறோம் என்று கிறிஸ்தவர்கள் கூறினாலும், இதுவும் பிறமதத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ள ஒரு பழக்கமாகவே உள்ளது. ஏனெனில், கிறிஸ்தவர்களினால் நடத்தப்படும் இந்த ஆராதனை ஆலயத்திற்குள் அல்ல, ஆலயத்திற்கு வெளியில் உயரமான ஒரு இடத்தில் அல்லது ஒரு பூங்காவில் அல்லது மயானத்தில் நடைபெறும். எனினும், சூரியன் உதயமாகும் நேரத்தில் நடைபெறும் இவ்வாராதனை, சூரியனை வரவேற்று வாழ்த்தும் புறமத வழிபாட்டிலிருந்தே வந்துள்ளது. புராதன கால மக்கள், கோடை காலத்தில் இரவும் பகலும் சமமாயிருக்கும் நாள் காலை சூரியனை

> கிறிஸ்தவர்களாகிய நாம் பிறமதப் பண்டிகைகளைக் கிறிஸ்தவமயப்படுத்தும்போது, அவற்றில் இருக்கும் விக்கிரக வழிபாட்டுச் செயல்முறைகளையும், தேவனுடைய ஒழுக்கக் கட்டளைகளை மீறும் பழக்கவழக்கங்களையும் தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

வரவேற்கும் வழிபாட்டில் ஈடுபடுவது வழக்கம்.[68] அக்கால மக்கள் ஒவ்வொரு நாள் இரவும் சூரியன் மரித்து காலையில் உயிர்ப்பிக்கப்படுகி றது என்று நம்பினார்கள். இத்தகைய நம்பிக்கையுடைய மக்கள், கிறிஸ்தவர்களாகிய பின்னர் இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும், சூரியனின் அஸ்தமனத்திற்கும் உதயத்திற்கும் ஒப்பிட்டுப் பேசியதினால், ஆதிகிறிஸ்தவர்களினால் சூரியோதயம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடையாளமாய்க் கருதப்பட் டது.[69] இதனால், பிற்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை சூரியன் உதயமாவதைத் தரிசிக்கும் இடத்திலிருந்து கொண் டாடப்பட்டது. இத்தகைய ஆராதனை முதற் தடவையாக கி.பி.1732ல் ஜேர்மன் நாட்டில் மொரேவிய சபையினால் நடத்தப்பட்டது.[70] பிற்கா லத்தில் ஏனைய சபைகளும் இதைப் பின்பற்றின. அதிகாலையில் ஆராதனையை நடத்துவதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால் சூரியனைப் பார்க்கக்கூடிய இடத்திலிருந்து வழிபடுவது, இயேசுகிறிஸ் துவைவிட சூரியனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையைத் தோற்றுவிக்கும்.

இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பண்டிகை மாத்திரமல்ல, அவருடைய பிறப்பின் பண்டிகையும், பிறந்த நாள் கொண்டாட்டங்களும் பிற மதங்க ளிலிருந்தே கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ளன என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது. இதனால், யெகோவாவின் சாட்சிகளைப்போன்ற வேதப்புரட்டுக் குழுக்களும் சில கிறிஸ்தவ சபைகளும் இவற்றைக் கொண்டாடுவது தேவனுக்கு எதிரான பாவம் என்னும் கருத்துடையவர் களாக இருக்கின்றனர். எனினும், நாம் இவ்வத்தியாயத்தில் பார்த்த விதமாகத் தேவனும் பிற மதங்களிலிருந்த சில காரியங்களுக்குப் புது வடிவமும் புது அர்த்தமும் கொடுத்து அவற்றைத் தம்முடைய மக்களுக்கான கட்டளைகளாக்கியுள்ளதினால், கிறிஸ்தவர்களாகிய நாமும் பிற மதங்களிலிருந்து வந்துள்ள பண்டிகைகளையும் கொண்டாட் டங்களையும் கிறிஸ்தவமயப்படுத்தி ஆசரிப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால், பிறமதக் கொண்டாட்டங்களில் இருக்கும் விக்கிரக வழிபாட்டுச் செயல்முறைகளும், தேவனுடைய ஒழுக்கக் கட்டளை


[68] R.J.Myers, *Celebrations: The Complete Book of American Holidays*, p. 105.
[69] E.Barth, *Lilies, Rabbits, and Painted Eggs*, p. 12.
[70] http://www.moravianchurcharchives.org/documents/07aprilEaster.pdf

களைமீறும் பழக்கவழக்கங்களும் கிறிஸ்தவர்களாகிய நாம் தவிர்த்துக கொள்ள வேண்டியவைகளாய் உள்ளன. ஏனெனில், நம்முடைய பண்டிகைக் கொண்டாட்டங்கள் பிறமதச் செயற்பாடுகளாக இராமல், கிறிஸ்தவத்தின் வெளிப்பாடுகளாய் இருக்கவேண்டும். அதாவது, நம்முடைய கொண்டாட்டங்கள் வேதாகம சத்தியங்களை மக்களுக்கு அறிவிக்கின்ற விதத்தில் இருக்கவேண்டும்.

**கிறிஸ்தவர்களாகிய நாம் பிறமதங்களிலிருந்து வந்துள்ள பண்டிகைகளைக் கொண்டாடுவது தவறல்ல என்றாலும், இவற்றை நாம் கட்டாயம் ஆசரிக்கவேண்டும் என்று வேதாகமம் கூறவில்லை.**

கிறிஸ்தவர்களாகிய நாம் பிறமதங்களிலிருந்து வந்துள்ள பண்டிகைகளைக் கொண்டாடுவது தவறல்ல என்றாலும், இவற்றை நாம் கட்டாயம் ஆசரிக்கவேண்டும் என்று வேதாகமம் கூறவில்லை. ஏனெனில், நாம் வாழும் புதிய ஏற்பாட்டுக் காலம், பிரமாணங்களின்படி வாழ்கின்ற காலமாயிராமல் சுயாதீனமாய் செயல்படுகின்ற காலமாய் உள்ளது. இதனால்தான், "ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்" (ரோ.14:5), என்று கூறும் வேதாகமம், "நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்கிறான். நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான்" (ரோ.14:6) என்பதை அறயத்தருகின்றது. எனவே, ஒரு பண்டிகை அல்லது பிறந்தநாள் கொண்டாட்டம் அவசியம் என்று ஒருவன் எண்ணினால், அவன் அதைச் செய்வதில் எவ்வித தவறும் இல்லை. ஆனால், எல்லாரும் இதைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவதும், பண்டிகை கொண்டாடுவது அவசியமில்லை என்னும் தீர்மானத்துடன் இருப்பவனை அதில் ஈடுபடும்படி நிர்ப்பந்திப்பதும் தவறாகும். ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பண்டிகை ஆசரிப்புக் கட்டளைகள் கொடுக்கப்பட்டதுபோல புதிய ஏற்பாட்டில் நமக்குப் பண்டிகைகள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இதனால்தான், "போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது,

பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையும் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" (கொலோ.2:16) என்று பவுல் அறிவுறுத்தியுள்ளார். எனவே, நாம் பண்டிகை கொண்டாடி னாலும் பாவம் செய்யவில்லை. கொண்டாடாமல் இருந்தாலும் பாவம் செய்யவில்லை. ஆனால், பண்டிகைக் கொண்டாட்டங்களில் விக்கிரக வழிபாடும், ஒழுக்கக் கேடான செயல்களும் இருக்கக்கூடாது. அதேசம யம், நம்முடைய பண்டிகைக் கொண்டாட்டங்கள் அனைத்தும், தேவனை மகிமைப்படுத்துகிற ஆராதனைகளாகவும், இயேசுகிறிஸ்துவை அறியா தவர்களை அவரிடம் கொண்டுவரும் வைபவங்களாகவும் இருக்கவேண் டும். இதனால்தான், "நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தா லும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1கொரி.10:31) என்று வேதாகமம் கூறுகிறது.



## பதினோறாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராட்சியத்தின் குடிமக்கள் என்பதனால், நாட்டின் அரசியல் விவகாரங்கள் எதிலும் ஈடுபடக்கூடாது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். உலக அரசுகள் சாத்தானுடையவை என்று எண்ணும் இவர்கள், கிறிஸ்தவர்கள் அரசுப் பதவிகளில் இருப்பதையும், தேர்தல்களில் வாக்களிப்பதையும், தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்துவதையும், ராணுவத்தில் பணிபுரிவதையும் பாவமான செயல்கள் என்று கூறுகின்றனர். எனினும், உலக அரசுகளில் தேவனை அறியாதவர்களும், தேவனுக்கு எதிரானவர்களுமே அதிகாரிகளாக இருந்தாலும், அவர்களை அப்பதவிகளில் நியமிப்பது நம்முடைய தேவன் என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது. இதனால்தான், வேதாகமத்திலும் தேவனை அறிந்திருந்த பலர் புறஜாதி அரசுகளில் பணிபுரிந்துள்ளனர். தற்காலத்தில் தேர்தல்களில் வாக்களித்து நாட்டை சிறந்த விதத்தில் ஆட்சி செய்பவர்களைத் தெரிவுசெய்வதிலும், அரசு பதவிகளில் இருந்து வேதாகமக் கோட்பாடுகளுக்கு ஏற்றவிதத்தில் காரியங்கள் நடைபெறுவதற்குப் பாடுபடுவதும் கிறிஸ்தவனுடைய கடமையாயுள்ளது. மேலும், தேசியக்கொடிக்கு மதிப்பளிப்பதும், நாட்டைப் பாதுகாக்கும் ராணுவத்தில் இருப்பதும் கிறிஸ்தவன் தவிர்த்துக் கொள்ளவேண்டிய பாவங்கள் அல்ல. இதனால், அரசியல் விவகாரங்களில் வேதாகமம் போதிப்பவற்றை இவ்வத்தியாயம் அறியத்தருகின்றது.

## பதினோறாம் அத்தியாயம்



# அரசியல் விவகாரங்கள்

## அரசியலில் ஈடுபடுவது தவறானதா? அல்லது தகுதியானதா?

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய ராட்சியத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மை என்றாலும், நாம் இன்னும் இவ்வுலகத்தில்தான் வாழ்கின்றோம். இதனால், ஏனைய மக்களைப் போலவே சமூகரீதியான பொறுப்புகளும் கடமைகளும் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உள்ளன. ஆனால், யெகோவாவின் சாட்சிகள், "தாங்கள் தேவனுடைய ராட்சியத்தைச் சேர்ந்தவர்கள்" என்று பெருமிதம் கொள்வதோடு, நாட்டின் அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர். இதனால், ரோமர் 13:1-7ல் குறிப்பிடப்பட்டுள்ள "மேலான அதிகாரம்" யாருடையது என்பதைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துள்ளது. ஆரம்பகாலத்தில், இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மேலான அதிகாரம் மானிட அதிகாரத்தை அதாவது, ஒரு நாட்டின் அரசாங்கத்தைக் குறிப்பதாக இவர்கள் கருதினார்கள்.[1]

[1] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 136.

ஆனால், முதலாவது உலக மகா யுத்தம் நடைபெற்று பத்து வருஷங்களின் பின்னர், இது முற்றிலும் தவறான கருத்து என்றும், தங்களுடைய சங்கத்தின் போதனையிலிருந்து நீக்கப்படவேண்டிய உபதேசம் என்றும் கூறியதோடு, ரோமர் 13:1-7ல் குறிப்பிடப்பட்டுள்ளது பிதாவாகிய தேவனுடையதும் இயேசுகிறிஸ்துவினுடையதும் அதிகாரம் என்று விளக்கினார்கள்.[2] எனினும், 1962ம் ஆண்டு மறுபடியுமாகத் தங்களுடைய பழைய உபதேசமே சரி என்று வாதிட்டு, ரோமர் 13:1-7ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் தேவனுடையதும் இயேசுகிறிஸ்துவினுடையதும் அல்ல, இது உலக அரசாங்கத்தையே குறிக்கின்றது என்று கூறினார்கள்.[3]

ரோமர் 13:1-7ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் நாம் வாழும் நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் அதிகாரம் என்பதைத் தற்காலத்தில் யெகோவாவின் சாட்சிகள் ஏற்றுக்கொண்டாலும், இவ்வசனங்களில் கிறிஸ்தவர்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டுள்ள சில கட்டளைகளுக்கு இவர்கள் கீழ்ப்படிவதில்லை. "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்" (ரோ.13:1) என்று ஆரம்பமாகும் இப்பகுதி, "யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள். எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்" (ரோ.13:7) என்னும் அறிவுறுத்தலுடன் முடிவடைகிறது. ஆனால், யொகோவாவின் சாட்சிகள், நமக்கு மேலான அதிகாரமுடைய அரசாங்கத்தின் சில கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில்லை. இதனால், இவ்வசனங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதமாக, அரசாங்கத்தின் சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாத யெகோவாவின் சாட்சிகள், "தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறார்கள்" (ரோ.13:2) என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில், உலக அரசாங்கங்களின் அதிகாரம் தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரமாக இருப்பதாகவே ரோமர் 13:1 கூறுகிறது.[4] இதனால், நாம் வாழும்

[2] Anonymous, *Jehovah's Witnesses in the Divine Purpose*, p. 91.

[3] Anonymous, *Jehovah's Witnesses: Proclaimers of God's Kingdom*, pp.146-147.

[4] ரோமர் 13:1 "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறது.

நாட்டின் அரசாங்கத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் செயலாகவே உள்ளது.[5] மேலும், இவ்வசனங்களில் கீழ்ப்படிதல் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக் கப்பட்டுள்ள சொல், கிறிஸ்தவர்களாகிய நாம் அரசாங்கத்திற்குக் கீழான நிலையில் இருக்கின்றோம் என்பதை அறியத்தருகின்றது.[6] இதனால்தான் பேதுருவும், "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகார முள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினை யும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்" (1பேது. 2:13-14) என்று அறிவுறுத்தியுள்ளார். ஏனெனில், "உலக அரசாங்கங்க ளின் மூலமாகத் தேவன் தமது அதிகாரத்தை செயல்படுத்துகிறவராய் இருக்கின்றார்."[7] இதனால், கிறிஸ்தவர்களாகிய நாம் அரசாங்கத்துக் குக் கீழ்ப்படியவேண்டியது நமது கடமையாக உள்ளது.[8]

உலக அரசாங்கங்களின் மூலம் தேவன் தமது அதிகாரத்தை செயல்படுத்துகிறவராய் இருப்பதனால், கிறிஸ்தவர்களாகிய நாம் வாழும் நாட்டின் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படியவேண்டியது நமது கடமையாக உள்ளது.

கிறிஸ்தவர்களாகிய நாம் அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை வரிப்பணத்தைப்பற்றிய யூதர்களின் கேள்விக்கு பதிலளித்தபோது இயேசுகிறிஸ்து தெளிவாக விளக்கியுள்ளார். அக்கா

[5] கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக்கூடாது (ரோ.12:2), "இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறது" (1கொரி.7:31) என்னும் பவுலின் போதனைகள், உலக அரசாங்கத்துக்கும் தங்களுக்கும் இடையில் எவ்விதத் தொடர்புகளும் இல்லை என்னும் எண்ணத்தைப் பலருக்கு ஏற்படுத்தியதி னாலேயே, கிறிஸ்தவன் தான் வாழும் நாட்டின் அரசாங்கத்துக்கு செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி ரோமர் 13:1-7ல் பவுல் எழுதியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (D.J.Moo, *Romans: The New International Commentary on the New Testament*, p. 791).

[6] D.J.Moo, *Romans: The New International Commentary on the NT*, p. 797.

[7] W.W.Gasque & W.S.LaSoe, ed., *Scripture, Tradition, and Interpretation*, p. 25.

[8] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, p. 120.

ரோம அரசுகள் கிறிஸ்தவத்திற்கு எதிரானவைகளாகவும் தீமையானவைகளாகவும் இருந்தாலும், அவற்றுக்குக் கீழ்ப்படிய வேண்டியது கிறிஸ்தவனின் கடமையாகவே இருந்தது. ஏனெனில், உலக அரசாங்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமாயுள்ளது.

லத்தில் யூதர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் தேவனை அறியாத ரோமர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததினால், ரோம அரசுக்கு வரிசெலுத்துவதைப்பற்றிய கருத்துமுரண்பாடுகள் யூதர்கள் மத்தியில் இருந்தன. இத்தகைய சூழ்நிலையில், ரோம அரசுக்கு வரிப்பணம் செலுத்துவது சரியானதா என்னும் கேள்விக்கு பதிலளித்த இயேசுகிறிஸ்து, "ராயனுடையதை (அதாவது அரசனுடையதை) ராயனுக்கும் தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று தெரிவித்தார் (மத்.22:21). இதன்மூலம், "நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு மாத்திரமல்ல, அரசாங்கத்தின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார்."[9] ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள "செலுத்துங்கள்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், "திருப்பிக் கொடுத்தல்" என்னும் அர்த்தமுடையது. அதாவது, "கட்டணத்தைச் செலுத்துதல் அல்லது கடனை அடைத்தல் என்னும் அர்த்தமுடையது."[10] எனவே இச்சொல், "அவசியச் செயலை, அதாவது நாம் செய்யவேண்டிய கடமையையே சுட்டிக்காட்டுகிறது."[11] இயேசுகிறிஸ்துவின் போதனையின்படி, மனிதர்கள் தேவனுக்கும் தாங்கள் வாழும் நாட்டின் அரசனுக்கும் கடன்பட்டுள்ளனர். எனவே, யூதர்கள் ரோம அரசுக்கு வரிப்பணம் செலுத்துவதன் மூலம், அவர்களை ஆண்டு வந்த ரோம அரசுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய கடன்களில் ஒன்றைச் செலுத்துகிறவர்களாக இருப்பார்கள் என்பதை இயேசுகிறிஸ்து அறியத்தருகின்றார்.[12] அக்கால ரோம அரசுகள் கிறிஸ்தவத்திற்கு எதிரானவைகளாகவும் தீமையானவைகளாகவும் இருந்தாலும், அவற்றுக்குக் கீழ்ப்படிய வேண்டியது கிறிஸ்தவனின் கடமையாகவே இருந்

[9] W.Grudem, *Politics According to the Bible*, p. 25.
[10] R.T.France, *Matthew: Tyndale New Testament Commentary*, p. 315.
[11] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 557.
[12] R.T.France, *Matthew: The New International Commentary on the NT*, p. 834.

தது.[13] ஏனெனில், உலக அரசாங்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமாகவே உள்ளது. இதனால், "அரச கட்டளைகளுக்குக் கீழ்ப் படியாமல் இருப்பது தேவனுக்கு விரோதமான பாவமாகவே உள்ளது."[14]

கிறிஸ்தவர்களாகிய நாம் அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று வேதாகமம் கூறினாலும், "அரச கட்டளைகள் தேவனுடைய கட்டளைக்கு எதிரானவைகளாக இருந்தால், நாம் அவற்றுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை"[15] என்பதையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில், "அரச கட்டளை தேவனுடைய கட்டளையை முரண்படுத்தும்போது, நாம் தேவனுடைய கட்டளைக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்."[16] இதனால்தான், இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்க வேண்டாம் என்று அதிகாரிகள் கட்டளையிட்டபோது பேதுருவும் யோவானும் அக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், "மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (அப்.5:29) என்று கூறினார்கள். இதைப்போலவே, அரசனைத்தவிர வேறு யாரையும் தெய்வமாக வழிபடக்கூடாது என்னும் அரசகட்டளையை மீறி தானியேல் தேவனிடம் ஜெபிக்கிறவனாக இருந்தான் (தானி.6:6-10).[17] எபிரேயப் பெண்களுக்கு

[13] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, p. 119.

[14] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 331.

[15] W.Grudem, *Politics According to the Bible*, p.88.

[16] I.H.Marshall, *Acts: Tyndale New Testament Commentary*, p. 102.

[17] தானியேல் 6:6-10ல், "பின்பு அந்தப் பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி ராஜாவினிடத்தில் போய், அவனை நோக்கி: தரியு ராஜாவே, நீர் என்றும் வாழ்க. எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இப்போதும் ராஜாவே, மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள். அப்படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான். தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரசவம் பார்த்த தாதிகள், தேவனுக்குப் பயந்ததினால் அரச கட்ட ளையை மீறி பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லாமல் உயி ரோடே விட்டுவிட்டார்கள் (யாத்.1:15-17).[18] மேலும், ஏரோது இயேசுகிறிஸ் துவைக் கொல்ல முற்பட்டதனால், அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்ப டிய வேண்டாம் என்று தேவதூதனே சாஸ்திரிகளுக்கு அறிவித்தான் (மத்.2:7-8,12).[19] எனவே, இயேசுகிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக் கத் தடைவிதிக்கும் அரச கட்டளைகளுக்கும், தேவனுடைய ஒழுக்கக் கட்டளைகளுக்கு எதிரான காரியங்கள் நாட்டுச் சட்டத்தினால் அங்கீக ரிக்கப்பட்டால் அவற்றுக்கு மாத்திரம் கிறிஸ்தவர்களாகிய நாம் கீழ்ப்ப டியத் தேவையில்லை. எனினும் இதன் எதிரிடையான விளைவுகளை நாம் சந்திக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். ஆனால், ஏனைய விடயங்க ளில் நாட்டின் அரசாங்கம் தீயதாகவும் தேவனுக்கு எதிரானதாகவும் இருந்தாலும், அவற்றின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டியது அவசியம். இதனால்தான், "அரச அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்" (ரோ.13:3) என்பதை நன்கறிந்திருந்த பவுலே, அவர்களைத் "தேவனால் நியமிக்கப்பட்ட அவருடைய ஊழியக்காரன்" என்றும் (ரோ.13:3-4),[20] அவர்களுக்கு

---

[18] யாத்திராகமம் 1:15-17ல், "எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேரு டைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி: நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயி ரோடிருக்கட்டும் என்றான். மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைக ளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[19] மத்தேயு 2:7-8,12ல், "அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்தில் திட்ட மாய் விசாரித்து: நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள். நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி னான்... பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[20] ரோமர் 13:3-4, 'மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைக ளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு. பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்க வில்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே" என்று கூறுகிறது.

நாம் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார் (ரோ.13:5).[21] ஏனெனில், "தீமையான அரசாங்கமும் தேவனால் அனுமதிக்கப்பட்ட அவருடைய சேவகனாகவே உள்ளது. இதனால், அதிகாரிகள் தேவனால் தங்களுக்கு அருளப்பட்ட அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினாலும் நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்."[22]

அரச கட்டளைகள் தேவனுடைய கட்டளைக்கு எதிரானவைகளாக இருந்தால் மாத்திரமே நாம் அவற்றுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இதனது எதிரிடையான விளைவுகளை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அரசாங்கம் தீமையானதாக இருந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் அதன் கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்றால், நாமும் தீமை செய்கிறவர்களாக இருப்போம் என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில், தேவனுடைய கட்டளைகளுக்கு எதிரான காரியங்களைச் செய்யச் சொல்லும் அரச கட்டளைகளுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் கீழ்ப்படியத் தேவையில்லை. ஆனால், தேவனுடைய வார்த்தையை முரண்படுத்தாத அரசக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதும், அரசாங்கத்தின் தவறுகளை ஜனநாயக முறையில் சுட்டிக்காட்டுவதும், இதைப்பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டியதும் கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாக உள்ளது. ஏனெனில், கிறிஸ்தவர்களாகிய நமக்கு வீட்டிலும் சபையிலும் மாத்திரமல்ல, நாட்டிலும் பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. ஆனால், இதை முழுமையாக மறுதலிக்கும் யெகோவாவின் சாட்சிகள், நாட்டின் அரசியலில் ஈடுபடுவதும், தேர்தல்கள் நடைபெறும்போது வாக்களிப்பதும், தேசியகொடிக்கு மரியாதை செலுத்துவதும், தேசத்தைக் காப்பாற்றுவதற்காக ராணுவத்தில் பணிபுரிவதும் பாவமான செயல்கள் என்று கூறுகின்றனர்.[23] எனவே, நாட்டின்

---

[21] ரோமர் 13:5ல், "ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும்" என்று பவுல் அறிவுறுத்தியுள்ளார்.
[22] L.Morris, *The Epistle to the Romans: The Pillar New Testament Commentary*, pp. 459-460.
[23] *The Watchtower*, 1 December 1981, p. 23; W.Martin & N.Klann, *Jehovah of the Watchtower*, p. 73.

அரசியல் விவகாரங்களோடு சம்பந்தப்பட்ட இவ்விடயங்களில் வேதாகமம் போதிப்பவற்றை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## 1.தேவனுக்கு விரோதமான பாவம் அல்ல

“உலக அரசுகள் அனைத்தும் சாத்தானுடையவைகள்” என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், நாட்டின் அரசியலில் ஈடுபடுவது தேவனுக்கு எதிரான பாவம் என்றும் வாதிடுகின்றனர். யெகோவாவின் சாட்சிகளைப் போலவே, சில கிறிஸ்தவர்களும் உலக அரசுகள் சாத்தானுடையவை என்று கருதி, “அரசியலுக்கும் கிறிஸ்தவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை” என்று போதிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக, சாத்தான் இயேசுகிறிஸ்துவை சோதித்தபோது அவரிடம் கூறிய பொய்யை இவர்கள் சுட்டிக்காட்டுவது வழக்கம். ஏனெனில், சாத்தான் இயேசுகிறிஸ்துவை சோதித்தபோது, “அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து: இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்” (லூக்.4:4-7). எனவே, தன்னைப் பணிந்துகொண்டால் உலக ராட்சியங்கள் அனைத்தையும் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுப்பதாக சாத்தான் கூறுவதனால், உலக ராட்சியங்கள் எல்லாம் சாத்தானுடையவை என்று இவர்கள் கருதுகின்றனர்.[24]

உலக ராட்சியங்கள் அனைத்தையும் தருவதாக சாத்தான் இயேசுகிறிஸ்துவிடம் கூறியதினால், அவைகள் சாத்தானுடையவை என்னும் முடிவுக்கு வருவது தவறாகும். ஏனெனில், இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியது போல, “சாத்தான் பெய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருப்பதனால் (யோவா.8:44), உலக ராட்சியங்கள் எல்லாம் தன்னுடையவைகள் என்று சாத்தான் கூறியதும் பொய்யாகவே உள்ளது. எனவே, அவனுடைய வார்த்தைகளை நம்பி, உலக ரட்சியங்கள் சாத்தானுடை

[24] G.Boyd, *The Myth of a Christian Nation*, pp. 21-22.

யவை என்று கூறமுடியாது.[25] "சாத்தானுக்கு அதிக வல்லமை இருக்கின்றபோதிலும், அவனால் உலக ராட்சியங்களை எவருக்கும் கொடுக்கமுடியாது."[26] ஏனெனில், உலக ராட்சியங்கள் அனைத்தும் தேவனுடையவை என்றும், அவரே தம்முடைய சித்தத்தின்படி ராட்சியங்களை மனிதருக்குக் கொடுக்கிறவர் என்றும் வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், பாபிலோனிய அரசன் கண்ட தரிசனத்தில், "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்" என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது (தானி. 4:17,25). உண்மையில், "தேவனுடைய அனுமதியும் அங்கீகாரமும் இல்லாமல் எவராலும் உலகில் ராஜாவாக, அதாவது நாட்டை ஆளும் தலைவனாக முடியாது."[27] ஏனெனில், "உலக ராட்சியத்தில் யார் தலைவனாயிருப்பது என்பதைத் தீர்மானிப்பது தேவனே."[28] இதனால்தான், உலக அரசாங்கங்களைப்பற்றி பவுல் எழுதும் போது, "தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோ.13:1) என்று கூறுவதோடு, உலக அரசர்களைத் "தேவனுடைய ஊழியக்காரன்" என்று குறிப்பிட்டுள்ளார் (ரோ.13:4).[29] இதைப்போலவே தேவனும், பாபிலோனிய அரசனைத் "தம்முடைய ஊழியக்காரன்" என்று அழைத்துள்ளதோடு (எரே. 25:9, 27:6),[30] அவனுக்குத் தாமே ராட்சியத்தைக் கொடுத்துள்ளதாகவும், அவனுடைய ராட்சியத்தின் விஸ்தரிப்பைத் தம்முடைய செயலாகவும் குறிப்பிட்டுள்ளார் (எரே.27:5-8).[31] மேலும், பெர்சிய அரசன் "கோரேஸ்"

---

[25] W.Grudem, *Politics According to the Bible*, pp. 37; D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 376; I.H.Marshal, *Luke: The New International Greek Testament Commentary*, p. 172.

[26] D.L.Bock, *Luke: The NIV Application Commentary*, p. 129.

[27] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 135.

[28] J.C.Baldwin, *Daniel: Tyndale Old Testament Commentary*, p. 113.

[29] ரோமர் 13:4ல், "உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு. பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[30] எரேமியா 25:9லும், 27:6லும் "என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜா" என்று தேவன் குறிப்பிட்டுள்ளார்.

[31] எரேமியா 27:5-8ல் "நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும்

என்பவனைத் தேவன் "தம்முடைய மேய்ப்பன்" என்றும் (ஏசா.44:28), தாம் "அவனை அபிஷேகம் பண்ணியதாகவும்" (ஏசா.45:1) தெரிவித்துள்ளதோடு, அசீரிய அரசனைத் தாம் உபயோகித்துள்ளதாகவும் அறிவித்துள்ளார் (ஏசா.10:5).[32] எனவே, உலக அரசுகள் சாத்தானுடையவைகள் என்று கூறமுடியாது. தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின்படி தேவன் "காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவராகவும், ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவருமாயிருக்கிறார்" (தானி.2:21). உண்மையில், "உலக அரசர்களின் அதிகாரம் தேவனாலேயே அவர்களுக்கு அருளப்படுகின்றது. இதனால் அவர்கள் தேவனை அறியாதவர்களாக இருந்தாலும், அவருடைய முழுமையான கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றனர்."[33] இதனால்தான், "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது. அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" என்று வேதாகமம் கூறுகிறது (நீதி.21:1).

உலக அரசர்களின் அதிகாரம் தேவனாலேயே அவர்களுக்கு அருளப்படுவதனால், அரச அதிகாரிகள் தேவனை அறியாதவர்களாக இருந்தாலும் உலக அரசுகள் தேவனுடையவைகளாகவே உள்ளன.

வேதாகம சத்தியத்தின்படி தேவனே ராஜாக்களை நியமிக்கிறவராக இருந்தாலும், சாத்தான் "இவ்வுலகத்தின் அதிபதி" (யோவா.12:31,

---

உண்டாக்கினேன். எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன். இப்பொழுதும் நான் இந்தத் தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன். அவனுக்கு ஊழியஞ் செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன். அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் அவனுடைய புத்திரபௌத்திரரையும் சேவிப்பார்கள். அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமைகொள்வார்கள். எந்த ஜாதியாவது, எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்பவனைச் சேவியாமலும், தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும்போனால், அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தண்டிப்பேன்" தேவன் தெரிவித்துள்ளார்.

[32] ஏசாயா 10:5ல் "என் கோபத்தின் கோலாகிய அசீரியனுக்கு ஐயோ! அவன் கையிலிருக்கிறது என் சினத்தின் தண்டாயுதம்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[33] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 87.

14:30, 16:11) என்று குறிப்பிடப்பட்டுள்ளது நமக்கு குழப்பத்தை ஏற்ப டுத்தலாம். அக்கால யூத நூல்களிலும் சாத்தான் இவ்விதமாக அழைக் கப்பட்டுள்ள போதிலும், யூதமதப் போதகர்கள் சாத்தானை உலகத்தின் அதிபதியாக வர்ணிக்கவில்லை.[34] மேலும், சாத்தான் இவ்வுலகத்தின் உரிமையாளன் என்னும் அர்த்தத்தில் அவனை இவ்விதமாக வேதாக மம் சித்தரிக்கவில்லை. "மனிதர் தேவனுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்ததினால் அவர்கள் சாத்தானுடைய வல்லமையின்கீழ் இருக்கின்றார்கள் என்னும் அர்த்தத்திலேயே அவன் இவ்வுலகத்தின் அதிபதி என்று அழைக்கப்பட்டுள்ளான்."[35] எனவே, "உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1யோவா.5:19), என்று வேதாகமம் கூறும்போது, மனிதர்கள் சாத்தானுடைய ஆளுகைக்கு அல்லது செல் வாக்கிற்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதையே சுட்டிக் காட்டுகிறது."[36] சாத்தானுடைய ஆளுகைக்கு உட்பட்ட தேவனை அறியாதவர்கள் அரச பதவிகளில் இருப்பதனால், அரசியல் விவகாரங் களில் அவர்கள் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் எதிராக சிந்திக்கிறவர்களாகவும் செயல்படுகிறவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், உலக ராட்சியங்கள் அனைத்தும் தேவனுடையவைகளாகவே உள்ளன. எனினும், கிறிஸ்தவர்கள் அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவ தைத் தவிர்த்து வருவதனால் தேவனுடைய ராட்சியங்கள் சாத்தானு டைய செல்வாக்கிற்கு உட்பட்டு அவனுடைய ராட்சியங்களாகிவிடுகின் றன. இதனால், கிறிஸ்தவர்களாகிய நாம் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டு, அவற்றைக் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிற்குள் கொண்டுவர வேண்டியது அவசியம். கடந்த காலங்களில் கிறிஸ்தவர்கள் இவ்விதமா கச் செயற்பட்டுப் பல சமுதாய அநீதிகளையும் தீமைகளையும் உலகி லிருந்து நீக்கியதற்கு உலக சரித்திரத்தில் பல சம்பவங்கள் ஆதார மாக உள்ளன.[37]

---

[34] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 443; A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 383; L.Morris, *John: The New International Commentary on the NT*, p. 531.

[35] C.G.Kruse, *John: Tyndale New Testament Commentary*, p. 272.

[36] G.W.Derickson, *1-3 John: Evangelical Exegetical Commentary*, p. 553.

[37] உதாரணத்திற்கு ரோம சாம்ராட்சியத்தில் காணப்பட்ட குழந்தைகளைக் கொல் லுதல், கைவிடுதல், கருவிலேயே அழித்தல் என்னும் தீமைகளைக் கி.பி.374ல் கிறிஸ்தவ அரசாங்கம் சட்டரீதியாகத் தடைசெய்தது. இதைப்போலவே, சூடாக்கப் பட்ட இரும்பினால் குற்றவாளிகளின் முகங்களில் அடையாளம் போடும் பழக் கத்தை கி.பி.315லும், பசியோடிருக்கும் மிருகங்களுடன் மனிதரை அல்லது

வேதாகமத்திலும், தேவனை அறிந்தவர்கள் உலக ராட்சியங்களில் உயர் பதவிகளில் இருந்துள்ளதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. யோசேப்பு எகிப்திய அரசில் அரசனுக்கு அடுத்த நிலையில் உயர் அதிகாரியாய் இருந்தான் (ஆதி.41:41-44).[38] ஆதியாகமப் புத்தகத்தில் யோசேப்பின் வாழ்க்கை வரலாற்றை வாசித்துப் பார்த்தால், பஞ்சகாலத்தில் இஸ்ரவேல் மக்கள் போஷிக்கப்படுவதற்காகத் தேவனே அற்புதமான விதத்தில் யோசேப்பை எகிப்திய அரசின் உயர் பதவியில் வைத்திருந்ததை அறிந்திடலாம். இதைப்போலவே, தானியேலும் அவனுடைய நண்பர்களும் பாபிலோனிய அரசில் உயர் பதவிகளை வகித்தனர். தானியேல் அரசனுக்கு அடுத்த நிலையில், அரசனுக்கு ஆலோசனை அளிப்பவனாக இருந்தான் (தானி.2:48-49).[39] "தேவனையும்

---

மனிதர்கள் சாகும்வரை அவர்களைச் சண்டையிடவைக்கும் கொடூர விளையாட்டை கி.பி.404ல் ரோம அரசாங்கம் தடைசெய்ததோடு, கி.பி.361ல் சிறைச்சாலை சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியான சிறைகளை ஏற்படுத்தியது. இதைப்போலவே ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இருந்த நரபலி கொடுக்கும் செயலையும், சிறுவர் சிறுமியருடனான பாலுறவையும் தடைசெய்து, பெண்களுக்கான உரிமைகளையும் கிறிஸ்தவ அரசாங்கங்களே பெற்றுக்கொடுத்தன. மேலும், ஆசிய ஆபிரிக்க நாடுகளில் இருந்த பலதாரமணம், உடன்கட்டை ஏறுதல், பெண் சிசுகொலை என்னும் சமுதாயக் கொடுமைகளும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கினாலேயே நீக்கப்பட்டன. மேலும், சகல மக்களுக்கும் கல்வியும் பெண்களுக்கான உரிமைகளும் பல சமுதாயங்களில் கொடுக்கப்படுவதற்கு கிறிஸ்தவர்களே காரணமாக இருந்துள்ளனர் (A. Schmidt, *How Christianity Changed the World*, pp. 51, 53, 59, 63-66, 87-88, 111-119, 274-278).

[38] ஆதியாகமம் 41:41-44ல் "பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: நான் பார்வோன். ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது என்றான்" என்று எழுதப்பட்டுள்ளது.

[39] தானியேல் 2:48-49ல் "பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனைப் பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின்மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின் பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான். தானியேலோ வென்றால் ராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்" என்றுள்ளது.

அவருடைய வார்த்தையையும் நன்கு அறிந்திருந்த தானியேல், பாபிலோனிய அரசில் உயர் பதவியில் இருந்ததினால், அவனால் அவ்வரசில் அதிகளவு செல்வாக்கு செலுத்தக்கூடியதாயிருந்தது."[40] இதைப்போலவே, பெர்சிய ராட்சியத்தின் ராணியாக இருந்த எஸ்தரும் அவ்வரசின் தீர்மானங்களில் அதிகளவு செல்வாக்கு செலுத்துகிறவளாக இருந்தாள் (எஸ்.5:1-8, 7:1-6, 8:3-13, 9:12-15, 9:29-32). மொர்தெகாய் என்பவன் அவ்வரசில் அரசனுக்கு அடுத்த நிலையில் இருந்தான் (எஸ்.10:3, 9:4).[41] நெகேமியா பெர்சிய அரசனின் பானபாத்திரக்காரனாகப் பணிபுரிந்தான் (நெகே.1:11).[42] புதிய ஏற்பாட்டில், ரோம அரசின் உயர் அதிகாரியாக இருந்த "தியோ.்.பிலஸ்" ஒரு கிறிஸ்தவராகவே இருந்தார். இதனால்தான் லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் இவருக்கு எழுதியுள்ளதோடு, இவரை "மகா கனம்பொருந்திய தியோ.்.பிலஸ்" என்று அழைத்துள்ளார் (லூக்.1:1, அப்.1:1).[43] மேலும், அக்காலத்தில் ரோம அரச அதிகாரிகளில்

---

[40] W.Grudem, *Politics According to the Bible*, pp. 58-59.

[41] எஸ்தர் 10:3ல் "யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திரளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந்ததும் அன்றித் தன் ஜனங்களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனுமாயிருந்தான்" என்றும், 9:4ல் "மொர்தெகாய் ராஜாவின் அரமனையில் பெரியவனாயிருந்தான்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[42] நெகேமியா 1:11ல் "நான் ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்" என்று நெகேமியா குறிப்பிட்டுள்ளான்.

[43] D.G.Peterson, *Acts: The Pillar New Testament Commentary*, p. 102. அப்போஸ்தலர் 23:26, 24:3, 26:25 என்னும் வசனங்களில் ரோம அரசில் தேசாதிபதிகளாய் இருந்தவர்களே தியோ.்.பிலஸ்சைப் போல "மகா கனம் பொருந்திய" என்று அழைக்கப்பட்டுள்ளனர். "தியோ.்.பிலஸ்" என்னும் பெயரின் அர்த்தம் "தேவனை நேசிப்பவன்" என்பதனால், ஆதிசபைத் தலைவர்கள், தேவனை நேசிக்கும் கிறிஸ்தவர்களைக் குறிப்பிடும் உருவக விவரணமாக தியோ.்.பிலஸ் என்னும் சொல் லூக்காவினால் உபயோகிக்கப்பட்டுள்ளதாகக் கருதினார்கள் (A.A.Just, *Luke: Ancient Christian Commentary on Scripture NT Volume 3*, p. 4). இதனால், தற்காலத்தில் சிலர் தியோ.்.பிலஸ்சைத் தனிப்பட்ட ஒரு நபராகக் கருதுவதில்லை (A.Plummer, *Luke: International Critical Commentary*, p. 5). ஆனால், லூக்காவினுடைய நூல்கள் தர்க்கரீதியானவைகளாக உள்ளதினால், அவருடைய நூல்கள் தேவனை நேசிக்கும் சகலருக்கும் பொதுவாக எழுதப்பட்டுள்ளது என்று கூறமுடியாது (J.R.Edwards, *Luke: The Pillar New Testament Commentary*, p. 27). மேலும், அக்காலத்தில் புத்தகங்கள் பொதுவாக வாசகர்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறவைகளாக எழுதப்படுவதில்லை (L. Alexander, *The Preface to Luke's Gospel: Literary Convention and Social Context in Luke 1:1-4 and Acts 1:1*, p. 188). இதனால், தியோ.்.பிலஸ் தனிப்பட்ட ஒரு நபராகவே இருக்கின்றார் என்

கிறிஸ்தவர்களும் இருந்தனர். இதனால்தான், "பரிசுத்தவான்கள் அனைவரும், விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் என்று பிலிப்பியருக்குப் பவுல் எழுதியுள்ளார் (பிலி.4:22).[44] இவ்வசனத்தில் "இராயனுடைய அரண்மனையில் உள்ளவர்கள்" ரோம அரச அதிகாரிகளாக இருந்தவர்களையே குறிக்கின்றது.[45] எனவே, கிறிஸ்தவர்கள் அரச பதவிகளில் இருப்பதை வேதாகமம் தவறானதாகக் கருதவில்லை என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.

உலக அரசுகள் தேவனுக்கு எதிரானவைகளாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் அரச பதவிகளில் இருப்பதை வேதாகமம் தடைசெய்யவில்லை

கிறிஸ்தவர்கள் அரச பதவிகளில் இருப்பது தவறான செயல் அல்ல என்பது உண்மை என்றாலும், கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அரசில் பணிபுரிவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எனினும், கிறிஸ்தவர்கள் அனைவரும் அரசின் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தவேண்டியவர்களாக இருக்கின்றனர். இதற்காகத் தற்காலத்தில் சாதாரண கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய ஒரு காரியம் தேர்தல்களில் வாக்களித்தலாகும். யெகோவாவின் சாட்சிகள் தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்ப்பதனால், அவர்களால் நாட்டின் அரசியலில் எவ்வித செல்வாக்கையும் செலுத்தமுடியாமல் உள்ளது. ஆனால், "ஜனநாயக நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்களுக்குத் தேவன் கொடுத்துள்ள பிரதான கடமைகளில் ஒன்று தேர்தல்களில் வாக்களித்து, தேசத்தைச் சிறந்த முறையில் ஆட்சி செய்பவரைத் தெரிவுசெய்யும் பணியாகும்."[46] மேலும், நாம் கிறிஸ்தவர்களைத்தான் ஆட்சியாளர்களாகத் தெரிவுசெய்யவேண்டும்

பதை மறுப்பதற்கில்லை. மேலும், மூலமொழியில் தியோ.்.பிலஸ்சின் பெயர் இடம்பெறும் வாக்கியத்தின் இலக்கண அமைப்பு முறை, தியோ.்.பிலஸ் அக்கால சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர் என்பதையே சுட்டிக்காட்டுகிறது (D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 63).

44 D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 181.

45 J.F.Hall, "Caesar's Household" in *Anchor Bible Dictionary Volume 1*, p. 798; P.T.O'Brien, "Caesar's Household, Imperial Household" in *Dictionary of Paul and His Letters*, p. 83.

46 W.Grudem, *Politics According to the Bible*, p. 74.

என்று நினைக்கக்கூடாது.[47] தேர்தலில் போட்டியிடுபவர்களில் எவர்களுடைய கொள்கைகளும் வாக்குறுதிகளும் செயற்பாடுகளும் நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் ஏற்றவிதத்தில் இருக்கின்றதோ அவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும். தேவனும் தம்மை அறியாதவர்களையும் ராஜாக்களாக ஏற்படுத்துகிறவராய் இருப்பதனால், நாமும் அவரை அறியாதவர்கள் நாட்டை ஆளக்கூடிய தகுதியுடையவர்களாய் இருந்தால் அவர்களுக்கு வாக்களிப்பதில் எவ்வித தவறும் இல்லை. உண்மையில், கிறிஸ்தவ சபையின் பதவிகளில்தான் கிறிஸ்தவர்கள் இருக்கவேண்டும். ஆனால், அவர்கள் வாழும் நாட்டின் அரசியலில் கிறிஸ்தவரல்லாதவர்களும் பணிபுரியலாம்.

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய குடியுரிமை பரலோகத்தில் இருப்பதனால் (பிலி.3:20),[48] இவ்வுலகத்தில் நாம் அந்நியரும் பரதேசிகளுமாகவே இருக்கின்றோம் (1பேது.2:11) என்பது உண்மை என்றாலும், நாம் இன்னும் இவ்வுலகத்தில்தான் வாழ்கின்றோம். இதனால்தான், தம்மைப் பின்பற்றும் மக்களுக்காக இயேசுகிறிஸ்து ஜெபிக்கும்போது "அவர்கள் உலகத்தாரல்ல" என்று குறிப்பிட்டாலும் (யோவா.17:14), உடனடியாக அடுத்த வசனத்தில், "நீ அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீ அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று தெரிவித்துள்ளார் (யோவா.17:15). எனவே, தம்மைப் பின்பற்றுபவர்களை இவ்வுல

[47] கிறிஸ்தவர்கள் தேர்தல்களில் நிற்பது தவறான செயல் அல்ல. ஆனால், ஊழியர்களாக இருப்பவர்கள் தேர்தல்களில் நிற்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், சபையை வழிநடத்தும் ஊழியரால் நாட்டை ஆட்சி செய்வதற்கு நேரமும் தேவஅழைப்பும் இருப்பதில்லை. இதனால்தான் பழைய ஏற்பாட்டில் அரசபணியும் ஆசாரியப் பணியும் ஒருவரால் செய்யப்படவில்லை. அரசன் ஆசாரியப் பணியைச் செய்வது தண்டனைக்குரிய குற்றமாயிருந்ததை உசியாவின் சரிதை அறியத்தருகின்றது (2நாளா.22:16-21). புதிய ஏற்பாட்டில், ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதைத் தேவனுக்கும் கொடுங்கள் என்னும் கட்டளையில் (மத்.22:21), அரசாங்கமும் ஆலயமும் இருவேறுபட்ட அமைப்புகள் என்பது காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆசாரியன் அரசனாகவும், அரசன் ஆசாரியனாகவும் பணிபுரிய முடியாது.

[48] பிலிப்பியர் 3:20லுள்ள, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்னும் வாக்கியத்தில் "குடியிருப்பு" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "குடியுரிமை" என்னும் அர்த்தமுடையது. இதனால்தான் புதிய ஆங்கில வேதாகமங்களில் இதை citizenship என்று மொழிபெயர்த்துள்ளனர்.

> உலகத்தோடு எவ்வித தொடர்பும் அற்ற நிலையில் தனித்திருக்கும் ஒரு சங்கமாக இருப்பதற்காக கிறிஸ்தவர்கள் அழைக்கப்படவில்லை.

கிலிருந்து அகற்றுவது இயேசுகிறிஸ்துவின் நோக்கமல்ல என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இதனால், "கிறிஸ்தவர்களாகிய நாம் உலக வாழ்விலிருந்து வெளியேறுகிறவர்களாக அல்ல, உலகத்திற்கு சாட்சிகளாக உலகத்திலேயே இருக்கவேண்டும்."[49] ஏனெனில், "உலகத்தோடு எவ்வித தொடர்பும் அற்ற நிலையில் தனித்திருக்கும் ஒரு சங்கமாக இருப்பதற்காக கிறிஸ்தவர்கள் அழைக்கப்படவில்லை. எனவே, கிறிஸ்தவர்கள் உலகத்தைத் துறந்து செல்கிறவர்களாக அல்ல, உலகத்தில் இருந்து உலகில் மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுகிறவர்களாக இருக்கவேண்டும்."[50] இதனால்தான், தம்முடைய தெய்வீக மகிமை வெளிப்பட்ட மறுரூப மலையில் கூடாரம் போட்டு குடியிருக்க விரும்பிய சீடர்களின் வாஞ்சையை இயேசுகிறிஸ்து நிறைவேற்றவில்லை (மாற்.9:2-9). நாம் உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கவேண்டும் என்பதே கிறிஸ்தவர்களாகிய நமது வாழ்வுக்கான தேவசித்தமாயுள்ளது. இதனால், யெகோவாவின் சாட்சிகள் போதிக்கின்ற விதமாக கிறிஸ்தவர்கள் உலக அரசியலில் ஈடுபடாதவர்களாக அல்ல, அவர்கள் அரச பணிகளில் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், உலக அரசாங்கம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாக இருப்பதனால் நாம் அரசியலில் ஈடுபடுவது தேவனுக்கு விரோதமான பாவம் அல்ல.

## (2). தேசியக் கொடிக்கு மதிப்பளிப்பது பாவம் அல்ல

யெகோவாவின் சாட்சிகள் அரசியல் விவகாரங்களில் ஈடுபடாதிருப்பதனால், தாங்கள் வாழும் நாட்டின் தேசியக் கொடிகளை வைத்திருப்பதை

[49] A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the New Testament*, p. 495; D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 565;
[50] L.Morris, *John: The New International Commentary on the NT*, p. 646.

யும், அதற்கு மரியாதை செலுத்துவதையும் தவிர்த்துவருகின்றனர்.[51] ஏனெனில், சகலவிதமான கொடிகளும் பிறமத வழிபாடுகளிலிருந்து வந்துள்ளன என்று இவர்கள் கருதுகின்றனர். இதனால், "எகிப்திய ஆலயங்களின் சிறப்பம்சம் அவற்றின் கொடிகள்"[52] என்று கூறும் இவர்கள், "ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியக்கொடி விக்கிரகத்தின் அடையாளம்"[53] என்று விளக்குகின்றனர். ஆனால், புராதன காலத்தில் கொடிகள் ஆலயங்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட் டவைகளாக இருக்கவில்லை. இவைகள் ராணுவத்துடனும் கடற் பிரயாணங்களுடனும் தொடர்புடையவைகளாக இருந்தன. அதாவது, யுத்தகளங்களில் போரிடுவது எந்த நாடு என்பதை அறியத்தரும் விதத்திலும், கடலில் வரும் கப்பல் யாருடையது அல்லது எத்தேசத் தைச் சேர்ந்தது என்பதை அறியத்தரும் அடையாளங்களாகவும் கொடி கள் உபயோகிக்கப்பட்டன. எனவே, கொடிகளைப் பிறமத ஆலய வழிபாடுகளுடன் மாத்திரம் யெகோவாவின் சாட்சிகள் தொடர்புபடுத்து வது தவறானதாகவே உள்ளது. மேலும், கொடிகள் வைத்திருப்பதை யெகோவாவின் சாட்சிகள் ஆரம்ப காலத்தில் தவறான செயலாகக் கருதவில்லை. ஆரம்ப காலத்தில் இவர்கள் தங்களுடைய அலுவலகத் தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனுடைய சிலையையும் அதனுடன் சேர்த்து இரண்டு அமெரிக்கக் கொடிகளையும் வைத்திருந்தனர்.[54] ஆனால், பிற்காலத்தில் தேசியக்கொடியை வைத்தி ருப்பதே பாவம் என்று கருதத் தொடங்கினார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எந்நாட்டில் வாழ்கிறோமோ, அந்நாட்டின் தேசியக் கொடியை வைத்திருப்பதும், அரசின் கட்டளைப்படி நாட்டின் தேசியத்தோடு தொடர்புடைய நாட்களில் நம்முடைய வீடுகளில் அல் லது வேலைசெய்யும் இடங்களில் தேசியக் கொடியைப் பறக்க விடு வதும், தேசியக் கொடி ஏற்றும்போது அச்செயலைக் கனப்படுத்துவ தும் எவ்விதத்திலும் தவறான ஒரு செயல் அல்ல. இதை விக்கிரக வழிபாடு என்று கூறுவது அறிவீனமான கருத்தாகும். தேசியக் கொடி யைத் தெய்வமென்று கருதி அதற்குமுன் மண்டியிட்டு வழிபடுவதும்,

[51] *The Watchtower*, 1 December 1981, p. 23; W.Martin & N.Klann, *Jehovah of the Watchtower*, p. 73.

[52] Anonymous, *Qualified to be Ministers*, 272.

[53] *Awake*, 8 September 1971, p. 12.

கைகூப்பி அதைக் கும்பிடுவதுமே விக்கிரக வழிபாடு. ஆனால் தேசியக் கொடியை கனப்படுத்துவது தவறான செயல் அல்ல. ஏனெனில், வேதாகமத்தில் தேவனும் இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய கோத்திரங் களுக்குரிய கொடிகளை வைத்திருக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். இதனால்தான், "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் பாளையத்தோடும், தங்கள் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம் போடக்கடவர்கள்" (எண்.1:52) என்று அவர்களுக்கு கட்டளையிட்டுள்ளார். எண்ணாகமம் 2:2ல், இக்கொடிகள் "இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களுடைய வம்சத் தின் விருதாகிய தங்கள் கொடி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வச னத்தில் "வம்சத்தின் விருது" என்பது மூலமொழியின்படி "வம்சத்தின் அடையாளச் சின்னம்" ஆகும். அக்காலத்தில் இஸ்ரவேல் மக்களு டைய பன்னிரு கோத்திரங்களுக்கும் தனித்தனி சின்னங்கள் இருந்தன. இச்சின்னங்கள் அவர்களுடைய கொடியில் இருந்தது. இதன்மூலம், எது எந்த கோத்திரம் என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாய் இருந் தது. எனவே, மனிதர் தங்களுடைய இனம், கோத்திரம், நாடு என்ப வற்றை அடையாளப்படுத்தும் விதத்தில் கொடிகள் வைத்திருப்பதில் எவ்வித தவறும் இல்லை.

தேசியக் கொடியில் பிறமதங்களோடு சம்பந்தப்பட்ட சின்னங்கள் இருந்தாலும், இது நாட்டின் அடையாளச் சின்னமாகவே உள்ளது. இலங்கை நாட்டின் நாணயத்தாள்களிலும் பிறமதச் சின்னங்கள் உள்ளன. இதைப் பணமாக மாத்திரம் பார்க்கும் நாம் தேசியக் கொடியை விக்கிரகமாகப் பார்க்கக்கூடாது.

இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய கோத்திரங்களுக்கும் நாட்டுக்கும் கொடிகள் வைத்திருந்ததைக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டாலும், இலங்கை போன்ற நாடுகளில் தேசியக்கொடி பிறமதச் சின்னங்களுடன் இருப்பதனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இத்தகைய கொடிகளைக் கனப்படுத்துவது விக்கிரக வழிபாட்டில் ஈடுபடுவது என்று சிலர் எண்ணு கின்றனர். ஆனால், தேசியக் கொடியில் பிறமதங்களோடு சம்பந்தப்பட்ட சின்னங்கள் இருந்தாலும், இவற்றை யாரும் தெய்வமாகப் பார்ப்ப தில்லை. தேசியக் கொடி நாட்டின் அடையாளச் சின்னமாகவே உள்

ளது. உண்மையிலேயே நாம் இலங்கையின் தேசியக் கொடியை வைத்திருக்கக்கூடாது என்றால், இலங்கையின் நாணயத் தாள்களையும் வைத்திருக்கக் கூடாது. ஏனெனில், இலங்கையின் நாணயத் தாள்களில் பிறமதத் தெய்வங்களினதும், கோவில்களினதும் சித்திரங்கள் உள்ளன. ஆனால், இவற்றை எப்பொழுதும் தங்களுடன் வைத்திருக்கும் கிறிஸ்தவர்கள், தேசியக்கொடியை விக்கிரகமாக நினைப்பது அறிவீனமானது. நாணயத் தாள்களைப் பணமாக மாத்திரமே பார்க்கும் நாம், தேசியக் கொடியை நாட்டின் அடையாளமாக மாத்திரமே பார்க்க வேண்டும். ஏனெனில், தேசியக்கொடியை வைத்திருப்பதும், நாட்டின் தேசியத்தோடு சம்பந்தப்பட்ட காலங்களில் நாமிருக்கும் இடங்களில் அதை ஏற்றி வைப்பதும் பாவமான செயல்கள் அல்ல.

## (3). தேசத்திற்காகப் போரிடுவது பாவம் அல்ல

கிறிஸ்தவத்திற்கும் உலக ராட்சியங்களுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாது என்று யெகோவாவின் சாட்சிகள் எண்ணுவதனால், கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவதும் தேவனுக்கு எதிரான செயல் என்று கருதுகின்றனர். “கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரையொருவர் நேசிப்பவர்களாக இருக்கவேண்டும் என்று வேதாகமம் கூறுவதனால், ராணுவத்தில் சேர்ந்து யுத்தத்தில் எதிரி நாட்டினரைக் கொல்லுவது மற்றவரை நேசிக்க வேண்டும் என்னும் தேவனுடைய கட்டளைக்கு எதிரானது” என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.[55] யெகோவாவின் சாட்சிகள் மாத்திரமல்ல, சில கிறிஸ்தவர்களும் நாட்டைப் பாதுகாப்பதற்குக்கூட யுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்னும் எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர்.[56] ஆனால் இவர்கள், உலக ராட்சியங்களைப்பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை சரியானவிதத்தில் அறியாததினாலேயே கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவது தவறானது என்று கருதுகின்றனர்.

---

[54] *The Watchtower*, 15 May 1917, p. 150.

[55] Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, pp. 189-190.

[56] J.Wallis, *God's Politics: Why the Right Gets It Wrong and the Left Dosen't Get It*, pp. 87-205; S.Claiborne & C.Haw, *Jesus for President: Politics for Ordinary Radicals*, pp. 199-224, 338-347.

நாம் ஏற்கனவே 273ம் 274ம் பக்கங்களில் பார்த்தபடி, தேவனே ராஜாக்களை ஏற்படுத்துகிறவரும் அவர்களை அரச பதவியிலிருந்து நீக்குகிறவருமாய் இருப்பதனால், உலக அரசுகள் அனைத்தும் தேவனுடையவைகளாக இருப்பதோடு, அரச அதிகாரிகள் தேவனுடைய ஊழியக்காரர்களாக உள்ளனர். இதனால் நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கம் தனது பணியைச் செய்வதற்குத் தேவன் அதற்குச் சில அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறார். இத்தகைய அதிகாரங்களில் ஒன்று குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் தீமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமாகும். இதனால்தான், “தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது” (ரோ.13:1) என்று கூறும் வேதாகமம், “பட்டயத்தை அவன் (அதாவது நாட்டை ஆளும் அதிகாரத்தில் இருப்பவன்) விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப் பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாய் இருக்கிறான்” (ரோ.13:4) என்பதை அறியத்தருகிறது. அதாவது, தீமையைக் கட்டுப்படுத்துவதற்காகத் தேவன் “பட்டயத்தை அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளார்” என்று இவ்வசனம் கூறுகிறது. இவ்வசனத்தில் “பட்டயம்” என்பது, அக்கால ராணுவ வீரர்கள் வைத்திருந்த ஆயுதத்தையே குறிக்கின்றது.[57] எனவே, தீமை செய்தவனுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரத்தைத் தேவன் அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளதை இதிலிருந்து அறிந்து கொள்கின்றோம். இதனால், “தீமை செய்தவனுக்குத் தண்டனை கொடுப்பதன் மூலம் அரசாங்கம் தேவனுடைய சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்றி வருகிறது.”[58] மேலும், அக்காலத்தில் அரசாங்கம் ராணுவத்தின் மூலமே தீமை

தீமை செய்தவனுக்குத் தண்டனை கொடுப்பதன் மூலம் அரசாங்கம் தேவனுடைய சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்றி வருகிறது. இதனால், அரசாங்கம் ராணுவத்தை வைத்திருப்பதையும், கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவதையும் வேதாகமம் தடைசெய்யவில்லை.

---

[57] R.Jewett, *Romans: Hermeneia Bible Commentary*, p. 795.

[58] D.J.Moo, *Romans: The New International Commentary on the NT*, p. 800.

செய்கிறவர்களுக்குத் தண்டனை கொடுத்ததினால், அரசாங்கம் ராணு வத்தை வைத்திருப்பதை வேதாகமம் தடை செய்யவில்லை என்பது தெளிவாகின்றது. மேலும், கிறிஸ்தவர்கள் அரச பதவிகளில் இருப்ப தையும் வேதாகமம் தடைசெய்யவில்லை என்பதனால், கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவதையும் வேதாகமம் தவறான செயலாகக் கருதுகிறது என்று கூறமுடியாது.

கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவதை வேதாகமம் தவறானதாகக் கருதாததினாலேயே பாவங்களிலிருந்து மனந்திரும்பிய ராணுவ வீரர்க ளுக்கு, ராணுவத்தை விட்டு விலகும்படியான அறிவுறுத்தல்கள் கொடுக் கப்படவில்லை. இதனால்தான், மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங் கித்த யோவான் ஸ்னாநகனிடம் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று போர் வீரர்கள் கேட்டபோது, "நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ் சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்" (லூக்.3:14) என்று அறிவுறுத்தினானே தவிர, ராணுவத்தை விட்டுவிலகுங்கள் என்று கூறவில்லை. இதைப் போலவே, இயேசுகிறிஸ்துவும் தம்மிடத்தில் வந்த ராணுவத் தலைவ னான நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைப் புகழ்ந்து பேசினாரே தவிர (லூக்.7:9), அவன் தவறான தொழில் செய்கிறவன் என்று அவனைக் குற்றம் சாட்டவில்லை. ராணுவத்தைவிட்டு விலகும்படி கட்டளையிடவும் இல்லை. இதைப்போலவே ராணுவத் தலைவனாக இருந்த கொர்நேலியு என்பவன் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனாகினா லும், ராணுவத்தைவிட்டு விலகும்படியான அறிவுறுத்தல் அவனுக்கு கொடுக்கப்படவில்லை (அப்.10). மேலும், நாம் ஏற்கனவே பார்த்தபடி, பிலிப்பியர் 4:22ல் குறிப்பிடப்பட்டுள்ள "ராயனுடைய அரண்மனையில் உள்ளவர்கள்" ரோம அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்களாக இருந்தாலும், இவர்களில் இராணுவ வீரர்களும் இருந்தனர். ஏனெனில், பவுல் இரண்டு வருஷ காலமாக ரோம் நகரில் வீட்டுக்காவலில் இருந்தபொழுது அவரைக் காவல்புரிந்த பல ராணுவவீரர்கள் கிறிஸ்தவர்களாகியுள் ளதை அவர் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் அறியத்தருகின்றது.[60]

[60] பவுல் இரண்டு வருஷங்கள் ரோமில் வீட்டுக்காவலில் இருந்துள்ளதை அப்போஸ் தலர் 28:30-31 அறியத்தருகின்றது. அக்காலத்தில் தன்னை வந்து பார்த்தவர்களுக் கும், தன்னைக் காவல் புரிந்த போர் வீரர்களுக்கும் பவுல் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்ததினால் பலர் இரட்சிக்கப்பட்டனர் (பிலி.1:12-13).

உண்மையில், தேவன் அரசாங்கத்திற்குக் கொடுத்துள்ள அதிகாரம் ராணுவத்தை வைத்திருப்பதை மாத்திரமல்ல, குற்றம் செய்தவனுக்கு மரண தண்டனை கொடுக்கும் அதிகாரத்தையும் உள்ளடக்கியுள்ளது. இதனால்தான், "பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்க வில்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறான்" (ரோ.13:4) என்று வேதாகமம் கூறுகிறது.[61] தற்காலத்தில் மரணதண் டனை கொடுப்பது தடைசெய்யப்படவேண்டும் என்னும் கருத்து பரவலா கக் காணப்பட்டாலும், கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய தீர்ப்பாய் உள்ளது. இதனால்தான், "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி.9:6) என்று தேவனே தெரிவித்துள்ளார். இவ்வசனத்தில் "இரத்தம் சிந்துதல்" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள "ஷ.்.பாக்" (*shaphak*) என்னும் எபிரேயச் சொல், உயிரிழப்பு ஏற்படும் அளவுக்கு உடலிலிருந்து இரத்தம் வெளியேறுவதைக் குறிப்பிடும் சொல்லாகும். எனவே, இது மனிதக் கொலையையே குறிக்கிறது. எனவே, கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை என்பது தேவனுடைய தீர்ப்பாகவே உள்ளது. இதனால்தான், தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளைகளைக் கொடுக்கும்போதும் "ஒரு மனிதனைக் கொல்லுகிறவன் எவனோ அவன் கொலைசெய்யப்பட வேண்டும்" (லேவி.24:17) என்றும், "ஒரு மனிதனைச் சாகும்படி அடித்த வன், நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன்" (யாத்.21:12) என்றும் தெரிவித்துள்ளார். மேலும், கொலைக் குற்றத்திற்கு வேறுவிதமான நஷ்டஈடுகள் செலுத்துவதற்கும் தேவன் அனுமதி கொடுக்கவில்லை (எண்.35:31).[62] ஆதியாகமம் 9:6ன்படி, மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினால், மனிதரைக் கொல்லுவது தேவனுக்கு எதிரான ஒரு குற்றச் செயலாகவே உள்ளது.[63] இதனால்தான், மனிதக்

[61] T.Engberg-Pedersen, "Paul's Stoicizing Politics in Romans 12-13: The Role of 13:1-10 in the Argument" pp. 163-172; C.E.B.Cranfield, *Romans: International Critical Commentary Vol.2*, p. 667; J.D.G.Dunn, *Romans: Word Biblical Commentary Vol.38*, p. 764.

[62] எண்ணாகமம் 35:31ல் "சாகிறதற்கேற்ற குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய ஜீவனுக்காக நீங்கள் மீட்கும் பொருளை வாங்கக்கூடாது. அவன் தப்பாமல் கொலைசெய்யப்பட வேண்டும்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

கொலைக்கு மரணதண்டனை என்று தேவன் தீர்ப்பளித்துள்ளார்.[64] எனினும், கொலைகாரனுக்குத் தேவன் நேரடியாக மரண தண்டனையைக் கொடுக்காமல், இத்தண்டனையை நிறைவேற்றும் அதிகாரத்தை நாம் வாழும் நாட்டின் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளார்.[65]

கொலைக் குற்றத்துக்கு மரணதண்டனை கொடுக்கும் அதிகாரத்தைத் தேவன் நாட்டை ஆளும் அரசாங்கத்துக்குக் கொடுத்திருப்பதினாலேயே "பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே" (ரோ.13:4) என்று கூறும் வேதாகமம், அரசாங்கத்தால் அனுப்பப்படுகின்ற அதிகாரிகள், "தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாக்குகிறவர்கள்" (1பேது.2:14) என்பதை அறியத்தருகின்றது. அதாவது, அரசாங்கம் தீமை செய்கிறவனைத் தண்டிப்பதன் மூலம், அவனால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அவனால் இன்னும் பலர் பாதிக்கப்படுவதையும் தடை செய்கிறது. "கொலைகாரரையும் திருடரையும் தண்டிப்பதன் மூலம் மக்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தேவன் அரசாங்கத்திற்குப் பட்டயத்தைக் கொடுத்திருப்பதைப் போலவே, நாட்டைத் தாக்க வரும் எதிரிகளிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ராணுவத்தைத் தேவன் அரசாங்கத்திற்குக் கொடுத்துள்ளார்."[66] இதனால்தான், பழைய ஏற்பாட்டில் பிற

---

[63] தேவனுடைய நீதிச்சட்டம் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள மனிதருடைய உள்ளத்திலும் எழுதப்பட்டிருப்பதனால்தான் (ரோ.2:14-15), தன் சகோதரனைக் கொலைசெய்த காயீன் "என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே" (ஆதி.4:14) என்னும் எண்ணமுடையவனாக இருந்தான் (K.A.Mathews, *Genesis 1-11:26: The New American Commentary*, p. 404).

[64] சில ஆராய்ச்சியாளர்கள் ஆதியாகமம் 9:6ஐ கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று ஆதியாகமம் 9:6 கூறவில்லை என்றும், இது ஒரு பழமொழியாகவே சொல்லப்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர். அதாவது, "நீ யாரையாவது கொன்றால் உன்னுடைய வாழ்வும் அழிந்துவிடும் எனவே கவனமாயிரு" என்று அறிவுறுத்தும் பழமொழி என்று கூறுகின்றனர் (G.Stassen & D.Gushee, *Kingdom Ethics*, p. 202). ஆனால், கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை என்பதைத் தேவன் இவ்வசனத்தில் மாத்திரமல்ல நியாயப்பிரமாணக் கட்டளைகளிலும் பல தடவைகள் தெரிவித்துள்ளார்.

[65] W.Grudem, *Politics According to the Bible*, pp. 187-188.

[66] W.Grudem, *Politics According to the Bible*, p. 388.

நாடுகளிலிருந்து வந்த தாக்குதல்களைத் தடுப்பதற்குத் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு ராணுவத்தைக் கொடுத்திருந்தார். இஸ்ரவேலை அரசர்கள் ஆட்சிசெய்த காலத்தில் அவர்கள் ராணுவத்தை வைத்துத் தங்கள் தேசத்தைப் பாதுகாத்து வந்தனர். அதற்கும் முற்பட்ட நியாயாதிபதிகள் காலத்தில், தேவனே "நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார். அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்" (நியாயா.2:16), இதனால்தான், "கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்து வருவார்" (நியாயா.2:18) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "அரசாங்கம் நாட்டைப் பாதுகாப்பதற்காக ராணுவத்தை வைத்திருப்பது தேவன் அரசாங்கத்துக்கு கொடுத்துள்ள ஆசீர்வாதமாகவே உள்ளது."[67] இதனால், இத்தகைய ராணுவத்தில் கிறிஸ்தவர்கள் இருப்பதில் எவ்வித தவறும் இல்லை.

அரசாங்கம் நாட்டைப் பாதுகாப்பதற்காக ராணுவத்தை வைத்திருப்பது தேவன் அரசாங்கத்துக்கு கொடுத்துள்ள ஆசீர்வாதமாகவே உள்ளது. இதனால், இத்தகைய ராணுவத்தில் கிறிஸ்தவர்கள் இருப்பதில் தவறில்லை.

ராணுவத்தில் பணிபுரிவது "கொலை செய்யாதிருப்பாயாக" என்னும் கட்டளையை மீறும் செயலாக இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். ஏனெனில், ராணுவத்தில் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபடும்போது, எதிரிகளைக் கொல்வது தவிர்க்கமுடியாததாகிவிடும். ஆனால், யாத்திராகமம் 20:13ல் "கொலை செய்யாதிருப்பாயாக" என்பதில் "கொலை" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ரட்சா.ஃ.க்" (*ratsakh*) என்னும் எபிரேயச் சொல், யுத்தத்தில் மனிதரைக் கொல்லுவதைக் குறிப்பிடுவதில்லை. ஏனெனில், இதற்கு வேறு சொற்கள் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளன. உண்மையில், மனிதரை அல்லது ஏனைய உயிரினங்களைக் கொல்லுவதைக் குறிப்பிடுவதற்கு எபிரேய மொழியில் ஏழு வித்தியாசமான சொற்கள் உள்ளன. ஆனால், கொலை

[67] W.Grudem, *Politics According to the Bible*, p. 388.

செய்யாதிருப்பாயாக என்னும் கட்டளையில் உள்ள சொல் பழைய ஏற்பாட்டில் 47 தடவைகள் இடம்பெறுவதோடு, தனிப்பட்ட ஒரு எதிரியைக் கொல்லுவதைக் குறிப்பிடவே இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[68] அதாவது, தனிப்பட்ட ரீதியாக சுயநல நோக்கத்துடன் இன்னொருவனுடைய உயிரை எடுத்தல் என்னும் அர்த்தமுடைய சொல்லாய் இது உள்ளது. இதனால் இச்சொல், நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒருவனுக்கு மரண தண்டனை கொடுப்பதையும், அரசாங்க உத்தரவின்படி ராணுவம் யுத்தத்தில் ஈடுபடுவதையும் குறிப்பிடுவதில்லை.[69] அதாவது, ஒரு மனிதன் தனிப்பட்ட காரணத்திற்காக தன்னுடைய எதிரியைத் திட்டமிட்டுக் கொல்வதையே இச்சொல் குறிக்கின்றது.[70] உண்மையில், ஒரேயொரு மனிதனைக் கொல்வதைக் குறிப்பிடுவதற்கு மாத்திரமே எபிரேய மொழியில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[71] எனவே, நாட்டைப் பாதுகாப்பதற்காக ராணுவத் தாக்குதலில் ஈடுபடுவதை இக்கட்டளை தடைசெய்யவில்லை. இல்லையென்றால், இஸ்ரவேல் மக்களை யுத்தம் செய்யும்படி தேவன் கூறுவதையும் (உபா.20:1-4)[72] இக்கட்டளையை மீறியச் செயலாகவே நாம் குறிப்பிடவேண்டும். ஆனால், தேவன் தாம் கொடுத்த கட்டளைகளுக்கு எதிராகச் செயற்படுபவரல்ல என்பதனால், கொலை செய்யாதிருப்பாயாக என்னும் கட்டளை தேசத்தைப் பாதுகாப்பதற்காக ராணுவத் தாக்குதலில் ஈடுபடுவதைத் தடைசெய்யும் கட்டளை அல்ல.

---

[68] W.C.Kaiser, *Toward Old Testament Ethics*, p. 90.

[69] D.K.Stuart, *Exodus: The New American Commentary*, p. 456; W.Zimmerli, *The Old Testament Theology in Outline*, pp. 134-135; E.H.Merrill, *Deuteronomy: The New American Commentary*, p. 154.

[70] R.A.Cole, *Exodus: Tyndale Old Testament Commentary*, p. 159; P.C.Craigie, *Deuteronomy, The New International Commentary on the Old Testament*, p. 159.

[71] J.G.McConville, *Deuteronomy: Apollos Old Testament Commentary*, p. 129.

[72] உபாகமம் 20:1-4ல், "நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக. உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். நீங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கும்போது, ஆசாரியன் சேர்ந்துவந்து, ஜனங்களிடத்தில் பேசி: இஸ்ரவேலரே, கேளுங்கள். இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள். உங்கள் இருதயம் துவளவேண்டாம். நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாப்பதற்காக யுத்தம் செய்யலாம் என்றாலும், யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டிறிந்து, பிரச்சனையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான காரியங்களை அரசாங்கம் செய்யவேண்டும். பிரச்சனைக்கு யுத்தம் மாத்திரமே தீர்வு என்று எண்ணுவது தவறாகும்

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்க வேண்டும் என்றும் (மத்.22:39),[73] ஒருவன் நம்மை வலது கண்ணத்தில் அறைந்தால், அவனைத் திருப்பி அறையாமல் நமது இடது கண்ணத் தையும் அடிபடுவதற்கு கொடுக்கவேண்டும் என்றும் (மத்.5:39),[74] நாம் எதிரியையும் நேசிக்கவேண்டும் என்றும் (மத்.5:44)[75] இயேசுகிறிஸ்து கட்டளையிட்டுள்ளதினால், ராணுவத்தில் பணிபுரிவதற்கு நாம் எவ்விதத் திலும் அனுமதிக்கப்படவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.[76] ஆனால், இக்கட்டளைகள் அனைத்தும் தனிப்பட்ட ரீதியாக மனிதர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளாகவே உள்ளன. அதாவது, இவைகள் நாம் வாழும் சமுதாயத்திலும் நாம் அங்கத்தினர்களாய் இருக்கும் சபையிலும் மற்றவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ப தற்கான அறிவுறுத்தல்களாகும். இவைகள், நாட்டை ஆட்சிசெய்யும் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் அல்ல.[77] ஆனால், தீமை செய்கிறவனுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரத்தைத்

[73] மத்தேயு 22:39ல், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று இயேசுகிறிஸ்து கட்டளையிட்டுள்ளார்.

[74] மத்தேயு 5:39ல், "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவ னுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" என்று இயேசுகிறிஸ்து கட்டளையிட் டுள்ளார்.


[75] மத்தேயு 5:44ல்," நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக் களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்க ளைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிற வர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண் ணுங்கள்" என்று இயேசுகிறிஸ்து கட்டளையிட்டுள்ளார்.

[76] J.Wallis, *God's Politics: Why The Right Gets It Wrong and the Left Dosen't Get It*, pp. 87-205; S.Claiborne & C.Haw, *Jesus for President: Politics for Ordinary Radicals*, pp. 199-224 338-347.

[77] W.Grudem, *Politics According to the Bible*, pp. 42, 82, 201-201, 391-392.

தேவன், நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கத்துக்கு கொடுத்துள்ளார். இதனால்தான், “பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்க வில்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே” என்று ரோமர் 13:4 கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் ராணுவத்தில் பணிபுரிவதற்குத் தேவன் தடைவிதிக்கா விட்டாலும், உலகில் நடைபெறுகின்ற யுத்தங்கள் அனைத்தையும் நாட்டைப் பாதுகாப்பதற்கானவை என்று கூறமுடியாது. சில அரசாங்கங் கள், தீமையானவைகளாகவும், நாட்டைப் பாதுகாப்பதைவிட ஏனைய நாடுகளைக் கைப்பற்றவேண்டும் என்னும் எண்ணத்துடன் அவசியமற்ற போர்களில் ஈடுபடுகிறவைகளாகவும் உள்ளன. இதனால், இத்தகைய யுத்தங்களில் ஈடுபடுகின்ற ராணுவத்தில் சேர்வது கிறிஸ்தவர்களாகிய நமக்கு தகுதியானதாய் இருக்குமா என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசாங்கமும் தீமையைக் கட்டுப்படுத்தி, நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும். நாட்டைப் பாதுகாப்பதற்காக யுத்தம் செய்யலாம் என்றாலும், யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டிறிந்து, பிரச்சனையை சுமுகமாகத் தீர்ப்பதற் கான காரியங்களை அரசாங்கம் செய்யவேண்டும். பிரச்சனைக்கு யுத்தம் மாத்திரமே தீர்வு என்று எண்ணுவது தவறாகும். இதனால், கிறிஸ்தவர்களாகிய நாம் நாட்டின் சமாதானத்துக்காகவும், நாட்டை ஆட்சி செய்கிறவர்களுக்காகவும், மக்களின் இரட்சிப்புக்காகவும் ஜெபிக் கிறவர்களாக இருப்பதோடு, தேவனுடைய ஒழுக்க சட்டங்கள் நாட்டில் நடைமுறைப்படுத்தம்படும் விதத்தில் அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்க ளாகவும், கிறிஸ்தவ சிந்தனைகள் அரசுக்கு ஏற்படும்விதத்தில் அரசில் செல்வாக்கு செலுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.



## பன்னிரெண்டாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

மருத்துவ விடயங்களில் யெகோவாவின் சாட்சிகள் முன்னுக்குப் பின் முரணான காரியங்களைப் போதித்து அநேகருடைய உயிரோடு விளையாடியுள்ளனர். 1950ம் ஆண்டுவரை, நோய்கள் வருவதைத் தடுக்கும் தடுப்பூசிகள் போடுவதை இவர்கள் தடைசெய்திருந்ததினால், பலர் அநியாயமாக நோய்வாய்ப்பட்டு மரித்துள்ளனர். இதைப்போலவே, 1967 முதல் 1980 வரை அறுவைசிகிச்சை மூலம் ஒருவருடைய அவயவத்தை இன்னுமொருவருக்குப் பொருத்துவதையும் யெகோவாவின் சாட்சிகள் தடைசெய்திருந்தனர். ஆனால் இவர்கள் இன்றுவரை, ஒருவருடைய இரத்தத்தை மற்றவருக்கு செலுத்துவதை முழுமையாகத் தடைசெய்துள்ளனர். இரத்தம் புசிக்கக்கூடாது என்னும் கட்டளையைத் தவறாக வியாக்கியானம் செய்தே இத்தகைய அறிவீனமான உபதேசத்தை இவர்கள் உருவாக்கியுள்ளனர். இதனால், இரத்தம் கொடுத்து ஒருவரின் உயிரைக் காப்பாற்றக்கூடிய நிலைமை இருந்தும், பலர் பரிதாபமாக மரித்துள்ளனர். யெகோவாவின் சாட்சிகளைப் போலவே சில கிறிஸ்தவர்களும் மருந்துகள் எடுப்பதையும் மருத்துவரின் உதவியை நாடுவதையும், விசுவாசக் குறைவாகவும் பாவமான செயல்களாகவும் கருதுகின்றனர். ஆனால், வேதாகமத்தில் தேவன் மருந்துகள் மூலமும் சுகம் கொடுக்கிறார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. தேவனை விசுவாசியாத நிலையில் மருத்துவரை மாத்திரம் நம்புவதே வேதாகமத்தில் குற்றமாகக் கருதப்படுகின்றது. ஆனால், மருந்தின் மூலம் சுகம் கொடுப்பவர் தேவனே என்னும் நம்பிக்கையில் மருந்துகளை உபயோகிப்பது தவறான செயல் அல்ல என்றே வேதாகமம் கூறுகிறது.

# பன்னிரெண்டாம் அத்தியாயம்



# மருத்துவ விடயங்கள்

## மருத்துவ உதவிகள் பெறலாமா? அல்லது மருந்தெடுப்பது பாவமா?

யெகோவாவின் சாட்சிகள் ஒரு வேதப்புரட்டுக் குழுவாய் செயல்பட்டு, இயேசுகிறிஸ்து அருளும் நித்திய ஜீவனை மனிதர்கள் பெற்றுக்கொள் வதற்குத் தடையாய் இருப்பது மாத்திரமல்ல, அநேகர் அநியாயமாய் உயிரிழப்பதற்கும் காரணமாயிருந்துள்ளனர். ஏனெனில், இவர்கள் மருத் துவ விடயங்களில் பல்வேறு விதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ள னர். மருந்துகள் உபயோகிப்பதை இவர்கள் முழுமையாகத் தடைசெய் யாவிட்டாலும், மருத்துவ விடயங்களில் இவர்கள் காலத்துக்குக் காலம் போதித்தவைகள், மருத்துவ சிகிச்சைகளின் மூலம் உயிர் வாழக்கூடிய நிலையில் இருந்த பலர் பரிதாபமாக மரணமடைவதற்கு காரணமாய் இருந்துள்ளது. உண்மையில், இது மிகவும் கொடூரமான ஒரு செயலா கவே உள்ளது. ஏனெனில், மருத்துவ உதவிகள் மூலம் ஒருவர் உயிர் வாழக்கூடிய நிலை காணப்படும்போது, மருந்துகள் எடுப்பது பாவம் என்று போதிப்பது அவரைக் கொலை செய்வதற்கு சமமான

ஒரு செயலாகவே உள்ளது. தற்காலத்தில் சில கிறிஸ்தவ குழுக்க ளும் மருந்துகள் உபயோகிப்பதையும் மருத்துவரின் உதவியை நாடுவதையும் பாவமாகக் கருதுகின்றன. இதனால், இவ்வத்தியாயத் தில், மருத்துவ விடயங்களில் யெகோவாவின் சாட்சிகள் போதிப்ப வற்றை வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து, கிறிஸ்தவர் களாகிய நாம் மருத்துவ உதவிகள் பெறலாமா? அல்லது மருந்துகள் உபயோகிப்பது பெரும் பாவமா? என்பதை அறிந்துகொள்வோம்.

## (1). உயிரைக் காப்பாற்றுவதற்கு இரத்தம் கொடுப்பதைத் தடுத்தல்

யெகோவாவின் சாட்சிகளின் அபாயகரமான உபதேசங்களில் ஒன்று, மானிட உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒருவர் மற்றவருக்குத் தன் இரத்தத்தைக் கொடுப்பதைத் தடுத்துள்ளது. அதாவது, ஒருவருக்கு இரத்தம் கொடுக்காவிட்டால் அவருடைய உயிருக்கு ஆபத்து என்று வைத்தியர்கள் கூறினாலும் அதற்கு மறுப்பு தெரிவிக்கவேண்டும் என்பதே யெகோவாவின் சாட்சிகளின் போதனையாகும்.[1] இதனால், ஒருவர் மற்றவருக்குத் தன்னுடைய இரத்தத்தைக் கொடுப்பதையும், மற்றவருடைய இரத்தத்தை ஒருவர் தன் உடலுக்குள் செலுத்துவதை யும் இவர்கள் முழுமையாகத் தடைசெய்துள்ளனர். இதனால், தாங்கள் சுயநினைவு அற்றுப்போகும் நிலைமை ஏற்படும்போது வைத்தியர்கள் மற்றவரது இரத்தத்தைத் தங்களுக்குக் கொடுத்து விடுவதைத் தடுப்ப தற்காக, “மற்றவரது இரத்தத்தைத் தங்களுக்குக் கொடுக்க வேண் டாம்” என்று எழுதிக் கையொப்பமிட்ட அட்டைகளைப் பெரும்பாலான யெகோவாவின் சாட்சிகள் எப்பொழுதும் தங்களுடன் வைத்திருப்பது வழக்கம்.[2]

மருத்துவரீதியாக ஒருவருடைய இரத்தத்தை மற்றவருக்கு கொடுக்கும் முறை புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எழுதப்பட்டு ஆயிரம் வருஷங்க ளின் பின்பே கண்டுபிடிக்கப்பட்டதினால் இது பற்றி வேதாகமத்தில் எவ்வித கட்டளைகளும் இல்லை. ஆனால் யெகோவாவின் சாட்சிகள்,

[1] D.A.Reeds, *How to Rescue Your Loved Ones from the Watchtower*, p. 20.
[2] D.A.Reed, *Jehovah's Witnesses AnsweredVerse by Verse*, pp. 12, 22.

“இரத்தத்தைப் புசிக்கக் கூடாது” (அப்.15:20, 15:29) என்னும் வேதாக மக் கட்டளையை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு போதிக்கின்றனர். ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்னும் தேவ கட்ட ளையை மீறி ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததினால் தேவன் அவர்களுக்கு கொடுத்திருந்த சகலத்தையும் அவர்கள் இழந்தனர் (ஆதி.3) என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், இன்று மரத்தின் கனிகளைப் புசிப்பதற்குத் தேவன் தடை விதிக்கவில்லை என்றாலும், இரத்தத்தைப் புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டுள்ளதாகக் கூறுவதோடு, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இரத்தத் தைப் புசித்தால் நாமும் ஆதாமையும் ஏவாளையும் போல சகலவற்றை யும் இழந்துவிடுவோம் என்றும் எச்சரிக்கின்றனர்.[3] ஏனெனில், “மரிக்கும் தருவாயில் இருக்கும் ஒருவனுக்கு மருத்துவரீதியாகக் கொடுக்கப்பட வேண்டிய இரத்தம் கொடுக்கப்படாததினால் அவன் மரணமடைந்தால், உயிர்த்தெழுதலில் அவன் பங்கடைவான்”[4] என்பது யெகோவாவின் சாட்சிகளின் நம்பிக்கையாக உள்ளது. இவர்களைப் பொறுத்தவரை, உயிராபத்தில் இருப்பவனுக்கு இரத்தம் கொடுப்பதன் மூலம் அவனு டைய சரீர வாழ்வை சிறிது காலத்திற்குப் பிழைக்க வைத்தாலும், அவன் தேவனுடனான நித்திய வாழ்வை இழந்து போகின்றான்.[5] லேவியராகமம் 7:26-27ல் “இரத்தத்தைப் புசிக்கிறவன் தன் ஜனங்க ளில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதை ஆதாரமாகக்கொண்டு இவர்கள் இவ்வாறு போதிக்கின்றனர்.[6]

மருத்துவ உதவிகள் மூலம் ஒருவர் உயிர் வாழக்கூடிய நிலைமை காணப்படும்போது, மருந்துகள் எடுப்பது பாவம் என்றும் விசுவாசக் குறைவு என்றும் போதித்து, அவர் மருத்துவரின் உதவியை நாடுவதைத் தடுப்பது அவரைக் கொலை செய்வதற்கு சமமான செயலாகும்.

இரத்தத்தைப் புசிப்பதை வேதாகமம் தடைசெய்துள்ளதை எவராலும் எவ்விதத்திலும் மறுக்க முடியாது. பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல

[3] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 75.
[4] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 75.
[5] Anonymous, *Blood, Medicine, and the Law of God*, p. 55.
[6] Anonymous, *Aid to Bible Understanding*, p. 244.

புதிய ஏற்பாட்டிலும் இத்தடை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.9:4, லேவி.7:26-27, 17:11-12, உபா.12:23, அப்.15:28-29).[7] எனினும், இவ்வசனங்கள் மிருகங்களின் இரத்தத்தை உணவாக உட்கொள்வதைத் தடை செய்துள்ளனவே தவிர, மருத்துவ ரீதியாக ஒருவர் தனது இரத்தத்தை மற்றவருக்குக் கொடுப்பதைப் பற்றி எதுவும் கூறவில்லை. எனவே, இரத்தத்தைப் புசிப்பதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆனால், "இரத்தத்தை உணவாகப் புசிப்பதும் மருத்துவ ரீதியாக இன்னுமொருவரது இரத்தத்தை உடலுக்குள் ஏற்றுவதும் ஒன்றே என்று யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்."[8] ஆனால், மருத்துவரீதியாக "ஒருவர் இன்னுமொருவருக்குத் தன் இரத்தத்தைக் கொடுக்கும்போது அவ்விரத்தம் எவ்விதத்திலும் உணவாகக் கருதப்படுவதில்லை."[9] எனவே, இரத்தம் புசிக்கக்கூடாது என்னும் கட்டளை, ஒருவர் தன் இரத்தத்தை இன்னுமொருவருக்குக் கொடுப்பதைத் தடை செய்யவில்லை. யெகோவாவின் சாட்சிகள் இக்கட்டளையில் சொல்லப்படாத விஷயத்தையே வலியுறுத்தி வருகின்றனர். மேலும், இரத்தம் புசிக்கக்கூடாது என்னும் கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் யெகோவாவின் சாட்சிகள், இதனோடு சேர்த்து சொல்லப்பட்டுள்ள கொழுப்பைப் புசிப்பதைத் தடை செய்யும் கட்டளையைக் கருத்திற் கொள்வதில்லை.[10] லேவியராகமம் 3:17ல் "கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது. இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்"

---

[7] ஆதியாகமம் 9:4ல், "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" என்றும், லேவியராகமம் 7:26-27ல், "உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது. எவ்வித இரத்தத்தையாகிலும் புசிக்கிற எவனும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்" என்றும், லேவியராகமம் 17:11-12ல், "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" என்றும், உபாகமம் 12:23ல்,"இரத்தத்தைமாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு. இரத்தமே உயிர். மாம்சத்தோடே உயிரையும் புசிக்க வேண்டாம்" என்றும் தேவன் கட்டளையிட்டுள்ளார்.

[8] D.A.Reed, *Jehovah's Witnesses Answered Verse by Verse*, p. 22.

[9] J.W.Sire, *Scripture Twisting: 20 Ways Cults Misread the Bible*, p. 86.

[10] Anonymous, *TheNew World*, p. 104.

என்று தேவன் கட்டளையிட்டுள்ளார்.[11] ஆனால், யெகோவாவின் சாட்சிகள் இரத்தத்தைப் பற்றிய கட்டளைக்குத் தவறான விளக்கம் கொடுத்துள்ளதோடு, கொழுப்பைப்பற்றிய அறிவுறுத்தலை முழுமையாக அலட்சியப்படுத்தியுள்ளனர்.[12]

உயிராகிய இரத்தத்தை உணவாக்குவதைத் தடைசெய்யும் கட்டளைக்கும், உயிருக்காகப் போராடும் ஒருவனுக்கு இரத்தம் கொடுக்கும் செயலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

ஆதியாகமம் 9:3-4ல், "நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக. பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்" என்று தேவன் கட்டளையிட்டுள்ளார்.[13] இதிலிருந்து, ஒரு ஜீவனின் உயிர் அதன் இரத்தத்தில் இருப்பதினாலேயே அதன் இரத்தத்தைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் கட்டளையிட்டுள்ளார் என்பதை அறிந்துகொள்கின்றோம். உபாகமம் 12:23ல், "இரத்தத்தை மாத்திரம்

---

[11] இரத்தம் புசிப்பதைப் புதிய எற்பாடு தடைசெய்துள்ள போதிலும், கொழுப்பைப் பற்றி புதிய ஏற்பாட்டில் எதுவும் சொல்லப்படாமலிருப்பது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் லேவியராகமம் 3:17ல் இரத்தத்தையும் கொழுப்பையும் பற்றி கொடுக்கப்பட்டுள்ள கட்டளை புதிய ஏற்பாட்டுக் காலத்துக்கும் உரிய கட்டளையாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புறஜாதியார் மிருகங்களின் இரத்தத்தை உணவாகப் புசித்ததினால், கிறிஸ்தவர்களாய் மாறிய புறஜாதியாருக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் என்னும் கட்டளை அப்போஸ்தலர் 15:28-29ல் கொடுக்கப்பட்டது. ஆனால் கொழுப்பைப் பற்றிய கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லாத போதிலும், பழைய ஏற்பாட்டில் உள்ள கட்டளையே புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குமான கட்டளையாகவே உள்ளது. பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட கட்டளைகள் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரமே மறுபடியுமாக புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளன. பொதுவாக பழைய ஏற்பாட்டுக் கட்டளைகள் அனைத்தும், குறிப்பாக இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிய பலிகள் பண்டிகைகள் மற்றும் ஆலயவழிபாட்டோடு சம்பந்தப்பட்டவைகளும், நாட்டுச் சட்டங்களாகக் கொடுக்கப்பட்ட சமூகக் கட்டளைகளும் தவிர்ந்த ஏனைய கட்டளைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டுக்கால மக்களுக்கும் உரியவைகளாகவே.

[12] D.A.Reed, *Answering Jehovaha's Witnesses Subject by Subject*, p. 49.

[13] தேவன் ஆரம்பத்தில் தாவரங்களையும் கனிகளையுமே மனிதனுக்கு உணவாகக் கொடுத்திருந்தார் (ஆதி.1:29-30). ஜலப்பிரளயத்திற்குப் பின்பே மாமிச உணவு நடைமுறைக்கு வந்தது.

புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு. இரத்தமே உயிர். மாம்சத்தோடே உயிரையும் புசிக்க வேண்டாம்" என்று இக்கட்டளை விளக்கப்பட்டுள்ளது. "ஆரம்ப காலத்தில் தேவனுக்குப் பலியிடுவதற்காக மாத்திரமே மிருகங்கள் கொல்லப்பட்டன. தேவனுக்குப் பலியிடப்பட்ட மிருகங்களின் இறைச்சியே மக்களின் உணவாகியதே தவிர உணவுக்காக மிருகங்களைக் கொல்லும் பழக்கம் அக்காலத்தில் இருக்கவில்லை. எனவே, தேவனுக்காக மிருகங்கள் பலியிடப்படும்போது, அவற்றின் உயிரைக் கொண்டுள்ள இரத்தம் தேவனுக்குரியதாகக் கருதப்பட்டு தேவனுடைய சந்நிதானத்தில் ஊற்றப்பட்டது."[14] அதாவது, தேவனுக்குரிய உயிரை மனிதன் உணவாக்கக் கூடாது என்பதற்காகவே இரத்தத்தைப் புசிப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. மேலும், இரத்தம் பாவநிவர்த்திக்காகத் தேவனால் கொடுக்கப்பட்டிருந்ததினாலும், இரத்தத்தைப் புசிப்பது தடைசெய்யப்பட்டிருந்ததை லேவியராகமம் 17:11-12 அறியத்தருகின்றது.[15] எனவே, "மிருகங்களின் இரத்தமானது தேவனுக்குரியதாகவும், தங்கள் பாவங்களுக்கான பிராயச்சித்தமாகவும் இருப்பதை மனிதர்கள் உணர்ந்தவர்களாக, அதை சாதாரண உணவுப் பொருளாகக் கருதாமல் உயர்வானதாக மதிக்கவேண்டும்."[16] ஆனால், உயிராகிய இரத்தத்தை உணவாக்குவதைத் தடைசெய்யும் கட்டளைக்கும், உயிருக்காகப் போராடும் ஒருவனுக்கு இரத்தம் கொடுக்கும் செயலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

உயிரைக் காப்பாற்றுவதற்காக இரத்தம் கொடுப்பதைத் தடைசெய்யும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் முழுமையான ஒரு வேதப்புரட்டாக இருப்பதோடு, அநியாயமாகப் பலர் மரிப்பதற்கும் காரணமாயிருந்துள்ளது.[17] உண்மையில் இவ்வுபதேசம், "அர்ப்பணிக்கப்பட்ட பல யெகோவாவின் சாட்சிகளைக் கொலை செய்துள்ளது."[18] உயிருக்காக

[14] D.E.Gowan, *From Eden to Bable: A Commentary on Book of Genesis*, p. 103.
[15] லேவியராகமம் 17:11-12ல், "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. இதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம். உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும், இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" என்கிறார் தேவன்.
[16] D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentaries*, p. 101.
[17] L.Chretien & M.Chretien, *Witnesses of Jehovah*, p. 14.
[18] D.A.Reed, *Answering Jehovah's Witnesses Subject by Subject*, p. 53.

போராடிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு இரத்தம் கொடுத்து அவனைக் காப்பாற்றக் கூடியதாயிருக்கும்போது, இரத்தம் கொடுப்பதைத் தடுத்து அவனைச் சாகவிடுவது உண்மையிலேயே கொலைக்குச் சமமான ஒரு குற்றமாகவே உள்ளது. மேலும், உயிராபத்தில் இருப்பவனுக்கு உதவி செய்வதைத் தடுக்கும் யெகோவாவின் சாட்சிகளின் இவ்வுப தேசம், கிறிஸ்தவ அன்புக்கு எதிரான போதனையாகவும் உள்ளது.

## (2). நோய்கள் வராமலிருப்பதற்கு தடுப்பூசிகள் போடுவதைத் தடுத்தல்

யெகோவாவின் சாட்சிகள் மருத்துவ விடயங்களில் மனிதத் தன்மை அற்றவர்களாகவே நடந்து கொண்டுள்ளனர். ஏனெனில், நோய்கள் வராமலிருப்பதற்காகப் பிள்ளைகளுக்குத் தடுப்பூசிகள் போடுவது, தேவன் நோவாவுடன் செய்துகொண்ட நித்திய உடன்படிக்கைக்கு எதிரானது என்று ஆரம்ப காலத்தில் இவர்கள் போதித்து வந்தனர்.[19] ஆனால், இவ்வுபதேசம் 20 வருடங்களுக்கு மாத்திரமே இவர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. ஏனெனில், 1950ம் ஆண்டுக்குப் பின்னர், பிள்ளைகளுக்குத் தடுப்பூசி போடுவதை இவர்கள் தடைசெய்ய வில்லை.[20] 1965ல், தடுப்பூசி போடுவது நோய்களைக் குறைத்துள்ளது என்பதை யெகோவாவின் சாட்சிகள் கண்டுகொண்டனர்.[21] எனினும், இருபது வருஷங்களாகத் தடுப்பூசி போடுவதைத் தடைசெய்திருந்த யெகோவாவின் சாட்சிகளின் தவறான போதனையினால் அநியாயமாகப் பலர் பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அநேக பிள்ளைகள் மரித்துள்ளனர்.[22]

வேதாகமப் போதனையின்படி, நோய்கள் வராமலிருப்பதற்குத் தடுப்பூசிகள் போடுவது எவ்விதத்திலும் ஒரு தவறான செயல் அல்ல. ஏனெனில், நோய்கள் பரவுவதைத் தடைசெய்யும் விதத்தில் பல கட்டளைகளைத் தேவன் வேதாகமத்தில் கொடுத்துள்ளார். உண்மையில், பழைய ஏற்பாட்டிலுள்ள உணவுச் சட்டமும் (லேவி.11, உபா.14),

[19] *The Golden Age*. 4 February 1931, p. 293.
[20] D.A.Reed, *How to Rescue Your Loved One from the WatchTower*, p. 104.
[21] *Awake*. 22 August 1965, p. 20.
[22] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 381.

லேவியராகமத்திலுள்ள சுத்திகரிப்பு முறைகளும், மருத்துவத்துறை அதிகமாக வளர்ச்சியடையாத காலத்தில் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காகத் தேவன் கொடுத்த அறிவுறுத்தல்களாய் உள்ளன (லேவி.11-16). இதனால்தான், பழைய ஏற்பாட்டில் புசிக்கக் கூடாதவை என்று தேவனால் அறிவிக்கப்பட்டுள்ள மிருகங்கள் பறவைகள் மீனினங் களின் மாம்சத்தில் மனிதருக்கு நோய்களை ஏற்படுத்தக்கூடிய கிருமி கள் அதிகமாக இருப்பதைத் தற்காலத்தில் மருத்துவர்கள் கண்டுபிடித் துள்ளனர்.[23] எகிப்தியருக்கு வந்த எந்தவொரு வியாதியும் இஸ்ரவேல் மக்களுக்கு வராது என்று வாக்களித்த தேவன் (யாத்.15:26), அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்காக அதிக நோய்க் கிருமிகள் உள்ள மிருகங்கள் பறவைகள் மீனினங்களைப் புசிப்பதற்குத் தடைவிதித்திருந் தார்.[24] எனினும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இத்தடை நீக்கப்பட்டத னால் (மாற்.7:19, 1தீமோ.4:3-4, அப்.10:9-17),[25] பழைய ஏற்பாட்டு உணவுச் சட்டம் நோய்த் தடுப்புக்கானதல்ல என்று சிலர் கருதுகின்ற னர்.[26] ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மருத்துவத் துறையின் வளர்ச்சியும், சமையல் முறைகளின் முன்னேற்றமும் மிருகங்கள் பற வைகளின் இறைச்சியிலுள்ள நோய்க்கிருமிகளை அதிகளவில் அழிக் கக் கூடியதாயிருந்தது.[27] மேலும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்கள்

---

[23] D.I.Macht, "An Experimental Pharmacological Appreciation of Leviticus 11 and Deuteronomy 14" pp. 444-450.

[24] W.F.Albright, *Yahweh and the God's of Canaan*, pp. 177-178, R.L.Harris, *Leviticus: The Expositor's Bible Commentary Volume 2*, p. 569; R.K.Harrison, *Leviticus: Tyndale Old Testament Commentary*, pp. 124-126.

[25] மாற்கு 7:19ல், "இப்படி சொல்லி சகல உணவும் சுத்தமென்று தீர்த்தார்" என்னும் வாக்கியம் நம்முடைய தமிழ் வேதாகமத்தில் இடம்பெறவில்லை. புதிய மொழிபெயர்ப்புகளில் இவ்வாக்கியம் உள்ளது. 1தீமோத்தேயு 4:4-5ல் "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" என்று பவுல் குறிப்பிட் டுள்ளார். அப்போஸ்தலர் 10:9-17ல் பேதுருவுக்கு கொடுக்கப்பட்ட தரிசனத்தில் சகல உயிரினங்களும் புசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

[26] M.F.Rooker, *Leviticus: The New American Commentary*, p. 172.

[27] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதர் பொதுவாக மாம்சத்தை நெருப்பில் சுட்டு அல்லது அவித்தே சாப்பிட்டனர் (J.A.Thompson, *Handbook of Life in Bible Times*, p. 158; R.Gower, *Manners and Customs of Bible Times*, p. 52). நம் தமிழ் வேதாகமத்தில் உபாகமம் 16:7, 1சாமுவேல் 2:15 போன்ற வசனங்களில் "பொரித்த இறைச்சி" என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் மூலமொழியின்படி இது "நெருப்பில் சுட்ட இறைச்சி" ஆகும். 1சாமுவேல் 2:15ன்படி அக்காலத்தில் மக்கள் இறைச்சியை நெருப்பில் சுட்டு அல்லது அவித்தே சாப்பிட்டுள்ளனர் (F.H.Wight, *Manners & Customs of Bible Lands*, p. 51).

உணவுச் சட்டத்தைத் தங்களுடைய இனத்தின் மேன்மையைக் குறிக்கும் அடையாளமாக்கி, இச்சட்டத்தைக் கைக்கொள்ளாத புறஜாதி மக்களை அசுத்தமானவர்களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் கருதியதினால் புதிய ஏற்பாட்டில் உணவுச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டது உண்மை என்றாலும், ஆரம்பத்தில் தேவன் இச்சட்டத்தைக் கொடுக்கும்போது மக்களின் சரீர ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டவராகவே, எவைகளைப் புசிக்கலாம் எவைகளைப் புசிக்கக்கூடாது என்பதை அறிவித்திருந்தார்.

நோய்கள் பரவுவதைத் தடுக்கும் செயல்முறைகள் லேவியராகமப் புத்தகத்தில் தேவன் மனிதருக்குக் கற்றுக்கொடுத்த சுகாதாரப் பாடங்களாய் உள்ளன.

பழைய ஏற்பாட்டின் உணவுச் சட்டம் மாத்திரமல்ல, லேவியராகமத்தில் உள்ள சுத்திகரிப்பு சம்பந்தமான கட்டளைகள் அனைத்தும், மனிதனுடைய சரீர ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு கொடுக்கப்பட்ட சுகாதாரக் கட்டளைகளாகவே உள்ளன. இதனால்தான், பிள்ளைப்பேற்றின் பின்பான தாயின் சுத்திகரிப்பு முறைகளும் (லேவி.12), சரீரத்தில் ஏற்படும் வியாதிகளின் போது மனிதர் நடந்துகொள்ளவேண்டிய முறைகளும் (லேவி.13:1-46),[28] ஆடைகளிலும் வீடுகளிலும் பூஞ்சனங்கள் ஏற்படும்போது செய்யவேண்டியவைகள் பற்றிய விளக்கங்களும் (லேவி.13:47-59, 14:33-53),[29] மனித சரீரத்திலிருந்து வெளியேறுபவைகளைக் கழுவிச் சுத்திகரிக்கும் முறைகளும் (லேவி.15) லேவியராகமப்

[28] இவ்வசனங்களில் குஷ்டம் என்று தமிழில் குறிப்பிடப்பட்டுள்ள சொல் கி.மு.2ம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலும், பழைய ஆங்கில வேதாகமங்களிலும் குஷ்டம் என்று உள்ளது. ஆனால், மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள *saraat* என்னும் எபிரேயச் சொல் தற்காலத்தில் குஷ்டம் என்று அழைக்கப்படும் நோயை அல்ல, சரீரத்தில் ஏற்படும் பல்வேறுவிதமான தோல்வியாதிகளையும் புண்களையும் கொப்புளங்களையும் வெடிப்புகளையும் குறிப்பிடும் சொல்லாகும். எனவே, இது குஷ்டரோகத்தை மாத்திரமல்ல, இன்னுமொருவருக்குத் தொற்றக்கூடிய சகலவிதமான தோல்வியாதிகளையும் குறிக்கின்றது (J.F.A.Sawyer, "A Note on the Etymoligy of Saraat" pp. 242-243; K.P.C.A.Gramberg, "Leprosy and the Bible" pp. 22. J.Wilkinson, "Leprosy and Leviticus: The Problem of Description and Identification, p. 153).

[29] ஆடைகளிலும் வீடுகளிலும் ஏற்படும் பூஞ்சனங்களும் குஷ்டம் என்றே பழைய வேதாகம மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

புத்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன (லேவி.12-15).[30] தற்காலத்தில் மருத்துவத்துறை வளர்ச்சியடைந்திருப்பதனால், இத்தகைய சுத்திகரிப்புகளை நாம் வித்தியாசமான முறைகளில் செய்கின்றோம். எனவே, வியாதிகள் வருவதைத் தடுக்கும் வழிமுறைகளைக் கையாள்வது தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்துள்ள சுகாதாரப் பாடங்களாய் இருப்பதனால், தற்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் தடுப்புசிகள் போடுவது எவ்விதத்திலும் தவறான ஒரு செயல் அல்ல.

மருத்துவ விடயங்களில் முன்னுக்குப் பின் முரணான விதத்தில் போதித்து அநேகருடைய உயிரோடு விளையாடியுள்ள யெகோவாவின் சாட்சிகள், தங்களின் வேதப்புரட்டு உபதேசங்களினால் மனிதரின் ஆவிக்குரிய வாழ்வை அபாயகரமான நிலையில் வைத்துள்ளனர்.

யெகோவாவின் சாட்சிகள் அறுவை சிகிச்சை மூலம் அவயவங்களை மாற்றுவதையும் ஆரம்ப காலத்தில் தடை செய்திருந்தனர்.[31] அக்காலத்தில் "ஒருவருடைய அவயவத்தை இன்னுமொருவருக்கு பொருத்துவது நரமாமிசம் உண்பது" என்பதே இவர்களுடைய போதனையாக இருந்தது.[32] 13 வருஷங்களாக, அதாவது 1967 முதல் 1980 வரை, யெகோவாவின் சாட்சிகள் இவ்வாறு போதித்ததினால் அறுவை சிகிச்சை செய்யாமல் பலர் அதிக வியாதிகளுடனும் வேதனையுடனும் வாழ்ந்துள்ளனர். அநேகர் மரணமடைந்துள்ளனர்.[33] ஆனால், 1980ம் ஆண்டிற்குப் பின்னர், மற்றவரின் அவயவத்தைப் பொருத்தும் அறுவை சிகிச்சை தவறல்ல என்று கூறத்தொடங்கினார்கள்.[34] அவயவங்கள் மாற்றும் அறுவை சிகிச்சை அநேகருக்குப் பெரும் உதவியாயுள்ளது

---

[30] இவ்வதிகாரத்தில் பிரமியம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் சரீரத்திலிருந்து வெளியேறும் கசிவுகளைக் குறிக்கின்றது.

[31] *The Watchtower*. 15 November 1967, pp. 702-704.

[32] *Awake*. 8 June 1968, p. 21.

[33] R.Rhodes, *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*, p. 381; D.A.Reed, *Answering Jehovah's Witnesses*, p. 51.

[34] *The Watchtower*. 15 March 1980, 31.

என்று தற்பொழுது கூறுகின்றனர்.[35] யெகோவாவின் சாட்சிகள் இவ்வாறு காலத்துக்குக் காலம் மருத்துவ சம்பந்தமான விஷயங்களில் முன்னுக்குப் பின் முரணான விதத்தில் போதித்து அநேகருடைய உயிரோடு விளையாடியுள்ளனர். உண்மையில், 13 வருஷங்களாக மனிதர்களின் உயிருடன் விளையாடிய யெகோவாவின் சாட்சிகள், இன்றுவரைத் தங்களின் வேதப்புரட்டு உபதேசங்களினால் மனிதரின் ஆவிக்குரிய வாழ்வை அபாயகரமான நிலையில் வைத்துள்ளனர்.

## (3). மருந்துகள் மூலமும் தேவன் மனிதருக்கு சுகம் கொடுக்கின்றார்

யெகோவாவின் சாட்சிகள் மாத்திரமல்ல, தற்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் மருத்துவ விடயங்களில் தவறான கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர். இதனால் இவர்கள் மருந்துகள் உபயோகிப்பதையும், மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதையும் பாவமாகக் கருதுகின்றனர். தேவன் நம்முடைய பரம வைத்தியராக இருப்பதனால், மருந்துகள் உபயோகிப்பதை விசுவாசக் குறைவாகவே பல கிறிஸ்தவர்கள் பார்க்கின்றனர். ஆனால், தேவன் நமக்கு சுகத்தைக் கொடுப்பதும் நாம் மருந்துகள் எடுப்பதும் ஒன்றுக்கொன்று முரணான செயல்கள் அல்ல. ஏனெனில், சில நேரங்களில் நேரடியாக நமக்கு சுகத்தைக் கொடுக்கும் தேவன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருந்துகள் மூலமாகவே நமக்கு சுகத்தைக் கொடுக்கின்றார். இதனால்தான், மரிக்கும் நிலையில் இருந்த எசேக்கியாவுக்கு 15 வருஷங்களைக் கூட்டிக் கொடுத்த தேவன், அவனுடைய சரீரத்திலிருந்த வியாதி[36] சுகமடைவதற்கு அக்காலத்தில் மருந்தாக உபயோகிக்கப்பட்ட "அத்திப்பழ அடையை" உபயோகிக்கும்படி அறிவுறுத்தினார் (2ராஜா.20:1-7).[37]

---

[35] *Awake*. 22 August 1989, p. 6.

[36] 2ராஜாக்கள் 20:7ல் "பிளவை" என்று குறிப்பிடப்பட்டுள்ள வியாதி யாத்திராகமம் 9:9-11ல் "எரிபந்தமான கொப்புளங்கள்" என்றும், லேவியராகமம் 13:18-21ல் "புண்" என்றும், யோபு 2:7ல் "கொடிய பருக்கள்" என்றும் வித்தியாசமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (L.M.W.Beal, *1 & 2 Kings: Apollos Old Testament Commen -tary*, p. 481).

[37] 2ராஜாக்கள் 20:1-7ல், "அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீ உமது வீட்டுக்காரியத்தை

தேவன் நமக்கு சுகத்தைக் கொடுப்பதும் நாம் மருந்துகள் எடுப்பதும் ஒன்றுக்கொன்று முரணான செயல்கள் அல்ல. ஏனெனில், சில நேரங்களில் நேரடியாக நமக்கு சுகத்தைக் கொடுக்கும் தேவன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருந்துகள் மூலமாகவே நமக்கு சுகத்தைக் கொடுக்கின்றார்.

அதாவது, எசேக்கியா சுகமடைவான் என்னும் தேவசெய்தியை அறிவித்த ஏசாயா, "அத்திப்பழத்து அடையைக் கொண்டுவாருங்கள் என்றான். அதை அவர்கள் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போட்ட போது அவன் பிழைத்தான்" (2ராஜா.20:7) என்று வேதாகமம் கூறுகிறது (ஏசா.38:21).[38] "அத்திப்பழ அடை" அக்காலத்தில் ஒரு மருந்தாக இருந்தது.[39] உண்மையில், இது மிகப் பழங்கால மருந்தாகும்.[40] எனவே, தேவனே எசேக்கியாவுக்கு சுகத்தைக் கொடுத்தபோதிலும் (2ராஜா. 20:5), அவர் இதை மருந்தின் மூலமே கொடுத்துள்ளார் (2ராஜா.20:7).[41]

---

ஒழுங்குபடுத்தும். நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என் பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்.ஏசாயா பாதி முற்றத்தைவிட்டு அப்புறம் போகிறதற்கு முன்னே, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர் சொன்னது: நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன். மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன். உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என்நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின்நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார். பின்பு ஏசாயா: அத்திப்பழத்து அடையைக் கொண்டுவாருங்கள் என்றான். அதை அவர்கள் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போட்ட போது அவன் பிழைத்தான்" என்று எழுதப்பட்டுள்ளது.

[38] ஏசாயா 38:21ல், "அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போடுங்கள். அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[39] G.A.Buttrick, ed., *Interpreter's Dictionary of the Bible, Volume 3*, pp. 331-334.

[40] Pliny, *Natural History*, 22.7.

[41] T.R.Hobbs, *2Kings: Word Biblical Commentary Volume 13*, p. 292.

ஏனெனில், தேவன் மருந்துகளின் மூலமும் தம்மை விசுவாசிப்பவர்க ளுக்கு சுகம் கொடுக்கிறவராய் இருக்கின்றார்.[42] வேதாகம காலத்தில் அத்திப்பழ அடை மாத்திரமல்ல, யோர்தான் நதிக்குக் கிழக்கே இருக்கும் கீலேயாத் மலையில் வளரும் மரங்களிலிருந்து தயாரிக்கப்ப டும் தைலமும் மிகவும் பிரபலமான மருந்தாக இருந்தது (எரே.8:22).[43]

"பழைய ஏற்பாட்டில் தேவனே மக்களை சுகப்படுத்துகிறவராக இருந்தா லும், அவர் அருளும் சுகம் மருந்துகளின் உபயோகத்தையும் உள்ளடக் கியதாயிருந்தது."[44] இதனால்தான், எசேக்கியாவுக்கு சுகம் கொடுப்ப தற்கு அத்திப்பழ அடையை உபயோகிக்கும்படி அறிவுறுத்திய தேவன், இருவருக்கு இடையில் ஏற்படும் சண்டையில் ஒருவனுக்கு காயம் ஏற்பட்டால், காயப்பட்டவனுக்கு நஷ்ட ஈட்டையும் காயத்தை மருத்துவ ரீதியாகக் குணப்படுத்துவதற்கான செலவையும் காயத்தை ஏற்படுத்திய வன் கொடுக்கவேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார் (யாத். 21:18-19).[45] இக்கட்டளையில், "அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கட வன்" என்னும் சொற்பிரயோகம், அவனை சுகப்படுத்துவதற்கான காரி யங்களை செய்யும்படியான அறிவுறுத்தலாகவே உள்ளது. அதாவது, அவனுக்கு ஏற்படும் மருத்துவ செலவைக் கொடுக்கும்படியான கட்ட ளையாகவே உள்ளது.[46] அக்காலத்தில் காயங்களுக்கு மருந்துகள் போட்டு சுகப்படுத்தும் முறை இருந்ததினால், காயப்பட்டவனை நான் சுகப்படுத்துவேன் என்று தேவன் கூறாமல், காயத்தை ஏற்படுத்தியவனி டம், "அவனைக் குணப்படுத்தும்படி" கட்டளையிட்டுள்ளார். மேலும்,

---

[42] R.D.Patterson, *1,2 Kings: The Expositor's Bible Commentary Volume 4*, p. 273.
[43] F.B.Huey, *Jeremiah: The New American Commentary*, p. 117; R.K.Harrison, *Jeremiah: Tyndale Old Testament Commentary*, p. 90; R.K.Harrison, *Healing Herbs of the Bible*, pp. 17-18; W.Walker, *All the Plants of the Bible*, p. 28.
[44] M.E.Marty & K.L.Vaux, ed., *Health/Medicine and the Faith Traditions: An Inquiry into Religion and Medicine*, p. 68
[45] யாத்திராகமம் 21:18-19ல் "மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலாவது கையால் அடித்ததினாலாவது அவன் சாவாமல் கட்டில் கிடையாய்க் கிடந்து, திரும்ப எழுந்திருந்து வெளியிலே தன் ஊன்றுகோ லைப் பிடித்துக்கொண்டு நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப் பான். ஆனாலும் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாய்க் குணமாக்குவிக்கக்கடவன்" என்னும் கட்டளை உள்ளது.
[46] W.MacDonald, *Believer's Bible Commentary*, p 111; J.D.Hannah, *Exodus: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 141; J.H.Walton, V.H.Matthew & M.W.Chavalas, *The IVP Bible Background Commentary – OT*, p. 99.

தேவனே இவ்வாறு கூறுவதனால், அவர் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த மருத்துவ சிகிச்சைகளை அங்கீகரித்தவராகவே அதன்மூலம் காயத்தைச் சுகப்படுத்தும்படி அறிவுறுத்தியுள்ளார்.[47] இதைப்போலவே, ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் இஸ்ரவேல் மக்களோடு பேசும்போதும், அவர்களுடைய காயம் "சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" என்று தெரிவித்துள் ளார் (ஏசா.1:6). இது இஸ்ரவேலைப்பற்றிய விவரணமாய் இருந்தாலும், இதுவே அக்காலத்தில் காயங்கள் ஆற்றப்படும் முறையாக இருந்தது. தேவன் இதை எதிர்ப்பவராக அல்ல, இவ்விதமாகவே காயம் ஆற்றப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்துபவராகப் பேசியுள்ளார்.[48] அதாவது, இஸ்ரவேல் எவ்வித மருத்துவ சிகிச்சையும் இல்லாமல் கொடிய புண்களுடன் இருப்பதாகத் தேவன் தெரிவித்துள்ளார்.[49] எனவே, மனிதர் மருந்துகள் உபயோகிப்பதற்கும் மருத்துவ சிகிச்சைகள் செய்வதற்கும் தேவன் எதிரானவர் என்று கூறமுடியாது.

தேவன் மருந்துகள் மூலமும் சுகம் கொடுக்கிறவராய் இருப்பதனால்தான், தீர்க்கதரிசிகள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது, அக்கால மருத்துவ சிகிச்சை முறைகளையும் செய்துள்ளனர்.

தேவன் மருந்துகள் மூலமும் சுகம் கொடுக்கிறவராய் இருப்பதனால் தான், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது அக்கால மருத்துவ சிகிச்சை முறைகளையும் செய் துள்ளதை வேதாகமம் அறியத்தருகின்றது. உதாரணத்திற்கு, மரித்துப் போன பிள்ளையை உயிர்ப்பித்த எலிசா, ஆரம்பத்தில் தன்னிடத்தில் இருக்கும் தேவ வல்லமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில், தன்னுடைய கோலை அப்பிள்ளையின்மீது வைத்தார்.[50] ஆனால் இதில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை (2ராஜா.4:29-32).[51] இதனால் அவர்

[47] M.L.Brown, *Israel's Divine Healer*, p. 46. [48] *Ibid.*, p. 44.

[49] G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 104.

[50] D.J.Wiseman, *1 and 2 Kings: Tyndale Old Testament Commentary*, p. 205. யாத்திராகமம் 4:1-4, 17:5-6ல் மோசேயும் இவ்விதமாகக் கோலை உபயோகித்தார்.

[51] 2ராஜாக்கள் 4:29-32ல், "அப்பொழுது அவன் கேயாசியைப் பார்த்து: நீ உன் இடையைக் கட்டிக்கொண்டு, என் தடியை உன் கையில் பிடித்துக்கொண்டு,

“கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக் கிட்டப்போய் அவன்மேல் குப்புறப்படுத் தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான் (2ராஜா.4:32-35). இச்சம்பவத்தில், மரித்துப்போன பிள்ளை யின்மீது எலிசா படுத்துக்கொண்டு செய்தவைகள், அக்காலத்தில் இருதயம் நின்றுபோனவர்களுக்கு அதை மறுபடியும் இயங்க வைப்பதற் காகச் செய்யும் மருத்துவ சிகிச்சை முறையாகும்.[52] பிள்ளை உயிர்பெறு வதற்காக எலிசா ஜெபித்தபோதிலும், அவர் ஜெபத்தோடு அக்கால மருத்துவ சிகிச்சையையும் செய்துள்ளார். இதனால்தான், “எலிசா அவன்மேல் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்” என்று வேதாகமம் கூறுகிறது. (2ராஜா.4:35). இதைப்போலவே எலியா தீர்க்கதரிசியும் ஒரு பிள்ளையை உயிர்ப்பித்தார் (1ராஜா.17:17-24). எலியா பிள்ளையின் உயிர் அவனுக் குள் திரும்பிவரும்படி ஜெபித்தது உண்மை என்றாலும், அவர் “அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்த” செயல்முறை அக்கால மருத்துவ சிகிச்சையாகவே உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலும் இத்தகைய சிகிச்சையின் மூலம் ஒருவனை சுகப்படுத்தியுள்ளார். இதனால்தான், அவர் “செத்தவன்மீது விழுந்து அவனை அணைத்துக் கொண்டு, அவன் உயிருடனிருப்பதாகத் தெரிவித்தார்” (அப்.20:9-

---

வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும், உன்னை ஒருவன் வினவினாலும் அவனுக்கு மறுமொழி சொல்லாமலும்போய், என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின்மேல் வை என்றான். பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள். அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான். கேயாசி அவர்களுக்கு முன்னேபோய், அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான். ஆனாலும் சத்தமும் இல்லை, உணர்ச் சியும் இல்லை. ஆகையால் அவன் திரும்பி அவனுக்கு எதிர்கொண்டுவந்து: பிள்ளை விழிக்கவில்லை என்று அவனுக்கு அறிவித்தான். எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[52] N.Kiuchi, “Elijah’s Self-Offering: 1Kings 17:21" pp. 74-79; P.Safar, e.d., *Advances in Cardiopulmonary Resuscitation*, pg 263-265; https://infouci.org/2012/12/08/history-of-the-cpr-part-one/

10).[53] எனவே, ஜெபமும் மருத்துவ சிகிச்சையும் இணைந்து செயல்படுவதும் தேவன் மனிதர்களைச் சுகப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்றாக இருப்பதை வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவங்கள் அறியத் தருகின்றன.

ஜெபமும் மருத்துவ சிகிச்சையும் இணைந்து செயல்படுவதும் தேவன் மனிதர்களைச் சுகப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்றாக இருப்பதை வேதாகமம் அறியத்தருகின்றது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக" என்று அறிவுறுத்தும் வேதாகமம், "அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்" என்று கூறுகிறது (யாக்.5:14). இவ்வசனத்தில் "எண்ணெய் பூசும் செயல்முறை" மருத்துவ ரீதியான சிகிச்சையாகவே உள்ளது. ஏனெனில், அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட ஒலிவ எண்ணெய் பலதரப்பட்ட வியாதிகளுக்கான மருந்தாக இருந்தது. இதனால்தான், நல்ல சமாரியனைப் பற்றிய உவமையில், காயப்பட்டுக் கிடந்தவனுடைய காயங்களில் எண்ணெய் வார்க்கப்பட்டது (லூக்.10:34).[54] இதைப்போலவே, ஏசாயா 1:6ல் "காயங்கள் எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" என்னும் குறிப்பும், அக்காலத்தில் எண்ணெயே காயங்களுக்கான மருந்தாக இருந்துள்ளதை அறியத்தருகின்றது. மேலும், ஏரோது என்னும் அரசன் வியாதியாய் இருந்தபோது, அவனுக்கு சுகம் கிடைப்பதற்காக அவனை எண்ணெயில் குளிப்பாட்டியதாக யூதவரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் குறிப்பிட்டுள்ளார்.[55] அக்கால மருத்துவர்கள், பல் வலியிலிருந்து திமிர்வா

[53] அப்போஸ்தலர் 20:9-10ல், "அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[54] J.R.Edwards, *Luke: The Pillar New Testament Commentary*, pp. 322-323.

[55] W.Whiston, tr., *The Works of Josephus: Antiquities of Jews 17:172*. p. 462.

தம் வரை சகல வியாதிகளுக்கும் எண்ணெயை சிறந்த மருந்தாகக் கருதினார்கள்.[57] எனவே, எண்ணெய்பூசி ஜெபிக்கும்படியான கட்டளை மருந்துடனான ஜெபமாகவே உள்ளது.[58] சில ஆராய்ச்சியாளர்கள் "எண்ணெய் பூசுவதை" எண்ணெயினால் அபிஷேகிக்கப்படுவதாகக் கருதுகின்றனர். ஆனால், அபிஷேகிக்கப்படுவதற்கு வழக்கமாக உப யோகிக்கப்படும் "கிரீயோ" (*chrio*) என்னும் கிரேக்கச் சொல்லை யாக்கோபு இவ்வசனத்தில் உபயோகிக்கவில்லை. அவர் குறிப்பிட்டுள்ள "அலெய்.்.போ" (*aleipho*) என்னும் கிரேக்கச் சொல், தமிழ் வேதாகமத் தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமாகப் "பூசுதல்" என்னும் அர்த்தமு டையது. எனவே, எண்ணெயை மருந்தாகப் பூசுவதைப்பற்றியே யாக் கோபு இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.[59] இதனால், கிறிஸ்தவர்களா கிய நாம் மருந்துகள் உபயோகிப்பது தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயல்முறையாகவே உள்ளது.

எண்ணெய் பூசி ஜெபிக்கும்படியான கட்டளையைத் தொடர்ந்து, "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" (யாக்.5:15) என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால், மருந்தாகப் பூசப்படும் எண்ணெய் அல்ல, விசுவாசமுள்ள ஜெபமே வியாதியஸ்தனைக் குணப்படுத்தும் என்றும், இதனால் எண்ணெயின் மருத்துவ உபயோகத்தைப்பற்றி இவ்வசனம் எதுவும் கூறவில்லை என்றும் சிலர் கருதுகின்றனர்.[60] இவ்வசனத்தின்படி, விசுவாசமுள்ள ஜெபமே வியாதியஸ்தருக்கு சுகத்தைக் கொடுக்கிறது என்பது உண்மை என்றாலும், இச்ஜெபம் எண்ணெய் பூசி ஏறெடுக்கப்படும் ஜெபமாகவே உள்ளது. நாம் ஏற்க னவே பார்த்தபடி, எண்ணெய் அக்காலத்தில் மருந்தாக உபயோகிக்கப் பட்டதனால், இது மருந்தையும் உபயோகித்து விசுவாசத்துடன் ஏறெடுக் கப்படும் ஜெபமாகவே உள்ளது. உண்மையில், நமக்கு சுகம் கொடுப் பது தேவனே. நாம் மருந்துகளை உபயோகித்தாலும், தேவனாலேயே நமக்கு சுகத்தைக் கொடுக்கமுடியும் என்னும் விசுவாசம் நமக்கிராவிட்

---

56 D.J.Moo, *James: Tyndale New Testament Commentary*, p. 177; Pliny, *Natural History*, 23.39-40.

57 J.Wilkinson, *Health and Healing: Studies in the New Testament Principles and Practices,* p. 153; J.Wilkinson, "Healing in the Epistle of James" pp. 326-345.

58 D.W.Burdick, *James: The Expositor's Bible Commentary Volume 12*, p. 204.

59 D.J.Moo, *James: The Pillar New Testament Commentary*, pp. 238-242; G.M.Stulac, *James: The IVP New Testament Commentary*, p. 188.

டால் நம்முடைய மருந்தும் ஜெபமும் பலனளிக்காது. ஏனெனில், நாம் உபயோகிக்கும் மருந்துகள் மூலம் நமக்கு சுகத்தைக் கொடுப்பது தேவனே. இதனால்தான், மருந்துகள் தயாரிக்கக்கூடிய பலதரப்பட்ட கனிப்பொருட்களையும் தாவரங்களையும் தேவன் சிருஷ்டித்துள்ளார்.

வேதாகம காலத்தில் திராட்சை ரசமும் மருந்தாக உபயோகிக்கப்பட்டது. இதனால்தான், நல்ல சமாரியன் உவமையில் எண்ணெயுடன் சேர்த்து திராட்சை ரசமும் கள்ளர்களினால் தாக்கப்பட்டவனுடைய காயங்களுக்கு வார்க்கப்பட்டது (லூக்.10:34).[60] திராட்சை ரசத்துக்கு கிருமிகளை அழிக்கக்கூடிய ஆற்றல் இருப்பதனால், காயங்கள் ஏற்படும்போது அது புண்ணாக மாறாமல் இருப்பதற்காக காயத்தைக் கழுவுவதற்கு அக்காலத்தில் திராட்சை ரசம் உபயோகிக்கப்பட்டது.[61] மேலும், அக்காலத்தில் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கும் திராட்சை ரசமே உபயோகிக்கப்பட்டது. இதனால்தான், சுத்தமற்ற தண்ணீரைக் குடித்து அடிக்கடி வியாதிப்பட்ட தீமோத்தேயுவுக்குத் "தண்ணீர் மாத்திரம் குடிக்காமல் அதனோடு கொஞ்சம் திராட்சைரசமும் சேர்த்துக் கொள்ளும்படி" பவுல் அறிவுறுத்தியுள்ளார் (1தீமோ.5:23).[62] சில கிறிஸ்தவர்கள் மது அருந்துவதற்கு வேதாகமம் அனுமதி கொடுத்துள்ளது என்னும் தங்களது தவறான கருத்துக்கு ஆதாரமாகத் தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறிய அறிவுறுத்தலை உபயோகிக்கின்ற போதிலும், இது மதுவருந்துவதற்கான அனுமதி அல்ல.[63] திராட்சைரசத்தை முழுமையாகத் தவிர்த்து வந்த தீமோத்தேயு, வழமையாகத் தண்ணீர் அருந்தும்போது அதற்கு சேர்க்கப்படும் சிறிதளவு திராட்சை ரசத்தையும் தவிர்த்து வந்ததினால், அடிக்கடி வியாதிப்பட்டான்.[64] இதனால் தான், "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம்

---

[60] D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 1033.
[61] L.Morris, *Luke: Tyndale New Testament Commentary*, p. 207; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1299.
[62] தீமோத்தேயு நசரேய விரதம் (எண்.6:1-4) இருந்திருக்கலாம் என்று வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.W.Knight III, *The Pastoral Epistles: The New International Greek Testament Commentary*, p. 240).
[63] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2098. கிறிஸ்தவர்கள மது அருந்துவதை வேதாகமம் முழுமையாகத் தடைசெய்துள்ளது என்பதை என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன.
[64] A.D.Litfin, *1Timothy: The Bible Knowledge Commentary – NT*, p. 745.

திராட்சை ரசமும் கூட்டிக்கொள்" என்று பவுல் அறிவுறுத்தியுள்ளார் (1தீமோ.5:23). தற்காலத்தில் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கு குளோரின் உபயோகிக்கப்படுவது போல, அக்காலத்தில் திராட்சைரசம் உபயோகிக்கப்பட்டது. எனவே, திராட்சை ரசத்தைத் தண்ணீரை சுத்திகரிக்கும் மருந்தாக உபயோகிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தியதினால், தற்காலத்திலும் சரீரப்பிரகாரமான பலவீனங்களுக்கும் வியாதிகளுக்கும் நாம் மருந்துகளை உபயோகிப்பதில் எவ்வித தவறும் இல்லை. ஏனெனில், "ஜெபத்தின் மூலம் தீமோத்தேயுவின் வியாதியை சுகப்படுத்தாமல், மருந்தை உபயோகிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்."[65]

கிறிஸ்தவர்களாகிய நாம் மருந்துகள் எடுப்பதற்கும், மருத்துவரின் உதவியை நாடுவதற்கும் வேதாகமம் அனுமதி கொடுத்துள்ள போதிலும், இதை முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசா என்னும் அரசன் வைத்தியரைத் தேடியது தவறான செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுவது வழக்கம்.[66] ஏனெனில், 2நாளாகமம் 16:12ல், "ஆசா அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத்திலே தன் கால்களில் வியாதிகண்டு, அவன் நோவு மிகவும் உக்கிரமாயிருந்தது. அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல பரிகாரிகளையே தேடினான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆசா மருத்துவரின் உதவியை நாடியதை அல்ல, அவன் தேவனைத் தேடாதவனாக இருந்துள்ளதையே நாளாகம ஆசிரியர் இவ்வசனத்தில் குற்றமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால்தான், "அவன் தன் வியாதியிலும் கர்த்தரைத் தேடாமல் பரிகாரிகளையே தேடினான்" என்று நாளாகம ஆசிரியர் கூறுகிறார். அதாவது, "அவன் வைத்தியரை மாத்திரம் தேடியதே நாளாகமப் புத்தக ஆசிரியரால் தவறான செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது."[67] மேலும், "வியாதியிலும்" என்னும் சொல், அவன் வியாதியாயிருந்த போது மாத்திரமல்ல, அதற்கு முன்பும்

[65] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2098.

[66] K.Seybold, *Sickness and Healing*, p. 23; A.S.Lyons, *Illustrated History* p. 70. P.Prioreschi, *History of Medicine Volume 1: Primitive and Ancient Medicine*, p. 526; H.C.Kee, *Medicine, Miracle and Magic in New Testament*, p. 17;

[67] J.B.Payne, *1,2 Chronicles: Expositor's Bible Commentary Volume 4*, p. 491; J.M. Myers, *2Chronicles: Anchor Bible Commentary*, pp. 14-16; E.H.Merrill, *1,2 Chronicles: Bible Study Commentary*, p. 121.

தேவனைத் தேடாதவனாக இருந்துள்ளதையே அறியத்தருகின்றது. உண்மையில், ஆசா தன்னுடைய ஆட்சியின் ஆரம்பத்தில் தேவனைத் தேடுகிறவனாகவே இருந்தான் (2நாளா.14:2-5).[68] இதனால்தான், எத்தியோப்பியருடன் ஏற்பட்ட யுத்தத்தின் போது, அவன் தேவ உதவியை நாடி வெற்றிபெற்றான் (2நாளா.14:10-12).[69] அதன்பின்பும் 35 வருஷங்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தான் (2நாளா.15:8-9).[70] ஆனால், 36ம் வருஷத்தில், இஸ்ரவேலின் அரசன் பாஷா யூதேயாவைத் தாக்க வந்தபோது, ஆசா தேவனைத் தேடாமல் சீரியாவின் அரசனின் உதவியை நாடினான் (2நாளா.16:1-4).[71] ஆசாவின் இச்செய

[68] 2நாளாகமம் 14:2-5ல், "ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான். அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து, யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து மேடைகளையும் விக்கிரகங்களையும் அகற்றினான். அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது" என்றுள்ளது.

[69] 2நாளாகமம் 14:10-12ல், "அப்பொழுது ஆசா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான். மரேசாவுக்கு அடுத்த செப்பத்தா என்னும் பள்ளத்தாக்கில் யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள். ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம். எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும். உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம். கர்த்தாவே, நீர் எங்கள் தேவன். மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான். அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[70] ஆசா இந்த வார்த்தைகளையும் தீர்க்கதரிசியாகிய ஓதேதின் தீர்க்கதரிசனத்தையும் கேட்டபோது, அவன் திடன்கொண்டு, அருவருப்புகளை யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும், எப்பிராயீமின் மலைத்தேசத்தில் தான் பிடித்த பட்டணங்களிலுமிருந்து அகற்றி, கர்த்தருடைய மண்டபத்தின் முன்னிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தைப் புதுப்பித்து, அவன் யூதா பென்யமீன் ஜனங்களையும், அவர்களோடேகூட எப்பிராயீமிலும் மனாசேயிலும் சிமியோனிலும் இருந்து வந்து அவர்களோடு சஞ்சரித்தவர்களையும் கூட்டினான். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[71] 2நாளாகமம் 16:1-4ல், "ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் வந்து, ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்கும் வரத்துமாயிராதபடிக்கு ராமாவைக் கட்டினான். அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுள்ள வெள்ளியும் பொன்னும் எடுத்து, தமஸ்குவில் வாசம்பண்ணுகிற பென்னாதாத் என்னும் சீரியாவின் ராஜாவினிடத்துக்கு அனுப்பி: எனக்கும் உமக்கும், என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்

லைத் தேவனுடைய தீர்க்கதரிசி கண்டித்தபோது, ஆசா அவனுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல் அவனை சிறையில் அடைத்தான் (2நாளா.16:7-10)[72] இதனால், ஆசாவின் இத்தகைய செயல்களுக்கான தேவதண்டனையின் எச்சரிப்பாகவே அவனுக்கு வியாதி ஏற்பட்டது என்னும் அர்த்தத்திலேயே நாளாகம ஆசிரியர் அவனுடைய வியாதியைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.[73] இதனால்தான் "அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல பரிகாரிகளையே தேடினான்" என்று நாளாகம ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நாம் மருந்துகள் எடுத்தாலும்,
நமக்கு சுகம் கொடுப்பவர் தேவனே.


உண்மையில், நாளாகமப் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் யூதர்கள் மருந்துகள் உபயோகிப்பதையும் மருத்துவரின் உதவியை நாடுவதை

கும் உடன்படிக்கை உண்டே. இதோ, வெள்ளியும் பொன்னும் உமக்கு அனுப்பினேன். இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு நீர் வந்து, அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லி அனுப்பினான். பென்னாதாத் ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பினான். அவர்கள் ஈயோனையும், தாணையும், ஆபேல்மாயீமையும், நப்தலி பட்டணங்களின் எல்லாப் பண்டகசாலைகளையும் முறிய அடித்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

72 2நாளாகமம் 16:7-10ல், "அக்காலத்திலே ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்துகொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத் தப்பிப்போயிற்று. மிகவும் ஏராளமான இரதங்களும் குதிரைவீரருமுள்ள எத்தியோப்பியரும் லூபியரும் மகா சேனையாயிருந்தார்கள் அல்லவா? நீர் கர்த்தரைச் சார்ந்துகொண்டபோதோவெனில், அவர்களை உமது கையில் ஒப்புக்கொடுத்தாரே. தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர். ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான். அதினிமித்தம் ஆசா ஞானதிருஷ்டிக்காரன்மேல் சினந்து கடுங்கோபங்கொண்டு அவனைக் காவலறையில் வைத்தான். இதல்லாமலும் அக்காலத்தில் ஜனங்களுக்குள் சிலரைக் கொடூரமாய் நடப்பித்தான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

73 A.E.Hill, 1&2Chronicles: The NIV Application Commentary, p. 4; A.E.Hill, *1&2Chronicles: The NIV Application Commentary*, p. 476; J.A.Thompson, *1,2 Chronicles: The New American Commentary*, p. 276.

யும் தவறான செயல்களாகக் கருதவில்லை. ஏனெனில், மருத்துவர்க ளும் மருந்துகளும் தேவனுடைய ஈவாகவே மனிதருக்கு அருளப்பட் டுள்ளன என்பதே அக்கால யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது.[74] புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுக்கு சுகம் கொடுக்கும் வைத்தியராகக் கருதினாலும், மருத் துவர்களையும் கனப்படுத்துகிறவர்களாகவே இருந்தனர்.[75] இதனால்தான், லூக்காவைப் பவுல் “பிரியமான வைத்தியன்” என்று குறிப்பிட்டுள்ளார் (கொலொ.4:14). மனிதனுக்கு சரீர சுகத்தைக் கொடுப்பது தேவனே என்பதை உறுதியாக நம்பிய ஆதிசபைக் கிறிஸ்தவர்கள், மருந்துகள் உபயோகிப்பதற்கு எவ்வித தடையையும் விதித்திருக்கவில்லை.[76] இதனால்தான், ரோம அரசாங்கத்தின் மூலமான உபத்திரவங்கள் கி.பி.4ம் நூற்றாண்டில் நிறுத்தப்பட்டவுடன் வைத்தியசாலைகளை ஆரம் பிக்கும் பணிகளில் கிறிஸ்தவ சபை ஈடுபட்டது.[77] எனவே, தேவன் சுகம் கொடுப்பார் என்னும் நம்பிக்கையுடன் மருந்துகள் எடுப்பதில் எவ்வித தவறும் இல்லை. தேவன் மருந்துகள் மூலமும் சுகம் கொடுக் கிறவராக இருப்பதனால், அவரை விசுவாசித்தவர்களாக மருந்துகளை உபயோகிக்கும் போது, அவர் மருந்துகள் மூலம் நமக்கு சுகத்தைக் கொடுக்கிறவராக இருக்கின்றார்.



[74] *The Wisdom of Jesus ben Sirach*, 38:1-15.
[75] A.Verhey, *Reading the Bible in the Strange World of Medicine*, pp. 6-7.
[76] A.Verhey, *Reading the Bible in the Strange World of Medicine*, p. 5.
[77] R.L.Numbers & D.W.Amundsen, *Caring and Curing: Health and Medicine in the Western Religioous Tradition*, p. 49.

## வேதாகமத்தில் இல்லாத யெகோவாவின் சாட்சிகளின் வேதப்புரட்டுப் போதனைகள்

! தேவனுடைய பெயர் யெகோவா !

! தேவன் அல்சியொான் நட்சத்திரத்தில் இருக்கிறார் !

! தாங்கள் மாத்திரமே தேவனுடைய சாட்சிகள் !

! இயேசுகிறிஸ்து முதலாவதாகச் சிருஷ்டிக்கப்பட்டவர் !

! மிகாவேல் என்னும் தூதனே இயேசுகிறிஸ்து !

! இயேசுகிறிஸ்து வழிபாட்டுக்குரிய தேவன் இல்லை !

! இயேசுகிறிஸ்து தேவனைவிடத் தாழ்வானவர் !

! இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழவில்லை !

! இயேசுகிறிஸ்துவின் சரீரம் அழிந்துவிட்டது !

! 1914ல் இயேசுகிறிஸ்துவின் மறுவருகை நடைபெற்றது !

! பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய செயற்படும் சக்தி !

! மனிதனின் மரணத்தோடு அவனது ஆத்துமா அழிகின்றது !

! இயேசுகிறிஸ்து மரத்தூணிலேயே அறையப்பட்டார் !

! திருவிருந்து 144000 பேருக்கு மாத்திரம் உரியது !

! யெகோவாவின் சாட்சிக்கு மாத்திரமே இரட்சிப்பு உண்டு !

! திரித்துவம் சாத்தானால் உருவாக்கப்பட்ட உபதேசம் !

! ஒருவரின் உயிரை காப்பாற்ற இரத்தம் கொடுக்கக்கூடாது

! தேர்தல்களில் வாக்களிக்கக் கூடாது !

! தேசியக்கொடியைக் கனப்படுத்தக் கூடாது !

! ராணுவத்தில் பணிபுரிவது பாவமான ஒரு செயல் !

! பரலோகத்தில் 144000 பேர் மாத்திரமே இருப்பார்கள் !

! இப்பூமியே நீதிமான்கள் வாழப்போகும் பரதீசு !


! நரகம் என்பது வேதத்தில் இல்லாத போதனை !

வேதாகமத்தில் இல்லாத விஷயங்களைப் போதிக்கும் யெகோவாவின் சாட்சிகள், தங்களால் மாத்திரமே மனிதருக்கு வேதாகமத்தை சரியானவிதத்தில் கற்பிக்க முடியும் என்று கூறுவது வெறும் கேலிக்கூத்தாகவே உள்ளது.

# பதின்மூன்றாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

மனிதனின் மரணத்தோடு அவனுடைய ஆத்துமாவும் அழிந்துவிடும் என்று போதிக்கும் யெகோவாவின் சாட்சிகள், தங்களுடைய குழுவில் இருப்பவர்களில் 144000 பேர் பரலோகத்திலும் ஏனையவர்கள் இப்பூமியிலும் நித்திய காலமாய் வாழ்வார்கள் என்று கூறுகின்றனர். இதனால் இவர்கள், இப்பூமியே பரதீசு என்று நம்புவதோடு, மனிதனுக்கு அழியாத ஆத்துமா இருக்கின்றது என்பதையும், மனிதர்கள் நரகத்திற்குப் போவார்கள் என்பதையும் மறுதலிக்கின்றனர். இதனால், மரணத்தின் பின்பும் மனிதர்களின் ஆத்துமா உணர்வுடன் இருக்கும் என்பதையும், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களின் ஆத்துமா உடனடியாக அவரிடம் செல்கின்றது என்னும் வேதாகம சத்தியத்தையும் அறியாதிருக்கும் யெகோவாவின் சாட்சிகள், மெய்யான தேவனையும் அவர் அருளும் இரட்சிப்பையும் அறியாதவர்களாக, தாங்கள் நித்திய காலமாக இப்பூமியில் வாழ்வோம் என்னும் மாயையில் தங்களுடைய போதனைகளைப் பரப்பிவருகின்றனர். இதனால், யெகோவாவின் சாட்சிகளாக நம்முடைய வீட்டுக் கதவுகளைத் தட்டும் மனிதர்கள், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை நம்மிடம் கேட்பதற்காகத் தேவனால் அனுப்பப்படும் பரிதாபத்திற்குரிய மனிதர்களாகவே இருக்கின்றனர். மனிதனுடைய இறுதி நிலையைப்பற்றி இவர்கள் போதிக்கும் விஷயங்கள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு, இவ்விஷயங்களில் வேதாகமம் அறியத்தரும் சத்தியங்களும் விளக்கப்பட்டுள்ளன.

## பதின்மூன்றாம் அத்தியாயம்



# நித்திய வாழ்வு

## யெகோவாவின் சாட்சிகளுக்கானதா? அல்லது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கானதா?

மானிட வாழ்வின் இறுதிநிலையைபற்றி யெகோவாவின் சாட்சிகள் போதிப்பவைகளும் வேதாகம உபதேசத்தை முரண்படுத்தும் வேதப் புரட்டாகவே உள்ளது. மரணத்தோடு மானிட வாழ்வு முடிவடைவதாகக் கூறும் இவர்கள், மனிதனில் "ஆத்துமா என்று அழைக்கப்படும் அழியாத நித்திய ஆவிக்குரிய பகுதி" இருப்பதை மறுதலிக்கின்றனர்.[1] இதனால், "மனிதன் மரிக்கும்போது அவனது சரீரம் அழிவது போலவே ஆத்துமாவும் முழுமையாக அழிந்து போகின்றது"[2] என்று போதிக்கும் இவர்கள், மரணத்தின் பின்பும் மனிதன் உணர்வுடன் இருப்பதையும், துன்மார்க்கர் உயிர்த்தெழுந்து நித்திய காலமாக நரகத்தில் துயரப்படுவார்

[1] Anonymous, *Let God be True*, p. 69.
[2] Anonymous, *Let God be True*, pp. 74-75.

கள் என்னும் வேதாகம சத்தியத்தையும் மறுதலிக்கின்றனர்.[3] மேலும், யெகோவாவின் சாட்சிகள் மாத்திரமே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழு வார்கள் என்று கூறும் இவர்கள், தங்களில் 144000 பேர் பரலோகத்தி லும், ஏனையவர்கள் பூமியிலும் நித்திய காலமாக வாழ்வார்கள் என் றும் விளக்குகின்றனர்.[4] மானிட வாழ்வின் இறுதி நிலையைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் இத்தகைய வேதப்புரட்டு உபதேசங்கள் இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளதோடு, இவ்விடயங்களில் வேதாகமம் போதிக்கும் சத்தியங்களும் விளக்கப்பட்டுள்ளன.

## (1). ஆத்துமா இல்லாமல் அழிந்திடும் மாந்தர்

மானிட ஆத்துமாவைப் பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் வேதாகமத்திற்கு முரணான போதனையாகவே உள்ளது. ஏனென்றால், இவர்கள் "மானிட ஆத்துமாவின் அழியாத் தன்மையை" மறுதலிக்கும் வேதப்புரட்டர்களாய் உள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை "மனித னின் உயிரே" வேதாகமத்தில் ஆத்துமா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[5] தேவன் முதல் மனிதனான ஆதாமை சிருஷ்டித்தபோது, அவன் "ஜீவிக் கின்ற ஆத்துமாவானான்" (ஆதி.2:7) என்று வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள், ஆத்துமா என்பது "மனிதனுடைய உயிர்" என்று விளக்குகின்றனர்.[6] "இயேசு கிறிஸ்துவுக்குக்கூட அழியாத ஆத்துமா இருக்கவில்லை" என்று கூறும் இவர்கள், "அவர் மரித்தபோது, அவரது ஆத்துமாவும் மரித்தது" என்று வாதிடுகின்றனர்.[7] "மனிதன் மரிக்கும்போது அவனது சரீரம் அழிவதுபோலவே அவனது ஆத்துமாவும் அழிந்துபோகிறது"[8] என்னும் யெகோவாவின் சாட்சிகளின் போதனை, சரீர மரணத்தின் பின்பும் மானிட ஆத்துமா உணர்வுடன் நித்திய காலமாய் இருக்கும் என்னும்

[3] Anonymous, *Reasoning from the Scriptures*, pp. 175; *Let God be True*, p. 68.
[4] Anonymous, *Make Sure of All Things*, p. 303; Anonymous, *From Paradise Lost to Paradise Regained*, p. 231. Anonymous, *Your Will be Done on Earth*, p. 50.
[5] A.Hoekema, *The Four Major Cults*, p. 265.
[6] Anonymous, *Let Your Name be Sanctified*, p. 44.
[7] Anonymous, *Let God be True*, p. 200.
[8] Anonymous, *Reasoning from the Scriptures*, pp. 383-384.

வேதாகம உபதேசத்துக்கு முரணானதாகவே உள்ளது. ஏனெனில், “மரணத்தின் பின்பு ஆத்துமாவுக்கு உணர்வுள்ள வாழ்வு இல்லை” என்பதே யெகோவாவின் சாட்சிகளின் வேதப்புரட்டு உபதேசமாய் உள்ளது.[9]

மனிதன் மரிக்கும் போது அவனது சரீரம் அழிவது போலவே, அவனது ஆத்துமாவும் அழிந்துபோகிறது என்னும் யெகோவாவின் சாட்சிகளின் போதனை, சரீர மரணத்தின் பின்பும் மானிட ஆத்துமா உணர்வுடன் நித்திய காலமாய் இருக்கும் என்னும் வேதாகம உபதேசத்துக்கு முரணானதாகவே உள்ளது.

திரித்துவ உபதேசத்தைப் போலவே, மானிட ஆத்துமாவின் அழியாத் தன்மை பற்றிய போதனையும் சாத்தானால் உருவாக்கப்பட்டது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். “விலக்கப்பட்ட கனியைப் புசித்தால் நீங்கள் சாவீர்கள்” என்று தேவன் ஆதாமிடம் கூறியிருந்தார். ஆனால், அதைப் புசித்தால் சாகமாட்டீர்கள் என்று சாத்தான் சொல்லியும், அதைப் புசித்த ஆதாமும் ஏவாளும் பிற்காலத்தில் மரணமடைந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் இவர்கள் (அதி.3), மானிட ஆத்துமா சாகாது என்னும் பொய்யைச் சாத்தான் இவ்விதமாகக் கிறிஸ்தவத்திற்குள் கொண்டு வந்துள்ளான் என்று கூறுகின்றனர்.[10] அதாவது, விலக்கப்பட்ட கனியைப் புசித்த ஆதாமும் ஏவாளும் உடனடியாக மரணமடையாவிட்டாலும், பிற்காலத்தில் அவர்கள் மரித்தார்கள். இதனால், அவர்கள் சாகமாட்டார்கள் என்னும் சாத்தானின் கூற்று பொய்யாகியது. இதைப்போலவே, மானிட ஆத்துமா சாகாது என்னும் போதனையும் சாத்தானுடைய பொய்யாக இருக்கின்றது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், தேவன் ஆதாமிடம் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தால் அவனுடைய ஆத்துமா சாகும் என்று கூறவில்லை. இதைப்போலவே சாத்தானும், நீங்கள் சாகவே சாவதில்லை என்று ஏவாளிடம் தெரிவித்தபோது, அவன் அவர்களுடைய ஆத்துமாவின் மரணத்தைப் பற்றி அல்ல சரீர மரணத்தைப்பற்றியே

[9] Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, p. 88.
[10] Anonymous, *Reasoning from the Scriptures*, pp. 101; *Let God be True*, p. 75.

கூறினான். எனவே, சாத்தான் ஏவாளிடம் ஆத்துமாவின் மரணத்தைப் பற்றி பொய் சொன்னான் என்றும், இதனால் ஆத்துமா அழியாது என்னும் உபதேசம் சாத்தானால் உருவாக்கப்பட்டது என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது.[11]

மரணத்தோடு மானிட ஆத்துமாவின் வாழ்வும் முடிவடைந்துவிடுகிறது என்று யெகோவாவின் சாட்சிகள் போதிப்பதற்குக் காரணம், ஆத்துமா என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லுக்கு "உயிர்" என்னும் அர்த்தம் மாத்திரமே உள்ளது என்னும் இவர்களுடைய தவறான எண்ணமேயாகும். இவர்கள் கூறுவது போல ஆதியாகமம் 2:7ல் "ஆத்துமா" என்னும் சொல் மானிட உயிரையே குறிக்கின்றது என்பது உண்மை என்றாலும், வேதாகமத்தில் இச்சொல் பலவிதமான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது. மூலமொழியில் "ஆத்துமா" என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் "நெப்.ˑ.பெ.ˑ.ஷ்" (*nephesh*) என்னும் எபிரேயச் சொல்லும் புதிய ஏற்பாட்டில் "சூகே" (*psuche*) என்னும் கிரேக்கச் சொல்லும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இவை மனிதனின் ஆவிக்குரிய பகுதியின் (Spiritual Part) பல்வேறு அம்சங்களையும் குறிக்கும் சொற்களாகும். வேதாகமப் போதனையின்படி, மனிதனில் "சடப்பொருள் பகுதி" "ஆவிக்குரிய பகுதி" என்னும் இரண்டு பகுதிகள் உள்ளன. சடப்பொருள் பகுதியில் மானிட சரீரத்தின் மாம்சம், எலும்பு, இரத்தம் போன்றவை உள்ளன. ஆவிக்குரிய பகுதியில் ஆவி, உயிர், ஆத்துமா, மனம், சிந்தை போன்றவை உள்ளன. இவற்றில் சடப்பொருள் பகுதி "சரீரம்" என்றும், ஆவிக்குரிய பகுதி "ஆவி அல்லது ஆத்துமா" என்றும் அழைக்கப்படுகின்றது.[12] பழைய ஏற்பாட்டில் "நெப்.ˑ.பெ.ˑ.ஷ்" என்னும் எபிரேயச் சொல்லும், புதிய ஏற்பாட்டில் "சூகே" என்னும் கிரேக்கச் சொல்லும் மனிதனுடைய ஆவிக்குரிய பகுதியில் உள்ள அனைத்தையும் குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன.

---

[11] நரகத்தைப்பற்றிய கிறிஸ்தவ போதனையும் சாத்தானால் உருவாக்கப்பட்டது என்பதே யெகோவாவின் சாட்சிகளின் கருத்தாகும். கல்லறையே வேதாகமத்தில் நரகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று இவர்கள் கூறுகின்றனர் (Anonymous, *You Can Live Forever in Paradise on Earth*, p. 83). ஆனால், நரகம் தேவனை நிராகரிப்பவர்கள் நித்தியகாலமாய் வேதனைப்படும் இடமாகும் (மத்.8:11-12, 13:42, 13:50, லூக்கா 13:28, 16:19-31, வெளி.14:9-11, 9:20).

[12] D.Campbell, W.Johnston, ed., *The Theological Wordbook*, pp. 328-330.

பழைய ஏற்பாட்டில் மனிதனின் ஆவிக்குரிய பகுதி "உள்ளான மனிதன்" (inner self) என்றும், சடப்பொருள் பகுதி "வெளித்தோற்றம்" (outer appearance) என்றும் கருதப்பட்டதோடு,[13] 754 தடவைகள் உள்ளான மனிதனைக் குறிப்பிட "நெப்.'.பெ.'.ஷ்" என்னும் எபிரேயச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[14] எனினும், இவற்றில் 110 தடவைகள் மாத்திரமே இச்சொல்லை "ஆத்துமா" என்று மொழிபெயர்க்கலாம்.[15] ஆனால், ஆங்கிலத்தில் ஜேம்ஸ் அரசனுடைய வேதாகமத்தில் இச் சொல் 28 வித்தியாசமான சொற்களினால் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 419 தடவைகள் ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏனைய புதிய ஆங்கில வேதாகமங்களில் இச்சொல் ஆத்துமா என்று மட்டு மல்ல, உயிர் அல்லது ஜீவன் (life) சுயம் (self) இதயம் (heart) நபர் (being) என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[16] இதேவிதமாக புதிய ஏற்பாட்டிலும் "சூகே" என்னும் கிரேக்கச் சொல் நூற்றுக்கும் அதிகமான தடவைகள் இடம்பெற்றாலும், 19 தடவைகள் மாத்திரமே ஆத்துமா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[17] ஆனால், நாம் உபயோ கிக்கும் தமிழ் வேதாகமம் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தைத் தழுவிய மொழிபெயர்ப்பாய் இருப்பதனால்,[18] பழைய ஏற்பாட்டில் 400 இற்கும் அதிகமான தடவைகளும் புதிய ஏற்பாட்டில் 39 தடவைகளும் ஆத்துமா என்னும் சொல் உள்ளது. இச்சொல் சில இடங்களில் மானிட உயிரை அல்லது முழு மனிதனைக் குறிப்பிடவும் உபயோகிக்

---

[13] W.E.Vine, M.F.Unger & W.White ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 238.

[14] H.W.Wolff, *Anthropology of the Old Testament*, pp. 10-25.

[15] இது NIV ஆங்கில மொழிபெயர்ப்பின்படியான கணிப்பீடு

[16] W.E.Vine, M.F.Unger & W.White ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 237.

[17] "சூகே" என்னும் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் 11 விதமான அர்த்தங்களு டன் உபயோகிக்கப்பட்டுள்ளது.

[18] நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்ட போது ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமமே உபயோகத்தில் இருந்தினால், தமிழில் வேதாக மத்தை மொழிபெயர்க்கும் போது மூலமொழிக்கும் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கும் இடையில் வித்தியாசங்கள் இருந்தால் தமிழ் மொழிபெயர்ப் புக் குழு ஜேம்ஸ் அரசனின் ஆங்கில மொழிபெயர்ப்பையே (KJV) பின்பற்ற வேண்டும் என்று சென்னை வேதாகமச் சங்கம் நிபந்தனை விதித்திருந்தது. இதனால், நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமம் ஜேம்ஸ் அரசனது ஆங்கில வேதாகமத்தின் தழுவலாகவே உள்ளது. (தமிழ் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது *புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு* என்னும் நூலைப் பார்க்கவும்).

கப்பட்டிருந்தாலும்,[19] ஏனைய இடங்களில் உள்ளான மனிதனின் பல் வேறு அம்சங்களைக் குறிக்கின்றது.[20] ஆதியாகமம் 2:7ல் மண்ணினால் தாம் செய்த மானிட சரீரத்திற்குள் தேவன் ஜீவசுவாசத்தை ஊதிய போது அவன் “ஜீவாத்துமாவானான்” என்னும் வாக்கியம் மூலமொழியில் “தேவனுடைய சுவாசம் மனிதனுக்கு உயிரைக் கொடுத்தது” என்றே கூறுகிறது.[21] மூலமொழியில் “ஜீவ ஆத்துமா” என்னும் சொல்லே ஆதியாகமம் 1:20, 2:19, 9:9ல் ஏனைய உயிரினங்களின் ஜீவனைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது இதை உறுதிப்படுத்துகிறது.[22]

ஆதியாகமம் 2:7ல் “நெப்.ஃ.பெ.ஃ.ஷ்” என்னும் எபிரேயச் சொல் மானிட உயிரையே குறித்தாலும், இது மனிதனில் அழியாத ஆவிக்குரிய பகுதி இருப்பதை மறுதலிக்கவில்லை. ஏனெனில், நாம் ஏற்கனவே பார்த்தபடி, மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் உயிரை மாத்திரம் குறிப்பிடும் சொல் அல்ல.[23] மனிதனின் ஆவிக்குரிய பகுதியே அதாவது, உள்ளான மனிதனே வேதாகமத்தில் பொதுவாக ஆவி அல்லது ஆத்துமா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், இவ்விரு சொற்களும் வேதாகமத்தில் ஒத்தகருத்துள்ள சொற்களாகவே உள் ளன.[24] இதனால், அக்காலத்தில் யூதர்களும் கிரேக்கர்களும் மரணத் தின்போது மானிட சரீரத்திலிருந்து ஆத்துமா அல்லது ஆவி பிரிவ

---

[19] தமிழிலும்கூட முழுமனிதனையும் குறிப்பிடும் விதத்தில் ஆத்துமா என்னும் சொல் தற்காலத்தில் உபயோகிக்கப்படுகிறது. அதாவது, “புதிய ஆத்துமாக்கள் சபைக்கு வந்தார்கள்” என்று நாம் கூறும்போது, முழுமனிதனையும் குறிப்பிடும் விதத்திலேயே ஆத்துமா என்னும் சொல்லை உபயோகிக்கின்றோம். ஆங்கிலத்தில் ஜேம்ஸ் அரசனுடைய வேதாகமத்தில் அப்போஸ்தலர் 27:37ல் “கப்பலில் இரு நூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம்” என்பதில், “பேர்” என்பதற்கு soul என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது.

[20] W.F.Arndt & G.F.Wilbur, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, pp. 674-675, 893-894; F.Brown, S.R.Driver, and C.A.Briggs, *A Hebrew and English Lexicon of the OT*, pp. 659-661, 924-925.

[21] W.W.Wiersbe, *Be Basic: An Old Testament Study – Genesis 1-11*, p. 167.

[22] G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Vol. 1*, p. 60.

[23] F.Brown, & C.A.Briggs, *A Hebrew and English Lexicon of the OT*. p. 659.

[24] W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 473-477. இதனால்தான் யோவான் 12:27ல், இயேசுகிறிஸ்து தமது ஆத்துமா கலங் குவதாகக் கூறுகையில் இதை அவர் ஆவியில் கலங்கியதாக யோவான் குறிப்பிட்டுள்ளார் (யோவா.13:21). இதைப்போல யோபு 7:11, சங்கீதம் 6:3, 42:6, 73:21, ஆதியாகமம் 41:8 போன்ற வசனங்களில் துயரம் ஆவிக்கு அல் லது ஆத்துமாவுக்கு ஏற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டைந்து செல்வதாகக் கருதினார்கள்.[25] வேதாகமத்திலும், மரணத்தின் போது சரீரத்தைவிட்டு "ஆவி பிரிவடைந்து செல்வதாக" பிரசங்கி 12:7 கூறுகையில், ஆதியாகமம் 35:18ல் "ஆத்துமா பிரிவடைந்து செல்வதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், மரித்தவர்கள் ஒன்றில் "ஆத்துமாக்கள்" என்றோ (வெளி.6:9) அல்லது "ஆவிகள்" என்றோ (எபி.12:23, 1பேது.3:19) வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மானிட சரீரம் மரித்த பின்பும், அதாவது சரீரத்தை விட்டு உயிர் பிரிந்த பின்பும் ஆத்துமா அழியாமல் இருக்கும் என்று மத்தேயு 10:28ல் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இவ்வசனத்தில், "ஆத்துமா வைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிற வர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று, ஒருவனுடைய சரீரத்தை மனிதர்கள் அழித்தாலும் அவர்களால் அவனுடைய ஆத்துமாவை எதுவும் செய்யமுடியாது என்பதையே அறியத்தருகின்றது. ஏனெனில், மானிட ஆத்துமா அழியாதது. "மரணத் தின் பின்பும் உயிரோடிருக்கும் மானிடப் பகுதியையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் ஆத்துமா என்று குறிப்பிட்டுள்ளார்."[26] இதை எவராலும் அழிக்கமுடியாது என்று இயேசுகிறிஸ்து கூறுவதனால், மனிதன் மரித் தாலும், அதாவது அவனுடைய சரீரத்தைவிட்டு ஆத்துமா பிரிந்துசென்றா லும் அது அழியாமல் இருக்கும். உண்மையில், "மரணத்தின் பின்பும் மனிதனுக்கு வாழ்வு இருக்கின்றது என்பதையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் அறியத்தருகின்றார்."[27]

மானிட சரீரத்தை மனிதர் அழித்தாலும் அவர்களால் மானிட ஆத்து மாவை அழிக்க முடியாது என்பதை மத்தேயு 10:28ல் இயேசுகிறிஸ்து அறியத்தந்தாலும், இவ்வசனத்தின் இரண்டாவது வாக்கியம், நரகத்தில் ஆத்துமா அழிந்துபோகும் என்னும் எண்ணத்தை சிலருக்கு ஏற்படுத் தியுள்ளது.[28] ஆனால், இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள "ஆத்துமாவை யும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்னும் வாக்கியம், மானிட ஆத்துமாவும் சரீரமும் நரகத்தில் அழிந்து

---

[25] R.Gundry, *The Use of the Old Testament in St. Matthew's Gospel*, p. 197.

[26] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary,* p. 262.

[27] J.R.Edwards, *Luke: The Pillar New Testament Commentary*, p. 365.

[28] Cf. D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the NT*, p.279.

விடும் என்னும் அர்த்தமுடையது அல்ல. ஏனெனில், இவ்வாக்கியத்தில் "கொல்லுதல்" "அழித்தல்" என்னும் இரண்டு சொற்களும் ஒத்தகருத் துள்ள சொற்களாகவே உபயோகிக்கப்பட்டுள்ளன.[29] மேலும், அழித்தல் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "அப்போலெஸ் சாய்" (*apolesai*) என்னும் கிரேக்கச் சொல்லுக்கு "அழிவு" என்னும் அர்த்தம் மாத்திரமல்ல, "இழப்பு" "சிதைவு" என்னும் அர்த்தங்களும் உள்ளன.[30] அதேசமயம், நரகம் நித்தியமானது என்றே இயேசுகிறிஸ்து போதித்துள்ளார் (மாற்.9:43-44).[31] எனவே, நரகத்திற்குச் செல்பவர்கள் அங்கு அழிந்துபோவார்கள் என்று கூறமுடியாது. அவர்கள் அங்கு நித்தியகாலமாக வேதனையை அனுபவிப்பார்கள். இதனால், அழிவு என்னும் சொல் இவ்வசனத்தில் "நித்திய வேதனையை அல்லது நித்திய ஆக்கினையையே குறிக்கின்றது."[32]

மரணத்தின் பின்பும் மானிட ஆத்துமா உயிருடன் இருப்பதினால்தான் வெளிப்படுத்தல் 6:9-10ல் இரத்த சாட்சிகளாக மரித்தவர்களுடைய ஆத்துமாக்களை யோவான் பலிபீடத்தின் கீழ் கண்டது மாத்திரமல்ல, அவைகள் தேவனோடு பேசுவதையும் கேட்டார்.[33] உண்மையில், மத் தேயு 10:28, வெளிப்படுத்தல் 6:9-10 என்னும் இரண்டு வசனங்களும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கு முரணாக, மானிட சரீரம் மரித்த பின்பும் ஆத்துமா உயிருடனும் சுய உணர்வுடனும் இருக்கும் என்பதை அறியத்தருகின்றன.[34] மேலும், லாசருவையும் ஐசுவரியவானை

---

[29] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, pp. 177-178.

[30] R.T.France, *Matthew: Tyndale New Testament Commentary*, p. 186.

[31] மாற்கு 9:43-44ல் "நரகத்தில் புழு சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக் கும்" என்பது, நரகத்தின் வேதனை முடிவடையாமல் தொடர்ந்திருப்பதைக் குறிப்பிடும் விவரணமாய் உள்ளது (R.A.Cole, *Mark: Tyndale New Testament Commentary*, p. 223; D.E.Hiebert, *Mark: An Expositional Commentary*, p. 268; R.C.H.Lenski, *The Interpretation of St.Mark's Gospel*, p. 407).

[32] C.S.Keener, *Mathew: The IVP New Testament Commentary*, pp. 208-209.

[33] யோவான் இதைப் பற்றி எழுதும் போது, "அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்த போது, வேத வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்த மும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழ் கண்டேன். அவர்கள், பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகாசத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

[34] D.A.Reed, *Jehovah's Witnesses Answered Verse by Verse*, p. 46.

யும்பற்றி இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது, மரணத்தின்பின் உணர்வு உள்ள நிலையிலேயே மனிதர்கள் இருப்பார்கள் என்பதை அறியத்தந்துள்ளார் (லூக்.16:22-28). ஏனெனில், இவ்வுவமையில் லாசருவும் ஐசுவரியவானும் மரணத்தின் பின்னர் தாங்கள் எவ்விதமான நிலையில் இருக்கின்றோம் என்பதை அறியக்கூடிய விதத்தில் உணர்வுள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

யெகோவாவின் சாட்சிகள் லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையை சரியான விதத்தில் புரிந்துகொள்ளாமல், "தேவனுடைய மக்கள் அனைவரும் எப்படி ஆபிரகாம் என்னும் ஒரு மனிதனுடைய மடியில் இருக்க முடியும்? என்றும், மனிதர் வேதனைப்படும் அளவுக்கு அக்கினி ஜுவாலை இருக்கும் இடத்தில் தண்ணீரில் தோய்த்து எடுக்கப்பட்ட விரல் நுனியின் தண்ணீர் ஆவியாகாமல் எப்படி தண்ணீராக இருக்க முடியும்? என்றும், இந்த ஒரு துளி நீர் எப்படி ஒரு மனிதனுடைய தாகத்தைத் தீர்க்கக்கூடியதாய் இருக்கும்? என்றும் கேட்கின்றனர்.[35] ஆனால், இயேசுகிறிஸ்து மரணத்தின் பின்பான நிலையை ஒரு உவமையின் மூலம் விளக்குவதனால், நாம் உவமையிலுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் அர்த்தம் கற்பிக்கக் கூடாது. ஏனெனில், யெகோவாவின் சாட்சிகள் கூறுவது போல, ஒரு துளி நீர் தாகத்தைத் தணிக்கும் என்பதையோ, அக்கினி ஜுவாலையுள்ள இடத்தில் ஒரு துளி நீர் ஆவியாகாமல் இருக்கும் என்பதையோ அறியத்தருவதற்காக இயேசுகிறிஸ்து இவ்வுவமையைக் கூறவில்லை. ஐசுவரியவானின் வார்த்தைகள் அவனது வேதனையின் புலம்பலாகவே இருக்கின்றன. மேலும், "ஆபிரகாமின் மடி" என்பது மரணத்தின்பின் நீதிமான்கள் செல்லுமிடத்தைக் குறிப்பிடும் அக்கால சொற்பிரயோகமாய் இருந்தது.[36] இதனால், இது பரலோகத்தின் பெயராகியது.[37] இதை அறியாதவர்களாக "ஆபிரகாம் என்னும் ஒரு மனிதனுடைய மடியில் தேவனுடைய ஜனங்கள் அனைவரும் எப்படி இருக்கமுடியும்?" என்று கேட்பது அறிவீனமான ஒரு கேள்வியாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றிய உவமையை எதற்காகச் சொன்னார் என்பதைக் கருத்திற்கொள்ளாதவர்களாக,

[35] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 175.
[36] D.L.Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*, p. 1368.

இவ்வுவமையில் ஆபிரகாம் யெகோவா தேவனையும், ஐசுவரியவான் பரிசேயர்களையும், லாசரு இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்களையும், மரணம் என்பது இவர்கள் இவ்வுலகில் இருக்கும்போது இவர்களின் நிலைமையில் ஏற்படும் மாற்றத்தையும் குறிப்பதாக யெகோவாவின் சாட்சிகள் கூறுவது,[38] உவமையில் சொல்லப்படாதவற்றை அதற்குள் புகுத்தும் தவறான வேதவியாக்கியானமாகவே உள்ளது. ஏனெனில், உவமை என்பது, குறிப்பிட்ட ஒரு சத்தியத்தைக் கற்பிப்பதற்காக சொல்லப்படும் கதையாகும்.[39] இதனால், ஒரு உவமையில் ஒரு சத்தியம் அல்லது போதனையே இருக்கும்.[40] இதை அறியாத நிலையில் உவமையில் இருக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் கற்பிப்பதும், பல விஷயங்களை ஒரு உவமையிலிருந்து போதிப்பதும் தவறாகும்.[41] உண்மையில், மரணத்தின் பின்பும் மனிதர்கள் உணர்வுள்ள நிலையில் இருப்பார்கள் என்பதையும், அச்சமயம் அவர்களால் தங்களது இருப்பி

மரணத்தின் பின்பும் மனிதர்கள் உணர்வுள்ள நிலையில் இருப்பார்கள் என்றும், அச்சமயம் அவர்களால் தங்களது இருப்பிடங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்றும் வேதாகமம் கூறுகிறது.

---

[37] R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 424.

[38] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 175.

[39] R.B.Zuck, *Basic Bible Interpretation*, p. 194; T.N.Sterrett, *How to Understand Your Bible*, p. 107.

[40] A.B.Mickelsen, *Interpreting the Bible*, p. 214; A.B.Mickelsen & A.M.Mickelsen, *Understanding Scriptures: How to Read and Study the Bible*, p. 78; W.Kuhrt, *Interpreting the Bible*, p. 70.

[41] நீண்ட காலமாக கிறிஸ்தவர்களும் உவமைகளை மறைபொருட்கள் கொண்ட கதைகளாக விளக்குவதன் மூலம், உவமையில் உள்ள ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் கற்பித்துள்ளனர். இதனால், இயேசுகிறிஸ்து எதற்காக ஒரு உவமையை சொன்னார் என்பதை அறியமுடியாத நிலை ஏற்பட்டது. உதாரணத்திற்கு, "பிறன் அல்லது அயலான் யார்?" என்னும் கேள்விக்குப் பதிலாக இயேசுகிறிஸ்து கூறிய நல்ல சமாரியன் உவமையை கி.பி.4ம் நூற்றாண்டிலிருந்து சபைத்தலைவர்கள் வியாக்கியானம் செய்துவந்த முறை, உவமையில் உள்ள இடங்களுக்கும் நபர்களுக்கும் பொருட்களுக்கும் அர்த்தம் கற்பிப்பதாய் இருந்ததினால், இவர்களுடைய விளக்கங்களில் பிறன் யார் என்னும் கேள்விக்குப் பதிலே இல்லாமல் போய்விட்டது. எனவே, உவமைகளை அவைகள் சொல்லப்பட்ட நோக்கத்தை அறிந்துகொள்ள முடியாத விதத்தில் பலதரப்பட்ட விளக்கங்களையும் அர்த்தங்களையும் நாம் கொடுக்கக்கூடாது (G.D.Fee & D.Stuart, *How to Read the Bible For All Its Worth*, pp. 123-125).

டங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்பதையுமே இயேசுகிறிஸ்து இவ்வுவமையின் மூலம் அறிவித்துள்ளார்.[42] எனவே, மரணத்தின் பின்னர் மானிட ஆத்துமா அழிந்து போகிறது என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது, வேதாகமத்திற்கு முரணான போதனையாகவே உள்ளது.

மரணத்தின் பின்பும் மனிதன் உணர்வுள்ளவனாகவே இருப்பான் என்பதை இயேசுகிறிஸ்து சிலுவையில் இருந்தபோது தம்மோடு சேர்த்துச் சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவனுக்குக் கூறிய வார்த்தைகளும் அறியத்தருகின்றன. “இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்” (லூக்.23:43) என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று, தான் இயேசுகிறிஸ்துவுடன் இருப்பதை அறிந்திடக்கூடிய விதத்திலேயே அந்தக் கள்ளன் பரதீசில் இருப்பான் என்பதை அறியத்தருகிறது.[43] ஆனால், தங்களது வேதப்புரட்டு உபதேசமே சரியானது என்பதை நிரூபிப்பதற்காக யெகோவாவின் சாட்சிகள் இவ்வசனத்தை “இன்றைக்கு நான் உனக்கு சொல்லுகிறேன், நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்” என்று மாற்றியுள்

---

[42] லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையைச் சிலர் உண்மைச் சம்பவமாகக் கருதுகின்றனர் (R.Summers, *Commentary on Luke*, p. 195). ஆனால், இது உண்மைச் சம்பவமாக இருந்தால் சில வேதாகம சத்தியங்களை முரண்படுத்தும் சம்பவமாகவே இருக்கும். ஏனென்றால், மரணத்தின் பின்னர் வித்தியாசமான இடங்களுக்குச் சென்றவர்கள் ஒருவரையொருவர் பார்க்கக்கூடிய விதமாகவும், ஒருவரோடொருவர் பேசக்கூடிய விதமாகவும் இவர்களுடைய இருப்பிடங்கள் இருக்காது. எனவே, இதை உண்மைச் சம்பவமாக விளக்கமுடியாது (W.L.Liefeld, *Luke: The Expositor's Bible Commentary Volume 8*, p. 991; D.L.Bock, *Luke: The NIV Application Commentary*, p. 432). மேலும், அக்கால யூதமத போதகர்கள் உவமைகளை ஆரம்பிக்கின்ற விதமாகவே இயேசுகிறிஸ்துவும் “ஒரு மனிதன் இருந்தான்” என்று இக்கதையை ஆரம்பிப்பதனால், இது உவமையாகவே உள்ளது (C.L.Blomberg, *Interpreting the Parable*, p. 205).

[43] R.H.Stein, *Luke: The New American Commentary*, p. 593. பரதீசு என்னும் சொல் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அழகிய மனங்கவர் தோட்டத்தை அல்லது பூங்காவைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டாலும் (உன்.4:13, பிர.2:5, நெகே.2:8, ஆதி.13:10, 2:8), இரண்டு ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும் புதிய ஏற்பாட்டிலும் பரலோகத்தைக் குறிப்பிடும் சொல்லாய் இருந்தது. இதனால்தான், தான் பரலோகத்திற்கு அதாவது மூன்றாம் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைப்பற்றி பவுல் எழுதும் போது, தான் பரதீசுக்குச் சென்றதாக 2கொரிந்தியர் 12:2-3ல் குறிப்பிட்டுள்ளார். பாவம் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏதேன் தோட்டத்தில் (கிரேக்க மொழியில் பரதீசு) வாழமுடியாத நிலையை ஏற்படுத்தியதினால், பாவத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் வாழும் பரலோகத்திற்கு யூதர்கள் இப்பெயரைக் கொடுத்துள்ளனர் (J.Nolland, *Luke: Word Biblical Commentary Vol.35*, p. 1152).

ளனர்.[44] அதாவது, ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனத்திலுள்ள அரைப்புள்ளியை இவர்கள் இடம்மாற்றியுள்ளனர். அதாவது, I tell you the truth, today you will be with me in paradise என்பதில் truth என்பதற்கு அடுத்துள்ள அரைப்புள்ளியை today என்பதற்குப் பிறகு வைத்து, I tell you the truth today, you will be with me in paradise என்று இவ்வசனத்தின் அர்த்தத்தை மாற்றியுள்ளனர். இதன் மூலம், கள்ளன் அன்றைய தினம் பரதீசில் இருப்பதைப்பற்றி அல்ல, அவன் எதிர்காலத்தில் பரதீசில் இருப்பதைப் பற்றியே அன்றைய தினம் இயேசுகிறிஸ்து அவனுக்கு கூறுவதாக யெகோவாவின் சாட்சிகள் விளக்குகின்றனர்.[45] இவர்கள், தங்கள் உபதேசமே சரியானது என்பதை நிரூபிப்பதற்காக வேதவசனங்களின் அர்த்தத்தை மாற்றியுள்ளதினால், இவர்களது போதனைகள் வேதப்புரட்டு உபதேசமாகவே உள்ளது.

மரணத்தின் பின்னர் உணர்வுள்ள நிலையில் மானிட ஆத்துமா இருக்காது என்னும் தங்களது வேதப்புரட்டு உபதேசத்தை நிரூபிப்பதற்கு யெகோவாவின் சாட்சிகள் சங்கீதம் 146:4, பிரசங்கி 9:5, எசேக்கியேல் 18:4 என்னும் வசனங்களையும் சுட்டிக்காட்டுவது வழக்கம். சங்கீதம் 146:4ல், “அவனுடைய ஆவி பிரியும். அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தின்படி, மரணத்தின் பின் மனிதனுடைய “யோசனைகள் அழிந்து போவதனால்” அவன் உணர்வுள்ளவனாய் இருக்கமாட்டான் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[46] ஆனால், மரணத்தின் பின் மனிதன் எவ்வித சிந்தனையும் அற்றவனாக இருப்பான் என்று இவ்வசனம் கூறவில்லை. ஏனென்றால், இவ்வசனத்தில் “யோசனைகள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மனிதனுடைய “திட்டங்கள், நோக்கங்கள், எதிர்காலத்தைப் பற்றிய யோசனைகள்” என்பவற்றையே குறிக்கின்றது.[47] இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட நூலொன்றிலும் இவ்வித அர்த்தத்துடனான வசனம் உள்ளது.[48] எனவே, “மனிதன் மரிக்கும்போது, அவன் உயிரோடிருந்தபோது போட்டிருந்த திட்டங்கள் அனைத்தும் அழிந்து போகின்

[44] Anonymous, *Reasoning from the Scriptures*, pp. 287-288.
[45] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 287.
[46] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 383.
[47] L.Harris, ed., *Theological Word Book of the Old Testament Vol.2*, p. 1056.
[48] 1Maccabees 2:63.

றன"[49] என்று சங்கீதம் 146:4 கூறுகின்றதே தவிர, மரணத்தின் பின் அவன் உணர்வற்றவனாக இருப்பான் என்பது இவ்வசனத்தின் அர்த்த மல்ல. "மரணம் மனிதனுடைய திட்டங்கள் அனைத்தையும் இல்லாம லாக்கிவிடுகின்து."[50] ஆனால், அவனுடைய ஆத்துமா தொடர்ந்தும் உணர்வுடன் இருக்கும்.

பிரசங்கி 9:5ல் "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்று குறிப்பிடப் பட்டிருப்பதனால், மரணத்தின் பின் மனிதன் எவ்வித உணர்வும் அற்றவ னாகிவிடுவான் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[51] ஆனால் இவ்வசனத்தில், "மரித்தவனுக்கு இவ்வுலக அனுபவங்கள் எதுவும் இருக்காது"[52] என்பதையே பிரசங்கி சுட்டிக்காட்டுகிறார். ஏனென் றால், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில் உயிரோடிருப்பவனுக்கும் மரித்தவனுக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும் பிரசங்கி, இவ்வசனத்தின் ஆரம்பப் பகுதி, உயிரோடிருக்கிறவன் அறிந்திருக்கும் விஷயங்களை மரித்தவனால் அறியமுடியாது என்று கூறுவதோடு, உயிரோடிருக்கிறவன் தனக்கும் ஒருநாள் மரணம் சம்ப விக்கும் என்பதை அறிந்திருக்கிறான் என்றும், மரித்தவனுக்கு இவ்வித அறிவு இல்லை என்றும் கூறுகிறாரே தவிர,[53] யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, மரித்தவனுக்கு எவ்வித உணர்வும் இல்லை என்று கூறவில்லை. உண்மையில், மரணத்துக்குப் பின்பான வாழ்வு எப்படிப்பட் டது என்பதை அறியத்தருவது இவ்வசனத்தின் நோக்கம் அல்ல.[54] "மரணத்தைவிட உயிரோடிருப்பது மேலானது என்னும் தனது தர்க்கத் திற்கு ஒரு ஆதாரமாகவே இவ்விஷயத்தைப் பிரசங்கி இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்."[55] எனவே, இவ்வசனத்தை மரணத்தின் பின்பான மானிட வாழ்வைப்பற்றிய உபதேசமாக்க முடியாது. மேலும், புதிய

---

49 W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary Vol.5*, p. 865; H.C.Leupold, *Exposition of Psalms*, p. 984; D.M.Williams, *Psalms 73-150: The Preacher's Commentary*, 512.

50 J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentary*, p. 625.

51 Anonymous, *Reasoning from the Scriptures*, p. 169.

52 M.A.Eaton, *Ecclesiastes: Tyndale Old Testament Commentaries*, p. 126.

53 H.C.Leupold, *Exposition of Ecclesiastes*, p. 211; R.Murphy, *Ecclesiastes: Word Biblical Commentary Volume 23*, p. 92; T.Longman II, *Ecclesiastes: The New International Commentary on the Old Testament*, P. 228.

54 D.A.Garrett, *Ecclesiastes: The New American Commentary*, p. 331.

55 R.Murphy, *Ecclesiastes: New International Biblical Commentary*, p. 208.

ஏற்பாட்டிலேயே மரணத்தின் பின்பான வாழ்வைப் பற்றிய முழுமையான வெளிப்படுத்தல் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளதினால், பிரசங்கி கூறுவதை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு மரணத்தின்பின் மனிதன் எவ்வித உணர்வும் அற்றவனாக இருப்பான் என்று கூறுவது தவறாகும்.

மனிதனின் மரணத்தோடு அவனுடைய ஆத்துமா அழிந்துபோகும் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. மரணத்தின் பின்பும் ஆத்துமா உணர்வுடன் இருக்கும்

மனிதனுடைய மரணத்தின்போது அவனுடைய ஆத்துமாவும் அழிந்து போகும் என்னும் தங்களது தவறான உபதேசத்துக்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வசனம் எசேக்கியேல் 18:4 ஆகும். இவ்வசனத்தில் "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், மரணத்தின் பின்னர் மனிதனின் எந்த ஒரு பகுதியும் வாழ்வதில்லை என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[56] ஆனால் மானிட சரீரம் மரித்தாலும் அவனில் இருக்கும் ஆவிக்குரிய பகுதி அழியாமல் இருக்கும் என்னும் வேதாகம சத்தியத்தை இவ்வசனம் முரண்படுத்தவில்லை. ஏனென்றால், நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஆத்துமா என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்லுக்குப் பல அர்த்தங்கள் இருப்பதனால், இவ்வசனத்தில் ஆத்துமா என்னும் சொல் எத்தகைய அர்த்தத்தில் உள்ளது என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டும். உண்மையில், இவ்வசனத்தில் ஆத்துமா என்னும் சொல், மனிதனின் ஆவிக்குரிய பகுதியை மாத்திரம் அல்ல, முழு மனிதனையுமே குறிக்கின்றது என்பதை இவ்வசனம் இடம்பெறும் வேதப்பகுதி அறியத்தருகின்றது.[57] எனவே, பாவம் செய்கிற மனிதனே அதன் தண்டனையான மரணத்தை அனுபவிப்பான், அவனது பெற்றோரின் பாவத்திற்காக அவன் தண்டிக்கப்படமாட்டான் என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாகும். இதனால், "சரீரப்பிரகாரமான மரணத்தைப் பற்றியே இவ்வசனம் கூறுகிறது."[58] அதாவது, பாவம் செய்கிறவன்

[56] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 169.
[57] L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, p. 189; H.W.Wolff, *Anthropology of the Old Testament*, pp. 18-25.
[58] R.H.Alexander, *Ezekiel: Expositor's Bible Commentary Vol.6*, p. 824.

மரணமடைவான் என்பதே இவ்வசனத்தின் நேரடியான மொழிபெயர்ப்பாகும்.[59] எனவே, இவ்வசனம் மரணத்தின் பின் மனிதனுடைய ஆவிக்குரிய பகுதிக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றி எதுவும் கூறவில்லை.

உண்மையில், பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன யூதர்களுக்கே எசேக்கியேல் தீர்க்கதரிசனமுரைத்தார் (எசே.1:1).[60] பாபிலோனிலிருந்த யூதர்கள், தங்கள் மூதாதையருடைய பாவத்திற்கான தண்டனையாகவே தாங்கள் சிறைப்பட்டிருப்பதாகக் கருதினார்கள்.[61] இது யாத்திராகமம் 20:5ஐ அடிப்படையாகக் கொண்ட அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.[62] இவ்வசனத்தில் தேவன், "உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" என்று இஸ்ரவேல் மக்களை எச்சரித்துள்ளார். தேவனுடைய இத்தகைய செயல்முறையே, யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனதற்கான காரணமாயிருந்தது என்பதை 2ராஜாக்கள் 24:1-4 அறியத்தருகின்றது.[63] எசேக்கியேலும் 15ம் 16ம் 17ம் அதிகாரங்களில் இதை சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், யூதர்களுடைய பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்னர், தேவன் இவ்விதமாகப் பெற்றோரின் பாவத்திற்காகப் பிள்ளைகளைத் தண்டிப்பதில்லை என்பதை எசேக்கியேல் 18ம் அதிகாரத்தில் அறியத்தருகின்றார். இதனால்தான், எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம், "பிதாக்கள் திராட்சை காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக் குறித்துச் சொல்லுகிறது என்ன?" என்று கேட்கும் தேவன், "இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்

---

[59] L.C.Allen, *Ezekiel 1-19: Word Biblical Commentary Volume.28*, p. 272.

[60] எசேக்கியேல் 1:1ல் "நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது" என்று எசேக்கியேல் குறிப்பிட்டுள்ளார். பாபிலோனியர்கள் மூன்று தடவைகள் யூதேயாவின்மீது படையெடுத்தனர். இதனால், கி.மு.605ல் தானியேல் உட்பட பலர் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனார்கள். அதன்பின்னர் கி.மு.597ல் சிறைப்பட்டுப் போனவர்களில் எசேக்கியேலும் இருந்தார். கடைசியாக கி.மு.586ல் பெரும்பாலானவர்கள் பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டார்கள்.

[61] R.H.Alexander, *Ezekiel: Expositor's Bible Commentary Vol.6* p. 823; L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, p. 188.

[62] யாத்திராகமம் 20:5ல் சொல்லப்பட்ட விஷயம் யாத்திராகமம் 34:6-7லும், உபாகமம் 5:9லும் உள்ளது.

பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று (எசே.18:2-3) தெரிவித்துள்ளார். "பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின" என்பது, பெற்றோரின் பாவத்திற்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகின்றார்கள் என்பதைக் குறிப்பிடும் ஒரு பழமொழியாக அக்காலத்தில் இருந்தது.[64] எரேமியா 31:29லும் இப்பழமொழி உள்ளது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து யாத்திராகமம் 20:5ன்படி பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் விசாரித்து வந்த தேவன்,[65] தாம் இனிமேல் இவ்விதமாகச் செய்வதில்லை என்பதை எசேக்கிலே 18ம் அதிகாரத்தில் தெரிவிக்கின்றார். இதனால்தான், "இப்பழமொழி இஸ்ரவேலில் இனிமேல் சொல்லப்படுவது இல்லை" என்று கூறும் தேவன் (எசே.18:3), "இதோ

---

[63] 2ராஜாக்கள் 24:1-3ல் "அவன் (யோயாக்கீம்) நாட்களிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்தான். யோயாக்கீம் மூன்று வருஷம் அவனைச் சேவித்து, பின்பு அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். அப்பொழுது கர்த்தர் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் அவன்மேல் வரவிட்டார். தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார். மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[64] D.I.Block, *Ezekiel: The New International Commentary on the OT*, p. p. 558.

[65] பெற்றோரின் பாவத்திற்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுவது நியாயமான செயல் அல்ல என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், தேவனுடைய தண்டனை எப்பொழுதும் நியாயமானதாகவே இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை (D.Stuart, *Ezekiel: Communicator's Commentary*, p. 153). உண்மையில், "ஒருவன் செய்யும் பாவம் அவனது பிள்ளைகளையும் பாதிக்கின்றது" (F.B.Hurey, *Exodus: Bible Study Commentary*, p. 87). அதாவது, "பெற்றோரின் பாவ வாழ்வைப் பிள்ளைகளும் பின்பற்றுவதனால் அவர்கள் மீது தேவதண்டனை வருகிறது" (W.C.Kaiser, *Exodus: Expositor's Bible Commentary Volume 2*, p. 423). எனவே, பாவமற்றவர்களைத் தேவன் தண்டிக்கின்றார் என்று கூறமுடியாது. "பெற்றோர் செய்கின்ற பாவங்கள் அவர்களுடைய பிள்ளைகளின் வாழ்விலும் காணப்படுவதனால் அவர்கள் தண்டிக்கப்படுகின்றனர் (D.K.Stuart, *Exodus: The New American Commentary*, p. 454). யோசுவா 7ம் அதிகாரத்தில் உள்ள ஆகான் என்பவனுடைய சரிதையில், அவனுடைய குடும்பத்தினரும் அவனுடைய பாவத்திற்கு உடந்தையாய் இருந்ததினால், அதாவது, அவர்கள் அதற்கெதிராக எதுவும் செய்யாமல் இருந்ததினால் அவர்களும் தண்டிக்கப்பட்டனர் (L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, p. 189). எனினும், ஒருவன் அல்லது ஒரு தலைமுறை செய்யும் பாவத்தின் விளைவு பயங்கரமானதாக இருப்பதோடு அது நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கும் (C.H.Dyer, *Ezekiel: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 1260).

எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள். தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'' என்று தெரிவித்துள்ளார் (எசே.18:4). எனவே, யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, மரணத்தின்போது மனிதனுடைய ஆத்துமா அழிந்துபோகும் என்று தேவன் இவ்வசனத்தில் கூறவில்லை. பாவம் செய்கிற மனிதனே தன்னுடைய பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவான் என்றே இவ்வசனம் கூறுகிறது.

மரணத்தின் பின் மனிதனின் சடப்பொருள் பகுதியான சரீரம் அழிந்திட ஆவிக்குரிய பகுதியான ஆவியும் ஆத்துமாவும் தேவனிடம் செல்கின்றது

மரணத்தின் பின் மனிதனின் சடப்பொருள் பகுதியான சரீரம் அழிந்திட ஆவிக்குரிய பகுதி தேவனிடம் செல்கின்றது என்பதைப் பழைய ஏற்பாடு அறியத்தருகிறது (ஆதி.3:19, 12:7).[66] பழைய ஏற்பாட்டில் துன்மார்க்கரின் ஆத்துமா எங்கு செல்லும் என்பது பற்றிய முழுமையான வெளிப்படுத்தல் கொடுக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் மரித்தவர்கள் "பாதாளத்தில் இறங்குவதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.37:35, 42:38, 44:29, 44:31, எண்.16:30). ''பாதாளம்'' என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஷியொல்" என்னும் எபிரேயச் சொல், மரித்தவர்களின் சரீரம் செல்லும் இடமான கல்லறையைக் குறிக்கின்றது. இதனால்தான், மரணத்தின் பின்னர் துன்மார்க்கர் மாத்திரமல்ல, நீதிமான்களும் பாதாளத்துக்குச் செல்வதாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசா.38:10, ஆதி.37:35, 42:38, எண்.16:30, யோபு. 17:13-16, 21:13, 24:19-20, சங்.31:17). ஆனால், புதிய ஏற்பாட்டில் நீதிமான்களினதும், துன்மார்க்கரினதும் ஆத்துமாக்கள் வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதையும், இவ்விரு இடங்களுக்கும் இடையில் எவ்விதத்திலும் இணைக்கப்படமுடியாத பிளவு இருப்பதையும் லாசரு ஐசுவரியவான்

[66] மரணத்தின் பின் மனிதனுடைய சரீரம் மண்ணுக்குப் போகும் என்பதைத் தேவன் ஆதாமிடம் கூறும்போது "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்'' என்றார் (ஆதி.3:19). இதனால், "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை'' என்று பிரசங்கி கூறுகிறார் (பிர.12:7).

உவமையின் மூலம் இயேசுகிறிஸ்து அறியத்தந்துள்ளார். (லூக்.16:26). இவ்வுவமையில் நீதிமான்கள் செல்லுமிடம் "ஆபிரகாமின்மடி" என்றும், துன்மார்க்கர் செல்லுமிடம் "பாதாளம்" என்றும் அழைக்கப்படுகிறது (லூக்.16:22-23). தமிழ் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் மரித்தோரின் சரீரங்கள் செல்லும் இடமான கல்லறையைக் குறிக்கும் "ஷியொல்" என்னும் எபிரேயச் சொல்லைப் பாதாளம் என்று மொழிபெயர்த்தவர்கள், புதிய ஏற்பாட்டில் மரித்த துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் செல்லுமிடத் தைக் குறிப்பிடும் "ஹேதீஸ்" என்னும் சொல்லைப் பாதாளம் என்று மொழிபெயர்த்துள்ளனர். இதனால் தமிழ் வேதாகமத்தில் பாதாளம் என்னும் சொல் இரண்டு ஏற்பாடுகளிலும் ஒரே அர்த்தத்தில் இல்லை. வெளிப்படுத்தல் 20:14ல் பாதாளம் (ஹேதீஸ்) அக்கினிக் கடலில் தள்ளப்படுவதனால், அங்கு துன்மார்க்கர் மாத்திரமே இருப்பது தெளிவா கின்றது. லாசரு ஐசுவரியவான் என்போரைப்பற்றிய உவமையின்படி மரித்த நீதிமான்கள் செல்லும் "ஆபிரகாமின் மடி" என்பது பரதீசுக்கு யூதர்கள் கொடுத்திருந்த ஒரு பெயராகும்.[67] இவ்விதமாக, மரணத்தின் பின்பு நீதிமான்களும் துன்மார்க்கரும் செல்லும் இடங்கள் பற்றி வேதாக மம் அறியத்தருவதனால், மரணத்தோடு மானிட ஆத்துமா அழிந்து போகிறது என்னும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசம் வேதாகமத் திற்கு முரணானதாயுள்ளது. ஏனெனில், மரணத்தின் பின்பும் மானிட ஆத்துமா உயிருடனும், உணர்வுடனும் இருக்கும் என்பதே வேதாகமம் போதிக்கும் சத்தியமாகும்.

## (2). ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேருக்கு மேல் இருக்க முடியாத பரலோகம்

மனிதனின் இறுதிநிலையைப்பற்றிய யெகோவாவின் சாட்சிகளின் இன்னுமொரு வேதப்புரட்டு உபதேசம், பரலோகம் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேருக்கு மாத்திரமே உரியது என்னும் போதனையாகும். அதாவது, "144000 பேரே பரலோகத்துக்குப் போய் இயேசுகிறிஸ்துவோடு ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்பார்

[67] J.Blanchard, *Whatever Happened to Hell?* p. 38.

கள்"[68] என்று கூறும் யெகோவாவின் சாட்சிகள், இவர்களே "அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்" என்றும் (வெளி.7:4, 14:1-3), "மறுபடியும் பிறந்து தேவனுடைய பிள்ளைகளாகியவர்கள்" என்றும் கூறுகின்றனர்.[69] எனினும், இவர்கள் சரீரப்பிரகாரமாக அல்ல, "முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கடைந்து"[70] ஆவிக்குரிய பிரகாரமாக பரலோகத்தில் இருப்பார்கள் என்பதே இவர்களின் நம்பிக்கையாகும்.[71] அதாவது, இவர்கள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விளக்குவது போலவே, "144000 பேரும் சரீரமில்லாமல் ஆவியாக உயிர்த்தெழுந்து, ஆவியாக இருக்கும் இயேசுகிறிஸ்துவோடு பரலோகத்தில் இருப்பார்கள்"[72] என்று கூறுவதோடு, புதிய ஏற்பாட்டில் ஒரு கிறிஸ்தவனைக் குறிப்பிடும் விவரணங்கள் அனைத்தும் இந்த 144000 பேரை மாத்திரமே குறிப்பதாகக் கருதுகின்றனர்.[73] உலகின் மக்கள் தொகையைக் கருத்திற் கொள்ளும்போது இந்த 144000 பேரும் இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட "சிறு மந்தையை" (லூக்.12:32) சேர்ந்தவர்கள் என்றும், "12 அப்போஸ்தலர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சிறு மந்தையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 1935ம் ஆண்டு 144000 ஆகியது"[74] என்றும் கூறும் யெகோவாவின் சாட்சிகள், இந்த சிறு மந்தைக்குள் சேர்த்துக் கொள்ளப்படாத தங்கள் சங்கத்தின் அங்கத்தினர்கள் நித்திய காலமாய் இப்பூமியில் வாழ்வார்கள் என்றும்,[75] இவர்களே வெளிப்படுத்தல் 7:9ல் "திரளான கூட்டமாகிய ஜனங்கள்" என்றும், யோவான் 10:16ல் "இந்தத் தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் விளக்குகின்றனர்.[76]

யெகோவாவின் சாட்சிகள் லூக்கா 12:32ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறு மந்தையை வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள 144000 பேராகக் கருதுவது தவறாகும். ஏனெனில், இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தம்முடைய

---

[68] Anonymous, *Let God be True*, pp. 136-137. Anonymous, *Reasoning from the Scriptures*, p. 76; Anonymous, *Make Sure of All Things*, p. 303.

[69] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 76.

[70] Anonymous, *Let God be True*, p. 277.

[71] Anonymous, *Your Will be Done on Earth*, p. 50.

[72] Anonymous, *Let God be True*, pp. 137-138, 200.

[73] R.Rhodes, *Reasoning from the Scriptures with Jehovaha's Witnesses*, p. 254,255.

[74] Anonymous, *Let God be True*, 137.

[75] Anonymous, *Your Will be Done on Earth*, p. 50.

[76] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 166.

பன்னிரு சீடர்களையே சிறுமந்தை என்று குறிப்பிட்டுள்ளார்.[77] 12ம் அதிகாரத்தில் 22ம் வசனத்திலிருந்து தம் பன்னிரு சீடர்களுடனும் பேசும் இயேசுகிறிஸ்து, அவர்கள் சிறு குழுவினராக இருந்ததினால் 32ம் வசனத்தில் அவர்களைச் "சிறு மந்தை" என்று அழைத்துள்ளார்.[78] மேலும், "இயேசுகிறிஸ்துவின் சீடரின் காலத்திலிருந்து 1935 வரையிலான காலப் பகுதியிலேயே பரலோகத்துக்குப் போகும் 144000 பேரும் சிறு மந்தைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்"[79] என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுவது உண்மையென்றால், பழைய ஏற்பாட்டுப் பக்தர்களில் எவருக்குமே பரலோகத்துக்குப் போக முடியாது. ஆனால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசியாகிய எலியா பரலோகத்துக்குப் போனதைப் பற்றி 2ராஜாக்கள் 2:11ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[80] அத்தோடு, மத்தேயு 8:11, லூக்கா 13:28 போன்ற வசனங்களில் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் பரலோகத்தில் இருப்பார்கள் என்று இயேசுகிறிஸ்து அறியத்தந்துள்ளார்.[81] லூக்கா 12:32ல் "பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று கூறிய இயேசுகிறிஸ்து, லூக்கா 13:28ல், "நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் ராஜ்யத்தில் இருக்கிறவர்களாகக் காண்பீர்கள்" என்று தெரிவித்துள்ளார். இதிலிருந்து, சிறு மந்தையும், பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் ஒரே இடத்திற்கே செல்லுவார்கள் என்பது தெளிவாகின்றது. எனவே, புதிய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள 144000 பேர் கொண்ட சிறு மந்தை மாத்திரமே பரலோகத்துக்குப் போகும் என்பது வேதாகமத்திற்கு முரணான ஒரு உபதேசமாகவே உள்ளது. மேலும், 1958ம் ஆண்டில் "1931ம் ஆண்டிலேயே

---

[77] I.H.Marshall, *Luke: The New International Greek Testament Commentary*, p. 530; J.B.Green, *Luke: The International Commentary on the NT*, p. 495.

[78] R.C.H.Lenski, *The Interpretation of St.Luke's Gospel*, p. 697.

[79] *The Watchtower*. 15 February 1995, p. 19.

[80] 2ராஜாக்கள் 2:11ல் "எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[81] மத்தேயு 8:11ல் "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" என்றும், லூக்கா 13:28ல் "நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்" என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

144000 பேரும் சிறுமந்தைக்குள் சேர்க்கப்பட்டுவிட்டனர்"[82] என்று கூறிய யெகோவாவின் சாட்சிகள், 1975ல் இதை முரண்படுத்தும் விதத்தில் "1935ம் ஆண்டே சிறுமந்தையில் இருப்போரின் தொகை 144000 ஆகியது"[83] என்றும், சிறப்பான ஒரு வெளிப்படுத்தல் மூலம் தங்கள் தலைவர் ஜோசப் ரதர்.்.போர்ட்டுக்கு இத்தெய்வீச் சத்தியம் கிடைத்தது என்றும் தெரிவித்தனர்.[84] ஆனால், யெகோவாவின் சாட்சிகளின் ஆரம்பகர்த்தாவான சார்ள் ரசல், 1881ம் ஆண்டே சிறு மந்தையில் 144000 பேர் இருந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.[85] எனவே, இவர்களுடைய கூற்றின்படி, 144000 பேரை எண்ணிக் கணக்கெடுப்பதில் இவர்கள் நம்பும் தேவனே தவறுவிட்டுள்ளார்.[86] இதனால், எப்பொழுது சிறுமந்தையில் 144000 பேரும் சேர்வார்கள் என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது என்று தற்பொழுது கூறுகின்றனர்.[87]

யெகோவாவின் சாட்சிகள் கூறுவது போல பரலோகத்தில் 144000 பேர் மாத்திரமே இருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை.

யெகோவாவின் சாட்சிகள் கூறுவது போல பரலோகத்தில் 144000 பேர் மாத்திரமே இருப்பதாக வெளிப்படுத்தல் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. இதற்கு ஆதாரமாக இவர்கள் சுட்டிக்காட்டும் வெளிப்படுத்தல் 7:1-8ல் குறிப்பிடப்பட்டுள்ள 144000 பேரும், "இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் சேர்ந்தவர்கள்" என்றே இவ்வசனங்கள் கூறுகின்றன.[88] இதனால், பன்னிரு கோத்திரங்களும் இவ்வசனத்தில் சொல்லப்த்

[82] J.F.Rutherford, *Let God be True*, p.298; Anonymous, *From Paradise Lost to Paradise Regained,* p. 195.

[83] Anonymous, *Man's Salvation out of World Distress At Hand,* p. 302. *The Watchtower*, 1 February 1995, p. 14.

[84] *The Watchtower*. 1 March 1985, p. 14; *The Watchtower*. 1 February 1982, p. 28.

[85] C.T.Russell, *Thy Kingdom Come*, p.362.

[86] D.Harris, *The Jehovah's Witnesses: Their Beliefs and Practices*, p. 131.

[87] *The Watchtower*, 1 May 2007 p.31.

[88] வெளிப்படுத்தல் 7:4-8ல் "முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப் பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர். யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

தமாகக் குறிப்பிடப்படவில்லை என்றும், இது தங்களைக் குறிக்கும் உருவக விவரணம் என்றும் யெகோவாவின் சாட்சிகள் வாதிடுகின்றனர்.[89] உண்மையில், யெகோவாவின் சாட்சிகளின் தவறான வேதவியாக்கியான முறைக்கு இது சிறந்த உதாரணமாய் உள்ளது. ஏனென்றால், 144000 பேரை சொல்லர்த்தமாக விளக்கும் இவர்கள், அந்த 144000 பேரும் "இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் சேர்ந்தவர்கள்" என்பதை மாத்திரம் சொல்லர்த்தமாக விளக்க மறுக்கின்றனர். இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் சேர்ந்த 144000 பேரும், "தேவனுடைய ஊழியக்காரர்" என்பதை வெளிப்படுத்தல் 7:3 அறியத் தருகிறது. மேலும், வெளிப்படுத்தல் 14:3ல் "இவர்கள் பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால், இவர்கள் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான "உபத்திரவ காலத்தில்" இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்கின்றோம். ஏனெனில், வெளிப்படுத்தல் புத்தகத்தில் 4ம் அதிகாரத்திற்குப் பின்னர், உலகின் முடிவு காலத்தில் அதாவது, கிறிஸ்தவ சபை உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் நடைபெறும் சம்பவங்களே முன்னறிவிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஏழு வருஷங்களுக்கு முழு உலகமும் அந்திகிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் இருப்பதோடு, பரலோகத்திலிருந்து வரும் தேவனுடைய இரண்டு சாட்சிகளின் ஊழியத்தின் மூலம் (வெளி.11:3-6) இஸ்ரவேலரில் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். இவர்களில் 144000 பேர் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பார்கள் என்பதையே வெளிப்படுத்தல் 7:1-8 அறியத்தருகிறது. எனவே, தற்காலத்தில் எவருமே தாங்கள் தான் வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள 144000பேர் என்று கூறமுடியாது. (இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு எனது "இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை" என்னும் நூலைப் பார்க்கவும்)

---

ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[89] Anonymous, *Let God be True*, 130.

வெளிப்படுத்தல் 7:4-8ல் "யோசேப்பின் கோத்திரத்தைப்பற்றி" குறிப்பிடப் பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள் (வெளி.7:8ல்), பழைய ஏற்பாட்டில் யோசேப்பு தனியான ஒரு கோத்திரமாகக் கருதப்ப டாததினால், இப்பகுதியைச் சொல்லர்த்தமாக விளக்க முடியாது என்று கூறுகின்றனர். மேலும், பழைய ஏற்பாட்டிலுள்ள "எப்பிராயீம்" மற்றும் "தாண்" என்னும் இரண்டு கோத்திரங்களும் வெளிப்படுத்தலில் குறிப்பிடப்படாதிருப்பதையும், ஆலயப் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்ட லேவி கோத்திரம் பன்னிரு கோத்திரங்களில் ஒன்றாகக் கருதப்படாத போதிலும் வெளிப்படுத்தலில் தனியான கோத்திரமாகக் குறிப்பிடப்பட்டி ருப்பதையும் சுட்டிக்காட்டும் யெகோவாவின் சாட்சிகள், வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களும் சொல்லர்த் தமானவை அல்ல என்பதற்கு இவைகள் போதுமான ஆதாரங்களாக இருப்பதாக வாதிடுகின்றனர்.[90] ஆனால், வேதாகமத்தில் "கோத்திரம்" என்னும் சொல் சொல்லர்த்தமாக ஒரு குறிப்பிட்ட இனத்தைக் குறிப் பிடும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிப்படுத் தல் 7ம் அதிகாரத்தில் ஒவ்வொரு கோத்திரமும் தனித்தனியாகப் பெயரிட்டுக் குறிப்பிடப்பட்டிருப்பதனால் இவை சொல்லர்த்தமான கோத் திரங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இவை உருவக விவரணம் என்றால், ஒவ்வொரு கோத்திரமும் எதைக் குறிக்கின்றது என்று தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கூறவேண்டும். யெகோவா வின் சாட்சிகள் பன்னிரு கோத்திரங்களும் தங்களையே குறிக்கின்றது என்று கூறுவது அர்த்தமற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது. ஏனென் றால், வெளிப்படுத்தல் புத்தகத்தில் உருவக விவரணங்களுக்கு இப்புத் தகத்தில் அல்லது வேதாகமத்தின் ஏனைய தீர்க்கதரிசனப் புத்தகங்க ளில், இல்லையென்றால் அக்கால யூதர்களுடைய மொழிவழக்கில் விளக்கங்கள் உள்ளன. இதனால், வெளிப்படுத்தலில் உள்ள உருவக விவரணங்களுக்கு நாம் நம்முடைய கற்பனையில் எவ்வித விளக்கமும் கொடுக்கத் தேவையில்லை.

வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் மக்களின் பன்னிரு கோத்திரங்களைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது உண்மை என்றால், இங்கு எப்பிராயீம், தாண் என்னும் இரண்டு கோத்திரங்களும் ஏன் விடப்பட்டுள்ளன என்னும் கேள்வி எழுவது இயற்கையே. உண்மையில்,

[90] Anonymous, *Let God be True*, 166-167.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களின் கோத்திரங்களின் பெயர்களைக் கொண்ட 19 பட்டியல்கள் உள்ளன.[91] இவை ஒவ்வொன்றிலும் கோத்திரங்களின் பெயர்களும் எண்ணிக்கையும் வித்தியாசப்படுவதோடு, வெளிப்படுத்தலில் உள்ள பட்டியலின் பெயர்களின் ஒழுங்குமுறை இந்த 19 பட்டியல்களில் எதனுடனும் இணங்குவதாய் இல்லை.[92] ஒவ்வொரு பட்டியலும் அவை எழுதப்படும்போது கோத்திரத்தினர் இருந்த ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ளது.[93] இதனால்தான், ஆதியாகமம் 29:32-35:18ல் கோத்திரப் பிதாக்கள் பிறந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டும், ஆதியாகமம் 49:3-27ல் கோத்திரப் பிதாக்களின் தகப்பனான யாக்கோபு அவர்களை ஆசீர்வதித்த ஒழுங்கு முறையிலும், எண்ணாகமம் 2:3-31ல் இஸ்ரவேல் மக்கள் கூடாரமடித்திருந்த முறையிலும், எண்ணாகமம் 26:4-51ல் குடித்தொகை கணக்கிடப்பட்ட முறையிலும், உபாகமம் 27:12-13ல் ஆசீர்வாதமும் சாபமும் கொடுக்கப்பட்ட முறையிலும், உபாகமம் 33:6-25ல் மோசே மக்களை ஆசீர்வதித்த ஒழுங்கு முறையிலும் கோத்திரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், யாக்கோபுக்கு மொத்தம் 13 பிள்ளைகள் இருந்ததினால், கோத்திரங்களைப் 12ஆகக் குறிப்பிடுவதற்காக ஒவ்வொரு பட்டியலிலும் ஏதாவது ஒரு கோத்திரத்தின் பெயர் விடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாக்குத்தத்த பூமியில் லேவி கோத்திரத்திற்குத் தனியான ஒரு பிரதேசம் கொடுக்கப்படாததினால், இவர்களுடைய பெயர் பெரும்பாலான பட்டியல்களில் இடம்பெறவில்லை.[94]

வெளிப்படுத்தல் பட்டியலில் யூதா கோத்திரத்தின் பெயர் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் பிறந்ததினால், இதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.[95] வெளிப்படுத்தலில் தாண் கோத்திரத்தின் பெயர் இடம்பெறாமல்

---

[91] ஆதி.35:22-26, 46:8-25, 49:3-27, யாத்.1:2-5, எண்.1:5-15, 2:3-31, 13:4-15, 26:4-51, 34:19-28, உபா.27:12-13, 33:6-25, யோசு.13:7-33, நியாயா.5:12-18, 1நாளா.2:1-8:40, 12:24-37, 27:16-22, எசே.48:1-8, 48:23-28, 48:31-34 என்னும் பகுதிகளில் இப்பட்டியல்கள் உள்ளன.

[92] G.D.Fee, *Revelation: New Covenant Commentary*, p. 107.

[93] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 479.

[94] W.Scott, *Exposition of the Revelation of Jesus Christ*, p. 166.

[95] R.H.Mounce, *The Book of Revelation: New International Commentary on the New Testament*, pp. 169; G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 314.

இருப்பதற்கு முக்கிய காரணம், இவர்கள் வாக்குத்தத்தப் பூமியில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பிரதேசத்தைக் கைப்பற்ற முடியாதவர்க ளாக இருந்ததேயாகும் (நியா.1:34).[96] மேலும், இவர்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரதேசத்தில் குடியிருக்காமல், தீரு சீதோன் பகுதிகளில் குடியிருந்ததோடு, தேவனுக்குப் பதிலாக விக்கிர கங்களை வழிபட்டு வந்தனர் (நியா.18:14-31). இஸ்ரவேலில் விக்கிரக வழிபாட்டை அறிமுகப்படுத்தும் கோத்திரம் இஸ்ரவேலிலிருந்து புறம்பாக் கப்படும் என்று உபாகமம் 29:18-21ல் அறிவிக்கப்பட்டுள்ளதினால்,[97] தொடர்ச்சியாக விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டு வந்த தாண் கோத்திரத் தின் பெயர் (நியா.18:2, 18:30-31, 1ராஜா.12:28-30) வெளிப்படுத்தல் புத்தகத்தில் இடம் பெறவில்லை.[98] மேலும், ஆதியாகமம் 49:17ல் தாண் கோத்திரத்தைப்பற்றி யாக்கோபு கூறும்போது, "குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான்" என்று முன்னறிவித்துள்ளார். இதனால், சாத்தானே தாண் கோத்திரத்தின் ராஜா என்றும்,[99] அந்தி கிறிஸ்து இக்கோத்திரத்திலிருந்து வருவான் என்றும் அக்காலத்தில் நம்பப்பட்டு வந்தது.[100] இதனாலேயே வெளிப்படுத்தலில் தேவனுடைய ஜனங்களான பன்னிரு கோத்திரங்களின் பெயர்களில் தாண் கோத்திரத் தின் பெயர் இடம்பெறவில்லை என்றும் வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[101]

---

[90] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 481. நியாயாதிபதி கள் 1:34ல், "எமோரியர் தாண் புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல், மலைத்தேசத்திற்குப் போகும்படி நெருக்கினார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[96] உபாகமம் 29:18-21ல் "ஆகையால், அந்த ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப் போகும்படி, இன்று நம்முடைய தேவனாகிய கர்த்தரைவிட்டு அகலுகிற இருதய முள்ள ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் குடும்பமாகிலும் கோத்திரமாகிலும் உங்களில் இராதபடிக்கும், நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில் இராதபடிக்கும் பாருங்கள். அப்படிப்பட்டவன் இந்த ஆணையுறுதி யின் வார்த்தைகளைக் கேட்டும், தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சுகமுண்டாயிருக்கும் என்று தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால், கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார். அப்பொழுது கர்த்தரின் கோபமும் எரிச்சலும் அந்த மனிதன்மேல் புகையும். இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல் தங்கும். கர்த்தர் அவன் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார். இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையினுடைய சகல சாபங்களின்படியும் அவனுக்குத் தீங்காக கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் அவனைப் புறம்பாக்கிப்போடுவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் யோசேப்பின் கோத்திரமானது ஒன்றில் யோசேப்புக் குப் பதிலாக அவனது இரு குமாரர்களின் பெயர்களுடன் இரண்டு கோத்திரங்களாக (எசே.48:5-6) அல்லது, பிள்ளைகளின் பெயர்கள் இல்லாமல் யோசேப்பின் பெயருடன் தனியொரு கோத்திரமாகக் (ஆதி. 49) குறிப்பிடப்பட்டுள்ளது.[102] வெளிப்படுத்தலில் யோசேப்பினதும் அவனு டைய ஒரு குமாரனதும் பெயர் மாத்திரமே உள்ளது. "எப்பிராயீம் கோத்திரத்தாரின் நடவடிக்கைகள் எப்போதும் கசப்பான நினைவுக ளையே கொண்டுவந்ததினால், வெளிப்படுத்தலில் அவனது பெயருக்குப் பதிலாக அவனது தகப்பன் யோசேப்பின் பெயர் இடம்பெற்றுள்ளது."[103] தாண் கோத்திரத்தைப் போலவே இவர்களும் தொடர்ச்சியாக விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர் (நியா.17:1-13, 18:2, 18:30-31, 1ராஜா.12:25-29, ஓசி.4:17). மேலும், இவர்கள் தாவீதின் குடும்பத்திற்கு ஒரு இழிவாக வும், யுத்தங்களின்போது யூதேயாவின் எதிரிகளின் பக்கமே இருந்ததி னாலும் (ஏசா.7:2, 7:5, ஓசி.5:3), வெளிப்படுத்தலில் இவர்களின் பெயரும் இடம்பெறவில்லை. இதற்குப் பதிலாக யோசேப்பின் பெயர் உள்ளது. இதைப்போலவே, நியாயாதிபதிகள் 1:22,35லும் எப்பிராயீமுக்குப் பதிலாக யோசேப்பின் பெயர் உள்ளது.

வெளிப்படுத்தல் 7:9லுள்ள "திரளான கூட்டத்தினர்" யெகோவாவின் சாட்சிகள் வாதிடுவதுபோல, பூமியில் இருக்கும் மக்கள் அல்ல. இவர்கள் பரலோகத்தில் இருப்பதாகவே 7:9-17 வரையிலான வசனங்கள் அறியத் தருகின்றன. 9ம் வசனத்தில் இவர்கள் "பரலோகத்தில் தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் முன்பாக" இருப்பதாகவும், 15ம் வசனத்தில் இவர்கள் "எப்பொழுதும் பரலோகத்திலேயே இருப்பார்கள்" என்பதையும் அறிந்துகொள்கின்றோம். ஆனால், யெகோவாவின் சாட்சிகள், திரளான மக்கள் "சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு

---

[97] R.H.Mounce, *The Book of Revelation: New International Commentary on the New Testament*, pp. 169-170; G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 314; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 141.

[98] *The Testament of Dan* 5:6.

[99] Irenaeus, *Adv.Haer*. v.30.2.

[100] H.Alford, *The Greek New Testament Volume IV*, p. 625.

[101] A.F.Johnson, *Revelation: Expositor's Bible Commentary*, p. 479.

[102] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 481.

[103] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 167.

முன்பாகவும் இருப்பதாக" வெளிப்படுத்தல் 7:9ல் குறிப்பிடப்பட்டிருப் பதை, "பரலோக சிங்காசனத்திலிருந்து பார்க்கக்கூடிய இடத்தில் அவர்கள் பூமியில் இருப்பதாக" விளக்குகின்றனர்.[104] ஆனால் இது யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்தை வேதாகமத்திற்குள் புகுத் தும் விளக்கமாகவே உள்ளது. ஏனென்றால், வெளிப்படுத்தல் 7:9ல் "முன்பாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "எனோப்பியன்" (*anopion*) என்னும் கிரேக்கச் சொல், பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத் திற்கு முன்பாக இருப்பதைக் குறிப்பிடவே 5:8, 7:11, 14:3 போன்ற வசனங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே இதை, "சிங்காசனத்தி லிருந்து பார்க்கக்கூடிய இடத்தில்" என்று மொழிபெயர்க்கமுடியாது.[105] மேலும், பரலோகத்தில் 144000 பேர் அல்ல, திரளான மக்கள் கூட்டம் இருப்பதாகவே வெளிப்படுத்தல் 19:1 கூறுகிறது. இவ்வசனத்தில் யோவான், "இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட் டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, இங்கு 144000 பேர் மாத்திரமே இருப்பார்கள் என்று யெகோ வாவின் சாட்சிகள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் அனைவருக்கும் பரலோக வாழ்வு உண்டு என்று வேதாகமம் கூறுவதனால், கிறிஸ்தவர்களைப் பரலோகம் போகும் 144000 பேராகவும் பூமியில் வாழும் திரளானவர்களாகவும் இரண்டு குழுக்களாகப் பிரிக்க முடியாது.

பரலோகத்தில் 144000 பேர் மாத்திரமே இருப்பார்கள் என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக் கொண்டு, அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்

---

104 W.F.Arndt & F.W.Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, p. 270.

105 யோவான் 3:16ல் "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிற வன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று கூறும் வேதாகமம், யோவான் 3:36ல் "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்" என்பதை அறியத்தருகின்றது.

கும் பரலோக வாழ்வு உண்டு (யோவா.3:16,36)[106] என்று வேதாகமம் கூறுவதனால், கிறிஸ்தவர்களைப் “பரலோகம் போகும் 144000 பேராகவும்” “பூமியில் வாழும் திரளானவர்களாகவும்” இரண்டு குழுக்க ளாகப் பிரிக்க முடியாது. கிறிஸ்தவர்கள் அனைவரும், “பரிசுத்தவான்க ளோடே ஒரே நகரத்தாராகவும்'' (எபே.2:19), அவர்கள் அனைவரும் “பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகவும்” (எபி.3:1) இருப்பதனால், அவர்கள் அனைவரது “குடியிருப்பும் பரலோகத்திலேயே இருப்பதாக” (பிலி.3:20) வேதாகமம் கூறுகிறது. இது, “விசுவாசிக்கிற எல்லோருக்கும் கிடைக்கும். வித்தியாசமே இல்லை” என்று ரோமர் 3:22 அறியத்தருவத னால், விசுவாசிகளை இரண்டு குழுக்களாக யெகோவாவின் சாட்சிகள் பிரிப்பது வேதாகமத்திற்கு முரணான உபதேசமாகவே உள்ளது. மேலும், எல்லா மனிதரும் இரட்சிப்படைவதை விரும்பும் தேவன் எல்லா ரும் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து தேவனுடைய ராட்சியத் திற்குள் செல்லவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார் (யோவா.3:3).[107] ஆனால், “பரலோகத்திற்குச் செல்லும் 144000 பேருக்கு மாத்திரமே மறுபிறப்பின் அனுபவம் கிடைக்கும் என்றும், பூலோகப் பரதீசில் வாழப்போகும் ஏனையோருக்கு மறுபிறப்பு அவசியமில்லை”[108] என்றும் கூறுவது, வேதாகம சத்தியத்திற்கு முரணான ஒரு வேதப்புரட்டு உபதேசமாகவே உள்ளது.

## (3). பரலோகத்தை இழந்துவிட்ட பரிதாபமான பரிசுத்தவான்கள்

யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்தின்படி 1935ம் ஆண்டில் மனிதருக்குப் பரலோகத்திற்குப் போவதற்கான வழி மூடப்பட்டுவிட்டது. இதனால், பரலோகத்திற்கு அனுமதிக்கப்படும் 144000 பேரில் இடம்பெ றாதவர்களும், 1935ம் ஆண்டின் பின்னர் யெகோவாவின் சாட்சிகளுடன் சேர்பவர்களும் “புதுப்பிக்கப்படும் இவ்வுலகில் நித்திய காலமாக குடியிருப்பார்கள்” என்றும், புதுப்பிக்கப்படும் இவ்வுலகமே வேதாகமத்

[106] யோவான் 3:3ல் “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத் தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்'' என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[107] *The Watchtower*, 15 February 1986 p. 14; *The Watchtower*, 1 April, 1988, p. 18.

[108] Anonymous, *Let God be True*, p. 264.

தில் குறிப்பிடப்பட்டிருக்கும் "பரதீசு" என்றும், இதில் குடியிருக்க அனுமதிக்கப்படுபவர்கள் ஜலப்பிரளயத்திலிருந்து நோவாவின் குடும்பத் தினர் காப்பாற்றப்பட்டது போல, அர்மகெதோன் யுத்தத்தின் அழிவுக ளில் இருந்து தப்புவிக்கப்படுவார்கள் என்றும்,[109] இவர்கள் மறுபடியுமாக இப்பூமியை அழகுபடுத்தி, தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப் பதோடு, சந்தோஷமாக இல்லறவாழ்வில் ஈடுபட்டு பூரணமான வாழ்வை அனுபவிப்பார்கள் என்றும் யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[110] 1935ம் ஆண்டு தங்களுக்கு இது பற்றிய தெளிவான தரிசனம் கிடைத் ததாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.[111]

"பரதீசு" என்பது மரித்த பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் செல்லுமி டம் என்னும் வேதாகமச் சத்தியத்தை மறுதலிக்கும் யெகோவாவின் சாட்சிகள், சங்கீதம் 37:9,11,29, 115:16 போன்ற வசனங்களை ஆதாரமா கக் கொண்டு, பரலோகத்துக்குப் போக முடியாத தங்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் நித்திய காலமாகக் குடியிருக்கப் போகும் பூமியே பரதீசு என்று கூறுகின்றனர். சங்கீதம் 37:9ல் "பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமி யைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்றும், சங்கீதம் 37:11ல் "சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" என்றும், சங்கீதம் 37:29ல், "நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப் பார்கள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதினால், துன்மார்க்கர் அனைவரை யும் முழுமையாக அழித்துவிடும் தேவன், நீதிமான்களை இப்பூமியில் நித்திய காலமாய் குடியிருக்கச் செய்வார் என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர்.[112]

யெகோவாவின் சாட்சிகள் 37ம் சங்கீதத்தை வியாக்கியானம் செய்யும் முறை தவறானதாகவே உள்ளது. ஏனெனில், இச்சங்கீதம் கடைசி காலத்தில் நடைபெறும் காரியங்களை முன்னறிவிக்கவில்லை என்பதை இவர்கள் கருத்திற்கொள்வதில்லை. எனினும், நீதிமான்களுக்குத்

---

[109] Anonymous, *Let God be True*, p. 231.
[110] Anonymous, *Mankind's Search for God*, pp. 358-359.
[111] Anonymous, *Reasoning from the Scriptures*, p. 162-163.
[112] W.E.Vine, ed. *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 66.

தேவன் அருளும் நிகழ்கால ஆசீர்வாதங்களைப் பற்றியே இச்சங்கீதம் அறியத்தருகின்ற போதிலும், இங்கு பூமி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "எயாரெஸ்" (*eres*) என்னும் எபிரேயச் சொல் "நிலம்" "நாடு" "மண்" என்னும் அர்த்தங்களையும் கொண்டுள்ளது.[113] இதனால்தான், புதிய ஆங்கில வேதாகமங்களில் இச்சொல் land என்று இச்சங்கீதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் வேதாகமத்திலுள்ள "பூமி" என்னும் சொல் ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தைத் தழுவிய மொழிபெயர்ப்பாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு பூமியை அல்ல, அதாவது முழு உலகத்தையும் அல்ல, வாக்குத்தத்த தேசமாகிய இஸ்ரவேல் நாட்டையே கொடுத்தார். இதனால், "நீதிமான்கள் வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வதைப் பற்றியே 37ம் சங்கீதம் கூறுகிறது."[114] மேலும், இவ்வசனத்தில் "சுதந்தரித்துக் கொள்ளுதல்" என்னும் சொல் உபாகமம் 4:1, 16:20, ஏசாயா 57:13, 60:21 என்னும் வசனங்களில் வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிப்பதைக் குறிப்பிடவே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, இதை எதிர்காலத்தில் உலகில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராட்சியத்தைப் பற்றிய விவரணமாக விளக்கமுடியாது. எனினும், 29ம் வசனம், அதாவது, "நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்" என்னும் வாக்கியம் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கு ஆதாரமாய் இருப்பது போலத் தென்படலாம். ஆனால் பழைய ஏற்பாட்டில் "என்றைக்கும்" என்னும் சொற்பிரயோகம், "மனிதர்களினால் அறியமுடியாத எதிர்காலத்தைக் குறிப்பிடும் எபிரேய மொழிவழக்காய் இருந்தது."[115] இது நித்தியத்தைக் குறிப்பிடும் சொல் அல்ல. எனவே, நீதிமான்கள் பூமியில் என்றைக்கும் வாசமாயிருப்பார்கள் என்னும் வாக்கியம், நீதிமான்கள் நித்திய காலமாய் பூமியில் இருப்பார்கள் என்பதை அல்ல, அவர்களும் அவர்களின் சந்ததியினரும் வாக்குத்தத்த பூமியில் தேவனுடைய ஆசீர்வாதத்துடன் நீடிய காலம் வாழ்வார்கள் என்பதையே அறியத் தருகின்றது.

---

[113] K.Schaefer, *Psalms: Berit Olam – Studies in Hebrew Narrative and Poetry*, p. 93; D.M.Williams, *Psalms 1-72: The Preacher's Commentary*, p. 295; A.Curtis, *Psalms: Epworth Commentary*, p. 84.

[114] R.L.Harris, *Theological Word Book of Old Testament*, Vol.2, p. 645.

[115] R.C.H.Lenski, *The Interpretation of St.Matthew's Gospel*, p. 188; R.T.France, *Matthew: Tyndale New Testament Commentary*, p. 110.

யெகோவாவின் சாட்சிகள் கூறுவதுபோல, எதிர்காலத்தில் பூமியில் ஸ்தாபிக்கப்படும் ராட்சியத்தைப் பற்றி 37ம் சங்கீதம் கூறாத போதிலும், மத்தேயு 5:5ல் "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்துக்கு ஆதாரமாய் இருப்பதுபோலத் தென்படலாம். இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் சங் கீதம் 37:11,22ஐயே குறிப்பிட்டுள்ளார் என்பது உண்மை என்றாலும்,[116] இவ்வசனத்தில் "பூமி" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள "ய்ய" (*ge*) என்னும் கிரேக்கச் சொல் பழைய ஏற்பாட்டைப் போல வாக்குத் தத்த தேசத்தை அல்ல, முழு உலகத்தையும் குறிப்பிடும் சொல்லாக உள்ளது. ஏனெனில், இச்சொல் ஒரு இடத்தின் பெயருடன் சேர்ந்துவரும் போதே குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தைக் குறிப்பிடும். ஆனால், மத்தேயு வின் சுவிசேஷத்தில் முழு உலகையும் குறிப்பிடும் விதத்திலேயே இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[117] எனினும், இங்கு உலகமானது நாம் வாழும் பூமியை அல்ல, எதிர்காலத்தில் புதிதாகச் சிருஷ்டிக்கப் படும் பூமியை,[118] அதாவது வரவிருக்கும் தேவனுடைய ராட்சியத்தையே குறிக்கின்றது.[119] ஏனெனில், நாம் இப்போது வாழும் உலகம் ஒருநாள் அழிந்து போகும். அதன் பின்னர் புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும் என்று வேதாகமம் கூறுகிறது (2பேது.3:7,10, வெளி. 21:1).[120] எனவே, நாம் இப்போது வாழும் உலகமே நித்திய காலமாய்

---

116 D.A. Carson, *Matthew: The Expositor's Bible Commentary Vol.* 8, p. 136.

116 R.C.H.Lenski, *The Interpretation of St.Matthew's Gospel*, p. 188; R.T.France, *Matthew: Tyndale New Testament Commentary*, p. 110.

117 D.A. Carson, *Matthew: The Expositor's Bible Commentary Vol.* 8, p. 136.

118 C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 99.

119 D.A.Hagner, *Matthew: Word Biblical Commentary Volume 33*, p. 92; M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 207; R.T.France, *Matthew: The New International Commentary on the New Testament*, p. 166; L.Morris, *Matthew: Pillar New Testament Commentary*, p. 98.

120 2பேதுரு 3ம் அதிகாரத்தில், "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது" (2பேது.3:7), "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது.3:10) என்றும், வெளிப்படுத்தல் 21:1ல் பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்தவான்கள் வாழும் இடம் என்று கூறுவது வேதாகமத்திற்கு முரணான போதனையாகவே உள்ளது.

இரட்சிக்கப்பட்டவர்கள் நித்திய காலமாய் இப்பூமியிலேயே வாழ்வார்கள் என்னும் தங்களுடைய தவறான உபதேசத்திற்கு யெகோவாவின் சாட்சிகள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு வசனம் சங்கீதம் 115:16 ஆகும். இவ்வசனத்தில் "வானங்கள் கர்த்தருடையவைகள். பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு, "மனிதர்கள் நித்திய காலமாய் வாழ்வதற்காக அவர்களுக்கு இப்பூமி கொடுக்கப்பட்டுள்ளது"[121] என்று யெகோவாவின் சாட்சிகள் கூறுகின்றனர். ஆனால், மனிதர்கள் நிகழ்காலத்தில் வாழ்வதற்காகத் தேவன் இப்பூமியை அவர்களுக்கு கொடுத்துள்ளதைப் பற்றி இவ்வசனம் கூறுகின்றதே தவிர, யெகோவாவின் சாட்சிகளுக்கு எதிர்காலத்தில் இப்பூமி கொடுக்கப்படும் என்று கூறவில்லை. உண்மையில், "தேவன் சிருஷ்டித்தவைகளில் பூமி மனிதர் வாழ்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளதையே இவ்வசனம் அறியத்தருகின்றது."[122]

நாம் இப்போது வாழும் உலகம் ஒருநாள் அழிந்து போகும். அதன் பின்னர் புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும் என்று வேதாகமம் கூறுவதனால், இவ்வுலகமே பரிசுத்தவான்கள் நித்தியகாலமாய் வாழும் இடம் என்னும் போதனை தவறானது.

பரதீசு என்பது எதிர்காலத்தில் பூமியில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராட்சியம் என்னும் யெகோவாவின் சாட்சிகளின் உபதேசமும் வேதாகமத்திற்கு முரணானதாகவே உள்ளது. ஏனெனில், "பராடெய்சொஸ்" (*paradeisos*) என்னும் கிரேக்கச் சொல்லே தமிழில் பரதீசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனர்த்தம் "மனங்கவர் தோட்டம்" என்பதாகும். அக்காலத்தில் நந்தவனங்களும் பூங்காக்களும் பரதீசு என்றே அழைக்

121 Anonymous, *Let Your Name Be Sanctified*, p. 34.

122 H.C.Leupold, *Exposition of Psalms*, p. 802; A.Curtis, *Psalms: Epworth Commentary*, p. 225.

கப்பட்டன. அதேசமயம், யூத மத நூல்களில் இச்சொல் பரலோகத்தை யும், தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் ஆசீர்வாதமான இடத்தை யும் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.[123] வேதாகம உபதேசத் தின்படி, நீதிமான்களின் அதாவது இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்க ளின் ஆவிக்குரிய பகுதி செல்லுமிடமே பரதீசு ஆகும். இதனால்தான் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது மனந்திரும்பிய கள்ள னிடம், "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" என்று கூறினார் (லூக்.23:43). இப்பரதீசு பூமியில் இருப்பதாக வேதாகமம் கூறவில்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்து மரிக்கும் போது தம்முடைய ஆவியைப் பிதாவிடமே ஒப்புவித்ததினால் (லூக்.23:46), அவர் கள்ள னோடு அன்றைய நாளில் இருந்த பரதீசு, பிதாவிருக்கும் "பரலோகமா கவே" உள்ளது. இதனால்தான், அப்போஸ்தலனாகிய பவுல் யூதர்களி னால் "மூன்றாம் வானம்" என்று அழைக்கப்பட்ட பரலோகத்திற்குச் சென்றதைப் பரதீசுக்குப் போனதாகவே 2கொரிந்தியர் 12:3ல் குறிப்பிட் டுள்ளார்.[124] மேலும், ஜீவவிருட்சம் பரதீசில் இருப்பதாகவும் (வெளி.2:7) பரலோகத்தில் இருப்பதாகவும் (வெளி.22:2,4) வெளிப்படுத்தல் புத்தகம் கூறுவதனால், பரதீசும் பரலோகமும் ஒன்றே என்பது தெளிவாகின்றது. பரலோகமும் பரதீசும் வெவ்வேறான இடங்கள் என்னும் கருத்து, மர ணத்தின் பின்பான ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேசத்தின் செல்வாக்கினால் உருவாகியுள்ளது. ஆனால், வேதாகமத்தில் பரலோ கமே பரதீசு என்று அழைக்கப்படுகின்றது.

வேதாகமம் அறியத்தருவது போல கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள், அதாவது, இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண் டவர்கள் மரிக்கும் போது, பரதீசுக்குச் (பரலோகத்திற்குச்) செல்கின்ற னர். ஸ்தேவானின் மரணம் இவ்வுண்மையை அறியத்தருகிறது. இத னால்தான், ஸ்தேவான் மரிக்கும் போது, "வானங்கள் திறந்திருக்கிறதை யும், இயேசுகிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும்

[123] W.Grudem, *Systematic Theology*, p. 593.

[124] 2கொரிந்தியர் 12:2ல் தன்னுடைய அனுபவத்தை எழுதும் பவுல், "கிறிஸ்துவுக் குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்" என்று கூறுவதோடு, அடுத்த வச னத்தில், "அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கி றேன்" (2கொரி.12:3) என்று குறிப்பிட்டுள்ளார்.

கண்டதோடு, கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று, பரலோகத்திலிருக்கும் இயேசுகிறிஸ்துவிடம் தன் ஆவியை அர்ப்பணித்தான்" (அப்.7:55-56,60). பரமேறுதலுக்குப் பின்னர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பவராகவே இயேசுகிறிஸ்துவை வேதாகமம் சித்தரித்துள்ள போதிலும் (ரோம.8:34, கொலோ.3:1. எபி.1:3, 1:13, 8:1, 10:12, 12:2, 1பேது.3:22), "ஸ்தேவான் மரிக்கும்போது அவனைத் தாமிருக்கும் பரலோகத்திற்குள் வரவேற்பதற்காக எழுந்து நிற்கின்றார்."[125] இயேசுகிறிஸ்துவுக்குள் மரிப்பவர்களின் ஆத்துமா உடனடியாக அவரிடம் செல்வதினாலேயே, அப்போஸ்தலனாகிய பவுல், "தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு" (பிலி.1:23) என்றும், "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" (2கொரி.5:8) என்றும் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், "இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் தற்போது அவருடனேயே இருக்கின்றானர்."[126] இதனால், அவர் மறுபடியும் வரும்போது, அவருக்குள் மரித்தவர்களும் அவரோடு கூட வருவார்கள் என்று 1தெசலோனிக்கேயர் 4:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுடைய ஆத்துமாக்கள் அவரிடமே இருக்கின்றன. இவை மறுபடியுமாகச் சரீரங்களுடன் சேர்க்கப்படும் போது மகிமையின் சரீரத்துடன் அவர்கள் உயிர்த்தெழுவார்கள். இதுவே வேதாகமத்தில் "மரித்தோரின் உயிர்த்தெழுதல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இது இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின் போது சம்பவிக்கும் என்பதையும் வேதாகமம் அறியத்தருகிறது. (1தெச.4:16, 1கொரி.15:52).[127]

144000 யெகோவாவின் சாட்சிகளைத் தவிர ஏனையவர்கள் பரலோகம் செல்லும் பாக்கியத்தை இழந்துவிட்டார்கள் என்பதற்கு வேதாகமத்தில்

[125] D.J.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 146; F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p. 156; L.T.Johnson, *Acts: Sacra Pagina Bible Commentary*, p. 139; I.H.Marshall, *Acts: Tyndale New Testament Commentary*, p. 149.

[126] F.F.Bruce, *Philippians: New International Biblical Commentary*, pp.54-55.

[127] 1தெசலோனிக்கேயர் 4:14ல், "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" என்றும், 1கொரிந்தியர் 15:52ல், "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வித ஆதாரமும் இல்லை. அதேபோல, எதிர்காலத்தில் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராட்சியமே பரதீசு என்பதும் வேதாகமத் திற்கு முரணான ஒரு போதனையாகும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப் பவர்கள் அனைவரும் மரிக்கும் போது அவர் இருக்கின்ற பரதீசுக்கே (பரலோகம்) செல்கின்றனர். யெகோவாவின் சாட்சிகள் இவ்வுண்மையை மறுதலித்து, மனிதர்கள் இயேசுகிறிஸ்து அருளும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதைத் தடுப்பவர்களாய் இருக்கின்றனர். இயேசுகிறிஸ் துவை விசுவாசிப்பவர்களினால் மாத்திரமே என்றென்றும் அவரோடு வாழமுடியும். ஏனையவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது (யேவா.3:16,18,36).[128] இயேசுகிறிஸ்துவை விசு வாசித்து அவர் அருளும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டவர்கள் மரிக்கும் போது, அவர்களுடைய ஆத்துமாக்கள் அவரிடம் செல்கின் றன. அவர் மறுபடியும் வரும்போது, அவர்கள் மறுபடியுமாகத் தங்கள் சரீரங்களோடு சேர்க்கப்பட்டு, மகிமையின் சரீரத்துடன் நித்தியகாலமாய் அவரோடு வாழ்வார்கள். இவ்வேதாகம சத்தியத்தை யெகோவாவின் சாட்சிகளுக்கு சுட்டிக்காட்ட வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாய் உள்ளது. (இதைப்பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது மரணத்தின் மறுபக்கம் என்னும் நூலைப் பார்க்கவும்).


இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவர் அருளும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டவர்கள் மரிக்கும் போது அவர்களுடைய ஆத்துமாக்கள் அவரிடம் செல்கின்றன. அவர் மறுபடியும் வரும்போது, அவர்கள் மறுபடியுமாகத் தங்கள் சரீரங்களோடு சேர்க்கப்பட்டு, மகிமையின் சரீரத்துடன் நித்தியகாலமாய் அவரோடு வாழ்வார்கள்.

[128] இவ்வசனங்களில் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவா சிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என் றும் (யேவா.3:16), அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்ப டான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட் டாயிற்று" என்றும் (யேவா.3:18), "குமாரனிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்" என்றும் (யோவா.3:36) குறிப்பிடப்பட்டுள்ளது.

யெகோவாவின் சாட்சிகள், தங்களுக்கு மாத்திரமே நித்திய வாழ்வு உண்டென்றும், இயேசுகிறிஸ்துவைக் கர்த்தராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக வாழ்பவர்களுக்கு இத்தகைய ஆசீர்வாதம் கிடைப்ப தில்லை என்றும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக, மத்தேயு 7:21ஐ இவர்கள் உபயோகிப்பது வழக்கம். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தை சரியானவிதத்தில் விளங்கிக்கொள்வதற்கு இயேசுகிறிஸ்து இவ்வசனம் இடம் பெறும் பகுதியில், அதாவது 15ம் வசனத்திலிருந்து 23ம் வசனம் வரை கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். ஏனென்றால் 15 முதல் 23 வரையி லான வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவற்றின் ஒரு பகுதியாகவே 21ம் வசனம் உள்ளது. உண்மையில், கள்ளத் தீர்க்கதரிசிகளே தம்மை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லிக் கொண்டிருப்ப தாக இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், இவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி வாழாததினால் பரலோக ராட் சியத்தில் இவர்கள் பிரவேசிப்பதில்லை என்பதை அவர் அறியத்தருகின் றார். எனவே இவ்வசனத்தில், இயேசுகிறிஸ்துவை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்று யெகோ வாவின் சாட்சிகள் கூறுவது தவறாகும்.

பரலோகராட்சியத்தில் பிரவேசிப்பதற்கு ஒருவன் பிதாவினுடைய சித்தத் தின்படி செயற்பட வேண்டும் என்றும் இயேசுகிறிஸ்து மத்தேயு 7:21ல் குறிப்பிட்டுள்ளார். எனினும், யெகோவாவின் சாட்சிகள் கூறுகிறபடி, அவர்களுடைய சங்கத்தில் சேர்ந்து பணிபுரிவதே தேவனுடைய சித்தம் என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. ஏனெனில், தேவனால் அனுப்பப் பட்ட அவரை விசுவாசிப்பதே மனிதருக்கான தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது. இதனால்தான், யோவான் 6:29ல், "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, பரலோக ராட்சியத்திற் குள் பிரவேசிப்பதற்கு மக்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண் டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்பது தெளிவா

கின்றது. உண்மையில், தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுப்பவன் இயேசுகிறிஸ்துவிடம் நிச்சயமாய் வருவான். இதனால்தான், "பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" (யோவா.6:45) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவை நிராகரிக்கும் யெகோவாவின் சாட்சிகள் தேவனருளும் நித்திய வாழ்வையே இழந்துபோகிறவர்களாக, தங்கள் வேதப்புரட்டு உபதேசங்களினால் தங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றுகிற வஞ்சகர்களாகவே இருக்கின்றனர். யெகோவாவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவை விசுவாசியாததினால், அவர்களிடத்தில் தேவனுடைய வார்த்தையும் இல்லை என்பதை யோவான் 5:38 அறியத்தருகின்றது. ஏனெனில், இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்ட தம்மை விசுவாசியாதவர்களிடத்தில் தேவனுடைய வசனம் தரித்திருப்பதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். யெகோவாவின் சாட்சிகள் வேதவசனங்களைத் தங்களது அறிவுக்கும் கருத்துகளுக்கும் ஏற்றவிதத்தில் மாற்றியும் விளக்கியும் வருவதனால் அவர்களிடத்தில் தேவனுடைய செய்தி இல்லை. உண்மையில், யெகோவாவின் சாட்சிகளுக்கு அல்ல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கே தேவனோடு என்றென்றும் வாழக்கூடிய நித்தியமான மெய்வாழ்வு உண்டு என்பதே வேதாகமம் மனுக்குலத்துக்கு அறிவிக்கும் நற்செய்தியாகும். இச்செய்தியை யெகோவாவின் சாட்சிகளுக்கு அறிவிக்க வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாயுள்ளது. ஏனெனில், "யெகோவின் சாட்சிகளாக நம்முடைய வீட்டுக் கதவைத் தட்டும் மனிதர்கள், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை நம்மிடம் கேட்பதற்காகத் தேவனால் அனுப்பப்பட்ட பரிதாபத்திற்குரிய பாவிகளாக இருக்கின்றனர்."



# உசாத்துணை நூல்கள்

இந்நூலினை எழுதுவதற்கு உதவியாயிருந்த புத்தகங்களின் விபரப் பட்டியல் இதுவாகும். யெகோவாவின் சாட்சிகளின் புத்தகங்கள் எழுத் தாளர்களின் பெயர் இல்லாமல் பிரசுரிக்கப்படுவதனால் அவைகள் Anonymous என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்களோடு யெகோவாவின் சாட்சிகளின் சஞ்சிகைளான *The Watchtower* (காவற்கோபுரம்) *Awake* (விழித்தெழு) என்பனவும் சில இணையதள கட்டுரைகளும் உபயோகிக்கப்பட்டுள்ளன. இவை பற்றிய விபரங்கள் அடிக்குறிப்புகளில் உள்ளன.

## (1). யெகோவாவின் சாட்சிகளின் வெளியீடுகள் (Jehovah's Witnesses' Publications)


Russell, Charles. *Studies in the Scriptures II*. Brooklyn: Watchtower Bible and Tract Society 1888.

Russell, Charles. *Studies in the Scriptures III*. Brooklyn: Watchtower Bible and Tract Society 1991.

Russell, Charles. *Studies in the Scriptures IV*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1897

Rutherford, J.F. *Deliverance*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1926.

Anonymous. *Jehovah's Witnesses in the Divine Purposes*, Brooklyn: Watchtower Bible and Tract Society, 1859.

Anonymous. *Millions Now Living Will Never Die*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1920.

Anonymous, The Finished Mystery. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1917.

Anonymous. *Creation*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1927.

Anonymous. *Reconciliation*, Brooklyn: Watchtower Bible and Tract Society, 1928.

Anonymous. *Prophecy*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1929.

Anonymous. *Light Vol.2*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1930.

Anonymous. *Riches*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1936.

Anonymous. *Salvation*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1939.

Anonymous. *The New World*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1942.

Anonymous. *The Truth Shall Make You Free*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1943

Anonymous. *Equipped for Every Good Work*, Brooklyn: Watchtower Bible and Tract Society, 1946.

Anonymous. *Make Sure All Things*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1953.

Anonymous. *Your Will be Done on Earth*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1958.

Anonymous, *From Paradise Lost to Paradise Regained*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1927.

Anonymous. From Paradise Lost to Paradise Regained. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1958.

Anonymous. *Jehovah's Witnesses in the Divine Purpose*. Brooklyn: Watchtower Bible and Tract, Society, 1959.

Anonymous. *Let Your name be Sanctified*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1961.

Anonymous. *Blood, Medicine, and the Law of God*. Watchtower Bible and Tract Society, 1961.

Anonymous. *Things in which It Is Impossible for God to Lie*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1965.

Anonymous. *Life Everlasting – In Freedom of the Sons of God*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1966.

Anonymous. *Paradise Restored to Mankind-By Theocracy*, Brooklyn: Watchtower Bible and Tract Society, 1972.

Anonymous. *God's Kingdom of a Thousand Years Has Approached*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1972.

Anonymous. *Man's Salvation Out of World Distress At Hand*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1975.

Anonymous. *Jehovah's Witnesses and the Question of Blood*, Brooklyn: Watchtower Bible and Tract Society, 1977.

Anonymous. Qualified to be Ministers. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1977.

Anonymous. *Making Your Family Life Happy*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1978

Anonymous. *You Can Live Forever in Paradise on Earth*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1982.

Anonymous. *Insight on the Scriptures Vol.2*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1988.

Anonymous. *Aid to Bible Understanding*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1989.

Anonymous. *Reasoning from the Scriptures*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1989.

Anonymous. *Should You Believe in the Trinity?*Brooklyn: Watchtower Bible and Tract Society,1989.

Anonymous. *Mankind's Search for God*. Brooklyn: Watchtower Bible and Tract Society, 1990.

## 2. யெகோவாவின் சாட்சிகளைப் பற்றிய கிறிஸ்தவ விமர்சன நூல்கள் (Critiques on the Jehovah's Witnesses)


Ankerberg, John & Weldon, John. *The Facts on Jehovah's Witnesses*. Eugene: Harvest House Publishers, 1988.

Baalen, J.K.Van. *The Chaos of Cults*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1962.

Berry, Harold J. *What they Believe*. Lincoln: Back to the Bible, 1989.

Boa, Kenneth. *Cults, World Religions and the Occult*. Wheaton: Victor Books, 1990.

Bowman, Robert M. *Jehovah's Witnesses, Jesus Christ and the Gospel of John*. Grand Rapids: Baker Book House, 1991.

Bowman, Robert M. *Understanding Jehovah's Witnesses: Why They Read the Bible the Way They Do?* GR: Baker Book House, 1991.

Bowman, Robert M. *Jehovah's Witnesses*. Grand Rapids: Zondervan Publishing House, 1995.

Bowman, Robert M. *Why You Should Believe in the Trinity: An Answer to Jehovah's Witnesses*, Grand Rapids: Baker Book House, 1996.

Bowman, Robert M. *Understanding Jehovah's Witnesses*. Grand Rapids: Baker Book House, 1996.

Chretien, Leonard & Chretien, Marjorie, *Witnesses of Jehovah*. Eugene: Harvest House Publishers,1988.

Cole, Marley. *Jehovah's Witnesses*, New York: 1955.

Countess, R.H. *Jehovah's Witnesses New Testament*. Philipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1972.

Elliott, Phil. *Jehovah's Witnesses: How is their Faith is Different from Christianity*. England: Amazon Books, n.d.

Enroth, Ronald. *A Guide to Cults and New Religions*. Downers Grove; Inter Varsity Press, 1983.

Gerstner, John H. *The Teachings of Jehovah's Witnesses*. Grand Rapids: Baker Book House, 1994.

Grieshaber, Erich & Jean, *Exposed – of Jehovah's Witnesses*. Tyler: Jean Books, 1982.

Gruss, Edmond C. *The Jehovah's Witnesses and Prophetic Speculation*. Nutley: Presbyterian and Reformed Publishing Company, 1975.

Gruss, Edmond C. *We Left Jehovah's Witnesses*. Nutley: Presbyterian and Reformed Publishing Company, 1974.

Harris, Doug. *The Jehovah's Witnesses: Their Belief and Practices*. London: Gazelle Books, 1998.

Harris, Dough. *Awake to the Watch Tower: Inside the World of the Jehovah's Witnesses*. Herts: Reachout Trust, 1993.

Hein, Thomas F. *Answerd to My Jehovah's Friend*. Ontario: Chick Publications, 1999.

Hoekema, Anthony A. *The Four Major Cults*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1978.

Kern, Herbert. *How to Respond to Jehovah's Witnesses*. St.Louis: Concordia Publishing House, 1995.

Lingel, Wilbur, *Approaching Jehovah's Witnesses in Love*. Fort Washington: CLC Publications, 1994.

Love, Charles. *20 Questions Jehovah's Witnesses Cannot Answer*. USA: Xulon Press, 2005.

MacGregor, Lorri. *What You Need to Know about Jehovah's Witnesses*. Eugene: Harvest House Publishers, 1992.

MacGregor, Lorri.*Coping with the Cults*. Eugene: Harvest House Publishers, 1992.

Magnani, Duane. *The Watchtower Files*. Minneapolis: Bethany House Publishers, 1985.

Martin, Walter. *Rise of the Cults*. Santa Ana: Vision House, 1981.

Martin, Walter. *The Kingdom of the Cults*. Minneapolis: Bethany House Publishers, 1997.

Martin, Walter & Klann, Norman. *Jehovah of the Watchtower*. Minneapolis: Bethany House, 1997.

Melton, *The Encyclopaedia of American Religions*. Detroit: Gale Research, 1989.

Pike, Royston. *Jehovah's Witnesses*. New York: Philosophic Library, 1954.

Reed, David A. *How to Rescue Your Loved One from the Watch Tower*. Grand Rapids: Baker Book House, 1989.

Reed, David A. *Jehovah's Witnesses Answered Verse by Verse*. Grand Rapids: Baker Book House, 1997.

Reed, David A.*Index of Watchtower Errors*. Grand Rapids: Baker Book House, 2000.

Rhodes, Ron. *Reasoning from the Scriptures with the Jehovah's Witnesses*. Eugene: Harvest House Publishers, 1993.

Sire, James W. *Scripture Twisting: 20 Ways Cults Misread the Bible*. Downers Grove: Inter Varsity Press, 1980.

Stroup, Herbert. *Jehovah's Witnesses*. New York: Columbia, 1945.

Thomas, F.W. *Masters of Deception*. Grand Rapids: Baker Book House, 1983.

Tucker, Ruth A. *Another Gospel*. Grand Rapids: Zondervan Publishing House, 1989.

Weathers, Paul G. "Answering the Arguments of Jehovah's Witnesses Against the Trinity" in *Contend for the Faith*. Eric Pement, ed., Chicago: EMNR, 1992.

Rowley, H.H. "How not to Translate the Bible" in *The Expository Times.* (1953), pp. 41-42.

## (3). வேதாகமத்தின் மூலமொழிகள் பற்றிய அகராதிகளும் நூல்களும் (Dictionaries and Books on the Biblical Languages)

Arndt, William F. & Gingrich, F.Wilbur. *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature.* Chicago: The University of Chicago Press, 1957.

Brown, Francis, Driver, S.R. and Briggs, Charles A. *A Hebrew and English Lexicon of the Old Testament.* Oxford: Clarendon Press, 1980.

Dana, H.E. Mantey, Julius R. *A Manual Grammar of the Greek New Testament.* New York: Macmillan and company, 1957.

Harris, R. Laird. Archer, Gleason L. & Waltke, Bruce K. *Theological Wordbook of the Old Testament*, Chicago: Moody Press, 1980.

Harris, Laird. ed., *Theological Word Book of the Old Testament Vol.2.* Chicago: Moody press, 1980.

Renn, Stephen D. *Expository Dictionary of Bible Words.* Peabody: Hendrickson Publishers, Inc. 2005. Chicago: Moody Press, 1981.

Richards, Lawrence O. *Expository Dictionary of Bible Words.* Basingstoke: Marshall Pickering, 1985.

Robertson, A.T. *Word Pictures in the New Testament Vol.3.* Nashville: Broadman Press, 1930.

Robertson, A.T. *The Grammar of the Greek New Testament in the Light of Historical Research.* Nashville: Broadman Press, 1934.

Ryken, L. Wilhoit, James C. Longman, Tremper, ed., *Dictionary of Biblical Imagery.* DownersGrove/Leicester: Inter Varsity Press, 1998.

Trench, Richard. *Synonyms of the New Testament.* Grand Rapids: Eerdmans Publishing Company, 1953.

Thayer, Joseph H. *Greek-English Lexicon of the New Testament* Grand Rapids: Zondervan Publishing House, 1963.

Turner, N. *Grammatical Insights into the New Testament.* Edinburgh: 1965.

Vine, W.E. Unger, Merrill F. & White, William. ed. *Vine's Expository Dictionary of Biblical Words.* Nashville: Thomas Nelson Publishers, 1985.

Wallace, *D.B.Greek Grammar Beyond the Basics*, p. 735. Zondervan Publishing House, 1996.

Wuest, Kenneth S. *Golden Nuggets from the Greek New Testament.* Grand Rapids: Eerdmans Publishing Company, 1940.

Zodhiates, Spiros. *The Complete Word Study Dictionary.* Chattanooga: AMG Publishers, 1992.

## 4. கிறிஸ்தவ இறையியல் நூல்களும் கட்டுரைகளும் (Theological Books and Articles)


Alanis, M.C. & Lucidi, R.S. "Neonatal circumcision: a review of the world's oldest and most controversial operation" in *Obstet Gynecol Survey*. 59 (May 2004), pp. 379–95.

Albright, W.F. *Yahweh and the God's of Canaan*, Winona Lake: Eisenbrauns, 1968.

Bauckham, Richard. *Jesus and the God of Israel*. Milton Keynes: Paternoster Press, 2008.

Berkhof, Louis. *The History of Christian Doctrines*. Edinburgh: The Banner of Truth Trust, 1985.

Berkhof, Louis. *Systematic Theology*. Edinburgh: The Banner of Truth Trust, 1988.

Barth, Enda. *Lilies, Rabbits and Painted Eggs*. New York: Clarion Books, 1962.

Bedale, Stephen. The Meaning of 'Kephale' in the Pauline Epistles" in *Journal of Theological Studies*. 5 (1984), pp. 211-215.

Bietenhard, H. "Kyrios" in *The New International Dictionary of New Testament Theology Vol.2*. ed. C. Brown, Carlisle: The Paternoster Press, 1971.

Bickersteth, Edward H. *The Trinity*. Grand Rapids: Kregel Publications, 1957.

Blanchard, John. *Whatever Happened to Hell?* Darlington: Evangelical Press, 1993.

Boettner, Loraine. *Studies in Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1947.

Boice, James M. *Foundations of the Christian Faith*. Downers Grove/ Leicester: Inter Varsity Press, 1986.

Borland, James A. *Christ in th Old Testament*. Fearn: Christian Focus Publication, 1999.

Bradshaw Paul F & Johnson, Maxwell E. *The Origins of Feasts, Fasts and Seasons in Early Christianity*. Collegeville: Liturgical Press, 2011.

Bray, Gerald, *The Doctrine of God*. Leicester: IVP, 1993.

Campbell, Don. ed., *The Theological Wordbook*. Nashville: Word Publishing, 2000.

Carson, D.A. *Jesus the Son of God*. Nottingham: Inter Varsity Press, 2012

Clines, D.J.A. "The Image of God in Man" in *Tyndale Bulletin*. 19 (1968), pp. 53-103.

Crossley, Robert. *The Holy Trinity*. London: Church Pastoral Aid Society, 1974.

Dickason, Fred. *Angles: Elect and Evil*. Chicago: Moody Press,1975.

DeMeo. J. "The Geography of Genital Mutilations" *The Truth Seeker*, (July/August 1989), pp 9-13, July/August 1989.

Doyle, D. "Ritual male circumcision: a brief history" in *The journal of the Royal College of Physicians of Edinburgh*. 35 (October 2005).

Drum, Walter. "The Incarnation." The Catholic Encyclopedia. Vol. 7. New York: Robert Appleton Company, 1910.

Duffield Guy P and Van Cleave, Nathaniel M. *Foundations of Pentecostal Theology*. Los Angeles: LIFE Bible College, 1987.

Dunn, James D.G. *Did the First Christians Worship Jesus?* Louisville: John Knox Press, 2010.

Edwards, James R. *Is Jesus the Only Saviour*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2005.

Engberg-Pedersen, T. "Paul's Stoicizing Politics in Romans 12-13: The Role of 13:1-10 in the Argument" in *Journal for the Study of the New Testament*. 29 (2006), pp. 163-172;

Enns, Paul. *The Moody Hand Book of Theology*. Chicago: Moody Press, 1989.

Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Book House, 1988.

Erickson, Millard J. *Making Sense of the Trinity*. Grand Rapids: Baker Book House, 2000.

Fitzmyer, Joseph A. "Another Look at 'Kephale' in 1Corinthians 11:3" in *New Testament Studies*. 35 (1989), pp. 503-511.

Fortman, *The Triune God: A Historical Study of the Doctrine of Trinity*. Philadelphia: Westminster Press, 1972.

France, R.T. *Matthew: Evangelist & Teacher*. Carlisle: the Paternoster Press, 1992.

Geisler, Norman. *Christian Apologetics*. Grand Rapids: Baker Book House, 1976.

Graham, Billy. *The Holy Spirit: Activating God's Power in Your Life.* Waco: Warner Books, 1980.

Grudem, Wayne. "Does *Kephale* (Head) Means 'Source' or 'Authority Over' in Greek Literature? A Survey of 2336 Examples" in *Trinity Journal*. 6 (1985), pp. 38-59.

Grudem, Wayne. "The Meaning of *Kephale*: A Response to recent Studies" in *Trinity Journal*. 11 (1990), pp. 3-72.

Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*. Leicester: Inter Varsity Press, p. 1994.

Grudem, Wayne. *Politics According to the Bible*. Grand Rapids: Zondervan Publishing House, 2010.

Gundry, R. *The Use of the Old Testament in St. Matthew's Gospel* Grand Rapids: Eerdmans Publishing Company, 1975.

Gundry, R. *Soma in Biblical Theology*. Cambridge: Cambridge University Press, 1976.

Ham, Ken. *The New Answers Book: Creation/Evolution and the Bible*. Green Forest: Master Books, 2006.

Harris, Murray J. *Jesus as God: The New Testament Use of Theos n Reference to Jesus*. Grand Rapids: Baker Book House, 1992.

Hartley, D.E. "John 1:1, Colwell, and Mass/Count Nouns in Recent Discussion" 1999 *Evangelical Theological Society*, pp. 17-19.

Hasel, G.F. "The Meaning of 'Let Us' in Gen.1:26" in *Andrews University Seminary Studies*. 13 (1975), pp. 58-66.

Hasel, G. "The Meaning of the Animal Rite in Genesis 15" in *Journal for the Society of the Old Testament*, 19 (1981), pp. 61-78.

Held, M. "Philological Notes on the Mari Covenant Rituals" in *Bulletin of the School of Oriental and African Studies*. 200 (1970), p. 33;

Helyer, Larry R. "Arius Revisited: The Firstborn over All Creation" in *Journal of the Evangelical Theological Society*. 31(March 1988).

Hengstenberg, E.W. *Christology of the Old Testament*. Grand Rapids: Kregel Publication, 1970.

Hodge, Charles, *Systematic Theology Vol.1*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1952.

Hurtado, Larry. *The Earliest Christian Artifacts: Manuscripts and Christian Origins*. Grand Rapids, Eerdmans, 2006.

Ingraham, David A. *Pagan Tradition: The Origins of Easter, Christmas and Holloween*. Oklahoma City: Bible Belt Publishing, 2000.

Irwin, W.A.Where Shall Wisdom Be Found in *Journal of Biblical Literature*. 30 (1961), pp. 133-142.

Jeremias, J. *The Prayers of Jesus*, London Student Christian Movement Press 1967.

Jewett, P.K. *Man as Male and Female*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1975.

Kaiser, Walter C. *Toward Old Testament Ethics*, Grand Rapids: Zondervan Publishing House, 1983.

Kelly, Joseph F. *The Origins of Christmas*. Collegeville: Liturgical Press, 2004.

Kiuchi, K. "Elijah's Self-Offering: 1Kings 17:21" in *Biblica*. 75 (1994), pp. 74-79.

Knight, G.A.F. *A Biblical Approach to the Doctrine of the* Trinity. Edinburgh: Oliver and Boyd, 1953.

Longenecker, Richard. *The Christology of Early Jewish Christianity*. Grand Rapids: Baker Book House, 1981.

MacLeod, D.J. "The Eternality and Deity of the Word: John 1:1-2" in *Bibliotheca Sacra*. (2003), pp. 59-60

Mcdowell, Josh. *More Than a Carpenter*. Eastbourne: Kingsway Publications, 1987.

Mcdowell, Josh & Larson, Bart. *Jesus: A Biblical Defence of His Deity*. Eastbourne: Crossway Books, 1991.

McGee, J.Vernon. *How Can God Exist in Three Persons?* Pasadena: Thru the Bible Books, 1973.

Medsker, Timothy. *Holy Days: The Historic and Pagan Origins of Modern Day Holiday Celebrations*. England: Amazon Books, 2014.

Meier, J.P. *A Marginal Jew: Rethinking the Historical Jesus Vol.1*, New York: Doubleday Press, 1991.

Macht, D.I. "An Experimental Pharmacological Appreciation of Leviticus 11 and Deuteronomy 14" in *Bulletin of the History of Medicine.* 27 (1953), pp. 444-450.

McBride, S.D. "The Yoke of the King -dom: An Exposition of Deut.6:4-5" in *Interpretation.* 27 (1973).

Metzger, Bruce M. "The Jehovah's Witnesses and Jesus Christ" in *Theology Today*. 10 (April 1953).

Moberly, R.W.L. "Yahweh is One: The Translation of Shema" in *Studies in Pentateuch*. J.A.Emerton ed., Leiden: Brill, 1990, pp. 209-215.

Moltmann, J.*The Crucified God: The Cross of Christ as the Foundation of and criticism of Christian Theology*, London: Student Christian Movement Press, 1974.

Miller, P. *Genesis 1-11: Studies in Structure and Theme*. Sheffield: Sheffield University Press, 1978.

Miller, P. "Sin and Judgment in Jeremiah 34:17-19" in *Journal of Biblical Literature*. 103 (1984), pp. 611-613.

Morris, Leon. *New Testament Theology*. Grand Rapids: Zondervan Publishing House, 1986.

Morris, Leon. *The Apostolic Preaching of the Cross*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

Morris, Leon. *Jesus is the Christ: Studies in the Theology of John*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1989.

Morris, Leon. *The Lord from Heaven*. Leicester: Inter Varsity Press, 1995.

Moody, D. "God's Only Son: The Translation of John 3:16 in the Revised Standard Version" in *Journal of Biblical Literature*. 72 (1953).

Olson, Roger E. *The Story of Christian Theology*. Leicester: Apollos, 1999.

Patrick, Dale.*The Rendering of God in the Old Testament*. Philadelphia: Fortress press, 1981.

Qureshi, Nabeel. *No God But One: Allah or Jesus?* Grand Rapids: Zondervan Publishing House, 2016.

Reymond, Robert L. *Jesus Divine Messiah: The New Testament Witness*. Philadelphia: Presbyterian & Reformed Publishing Company, 1990

Rhodes, Ron. *Christ Before the Manger: The Life and Times of the Preincarnate Christ*. Grand Rapids: Baker Book House, 1992.

Rowley, H.H. "How not to Translate the Bible" in *The Expository Times.* (1953), pp. 41-42.

Rowley H.H. "The Servant Mission: The Servant Songs and Evangelism" in *Interpretaton*. 8 (1954),

Ryken, Philip. *Our Triune God: Living in the LOve of the Three-in-One.* Wheaton: Crossway2011.

Ryrie, Charles C. *The Holy Spirit*. Chicago: Moody Press, 1977.
Ryrie, Charles C. *Basic Theology*. Wheaton: Victor Books, 1986.
Safar, P. e.d., *Advances in Cardiopulmonary Resuscitation*, Springer Verlag, 1977, New York, pp. 263-265.
Saucy, Robert L. *The Church in God's Program*. Chicago: Moody Press, 1972.
Smeaton, George. *The Doctrine of the Holy Spirit*. Edinburgh: T&T Clark, 1889.
Stuart, Olyott. *The Three are One: What the Bible Teaches about Trinity*. Welwyn: Evangelical Press, 1979.
Swindoll, Charles R. & Zuck Roy, B ed., *Understanding Christian Theology*. Nashville: Thomas Nelson Publishers, 2003.
Taylor, Vincent. *Jesus and His Sacrifice: A Study of the Passon Sayings in the Gospels*. London: Macmillan Press, 1937.
Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.
Toon, Peter & Spiceland, James D. *One God in Trinity*. Westchester: Cornerstone Books, 1980.
Vasanthakumar, M.S. *Who is Jesus Christ? An Expository Study on Jesus' I am Sayings*. Peradeniya: Lanka Bible College, 1990.
Vasanthakumar, M.S. *Is Jesus Christ God? Biblical Evidence for the Divinity of Christ.* Colombo: Back to the Bible,1991.
Vasanthakumar, M.S. *The Wonderful History of the Bible*. Peradeniya: Lanka Bible College, 1995.
Vasanthakumar, M.S. *The Other Side of Death*. Colombo: Back to the Bible, 1995.
Vasanthakumar, M.S. *The Second Coming of Jesus Christ*. London: Tamil Bible Research Centre, 2016.
Vawter, B. "Proverbs 8:22: Wisdom and Creation" in *Journal of Biblical Literature*, 99 (1980), pp. 205-216.
Walvoord, John F. *Jesus Christ Our Lord*. Chicago: The Moody Press, 1969.
Warfield, Benjamin W. *The Person of Christ*. Philadelphia: Presbyterian and Reformed Publishing Company, 1950.
Weldon, J.E.C. *The Revelation of the Holy Spirit*. London: Macmillan & Co., 1902.
White, James R. *The Forgotten Trinity: Rediscovering the Heart of Christian Belief*. Minneapolis: Bethany House Publishers, 1998.
Whybray, R.N. "Proverbs 8:22-31 and Its Supposed Prototypes" in *Vetus Testamentum*. 15 (1965),pp. 504-542.
Wilkinson, *J. Health and Healing: Studies in the Tew Testament Principles and Practices,* Edinburgh: The Handsel Press, 1980.
Wilkinson, J. "Healing in the Epistle of James" in *Scottish Journal of Theology*. 24 (1971), pp. 326-345.

Wilson, R.Mcl. "The Early History of the Exegesis of Genesis 1:28" in *Studia Patristica*. 1 (1957), pp. 420-437.
Wolff, H.W. *Anthropology of the Old Testament*. London: SCM Press, 1974.
Wood, Leon J. *The Holy Spirit in the Old Testament*. Grand Rapids: Zondervan Publishing House, 1976.
Wood, Skevington, *I want to Know What the Bible Says About God*. Eastbourne: Kingsway Publications, 1980.
Wyschogrod, M. *The Roots of Our Common Faith*, Geneva: World Council of Churches, 1984.
Yoder, John H. *The Politics of Jesus*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1994.
Zimmerli, W. *The Old Testament Theology in Outline*, Edinburgh: T&T Clark, 1978.

## 5. கிறிஸ்தவ வேத வியாக்கியான நூல்கள் (Biblical Commentaries)

Aitken, Kenneth T. *Proverbs: The Daily Study Bible*. Edinburgh: Saint Andrew Press, 1986.
Alexander, Ralph H. *Ezekiel: Expositor's Bible Commentary Vol.6*. Grand Rapids: Zondervan Publishing House, 1986.
Akin, Daniel L. *1,2,3 John: The New American Commentary*. Nashville: B & H Publishers, 2001.
Allen, Leslie C. *Ezekiel 1-19: Word Biblical Commentary Vol.28*. Waco: Word Books, 1994.
Arnot, William. *Studies in Proverbs: Laws from Heaven for Life on Earth*. Grand Rapids: Kregel Publications, 1978.
Aune, David. *Revelation: Word Biblical Commentarty Volume 52*. Waco: Word Books, 1997.
Barbieri, Louis A. *Matthew: The Bible Knowledge Commentary New Testament*. Wheaton: Victor Books, 1983.
Barclay, William. *The Gospel of John Vol.I: The Daily Study Bible*. Edinburgh: St.Andrew Press, 1990.
Barnett, Paul. *Second Corinthians: The New International Commentary on the NT*. Grand Rapids: Eermans Publishing Company, 1997.
Barnes, Albert, *Notes on the Old Testament: Isaiah*. Grand Rapids: Baker Book House, 1977.
Barton, Bruce. ed., *Life Application New Testament Commentary*. Wheaton: Tyndale House Publishers, 2001.
Beasley-Murray, George R. *John: Word Biblical Commentary Vol.36*. Nashville: Thomas Nelson Publishers, 1999.
Blomberg, Craig, L. *Matthew: The New American Commentary: New International Commentary*. Nashville: Broadman Press, 1992.

Blomberg, Craig, L. *1Corinthians: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1994.

Blum, Edwin A. *1,2 Peter: Expositor's Bible Commentary Vol.12*. Grand Rapids: Zondervan Publishing House, 1994.

Bock, Darrell. *Luke 9:51-24:53: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 1996.

Borchert, Gerald L. *John 1-11: The New American Commentary*. Nashville: B & H Publishers, 1996.

Borchert, Gerald L. *John 12-21: The New American Commentary*. Nashville: B & H Publishers, 2002.

Boice, James M. *The Minor Prophets*. Grand Rapids: Kregel Publications, 1996.

Boice, James M. *John 13-17: An Expositional Commentary*. Grand Rapids: Baker Publishing Group, 1999.

Blum Edwin A. *1 & 2 Peter: The Expositor's Bible Commentary Vol.12*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Brooks, James A. *Mark: The New American Commentary*. Nashville: Broadman Press, 1991.

Brown, Raymond E. *John: Anchor Bible Commentary Volume 1*. New York: Bantam Doubleday Dell Publishing Group, 1966

Bruce, F.F. *1&2 Thessalonians: Word Biblical Commentary Vol.45*. Waco: Word Books, 1982.

Bruce F.F. *The Gospel of John: Introduction, Exposition and Notes*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.

Bruce, F.F. *Philippians: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1989.

Burge, Gary M. *Letters of John: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1996.

Burge, Gary M. *Gospel of John: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2000.

Buzzell, Sid S. *Proverbs: The Bible Knowledge Commentary: Old Testament*. Wheaton: Victor Books, 1985.

Calvin, *John. Commentaries on the Last Books of Moses Volume 2*. Grand Rapids: Baker Book House, 1979.

Calvin, John. *The Gospel According to John 11-21 and the First Epistle of John*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1995.

Calvin, John. *Acts of the Apostles 14-28*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1995.

Carson, D.A. *Matthew: The Expositor's Bible Commentary Vol.8*. Grand Rapids: Zondervan Publishing House, 1984.

Carson, D.A. *The Gospel According to John: Pillar New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1991.

Carson, D.A., France, R.T., Motyer, F.A. & Wenham, G.J. ed., *New Bible Commentary: 21st Century Edition*. Leicester: IVP, 1994.

Clarke, Adam. *The Bethany Parallel Commentary: Old Testament*. Minneapolis: Bethany House, 1980.

Clines, David J.A. *Job 1-20: Word Biblical Commentary Vol.17*. Waco: Word Books, 1989.

Collins, C. John. *Genesis 1-4: A Linguistic, Literary and Theological Commentary*. Phillipsburg: P & R Publishing Company, 2006.

Craigie, P.C. *The Book of Deuteronomy: New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1976.

Davids, Peter H. *2 Peter and Jude: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2006.

Davis, John J. *Paradise to Prison: Studies in Genesis*. Salem: Sheffield Publishing Company, 1998.

Derickson, Gary W. *1-3 John: Evangelical Exegetical Commentary*. Bellingham: Lexham Press, 2014.

Dunn, James D.G. *Colossians: The New International Greek Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishning Company, 1996.

Eaton, Michael A. *Ecclesiastes: Tyndale Old Testament Commentaries*: Leicester: Inter Varsity Press, 1983.

Edwards, James R. *Mark: The Pillar New Testament Commentary*, Grand Rapids: Eerdmans Publishing Company, 2002.

Edwards, James R. *Luke: The Pillar New Testament Commentary*, Grand Rapids: Eerdmans Publishing Company, 2015.

Elwell, Walter A. ed., *Evangelical Commentary on the Bible*. Grand Rapids: Baker Book House, 1989.

Evans, Craig A. *Luke: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1990.

Evans Craig A. *Mark 8:27-16:20: Word Biblical Commentary Vol.34B*. Nashville: Thomas Nelson Publishers, 2001.

Fee, Gordon D. *The First Epistle to the Corinthians: New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1987.

Fee, Gordon D. *1 and 2 Timothy, Titus: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers 1988.

France, R.T. *Matthew: Evangelist & Teacher*. Carlisle: the Paternoster Press, 1992.

France, R.T. *Mark: The New International Greek Testament Commentary*. Eerdmans Publishing Company, 2002.

France, R.T. *Matthew: The New International Commentary on the New Testament*. Eerdmans Publishing Company, 2007.

Freeman, Hobart E. *An Introduction to the Old Testament Prophets*. Warsaw: Faith Ministries & Publications, 2004.

Garland, David E. *Colossians The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1998.

Garland David E. *1Corinthians: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Baker Book House, 2003.

Geldenhuys, Norval. *Luke: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

Goldberg, Louis. *Ecclesiastes: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1983.

Goldberg, Louis. *Deuteronomy: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1986.

Gowan, Donald E. *From Eden to Babel: Genesis 1-11*. Grand Rapids: Eerdmans PublishingCompany, p. 1988.

Grassmick, John D. *Mark: the Bible Knowledge Commentary NT*. Wheaton: Victor Books, 1983.

Gregg, Steve, ed., *Revelation: Four Views - A Parallel Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1997.

Grudem, Wayne. *1Peter: Tyndale New Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1988.

Guthrie, George H. *Hebrews: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1998.

Hagner, Donald A. *Matthew 14-28: Word Biblical Commentary Vol.33B*. Waco: Word Books, 1995.

Hamilton, Victor P. *Genesis 1-17: The New International Commentary on the OT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1990.

Hartley, John E. *Job: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

Hawthorne, Gerald F. *Philippians: Word Biblical Commentary Vol.43*. Waco: Word Books, 1983

Hendriksen, William. *New Testament Commentary: Philippians, Colossians & Philemon*. Edinburgh: Banner of Truth Trust, 1962.

Hendriksen, William. *New Testament Commentary: John.* Edinburgh: Banner of Truth Trust, 1982.

Hiebert, D. Edmound. *2Peter and Jude: An Expositional Commentary*. Greenville: Bob Jones University Press, 1994.

Hiebert, D. Edmound. *1Peter: An Expositional Commentary*. Winona Lake: BMH Books, 1992.

Hiebert, D. Edmound. *Mark: An Expositional Commentary*. Greenville: Bob Jones University Press, 1994.

Higgins, A.J. & Currie B. *Proverbs and Ecclesiastes: Titchie Old Testament Commentary*. Kilmarnock: John Ritchie Ltd., 2008.

Hodges, Zane C. *1John: The Bible Knowledge Commentary - New Testament*. Wheaton: Victor Books, 1983.

Huey, F.B. *Exodus: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1977.

Johnson, Thomas F. *1,2,and 3 John: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1993.

Kalland E.S. *Deuteronomy: The Expositor's Bible Commentary Volume 3*. Grand Rapids: Zondervan Publishing House, 1992.

Kaiser, Walter C. *Exodus: Expositor's Bible Commentary Vol.2*. Grand Rapids: Zondervan Publishing House, 1990.

Kelly, J.N.D. *Peter and Jude: Black's New Testament Commentary*. Peabody: Hendrickson Publishers, 1969.

Kidner, Derek. *Genesis: Tyndale Old Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1967.

Kostenberger, Andreas J. *John: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Academic, 2004.

Kruse, Colin G. *The Letters of John: The Pillar New Testament Commentary.* Grand Rapids: Eerdmans Publishing Company, 2000.

Kruse, Colin G. *John: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 2003.

Larkin, William J. *Acts: The IVP New Testament Commentaries*. Downers Grove: Inter Varsity Press, 1995.

Lenski, R.C.H. *The Interpretation of St. John's Gospel*. Minneapolis: Augsburg Publishing House, 1961.

Lenski, R.C.H. *The Interpretation of St.Matthew's Gospel*, Minneapolis: Augsburg Publishing House, 1964.

Lenski, R.C.H. *The Interpretation of St.Mark's Gospel*. Minneapolis: Augsburg Publishing House, 1964.

Lenski, R.C.H. *The Interpretation of St.Paul's Epistle to the Colossians.*. Minneapolis: Augsburg Publishing House, 1964.

Lenski, R.C.H. *The Interpretation of Three Epistles of John and the Epistle of Jude*. Minneapolis: Augsburg Publishing House, 1966.

Leupold, H.C. *Exposition of Genesis*. Grand Rapids: Baker Book House, 1968.

Leupold, H.C. *Exposition of Ecclesiastes*. Grand Rapids: Baker Book House, 1976.

Lightfoot, J.B. *St.Paul's Epistles to the Colossians and to Philemon*, Grand Rapids: Zondervan Publishing House, 1979.

Longmann, Tremper. *Proverbs: Baker Commentary on the Old Testament Wisdom and Psalms*. Grand Rapids: Backer Academic, 2006.

Lowery, David K. *2Corinthians: The Bible Knowledge Commentary New Testament*. Wheaton: Victor Books, 1983.

MacArthur, John. *The MacArthur Bible Commentary*. Thomas Nelson Publishers, 2005.

MacDonald, *Believer's Bible Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1989.

Mare, W Harold. *1Corinthians: The Expositor's Bible Commentary Vol.10*. Grand Rapids: Zondervan Publishing House, 1976.

Marshall, I. Howard. *The Epistles of John: New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans, 1990.

Martin, Charles G. *Proverbs: New International Bible Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1979.
Martin, John A. *Micah: The Bible Knowledge Commentary Old Testament.* Wheaton: Victor Books, 1985.
Martin, John A. *Isaiah: The Bible Knowledge Commentary Old Testament.* Wheaton: Victor Books, 1985.
Mathews, Kenneth A. *Genesis 11:27-50:26: The New American Commentary*. Nashville: B & H Publishers, 2005.
McConville, J.G. *Deuteronomy: Apollos Old Testament Commentary*, Leicester/Downers Grove: Inter Varsity Press, 2002.
McComiskey, *Micha: The Expositor's Bible Commentary Volume 7.* Grand Rapids: Zondervan Publishing House, 1985.
Merrill, Eugene H. *Deuteronomy: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1994.
Metzger, Bruce M. *A Textual Commentary on the Greek New Testament.* New York: United Bible Societies, 1971.
Michaels, J. Ramsey. *1Peter: Word Biblical Commentary Vol.49*. Waco: Word Books, 1988.
Michaels, J. Ramsey. *John: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1989.
Michaels, J. Ramsey. *John: The New International Commentary on the New Testament.* Grand Rapids: Eerdmans Publishing Company, 2010.
Moloney, Francis J. *The Gospel of John: Sacra Pagina.* Collegeville: The Liturgical Press1998.
Moo, Douglas J. *Colossians: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2008.
Morris, Henry M. *The Genesis Record: A Scientific and Devotional Commentary on the Book of Beginnings*. Grand Rapids: Baker Book House, 1994.
Morris, Leon. *Hebrews: The Expositor's Bible Commentary Vol.12*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.
Morris, Leon. *1Corinthians: Tyndale New Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1987
Morris, Leon. *Romans. The Pillar New Testament Commentary* Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.
Morris, Leon. *John: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1989.
Morris, Leon. *Matthew: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.
Morris, Leon. *1 John: New Bible Commentary*. Leicester: IV Press, 1994.
Motyer, Alec. *Isaiah: Tyndale Old Testament Commentary*, Nottingham: Inter Varsity Press, 1999.
Mounce, Robert H. *Revelation: New International Commentary on the New Testament*.Grand Rapids: Eerdmans Publishing Company, 1977.

Murphy, Ronald E. *Ecclesiastes. Word Biblical Commentary Volume 23A*. Waco: Word Books, 1992.

Murphy, Ronald E. *Proverbs: Word Biblical Commentary*. Nashville: Thomas Nelson, 1998.

Murphy, Ronald E.. *Ecclesiastes: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.

O'Brien, Peter T. *Colossians, Philemon: Word Biblical Commentary vol.44*. Waco: Word Books, 1982.

Osborne, Grant R. *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Book House 2002.

Oswalt, John N. *Isaiah 1-39: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1986.

Patterson, Paige. *Revelation: The New American Commentary*. Nashville: B & H Publishing Group, 2012.

Plummer, A. *Mark: Cambridge Greek Testament Commentary*, Cambridge: Cambridge University Press, 1938.

Polhill, J.B. *Acts: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.

Ridderbos, H.N. *Matthew: Bible Student's Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1987.

Riggs, Jack R. *Micah: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1987.

Ryle, J.C. *Expository Thoughts on John Volume 2*. Edinburgh: The Banner of Truth Trust, 1987.

Sailhamer, John H. *Genesis: The Expositor's Bible Commentary Voume.2*. Grand Rapids: Zondervan Publishing House, 1990.

Silva, Moises. *Philippians: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 2005.

Smalley, Stephen T. *1,2,3 John: Word Biblical Commentary*. Waco: Word Books, 1984.

Smith, Gary V. *Isaiah: The New American Commentary*. Nashville: B & H Publishing Group, p. 2007.

Snodgrass, *Ephesians: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1996.

Soards, Marion L. *1Corinthians: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.

Sproul, R.C. *Luke: An Expositional Commentary*. Fearn: Christian Focus Publications, 2005.

Sproul, R.C. *John: St.Andrew's Expositional Commentary*. Orlando: Reformation Trust Publishing, 2009.

Sproul, R.C. *Mark: St.Andrew's Expositional Commentary*. Orlando: Reformation Trust Publishing, 2011.

Stein, Robert H. *Luke: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.

Stott, John R.W. *The Letters of John: Tyndale New Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1988.
Taylor, Mark. *1Corinthians: The New American Commentary*. Nashville: B & H Publishing Group. 2014.
Tenney, Merrill C. *John: The Expositor's Bible commentary Vol.9*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.
Thomas, Robert L. *1 & 2 Thessalonians: The Expositor's Bible Commentary Vol.11*. Grand Rapids: Zondervan, 1978.
Thomas, Robert L. *Revelation 1-7: An Exegetical Commentary*. Chicago: Moody Press, 1992.
Thomas, Robert L. *Revelation 8-22: An Exegetical Commentary*. Chicago: Moody Press, 1995.
Thompson, J.A. *Deuteronomy: Tyndale Old Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1974.
Toussaint, S.D. *Acts: the Bible Knowledge Commentary New Testament*. Wheaton: Victor Books, 1983.
Turner, David L. *Matthew: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 2008.
VanGemeren, Willem A. *Psalms: Expositor's Bible Commentary Vol.5*. Grand Rapids: Zondervan Publishing House, 1991.
Vasanthakumar, M.S. *The Book of Revelation: Study Notes*. Peradeniya: Lanka Bible College, 2000.
Vaughan, Curtis. *1 Corinthians: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1977.
Vaughan, Curtis. *1,2,3 John: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1970.
Vaughan, Curtis.*Colossians: Expositor's Bible Commentary Volume 11* Grand Rapids: Zondervan Publishing House, 1978.
Vaughan, Curtis. *Colossians and Philemon: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1980.
Vaughan, Curtis. *1 Corinthians: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1983.
Walvoord John F. *The Revelation of Jesus Christ*. Chicago: The Moody Press, 1966.
Watts, John D.W. *Isaiah 34-66: Word Biblical Commentary Volume 25*. Waco: Word Books, 1987.
Wenham, Gordon J. *Genesis 1-15: Word Biblical Commentary Volume1*. Waco: Word Books, 1987.
Wenham, David. *The Parables of Jesus: Pictures of Revolution*. London: Hodder &Stoughton,1989
Wenham, Gordon J. *Genesis 1-15: Word Biblical Commentary Vol.1*. Waco: Word Books, 1987.
Wessel, Walter W. *Mark: The Expositor's Bible Commentary Volume 8*. Grand Rapids: Zondervan Publishing House, 1984.

Westermann, C. *Genesis Vol.1*. Minneapolis: Augsburg Publishing House, 1984.

Whitelaw, Thomas. *Genesis: The Pulpit Commentary*. New York: Funk and Wagnalls, 1888.

Wiersbe, Warren W. *Be Rich: Ephesians - An Expositional Commentary* Wheaton: Victor Books, 1976.

Wiersbe, Warren W. *Be Basic: An Old Testament Study – Genesis 1-11*. Colorado Springs: Chariot Victor Publishing, 1998.

Williams, David J. *Acts: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1990.


Wilkins, Michaels J. *Matthew: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2004.

Wilson, Geoffrey B. *1Corinthians: A Digest of Reformed Comment*. Edinburgh: The Banner of Truth Trust, 1978.

Wright, Christopher J.H. *Deuteronomy: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1996.

Wright, N.T. *Colossians and Philemon: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1986.

Yarbrough, Robert W. *1-3 John: Baker Exegetical Commentary*. Grand Rapids: Baker Publishing Group, 2008.



# வேதஆராய்ச்சியாளர்
# எம்.எஸ்.வசந்தகுமாரின்
## புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

**இங்கிலாந்து**

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
8, Broadlands Avenue, Enfield, EN3 5AH, UK
தொலைபேசி 07814252077

**இந்தியா**

வீ.ராஜ்கமல், தொலைபேசி 9942193486.
7/170, ஐயனார் தெரு, குண்டூர் பர்மா காலனி,
ஏர்போர்ட் வீதி, திருச்சி, 620-007, தமிழ்நாடு.

சத்திய வசனம், 9, வெங்கட்ராமன் தெரு,
சின்ன சொக்கிக்குளம் மதுரை 625 002, தமிழ்நாடு.
தொலைபேசி: கே. பழனிவேல் ஆபிரகாம் 04522532316

**பிரான்ஸ்**

பெத்தேல் சபை Bethel Church
29, Avenue Georges Brassens, 95190 France
தொலைபேசி: பாஸ்டர் கிறிஸ்டி 660986190

**ஜேர்மனி**

பாஸ்டர் டாக்டர் ஏ. சின்னத்துரை, மாரநாதா சபை
Altenberger-Dom-Str 75, 51467 Bergisch GladBach,
Germany தொலைபேசி 023042500928.

**நோர்வே**

தேற்றரவாளன் பாப்திஸ்து சபை
Romsas Kirke, Sverre Iversens vei 76, 0972, Oslo Norway
தொலைபேசி பாஸ்டர் எஸ். ஏ. ஸ்டாலின் 41350866

**கனடா**

பிரதீபன் சிவானந்தராஜா, தொலைபேசி: 4163058696
45, Kirkland Place, Whitby, Ontario, L1P1X3, Canada.

**சிங்கப்பூர்**

சொலமன் டேவிட் தொலைபேசி: 64587708, 94895876
மின்னஞ்சல்: solomon@rmserve.com

1945/125

**சுவிட்சர்லாந்து**

The Word of God Church தேவ வசன சபை
Leimgrubenweg 9, 4053 Basel, Switzerland.
தொலைபேசி பாஸ்டர் சங்கர் 0799322694

**மலேசியா**

Parousia Revival International Centre,
27, Jalan PU12/2, Bandar Puchong Utama,
47100 Puchong, Selangor Darul Ehsan, Malaysia
தொலைபேசி பாஸ்டர் ரொனால்ட் ஸ்டீபன் 60122457799

**இலங்கை**

சத்திய வசன புத்தக நிலையம்
120, தர்மபால மாவத்தை கொழும்பு 7
தொலைபேசி: 0114691500

இலங்கை வேதாகமக் கல்லூரி,
தபால் பெட்டி இல: 2, பேராதனை
தொலைபேசி: 08123891461.

சத்திய வார்த்தை புத்தக நிலையம்
362, நீதிமன்ற வீதி திருகோணமலை
தொலைபேசி: 0773101405, 0262224845

கிருபை புத்தக நிலையம்
248, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி: 0754293699.

எபநேசர் புத்தக நிலையம்
230B, புகையிரத நிலைய வீதி, குருமன்காடு,
வவுனியா தொலைபேசி: 0773963206

டயல்லக் தொலைபேசி நிலையம்
டிப்போ வீதி, கிளிநொச்சி. தொலைபேசி 0774083316


**இங்கு குறிப்பிடப்படாத நாடுகளில் உள்ளவர்கள் ஆசிரியருடன் தொடர்புகொள்ளவும்**

# யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்

## CHRISTIAN ANSWERS TO THE JEHOVAH'S WITNESSES

யெகோவாவின் சாட்சிகள் யார்?
இவர்களின் உபதேசங்கள் என்ன?
இவர்களின் உபதேசங்களுக்கும் வேதாகமத்திற்கும்
இடையில் இருக்கும் முரண்பாடுகள் யாவை?
இவர்களின் உபதேசங்களுக்கு
கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு பதிலளிக்கவேண்டும்?

### வேத ஆராய்ச்சியாளர் டாக்டர். எம். எஸ். வசந்தகுமார்



1984-ம் ஆண்டிலிருந்து பதினாறு வருடங்களாக இலங்கை வேதாகமக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், சத்திய வசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் டாக்டர். எம்.எஸ். வசந்தகுமார் அவர்கள், தமிழ் மொழியில் பல புத்தகங்களை எழுதியுள்ளதோடு, 2005-ம் ஆண்டிலிருந்து லண்டன் நகரிலுள்ள இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கிய சபையில் இறைபணியாற்றுவதோடு, வேதஆராய்ச்சி நூல்களை எழுதிவருவதுடன், பல நாடுகளில் வேதாகமத்தைப் போதிக்கும் ஊழியத்திலும் ஈடுபட்டுள்ளார்.


## தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்

8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH.
Phone 0044 (0) 7814252077 Email: msvtbrc@googlemail.com
Web: tamilbibleresearchcentre.com | Church Web: tamilchurchuk.com

**7/170, Ayyanar Street, Gundur Burma Colony,**
**Airport Via, Tiruchirappalli 620 007,**
**Tamil Nadu, South India**
Phone: 9942193486, Email: vrkbibleteach@yahoo.com